# தாய்வீடு

THAIVEEDU NOVEMBER 2022 நவம்பர் www.thaiveedu.com

## குறிஞ்சிநிலத் தலைவன்
## தெளிவத்தை ஜோசப்




NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229


Your Trusted Realtor
Buying | Selling | Leasing | Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905.209.8080
Dir 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

தாய்வீடு

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஐயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 1-613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com



பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.


## தமிழர் மீது தொடரும் போர்

அண்மைக்காலமாக இலங்கையின் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் போதைப்பொருட் பயன்பாடும் அவற்றால் விளையும் அவலங்களும் அதிகரித்து வருவதாக அடிக்கடி அங்கிருந்து செய்திகள் வருகின்றன.

இவ்வாண்டின் கோடைகாலத்தின் மூன்று மாத இடைவெளியில், யாழ்ப்பாணத்தில் மட்டும் பதினேழு முதல் இருபத்தி மூன்று வயது வரையான பத்து இளைஞர்கள் போதைப்பொருள் உட்கொண்டமையால் உயிரிழந்தார்கள் என்ற தகவலை யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி அவர்கள் தெரிவித்தமை அதிர்வலைகளைத் தோற்றுவித்தது. இதே காலகட்டத்தில் முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் போதைப்பொருள் உட்கொண்டமைக்கான சிகிச்சையைப் பெற்றிருந்தார்கள் என்ற தகவலையும் மருத்துவரே வெளியிட்டார். அதிகமான போதைப்பொருளை உட்கொள்வதால் ஏற்படும் இந்த நேரடியான மரணங்கள் தவிர, போதைப்பொருள் ஏற்படுத்தும் மன உளைச்சலால் தூண்டப்படும் தற்கொலை, மனப்பிறழ்வால் தூண்டப்படும் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை உட்பட்ட குற்றச்செயல்கள், போதைப்பொருள் ஏற்றப் பயன்படுத்தப்படும் ஊசி போன்ற கருவிகளைப் பகிர்ந்துகொள்வதால் தொற்றிப்பரவும் உயிர்க்கொல்லி நோய்கள் என போதைப்பொருட் பயன்பாட்டு அதிகரிப்பு சமூகத்தின் ஒழுக்கத்துக்கும் இயக்கத்துக்கும் பெருந்தீங்கு விளைவித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலைமை யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வடக்குக் கிழக்கெங்கும் பரவிவருவதையிட்டு சமூக ஆர்வலர்கள் அச்சமடைந்துள்ளனர்.

இருந்தபோதும், இது புதிய விடயமல்ல. போர் முடிவடைந்த காலந்தொட்டு, போதைப்பொருள் தமிழ் இளையோரிடையே திட்டமிட்டுத் திணிக்கப்பட்டு வந்துள்ளது. இதை ஆரம்பத்திலிருந்தே நீதிபதி மா. இளஞ்செழியன், யாழ். ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை போன்றோர் அடையாளங்கண்டு எச்சரித்து வந்துள்ளனர். இப்போது நிலைமை பூதாகரமாகியுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்ள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்றத்திலும், சிவஞானம் சிறீதரன் பொது நிகழ்வொன்றிலும் எம்மைச் சூழ்ந்துள்ள இந்தப் பேராபத்துப் பற்றியும் இதன் பின்னணியில் இருந்து இயக்குபவர்கள் யாரென்பது பற்றியும் வெளிப்படையாகப் பேசியுள்ளார்கள்.

இதன் பின்னணியில் உள்ளவர்கள் யாரென்பதைக் கண்டுபிடிக்க ஒன்றும் துப்புத்துலக்க வேண்டியதில்லை. அது உள்ளங்கை நெல்லிக்கனி. வடக்குக் கிழக்கில், போருக்குப்பின் நான்கு - ஐந்து குடிமக்களுக்கு ஓர் இராணுவத்தினர் என்ற விகிதத்தில் இலங்கை இராணுவம் குவிக்கப்பட்டிருந்த காலத்திலேயே இந்தப் போதைப்பொருள் திணிப்பு ஆரம்பமாகியது. இப்போது, நாட்டின் இராணுவத்தினரில் எழுபது விழுக்காட்டுக்கும் மேலானவர்கள் தமிழர் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள நிலையிலேயே இந்தப் போதைப்பொருட் பரவல் தங்கு தடையின்றித் தொடர்கிறது. முதலில் இலவச மதுபான விநியோகமாகவே இது ஆரம்பமானது. மக்களுடன் உறவை வளர்க்கிறோம் என்ற சாட்டுப்போக்குடன் இராணுவத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட களியாட்டு நிகழ்வுகளிலே நடத்தப்பட்ட, மிக இலகுவாக வெல்லக்கூடிய போட்டிகளில் வெற்றிபெற்ற வயதில் இளையவர்களுக்குக்கூட, பரிசு எனும் போர்வையில் மதுபானம் வழங்கப்பட்ட சம்பவங்கள் பரவலாக நிகழ்ந்துள்ளன. தொடர்ந்து, படையினர் நடத்தும் அப்பக்கடைகள் மூலம் கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் பரவலாக்கப்பட்டு, இப்போது பாரதூரமான பல போதைப்பொருட்கள் மாணவர் விடுதிகளிலேயே கைப்பற்றப்படும் அளவுக்கு இந்தத் திணிப்பு வெற்றிபெற்றிருக்கிறது.

எல்லை கடந்து உள்ளே வரும் தமிழக மீனவர்களையே சுட்டுக்கொன்றாவது தடுத்துவிடும் இலங்கைக் கடற்படை, இந்தியாவிலிருந்து கடத்தி வருவதாகச் சொல்லப்படும் இந்தப் போதைப்பொருட்களைத் தடுக்க முயல்வதாகத் தெரியவில்லை. இந்தப் போதைப்பொருட் பரவலுக்கு உடந்தையாக இருப்போராக மட்டுமல்லாது, அதனால் ஆதாயம் அடைபவர்களும் சிங்களப் படையினரே என்று நிறுவுவதற்கு ஆதாரங்கள் உள்ளன.

ஆகவே, தமிழ் இளையோரிடையே திட்டமிட்டுத் திணிக்கப்படும் இந்தப் போதைப்பொருட் கலாச்சாரத்தைத் தமிழ் மக்கள் மீதான இலங்கை அரசின் இனவழிப்புப்போரின் தொடர்ச்சியாகவே நோக்கவேண்டும். இந்த முயற்சியை முறியடிக்கவென இளையோருக்கு அறிவூட்டுவதோடு, அவர்களுக்கான ஆதரவையும் கண்காணிப்பையும் வழங்கும் பொறுப்பும் தமிழ்ச் சமூகத்தையே சார்ந்துள்ளது. இதற்கு அரசு உதவவராது. மேலும், இதை இனவழிப்பின் தொடர்ச்சியாக உலக அரங்கில் கவனம்பெறச் செய்யவேண்டிய பொறுப்பும் தமிழர்களுக்கே உண்டு.

இங்கே சிங்கள மக்களுக்கும் ஒரு செய்தியுண்டு. கால் நூற்றாண்டுக்கும் மேலாக, தமிழர்களுக்கு எதிரான போர் என நம்பியிருந்த போரே, மொத்த நாட்டினதும் பொருளாதாரத்தையும் சமூக ஒழுங்கையும் சீரழித்து இறுதியில் சிங்கள மக்களையும் நடுத்தெருவுக்குக் கொண்டு வந்தது. இப்பொழுது தமிழர்கள் மீது திணிக்கப்படும் இந்தப் போதைப்பொருட் கலாச்சாரம் தென்னாட்டுக்குப் பரவ அதிக காலமெடுக்காது. ஆகவே, இந்த நச்சுவிதையை முளையிலேயே கிள்ளியெறிய தமிழர்களுடன் உணர்வுத்தோழமையுடன் இணைந்து நின்று போராடுவது தூரநோக்குடைய சிங்கள மக்களின் காலக்கடமை.

# தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...


தமிழர் மீது தொடரும் போர் 3

வடக்கின் கடலட்டைப் பண்ணைகளும்
திசை தவறிய கருத்துருவாக்கங்களும் 5
- செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை

புதிய பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக் 8
- மணி வேலுப்பிள்ளை

உள்ளூராட்சித் தேர்தலில்
நான்கு தமிழர்கள் வெற்றி 9

ஈரான் - ஹிஜாப் - பெண்கள் போராட்டம் 10
- ரூபன் சிவராஜா

இந்தியாவில் ஏற்றத்தாழ்வுகள் 13
- நெல்லை ஜெயசிங்

ஏட்டில் எழுதி வைத்தார்
அங்காதிபாதம் 400 18
- பாலா. சிவகடாட்சம்

வாடகைத்தாய் என்னும் பதிலித்தாய்
(Surrogacy) 20
- போல் ஜோசேப்

கருத்தரிக்கும் முறைகளும் தடங்கல்களும்
இடம் மாறிய கர்ப்பமும் 22
- கந்தையா செந்தில்நாதன்

புது வீடுகளின் முதற் பரிசோதனை 26
- வேலா சுப்ரமணியம்

விண்வெளியிலிருந்து கம்பியில்லா மின்சாரம் 28
- சுப்ரமணியம் ஜெயசீலன்

ஏமாற்றாதே ஏமாறாதே 30
- சி. நற்குணலிங்கம்

செம்மஞ்சள் மேலங்கி 32
- Phyllis Webstad
தமிழில்: குமார் புனிதவேல்

கச்சானும் மச்சானும்... 34
- வேதநாயகம் தபேந்திரன்

ஆபிரிக்கப் பழங்குடியினருடன் ஒருநாள் 38
- குரு அரவிந்தன்

புதினங்கள்... திரைப்படங்கள்... 41
- ஓவியர் ஜீவா

காலனை வென்ற கலைஞன்
ஓவியர் ஆசை இராசையா 44
- ஸ்ரீ. காயத்ரி இராசையா

பார்த்திபன் மகேசு எனும் சிற்பக்கலா வினோதன் 47
- கிருபாராணி ஜெயன் பிள்ளை

தன்னலமற்ற சேவையாளன் பொன். குலேந்திரன் 50
- பார்வதி கந்தசாமி

சிறுவர் மலர் மாமாவுக்கு இறுதி வணக்கம் 52
- வி.என். மதிஅழகன்

தெளிவத்தை : மலையகத்தின் அடையாளம் 54
- மல்லியப்புசந்தி திலகர்

சமூகப் போராளி ஸ்ரீகுகன் ஸ்ரீஸ்கந்தராஜா 56
- துஷி ஞானப்பிரகாசம்

ஸ்ரீகுகனின் பணி தொடரும்!
புகழ் வாழும்! 59
- ஹரி ஆனந்தசங்கரி

கவிக்கோ அப்துல் ரகுமானின்
ஆலாபனையில் அபூர்வ ராகங்கள் 62
- இனியவன் இசாறுதீன்

நூலகர் சாமுவேல் ஜோன் செல்வராஜா 66
- என். செல்வராஜா

சமூகத் தொண்டன் 'மில்க்வைட்' கனகராஜா 69
- வே. விவேகானந்தன்

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி
குறிஞ்சித்தேன் தந்த லிங்கதாசன் 72
- மல்லியப்புசந்தி திலகர்

ஏ.ஜே. என்றொரு ரிஷி 74
- மு. நித்தியானந்தன்

அண்ணாவியார் சி. ஞானசேகரம் 80
- து. கௌரீஸ்வரன்

மைக்கல் கொலின் கவிதைகளின்
அறுக்க முடியாத பலம் 82
- ஆகவே ஜபார்

பால்வண்ணம் சிறுகதைத் தொகுப்பு -
வாசிப்பு அனுபவம் 84
- குரு அரவிந்தன்

அறிந்தவர்களும் அறியாதவையும்
உன்னத ஆய்வு மரபை அடியொற்றிய பணி! 85
- அஹமட் பிஸ்தாமி

தோல்வியடைந்த நாட்டிலிருந்து
உலகை வென்ற இலக்கியப் படைப்பு 88
- சுப்ரமணியம் ஜெயசீலன்

ஓர் ஒல்லாந்தத் தளபதியின்
யாழ்ப்பாண நினைவுத்திரட்டு 91
- மணி வேலுப்பிள்ளை

தீரன் ஆர்.எம். நௌஸாத் கதைகள்
ஈழத்து தமிழ் முஸ்லிம் வாழ்வியலின் அகமும் புறமும் 94
- ஜிஃப்ரி ஹாசன்

வசந்தம் இதழ் குறித்து 100
- அருண்மொழிவர்மன்

பா. செயப்பிரகாசத்தின் படைப்புலகம் 102
- சு. வேணுகோபால்

இரகசிய உரையும் அறுபத்தியொரு பொய்களும் 106
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சிங்களச் சமூகத்தில் சாதிபேதமும் ஒதுக்கலும் 110
தமிழில்: க. சண்முகலிங்கம்

நினைவு நல்லது
ரீவீஜ-யின் தொழிற் தரம் 117
- P. விக்னேஸ்வரன்

வேடரும் காலனியமும் 122
- க. பத்திநாதன்

பிடிவாதக்காரி 124
- த. ஜீவராஜ்

ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில்
பெண் நிலைவாதம் 130
- சி. ரமேஷ்

வட்டார வழக்கும் அணிகலன்களும் -
சம்மாந்துறை 134
- எம்.ஐ.எம்.சாக்கீர்

பாரதியார் பார்வையில் பாரதியார் 136
- கிருங்கை சேதுபதி

இசைத்தமிழ்ப் பாடற்பரப்பும்
சமகாலப் பயன்பாட்டு நிலையும் 142
- கௌசல்யா சுப்பிரமணியன்

ஆய்வுநோக்கில் பொருநராற்றுப்படை
கரிகாலன் பெருமை 146
- பொன்னையா விவேகானந்தன்

கம்பனின் கருவூலம் திறந்து.... 148
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

தொன்மையைத் தேடி
ஆதித் தமிழர், திணை வழிக் குடிகள் -
சோழ மன்னர்கள் 150
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 154
- நா. சுப்பிரமணியன்

பொம்மை 160
- அகரன்

மொழிபெயர்ப்பாளர் 164
- நிரேஷ் ரட்ணம்

காலப் பறவைகள்... 170
- ஜீ. வேள்பாரதி

சாம்பரில் திரண்ட சொற்கள் 174
- தேவகாந்தன்

விசித்திரமான நாள் 178
- லூயிசா வலென்சுவெலா
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

பட்டொளி வீசிப் பறக்கிறது புலிக்கொடி 182
- நிமால் நாகராஜா

# வடக்கின் கடலட்டைப் பண்ணைகளும்

# திசை தவறிய கருத்துருவாக்கங்களும்

- செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை

இலங்கையின் வடபகுதியில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தை அண்டிய கடல்நீரேரியிலும் தீவுகளை சுற்றியுள்ள கரையோரங்களிலும் கடலட்டைப்பண்ணைக் கைத்தொழிலை விரிவாக்கும் முயற்சிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் அந்நிய செலாவணி நெருக்கடியை வெற்றிகொள்வதற்குரிய மூலோபாயங்களில் ஒன்றாக வடக்கின் கரையோரங்களில் கடலட்டைப் பண்ணைகளை உருவாக்கி வியட்னாம், கொரியா, சீனா போன்ற தேசங்களில் வாழும் கடலட்டை உணவுப்பிரியர்களிடமிருந்து அந்நிய செலாவணியை வருமானமாக பெறுவது இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

இவ்விடயத்தை முன்னின்று நடத்துவதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தவராக சிறீலங்காவின் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணியாற்றுவது தேசிய நெருக்கடிக்கு அவரால் செய்யக்கூடிய உயர்ந்தபட்ச பங்களிப்பாக அவரால் பெருமைப்பட்டுக்கொள்ளக்கூட முடியும்.

எனினும், கடலட்டைக் கைத்தொழிலினை சிறீலங்காவின் அரசாங்கம் தனது கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு ஊடாக வடபகுதியின் கரையோரக கடல்பரப்பில் அறிமுகப் படுத்திய போது, அந்த முயற்சிகள் போதியளவு உள்ளூர் சமூகத்திற்கு அறிவூட்டப்பட்டு வெளிப்படையாக முன்னெடுக்கப்பட்டவையா என்ற வினாவுக்கு இன்றளவும் வெளிப்படையான பதில்கள் கிடைக்கவில்லை.

மத்திய அரசின் அமைச்சினதும் திணைக்களங்களினதும் அதிகார சபைகளினதும் அதிகாரிகள் நேரடியாக கொழும்பிலிருந்து கரையோரங்களுக்கு தன்னிச்சையாக விஜயம் செய்து தங்களது திறன் பேசிகளின் புவியியல் தளப்புள்ளிகளை (GPS) பதிவுசெய்துவிட்டு அதனை கொழும்பு தலைமையகத்திலிருந்துகொண்டு கடலட்டைப் பண்ணைகளுக்கான ஒதுக்குப் பிரதேசங்களாகவும் வேறுவகையான நீரியல் வேளாண்மைக்குரிய கடற்பிரதேசங்களாகவும் பிரகடனப்படுத்தினர் என்பதே காலம் கடந்த உண்மைகளாகும். இவ்விடயத்தில் வடக்கு பகுதியில் கடமையாற்றிய அந்தந்த அமைச்சுக்களின் பொறுப்பான அதிகாரிகளும் புறந்தள்ளப்பட்டிருந்தனர் அல்லது அவர்களது மனச்சாட்சி மௌனமாக்கப்பட்டிருந்தது.

பின்பு வடபகுதிக்கும் வடபகுதியின் மீன்பிடிச் செயற்பாடுகளுக்கும் எந்த விதத்திலும் தொடர்பற்ற அந்நியர்கள் கொழும்பிலிருந்து அழைத்துவரப்பட்டு அவர்கள் இந்த கரையோரக் கடற்பரப்பில் முதலீடு செய்யும்படி ஊக்குவிக்கப்பட்டார்கள். பின்பு உள்ளூரில் இருக்கக்கூடிய மீன்பிடிப் பொருளாதாரத்துடன் எவ்விதத்திலும் சம்பந்தமற்ற தெரிந்தெடுக்கப்பட்ட முதலீட்டாளர்களும் இத் துறைக்குள் முதலிட வாய்பளிக்கப்பட்டது.

இவை யாவும் மத்திய அரசாங்கத்தின் அதிகார மமதையின் வெளிப்பாடாகவே முன்னெடுக்கப்பட்டது. இவ்விடயங்களில் உள்-



ளூர் அதிகாரிகள் தொடக்கம் மீனவர் சங்கங்கள் மற்றும் மீனவச் சமூகங்கள் அனைத்தும் இருட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தார்கள்.

சில காலத்தின் பின்பு கடலட்டைப் பண்ணையாளர்களுக்கும் கரையோர கடற்றொழிலாளர்களுக்கும் கடற்பரப்பினைப் பயன்படுத்துவதில் முரண்பாடுகள் தோன்றியபோதும், கரையினை அண்டி கடற்றொழிலில் ஈடுபட்ட மக்களினதும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டபோதும்கூட அங்கு மிகத் தவறான புள்ளியிலிருந்து இந்தப் பிரச்சினை வெளிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் அரியாலையிலும் கிளிநொச்சியின் பூநகரியிலும் சீன நாட்டவர்களால் முதலிடப்பட்டிருந்த கடலட்டைக் குஞ்சுகள் உற்பத்திசெய்யும் பண்ணையினை மையமாக கொண்டு சீனர்களின் ஆதிக்கமும் ஊருடுவலும் வடபகுதிக்குள் வந்துவிட்டதாகவும் அது இந்தியாவின் பிராந்திய பூகோள அரசியலுக்கு ஆபத்தானதாகவும் கருத்துருவாக்கம் செய்யப்பட்டு எதிர்ப்பலைகள் உருவாக்கப்பட்டன.

வடபகுதியில் கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிரான வாதங்களும் போராட்டங்களும் இரண்டு நிலைகளில் வேறுபட்டதாக முனைப்பு பெற்றது. மீனவர்களின் கடல்வளங்கள் மற்றும் வாழ்வாதாரத்தின் மீதான அத்துமீறல்களாகவும் வள அபகரிப்பாகவும்



மீனவர் சங்கங்களினால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மறுமுறையில் தமிழ்த்தேசிய அரசியல் செயற்பாட்டாளர்கள் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான சீனாவின் இராஜதந்திர ஊருடுவல் என அறிக்கைக் கணைகளை வீசத்தொடங்கினர்.

உள்நாட்டு செய்தி ஊடகங்களும் இலத்திரனியல் ஊடகங்களும் இரண்டு நிலைகளையும் முற்றத்திற்கு கொண்டுவந்திருந்தாலும், மீனவர் சங்கங்களின் பிரச்சினைகளை மையப்படுத்திய பல கட்டுரைகளையும் அறிக்கைகளையும் வெளியிட்டு மக்களை ஓரளவுக்கு விழிப்பூட்டின என்றே கூறலாம்.

## பாரம்பரிய மீன்பிடியும் நீர்வேளாண்மை தொழில் முயற்சிகளும்:

விரிவடைந்து ஆதிக்கம் செலுத்திவரும் சந்தைப்பொருளாதாரத்தில் எல்லா விடயங்களையும் சந்தைப்பண்டங்களாக நோக்கும் அணுகுமுறை மனுக்குலத்தில் நிலைபேறான வாழ்க்கையினை மட்டுமன்றி, ஒட்டுமொத்த உயிரினச் சூழலினையே அபாயத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

மீன்பிடி என்பது ஒரு வருமானம் ஈட்டும் பொருளாதார தொழில் முயற்சியா அல்லது அதற்கும் மேலான வாழ்வியல் பெறுமதி கொண்டதா என்ற வினா இங்கு முதன்மையானது. மனிதர்கள் தங்களது வாழ்வியலைப் பண்படுத்த தொடங்கிய காலத்திலிருந்தே நிலத்தில் வேட்டையாடி தங்கள் உணவினைத் தேடிக்கொண்டது போல், நீரிலும் வேட்டையாடினர். பின்பு நிலத்தினைப் பண்படுத்தி வேளாண்மை செய்யும் பண்பாட்டிற்குள் தங்களை நிலைப்படுத்தியபோதும் நீர்நிலைகளில் விதைக்காமலேயே நீர்வாழ் உயிரினங்களை அறுவடை செய்யும் கலாச்சாரம் வாழ்வியலின் ஒரு முதன்மை அங்கமாக மாறியது.

கடலுணவு என்பது மனிதர்களது உணவுக் கோப்பையில் மிக முக்கிய இடத்தைப் பிடித்தது என்பது மட்டுமல்ல, மனிதருக்கு தேவையான போசாக்கினை வழங்கும் முக்கிய மூலங்களில் ஒன்றாகவும் தொடர்ந்தது. அதனால் கடலுணவு என்பது மனிதரது உணவு வழங்கல் சங்கிலியில் தவிர்க்க முடியாததும் பண்பாடு சார்ந்தது மான பெறுமானம் கொண்டதாக ஆழப்பதிந்துள்ளது.

கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒரு தனித்த தொழிலாளர் கூட்டமல்ல. விவசாயிகள் போன்று தங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் நிலத்தில் தாங்கள் விரும்பும் போது உற்பத்தியைப் பெருக்கி அறுவடை செய்வது போன்றதல்ல கடற்றொழில் மீன்பிடி.

பூகோளம் தழுவியதாக பரந்தும் விரிந்தும் கிடக்கும் கடல் என்பது ஒரு பொதுச்சொத்து. அதனுள் வாழும் கடல்வாழ் உயிரினங்கள் அனைத்தும் நாடுகளின் இறைமைகளுக்கும் எல்லைகளுக்கும் அப்பாற்பட்ட பொதுச்சொத்து, பொதுவளம். அத்தகைய பொது வளத்தை பங்கிடும் ஒரு பொதுவான குழுவின் அங்கமாகவே உலகம் தழுவிய நாடுகளின் கரையோரங்களில் வாழும் மீன்பிடிச் சமூகம் இருக்கின்றது. அவர்களது ஒவ்வோர் செயற்பாடுகளும் உலகம் தழுவிய பொதுச்சொத்தின் இருப்பிலும் செழுமையிலும் பாதிப்பு செலுத்தும்.

அதே போன்று மீன்பிடி என்பது வெறுமனே ஒரு தொழில் முயற்சியல்ல. அது ஒரு பண்பாடு. அதனை யாரும் வெறும் தொழில் முயற்சியாக எண்ணிக்கொண்டு செய்வது சாத்தியமல்ல. அது வாழ்வியல் முறைகளில் ஒன்று. தலைமுறை தலைமுறையாக பெற்றுக்கொண்ட கடல் அனுபவங்களையும் காலநிலை அனுபவங்களையும் கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கைச் சுற்றுவட்டத்தையும் நகர்வுகளையும் முதற்மையாக கொண்டே கடற்றொழில் பண்பாடு கட்டமைக்கப்பட்டுள்ளது.

இங்கு மீன்பிடியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் கடல்வாழ் உயிரினங்களுக்கும் இடையில் ஓர் எழுதப்படாத வாழ்வியல் ஒப்பந்தம் தலைமுறை தலைமுறையாக பேணப்படுகிறது. எத்தகைய மீன்களை எவ்வாறு, எப்போது பிடிப்பது என்பது மீன்பிடிச் சமூகங்களின் அறம் சார்ந்த தொழில் ஒழுக்கமாக, தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்படுகிறது. அவர்கள் பின்பற்றும் 'வாழு வாழவிடு' என்ற இயற்கையின் கோட்பாடு, கடல் வாழ் உயிரினங்கள் நிலைபேறாக செழுமை பெறுவதற்கும் தடையற்ற முறையில் மானிடச் சமூகத்திற்கு வேண்டிய ஆரோக்கியமாக கடல்புரத உணவினை வழங்குவதனையும் உத்தரவாதப்படுத்தியுள்ளது.

ஆனால், மீன்பிடி என்பது அபரிமித இலாபமீட்டக்கூடிய கடல்சார் கைத்தொழிலாக பல்தேசிய கம்பனிகளால் மாற்றப்பட்டபின்பு, கடலுக்கும் மனிதருக்கும் இடையிலான எழுதப்படாத ஒப்பந்தம் முற்றாக மீறப்பட்டுள்ளது. கடலின் வளங்களை குறுகிய காலத்தில் சீரழித்து பெரும் இலாபங்களை ஈட்டும் பேராசையின் பெயரால் இத்தகைய பெரும் கம்பனிகளும் முதலீட்டு நிறுவனங்களும் மனிதர்களுக்கான ஆரோக்கியமான உணவுச்சங்கிலியில் மிகத் திட்டமிட்டு சேதத்தை உண்டாக்கி கொண்டிருக்கின்றார்கள்.

எதிர்காலத்தில் கடல்வளங்கள் அழிக்கப்பட்டு இலாப அளவு குறையும் போது அத்தகைய நிறுவனங்கள் எல்லாம் இந்த துறையினை விட்டு வெளியேறியிருக்கும். அத்தகைய நிலையில் உலகம் தழுவிய மானிடசமூகம் தனக்குரிய ஆரோக்கியமான உணவு மூலத்தையும் இழந்திருக்கும்.

கடல் என்பது வெறுமனே அள்ளக்குறையாத உணவுக்கிடங்காக மீனவர்கள் பார்ப்பதில்லை. கடல் என்பது அவர்களது தாய். அவர்கள் வாழ்வின் சகல அம்சங்களும் கடல்சார்ந்ததாகவே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கடலை வெறும் பொருளாதார உற்பத்தி சாதனமாக அந்த மக்கள் கருதியது இல்லை. எனவே கடலையும் அதன் கரைகளையும் கரையோரம் வாழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தும் எத்தகைய முயற்சிகளும் மிகவும் ஆபத்தானவை.

கடந்த காலத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக கடற்கரையோரங்களில் உல்லாச விடுதிகள் அமைப்பதற்கான அனுமதிகள்

வழங்கப்பட்டபோது அந்த உல்லாச விடுதிகளையொட்டிய கடற்கரைகளும் அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுசெல்லப்பட்டன. ஆதலினால் உள்ளூர் சமூகமும் மீனவர்களும்கூட குறிப்பிட்ட பகுதிக்குள் அனுமதி பெற்றே செல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர்.

இப்போது கடற்கரையோரங்களில் கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்படுவதும் அவற்றுக்காக கடற்பரப்பினை வேலியிடுவதும் கடற்றொழிலாளர்களை மட்டுமல்ல கடலினை தங்கள் தாய் மடியாக கொண்டுள்ள ஒட்டுமொத்த கரையோர சமூகத்தையும் பாதித்துள்ளது.

## கடலையும் கரையோரங்களையும் அபகரித்தல் (Coastal Grabbing):

வடபகுதியின் கரையோரங்களில் உருவாக்கப்படும் கடலட்டைப் பண்ணைகளும் ஏனைய நீர்வேளாண்மை முயற்சிகளும் பாரம்பரியமாக கரையோர மக்கள் சமூகம் தனது பண்பாட்டின் ஒரு முதன்மை அம்சமாக கடல்மேல் கொண்டிருந்த உரிமைகளை கபளீகரம் செய்கின்றது. அது மிகவும் பாரதூரமான விடயமாகும்.

எவ்வாறு காரணங்களைக்காட்டி மக்களின் பாரம்பரிய வாழ்நிலங்களும் உற்பத்தி புலங்களும் வாழ்வாதார நிலங்களும் அரசினால் கையகப்படுத்தப்படுகின்றதோ அதற்கும் எந்த விதத்திலும் குறையாததாகவே இந்த கடல் மற்றும் கரையோர அபகரிப்பும் அமைந்துள்ளது.

யுத்த காலத்திற்கு முன்பு இலங்கைத் தீவின் கடலுணவுத் தேவையின் மூன்றில் ஒரு பகுதியை நாளாந்தம் வழங்கிய குடாநாட்டின் மீன்பிடிச்சமூகம், யுத்தகாலத்தில் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்க்கப்பட்டு ஒரு தசாப்தத்திற்கு மேலாக மீன்பிடிப் பண்பாட்டிலிருந்து அந்நியமாக்கப்பட்டிருந்தது.


தங்களுடைய குடியிருப்புகள், உற்பத்தி சாதனங்கள், சேமிப்புகள் ஆகியவற்றை மட்டுமல்லாது தலைமுறைகள் தாண்டியும் தாங்கள் பரிமாறிவந்த அனுபவ அறிவினை அடுத்த தலைமுறைக்கு பரிமாற முடியாமல் போனதால் மீன்பிடித் துறையில் அதிகளவான வினைத்திறன் பற்றாக்குறை ஏற்பட்டது. வாழ்நாளின் பெரும் பொழுதை கடல்தாயின் மடியில் மகிழ்ந்து கழித்த தலைமுறை போய் கடலுக்கு சென்று காத்திருக்க தயாராக இல்லாத ஒரு புதிய தலைமுறை உருவாகியது. இந்த மூன்று தசாப்தகால யுத்தமும் அதனோடிணைந்த அரசின் இராணுவத்தனமான கட்டுப்பாடுகளும் காரணமாக அமைந்தது.

தீவின் மிகநீண்ட கடற்பரப்பினை பாரம்பரியமாக ஆளுகை செய்த வடக்கு, கிழக்கின் மீனவர்கள் சமூகத்திடமிருந்து அவர்களது கடல்வளமும் அதன் மீதான ஆளுகை உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது. யுத்தம் முடிந்து மீளக்குடியேறியபோது புதிய தொகுதி மீன்பிடியாளர்கள் தீவின் வேறு பகுதிகளிலிருந்து அரசினதும் இராணுவத்தினதும் துணையுடன் வளங்கொண்ட மீன்பிடிப் பாடுகளின் உரிமையாளர்களாக மாறியிருந்தனர்.

வளங்கொண்ட வடபகுதியின் கடல்வளத்தை உள்ளூர் மக்களின் ஆளுகையிலிருந்து அபகரிக்கும் செயற்பாடுகளின் ஒரு அங்கமாகவே இது காணப்படுகிறது. யாழ்ப்பாண தீபகற்பத்தின் வடகிழக்கு திசையில் வங்காள விரிகுடாவில் அமைந்திருக்கின்ற ‘பேதுறு கடல் அடித்தளமேடை’ (Pedro bank)க்கு மிக அண்மித்ததாக வாழும் வடபகுதி மீனவர்களின் தொழில் ஆளுமைகள் முடக்கப்பட்டும் போதியளவில் விருத்திசெய்யப்படாமலும் காணப்பட சமகாலத்தில் தென்னிலங்கை மீனவர்கள் அந்த வளங்களை அள்ளிக்கொண்டு போகும் அவலநிலை மிகவும் துயரமானது.



selvin.ireneuss.mariampillai@thaiveedu.com



# புதிய பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக்

- மணி வேலுப்பிள்ளை

**2022** ஒக்ரோபர் 24-ம் திகதி ரிஷி சுனக் பழமை பேண் கட்சியின் தலைவராக - ஏகமன-தாக - தெரிவு செய்யப்பட்டதை அடுத்து,



பிரித்தானியாவின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

பிரித்தானிய பிரதமராகப் பதவியேற்கும் முதலாவது இந்துவும், இந்திய வழித்தோன்றலுமாகிய ரிஷிக்கு 42 வயது. கடந்த இரு நூற்றாண்டுகளுள் பிரித்தானியாவில் பதவியேற்ற பிரதமர்களுள் மிகவும் இளையவர்.

1980மே 12-ம் திகதி இங்கிலாந்தில், சதம்டன் நகரத்தில், பிறந்த ரிஷியின் பாட்டன் - பாட்டியர் பஞ்சாப் மாநிலத்திலிருந்து கிழக்கு ஆபிரிக்காவுக்கு குடிபெயர்ந்தவர்கள். சுனக்கின் தந்தை கென்யா விலும், தாய் தன்சானியாவிலும் பிறந்தவர்கள். அவர்களது குடும் பங்கள் 1960களில் பிரித்தானியாவுக்கு குடிபெயர்ந்தன.

ரிஷியின் தந்தை ஒரு மருத்துவர், தாய் மருந்தகர். ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பட்டதாரியான சுனக்கின் மனைவி இந்திய கோடாதிபதியான நாராயண மூர்த்தியின் மகள் அக்ஷதா. அவர்க ளுக்கு இரு புதல்வியர்.

2010-ல் பழமைபேண் கட்சித் தொண்டராக மாறி, கொள்கைப் பரி-மாற்றம் (Policy Exchange) எனும் பழமைபேண் சிந்தனைக் குழாம் நடத்திய கருமை - சிறுபான்மை இனக்குழும ஆராய்ச்சிப் பிரிவின் (Black and Minority Ethnic Research Unit) தலைவராக உயர்ந்து, சாரதா ராஜேஸ்வரன் எனும் ஆய்வாளருடன் இணைந்து, புதிய பிரித்தானியாவின் சித்திரம் (A Portrait of Modern Britain) எனும் பனுவலை வெளியிட்டு, அரசியலில் தனது முத்திரையைப் பொறித்தார்.

2015-ல் ரிச்மன்ட் தொகுதியின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் சென் றார். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற பிரதமர் தெரசா மே எடுத்த முடிவை ஆதரித்தார். வெளியேறுவதன் மூலம் சுதந்தி ரமும், ஒப்புரவும், செழிப்பும் மிகுந்த நாடாக பிரித்தானியா மாறும் என்று வாதாடினார்.

2020-ல் பிரதமர் ஜோன்சனால் நிதி அமைச்சராக அமர்த்தப்பட் டார். 2022 யூலை மாதம், பிரதமர் ஜோன்சனும், ஒக்ரோபர் மாதம் பிரதமர் லிஸ் திரசும் அடுத்தடுத்து பழமைபேண் கட்சியின் ஆத ரவை இழந்து, பதவி துறந்ததை அடுத்து, ஒக்ரோபர் 24ம் திகதி ரிஷி ஏகமனதாக கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நிறத்தாலும், சமயத்தாலும், சந்ததியாலும் அசல் அமெரிக்கர் அல்லாத ஒபாமா அமெரிக்க அதிபராகப் பதவியேற்றது போல, ரிஷி பிரித்தானிய பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

'பிரித்தானியாவுக்கு ஒற்றுமையும் உறுதிப்பாடும் தேவை. அதற் காக நேர்மையுடனும், பணிவுடனும் கடமையாற் றுவேன்' என்று பிரதமர் ரிஷி சுனக் உறுதியளித்துள்ளார்.



mani.v@thaiveedu.com

# உள்ளூராட்சித் தேர்தலில் நான்கு தமிழர்கள் வெற்றி

ஒன்ராறியோ மாகாணத்தில் ஒக்ரோபர் 24-ஆம் நாள் திங்கட்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் நான்கு தமிழர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

மார்க்கம் நகரின் ஏழாவது வட்டார உறுப்பினராக 5,388 வாக்குகளைப் பெற்று, முன்பு கல்விச்சபை அறங்காவலராக இருந்த உவனீற்றா நாதன் 2,648 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.



ரொறன்ரோ கல்விச் சபை அறங்காவலர்களாக மூன்று தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்காபரோ வடக்குத் தொகுதியில் 5,372 (46.8%) வாக்குகள் பெற்று மீண்டும் யாழினி ராஜகுலசிங்கம் கல்விச் சபை அறங்காவலராகத் தெரிவாகியுள்ளார்.



ஸ்காபரோ ரூஜ் பார்க் தொகுதியில் கல்விச் சபை அறங்காவலராக 6,388(44%) வாக்குகளோடு அனு சிறீஸ்கந்தராஜா மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.



கல்விச் சபை அறங்காவலர் பதவிக்காக 12 வேட்பாளர்கள் போட்டியிட்ட ஸ்காபரோ மத்தி தொகுதியில் 4,363 (31.1%) வாக்குகளைப் பெற்று நீதன் சாண் வெற்றி பெற்றுள்ளார். மார்க்கம் நகரில் கல்விச் சபை அறங்காவலராகவும் ரொறன்ரோவில் கல்விச் சபை அறங்காவலராகவும் நகரசபை உறுப்பினராகவும் முன்ப பணியாற்றியவர் நீதன்.



வெற்றி பெற்ற இந்நால்வருக்கும் தாய்வீட்டின் வாழ்த்தும் பாராட்டும்.

# ஈரான் - ஹிஜாப் - பெண்கள் போராட்டம்

- ரூபன் சிவராஜா

பெண்ணிய உரிமைப் போராட்டங்களும் அதற்கான அரசியல் செயற்பாடுகளும் ஈரானுக்குப் புதியவை அல்ல. 1900-ம் ஆண்டுகளிலிருந்தே ஒருங்கிணைக் கப்பட்ட பெண்ணியச் செயற்பாட்டு இயக்கங்கள் ஈரானில் இயங்கிவந்துள்ளன. காலத்திற்குக் காலம் பெரியதும் சிறியதுமான செயற்பாட்டுவெளி நிலவிவந்துள்ளது. குறிப்பாக பெண்களின் கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் ஹிஜாப் நீக்கம் போன்றவை குறிப்பிடப் படுகின்றன. 1979-ல் இஸ்லாமியப் புரட்சி மூலம், அயதுல்லா கொமெனி - Ayatollah khomeini நாட்டின் அதியுயர் ஆன்மீகத் தலைமையாகப் பதவிக்கு வந்தார். இதற்குப் பின்னர் பெண்கள் அடைந்திருந்த உரிமைகள் திட்டமிட்ட வகையில் பறிக்கப்பட்டன.

22 வயதுடைய Masha Amini என்ற பெண் ஹிஜாப் (முக்காடு) சரியாக அணியவில்லை என்பதற்காக ஈரானின் கலாச்சாரப் பொலிசாரால் (Morality police) 13.09.2022 அன்று கைதுசெய்யப் பட்டார். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு தாக்கப்பட்டதால் மூன் றாவது நாள் அவர் இறந்துபோனார். அதாவது கொலை செய்யப் பட்டுள்ளார். அவர் ஹிஜாப் அணிந்திருந்தார். ஆனால் தலையை




முழுவதுமாக மூடவில்லை என்பது கலாச்சாரக் காவல்துறையின் கைதுக்கான காரணம். மாஷா ஆமினி குர்தீஸ் பின்னணியைக் கொண்டவர். ஈரானின் குர்தீஸ் பிரதேசமான Saqqez இலிருந்து தன் சகோதரருடன் ஈரானின் தலைநகர் தெஹரானுக்கு விடுமுறை யில் சென்றிருந்த தருணத்தில் அவருக்கு இக்கொடுமை நிகழ்ந் துள்ளது. கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்தி லேயே அவரை கலாச்சாரக் காவல்துறையினர் தாக்கியதைக் கண்ட நேரடிச் சாட்சியங்கள் உள்ளதாக ஊடகத்தகவல்கள் வெளி வந்திருந்தன.

## ‘கலாச்சாரக் காவல்’:

அவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஈரானின் பெண்கள் போராட்டங்களில் இறங்கியிருந்தனர். முக்காடுகளைத் தீயிலிட்டு எரித்து இந்தக் கொலைக்கு எதிராக பெண்கள் வீதிகளில் இறங் கிப் போராடி வருகின்றனர். பெண்களின் இந்தப் போராட்டத்தில் ஈரானின் இஸ்லாமிய அடிப்படைவாத ஆட்சிக்கு எதிரான கோசங் கள் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆட்சிபீடத்திற்கு எதிரான போராட்டமாக அது விரிவடையும் என போராட்டம் தொடங்கிய நாளிலேயே உறுதியாகத் தெரியவந்தது. பெண்கள் தம் தலைகளி லிருந்து ஹியாப்புகளைக் கழற்றித் தீயிலிட்டனர். தீயிலிட முன்னர் சிதையை நோக்கிச் செல்லும் போது நடனமாடினர். முடியைக் கத் தரித்து எறிந்தனர். இத்தகைய காட்சிகள் சமூக ஊடகங்களை நிறைத்திருந்தன. எதிர்ப்புப் போராட்டங்களில் இதுவொரு குறி யீடு. ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் தலைநகரங்களில் அந்நாடு களின் ஈரானியத் தூதரகங்களின் முன்பாக, ஈரான் மக்களுக்கு ஆதரவான கவனயீர்ப்புப் போராட்டங்கள் செப்ரெம்பர் மாத இறுதி நாட்களில் இடம்பெற்றுள்ளன.

‘Morality police’ என்பதனை நேரடியாகத் தமிழ்ப்படுத்துவதாயின் அது அறநெறிக் காவலர் எனவாகும். அறநெறி என்பதை உயர்ந்த விழுமியங்களைக் குறிப்பதாக நினைத்துவிடக்கூடாது. இஸ்லாத்தின் பேரில் பெண்கள் மீது விதிக்கப்பட்ட ஆடை மற் றும் கலாச்சாரக் கட்டுப்பாடுகளை கண்காணிப்பதும் நடைமுறைப் படுத்துவதும், கைதுசெய்து தண்டனை வழங்குவதற்குமானது இந்த Morality police. இது ஒரு அடிப்படைவாதக் கலாச்சாரக் காவல்துறை. திட்டவட்டமான வயது நிர்ணயிக்கப்படாத போதும், அச்சட்டத்தின்படி பருவமடைந்த எல்லாப் பெண்களும் முக்காடு அணிய வேண்டும். மட்டுமல்லாது உடலோடு ஒட்டியதாக இறுக்க மான உடைகளையும் அணியக்கூடாது.

## பெண்ணுரிமைக்கெதிரான அடிப்படைவாதச் சட்டங்கள்:

2018-ன் தரவுகளின் படி பின்வருவனவே பெண்களுக்கான ஈரானின் சட்ட நடைமுறையாக உள்ளன. அதாவது பெண்களை ஒடுக்கு கின்ற சட்டங்கள் இவை: ஈரானியப் பெண் நாட்டைவிட்டு வெளி யேறுவதாயின் கணவனின் அனுமதி பெறவேண்டும். மணமுறிவின் பின்னர் 7 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட தாய் தன் குழந்தைகள் மீதான பராமரிப்பு உரிமையை இழக்கிறாள். ஒரு பெண் வெளிநாட்டவருடன் பிள்ளை பெற்றுக்கொண்டால், குழந்தைக்கு ஈரானியக் குடியுரிமை கிட்டாது. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகளின் எல் லைப் பகுதிகளில், ஆயிரக்கணக்கான குழந்தைகள் நாடற்றவர்க ளாக கல்வி மற்றும் சுகாதார உரிமை மறுக்கப்பட்டவர்களாக உள்ளனர். நீதிபதி முன்பு ஒரு பெண்ணின் வாக்குமூலம் என்பது ஒரு ஆணின் வாக்குமூலத்தில் பாதியளவு பெறுமதியுடையதாக மட்டுமே கணக்கிலெடுக்கப்படும். பெண் நாட்டின் ஜனாதிபதியாக முடியாது. இவை மட்டுமல்ல. பெண்கள் சைக்கிள் ஓட்டக்கூடாது, புகைப்பிடிக்கக் கூடாது. உடற்பயிற்சிக் கூடங்களில் உடற்பயிற்சி செய்ய அனுமதியில்லை என்றவாராகப் பெண்களை ஒடுக்குகின்ற பல்வேறு சட்டங்கள் அமுலில் உள்ளன.

## மதவாத ஆட்சி நீக்கமும் மதச்சார்பற்ற ஆட்சிக் கோரலும்:

செப்ரெம்பர் 16ம் திகதி தொடங்கிய போராட்டங்கள் இப்பொழுது ஒரு மாதத்தைத் தாண்டி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நாடு தழுவிய ரீதியில் 110 நகரங்களுக்குப் பரவியுள்ளது. அரசு, வன் முறையால் போராட்டங்களை ஒடுக்க கடுமையாக முனைகிறது.



இதுவரை 200 பேருக்கு மேல் கொல்லப்பட்டு, பலநூற்றுக்கணக் காணோர் காயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கில் கைதுசெய்யப் பட்டுள்ளனர். மக்கள் விரும்புவதும் கோருவதும் ஹிஜாப் நீக்கம் அல்லது ஹிஜாப் அணிதல் - அணியாமை தொடர்பான உடைச்சு தந்திரம் மட்டுமல்ல. அது போராட்டத்தைத் தொடங்கிவைத்த பொறி மட்டுமே. அதனைத் தாண்டி அடிப்படைவாத அரச நிறுவ னத்தில் கட்டடைப்பு ரீதியான, அரசியலமைப்பு, அரசியல் மாற் றமே மக்களின் கோரிக்கை. மதவாத ஆட்சியை அகற்றுதல், அர சியலமைப்பினை மதச்சார்பற்றதாக மறுசீரமைத்தல் என்பதாகவே தற்போதைய கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ளன. இந்தப் போராட் டம் வெவ்வேறு சமூகக் குழுக்களுக்கு மத்தியில் ஒருமைப்பாட் டினை உருவாக்கிவருவதாகவும் தகவல்களும் வெளிவந்துள்ளன.

மேற்கின் ஊடகங்கள் ஆர்ப்பாட்டங்களைத் தூண்டிவிட்டுள்ளதாக வும் இது வெளிநாட்டுச் சதியெனவும் ஈரான் அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. இதற்குப் பின்னால் அமெரிக்காவினதும் இஸ்ரேலி னதும் சதி இருப்பதாக நாட்டின் அதியுயர் ஆட்சித்தலைவரான அயத்துல்லா அலி கொமெனி தெரிவித்திருந்தார். போராட்டக்கா ரர்களுக்கு எதிராக கடுமையான வழிமுறைகளைக் கையாளுமாறு ஆட்சிபீடம் ஆயுதப்படைகளுக்கு உத்தரவிட்டுள்ளதான ஆவணம் கசிந்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை அதன் இணையத்த ளத்தில் வெளிப்படுத்தியிருக்கிறது. இன்ராகிறாம், வட்ஸ்அப், பேஸ்புக், ரிவிற்றர், டெலகிறாம், யூரியூப், ரிக்டொக் போன்ற சமூக ஊடகங்களையும் இணைய இணைப்புகளையும் ஈரான் அரசாங் கம் கட்டுப்படுத்தியுள்ளது. இன்ராகிறாம், வட்ஸ்அப் ஆகியன ஈரானிய மக்கள், குறிப்பாக இளைஞர்கள் அதிகம் பயன்படுத்தும் தகவல் பரிமாற்ற-பகிர்வு ஊடகங்கள்.

பெண்ணுரிமைகளை சட்டரீதியாகப் பறித்ததோடு மட்டுமல்லாமல், பெண்ணியச் செயற்பாடுகளை முடக்கிவருவதோடு அவற்றை முன்னெடுப்பவர்களை ஈரான் அரசு தேசத்துரோகிகளாகவும் சித்த ரித்து வந்திருக்கிறது. 2016-ல் சர்வதேச மன்னிப்புச் சபை வெளி யிட்ட ஒரு விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டிருந்த விடயத் தினை இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தமானதாகும். அதில் பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்கள் மீதான அடக் குமுறையை ஈரான் தீவிரப்படுத்தி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட் டிருந்தது. அவர்கள் மீது கடுமையான விசாரணைகளை மேற் கொள்வதுடன், பெண்களின் உரிமைகள் தொடர்பான அனைத்து முன்முயற்சிகளையும் குற்றச்செயல்களாகச் சித்தரிக்கப்பட்டுமிருக் கிறது. தேசிய பாதுகாப்புத் தொடர்பான குற்றச்சாட்டுகளின் அடிப் படையில் சிறைத்தண்டனைகள் தொடர்பான அச்சுறுத்தல்களும் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளன. இவர்களில் பலர் பெப்ரவரி 2016 பொதுத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிக ரிக்கக் கோரிய போராட்டங்களை முன்னெடுத்தவர்களாவர்.

'முடிவெடுக்கும் அமைப்புகளில் பெண்களுக்கு சமமான பிரதிநி தித்துவம் வேண்டும் என்று விரும்பும் அமைதிமுறைச் செயற்பாட் டாளர்களை ஈரானிய அரசின் எதிரிகளாக நடத்துவது வெட்கக்கே டானது. சமத்துவத்தை வலியுறுத்துவது குற்றமல்ல. அதிகரித்து வரும் துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம், இது ஈரானில் பெண்களின் உரிமைகளுக்கு இன்னுமொரு அடியாகும்' என்று சர் வதேச மன்னிப்புச் சபையின் முந்நாள் துணைத் தலைவரும் அதன் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பொறுப்பாளருமான மக்தலேனா முக்ராபி - Magdalena Mughrabi கூறியிருந்தார்.

## மதவாதத் தலைமை:

1979 முதல் ஈரானில் இஸ்லாமிய மதவாத ஆட்சி நிலவிவருகின் றது. அதன் அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாட்டின் அதியுயர் தலைமை என்பது மதவாதத் தலைமையாகவே இருந்துவருகின் றது. நீதித்துறை, காவல்துறை, இராணுவம், ஊடகத்துறை சார்ந்த நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதிக்கும் மேலடுக்கில் உள்ள அந்த அதியுயர் தலைமை கொண்டிருக்கின்றது. ஈரான் அரசியலும் சமூக ஒழுங்குகளும் அதிகமாக இஸ்லாமிய ஷரியா சட்டங்களின் நேரடியான பொருள்விளங்கல் நடைமுறைகளைக் கொண்டது. ஆண்களும் பெண்களும் அடக்கமாக உடை அணிய வேண்டும் என்ற சட்டம் அமுலில் இருப்பினும், நடைமுறையில், 'கலாச்சாரக் காவல்துறை' முதன்மையாக பெண்களையே குறி வைக்கிறது.

இந்த கலாச்சாரக் காவல்துறையின் நடவடிக்கை குறித்து சில தக வல்களைக் குறிப்படுவது பெண்கள் மீதான ஈரான் அரசின் ஆடைத் திணிப்பின் தீவிரத்தை அறிய உதவும். கண்காணிப்பு நடவடிக்கைகளில் கைதுசெய்யப்படுபவர்கள் 'Education and advice center' - கற்பித்தல் மற்றும் ஆலோசனை மையத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர். அங்கு இஸ்லாமிய ஆடை அணிதல் முறைமை மற்றும் ஹிஜாப் அணிதல் முறைமை குறித்த கட்டாய வகுப்பு எடுக்கப்படும். சில சமயங்களில் காவல்நிலையத்திற்கும்

அழைத்துச் செல்லப்படுவர். காவல்நிலையத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கு நிபந்தனையும் விதிக்கப்படும். அதாவது அவர்கள் தமது உறவினர் அல்லது நண்பர்களை அழைத்து பொருத்தமான ஆடைகளைத் தருவிப்பதன் மூலமே காவல்நிலையத்திலிருந்து விடுவிக்கப்படுவர். தவிர தேசிய ஊடகங்கள், பாடசாலை மற்றும் பொது நிகழ்வுகளில் உடை அணிதல் முறைகள் குறித்த விழிப்புணர்வு என்ற பேரிலான அறிவுறுத்தல்கள் முன்னெடுக்கின்ற வழமையும் நிலவிவந்திருக்கிறது. கட்டாய ஹிஜாப் நடைமுறைக்கு எதிரான நீண்ட போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் சிறையடைக்கப்பட்ட நிகழ்வுகளும் உள்ளன எனப்படுகிறது.

## பெண்களின் எதிர்வினை:

தற்போதைய ஜனாதிபதி Ebrahim Raisi 2021 தேர்தலையடுத்து பதவிக்கு வந்தவர். இவருடைய நிர்வாகத்தின் கீழ், பெரிய நகரங்களில் 'கலாச்சாரக் காவல்துறையின்' பிரசன்னம் அதிகரித்துள்ளது. இதற்கான எதிர்வினையாக பல ஆயிரக்கணக்கான பெண்கள் தலையில் முக்காடு இல்லாமல் தெருக்களில் செல்லத் தொடங்கியிருந்தனர். மேலும் சிலர் மற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் தங்கள் வீடியோக்களை சமூக ஊடகங்களில் பகிரத் தொடங்கியிருந்தனர். நூற்றுக்கணக்கான மத நம்பிக்கையுள்ள பெண்கள்கூட கட்டாய ஹிஜாப்பை எதிர்த்து சமூக ஊடகங்களில் பேசத் தொடங்கினர்.

தற்போதைய சூழலில் ஈரான் மூன்று தளங்களில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. பணவீக்க அதிகரிப்பு, அணுவாயுத சர்ச்சையினால் நீண்டகாலமாக எதிர்கொள்கின்ற சர்வதேசத்தின் பொருளாதாரத் தடை, பிராந்தியத்தின் அரசியல் ஸ்திரமின்மை என்பன ஏலவே நாடு எதிர்கொள்கின்ற நெருக்கடிகள். தற்போது ஆட்சிபீடத்திற்கும் அதன் மதவாதத்திற்கும் எதிரான மக்கள் போராட்டம்.

செப்ரெம்பர் இறுதி வாரம் நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐ.நா சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்த ஈரானிய ஜனாதிபதி Ebrahim Raisi அங்கு ஆற்றிய உரையில் பெண்கள் போராட்டம் தொடர்பாகவோ அதற்கெதிரான அரச தரப்பின் நடவடிக்கைகள் தொடர்பாகவோ வாய்திறக்கவில்லை. மாறாக மனித உரிமைகள் தொடர்பாக சில அரசாங்கங்கள் கொண்டுள்ள இரட்டைநிலையை ஈரான் நிராகரிக்கின்றது எனத் தெரிவித்தார். அத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. தாம் அநீதிக்கு எதிரான போராட்டத்தின் பாதுகாவலர்கள் என்றும் கூறினார். இன்னுமொரு சம்பவமும் இடம்பெற்றிருந்தது. ஈரானில் இடம்பெற்றுவரும் பெண்களின் போராட்டம் தொடர்பாகக் கேட்பதற்காக ஒரு நேர்காணலுக்கு CNN ஊடகவியலாளர் Christiane Amanpour இவரிடம் ஒப்புதல் பெற்றிருந்தார். ஒப்புக்கொண்ட நேரத்தில் அவர் நேர்காணலுக்குச் சமூகமளிக்கவில்லை. 40 நிமிடங்களின் பின்னர் அங்கு சென்ற ஜனாதிபதியின் உதவியாளர் ஒருவர் ஊடகவியலாளர் Christiane Amanpour முக்காடு அணியவேண்டும். அப்பொழுதுதான் ஜனாதிபதி நேர்காணலுக்கு சமூகமளிப்பார் எனக் கூறியுள்ளார். நேர்காணலைத் தவிர்ப்பதற்கான ஈரான் ஜனாதிபதியின் உத்தி எனவாகவும் பெண்கள் மீதான ஒடுக்கமுறையைத் தமது நாட்டின் எல்லைகளுக்கு வெளியிலும் பிரயோகிக்கும் முனைப்பாகவும் இதனை எடுத்துக்கொள்ளலாம். அந்த நிபந்தனையை ஊடகவியலாளர் ஏற்றுக்கொள்ளவில்லை. நியூயோர்க்கில் முக்காடு அணிகின்ற பாரம்பரியமோ சட்டமோ இல்லை என்றிருக்கின்றார். திட்டமிட்டபடி நேர்காணல் நடக்கவில்லை.

## ஈரானில்
## பெண்ணியப் போராட்டங்களின் வரலாறு:

பெண்கள் - வாழ்வு - சுதந்திரம் என்ற சொற்களும் பதாகைகளும் தற்போதைய போராட்டத்தின் முதன்மை முழக்கங்களாகியுள்ளன. பெண்ணிய உரிமைப் போராட்டங்களும் அதற்கான அரசியல் செயற்பாடுகளும் ஈரானுக்குப் புதியவை அல்ல. 1900-ம் ஆண்டுகளிலிருந்தே ஒருங்கிணைக்கப்பட்ட பெண்ணியச் செயற்பாட்டு இயக்கங்கள் ஈரானில் இயங்கிவந்துள்ளன. ஷா மன்னராட்சிக் காலத்திலேயே ஒரு நவீனமயமாக்கல் நிகழ்ந்துவந்திருக்கின்றது. அம் மாற்றங்களின் கூறாக பெண்ணுரிமை சார்ந்தவையும் உள்ளடங்கியிருந்துள்ளன. பெரியதும் சிறியதுமான செயற்பாட்டு வெளி நிலவிவந்துள்ளது. குறிப்பாக பெண்களின் கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் ஹிஜாப் நீக்கம் போன்றவை குறிப்பிடப்படுகின்றன.


1979-ல் அயதுல்லா கொமெனி - Ayatollah khomeini நாட்டின் அதியுயர் ஆன்மீகத் தலைமையாகப் பதவிக்கு வந்தார். இதற்குப் பின்னர் பெண்கள் அடைந்திருந்த உரிமைகள் திட்டமிட்ட வகையில் பறிக்கப்பட்டன. 2005-ல் முகம்மட் அஹமதினஜாட் - Mahmoud Ahmadinejad ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்த காலத்தில் பெண்களின் உரிமைகளுக்கு எதிரான நிலைமைகள் மேலும் மோசமடைந்தன. 1980-கள் வரை எட்டப்பட்ட நிலை வளர்ச்சிப்பாதையில் சென்றிருப்பின் ஈரான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் பெண்களின் உரிமை இன்றைய ஐரோப்பிய நாடுகளுக்கே முன்னுதாரணமாக முன்னேற்றங்களைக் கண்டிருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை. இன்னும் சொல்வதானால் 1800-களின் ஆரம்பம் நவீன ஈரானிய பெண்ணுரிமைச் செயற்பாடுகளின் தொடக்கமாகச் சுட்டப்படுகின்றது.

## மதவாத ஆட்சிபீடத்தின்
## வீழ்ச்சிக்கான தொடக்கம்:

முன்னைய போராட்டங்கள் குறுகிய காலத்திற்குள் அரச அதிகாரத்தினால் முறியடிக்கப்பட்டன. தற்போதைய போராட்டம் எவ்வளவு காலம் நீடிக்கின்றதோ, அவ்வளவு அதிக அழுத்தத்தினை ஆட்சிபீடம் எதிர்கொள்ள நேரிடும். 2009-ல் முகம்மட் அஹமதினஜாட் மீள்தெரிவானதை அடுத்து இடம்பெற்ற பசுமை இயக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிலும் இன்றைய போராட்டத்துடன் ஒப்பிடக்கூடிய அளவு மக்கள் பங்கேற்பு இருந்தது. ஆனாலும் இதனையொத்த தீவிரத்துடன் முன்னெடுக்கப்படவில்லை என்கின்றனர் அவதானிகள். அது மறுசீரமைப்பினைக் கோரியதாக இருந்தது. ஆனால் தற்போதைய போராட்டம் அதிக தீவிரம் கொண்டதாகவும், இஸ்லாமிய ஆட்சியை முற்றாக அகற்றி மதச்சார்பற்ற அரசைக் கோருகின்ற போராட்டமாக பரிணமித்திருக்கின்றது.

கடந்த 12 ஆண்டுகளாக ஈரானில் தொடர்ச்சியாகப் பல்வேறு மக்கள் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வந்துள்ளன. ஆட்சிபீடம் மிக மோசமாக அதிகார - ஆயுத - வன்முறைகளால் போராட்டங்களை ஒடுக்கி வந்துள்ளமையும் அறிந்ததே. 2009-ல் பெற்றோல் விலையேற்றத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. 2019-ல் நடபெற்ற போராட்டங்களின் போது 320 பேர் வரை கொல்லப்பட்டிருந்தனர். போராட்டக்காரர்களைக் கைது செய்து சிறைப்படுத்தியமை மற்றும் கொல்லப்பட்ட சம்பவங்கள் நிறையவே உள்ளன. ஆயினும் முன்னைய மக்கள் போராட்டங்களைவிட தற்போதைய போராட்டம் வேறுபட்டுள்ளது. நாடு தழுவிய ரீதியில் பல்கலைக்கழக மாணவர்கள், பிரதான ஆசிரியர் ஒன்றியங்களும் இப்போராட்டங்களில் இணைந்துள்ளன. அளவிலும், கோரிக்கை சார்ந்தும் போராட்டம் முன்னையவற்றைவிட வேறுபட்டிருக்கின்றது. குறைந்தபட்சம் தற்போதைய ஆட்சிபீடத்தின் வீழ்ச்சிக்கான தொடக்கமாக இன்றைய போராட்டங்கள் அமையுமென்ற எதிர்வுகூறல்கள் நிலவுகின்றன.

முன்னைய போராட்டங்கள் பொருளாதார ரீதியலான நெருக்கடிகளால் உந்துதல் பெற்று அரசியல் பரிமாணமாக மாற்றம் பெற்றவை. ஆனால் தற்போதைய போராட்டம் அரசியல் ரீதியாக அடிப்படைகளோடு, தொடக்கத்திலிருந்தே அரசியல் மயப்பட்ட பரிமாணத்தைக் கொண்டுள்ளது. போராட்டத்தின் தலைமைப் பாத்திரமாகப் பெண்கள் உள்ளனர் என்பது இதன் முக்கிய பரிமாணம். பெண்கள் சார்ந்த உரிமைப் பிரச்சினை போராட்டத்தினைப் பற்றிப் பரவவைத்த பொறியாக இருக்கிறது. பெண்கள், போராட்டத்தின் மையமாக உள்ளமை உலகளாவிய ஆதரவை அதிகரித்துள்ளது. ஆனபோதும், அந்த ஆதரவு என்பது ஈரான் மீதான அழுத்த அரசியலாக மாறுவதற்கானதும் மதவாத ஆட்சிபீடத்தை அசைப்பதற்கானதும் நடைமுறைச் சாத்தியங்கள் கேள்விக்குரியவையே. ஹிஜாப் விதிமுறைகள் தளர்த்தப்பட்டாலும் போராட்டம் தொடரும் என்ற நிலைமையே வெளித்தெரிகிறது. மோசமான வன்முறை, கொலைகள், சித்திரவதைகளுக்கு மத்தியில் எவ்வளவுதூரம் போராட்டம் நீடிக்கும், தாக்குப்பிடிக்கும் என்பதும் கேள்விக்கு றியே.



rooban.s@thaiveedu.com

# இந்தியாவில் ஏற்றத்தாழ்வுகள்

- நெல்லை ஜெயசிங்

ஒவ்வொரு நாட்டிலும் அரசியல், பொருளாதார சமத்துவ நிலை சீராக இருக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். ஆனால் இந்தியாவில் சமத்துவ நிலை இல்லை என்பது நீண்ட காலமாக இருந்து வரும் பிரச்சினையாகும். இந்திய நாட்டில் ஏழை, மேலும் மேலும் ஏழையாகிக் கொண்டிருக்க, மறுபுறம் பணக்காரர்கள் மென்மேலும் பணக்காரர்களாகிக் கொண்டிருப்பதை கண்கூடாகக் காணலாம். பல ஆயிரம் கோடியில் வீடு கட்டுபவர் வாழும் இதே தேசத்தில் தான் அரை சென்ட் நிலத்திற்கு பட்டா உரிமை கேட்டு அரசு அலுவலகத்தில் ஆண்டுக் கணக்கில் காத்திருப்பவர்களும் வாழ்ந்து வருகின்றனர். வறுமையை குறைக்க, வறுமையை ஒழிக்க நிறைய

**உணவு உற்பத்தியில் முதலிடம் பெற்ற நாடு பட்டினியில் முதலிடம் நோக்கி நகரவதற்கு சமமற்ற உணவு பங்கீட்டு முறையே காரணமாக இருக்கிறது.**

திட்டங்களை சுதந்திரம் பெற்றது முதல் கடந்த 75 வருடங்களாக இந்திய அரசு செயற்படுத்தினாலும் பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்பட்டதாக தெரியவில்லை. இன்றும் நாட்டில் 26% மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்வதாக புள்ளி விபரம் கூறுகிறது.

சமூகத்தில் ஒவ்வொருவரும் சமமாக நடத்தப்படுவதற்கு சமத்துவ எண்ணம், சமத்துவ கொள்கை அரசிடமும் ஒவ்வொரு மனிதரிடமும் இருக்க வேண்டும். பேராசிரியர் லஸ்கி கூறியதைப் போன்று ‘சமமாக நடத்துவது மட்டுமல்ல போதுமான வாய்ப்புகள் அனைவருக்கும் வழங்கப்படுவதும் அவசியமாகும்’. ஆரசியல், சமயம், பொருளாதாரம், நிறம், இனம் சாதி அடிப்படையில் பாகுபாடு இருத்தல் கூடாது. ஆனால், இந்தியாவில் சமமான வாய்ப்புகள் அனைவருக்கும் கிடைக்கவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

## பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்:

உலகத்தில் பொருளாதார சமத்துவமற்ற நாடுகளின் பட்டியலில் இந்தியா முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. ஏழை, பணக்காரர்களிடையேயான ஏற்றத்தாழ்வு கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உச்சத்தில் இருப்பதாக ஆய்வு அறிக்கை ஒன்று கூறுகிறது. ஏழை பணக்காரர் இடையேயான வருமான இடைவெளி 38 மடங்கு உயர்ந்துள்ளது. ஏழை மக்கள் குறிப்பிடும்படியான செல்வத்தை எப்பொழுதும் சொந்தமாக வைத்திருக்கவில்லை.

1980ம் ஆண்டுக்குப் பின்னர் தாராளமய பொருளாதாரக் கொள்கைகளை உலக நாடுகள் பின்பற்றத் தொடங்கிய பின்னரே ஏற்றத்தாழ்வுகள் மிகப் பெரிய அளவில் அதிகரிக்கத் தொடங்கியது. இந்திய பொருளாதாரமும் இதற்கு பலிகடாவாகியுள்ளது. கொரோனாவுக்கு பின்னர் ஏற்றத்தாழ்வுகள் உச்சத்தை அடைந்தது. செல்வந்தர்களின் சொத்துக்கள் மட்டும் பல மடங்கு அதிகரித்தன. ஏழைகள் தங்களிடம் இருந்த மிகச் சிறிய சேமிப்புகளையும் இழந்தனர்.

இன்று, அதிக ஏழைகள் உள்ள நாடாகவும் சமத்துவமற்ற நாடாகவும் இந்தியா இருந்து வருகிறது. நியாயமற்ற பொருளாதார கட்டமைப்பு காரணமாக இந்தியாவில் பொருளாதார சமத்துவம் இன்மை வேகமாக வளர்ந்து வருவதாக கூறும் OXFAM அறிக்கை 1 சத வீதத்தினரின் வருமானமானது 50% மக்களின் வருமானத்தைவிட இரண்டு மடங்கு அதிகமாக இருப்பதாக கூறுகிறது. 2019-ம் ஆண்டு இவ்வமைப்பின் மற்றுமொரு அறிக்கையில் 1% பெரும் பணக்காரர்களின் மொத்த சொத்து மதிப்பானது 70% மக்களின் சொத்து மதிப்பைவிட நான்கு மடங்கு அதிகமாக இருந்ததாக குறிப்பிடுகிறது. இந்தியாவில் உள்ள பணக்காரர்களின் சொத்து ஒவ்வொரு நாளும் 2200 கோடி அதிகரிப்பதாகவும் கூறப்படுகிறது. இந்தியாவில் 10% பேர் தேசத்தின் 77.4% வளத்தை வைத்துள்ளனர். கட்டுப்பாடற்ற சுதந்திரமான சந்தை காரணமாக தனியார் ஆதிக்கம் அதிகரித்து பணக்காரர்களின் சொத்து பன்மடங்கு உயர்ந்துள்ளது. செல்வந்தர்கள் மீதான சொத்துவரி குறைப்பு மற்றும் அதிக அளவில் வரி விதிக்காமை என்பன செல்வம் சிலரிடம் மட்டும் குவியக் காரணமாகிறது. ‘அனைவருக்குமான வளர்ச்சி’ என்கிறார் இந்திய பிரதமர். ஆனால் நடைமுறையில் ஒரு சிலர் வளர்வதுதான் கனவு இந்தியாவாக இருக்கிறது.

கொரோனா காலத்தில் 40 கோடி தொழிலாளர்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு தவித்த போது அம்பானியின் நிகர வருமானம் 4,800 கோடி அமெரிக்க டொலரிலிருந்து 8,000 அமெரிக்க டொலராக அதிகரித்தது என கூறப்படுகிறது. இக்காலப் பகுதியில் 1.89 கோடிக்கு அதிகமானோர் வேலை இழந்துள்ளனர். கொடிய கொரோனா நோய் தொற்று காலத்தில் ஆயிரக்கணக்கானோர் பசியால் மரணித்துள்ளனர். 2014 - 2017 காலப் பகுதியில் அதான்



குழுமத்திற்கு 72,000 கோடி வரை தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. 2017 - 2022 காலப் பகுதியில் பொதுத் துறை வங்கிகளில் தனியார் நிறுவனங்களின் கடன் 7.27 இலட்சம் கோடி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதனால் பணக்காரர்கள் மட்டுமே பயன டைந்தனர்.

பெரும்பாலானவர்களின் தனி நபர் வருமானம் பத்து ஆண்டுக ளாக மாறாமல் இருக்க விலைவாசி மட்டும் உயர்ந்து கொண்டே செல்கிறது. 2020-ல் 'பிரதம மந்திரி ஏழைகள் நல்வாழ்வு உணவுத் திட்டம்' (Pradhan mantri Gareeb Kalyan Anna Yojana) கொண்டு வரப்பட்டபோது 80 கோடி பேர் பயனடைவர் என கூறப்பட்டது. அதாவது 80 கோடி ஏழைகள் இருப்பதை அரசே உறுதிப் படுத்து கிறது என்பதாகும். '20 வருடகால வேகமான வளர்ச்சிக்குப் பின்ன ரும்கூட ஏழ்மையான நாடுகளில் ஒன்றாகவே இந்தியா இருக்கிறது' என பொருளாதார அறிஞரான திரு. அமர்த்தியா சென் குறிப்பிடுகிறார். பொருளாதார சமத்துவம் இன்மை தொடர்வதால் முழுமையாக கல்வி கற்றவர்கள் உள்ள நாடாக, அனைவருக்கும் உயர்தரமான மருத்துவ வசதி வழங்கக்கூடிய நாடாக இந்தியா வரமுடியவில்லை. உயரத்தில் இருக்கின்ற 10% மக்களுக்கு மட் டுமே ஒளிர்கின்ற நாடாக தொடர்கிறது.

இந்தியாவை விட வேகமாக வளர்ந்து வரும் சீனாவில் ஏற்றத் தாழ்வு குறைவாகும். அதைவிட, முதலாளித்துவ அம்சங்களைக் கொண்ட மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்றத்தாழ்வு குறைவா கவே காணப்படுகிறது. அந்நாடுகளில் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன. வரி விதிப்பு திறமையான முறையில் திட்டமிட்டு நடத்தப்படுகிறது. மேற்கு நாடுகளில் கல்வி, பொது மருத்துவம், வீட்டுவசதி என்ப வற்றில் அரசின் பங்களிப்பு அதிகமாக இருக்கிறது. பிரித்தானிய நாடு சுகாதாரத்திற்கு தமது தேசிய வருமானத்தில் 9% செலவிட இந்தியா 2.1% மட்டுமே செலவிடுகிறது. பட்டியல் இன மாணவர்க ளுக்கான கல்வி உதவித் தொகையையும் ஒன்றிய அரசு அண் மைக் காலங்களில் பெருமளவு குறைத்து வருகிறது. இதனால் நலிவுற்ற மக்களுக்கும் உயர் வகுப்பினருக்குமான இடைவெளி அதிகரித்து வருகிறது. மேலும் இந்தியாவில் தனியாரின் பங்கு அதிகம் இருப்பதுடன் அவற்றின் ஆதிக்கமும் அதிகம் இருப்ப தால் சமூகங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகளும் அதிகமாக காணப்படுகிறது. கடந்த கால நிதி ஆயோக் அறிக்கையிலும்கூட இந்தியாவில் நான்கில் ஒருவர் ஏழையாக இருப்பதாகவும் குறிப்பி டப்பட்டுள்ளது. ஏழைகளில் பெரும் பகுதியினர் விளிம்பு நிலை மக்களாகவே இருக்கின்றனர். குறிப்பாக பீகார், ஜார்க்கண்ட், உத் தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் ஏழைகள் அதிக அளவில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

2022 ஒக்ரோபர் நடுப்பகுதியில் வெளிவந்த ஐநா-வின் வறுமை குறியீடு அட்டவணையில் 41.5 கோடி மக்கள் வறுமையின் பிடி யில் இருந்து மீண்டுள்ள போதும் இன்றும் உலக அளவில் அதிக ஏழை மக்களை கொண்ட நாடாக இந்தியா இருப்பதாக குறிப்பி டப்பட்டுள்ளது. இந்தியாவில் 22.89 கோடி ஏழை மக்கள் இருப்ப தாக கூறும் அறிக்கை 9.7 கோடி ஏழை சிறுவர்கள் இருப்பதாக வும் குறிப்பிடுகிறது. இது வேறு எந்த நாட்டிலும் உள்ள மொத்த ஏழைகள், சிறுவர்கள், பெரியவர்கள் எண்ணிக்கையை விட அதிக மாகும் என அறிக்கை வலியுறுத்துகிறது.

## ஏற்றத்தாழ்வான வரி விதிப்பு:

இந்திய வரிவிதிப்பு கட்டமைப்பு நியாயமானதாக இல்லை. செல் வந்தர்கள் மீதான வரிவிதிப்பு மிகக் குறைவானதாக இருக்கிறது. செல்வம் இல்லாதவர்கள் குறிப்பாக நடுத்தர மற்றும் ஏழைகள் மீதான மறைமுக வரி அவர்களின் சேமிப்புக்கான வாய்ப்பை முற் றாக பறித்து விடுகிறது. 'வரிவிதிப்பில் நேர்மை இருக்க வேண் டும். குடும்பத்தினர் தாங்கக் கூடிய அளவில் இருக்க வேண்டும்' என பொருளியர் அறிஞர் அடம் ஸிமித் கூறுகிறார்.

இன்றைய அரசு சரக்கு சேவை வரி (GST) என்ற பெயரில் பாமர மக்கள் பயன்படுத்தும் அனைத்து பொருட்கள் மீதும் கடுமையான வரியை விதித்து வருகிறது. மறுபுறம் நிறுவனங்களுக்கு ஏராள மான தள்ளுபடிகளையும் வரிவிலக்குகளையும் வாரி வழங்கி வரு கிறது. 2019-ல் ஏழைகள் மீது மறைமுக வரியை 50% உயர்த்திய அரசாங்கம் நிறுவனங்களுக்கு நேரடி வரியை 35 வீதத்திலிருந்து 22% வீதமாக குறைந்திருக்கிறது. எனவே சமத்துவமற்ற சமூக நிலைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே காரணமாகிறது. எனவேதான் உலக அசமத்துவ அறிக்கை (world inequality index ) உலகிலேயே ஏழை - பணக்கார வேறுபாடு அதிகம் நிறைந்த நாடு இந்தியா என்று கூறியிருக்கிறது.

## ஏற்றத்தாழ்வான வருவாய் பாகுபாடு:

இந்தியாவில் பட்டியலின மக்கள், பழங்குடியினர், இஸ்லாமியர்கள் வருவாய் ஈட்டுவதிலும் ஏற்றத்தாழ்வுகளை எதிர் நோக்குவதாக OX FARM INDIA நிறுவனம் தனது 2022-ம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. பல்வேறு விதமான பாகுபாடுகளையும் ஒதுக்குதல்களையும் இம்மக்கள் அன்றாடம் சந்தித்து வருகின்றனர்.

இந்திய நகர்ப்புறங்களில் பட்டியல் இன மற்றும் பழங்குடியினரை விட பொதுப் பிரிவினர் 33% அதிக வருமானம் ஈட்டுவதாகவும், முஸ்லிம்களைவிட 49% அதிகம் சம்பாதிப்பதாகவும் புள்ளி விபரம் ஒன்று கூறுகிறது. சுயதொழில் புரிவோரிடையேயும் இந்த வேறுபாடு இருப்பதாகவும் கூறப்படுகிறது. இப்பிரிவைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்களின் ஊதிய வித்தியாசம்கூட 79% அளவிற்கு இருப்பதாக அறியப்படுகிறது.

பட்டியல் இனத்தினர் மற்றும் பழங்குடியினர் தங்களுக்கு தேவையான விவசாய கடன்களை, வங்கிக் கடன்களை வங்கிகளை நாடிப் பெறமுடியாதிருப்பதாகவும், குறிப்பாக முற்பட்ட சாதியினரைவிட 25% அளவிற்கும் குறைவாகவே இவர்கள் கடன் பெறுகின்றனர் எனவும் கூறப்படுகிறது. இதற்கு இவர்களின் அறியாமை மட்டுமல்லாமல் அதிகார வர்க்கத்தினரின் பாரபட்சம் நிறைந்த ஆதிக்க மனப்பான்மையும் காரணமாகிறது.

கொரோனா நோய் தொற்று காலத்தில் வேலை இல்லா திண்டாட்டம் இவர்களின் வருமானத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதே நேரம் இக்காலப் பகுதியில் அம்பானியின் சொத்து மதிப்பு 7 இலட்சம் கோடியாகவும், அதானியின் சொத்து மதிப்பு 15 இலட்சம் கோடியாகவும் அதிகரித்தமையை காணமுடிகிறது. அதானியின் ஒரு நாள் நிகர இலாபம் 110 கோடியாகும். இதைப் போன்றதொரு ஏழை பணக்காரர் இடையேயான மிகப் பெரிய ஏற்றத்தாழ்வுகளை உலகில் வேறு எங்கும் காண இயலாது.

## சாதிய அடிப்படையிலான ஏற்றத் தாழ்வு:

பிறப்பின் அடிப்படையில் ஒருவரை உயர்ந்தவராகவும் இன்னொருவரை தாழ்ந்தவராகவும் மதிப்பிடும் கொடூரமான கோட்பாடு இந்திய தேசத்தில் வேரூன்றி இருக்கிறது. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு வர்ணங்களை வகுத்துள்ளனர். ஆனால் அவர்களுக்கிடையே பல நூறு சாதிப் பிரிவுகளும் உண்டு. அவர்களிடையே ஏராளமான ஏற்றத்தாழ்வுகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன. நான்கு வகை வகுப்பினராக அடையாளப்படுத்தப்பட்ட ஒரே மதத்தவர்களான இந்துக்களிடையேயும் சமத்துவம் இல்லை. ஒரே மதமாக இந்து மதத்தில் இருந்த போதும் பட்டியலின மக்களுக்கு சமூகத்தில் உரிய மதிப்போ உரிமையோ கிடைப்பதில்லை. அரசியல் அதிகாரத்திற்கு வருவதற்கு இலகுவாக கல்வி, வேலைவாய்ப்பு பெற இப்போதும் இவர்களுக்கு சாத்தியமற்ற நிலையே இருக்கிறது. தொடர்ந்தும் காலம்காலமாக அவர்கள் பாகுபாட்டிற்கு உள்ளாக்கப்பட்டே வருகின்றனர். தொழில் அடிப்படையிலும் பாகுபாடு காட்டப்படுகிறது. எல்லா தொழிலையும் எல்லோரும் செய்வதில்லை. முடிவெட்டும் தொழிலை சத்திரியன் செய்வதில்லை. சூத்திரர்கள் செய்யும் வேலையை மற்றவர்கள் செய்வதில்லை. மேட்டுக்குடியினர் களத்தில் உட்கார்ந்து மூட்டை தூக்குவதில்லை. மரம் வெட்டுவதில்லை. தச்சு வேலை செய்வதில்லை. வர்ணாசிரமம் மக்களிடையே கடுமையான ஏற்றத் தாழ்வுகளை வளர்த்து வருகிறது. இதனால் இந்தியா அதிக ஏழைகள் உள்ள நாடாகவும் சமத்துவமற்ற நாடாகவும் காணப்படுகிறது. இவை முழுமையாக ஒழிக்கப்படாத வரை இந்திய சமூகத்தில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை காண முடியாது. தேர்தல் காலங்களில் அரசியல் தலைவர்கள் தலித் வீடுகளில் உணவு உண்பதை தலைப்புச் செய்திகளாக்கிக் கொண்டிருக்கின்றவேயன்றி சாதிய கட்டமைப்பை தகர்த்து சமத்துவ சமூகத்தை உருவாக்க முன்வருவதில்லை.

இந்தியாவில் அண்மைக் காலங்களில் இந்துத்துவ தேசிய வாதம் பெருமளவு பேசப்பட்டு வருகிறது. சமத்துவ சமூகம் பற்றி மேடைகளில் பேசும் அவர்கள் சாதி அமைப்பையும் சாதிய ஏற்றத்தாழ்வுகளையும் அழித்தொழிப்பது பற்றி பேசுவதில்லை. இதனால் ஆதிக்க சாதியினரின் ஆதிக்க மனப்பான்மையும் குறையவில்லை. கீழ் வரிசை சமூகம் உயர் வரிசை சமூகத்தால் சுரண்டப்படும் அமைப்பாகவே இன்றும் இருக்கிறது. இந்தியாவில் நிலமானது உயர் வரிசை சமூகமான மேலாதிக்க சாதிக்காரர்களிடம் மட்டுமே பெருமளவு இருக்கிறது. பட்டியல் இன மக்களில் பெரும்பாலானோர் நிலமற்ற வர்க்கமாக, ஏழைகளாக, வேலையற்றவர்களாக இருக்கின்றனர். இத்தகைய ஏற்றத் தாழ்வு அகற்றப்படாத வரை இந்தியாவின் பிரமாண்ட பொருளாதார வளர்ச்சி என்பது வெறும் ஏட்டில் மட்டுமே இருக்கும்.

‘சமூக ஏற்றத் தாழ்வு என்பது எல்லா நாடுகளிலும் காணப்படும் ஒன்று. ஆனால் இந்தியாவில் ஏற்றத்தாழ்வுகள் மிக அதிக அளவில் உள்ளன’ என உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. செல் மேஷ்வர் கவலையுடன் கருத்து தெரிவித்துள்ளார். இந்திய அரசியல் சாசனத்தின் முக்கிய அம்சமே சமத்துவம் தான். ஆனால் சமூக ஏற்றத் தாழ்வு என்பது பாலினம், சாதி, மதம், மொழி, இனம் என எல்லா தளங்களிலும் ஆழமாகப் பதிந்து காணப்படுகிறது. கொரோனா தொற்றுக்கு பின்னர் இந்த ஏற்றத் தாழ்வு மேலும் அதிகரித்து விட்டது.

## பாலின பாகுபாடு:

இந்திய தேசத்தில் மனிதர்களிடையே சாதிய அடிப்படையில் ஏற்றத் தாழ்வு இருப்பதைப் போன்று பாலின வேறுபாடும் அதிகம் காணப்படுகிறது. பாலின சமத்துவம் என்பது ஆண்கள், பெண்கள், பொதுப்பாலினர், சிறுவர், சிறுமியர் என அனைவரும் சமமான உரிமைகளையும் வாய்ப்புகளையும் பெறவேண்டும் என்பதாகும். கல்வி, சொத்து, ஊதியம் என்பவற்றில் ஆண் - பெண் இடையே பெருமளவில் பாரபட்சம் காட்டப்படுகிறது. மக்கள் தொகையில் பெண்கள் பாதியளவு இருக்கும் நிலையில் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பு என்பது 25% குறைவாகவே காணப்படுகிறது. வேலை வாய்ப்பு, பதவி உயர்வு, அரசியல் பங்களிப்பு

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2021)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

என அனைத்திலும் பெண்கள் பின்னடைவை சந்தித்து வருகின்றனர். இதனாலேயே உலக பொருளாதார மன்றம் தனது 2022-ம் ஆண்டு அறிக்கையில் 146 நாடுகள் கொண்ட பட்டியலில் பாலின சமத்துவம் காட்டுவதில் இந்தியா 135-வது இடத்தில் மிகவும் பின் தங்கி இருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஆணும் பெண்ணும் சமம் என கூறிய போதும், நடைமுறையில் பாலின பாகுபாடு தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டே வருகிறது. அரசியல் உட்பட அனைத்து தளங்களும் ஆண்களுக்கு சாதகமாகவே அமைக்கப் பட்டு உள்ளன. அவ்வப்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆளுநர்களாக, முதல்வர்களாக, அமைச்சர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக எப்போதாவது குடியரசு தலைவராக பெண்கள் தேர்வாகிறார்கள். அதுவும் அவர்களின் பங்களிப்பு 10%-க்கு மேல் இருந்தது இல்லை. உள்ளாட்சி அமைப்புகளில் மட்டுமே குறிப்பிடத்தக்க அளவில் இடம் பெறுகின்றனர். அதிலும் அவர்களின் அதிகாரம் ஆண்களால் மறைமுகமாக பறிக்கப்படுகிறது. அதிகார மையத்தில் ஆண்களே அதிகம் இருப்பதால் எடுக்கப்படும் முடிவுகள் அவர்களுக்கு சாதகமாகவே அமைந்துவிட பாலின பாகுபாடு ஏற்பட்டு விடுகிறது. ஆண் -பெண் இடையே ஏற்றத்தாழ்வு குறையும் போது மட்டுமே நாடும் சமூகமும் ஆரோக்கியமானதாக இருக்க முடியும்.

## சமூக ஏற்றத் தாழ்வை அதிகரிக்கும் வெறுப்பு அரசியல்:

அண்மைக் காலங்களில் சமூகங்களுக்கிடையே இணக்கப்பாடு, நல்லிணக்கம் என்பன ஏற்படாத வகையில் வெறுப்பு பேச்சு, வெறுப்பு அரசியல் விதைக்கப்பட்டு வருகிறது. இதனால் குறிப் பிட்ட ஒரு சமூகம் வாழ்வதற்கும் வளர்வதற்கும் போராட வேண்டி இருக்கிறது. இதன் ஆபத்தை உணர்ந்த முன்னாள் நீதியரசர்கள், துணை நிலை ஆளுநர்கள், தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள், வெளியுறவு செயலாளர்கள் என மிக உயர் பதவிகளில் இருந்த நூற்றுக்கு மேற்பட்ட அரசு அதிகாரிகள் நாட்டில் நிலவும் வெறுப்பு அரசியல் குறித்து பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர். அதில் தாங்கள் இந்திய நாட்டில் வெறுப் புக்கள் மட்டுமே நிறைந்த ஒரு வெறுந்தளத்தை பார்ப்பதாக தெரி வித்துள்ளனர். முஸ்லிம்கள் உட்பட சிறுபான்மை சமூகங்கள் மீது வெறுப்பு வன்முறை அதிகரித்து வருவதையும் அதன் காரணமாக அவர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்பதனையும் கவலையுடன் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களின் வெறுப்பின் இலக்குகளாக தலித்துகள், சிறுபான்மையினர், ஏழைகள் இருக்கிறார்கள். பசுவதையைத் தடுக்கிறோம் என்ற பெயரில் சிறுபான்மையினரும் தலித்துகளும் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர். உண்ண வேண்டிய உணவு, அணிய வேண்டிய ஆடை என பேசப்படும் வெறுப்பு அரசியல் வன்முறையாக மாறி உயிரை பறித்த சம்பவங்களும் நடந்துள்ளன. வேலை இல்லா திண்டாட்டம் விலைவாசி உயர்வு போன்ற சமூக பிரச்சினைகள் பேசப்படாது வெறுப்பு கருத்து விதைக்கப்படுவது நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக அமைந்து விடுகிறது. மதம் சார்ந்த சமூகமானது மிகமிக மோசமான ஏற்றத் தாழ்வுகளில் இருந்து விடுபட்டுவிடும் என்பதற்கான எந்த விதமான அறிகுறியும் இருப்பதாக தெரியவில்லை. இதனால் மிக அதிக ஏற்றத் தாழ்வுகள் உள்ள நாடுகளின் பட்டியலில் இருந்து இந் தியா விடுபட மிக நீண்ட காலம் ஆகலாம்.

## பிரித்தானியாவை முந்திய இந்திய பொருளாதாரம்?

தேசிய வருமானத்தில் பிரித்தானியாவை பின்னுக்கு தள்ளி உலகில் நான்காவது இடத்திற்கு இந்தியா முன்னேறி இருப்பதாக கூறப்படுகிறது. பிரித்தானிய தேசிய வருமானம் 3.38 trillion dollars. இந்திய தேசிய வருமானம் 3.53 trillion dollars. பிரித்தானியாவை பின்னுக்கு தள்ளி விட்டோம் என்று பெருமைப்பட்ட போதும் தனிநபர் வருமானம், வாழ்க்கைத் தரம், சமூக மேம்பாடு, மருத்துவ வசதி, கல்வி வேலை வாய்ப்பு என அனைத்திலும் இந் தியா மிகவும் பின்தங்கி இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்தியாவைவிட மக்கள் தொகை சற்று அதிகம் உள்ள சீனாவின் தேசிய வருமானம் 5 மடங்கு அதிகமாகும் (17.7 trillion dollars). இந்தியாவில் தனிநபர் வருமானம் 2,277 டொலராக இருக்க, பிரித்தானியாவில் தனிநபர் வருமானம் 47,334 டொலராக இருக்கிறது. இதனால் வாழ்க்கைத் தரம் அங்கு நம்மைவிட மிக உயர்வாக இருக்கிறது. தனிநபர் வருமானம் என்பது மக்களின் வாழ்க்கை தரத்தை மதிப்பிடும் பொருளாதார கருவியாகும். தனிநபர் வாழ்க்கை தரத்தில் இந்தியா 94 வது இடத்தில் உள்ளது. தேசிய வருமானத்தில் அதிகரிப்பு காணப்பட்ட போதும் பிரித்தானிய பொருளாதாரத்தைவிட நாம் வலிமையான இடத்தை எட்டவில்லை என்பதை இந்திய சமூகத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஒப்பிட்டு அறிந்து கொள்ளலாம்.

இந்திய பொருளாதார கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகளை அதிகம் கொண்டிருப்பதன் காரணமாக உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற போதும் 35 கோடி மக்கள் பசியால் வாடுவதாகவும் 5 வயதுக்கு உட்பட்ட 69% குழந்தைகள் ஊட்டச்சத்து குறைவால் வருடம் தோறும் இறப்பதாகவும், 22.4 கோடி பேர் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் வாழ்வதாகவும் GLOBAL HUNGER INDEX தனது அறிக்கையில் கூறியிருக்கிறது. இன்றைய ஒன்றிய அரசு கடந்த செப்ரெம்பர் மாதம் உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையிலும் இதனை உறுதிப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். உலக அளவில் பசிக் குறியீட்டில் 121 நாடுகளின் பட்டியலில் இந்தியா 107-வது இடத்திற்கு பின்தங்கி உள்ளது. அண்மையில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான இலங்கை 64-வது இடத்தைப் பிடித்து இந்தியாவைக் காட்டிலும் முன்னிலையில் உள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். உலக நாடுகளுக்கு உணவளிக்க அனுமதியுங்கள் என உலக மாநாடுகளில் அறைகூவல் விடும் பிரதமர் பட்டினியால் இறக்கும் இந்திய மக்களைப் பற்றி கவலைப்படவில்லை. உணவு உற்பத்தியில் முதலிடம் பெற்ற நாடு பட்டினியில் முதலிடம் நோக்கி நகரவதற்கு சமமற்ற உணவு பங்கீட்டு முறையே காரணமாக இருக்கிறது. இதனாலேயே இந்தியாவில் இரண்டு விதமான இந்தியா இருப்பதாக மருத்துவர் பூபதி ஜான் குறிப்பிடுகிறார். ஒன்று பணக்கார இந் தியா, மற்றது ஏழை இந்தியா. அரசின் கவனம் பணக்கார இந் தியா பக்கம் அதிகம் இருப்பதால் ஏழை மக்கள் கவனிப்பு இன்றி நாட்டில் ஏற்றத் தாழ்வு அதிகரித்து காணப்படுகிறது. கோயில் கட்டுவதில் அக்கறை காட்டும் அரசு சமமற்ற நிலையை நீக்கி சமூகங்கள் இடையே ஏற்றத் தாழ்வை குறைக்கக் கவனம் செலுத்த தவறினால் உலக அரங்கில் இந்தியாவிற்கு பெரும் தலைகுனிவு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

சமூகத்தில் இரு பிரிவினர்களிடையே இடைவெளி அதிகரித்து பொருளாதார ஏற்றத்தாழ்வு அதிகரித்திருப்பதாக ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரியும் அண்மையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் நமது நாடு பணக்கார நாடு. ஆனால் மக்களிடையே காணப்படும் வறுமை, பட்டினி, வேலை இன்மை, பணவீக்கம், சாதி பாகுபாடு, தீண்டாமை என்பன முன்னேற்றத்தை தடுப்பதாகவும் கூறுகிறார்.

இந்தியாவின் தொழிற்துறை பிரமாண்டமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. தொழில் நுட்பம், ஆயுத உற்பத்தி அதிகரித்திருக்கிறது. விண்வெளித் துறை பெருமளவில் விரிவடைந்திருக்கிறது. விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. உணவு உற்பத்தி பெருகி இருக்கிறது. இருள் சூழ்ந்த பொருளாதாரத்தில் ஒளிரும் புள்ளியாக இந்தியா இருக்கிறது. ஆனால் இவை எதுவுமே ஏழைகளின் வாழ்வில் ஒளி பாய்ச்சவில்லை. காரணம், இமயம் அளவிற்கு பரந்து விரிந்து காணப்படும் ஏற்றத்தாழ்வாகும்.



jeyasingh@thaiveedu.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You

## ஏட்டில் எழுதிவைத்தார்

# அங்காதிபாதம் 400

11

இன்னமும் ஏட்டுச்சுவடிகளில் மட்டுமே காணப்படும் எமது முன்னோரின் படைப்புக்களைக் எண்ணிமப்படுத்தும் பணிகளை தற்போது நூலக நிறுவனத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். இவற்றுள் இதுவரை அச்சில் வெளிவந்திராத ஒருசிலவற்றையேனும் வாசித்துத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு அறியத்தரும் ஒரு முயற்சியாக நாடிவிதி மற்றும் அங்காதிபாதம் ஆகிய நூல்களைத் தாய்வீடு' இதழில் வெளியிடத் தீர்மானித்தேன்.

நூலகத்தினரின் EAP1260_CO65_F004.pdf என்னும் இலக்கத்தில் உள்ள சுவடிகளின் பாடல்களே இங்கு தரப்பட்டுள்ளன.

- பால. சிவகடாட்சம்

*உடம்பிற் சென்ற வியாதியை ஓதிடில்*
*கடிந்து காயுஞ்சுரம் கயரோகமேல்*
*அடர்ந்த மூலங் கணையக் கரத்துடன்*
*தொடர்ந்த பீனிசஞ் சூலை வலிகளே - 109*

உடம்பினில் ஏற்படக்கூடிய வியாதிகள் பற்றிக் கூறுவோமானால் கடுமையாகக் காயும் சுரம் (காய்ச்சல்), கயரோகம், மூலம், கணை, அக்கரம், தொடர்ந்தபீனிசம், சூலை, வலி என்பனவும்

*வலியதாங் குட்டம் மாந்தம் எகுத்துவாய்*
*வலைவு செய்திடும் சன்னி யடாகிடம்*
*உலகில் ஊழி யோடுட்டணம் ஈளைநோய்*
*சலமுளைச்சல் சலசத்துடன் மேகமே - 110*

குஷ்டரோகம், மாந்தம், வயிற்றோட்டம் மிகச் சிரமத்தைத் தரும் சன்னி, கொள்ளைநோய், வெப்புநோய், தொய்வு, சலக்கடுப்பு, மேகநோய் என்பனவும்

*மேகமான கரப்பன் மிகுஞ்சொறி*
*தாகமாகிய காமாலை தன்னுடன்*
*சோகமான களிச்சல் தொலைவில்லா*
*வாகும்வாத பித்தை யரோகங்களே - 111*

தோலுக்கு மேலாகத் தெரியும் கரப்பன் அதிகமாகக் கடிக்கும் சொறி, காமாலை, வயிற்றோட்டம், வாத, பித்த, கப ரோகங்கள் என்பனவான

*உரோகமான தனேகமுற் றின்னமுஞ்*
*சிரோபதம் முதலீறு தெரிந்துமெய்*
*அரோசியாக வகுத்து மதன்குணம்*
*பரோப காரநூல் தன்னிற் பகர்ந்ததே - 112*

தலைமுதல் கால்வரை தோன்றக்கூடிய ஏராளமான நோய்களைத் தெரிந்து அவற்றின் குறிகுணங்கள் இவையெனப் பகுத்துக்காட்டி பலருக்கும் மிகவும் பயனளிக்கும் தாராண்மையான நூலில் கண்ட வண்ணம் இங்கு கூறப்படுகின்றது.

*பகர்ந்த நூல்பல சாத்திரங்கள் படித்*
*துகந்து வாசித்துறு முணர்வாற் றெளிந்*
*தகதெறும் மணிமந்திர மாதியாற்*
*சுகந்தருமெனச் சொற்றனர் திண்ணமே - 113*

சொல்லப்பட்ட பல்வேறு நூல்களையும் விரும்பி வாசித்துத் தெளிந்து மனதில் கொண்டு அவற்றை உணர்ந்து தெளிந்தவர்கள் மணி மந்திரம் மருந்து முதலானவற்றால் சுகம்பெறும் வழியும் தெளிவாகக் கூறிவைத்தனர்.

*திண்ண மாம் பிணி சென்மத் தொடர்ச்சியால்*
*நண்ணி வெந்துயர் நாளு மியற்றியே*
*எண்ணொ ணாதிடர் பண்ணு மிறப்பினை*
*மண்ணுளோர் சொல்லு வார்இம் மரபையே - 114*

பிறவிகளின் தொடர்ச்சியால் ஏற்படும் பிணிகள் ஒவ்வொரு நாளும் துன்பங்களைத் தோற்றுவித்துப் பெருந் தீமைகளை ஏற்படுத்தி மரணத்தை உண்டாக்குகின்றன என்று இவ்வுலகத்தோர் இந்த மரபினைக் கூறுவர்.

*மரபிற் பண்டிதர் வன்பிணியென்குவர்*
*பெரிய மந்திரர் பேயெனப் பேசுவர்*
*அரியசோதிடர் கோளென் றறைகுவர்*
*உரிய ஞானியர் ஊழின் பயனென்பார் - 115*

பரம்பரை வைத்தியர் இது கொடுமையான நோய் எனக் கூறுவர். பெரிய மந்திரவாதிகள் இது பேயினால் ஏற்பட்டதெனக் கூறுவர். சோதிடர்களோ கிரக தோஷத்தினால் எற்பட்டது என்பர். ஞானிகள் இது கர்மவினையால் விளைந்தது என்பர்.

### நடைசாரி:

(நடைசாரி என்பது உலாவுதல் என்பதைக் குறிக்கும். மனித உடலில் தீ, காற்று, நீர், பூமி, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களின் உலாத்தல் எவ்வாறு நோய்களைத் தோற்றுவிக்கின்றது என்பது பற்றி அடுத்து வரும் சிலபாடல்கள் விளக்குவதாகக் கருதமுடியும்.)

*பயனதுவா முடம்பிலங்கி தான் பகைத்திடாமல்*
*வியனுறு காலோடொத்து மேவியே சமானஞ் செய்யில்*
*அயனமாம் புசிப்பதெல்லாம் அடங்கியே செமித்து நிற்கும்*
*மயனமாம் பிணியும் வாரா மாண்புடல் சுகமதாமே - 116*

உடம்பில் தீயானது பகையில்லாது காற்றுடன் சேர்ந்து சமநிலையில் நின்று உண்பதையெல்லாம் உடலில் சமிபாடு அடைய வைத்து நிற்கும்போது நோய்கள் தோன்றாது உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

*சுகமதாய்க் காற்றெழும்பிச் சொலித்திட வங்கி தன்னை*
*அகமதி லூதுமாகில் அதிகமாய்ப் பசியுண்டாகும்*
*மிகநெருப் பொடுகால்கூடி மீறியே மண்ணைச் சேர்ந்தால்*
*பகர்தரும் வாத ரோகம் வருமெனப் பன்னினாரே - 117*

காற்றானது எழும்பிப் பிரகாசித்துத் தீயினை உடலுக்குள் ஊதுமாகில் பெரும்பசி உண்டாகும். தீயும் காற்றும்கூடி அளவு மீறி (உடலில் உள்ள பஞ்சபூதக் கூறாகிய) மண்ணைச் சேர்ந்தால் சொல்லப்படுகின்ற வாதரோகம் உண்டாகும் எனக் கூறிவைத்தனர்.

*பன்னிய மண்தான் மீறிற் பதறிவாய் வதுதொந்திக்கும்*
*பின்னிய தீயுங் வானுறிற் பித்தமாகும்*
*மன்னிய தீயுங் காற்று மப்புறில் ஐயமாகும்*
*வன்னிய தீயைப் பற்றில் வந்திடும் பித்த ரோகம் - 118*

நிலத்தின் தாக்கம் அளவு மீறினால் வாயுவானது இரட்டிக்கும். தீயின் கூறு ஆகாயத்துடன் இணைந்தால் பித்தம் தோன்றும். தீயும் காற்றும் நீருடன் சேர்ந்தால் கபம் தோன்றும்.

*பித்தமந் தீயுங் காற்றும் பெலத்து மூளையினிற் புக்கில்*
*மெத்தவே நீர்கடுத்து மேக நோய் வருவதாகும்*
*தத்திய நீர் கால் வன்னி சிங்குவை தானுங் கூடி*
*ஒத்து மூலத்திற் சேர்ந்தால் சன்னி வந்துருப்பதாமே - 119*

பித்தமும் தீயும் காற்றும் வலுப்பெற்று மூளையில் சென்றால் நீர்க்

கடுப்பு உண்டாகி மேகநோய் உண்டாகும். நீரும் காற்றும் தீயும் சிங்குவை என்னும் நாடியுடன் கூடி மூலத்திற் சேர்ந்தால் சன்னி உண்டாகும்.

*உருப்பதாஞ் சுழுமுனை யுற்றுக் காந்தாரி ஓங்கித் தீயை*
*பரப்பிடில் உடம்பை வற்றப் பண்ணியே தாது குன்றும்*
*மருப்பிய நரம்பி ரண்டும் மணிவிசை நரம்பி லுற்று*
*பருப்பிளவை கள்புண் சேர்ந்து படுநரம் பைத் துளைக்கும் -120*

உட்டணமான சுழுமுனை மற்றும் காந்தாரி நரம்பு மேலோங்கித் தீயினைப் பரப்பிடின் உடம்பை மெலியப்பண்ணித் தசை குறைவடையும். இந்த இரு நரம்புகளும் மணிவிசை நரம்பில் சேர்ந்து பருக்கள், பிளவு, புண் முதலானவற்றைத் தோற்றுவித்து அவற்றை அடுத்திருக்கும் நரம்பைத் தாக்கும்.

*துளைத்திடில் அங்கி காற்றும் துன்னியே நீருங் கூடி*
*வளைத்தது விசைநரம்பை மடங்கியே சன்னிதன்னை*
*விளைத்துயிர் மரணஞ் செய்யும் மிக்கவா தம்பித் தையம்*
*இளைத்திட எழும்பிற் சன்னி இதுவெனச் சொன்னதாமே - 121*

இவ்வாறு தாக்கிடின் தீயும் காற்றும் நெருங்கி நீரும் கூடி விசை நரம்பை மடக்கி சன்னியை விளைவித்து உயிராபத்தை உண்டாக்கும். வாதம் பித்தம் கபம் என்பன எழும்பின் சன்னி இது என்று கூறினர்.

*சொன்னகா லங்கி கூடி மந்தத்திற் சொருகி நின்று*
*வன்னமாய்ச் சுரங்க ளெல்லாம் விரவின் வந்திடுவதாகும்*
*மன்னுகாற் றுடனே தீயும் மண்டையி லேறு மாகில்*
*அன்னமே பீனிசம் மூக்க நேகநோய் சிரத்திலாமே - 122*

சொல்லப்பட்ட காற்றும் தீயும் மந்தமாய்க் கூடிநின்றால் சுரங்களெல்லாம் வந்துவிடும். காற்றும் தீயும் மண்டையில் அதிகரிக்குமாகில் பீனிசத்துடன் மூக்கிலும் சிரத்திலும் அநேக நோய்கள் தோன்றும்.

*சிரத்தினிற் காற்று மீறித் தீயொடு நீரை யேற்று*
*கருத்துற வேற்று நீரைக் கால்மறித் திடுதலாலே*
*யுரைத்த கண் ணொளிதான் குன்றி யுற்றிடு நயன ரோகம்*
*இரத்தமாஞ் சயநோய் தானும் எய்துவ தங்கியாலே - 123*

தலையிலே காற்று மேலோங்கித் தீயுடன் நீரையும் ஏற்று வேற்று முறைப்படி பாயும் நீரைக் காற்று மறித்திடுவதன் காரணமாகக் கண்பார்வை குறைந்து கண்களில் நோய்கள் உண்டாகும். இரத்தாயசம் என்னும் சயநோயும் தீயினால் தோன்றுவதாகும்.

*அங்கிதான் எழும்பி மேலாய் அப்புவை யேற்ற லாலே*
*பொங்கிய மதுரம் வானி லூறி மண்டையிற்பொசித்து*
*தங்கநீர் கண்ணிற் றங்கிச் சார்ந்துநெஞ்சிற் சுவாசம்*
*மங்கியே குறைதலாலே வருஞ்சய ரோகமாமே - 124*

தீயானது மேலெழுந்து நீரை ஏற்றுவதாலே அதிகரித்த நஞ்சு (உடலில் உள்ள பஞ்ச பூதக்கூறான வெளியில்) ஆகாயத்தில் ஊறி மண்டையில் தங்க நீர் கண்ணில் தங்கிச் சார்ந்து சுவாசமும் குறைவடைதலினால் சயரோகம் தோன்றும். (சய ரோகம் - உடல் இளைத்து வாடி ஒடுங்கி ஈற்றில் மரணம் தரும் நோய்)

நன்றி: அங்காதிபாதப் பாடல்கள் சிலவற்றுக்குப் பொருள் காண உதவிய திரு. சிவபாலு மாஸ்ரர் அவர்கட்கும் எனது உரையைப் பூரணப்படுத்த உதவிய டொக்டர் இராமநாதன் இலம்போதரன் அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

பின்குறிப்பு: எனக்குக் கிடைத்த அங்காதிபாதம் 400 என்னும் நூலின் ஏட்டுப்பிரதிகளில் 124 பாடல்களே உள்ளன. மீதமுள்ள 276 பாடல்களைக் கொண்ட சுவடிகள் ஈழத்தில் உள்ள பாரம்பரிய வைத்தியக் குடும்பங்களைச் சேர்ந்தோரிடம் இருக்கலாம். அவற்றை வைத்திருப்போர் தந்துதவினால் இந்நூலினை முழுமையாக வெளிக்கொண்டுவர முடியும்.



Sivakadadcham@thaiveedu.com

ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
நடத்தும்
இணைய வழிக் கலந்துரையாடல்
நாள் : 18 நவம்பர் ( வெள்ளிக்கிழமை 2022 )
நேரம் : இரவு 8:00 – 10:00 மணி ( கனடா ரொறன்ரோ )
நாள் : 19 நவம்பர் ( சனிக்கிழமை 2022 )
நேரம் : காலை 1:00 – 3:00 மணி ( இலண்டன் )
காலை 6:30 – 8:30 மணி ( இலங்கை, இந்திய )
காலை 12:00 – 2:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி )



நூல்களைப் பேசுவோம்
பேசுநூல் :
"ஒல்லாந்த தளபதி சுவார்தகுரூனின் யாழ்ப்பாண நினைவுத்திரட்டு"
(MEMOIR- HENDRICK ZWAARDECROON)



பேசுபவர்: திரு.மணி வேலுப்பிள்ளை
Zoom ID: 84777257162 Passcode: 554268

# வாடகைத்தாய் என்னும் பதிலித்தாய்

## (Surrogacy)

- போல் ஜோசேப்

**இன்னும் சில ஆண்டுகளில்...,**

'என் கருவறை காலியாக உள்ளது வாடகைக்குத் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்', 'இங்கு கருவறைகள் வாடகைக்குக் கிடைக்கும்'... என்று, இது போன்ற விளம்பரங்கள் இனிவரும் காலங்களில் ஊடகங்களில் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

ஆம். அண்மையில் ஒரு பிரபலத் திரைப்பட நடிகை வாடகைத் தாய் மூலம் இரட்டைக் குழந்தைகள் பெற்றுக் கொண்ட பின்னர் அதைப்பற்றிய விடயங்கள் பேசுபொருளாக மாறத் தொடங்கியுள்ளது.

வாடகைத்தாய், பதிலித்தாய், கரு சுமக்கும் தாய், நமது சமூகத்தில் ஒரு புதிய விடயமல்ல, நமது புராணங்களிலும், வேதங்களிலும், பைபிளிலும், இதேபோல முன்னுதாரணங்கள் உள்ளது.

திரு விவிலியம், தொடக்கநூல் அதிகாரம் - 16

- ஆபிரகாமின் மனைவி சாராய்க்கு மகப்பேறு இல்லை. சாராய்க்கு ஆகார் என்ற எகிப்தியப் பணிப்பெண் ஒருத்தி இருந்தாள்.
- சாராய் ஆபிராமிடம், 'ஆண்டவர் என்னைப் பிள்ளை பெறாத படி செய்துவிட்டார். நீர் என் பணிப்பெண்ணிடம் உறவு கொள்ளும். ஒருவேளை அவள் எனக்காகப் பிள்ளை பெற்றுத் தரக்கூடும்' என்றார். ஆபிராம் சாராயின் சொல்லைக் கேட்டார்.
- ஆபிராம் கானான் நாட்டில் பத்து ஆண்டுகள் வாழ்ந்தபின், அவர் மனைவி சாராய் எகிப்தியப் பணிப்பெண் ஆகாரைத் தம் கணவருக்கு மனைவியாகக் கொடுத்தார்.
- அவர் ஆகாருடன் உறவு கொண்டபின் அவள் கருவுற்றாள்.

இதேபோல 1300 வருடங்கள் பழமை வாய்ந்த கல்ப சூத்திரம் என்ற சுவடிகளிலும் இது போன்ற விடயங்கள் ஆதாரங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்மை அடைதல், குழந்தைப்பேறு என்பதெல்லாம் பலருக்கும் ஒரு பெரும் கனவாக உள்ளது, சிலருக்கு அது கைக்கூடாமல் போகிறது. இதனால் அந்தத் தம்பதிகள் சமூகத்தில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதைப்போக்க அண்மைக் காலமாகவே மருத்துவ விஞ்ஞானத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு அந்தக் குறை பெரும்பாலும் தீர்க்கப்பட்டு வருகிறது.

பதிலித்தாய் என்பது ஒரு பெண் தனது கருப்பையில் இன்னொரு தம்பதிக்காக அல்லது ஒரு தனி நபருக்காகக் கருத்தரிப்புக்கு உள்ளாகி குழந்தையைப் பெற்றெடுப்பது. இவ்வாறு பெறப்பட்ட குழந்தையை, குழந்தைக்காகக் காத்திருக்கும் பெறாத பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும். இந்தக் கருத்தரிப்பு முறையில் வாடகைத் தாயின் கருமுட்டையே கரு உருவாக்கத்தில் உதவியிருந்தால் அவரே குழந்தையின் மரபியல் தாயும் ஆவார்.

அவருக்குச் செலுத்தப்படும் விந்தானது குறிப்பிட்ட தம்பதிகளில் ஆணின் விந்து அல்லது வேறொரு ஆணிடமிருந்து பெறப்பட்டதாகவும் இருக்கலாம், அதேசமயம் ஒரு பெண்ணின் கருமுட்டையானது ஒரு ஆணிடமிருந்து பெறப்படும் விந்துடன் கருவூட்டப்பட்டு வாடகைத் தாயின் கருவறைக்குள் வைக்கப்பட்டால் அவள் கருசுமக்கும் தாய் ஆவார்.

குழந்தையை உருவாக்க இயலாத சட்டபூர்வமான பெற்றோரிடம் இருந்து பெறப்படும் கருமுட்டையும் விந்தணுவும் கருவூட்டல் செய்யப்பட்டு வாடகைத் தாயின் கருவறைக்குள் செலுத்தப்பட்டுப் பிறக்கும் குழந்தைக்கும் வாடகைத் தாய்க்கும் மரபியல் தொடர்பு இருக்காது.

பதிலித்தாய் அல்லது வாடகை தாய் முறைமையில் பல முறைகள் இருந்தாலும் முக்கியமாக இரண்டு வகைகள் பொதுவாக வழக்கத்தில் உள்ளது ஒன்று 'மரபுசார் பாரம்பரிய முறை' மற்றொன்று 'கர்ப்பகாலப் பதிலித்தாய் முறை', இதில் கருவைச் சுமக்கப் போகும் பெண்ணின் கருமுட்டையுடன் குழந்தையைப் பெற்றுக்கொள்ளப் போகும் அல்லது குழந்தைக்குத் தகப்பனாகப் போகும் ஆணின் விந்துடன் அல்லது அவருக்குக் குறைகள் இருக்கும் பட்சத்தில் வேறொரு கொடையாளியின் விந்துடன் கருக்கட்டல் செய்யப்பட்டு உருவாகும் முளையமானது தாயின் கருப்



பையில் பதியம் செய்யப்படும். இது இயற்கையானதாக அதாவது பாலுறவு மூலமாகவோ செயற்கையான கருவூட்டல் மூலமாகவோ நடைபெறலாம்.

அடுத்தது 'கர்ப்பகாலப் பதிலித்தாய்' முறை, 1986 முதல் இது நடைமுறையில் இருந்து வருகிறது. இந்த முறைமையில் வெளிப்புறச் சோதனைக்குழாய்க் கருவூட்டல் மூலம் தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட ஒரு கருமுளையத்தை வாடகைத் தாய் சுமக்கப் போகிறாள். கருவானது தந்தையின் விந்துவையும் தாயின் கருமுட்டையையும் பயன்படுத்தி உருவாக்கப்படலாம் அல்லது தந்தையின் விந்தும் மற்றும் தானம் செய்பவரின் முட்டையையும் பயன்படுத்தி உருவாக்கப்படலாம் அல்லது நன்கொடையாளர்கள் இருவரின் கருமுட்டையானது வாடகைத் தாயின் கருவறையில் வளர்க்கப்படலாம்.

வாடகைத்தாய் முறை செயற்படுத்துவதற்கு ஒரு தம்பதியருக்கோ அல்லது தனி நபருக்கோ பல்வேறு மருத்துவ ரீதியாக பல காரணங்களை வகைப்படுத்தலாம்.

- வயது ரீதியாகப் பிந்திய வயது அல்லது தாமதமாகத் திரும ணம் செய்து கொண்ட தம்பதிகள்,
- மரபணுக் குறைபாடுகள் உள்ளவர்கள்,
- கரு உருவாவதற்கு உடலிலே எதிர்ப்புத்தன்மை உள்ளவர்கள்,
- மீண்டும் மீண்டும் கருச்சிதைவு ஏற்படும் பெண்கள்,
- பல காரணங்களினால் குறிப்பாக அதிக உதிரப்போக்கு மற் றும் புற்றுநோய்க் கட்டிகள் காரணமாக கருப்பை அகற்றப்பட்ட நிலை,
- இயற்கையாகவே இனப்பெருக்க உறுப்புகளில் உண்டான மாறுபாடுகள் அல்லது மாற்றங்கள்,
- கருப்பை அல்லது சினைப்பை போன்றவை இயற்கையிலேயே இல்லாமல் இருத்தல்,
- பிறவியிலேயே ஹார்மோன்கள் மற்றும் பாலியல் உறுப்புகளில் உள்ள குறைபாடுகள்,
- திருமணமாகாமல் தனிமையில், வாழ்க்கைத் துணை இல்லாமல் அல்லது தேடிக் கொள்ளாமல் தனக்குரிய மரபியல் குழந்தை யைப் பெற்றுக் கொள்ளும் நோக்கம் உள்ளவர்கள்,
- ஓரினச் சேர்க்கையாளர்கள்.

இப்படி பலருக்கும் தங்கள் வாரிசுகளை உருவாக்கும் வரம் இதன் மூலம் கிடைக்கும் என்றாலும் ஒவ்வொரு நாடுகளின் சட்ட முறைப்படி இதில் பல வேறுபாடுகளும், முறைப்படுத்தல் சட்ட விதிகளும் மாறுபடுகிறது.

குழந்தையை விரும்பும் பெற்றோர்களும் அவர்களின் கருவைச் சுமக்கத் தயாராகும் பதிலித்தாயும் முறையாகச் சட்டபூர்வமான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டும். கர்ப்பத்தின் முதல் மாதத்தில் இருந்து பிரசவகாலம் வரை அதன் பின்னரான சில காலத்திற்கான மருத்துவச் செலவுகளையும் குழந் தையை விரும்பும் பெற்றோர் பொறுப்பேற்க வேண்டும்.

குழந்தை பிறந்த சில மாதங்களுக்கு அதனைப் பெற்றதாய் பாலூட்ட அனுமதிக்கப்பட வேண்டும், சட்ட ஒப்பந்தங்களின் படி குழந்தையை விரும்பும் பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பதிலித்தாய் - தாயின் வயது 25 முதல் 35 வரை இருக்க வேண் டும். இதனை வாடகைத்தாய் ஒருமுறை மட்டுமே செய்ய அனும திக்கப்படுவார். அதுமட்டுமல்ல பதிலித்தாய் ஆக இருப்பவரின் உறவுமுறை, இரத்த சம்பந்தம் அதற்கான பொருளாதார அன்ப ளிப்புகள், மருத்துவ ரீதியான காரணங்கள் அதுதொடர்பான சட்ட நடைமுறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது.

வாடகைத் தாய் மூலம் முதன்முதலாக 1985 - 86 களில் இங்கி லாந்தில் முதல் பிரசவம் நடைபெற்றது. அதற்குப் பிறகு பல நாடுகளிலும் இந்த முறையில் பலர் குழந்தை பெற்றுக் கொண் டார்கள். இந்தியாவில் 1990-ல் இந்த முறை நடைமுறைக்கு வந்தா லும் அண்மைக்காலங்களில் மிகப்பிரபலமான இந்தி நடிகர்கள் அமீர்கான், பிரியங்கா சோப்ரா, ஷில்பா ஷெட்டி போன்றவர்கள் வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொண்டது வரலாறு.

உலகத்திலேயே அதிகமான வாடகைத்தாய் முறை செயல்படுத் தப்பட்டு வருவது இந்தியாவில்தான், 2002-ல் ஜப்பானியத் தம்ப தியர் குஜராத்தில் உள்ள ஒரு பெண்மணியை வாடகைத் தாயா கத் தேர்வுசெய்து அவருக்குள் தங்கள் கரு முட்டையை வைத்து குழந்தை உருவாக்கப்பட்டது. அந்த நேரத்தில் ஜப்பானியத் தம்ப தியர் அவர்களுக்குள்ளான மனக்கசப்புக் காரணமாக விவாகரத் துப் பெற நேரிட்டது, குழந்தைக்கு யார் பொறுப்பு என்பதெல்லாம் ஒரு பிரச்சினையாக இருந்து. தற்போது அந்த வாடகைத் தாயே குழந்தையை வைத்து வளர்க்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

மதத்தலைவர்கள், மதம் சார்ந்த கொள்கைகளுடையோர் இதுதொ டர்பாக ஆரம்பத்திலிருந்தே மறுப்பும் எதிர்ப்பும் தெரிவித்து வருகி றார்கள். பெண்ணின் பார்வையில், அவளின் மனநிலையில், தாய்மை அடைவதில் உள்ள சிக்கல்களுக்குத் தெளிவான தீர்வை மதங்கள் முன்வைக்கத் தவறுகின்றன.

கருவறை என்பது பெண்ணின் உடலோடு தொடர்புபட்டாலும் அதற்குள்ளாக விதை எனும் பதியம் போடுவதை தீர்மானிப்பது ஆணாகவே இருப்பதும், அப்படியானால் கருவறை முழுதும் பெண்ணின் ஆதிக்கத்தில் இல்லை என்பதும் ஒருபுறம் உண்மை தான். உறவுகளுக்குள்ளே அக்கா தங்கையாக இருப்பவர்களும் பதிலித்தாயாக இருந்து குழந்தை பெற்றுக் கொண்டு வாழ்வதும், பெற்றுக் கொடுத்து வாழ்வதும் பல சமூகங்களில் இன்றும் நடை முறையாக உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு பிறப்பிலேயே கருப்பை இல்லாத தன் மகளுக்குத் தாயின் கருவறையில், மகள் மற்றும் மருமகனின் கருக்களை செயற்கைக் கருவூட்டல் மூலம் இணைத்துக் குழந்தை பெற்றுக்கொண்ட செய்திகளும் வெளிவந் தன.

முன்பு குழந்தை இல்லாத தம்பதியருக்கு செயற்கை கருவூட்டல் மூலம் குழந்தை பெறுவது பணம் படைத்தவர்களுக்கு மட்டுமான வாய்ப்பாக இருந்து வந்தது, அந்நிலை இன்று மாறிவருகிறது. அதேபோல வாடகைத்தாய் முறையிலும் சாதாரண மக்களுக்கும் வாய்ப்புகள் கிட்டும் வகையில் எதிர்காலத்தில் வாய்ப்புகள் உரு வாக வேண்டும்.

குழந்தைக்காக ஏக்கத்துடன் காத்திருக்கும் பலருக்கும் பயன்படும் இந்த மருத்துவ தொழில்நுட்ப முன்னேற்றம் சட்ட முறைமைக ளையும் தாண்டி ஒரு அறம் சார்ந்த விடயமாக இருப்பதன் மூலம், இதன் உண்மைத் தன்மையும் வணிக நோக்கமற்ற, சுரண்டலற்ற பெண்ணின் உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்ற, பெண்ணியம் பேணுகின்ற, தாய்மையைப் போற்றுகின்ற ஒரு விடயமாக எதிர் காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும்.



paul.joseph@thaiveedu.com


**சிந்தனைக் களம்**
**(இசை, நடனம்)**

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.

Zoom ID: 849 3116 6987 Passcode:601 081)

12 நவம்பர் 2022 (சனிக்கிழமை) 8:00pm-10:30pm (கனடா-ரொறன்ரோ)

(இலங்கை, இந்தியா - 13 நவம்பர் 2022 சனிக்கிழமை 6:30am-9:00am)
(சிட்னி - 13 நவம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை 11:00am-1:30pm)

**உரைத்தொடர் - 23**

உரைப் பொருள்
***'நாட்டியநாடக வடிவமைப்பு'***
***(Choreographic Techniques of Dance Drama)***

உரையாளர்
***'நர்த்தக நிபுணா' திரு.வை.பாலகுருநாதன்(PhD)***



கலை இயக்குநர்
கிருஷ்ணாஞ்சலி நடனப்பள்ளி, சென்னை

# கருத்தரிக்கும் முறைகளும் தடங்கல்களும்

# இடம் மாறிய கர்ப்பமும்

- கந்தையா செந்தில்நாதன்

பல்வகைச் செல்வங்களில் மழலைச் செல்வமும் ஒன்றாகும். மண மேடையில் மணமக்கள் வீற்றிருக்கும் பொழுது பதினாறு செல்வங்களும் பெற்று வாழ்க என்று வாழ்த்தும் பொழுது அதில் மக்கட் செல்வமும் ஒன்றாக இருக்கிறது.

மணமக்கள் ஒன்று சேரும் காலம் கூட சாந்தி முகூர்த்தம் என்று கூறப்படும் நேரகாலத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மணமக்கள் ஓர் ஒழுங்கு முறையில் தமது வாழ்க்கையில் ஈடுபட்டு வரும் பொழுது இயல்பாகவே கருத்தங்கல் நடைபெற்று ஆரோக்கியமான மகப்பேறு ஏற்படுவது இயல்பு.


எனினும் சிலரது வாழ்வில் மணம் முடித்து இரண்டு, மூன்று வருடங்களாகிய பின்பும் மக்கட்பேறு கிட்டவில்லையே என்று கவலைப்படும் ஒரு சாராரும், நாம் இன்னமும் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதற்குத் தயார் நிலையில் இல்லை என்று மறு சாராரும் காலத்தைப் பின் போடுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

### கருத்தரிக்க உகந்த காலங்கள்:

பெண்களில் மாதமொருமுறை சூலகத்தில் இருந்து வெளியேறும் முட்டையானது பலோப்பியன் குழாய்களூடாக கர்ப்பப்பையை நோக்கி நகர்கின்றது. மாதவிடாய் ஒழுங்கு முறையில் சாதாரணமாக 28 நாட்களுக்கு ஒரு தடவை ஏற்படும் பெண்களுக்கு, மாதவிடாய் ஏற்பட்டு பதின்நான்காம் நாளளவில் முட்டையானது வெளிவிடப்படும். வெளிவந்த முட்டை பெண்களின் கருப்பையில் ஒரு நாள் வரை உயிருடன் இருக்கும். இத்தருணத்தில் ஆணும் பெண்ணும் கலவியில் ஈடுபட்டால் ஆணின் விந்தானது பெண்ணின் முட்டையை அணுகிக் கருக்கட்டுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உண்டு.

ஆண்களினது விந்து அவர்களது விதைகளில் உருவாகி அங்கு சேர்ந்திருக்கும். கலவியின் பொழுது வெளிவிடப்படும் விந்தானது பெண்களது யோனி, கருப்பைச் சூழலில் ஐந்து நாட்கள் வரை உயிர் வாழக்கூடியது. இதன் காரணத்தால் பெண்களின் முட்டை வெளியேறும் காலத்திற்கு மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முதலே கலவியின் பொழுது வெளியேறும் விந்தானது உயிருடன் இருந்து முட்டையை அணுகிக் கருக்கட்டும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும். எனினும் வெளிவிடப்படும் விந்தானது அநேக சமயங்களில் யோனியில் இருந்து வெளியே சிந்தப்படலாம். சம்போகத்தின் பின்பு பெண்ணானவள் மல்லாக்காகச் சில மணிநேரம் படுத்திருந்தால் விந்து வழிந்து போகாது உள்ளேயே கருப்பையை நோக்கிச் செல்லும் சந்தர்ப்பத்தை உருவாக்கலாம்.

ஒரு ஆணும், பெண்ணும் சேர்ந்து பல தடவைகள் முயன்றும், கருத்தரிக்காமல் இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. காரணங்கள் ஆணுடையதாகவோ, பெண்ணுடையதாகவோ, இருவருடையதாகவோ அல்லது வாழ்வு முறை காரணமாகவோ இருக்கலாம்.




### பெண்களுக்குரிய காரணங்கள்:

- சூலகத்தில் இருந்து முட்டை வெளிவருவதில் ஒழுங்கீனம்
- பலோப்பியன் குழாய்களில் தடங்கல்.
- கருப்பை, கருப்பைக்கழுத்து என்பனவற்றில் அமைப்பு ஒழுங்கீனம்.
- கர்ப்பப்பை உட்படை மேலணிக்கலங்களில் பிறழ்வு நிலை.

### ஆண்களுக்குரிய காரணங்கள்:

- வெளிவிடப்படும் விந்துக்களின் எண்ணிக்கைக் குறைவு.
- விந்துகளின் நீந்தும் தன்மையும் அசைவாட்டமும்.
- போதை மருந்து, மதுசாரம் அதிக பாவனை.

- சுற்றாடல் மென் நஞ்சுகள் (பாதரசம், ஈயம், களை கொல்லி கள், கிருமி நாசினிகள் போன்றவை)
- புகைப்பிடித்தல்.
- இருதய வியாதி உடையவர்கள் பாவிக்கும் β-Blocker என்னும் மருந்து.
- சிறு வயதில் கூவைக்கட்டு (Mumps) நோய்க்கு ஆளாகியவர் கள். அரிதாக விதைகளைப் பாதித்து விடக்கூடியது.
- சிறுநீரகத்தில் ஏற்படும் நாட்பட்ட நோய்.
- புற்றுநோய் ஏற்பட்டிருந்தால் அங்கு பாவிக்கும் கதிர்வீச்சு, மற் றும் இரசாயன மருந்துகளின் பாதிப்பு.
- ஆண்தன்மை குறைவு.

## பொதுவான காரணங்கள்:

- ஆணும், பெண்ணும் நேரகாலத்தில் கலவியில் ஈடுபட முடி யாமை.
- வயது ஏற்றம்
- அதிக பருமன், நிறை
- போதிய ஊட்டச்சத்துக்கள் அற்ற ஆகாரம்
- தொடர்ச்சியான மன அழுத்தங்கள்.
- பாலியல் நோய்கள்.

அநேக சமயங்களில் கர்ப்பம் தங்கி சுகமான மகப்பேறு நடைபெ றுவது தான் இயற்கையின் நியதி. சில சமயங்களில் கர்ப்பம் தங்கி தாயின் கருவில் இரண்டு தொட்டு மூன்று மாதங்கள் வரை வளர்ந்து வருகைகயில் தானாகவே கர்ப்பச் சிதைவு நடைபெறு கின்றது. கருக்கட்டிய முளையத்தில் ஏதாவது பிரச்சினை இருந்தா லும் கருப்பை அதை மேற்கொண்டு ஏற்றுக் கொள்ளாது கர்ப்பச்சி தைவை ஏற்படுத்திவிடுவதுமுண்டு. கர்ப்பப்பையில் பிரச்சினை இருந்தாலும் முளையம் அதில் தங்கி வேரூன்றி வளரமுடியாது கர்ப்பச் சிதைவுகள் ஏற்படுவதும் உண்டு.

காரணங்கள் எதுவென்பதை சரிவரக் கண்டுபிடிப்பதற்கு மருத்துவ சரித்திரம், இரத்த பரிசோதனைகள், உடற்பரிசோதனைகள் போன்ற பலவற்றை வைத்தியர்கள் செய்வார்கள். ஆண்களின் விந்துகளின் எண்ணிக்கை, நீந்தும் தன்மை, அசைவாட்டம், விந் தில் ஏற்பட்டிருக்கும் சிதைவுகள் என்பனவும் கருத்திற் கொள்ளப்ப டும். ஆண்களின் விதைப்பகுதியில் வெப்பம் கூடும்பொழுது அதன் பை போன்ற பகுதி தளர்ந்து தொங்குவதனால் வெப்பம் தணிகின்றது. குளிராக தகுந்த வெப்பநிலையில் இருக்கும் பொழுது இறுக்கமாக இருப்பதைக் காணலாம். விந்து உற்பத்திக் கும் வெப்ப ஏற்றத்திற்கும் தொடர்புகள் உண்டு. விந்து எண் ணிக்கை குறைவானவர்கள் உள்ளங்கியை(underwear) இறுக்கமா னதாக அணியாமல் தளர்ந்த உள்ளங்கிகள் அணிவது வெப்பநி லையைச் சரிவரப் பேணுவதற்கு உதவி புரியும். விந்துகள் உற் பத்தியை சில அக்குபஞ்சர் புள்ளிகளைத் தூண்டுவதன் மூலமும் கூட்டக்கூடியதாக இருக்கும்.

எம்மக்களிடையே மக்கட் செல்வம் தலையாய செல்வமாகப் போற் றப்படுகின்றது. ஏனைய இனத்தவர்களிற்கும் இது பொருந்தும். பெற் றோர் தமது உடல் நிலையைத் தயார் செய்யும் பொழுது பிறக்கப்போகும் குழந்தையும் ஆரோக்கியமாகப் பிறந்து வளர்வ தற்கு உதவுகின்றீர்கள். உடல் ஆரோக்கியம் மட்டும் போதாது. உளரீதியான ஆரோக்கியமும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. குடும்ப வருமானம், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, சமபல உணவு, போதிய ஓய்வு, உடற்பயிற்சி என்பனவுடன் ஆரோக்கிய மான மாசற்ற சூழல் போன்றவை உடல்வலுவையும், ஆரோக்கி யத்தையும் மேலும் மேம்படுத்துபவையாக உள்ளன.

காலம் காலமாக நாம் உட்கொண்டுவரும் உணவுப் பழக்க வழக் கங்களில் சரக்கு வகைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. கறிக- ளில் மஞ்சள் தூள் அளவோடு சேர்ப்பது உடலிற்கு ஆரோக்கி யம் தரும். அதிக அளவில் உட்கொள்வது மழலைச் செல்வத்தை எதிர்கொள்ளும் ஆண்களிற்குக் கூடாது என்று பலர் கூறுவதைக் கேட்டிருக்கிறேன்.

நாம் உட்கொள்ளும் உணவுகளில் உள்ள மென்நஞ்சுகள் கூட தொப்புள் கொடியில் உள்ள தடைகளைத்தாண்டி வளர்ந்து வரும் சிசுவை அடைவதாக ஆய்வுகள் கூறுகின்றன. சூழலில் வாசனைத் திரவியங்கள், தொற்று நீக்கிகள், களைகொல்லிகள், கிருமி கொல்லிகள் போன்ற பலவிதமான இரசாயனப் பொருட்கள் பாவ னையில் உண்டு. இவை எமது சுவாசிக்கும் காற்று, உட்கொள் ளும் நீர், உணவு போன்றவற்றை மாசுபடுத்தலாம். இவற்றைக் கவனமாகத் தெரிவு செய்வதன் மூலம் பல கெடுதல்களைக் கட் டுப்படுத்தலாம்.

பெண்களில் மாதவிடாய் காலம் ஒழுங்கில்லாமல் வரும் பொழுது அவர்களது முட்டைகள் வெளியேறும் நேரம் வேறுபடுவதனால் தமது குடும்ப வைத்தியர்களின் ஆலோசனைப்படி சேருங்காலங் களை அறிந்து நடப்பதன் மூலம் தமது குழந்தைப்பாக்கிய விருப் பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

## இடம் மாறிய கர்ப்பம் என்றால் என்ன?

கர்ப்பம் இடம் மாறித் தங்குமா? (Ectopic Pregnancy)

வழக்கமாகக் கருப்பையில் அதற்குரிய குறிப்பிட்ட பகுதியில் கர்ப்பம் தங்காது இச்சூலானது பலோப்பியன் குழாய்களில் தங்கி முளையமாக வளரும்போது, அதை இடம்மாறிய கர்ப்பம் என்று கூறுவார்கள்.

பின்வரும் இடங்களில் கருமாறித்தங்கலாம்

- பலோப்பியன் குழாயின் அந்தப் (தொங்கல்) பகுதியில் கருத் தங்குதல்
- பலோப்பியன் குழாயின் கர்ப்பப் பையை அண்டிய பகுதியில் கருத்தங்குதல்
- பலோப்பியன் குழாய் நடுப்பகுதியில் கருத்தங்குதல்
- கர்ப்பப் பையின் கழுத்துப் பகுதியில் கருத்தங்குதல்
- சூலகப்பகுதியில் கருத்தங்குதல்
- வயிற்றின் சுற்றுவிரிக் குழிகளில் கருத்தங்குதல்

அனேகமாக 96 வீதமான இடம்மாறிய கர்ப்பங்கள் பலோப்பியன் குழாயின் அந்தங்களிலும், நடுப்பகுதியிலும் ஏற்படுகின்றன. வழ மையாக பலோப்பியன் குழாயின் அந்தங்களில் விந்தும், முட்டை யும் சேர்ந்து கருக்கட்டல் நடைபெறுகின்றது. கருக்கட்டல் நிகழ்ந்து அது முளையமாக மாறிய பின்பு குறிப்பிட்ட சில நாட்க ளுக்குள் கர்ப்பப்பையை நோக்கி நகர்த்தப்படுதல் வேண்டும். அவ்வாறு நகர்த்தப்படாது அதே இடத்தில் முளையமானது நிலை கொள்ளலாம். அல்லது கர்ப்பப்பையை நோக்கி நகர்த்தப்படும் பொழுது முளையம் மெதுவாக நகர்ந்து குழாயின் நடுப்பகுதியில் நிலைகொள்ளலாம். குழாயில் நடுப்பகுதியில் கருக்கட்டல் நிகழ்ந்து முளையம் நகர்த்தப்படாது, அந்நடுப்பகுதியிலும் முளை யம் நிலைகொள்ளலாம். பலோப்பியன் குழாயானது கர்ப்பப்பை யின் மேற்பகுதியில் இருமருங்கிலும் ஆரம்பமாவதை அவதானித் தீர்களாயின் அக்குழாய்கள் ஆரம்பிக்கும் இருமருங்கு மூலைகளி லும் கூடக் கருத்தங்குதல் நிகழலாம். இந்த மூலைகளில் மூன்று விகிதமான இடம்மாறிய கர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

மிகவும் அரிதாக பின்வரும் இடங்களில்கூட கருச்சென்று இடம்மா

றித் தங்கி வளரலாம். கர்ப்பப் பையின் கழுத்து, முட்டை உருவா கும் சூலகங்கள், வயிற்றின் சுற்றுவிரிக் குழிகள் (Peritoneal Cavity) என்பவை அவ்விடங்களாகும்.

இடம்மாறிக் கருத்தங்குதல் எனும்பொழுது எமக்கு உடனே மன தில் தோன்றுவது பலோப்பியன் குழாய்களில் (Tubal Pregnancy) ஏற்படும் கருக்களாகும். ஏனெனில், பெரும்பாலும் இடம்மாறிய கருத்தங்கல்களின் புள்ளிவிபரங்களை நோக்கினால் 96 வீதமா னவை குழாய்களில் இடம்மாறித் தங்குபவையாகவே இருக்கின் றன. மிகுதி 4 வீதமானவையே குழாய் தவிர்ந்த மேலே குறிப்பிட் டுள்ள பகுதிகளில் இடம்மாறித் தங்குகின்றன.

இவ்விகிதாசாரங்கள் இடம்மாறிக் கருத்தங்கும் இடங்களையே சுட் டிநிற்கும். வாசகர்கள் சாதாரணமாக நல்லமுறையில் தங்கி வள ரும் கர்ப்பங்களை இவற்றுடன் சேர்த்து குழப்பமடையக் கூடாது.

மிகவும் வெகு அரிதாக ஒரு சாதாரணமான கர்ப்பத்துடன் இடம் மாறிய கர்ப்பமும் ஒரே நேரத்தில் இடம்பெறலாம். இது மிகமிக அரிது. மேலும் செயற்கைக் கருக்கட்டல் முறைகளின் முன்னேற் றத்தால் இப்படியாக இரு கருக்கட்டல் நிகழ்வதன் விகிதாசாரம் கூடியுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

## இடம்மாறிய கர்ப்பங்கள் தங்குவதற்குரிய காரணங்கள் என்ன?

பெண்களின் இடுப்புப் பகுதியில் ஏற்படும் வீக்க நோய்களை பொதுவாகக் குறிப்பிடலாம். இதற்குப் பல காரணங்கள் இருப்பத னால் அவற்றை சரிவரக் கண்டறிந்து சிகிச்சை செய்வதன் மூலம் அல்லது அவை ஏற்படாமல் தடுப்பதன் மூலமாக கர்ப்பப்பைச் சூழலை நன்கு பேணிக்கொள்ளலாம்.

பாலியல் நோய்களை எடுத்துக்கொண்டால் அவை யாருக்கு ஏற் பட்டுள்ளது என்பது வெளியில் தெரியவராது. பாலியல் நோய்கள் நேரகாலத்துடன் கண்டுபிடிக்கப்பட்டு, உரிய சிகிச்சைகள் பெறும் பட்சத்தில் கர்ப்பப் பையின் சூழலை பாதுகாத்துக்கொள்ளலாம். வெட்கம் காரணமாக வைத்தியரை அணுகாது பாலியல் நோய்க ளுடன் வாழும்போது அக்கிருமிகள் கர்ப்பப்பையை அடைந்து இருமருங்கிலும் உள்ள பலோப்பியன் குழாய்களைத் தாக்குகின் றன. இதன் காரணமாக பலோப்பியன் குழாய்களின் உள்ளே வீக் கங்கள் ஏற்பட்டு அப்பகுதிகள் புண்படுகின்றன. வீக்கங்கள் ஏற்ப டும் பொழுது நீண்ட குழாய்களின் துவாரங்களினுள் தடைகள் ஏற் படுவதற்குரிய சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றன. சூலகங்க ளில் இருந்து விடுபடும் முட்டையானது பலோப்பியன் குழாய்க ளின் இத்தடங்கல்கள் ஊடே மிகவும் மெதுவாகவே கர்ப்பப் பையை நோக்கி நகரமுடியும். அதே போல் யோனியில் விடப் பட்ட விந்து, முட்டையை அடைய சற்றுத் தாமதமாகும். முட்டையு டன் ஒப்பிடும்போது விந்து மிகச் சிறிதாகையால் அது பலோப்பி யன் குழாய்கள் ஊடே நீந்திச்சென்று முட்டையை அடைந்துவிடும். ஆனால், கருக்கட்டிய முட்டை, பகுதி அடைபட்ட பலோப்பியன் குழாயூடாக கர்ப்பப் பையை நோக்கி நகர்த்தப்பட நாளாகுவதால் கருக்கட்டிய முளையத்தின் கலங்கள் விரிவடைந்து வித்துடலாகி அங்கேயே தங்கி வளர ஆரம்பிக்கும். கருவானது வளர்வதற்கு இடம் போதாமையால் கரு வளர்ந்து வரும்பொழுது குழாயானது வெடித்து பெண்ணின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். மருத் துவ உலகம் வெகுவாக முன்னேறியிருந்தும்கூட உலகளாவிய ரீதி யில் கர்ப்பத்தின் பொழுது ஏற்படும் மரணங்களில் 9 வீதமான மர ணங்கள் கர்ப்பம் இடம்மாறித் தங்குவதால் ஏற்படுபவையாகும்.

இடம்மாறிய கர்ப்பம் பற்றிய அறிவு வளரும்போது தாய்மார்கள் தாமாகவே முன்வந்து காலந்தாழ்த்தாது, இத்தகைய பிரச்சினைக ளைத் தீர்த்துக்கொள்வதன்மூலம் ஆபத்துக்களையும் பல சிக்கல் களையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்ட கிருமித் தொற்றுக் காரணமாக, பலோப்பியன் குழாய்களினுள் ஏற்படும் வீக்கத்தால் குழாயின் விட்டம் குறைகின் றது. குழாயின் உள்ளே உள்ள மயிரிழைகள் பழுதடைகின்றன. குழாய்களின் தசைகளில் ஏற்படும் சுற்றுச் சுருங்கல் அசைவுக ளில் மாற்றம், நார்போன்ற உட்பகுதி மாற்றம் என்பனவற்றால் பாதை பல தடைகளைக் கொண்டதாக மாறிவிடுகின்றது.

முறைதவறிய தொடர்புகளால் பாலியல் நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம். இதுகாரணமாக, கணவன், மனைவி இடையே தகராறுகள் ஏற்படக்கூடாது. ஏனெனில், வேறு பல பல காரணங்களும் உண்டு.

கர்ப்பப் பையில் இருந்து பலோப்பியன் குழாய் ஆரம்பிக்கும் இடத்தில் தசைக் கட்டிகள் உருவாகியிருக்கலாம். பிறப்பின்பொ ழுது அக்குழாய்களில் பிளவுகள் ஏற்பட்டு குழிகள் போன்ற பகுதி கள் இருக்கலாம். இடுப்புப் பகுதியில் நடைபெற்ற சத்திரசி கிச்சை, குடல் வளரிநோய், உட்படை நோய் இவற்றால் குழாயின் உட்பகுதிகள் இடையிடையே ஒட்டுப்பட்டு, அப்பகுதிகள் பகுதி யாக அடைபடலாம். வயதுவந்த பின்பு கர்ப்பம் தரித்தல், செயற்கை முறையில் கருக்கட்ட வைத்தல்போன்று பல காரணங் கள் உண்டு.

## நோயின் தீவிரம்:

குழாயில் ஏற்படும் கர்ப்பங்கள் மேற்கொண்டு ஏற்படக்கூடிய சாதா ரண கர்ப்பங்களைக் கேள்விக் குறியாக்கவே செய்கின்றன. குழந் தையை வேண்டி நிற்பவர்கள் கவனமாக மகப்பேற்று நிபுணரை அணுகி, தமக்கு ஏற்பட்டுள்ள கர்ப்பம் குழாயில் தங்கியுள்ளதா என்பதை நேரகாலத்துடன் கண்டறிவதன்மூலம் மிகுதியாகவுள்ள குழாய்களைக் காப்பாற்றி மகப்பேற்றிற்கு உதவலாம்.

## இடம்மாறிய கர்ப்பத்தின்பொழுது ஏற்படும் குணம் குறிகள் என்ன?

- வயிற்று வேதனை
- உதிரம் படுதல்
- சில பெண்களில் கர்ப்பப்பையை அண்டிய பகுதியில் கைளால் உணரக்கூடிய கட்டி
- தோள்மூட்டு நோவு - உதிரம் குடற்சுற்றுவிரியில் விடப்படுவ தால் ஏற்படுவது.

மேற்கூறிய குணம் குறிகள் பொதுவானவையே. அத்துடன், பலவி தமான கேள்விகள் வைத்தியரின் மனதில் எழுப்பக்கூடியவை. உதிரம் படுதலின் அளவு, அதன் நிறம், அத்துடன் வெளிவரும் சிதைவுகள் என்பனவும் ஓரளவு உதவியாக இருக்கும்.

## எப்படி வைத்தியர்கள் உறுதிசெய்வார்கள்?

- குணம் குறிகள்
- B-hcG என்ற ஹோர்மோனின் அளவு

## யோனி ஊடாகச் செய்யப்படும் சிகிச்சை ultrasound:

- நேரகாலத்துடன் கண்டுபிடிக்கப்பட்டால் ultrasound உபகரணத் தின் வழிநடத்து பாதையூடாக சூல்கொண்ட முளையத்தைக் கண்டுபிடித்து Methotrexate அல்லது பொற்றாசியம் குளோ ரைட்டு ஊசியை அம்முளையத்தினுள் ஏற்றுவார்கள். அம்மு ளையம் இறந்துவிட, அவ்விடம் பின்பு சீராகி மேலும் கர்ப்பம் உருவாகுவதற்கு உதவியாக இருக்கும்.
- காலம்பிந்திக் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது கர்ப்பம் தங்கிய குழாய் வெடித்த தறுவாயில் சத்திர சிகிச்சை மூலம் சிகிச்சை யளிப்பார்கள்.



senthilnathan.k@thaiveedu.com


Mega Financial Group
WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION
SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET
OUR PRODUCTS AND SERVICES
Life Insurance products
Critical Illness Insurance
Disability Insurance
Dental & Drug Insurance
Travel Insurance
Non-Medical Insurance
Mortgage Insurance
RRSP's Investments
RESP-Education Saving Plan
Final Expense Products
(Through Funeral Homes)
INDUSTRIAL ALLIANCE
Canada Life
Sun Life Financial
UL Mutual
La Capitale
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial
www.megafinancial.ca
RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca
Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6

# புது வீடுகளின் முதற் பரிசோதனை



**- வேலா சுப்ரமணியம்**

ஒரு வீடு சட்டரீதியாக உங்களது கைக்கு வரும் திகதி மிக முக்கியமானது. இதனை Date of Possession அல்லது closing date என்று அழைப்பார்கள். இதற்கு 1-7 நாட்களுக்கு முதல் உத்தியோகபூர்வமாக உங்களது வீட்டைப் பார்வையிட உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

கட்டட அமைப்பாளரின் பிரதிநிதியொருவர் வீட்டில் அடியில் இருந்து நுனிவரை ஒவ்வொரு சிறுபகுதியும் எவ்வாறு இருக்கிறது என்பதையும் பொருத்தப்பட்டிருக்கும் இயந்திர உபகரணங்களை எவ்வாறு இயக்கலாம் என்பது பற்றியும், பராமரிப்பு பற்றியும் நேரடியாகக் காண்பிப்பார். இதுவே PDI என்று அழைக்கப்படு-கிறது.

பொதுவாக வீட்டு உரிமையாளர் வீட்டில் குடியேற முன்னர் எத்தகைய பகுதிகள் பூரணப்படுத்தப்படாமல் உள்ளது என்பதையும் தவிர்க்கப்பட்டிருக்கும் பாகங்களையும் திருத்தப்பட அல்லது பொருத்தப்பட வேண்டிய பகுதிகளையும் காட்டி உரிய முறையில் ஆவணப்படுத்துவதே இதன் நோக்கமாகும். PDIல் ஆவணப்படுத்தப்படும் குறைபாடுகள் யாவும் உத்தரவாதத்திற்குள் அடங்கக் கூடிய சட்டரீதியான ஆவணமாகக் கருதப்படும். அத்துடன் இருக்கக்கூடிய குறைபாடுகளை கூடிய சீக்கிரம் பூர்த்தி செய்வதற்கு கட்டட அமைப்பாளருக்கு கிடைக்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் அமையும். கட்டட அமைப்பாளர்களினால் பூரணப்படுத்தப்படாத பகுதிகளை தொடர்ந்து வரும் 30 நாள் அல்லது 1 வருட உத்தரவாதப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

முக்கியமாக வீட்டில் இருக்கக் கூடிய உடைவுகள், வெடிப்புகள், சிதைவுகள் முன் கூட்டியே இருந்தவை என்பதை ஆவணப்படுத்தல் கட்டட அமைப்பாளர்கள் தட்டிக்கழிக்கும் போக்கை கட்டுப்ப-டுத்த உதவியாக இருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

PDI செய்வதற்கு, உங்களுக்குப் புதிய வீடுகள் பற்றிய அனுபவம் குறைவாக இருக்கும் பட்சத்தில் அனுபவம் உள்ள ஒருவரை நாடலாம், அல்லது ஒரு வீட்டுப் பரிசோதகரை அணுகலாம். அல்லது, சமூகம் அளிக்கச் சந்தார்ப்பம் இல்லாது போனால் உரிய படிவத்தை நிரப்பிக் கொடுப்பதன் மூலம் சட்டரீதியாக ஒருவரை நியமிக்கலாம்.

PDI-இன் இறுதியில் கட்டட அமைப்பாளரின் பிரதிநிதியால் கைச்சாத்திடப்பட்ட குறைபாடுகள் உள்ளடக்கப்பட்ட பட்டியல் ஒன்று வழங்கப்படும். அத்துடன் 'Tarion' Warranty Certificate-ம் வழங்கப்படும். உங்கள் வீட்டைச் சட்டரீதியாக கைமாற்றம் செய்யும் வழக்கறிஞருக்கு இதன் பிரதி ஒன்று வழங்கப்பட வேண்டி இருக்கும்.

**வீட்டுடைமைக்கு முந்திய பரிசோதனையின்போது எவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்ற பட்டியல் கீழே தரப்படுகிறது.**

### சமையலறை:

- மின்விளக்குகள் யாவும் முறையாக வேலை செய்கின்றனவா? எனப் பரிசீலிக்க வேண்டும்.
- ஏதாவது தரம் உயர்த்தல் செய்யப்பட்டிருந்தால் அவை உரிய முறையில் உள்ளனவா என்பதை உங்களிடமுள்ள தரமுயர்த்தல் பட்டியலுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.
- தளத்திற்குப் போடப்பட்டிருக்கும் Tile-களில் வெடிப்பு, உடைவு அல்லது காயங்கள் இருக்கின்றனவா? எனப் பார்த்தல் வேண்டும். Tile களுக்கிடையில் போடப்பட்டிருக்கும் Grout உரிய முறையில் போடப்பட்டிருக்கிறதா என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

### அலுமாரிகளும் லாச்சிகளும் (Cabinets & Drawers):

- அலுமாரிகளும் கதவுகளும் முறைப்படி சமப்படுத்தப்பட்ட நிலையில் (Align) பொருத்தப்பட்டிருக்கின்றனவா என்று உறுதி செய்தல் வேண்டும்.
- அலுமாரிகளிலும் லாச்சிகளிலும் வெடிப்புகள் பழுதுகள் இருக்கின்றனவா என்பதை பார்க்க வேண்டும்.
- அலுமாரிகளும் லாச்சிகளும் ஒழுங்காக திறந்து மூடுகின்றனவா என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

### Sink:

- Faucetஐ சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும். அத்துடன் சுடுநீர் முறையாக வருகின்றதா? என்பதையும் அவதானிக்க வேண்டும்.
- Sink-ன் கீழ்ப்பகுதியில் தண்ணீர்க் கசிவு ஏற்பட்டு அதற்கான அடையாளங்கள் இருக்கின்றதா? என்பதை அவதானித்தல் நல்லது.
- மேல்தட்டில் (Countertop) உராய்வுகள், வெடிப்புகள், உடைவுகள் அல்லது ஏதாவது பாதிப்புகள் உள்ளனாவா? என்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- Backsplash-ல் உடைவுகள், வெடிப்புகள் உள்ளனவா? என்பவற்றையும் பார்த்தல் வேண்டும்.

### Appliances:

- Appliances கொள்வனவு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப் பட்டிருந்தால் அவற்றில் உராய்வுகள், நெழிவுகள் இருக்கின்றனவா? என்பதைச் சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.
- உரிய நடைமுறை விளக்க புத்தகங்கள் (Manuals) உத்தர-வாதத்திற்குரியபடி வங்கள் தரப்பட்டிருக்கின்றனவா? என்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- அடுப்பிற்குமேல் போடப்பட்டிருக்கும் காற்றாடி (OverHood fan) முறையாக வேலை செய்கின்றதா என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

### சலவை அறை (Laundry Room):

- Washer, Dryer பொருத்தப்பட்டிருந்தால் Dryer-ல் இருந்து வெளி-

யேற்றப்படும் நீராவி சுவருக்கு வெளியே செலுத்தப்படுகிறதா என்பதை உறுதி செய்தல் முக்கியமானது.

- சுடு தண்ணீரும், குளிர் தண்ணீரும் முறையாகப் பொருத்தப்பட்டிருக்கிறதா? என்பதை அவதானிக்கவும்.
- தளத்தில் போடப்பட்டிருக்கும் Tile களில் வெடிப்பு, உடைவு இருக்கின்றதா என்பதை அவதானிக்கவும்.
- உத்தரவாதப் படிவம், வழிகாட்டல் புத்தகங்கள் (Manuals) தரப்பட்டிருக்கின்றனவா? என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

## குளியலறை, கழிவறை:

- பொருத்தப்பட்டிருக்கும் காற்றாடியின் இயக்கத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.
- தளத்திற்கும், சுவருக்கும் போடப்பட்டிருக்கும் Tile-களில் வெடிப்பு, உடைவு, இடைவெளி என்பவை இல்லாது இருப்பதை உறுதிசெய்தல் வேண்டும். அத்துடன் Grout முறையாகப் போடப்பட்டிருக்கிறதா? என்பதையும் அத்துடன் வழிந்தோடிய Grout முறையாகச் சுத்தம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும் உறுதி செய்தல் நன்று.
- அலுமாரிகளும் லாச்சிகளும் ஒழுங்காகத் திறந்து மூடுவதையும் உடைவு அல்லது வெடிப்புகள் இருக்கின்றனவா? என்பதையும் உறுதி செய்தல் வேண்டும்.
- குளியலறையில் கழிவுநீர் (Drain) முறையாக வடிந்து செல்கிறதா என்பதை அவதானிக்க வேண்டும்.
- குளியல்தொட்டி (Bathtub), Sink, Counter Top, போன்ற பகுதிகளில் முறையாக Caulking செய்யப்பட்டிருக்கின்றதா? என்பதை அவதானிக்கவும்.
- பொருத்தப்பட்டிருக்கும் Toilet ஆட்டம் இன்றி உறுதியாக இருக்கின்றதா என்பதையும், அதனைச் சுற்றிய தளப்பகுதியில் நீர்க்கசிவு உள்ளதா என்பதையும் உறுதி செய்தல் வேண்டும்.
- குளியல் தொட்டி, Toilet என்பவற்றில் வெடிப்பு அல்லது ஏதாவது உடைவு உள்ளதா என்பதை உறுதி செய்தல் மிகமுக்கியமானது.

**குறிப்பு:** Countertop இயற்கை வளத்தில் இருந்து பெறப்பட்ட கற்கள், பளிங்கு கற்கள் (Granite, Marble) போன்றவற்றில் போடப்பட்டிருந்தால் இயற்கையாக ஏற்படும் நிறக்கலப்புகள், வேறு அடையாளங்கள் அல்லது சீரற்ற தன்மை காணப்படுவது தவிர்க்க முடியாதது. (You can expect to find natural imperfections like surface pits, fissures or veins on granite or marble countertops).

அலுமாரிகள் இயற்கை மரத்தால் ஆக்கப்பட்டிருந்தால் அவற்றில் மாறுபாடுகள் தென்படவும் ஒருவகை வேண்டத்தகாத நிறங்கள் காணப்படுவதும் தவிர்க்க முடியாதது. (Normal to Find Variations in the woos Grain and stain finish on Natural wood).

## Carpet:

- Carpet இறுக்கமாகவும் இடவெளியில்லாமலும் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்யவும்.
- Carpet-ல் ஏதாவது சிந்தியதால் கறை போன்ற அடையாளங்கள் இருக்க வாய்ப்புகள் உள்ளன. அதனையும் உறுதி செய்தல் வேண்டும்.

## சுவர்:

- சுவரில் வெடிப்புகள் பள்ளங்கள், உடைவுகள் இருக்கின்றனவா? என்பதை அவதானிக்கவும். இறுதி வர்ணப்பூச்சு செய்யப்படாத பகுதிகள்கூட இருக்கலாம்.
- Base Boards, Triming, Casing for doors and windows என்பன முறையாக இடை வெளி தெரியாதவாறு போடப்பட்டுள்ளதா என்பதை அவதானிக்கவும்.

## கதவுகள்:

- கதவுகள் ஒழுங்காக மூடித்திறத்தல் உறுதி செய்யப்படவேண்டும்.
- கதவுகளில் வெடிப்பு, காயங்கள் உள்ளனவா என்பவற்றுப் பார்த்தல்வேண்டும்.
- Garge-ல் இருந்து வீட்டிற்குள் செல்லும் கதவு தானாகவே இறுக மூடிக்கொள்ளும் வகையில் பொருத்தப்பட்டிருக்கின்றதா? என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

## சாளரங்கள்:

- சாளரங்கள் முறையாக திறந்து மூடக்கூடியதாக இருப்பதும், பூட்டப்படுவதும் உறுதி செய்யப்பட வேண்டும்.
- சாளரங்களில் உள்ள கண்ணாடிகளிலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் வெடிப்புகள் காயங்கள் உள்ளனவா? என்பதை அவதானிக்கவும்.
- திறந்து மூடும் சாளரங்களுக்குப் போடப்பட்டிருக்கும் வலைத்தட்டு (Screen) கிழிந்து அல்லது ஒட்டைகள் இல்லாது இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.

## மாடிப் படிகள்:

- படிகளுக்குப் பொருத்தப்பட்டிருக்கும் கைபிடிப்பகுதி (Handrail) பாதுகாப்பான முறையில் ஆட்டமின்றிப் பொருத்தப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.
- Hard wood படிகள் சமமாக, உடைவுகள், இடைவெளிகள் இன்றி திருப்திகரமான முறையில் பொருத்தப்பட்டிருக்கின்றதா? என்பது அவதானிக்கப்படவேண்டும்.

## வெளிப்புறம்:

- வெளிப்புற வேலைகள் ஆரம்ப காலத்தில் முடிக்கப்படாது இருப்பது பொதுவானது. கால நிலை பாதகமாக அமையும் பட்சத்தில் அவற்றைக் காலம் தாழ்த்தி பூர்த்தி செய்து கொடுக்கும் உரிமை கட்டட அமைப்பாளர்களுக்குண்டு.

## Brickcs:

- வெடிப்புகள், உடைவுகள், இடைவெளிகள் இல்லாது இருக்கின்றமை உறுதி செய்யப்பட வேண்டும்.
- Vinyl, Aluminum, Wood Siding போடப்பட்டிருந்தால் அவை வளைவுகள் இன்றி இறுக்கமாக, பாதுகாப்பாக பொருத்தப்பட்டிருத்தல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- Stucco Siding-ஆக இருந்தால் வெடிப்புகள், பள்ளங்கள் அல்லது வேறு பாதிப்புகள் இடைவெளிகள் உள்ளனவா? எனப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- வெளிப்புற நிலம், கட்டட அத்திவாரத்திற்கு எதிராக நீர் வழிந்தோடும் வகையிலும் நீர் தேங்காத வகையிலும் சமப்படுத்தப்பட்டிருக்கிறதா என அவதானித்தல் வேண்டும்.

## இயக்கும் இயந்திர வகைகள் (Operting System):

பொதுவாக ஒரு வீட்டை இயக்குவதற்கு பலவித இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கும். வெப்பமாக்கி (Furnace), குளிரூட்டி (A/C), HRV (Heat Recovery Ventilator), Central Humidifier, Thermostat controller, Hygrometer, Smart home devices போன்ற பல வித உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்கலாம். அவை தொழிற்படும் விதம் பற்றியும் பராமரிக்கும் முறை பற்றியும் இச்சந்தர்பத்தில் விளக்க வேண்டியது கட்டட அமைப்பாளரது பிரதிநிதியின் கடமையாகும். உரிய வழிகாட்டிப் புத்தகங்களையும் பெற்றுக்கொள்வதோடு மேலதிக விளக்கங்களைக் கேட்டறிதல் வீடு கொள்வனவு செய்பவர்களுக்கு மிகப் பயன் உள்ளதாக இருக்கும். தண்ணீர், Gas போன்றவற்றிற்குரிய Shut Off Valve எங்கு உள்ளது என்பதைக் கேட்டறிவதோடு, அவற்றைப் பயன்படுத்தும் விதம் பற்றியும் அறிந்து கொள்வது அதிக நன்மை பயக்கும்.



velasubramaniam@thaiveedu.com

# விண்வெளியிலிருந்து

# கம்பியில்லா மின்சாரம்

- சுப்ரமணியம் ஜெயசீலன்

ஞாயிற்றுத் தொகுதியின் இயக்கத்திற்கு சூரியன் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததோ அந்தளவிற்கு இந்தப் பூமியின் இயக்கத்திற்கு தற்போதெல்லாம் சக்தி வளத்தின் அவசியம் முக்கியமானதாக பரிணமித்துள்ளது. சக்திவளம் குறிப்பாக மின்சார சக்தியின் அவசியம் மிக இன்றியமையாத ஓர் அங்கமாக நம் வாழ்வில் ஒட்டிக்கொண்டுள்ளது என்றால் அது பிழையாகாது.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த மின்சாரம் உள்ளிட்ட சக்தி வளங்களில் Fossil fuel (படிம எரிபொருள் - அதாவது நிலத்தடி எண்ணெய் மற்றும் நிலக்கரி போன்றவை) வடிவிலான சக்திவளப் பயன்பாடு ஓர் எல்லையின் பின்னர் தீர்ந்து போய்விடும் அபாயத்தைக் கொண்டுள்ளது. இதனால்தான் தற்பொழுது மீள்சுழற்சி செய்யக்கூடிய அல்லது தூய சக்திவளங்கள் பற்றிய மனிதரின் தேடலும் கரிசனையும் முன்னொருபோதும் இல்லாத அளவில் தீவிரம் பெற்றுள்ளது. மரபு ரீதியில் கம்பி வழியில் மின்சாரத்தை விநியோகம் செய்யும் நடவடிக்கைகளே பிரமிக்க வைக்கும் வகையில் காணப்படுகின்றது. அதிலும் கம்பியில்லா மின்சார விநியோகம் என்றால் எத்தனை ஆச்சரியங்கள் அடங்கியிருக்கும். அலைபேசியில் நீங்கள் ஒரு தகவலைப் பெற்றுக்கொள்ள அலைக்கற்றை தொழில்நுட்பம் பயன்படுத்துகின்றீர்கள், அதேவிதமாக அலைக்கற்றை வழியாக எவ்வித வடங்களும் இன்றி மின்சாரம் உங்கள் வீடுகளுக்கு வந்தால்? அப்படியான ஓர் தொழில்நுட்பத்தின் வெற்றிப் பயணம் பற்றியே நாம் இந்தப் பகுதியில் உங்களுடன் ஊடாடுகின்றோம்.

உலக அளவிலான மின்சார விநியோகக் கட்டமைப்புக்குறித்த எண்ணக்கரு ஒன்றும் புதிய விடயமல்ல சுமார் ஒரு நூற்றாண்டு காலமாக இது பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உலகின் அனைவரும் இவ்வாறான ஓர் மின்சார விநியோகக் கட்டமைப்பின் ஊடாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனையே புகழ்பூத்த இலத்திரனியல் பொறியியலாளரும், கண்டு பிடிப்பாளருமான நிகோலா டெஸ்லா (Nikola Tesla) விரும்பினார், எனினும் இந்த எண்ணக்கரு வியாபாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை. நியூசிலாந்தைச் சேர்ந்த இம்ரொட் (Emrod) என்னும் நிறுவனம் இந்தத் தேவையையும் பூர்த்தி செய்யும் வகையிலான உலகளவில் வியாபிக்கக் கூடிய மின்விநியோகக் கட்டமைப்பினையும், வியாபாரத் தேவைகளையும் ஒருசேரப் பூர்த்திசெய்யும் வகையிலான செயல் விளக்கமொன்றை அண்மையில் முன்வைத்திருந்தது.

நியூசிலாந்தின் ஒக்லாண்ட் நகரை மையமாகக் கொண்ட இம்ரொட் நிறுவனமானது கம்பியில்லா மின்சார விநியோக நடவடிக்கைகளை கடந்த மூன்று ஆண்டுகளாக வர்த்தக ரீதியில் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றது. அண்மையில் விண்வெளியிலிருந்து சூரிய சக்தியின் தொழில்நுட்பத்தின் ஊடாக மின்சாரத்தை விநியோகம் செய்யும் மற்றுமொரு ஆச்சரியமிக்கப் புதிய தொழில்நுட்பம் ஒன்று இந்த நிறுவனம் அறிமுகம் செய்ததுடன், அது குறித்த செயல் விளக்கத்தை முன்வைத்திருந்தது. ஐரோப்பிய விண்வெளி முகவர் நிறுனத்துடன் இணைந்து இந்த விண்வெளி சூரியசக்தித் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக உலகளாவிய ரீதியில் கம்பியில்லா வழிகளில் மின்சாரத்தை விநியோகம் செய்யக்கூடிய ஓர் பொறிமுறைமையை உருவாக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. எங்கே மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது, எங்கே மின்சாரம் பயன்படுத்



தப்படுகின்றது என்பதனை அவதானிக்கவும் கட்டுப்படுத்தவும் முடியும் என்பது இதன் முக்கிய அம்சமாகும்.

எவ்வாறு கம்பியில்லா மின்சார விநியோகப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படுகின்றது?

முன்னணி வானூர்தி உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான எயார் பஸ் நிறுவனத்தின் முனிச்சில் அமைந்துள்ள ஆய்வகக் காட்சிக் கூடத்தில் கம்பியில்லா மின்சார விநியோகம் எவ்வாறு தொழிற்படுகின்றது என்பது பற்றிய செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. சதுர நெடுசவரியைக் கொண்ட மின்கடத்தும் பகுதியொன்றும், மின்சாரத்தைப் பெறும் ஆறு அடி விட்டத்தைக் கொண்ட வானலை வாங்கியும் (antennae) அமைக்கப்பட்டு, 5.8 கிஹாஹேர்ட்ஸ் அதிர்வெண்ணைப் பயன்படுத்தி மின்சாரம் பாய்ச்சப்பட்டது, இது சுமார் 118 அடி தூரத்திற்குப் பாய்ச்சப்பட்டு அங்கிருந்து வானலைவாங்கி ஊடாக மாதிரி நகரமொன்று ஒளிரச் செய்யப்பட்டதுடன், சிறிய குளிர்சாதனப் பெட்டியொன்றும் இயங்கச் செய்யப்பட்டுக் காண்பிக்கப்பட்டது.

இந்தத் தொழில்நுட்பம் குறித்த விளக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், பாரிய அளவில் இந்தத் தொழில்நுட்பத்தை

எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து நிறுவனம் சிந்திக்க வேண்டிய காலம் உருவாகியுள்ளது. இதனை எவ்வாறு செய்வது என்பது குறித்து இம்ரொட் மாறுபட்ட ஒரு கோணத்தில் சிந்திக் கின்றது. நீண்ட தூரத்திலிருந்து மின்சாரத்தை விநியோகம் செய்வ தனை விடவும் குறுகிய தூர இடைவெளியில் இணைப்புக்களை ஏற்படுத்தி மின் விநியோகத்தைக் காத்திரமாக முன்னெடுக்க முடி யும் என நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. நீண்ட தொலை விலிருந்து மின்சாரத்தைத் கம்பியின்றி விநியோகம் செய்யும் போது சுமார் 20 வீதமான மின்சாரம் விரயமாகும் எனவும், குறிப் பாகப் பெரிய அன்டனா ஒன்றினால் பாய்ச்சப்படும் மின்சாரம் சரி யாகப் பெற்றுக்கொள்ளாவிட்டால் இந்த நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே அருகாமைக்கள மின்சார விநி-யோக முறைமை குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது.

நேர்வதிசையாக்கல் (collimated) கற்றை, ஒன்றைக் கிரமமான நெடுவரிசையில் பயன்படுத்தப்படுகின்றது. நிகழ்நிலைக்கம்பி வழியாக மின்சாரம் விநியோகிக்கப்படுவது போன்று இந்தக் கற்றை வழியாகக் கடத்தப்படுகின்றது. இம்ரொட் நிறுவனம் சக்தி வளத்தை அதாவது மின்சாரத்தைச் சுமார் 95 வீதம் துல்லியமான வினைத்திறனுடன் கடத்துவதுடன், அதனை 99 வீதமாக உயர்த்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றது.

கம்பியில்லா மின்சார விநியோகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக் குவதற்காக பல்வேறு சவால்களையும், தடைகளையும் வெற்றி-கொள்ள வேண்டியுள்ளது. இம்ரொட் கம்பியில்லா மின்சார விநி-யோகக் கட்டமைப்பினை உருவாக்குவதற்காகக் கடலிலும், மலைப் பகுதிகளிலும் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது. எனினும், விண்வெளி ஆய்வு நடவடிக்கைகள் தனியார்மயப்படுத்தப்பட்டுள்ள நிலையில் புதிய வழிமுறைகளைப் பின்பற்றக் கூடிய சாத்தியங்கள் உருவாகியுள்ளன. குறிப்பாக செயற்கைக் கோள்களை ஒரு தொகுதியாக கட்டமைப்பதன் மூலம் மின் விநியோகத்தைக் காத்திரமான முறையில் வழங்க முடியும்.

விண்வெளியில் உலவும் செயற்கைக் கோள்களைப் பயன்படுத்தி மின்சார விநியோகம் செய்வது குறித்த முதற்கட்டப் பணிகளை இம்ரொட் நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இது தொடர்பில் விண் வெளி நிறுவனங்களுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. மூன்று ஆண்டு காலப்பகுதியில் மின்சாரத்தைத் கம்பியின்றி செய்மதி வழியாக விநியோகம் செய்வதற்கான ஆய் வுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

செயற்கைக் கோள்களைச் சுமார் 62 மைல்கள் (100 கிலோமீற்றர் கள்) அளவில் வலம் வரச் செய்தல் மற்றும் அன்டனா அளவி னைச் சிறிதாக்குதல் அதாவது 100 முதல் 130 அடி வரையில் குறைப்பது என்பனவற்றின் மூலம் இலகுவில் இவற்றைத் தயாரிப் பதற்கும் விண்ணில் ஏவுவதற்கும் வழியமைக்கும் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

தற்போதைக்கு இந்த நிறுவனம் கம்பியில்லா மின்சாரம் விநியோ கம் செய்யும் தொழில்நுட்பத்தைப் பூமியில் பரிசோதனை செய்து பார்ப்பதற்கும் வர்த்தக ரீதியாக விற்பனை செய்யவும் திட்டமிட் டுள்ளது. 2024ம் ஆண்டளவில் இந்த தொழில்நுட்பத்தைக் கொண்டு வர்த்தக ரீதியில் மின்சார விநியோகத்தை மேற்கொள்ள நிறுவனம் உத்தேசித்துள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டால் சக்தி வளத்தைக் குறிப்பாக மின்சாரத்தைக் கேபிள் கள் இன்றிப் பரிமாற்றம் செய்துகொள்ள முடியும் என்பதனை மக் கள் புரிந்து கொள்ளக்கூடிய சாத்தியம் உருவாகும். அலைபேசிக-ளில் இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டாலும், மின்சார விநியோகம் இவ்வாறு பாரியளவில் நடைபெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விண்வெளியிலிருந்து மின்சாரத்தைப் பூமிக்கு அனுப்பி வைக்கும் வகையிலான தொழில்நுட்பம் தொடர்பில் விசேட கவனம் செலுத் தப்பட்டு, அதற்கான முனைப்புக்களில் இம்ரொட் நிறுவனம் தீவி ரம் காண்பித்து வருகின்றது.

மின்சாரம் பாய்ச்சப்படும் போது பறவைகள் அல்லது வேறு பொருட்கள் - உதாரணமாக ட்ரோன்கள், ஹெலிகொப்டர்கள் போன்றன இந்தக் கற்றையுடன் தொடுகையுறுவதனைத் தவிர்க்கும் வகையில் பாதுகாப்பு லேசர்க் கற்றைக் கட்டமைப்பு ஒன்று காணப்படுவதாக இம்ரொட் நிறுவனம் தெரிவிக்கின்றது.

மலைப்பாங்கான பிரதேசங்கள், மின்சாரக் கோபுரங்களை அமைப்பதற்குப் புவியியல் மற்றும் பொருளாதார ரீதியான சிரமங் கள் காணப்படும் பகுதிகள் போன்றவற்றில் இந்தக் கம்பியில்லா மின்சார விநியோகமுறைமை பெரும் வெற்றியளிக்கும் என நம் பிக்கை வெளியிட்டுள்ளது.

செயற்கைக் கோள்களைப் பயன்படுத்தி, விண்வெளியில் உள்ள சூரியசக்தியை உறிஞ்சி, அதனைக் கம்பியில்லா வழிமுறையில் கற்றைகளின் வாயிலாகப் பூமிக்கு அனுப்பி வைத்து, பேண்தகு சக்திவளப் பயன்பாட்டு முறைமை ஒன்றை அறிமுகம் செய்வதற் கான பரீட்சார்த்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2050ம் ஆண்டில் பூச்சியக் காபன் வெளியீட்டுச் சக்திவளப் பயன் பாடு என்னும் ஐரோப்பிய ஒன்றிய இலக்கினையும் இந்த முயற் சியின் ஊடாக எட்டிவிட முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட் டுள்ளது.

நீண்ட தூரத்திலிருந்து வர்த்தக ரீதியில் மின்சாரத்தைத் கம்பி யின்றி விநியோகம் செய்வதற்கான எமது இலக்கினை இந்தச் செயல் முறை விளக்கம் அண்மித்துள்ளது என, நிறுவனத்தின் பிர தம நிறைவேற்று அதிகாரி கிரேக் குஸ்னர் தெரிவிக்கின்றார். விண் வெளியிலிருந்து மின்சாரத்தைப் பூமிக்குக் கொண்டுவருவது குறித்த நடவடிக்கைகள் தொடர்பில் விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

2050ல் பூச்சியக் கார்பன் வெளியீட்டைக் கொண்ட சக்திவளத்தைப் பற்றி உலகம் முழுவதிலும் பேசப்பட்டாலும் அதற்கான நடைமு றைச் சாத்தியப்பாடுடைய திட்டங்கள் எதனையும் காண முடிய வில்லை என்கின்றார். விண்வெளிசார் உட்கட்டுமானங்களில் கற்றை வழியாக மின்சாரத்தைப் பாய்ச்சும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்ததனைப் பெருமிதமாகக் கருதுகின்றோம் எனக் குறிப்பிடுகின்றார்.

இந்த வகை மின்சாரம் தூய சக்திவளம் எனவும், சுற்றுச் சூழ லுக்கு ஆபத்து அற்றது எனவும் போற்றப்படுகின்றமையினால் இதற்கான கேள்வி எதிர்காலத்தில் வெகுவாக அதிகரிக்கும் சாத் தியங்கள் காணப்படுகின்றன.

கம்பியில்லா மின்சார விநியோகத் தொழில்நுட்பம் தற்பொழுது நடைமுறை ரீதியாக அலைபேசிகள், இலத்திரனியல் பல்துலக்கி கள், இன்டக்ஸன் அடுப்புகள், கைத்தொழில் பேட்டைகளில் பயன்படுத்தும் ஹீட்டர்கள், மருத்துவக் கருவிகள், இலத்திரனியல் வாகனங்கள், ட்ரோன்கள் உள்ளிட்ட பல்வேறு கருவிகளில் பயன் படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், தற்பொழுது நாம் பயன்படுத்தி வரும் அலைபே சிகளுக்கான அலைக்கற்றைகளிலேயே ஆரோக்கியக் கேடுகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் பற்றி தொடர்ச்சியாக வாதப் பிரதி வாதங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், மின்சாரத்தை கற்றை வழியாகப் பாய்ச்சும் போது மனிதரதும் ஏனைய உயிரி னங்களினதும் உடல், உள ஆரோக்கியத்திற்கு எவ்வாறான கேடு கள் ஏற்படக்கூடும் என்பதனை நீண்ட நெடிய ஆய்வுகளுக்கு உட் படுத்தி அதில் பாதிப்புக்கள் கிடையாது என்பதனை உறுதி செய் துகொள்ள வேண்டியது எமக்கு மட்டுமன்றி எம் எதிர்காலத் தலை முறையினருக்கும் நன்மை பயக்கும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.



jeyaseelan.s@thaiveedu.com

# ஏமாற்றாதே ஏமாறாதே

- சி. நற்குணலிங்கம்

நேர்மையின்றி, பொய்யாக, தந்திரமாக, இயல்பை மறைத்து, போலியாக, நன்றியில்லாது, நம்பிக்கையில்லாது, சாமர்த்தியமாக, இனிமை காட்டி நடந்து கொள்வது ஏமாற்றுதல் ஆகும்.

ஏமாற்றுதல் கொஞ்சம் இடைவெளியாகி வந்தால் ஏ(ய்) மாறுதல் என வித்தியாசப்படுத்திவிடுகின்றனர். ஏமாறுதல் என்பது மோசம் போதல். ஏமாறுதல் துயரம். ஏமாற்றுதல் துரோகம். இனிமைகாட்டி, நம்பவைத்து ஏமாற்றுவது நயவஞ்சகம். ஏமாற்றுவது நல்ல கலாசாரமோ, பண்பாடோ அல்ல. பண்பாடு, கலாசாரம் என்பது தாய் வயிற்றில் ஒரு முட்டையில் கருத்தரித்த இரட்டைக் குழந்தைகள். ஏமாற்றுவது தவறு எனில் ஏமாறுதல் மிகப்பெரிய தவறு. ஏமாற்றுதல் பிழைக்கப் பிழைப்பற்று, வாழ வகையற்று மக்களால் நடத்தப்படும் செயல். ஏமாற்றுவதைக் காட்டிலும் தோற்றுப்போவது மரியாதைக்குரியது. இந்த உலகில் தேவையில்லாமல் யாரும் யாருடனும் பழகமாட்டார்கள்.

**காயப்படுத்தியவர்கள்**
**மறந்துவிடலாம்.**
**காயப்பட்டவர்கள்**
**என்றும் மறப்பதில்லை**
**காயங்களையும், அதன்**
**வலிகளையும்.**

முகத்துக்கு முன்னால் பாசமும், முதுகுக்குப் பின்னால் வேசமும் போடும் உலகம் இது. உலகத்தை நேசி. யாரையும் நம்பாதே. பேராசை உள்ளவர்களைப் பார். பேராசை உள்ளவர்கள் விரைவில் ஏமாந்துபோவார்கள். ஏமாற்றுபவர்களும் அவர்களே. பேராசை உள்ள உள்ளத்தில் அமைதியும், நேர்மையும் இருப்பதில்லை. இதன் விளைவாக தம்மிடம் இருப்பதையும் இழந்து அவர்கள் வாழநேரிடும்.

ஏமாறுதல் மனிதர்களின் சாபக்கேடு. நல்லவர்களும் ஏமாறுகிறார்கள். நீ நல்லவர் என்பதால் உன்னையாரும் ஏமாற்றமாட்டார்கள் என்று நினைப்பது, நீ சைவம் என்பதால் சிங்கம் உன்னை சாப்பிடாது என நம்புவதற்குச் சமம். ஏமாற்றுபவர்களின் வார்த்தைகளுக்கு பலர் ஏமாந்து போகிறார்கள். அதற்கு ஏற்றாற்போல் இனிக்க, இனிக்க கதைப்பார்கள் அதற்கு மயங்கி ஏமாறுகிறார்கள். இதனால் கடத்தல், பாலியல் துஸ்பிரயோகங்கள் நிகழ வாய்ப்புக்கள் அதிகம். ஏமாந்து போவதற்கு முட்டாளாக இருக்க வேண்டும் என்று இல்லை. அன்புக்கு ஏங்கியவராக இருந்தாலும் போதும். தன்னுடைய சந்தோஷத்துக்காக தன்னை நம்புவோரை ஏமாற்றுவது உறவுக்குச் செய்யும் மிகப்பெரிய துரோகம். அவர் செய்யும் வினைக்கு எதிர் வினையை அவர் அனுபவித்தே தீர வேண்டும்.

ஏமாற்ற நினைப்பதும் தவறு, ஏமாற இடம் கொடுப்பதும் தவறு. நம்பிக்கையை ஏற்படுத்தி கடன் வாங்கி அதைக் கொடுக்காது ஏமாற்றுவோர் பலர். ஏமாந்ததால் பல பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க முடியாது தற்கொலை செய்தவர்களும் உள்ளனர். மோசடி என்பது ஏமாற்றுதல், நனவான தவறான தன்மை. சூழ்ச்சி, சதி செய்தும் ஏமாற்றுகிறார்கள். போலியான வாக்குறுதி ஏமாற்றுதலின் மறுவடிவம். ஏமாற்றுதல் என்பது கள்ள முகமூடி போன்றது. நம்பிக்கை வைப்பவர்களை ஏமாற்றுவது சாமர்த்தியம் அல்ல. அது துரோகம்.

சிலரை நம்பியே சிலரது நம்பிக்கை வீணானது. அன்பும், இரக்கமும் காட்டி சிறுவர்களை ஏமாற்றுவது பொல்லாத சாபம். வலிகள் மனதில் பதியும்போதெல்லாம் மௌனம் ஆகின்றது மனசு.

வாழ்க்கையில் கற்றுக்கொள்வதில் குழந்தைபோல் இரு. பிறப்பது ஒருமுறை. இறப்பது ஒருமுறை. இருக்கும்வரை, நல்லவராய் வாழக்கற்றுக் கொள்ளும்வரை மற்றவர்க்கு உபத்திரவம்தான். நம்பவைத்து ஏமாற்றும் கீழ்த்தரமான எண்ணம் அழிக்கும் ஆற்றல் கொண்டது. உனக்குத் துரோகி வேறு யாரும் இல்லை. நீ பிறர் மேல் வைக்கும் நம்பிக்கைதான். அதை அளவாக வைத்தால் ஏமாற்றம் அதிகம் இருக்காது, காயமும் ஏற்படாது. ஒவ்வொரு பொழுதும் உன் தேவைகளை நீயே நிறைவேற்றிக்கொள். சகமனிதர்களை நம்பி வாழாதே. ஏதோவொரு சந்தர்ப்பத்தில் அவர்களின் சுயரூபம் வெளிப்படும்போது மனம் உடைந்து சிதறிவிடுகிறது. நம்ப நட, நம்பிநடவாதே. அளவான உணவு உடலுக்கு நலம். அளவோடு பழகு உறவுக்குப் பலம். எதிரிகளின் அவமானங்களைக்காட்டிலும் நெருங்கியவர்களின் ஏமாற்றுதலால் ஏமாந்து சுயமரியாதையை இழந்தவர்கள் பலர். ஒரு காலத்தில் நேர்மை தவறாமல் வாழ்ந்தவர்களைக் கண்டோம். ஆனால் இப்போது, நேரத்துக்கு தகுந்தாற்போல் வாழ்பவர்களையே அதிகமாகக் காண்கிறோம். இவர்களது வாழ்வில் அற்புதமான தருணங்கள் வீணடிக்கப்படுகின்றன. நீங்கள் பலவீனமானவர்களாக இருந்தால் உணர்ச்சி ஊசலாடி, உறுதி தளர்ந்து, உங்களுக்கே நீங்கள் பிரயோசனம் அற்றவர்களாகிவிடுவீர்கள்.

எமது வாழ்க்கை நேர்மையான நோக்கத்தை, நெறிப்பாட்டை கொண்டிருக்காவிட்டால், நமது சக்தி எல்லாம் வீணாகிவிடும்.



ஏமாற்றும் பாவச்செயலை செய்யாதீர்கள். சொத்து சேர்க்காவிட்டாலும் பறவாயில்லை, எவர் குடும்பத்தையும் ஏமாற்றிக் கெடுத்த பாவச்செயலைச் சேர்க்காமல் வாழ்ந்து மறையுங்கள். ஏனெனில் சுமக்கப்போவது உங்கள் சந்ததிகள். வாயால் ஒன்று பேசி, மனதால் ஒன்றை நினைத்து, செயலில் வேறுவிதமாகச் செய்வது போன்ற பலதரப்பட்ட வாழ்க்கை கூடாது. உன்னால் ஒருவர் கண்ணீர் சிந்தும்படி நடந்துகொள்ளாதே. அந்தக் கண்ணீர்த் துளிகள் உன் கணக்கில் வரவு வைக்கப்படும். அதுமட்டுமல்ல எதிரிகளும் வரவில் வைக்கப்படும். பணம் சம்பாதிக்க நல்லவர், கெட்டவர் எல்லோராலும் முடியும். மனிதர்களைச் சம்பாதிக்க நல்ல மனதுள்ள மனிதர்களால் மட்டும்தான் முடியும்.

கை தவறினால் பொருள் உடையும் என யோசிப்பவர்கள், வாய் தவறினால் மனம் உடையும் என யோசிப்பதில்லை. யாரெது சொன்னாலும் கேட்டதை எல்லாம் நம்பாதே. அறிவினால் கொஞ்சமாவது யோசி. ஏமாந்துபோக நேரிடும். தகுதிக்கு மீறி ஆசைப்படாதே, காயப்படுவீர். காயப்படுத்தியவர்கள் மறந்துவிடலாம். காயப்பட்டவர்கள் என்றும் மறப்பதில்லை காயங்களையும், அதன் வலிகளையும்.

ஏமாற்றுபவர்கள் பேசத்தெரிந்த மிருகம். அவர்கள் மீது கோபம் கொள்ளாதே. ஐந்து அறிவுடையவர்களுடன் பழகுவது மிகவும் அவதானம். கடன் இல்லாதவன் பணக்காரன். நோயே இல்லாதவன் இலட்சாதிபதி. கோபமே இல்லாதவன் கோடீஸ்வரன். 'எங்கே சென்றாலும் நல்ல வார்த்தைகளை பயன்படுத்தத் தெரிந்தவனே சிறந்த ஞானி' அப்துல்கலாம் வார்த்தை. உன்னுடைய இருப்பினால் நாலுபேருக்கு நல்லது நடக்கவேண்டும். வாழ்க்கைக்கு சில சிந்தனைகளை நீங்கள் முதலீடு செய்ய வேண்டும். ஒருவர் உங்களை ஏமாற்றுகிறார் என அறிந்தால் பேசாமல் இருந்துவிடக்கூடாது. சகித்துக்கொண்டே போகும்வரை நமக்கு மரியாதை கிடையாது. பேசவேண்டிய இடத்தில் பேசுங்கள். அமைதியாகப், பண்பாகப் பேசுங்கள். 'தூய்மையானவனாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு' விவேகானந்தரின் பொன்மொழி.

சண்டித்தனம் வேண்டாம். தனக்குத்தானே கேடு விளைவித்துக் கொள்ள ஏமாற்றுதல் ஒன்றே போதும். உற்றுநோக்கல்முறை தொடர்ச்சியாக கையாளப்படின் ஏமாறுவது நீக்கப்படும். வீசப்படும் கற்களைவிட பேசப்படும் சொற்கள்மீது கேட்போர் நிதானமாக இருந்தால் தப்பித்துகொள்ளலாம். நல்ல மனிதர்களின் பேச்சுக்களைவிட ஏமாற்றுக்காரர்களின் பேச்சுக்கள் மிகவும் தெளிவாகவும், பணிவாகவும் இருக்கும். 'சட்டமும் விதிமுறைகளும் மக்களுக்காகவே ஏற்பட்டவை. சட்டத்துக்காகவும் விதிமுறைகளுக்காகவும் மக்கள் இல்லை' காமராஜர் கருத்து.

ஏமாற்றுபவரின் உடலை சுமப்பதை நிலம் பாவம் எனக் கருதுகிறது. வாழத்தகுதியற்ற இடம் இந்த உலகம் என்று சொல்லும் அளவுக்கு ஏமாற்றுபவர்களது நடத்தைகள் மேலோங்கி உள்ளது. சமூகத்துக்குப் பொருந்தி நடவாதவர் தன்னைப்பற்றிச் சரியாக அறியாதவராய், தன்னைப்பற்றி மிகுதியாக நினைத்து விரைவில் அழிவார். ஏமாற்றுபவர்கள் இரக்கமில்லாதவர்கள். இரக்கம் இல்லாது ஏமாற்றும் செயலில் இறங்குபவர்களுக்கு இரக்கமில்லாத நியாயத் தீர்ப்புக் கிடைக்கும். முடிந்தவரை ஏமாற்றாதீர்கள் முழுதாய் புரிந்துகொண்டவர்களை. மனச்சாட்சி கணிக்கும் வழியில் நீ நடக்கப் பழகினால் ஏமாற்றுதல் என்றசொல் என்றும் இல்லை உன் வழ்வில்.

நான் ஏமாந்துவிட்டேன் என்று புலம்புவதைவிட நம்மை அவ்வளவுதான் புரிந்து வைத்துள்ளாரென நினைத்து விலகிவிடுவதே சிறப்பான பதிலடி. 'உன்மேல் அன்பு கொண்டவரை ஒருபோதும் வெறுக்காதே. உன்னை நம்பியவரை ஒருபோதும் ஏமாற்றாதே' விவேகானந்தர் கூற்று. எல்லா மனிதர்களையும் நம்புவது ஆபத்து. ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து. 'பேசுபவரைவிட கேட்பவருக்கே அதிக புத்தி வேண்டும்' இது துருக்கிப் பொன்மொழி. நீ ஒருத்தரை ஏமாற்றினால் உன்னை பலரும் ஏமாற்றுவார்கள். ஏமாந்துவிட்டால் ஏங்காதே. உன்னை ஏமாற்றிக் கீழே வீழ்த்த முயன்றால் நீ அவர்களுக்கு மேலே இருக்கிறாய் என்று அர்த்தம் கொள். நான் ஏழையாக இருக்கிறேன். இதிலிருந்துவிலக குறுக்கு வழியில் யாரையும் ஏமாற்றி பணக்காரனாகவர நினைக்கலாம். அது நிலைக்காது. 'ஓர் ஏழையான முட்டாளுக்கு நிறையப் பணம் கிடைத்தால் அவர் பணக்கார முட்டாளகத்தான் மாற முடியும்' அறிஞர் ஆப்பிரகாம் மில்லர் கருத்து. மனிதரை அழிக்கக்கூடிய ஒரே விடயம் அவர் தன் அழிவில் நம்பிக்கை வைப்பதாகும். 'துருப்பிடித்துத் தேய்வதைவிட உழைத்துத் தேய்வது மேலானது' விவேகானந்தர் மொழிந்தது. ஏமாற்றுபவருக்கு இறுதிக்காலம் சிறைவாசம்தான். 'ஒரேயடியாக உச்சிக்குப் போய்விட வேண்டும் என்ற முயற்சிதான் உலகில் பெருந்துயருக்கு காரணமாய் இருக்கிறது' காபெட் அறிஞர்மொழி. பழிக்குப் பயப்படாமல் இருப்பது அறியாமையின் இலக்கணம்.

வாழ்வில் மிகப் பெரிய ஏமாற்றம் கடைசிவரை உன்கூடவே இருப்பேன் எனச்சொல்லி பாதியில் தனியாக தவிக்கவிட்டுச் செல்வதாகும். ஒருவர் அடிக்கடி கோபப்படுகிறார் என்றால், அவர் வாழ்க்கையில் அவமானம், ஏமாற்றம், துரோகம் இவை மட்டுமே சந்தித்திருக்கிறார் என்று அர்த்தம். ஏமாற்றங்களையும் துரோகங்களையும் அதிகம் சந்திப்பவர்களது வாழ்க்கையில் தத்துவம் மட்டுமல்ல அறிவும் தானாகவே வரும். அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுக்கும். உண்மையாக இருந்துவிட்டால் எதுபற்றியும் கவலை இல்லை.

*'எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு*
*கொள்ளாத கொள்ளாது உலகு'*

ஒரு செயலை மற்றவர்கள் பழித்து கூறாதவாறு சிந்தித்துச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாதுவிட்டால் உலகம் ஏற்காது. ஏமாற்றுபவர்கள் ஒரு காரியத்தை முடிக்கும் வகையையும், அதனால் வரும் இடைஞ்சல்களையும், இறுதியில் கிடைக்கும் பயனையும் தீர்மானித்துக் காரியத்தில் இறங்கமாட்டார்கள். துன்பத்தை இன்பமாக நினைப்பவருக்கு பதட்டம்கூட ஒரு திண்டாட்டமாக இருக்காது. தேவைப்படும்போது பழகுவதும், தேவை முடிந்தவுடன் விலகுவதுமாக இருக்கும்வரை மனிதவாழ்வில் ஏமாற்றங்களும், துரோகங்களும் தொடர்ந்தவண்ணமே இருக்கும்.



natkunalingam@thaiveedu.com

# செம்மஞ்சள் மேலங்கி

- Phyllis Webstad
தமிழில்: குமார் புனிதவேல்

புரட்டாதி மாதம் முப்பதாம் திகதி செம்மஞ்சள் மேலங்கி தினம் அனுஷ்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கான பின்புலத்தை அறிய முற்பட்டவேளையில் பல வேதனை மிக்க தகவல்களையும் ஒரு சிறுகதையையும் அறியக்கிடைத்தது. அவற்றை இங்கு பகிர்ந்து கொள்வோம்.

முதலில், கதையைக் கவனிப்போம். எமது கல்விகூட 'பாட்டி வடை சுட்ட கதை'யில் ஆரம்பித்தது தானே!

ஃபிலிஸ் சிறுகுழந்தையாக இருந்த வேளை தனது பாட்டியாருடன் பூர்வீக குடிகள் வசிக்கும் பிரதேசங்களில் ஒன்றான Dog Creek Reservel வசித்து வந்தாள். அவள் வசித்த வீட்டிற்கு மின்சாரம் கிடையாது. வீட்டின் உள்ளே ஒரு கழிப்பறை கூட கிடையாது. கோடையில் வெய்யில் வாட்டும் வேளையில் ஃபிலிஸ் ஒரு குளியல் தொட்டியில் தன்னை ஆற்றிக்கொள்ள, பாட்டி தோட்டத்தில் வைத்திருந்த தண்ணீரில் சென்றமர்வாள். ஃபிலிஸின் பாட்டியாரின்



தோட்டத்தில் விளைவிக்கும் காய்கறிகள் மற்றும் berries கனிகளை உண்டு தங்கள் பசியை ஆற்றிக் கொள்வார்கள். கோடை காலத்தில் அவர்கள் பிரேசர் ஆற்றில் (Fraser River) மீன் பிடித்து உண்டு, மிஞ்சியதைக் காய வைத்து பனிக்காலப் பாவனைக்குச் சேர்த்து வைப்பார்கள். அவர்களிடம் பெருமளவு இருக்காவிடினும் இருப்பதைக் கொண்டு இனிமையாக வாழ்ந்தார்கள்.

இளம் வயதில் ஃபிலிஸ் தனிமையை நன்றாக அறிந்து இருந்தாள். அவள் வசித்து வந்த ஆதிக்குடிகள் வாழும் பிரதேசத்தில் விளையாடுவதற்கு நண்பர்கள் இருக்கவில்லை. புரட்டாசி மாதக் கடைசியில் ஒத்தவயதிலும் கூடிய உறவுகள் யாவரும் ஆதிக்குடிகளுக்காக அமைக்கப்பெற்றுள்ள வதிவிடப் பள்ளிக்குச் சென்றுவிடுவார்கள். அது ஒரு கட்டாயப் பள்ளி. ஃபிலிஸ் தனக்கு எப்போது அதற்கு சந்தர்ப்பம் வரும் என்று ஆவலுடன் பார்த்திருந்தாள்.

ஃபிலிஸ் இளம்பிள்ளையாய் இருக்கையில் அவளை அணைப்பதற்கு யாருமில்லை. ஆனால் அவளுக்குப் பாட்டி இருந்தாள். பாட்டியின் வீடு அந்த சரணாகதி இடத்தில் அனைவருக்கும் பத்திரமான ஒரு இடமாயிருந்தது. ஆதிக்குடிகள் பலரும் பாட்டியிடம் உதவிக்கும் அறிவுரைக்கும் வருவார்கள். ஃபிலிஸிற்கு பாட்டியின் குசினிதான் பிடித்தமான இடமாயிருந்தது.

ஃபிலிஸிற்கு ஆடிமாதத்தில் ஆறு வயதாகிய வேளையில் அவள் பாட்டி கேக் செய்து கொண்டாடினாள். அவளுக்கு ஆறு வயதாகிவிட்டபடியால், பள்ளிக்குச் செல்லக் காலம் வந்துவிட்டது என்றாள் பாட்டி. புரட்டாசி மாதம் வந்தவுடன் அவள் வதிவிடப்பள்ளிக்குச் செல்லலாம். சென்யோசப் மிஷன் பள்ளிக்கு முதல்முறையாகச் செல்ல சந்தர்ப்பம் கிட்டியது.

ஃபிலிஸிற்கு நிறைந்த உற்சாகம் பள்ளிக்கும் போய் உறவுகளுடன் விளையாடலாம் என்று.

குழந்தைகளுக்கு ஒத்த வயதினருடன் விளையாடுவது தானே மகிழ்ச்சி. மேலும் வதிவிடப்பள்ளியில் என்ன நடக்கிறது என்பதை அறிவதிலும் மிக்க ஆர்வம். புது நண்பர்கள் கிடைப்பார்கள் எனும் ஆர்வமும் இருந்தது.

பள்ளிக்குச் செல்லுமுன் அவளுடைய பாட்டியார் அவளை அழைத்துக் கொண்டு ஒரு புது மேலங்கி வாங்க விரும்பினாள். பட்டணத்திற்குச் செல்வதற்கு கார் வசதி கிடையாது. எனவே ஒரு நீலநிறப் பேருந்து - தஸ்டேஜ் என்பார்கள். அதில் ஏறிச் சென்றார்கள். பட்டணப் பயணம் மிகவும் உற்சாகமாய் இருந்தது. கரடுமுரடான பாதையில் துள்ளித்துள்ளி புழுதி கிளப்பியபடி அது சென்றது. திடீர் என்று வண்டி அமைதியாகச் சென்றது. வெளியே பார்த்தால் நல்ல சீரான பாதையில் சென்று கொண்டிருந்தது. முதல் முறையாக பட்டணத்தைப் பார்த்தவுடன் ஃபிலிஸ் அதிசயப்பட்டாள்.

பாட்டி, ஃபிலிஸை அழைத்துக் கொண்டு ஒரு உணவுச்சாலைக்குச் சென்றாள். உணவுச்சாலையில் இசைப்பெட்டி ஒன்று இருந்தது. அதில் ஃபிலிஸ் சில்லறையை போட்டவுடன் சப்தமாகப் பாடத் தொடங்கியது. ஃபிலிஸ் இரண்டு முட்டைப்பொரியலுடன் சாப்பாட்டைக் கேட்கவும் சாப்பாட்டுத் தட்டில் இரண்டு சூரியன் போல் பிரகாசித்த முட்டைகள் வந்தன. அந்த இரு முட்டைகளும் தன்னைப் பார்ப்பது போல் ஃபிலிஸ் உணர்ந்தாள். அதை எப்படிச் சாப்பிடுவது என்று தெரியாமல் தனது பாட்டியைப் பார்த்து விழித்தாள். பாட்டி எப்போதும் முட்டை கலந்தபடி பொரிப்பது தான் வழக்கம்.

சாப்பிட்டு முடிந்தவுடன், பாட்டி ஃபிலிஸை ஒரு துணிக்கடைக்கு அழைத்துச் சென்றாள். அங்கு ஆடை வகைகளும், பல விளையாட்டு பொம்மைகளும் விற்பனைக்கு இருந்தன. ஃபிலிஸிற்கு இது ஒரு புது அனுபவம். அங்கே ஒரு செம்மஞ்சள் மேலாடை பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதைக்கண்ட உடனே ஃபிலிஸ் ஓடிச்சென்று அதைத் தூக்கினாள். அந்த மேல்சட்டை செம்மஞ்சள் நூலால் இணைத்து அமைத்தது. பொத்தான்கள் இல்லை. அவளுடைய ஆர்வத்தையும், உற்சாகத்தையும் கண்ட பாட்டி உடனே அதை வாங்கி தனது பேத்திக்குக் கொடுத்தாள்.

இருவரும் வந்தவழியே நீலவண்டியில் வீடு திரும்பினார்கள்.

ஃபிலிஸ் தனது புதுச்சட்டை இருந்த பையை தன்னுடன் இறுக்கக் கட்டிப்பிடித்தபடி இருந்தாள். அப்போதே ஃபிலிஸ் ஒரு தீர்மானத்தை எடுத்துக் கொண்டாள். பள்ளிக்குச் செல்லும்வரை அந்த செம்மஞ்சள் ஆடையை அணிவதில்லை என்று. அதில் அவள் வைராக்கியமாய் இருந்தாள்.

ஃபிலிஸ் பல நாட்கள் பொறுமையுடன் அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருந்தாள். அந்த நாளும் வந்தது. ஆவலுடன் அந்த செம்மஞ்சள் ஆடையை அணிந்தபடி பாட்டியிடம் விடைபெற்றாள். பாட்டியும் மகிழ்ச்சியாய் இரு என்று வழியனுப்பினாள்.

ஃபிலிஸ் ஓடிப்போய் வண்டியில் ஏறிப் பாட்டிக்கு யன்னல் ஊடாக் கையசைத்து பிரியாவிடை கொடுத்தாள்.

அது இரண்டு மணித்தியாலப் பயணம், ஃபிலிஸ் இதற்கு முன் ஒரு போதும் இவ்வளவு தூரப் பயணம் செய்ததில்லை. அவள் யன்னல் வழியாகத் தான் வசிக்கப்போகிற பள்ளிக்கூடத்தை ஆவலோடு எதிர்பார்த்த வண்ணம் இருந்தாள். இறுதியில் அந்த வதிவிடப் பள்ளியை (Residential School) அடைந்தவுடன் அச்சம் அவளை சூழ்ந்து கொண்டது. எல்லாம் புதுமையாகக் காட்சி தந்தது. அவள் வாழ்நாளில் பார்த்திராத ஒரு பெரும் கட்டடத்தின் முன் வண்டி நின்றது. அந்தக் கட்டடத்தின்முன் அவளை வரவேற்க நின்றிருந்த கன்னியாஸ்திரி அருவருப்புடன் முறைப்பது போல் இருந்தது. ஃபிலிஸ் அருகில் இருந்த உறவுப்பெண்ணிடம் அச்சம் கலந்த குரலில் கேட்டாள் ‘வீடு திரும்புமுன் எவ்வளவு காலம் தங்கவேண்டும் என்று. அதற்குப் பதிலாக அவள் ‘முந்நூறு இரவுகள் இங்கு தூங்க வேண்டும்’ என்றாள். முந்நூறு இரவுகள் என்பது நெடுங்காலமாக ஃபிலிஸ் எண்ணினாள்.

கன்னியாஸ்திரிகள் அந்தக் கட்டடத்தின் உள்ளே ஒருவர் பின் ஒருவராக ஒரு பெரும் மண்டபத்தினூடாக அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அவளுடைய முடியை கன்னியாஸ்திரிகள் கட்டையாக வெட்டினார்கள். அவள் மறுத்தும் கேட்கவில்லை. ஆடைகளைக் களைந்து விட்டுக் குளிக்கச் சொன்னார்கள். ஃபிலிஸ் தனது பிரகாசமான செம்மஞ்சள் சட்டையை கழட்ட விடாமல் அடம்பிடித்தாள். ஃபிலிஸ் வாழ்வில் முதல் முறையாக ஷவரில் இருந்து தண்ணீர் வருவதைக் கண்டு அதிசயித்துப்போனாள்.

குளித்து வந்தவுடன் தனது செம்மஞ்சள் உடையைத் திருப்பித்தருமாறு கேட்டபோது, மறுக்கப்பட்டு இனிப் பள்ளி ஆடைதான் அணிய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டாள். பள்ளியில் வேறு ஆடைகள் அணிய முடியாது என்றார்கள். ஃபிலிஸ் எனது செம்மஞ்சள் ஆடையைத் திருப்பித்தாருங்கள் என்று அழுது அடம் பிடித்தாலும் பயன் எதுவும் இல்லாது போயிற்று. அவள் குரல் ஒருவருக்கும் கேட்கவில்லை.

வதிவிடப்பள்ளியில் ஃபிலிஸ் கற்கவில்லை. அங்குதான் பிள்ளைகள் தங்கிப் படுத்து உண்பார்கள் என வெகு சீக்கிரமே ஃபிலிஸ் உணர்ந்தாள். கன்னியாஸ்திரிகளுக்கு அவள் களைப்பு, நோய், பசி, கவலை ஒன்றுமே புரியவில்லை. தானே தன்னில் தங்கி இருக்கவேண்டியதன் அவசியத்தை உணரத் தொடங்கினாள். அவள் ஒரு பொருட்டாகக் கருதப்படவில்லை. சாப்பாட்டு நேரத்தில் கிடைத்த சுவையற்ற உணவை அனைத்துப் பிள்ளைகளும் உண்டார்கள்.

அவர்களுக்கு சந்திரனைப் போன்ற வளைந்த அவரையும் நரள் மீனும் தினமும் கிடைத்தது. அவளுக்குப் பாட்டியுடன் உண்ட சுவையான மீன் ஞாபகத்திற்கு வரும். அழுதபடியே தூங்கிவிடுவாள். கனவில் பாட்டியின் தோட்டத்தில் விளையாடுவதும், சமன் மீன் பிடிப்பதற்கு ஆற்றடிக்குச் செல்வதும் கனவாக வந்து அவளுக்கு மகிழ்ச்சியூட்டும்.

ஒவ்வொரு நாளும் நகரத்தில் இருக்கும் பொதுப் பள்ளிக்கு வதிவிடப்பள்ளியிலிருந்து பேருந்துவில் அழைத்துச் செல்லப்படுவார்கள். பேருந்துவில் ஏறுமுன் ஒரு சிறு தோடம்பழச்சாறும், பேப்பர் பையில் மதிய உணவும் எடுத்துச் செல்வார்கள். சில நாட்களில் ஒரிரு குழந்தைகள் பையில் சொக்கலேட் இருக்கும். எல்லோருமே தங்கள் பையில் சொக்கலேட் இருக்கிறதா என்ற பார்ப்பார்கள். ஏமாற்றம்தான் மிச்சம்.

வளர்ந்தவர்கள் தமக்குக் கொடுமையாகப் பகிடிவதை செய்வதாகவே உணர்ந்தாள். தனது உறவுப் பிள்ளையுடன் பள்ளிக்குச் செல்கையில் அந்தப் பிள்ளையை வேறு ஒரு பள்ளியில் சாரதி இறக்கிவிடுவான். ஃபிலிஸ் அவளையும் தன்னையும் ஒரே பள்ளியில் இணைந்து படிக்க விடமாட்டார்களா என ஆதங்கப்பட்டாள். ஏன் அவர்களைப் பிரித்து வைக்கிறார்கள் என அவளுக்குப் புரியவில்லை.

பள்ளிக்கூடத்தில் மற்ற சிறுவர்களுடன் இணைந்தே வாசிக்க, எழுதக் கற்றாள் ஃபிலிஸ். ஆனால், அவளுக்குத் தனிமை உணர்வு விட்டுப்போகவில்லை. வதிவிடப் பள்ளியில் இருந்து வந்த அனைத்துச் சிறார்களும் தனிமையை உணர்ந்தார்கள். காரணம் அவர்களுடைய வீடுகள், குடும்பங்களிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டு விட்டார்கள்.

அவளுடைய ஆசிரியை சுருளான செம்பட்டை முடியுடன் மிக்க அழகானவள். அவள் பாவிக்கும் சென்ட் போல் அவளும் சிறப்பாயிருந்தாள். அவள் ஃபிலிஸை நோக்கிப் புன்னகைத்துப் பாடங்களைக் கற்பித்துத் தந்தாள். ஃபிலிஸ் எண்ணுவதுண்டு டீச்சருடன் நாள் முடிய வீட்டிற்குச் செல்லலாம் என்று. அவள் பள்ளிக்கூட வாழ்க்கையைச் சகிக்க உதவியாய் இருந்தாள்.

ஃபிலிஸ் அவள் ஆசிரியையை மிக விரும்பினாலும் அவர், அவளது பாட்டிக்கு இணையாக முடியவில்லை. பள்ளிக்குச் சென்று வரும் வேளைகளில் பாட்டி என்ன செய்கிறாளோ என யோசித்துக் கொண்டிருப்பாள் ஃபிலிஸ் பாட்டியையும் அந்தத் தோட்டத்தையும் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் கொண்டாள்.

வீட்டிற்குத் திரும்பும் நாளை எண்ணத் தொடங்கினாள் ஃபிலிஸ். அது மெதுவாகக் குறையத் தொடங்கியது. அவளும் பொறுமையாக தொடர்ந்து கணித்துக் கொண்டிருந்தாள்.

பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் புத்தகக் கழகத்திலிருந்து வாசிப்பதற்குப் புத்தகங்கள் பெற்றுக் கொள்ளலாம், ஆனால் வதிவுப்பள்ளிக் குழந்தைகள் பெற முடியாது. ஃபிலிஸுக்கு தங்களை ஏன் இப்படி வித்தியாசமாகப் பார்க்கிறார்கள் எனப் புரியவில்லை. அவளுக்கு வாசிக்கும் ஆசை ஏன் மறுக்கப்படுகிறது எனப் புரியவில்லை.

விளையாட்டு மைதானத்தில் மற்றைய குழந்தைகளுடன் ஊஞ்சல் ஆடி விளையாடி மகிழ்ந்தாள். ஆனால் பள்ளி முடிந்து வீடு செல்ல வாகனம் வரும்போதுதான் மிக்க மகிழ்ச்சியான நேரம். தனது உறவுச் சகோதரிக்கெனத் தனக்குப்பக்கத்து ஆசனத்தைப் ஃபிலிஸ் பிடித்து வைத்திருப்பாள் பஸ் வந்தவுடன் உறவுச்சகோதரி ஃபிலிஸ் அருகே அமர்ந்திடுவாள். சில தினங்களில் பள்ளிக்கூடத் தோட்டத்தில் எடுத்த வெங்காயம் கொண்டு வருவாள். ஃபிலிஸிற்கு வேண்டுமா எனக் கேட்கையில் அவள் வாய் வெங்காயம் மணப்பதைப் பார்த்துச் சிரிப்பாள் ஃபிலிஸ். ஆனால் ஃபிலிஸ் எப்போதுமே பசியாய்த்தான் இருப்பாள். வெங்காயத்தை வாங்கி அப்பிள் போல் சாப்பிடுவாள்.

பேருந்துவில் எல்லோரும் பாடக்கற்றுக் கொண்டார்கள்.
*நாங்கள் அனைவரும் மதக்குழு சேர்ந்தவர்*
*நல்ல வல்ல மதக்குழு.*
*நாங்கள் சென்றவிடமெல்லாம் சிறப்பெமக்கு,*
*நாம் யார் என்று கேட்டால்*
*நாம் மதக்குழு என்று*
*மகிழ்ச்சியாய்ச் சொல்வோம் அவருக்கு.*
என்று பாடுவார்கள்.

காலங்கள் மாறின ஆண்டுகள் ஓடின. ஃபிலிஸ் வீடு திரும்பும் நாளும் நெருங்கியது.

அவளுக்கு திரும்பி வரும் எண்ணமிருக்கவில்லை. ஈவிரக்கம் இல்லாதவரை மீண்டும் பார்க்கும் நோக்கமும் இருக்கவில்லை. முந்நூறாவது இரவு தூங்கி எழும்போது... தன்னை ஒரு பொருட்டாகவேனும் மதிக்காத இடத்திலிருந்து மீண்டு செல்வதை எண்ணி உற்சாகமாக வீடு திரும்பினாள். அன்றிருந்து தன் பாட்டியும், தோட்டமும் அவளை மகிழ்ச்சியாக வைத்திருந்தது. பாட்டியுடன் பிரேசர் ஆற்றில் மீன் பிடித்து மகிழ்ந்தாள். அவள் வாழ்க்கை அர்த்தமுடன் தொடர்ந்தது.

அன்று அவளுக்கு மறுக்கப்பட்ட செம்மஞ்சள் மேலாடை இன்று கனடாவில் செப்டம்பர் 30ம் திகதியில்
விஸ்வரூபமாக உருவெடுத்துள்ளது.



kumar.punithavel@thaiveedu.com

# கச்சானும் மச்சானும்...

- வேதநாயகம் தபேந்திரன்

*'கச்சான் அடித்த பின்பு*
*காட்டில் மரம் நின்றது போல*
*உச்சியிலே நாலுமயிர்*
*ஓரமெல்லாம் தான் வழுக்கை'*

இப்படியொரு நாட்டார் பாடல் எமது காலத்தில் தமிழ் பாடத்துடன் இணைந்ததாக இருந்தது.

கச்சான் என்பது இங்கு காற்றைக் குறிக்கிறது. ஆனி மாதத்தில் அடிக்கும் கச்சான் காற்றின் வேகம் அப்படி.

அது போல ஆனி மாதத்தில் சிறு பெண்கள் மங்கைப் பருவம் அடைதலும் கூடுதலாக இருக்கும். இந்தக் கச்சான் காற்றின் ஓர் விளைவு தான் அதுவெனச் சொல்வார்கள்.

கச்சான் எனும் தானியம் எமது வாழ்வின் பல கட்டங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளது. கச்சான் எனும் தானியம் உலகெங்கும் அறியப்பட்ட மக்களால் உணவாகப் புழங்கப்படுகின்ற ஒரு தானியமாக உள்ளது.

கோயில் திருவிழாவென்றால் கச்சான் கடைகள் இல்லாத திருவிழாவே இல்லை. திருவிழாக் காலத்தில் கச்சான் கடை வைத்து அந்த வருமானத்தை நம்பித் தமது பொருளாதாரத்தைத் திட்டமிடுவோரும் உள்ளனர்.

பஞ்சாங்கம் பார்த்து, இப்பஞ்சாங்கக் கலண்டர் பார்த்து, பத்திரிகைச் செய்திகள் பார்த்து எந்த ஊரில் எவ்வெப்போது திருவிழா, விசேட நிகழ்வுகள் எனத் திரிந்து கச்சான் கடை போட்டுத் தொழில் செய்வோர் பலர்.

பெரிய தாச்சி ஒன்றில் கொஞ்சம் மணல் போட்டு ஓரளவு நெருப்பு வெக்கையில் கச்சானை மெல்ல மெல்ல அகப்பையால் ஆட்டி ஆட்டி வறுக்க வேண்டும். கச்சான் கோது கருகாமல் பக்குவமாக வறுத்தெடுக்க வேண்டும்.

கச்சான் வறுபட்டவுடன் சாப்பிட்டால் பச்சையாக இருக்கும். வறுபட்டு அரைமணி நேரம் கடந்த பின்பாகவே கச்சானைக் கொறிக்கத் தொடங்க வேண்டும். அது தான் வறுத்தெடுத்த சரியான பருவம்.

காற்றுப்படும் இடத்தில் கச்சானை வைத்தால் அது இழவாளித்து சாப்பிடும் சுவை கெட்டு விடும். இதனால் பொலித்தீன் பைகளில் அல்லது உரப்பைகளில் இட்டு இறுக்கிக் கட்டி வைப்பார்கள்.

சைவக் கோயிலாயின் கொடியேற்றம், தேர், தீர்த்தத் திருவிழாக்களின் போது தான் கச்சான் கடைகள் களைகட்டும். அதிலும் திருவிழாவின் கதாநாயகன் தேர்த் திருவிழாவன்று தான் வியாபாரம் அமோகம்.

சிறிய முதலீட்டுடன் தொடங்கக் கூடியதும் வாழ்வாதாரத்திற்கு உழைக்கக் கூடியதுமான தொழில் என்பதால் கச்சான் வியாபாரம் நாடெங்கும் பரவலாக நடைபெறுகிறது.

எனது சிறு வயதில் 25 சதத்திற்கு ஒரு சரை கச்சான் வாங்கினேன். இன்று அதேயளவு கச்சான் நூறு ரூபா. அதாகப்பட்டது 25 சதம் செய்த வேலையை 100 ரூபா செய்கிறது. காசின் பெறுமதி அதல பாதாளத்தினுள் விழுந்து விட்டது.

கோயில் திருவிழாக் காலங்களில் பேப்பர் பையினுள் கச்சானை எடுத்து எடுத்து வீதியெங்கும் கொறித்தபடி செல்வது ஒருவகைச் சந்தோசம் தான். இப்போது சொப்பிங் பைகள் அந்த இடத்தைப் பிடித்து விட்டன.



ஆக முந்தைய காலத்தில் கோயில்களில் விடிய விடியத் திருவிழா நடக்கும். விடிய விடியக் கச்சானைக் கொறித்தபடி திருவிழாப் பார்ப்பது ஒரு வகைச் சுகம் தான். சிலர் கோது உடைக்காமல் கச்சானைத் தின்பார்கள். மண் இல்லாக் கோது ஆயின் அப்படிச் சாப்பிடுவதில் கூட ஒரு வகைச் சந்தோசம் உண்டு.

மொத்தத்தில் கச்சான் இல்லாத எமது ஆலய, தேவாலய நிகழ்வுகள் இல்லை.

ஊருக்கு ஊர் வாசிகசாலைகள் ஆண்டு விழாக்களைக் கொண்டா

டிய பொற்காலமொன்று இருந்தது. அப்பொற்காலத்தில் கச்சான் வாங்கி கொறித்துக் கொறித்து உண்டது ஒரு வகைச் சந்தோசம் தான்.

கச்சான் வியாபாரியிடம் வாங்கினால் செலவு அதிகமெனத் தமது வீட்டில் கச்சானை வறுத்து அவற்றைக் கொண்டு விடிய விடிய நாடகம், நாட்டுக்கூத்து, கலைநிகழ்வுகள் எனப் பார்த்த ஏழை, நடுத்தரக் குடும்பங்களும் உண்டு.

கச்சான், கடலை, சோழன் கொட்டை என நாம் கோரஸ் பாடிக் கச்சான் தின்ற பைம்பல் காலங்களும் கண் முன்னே வந்து போகிறது.

கச்சான் போசாக்குத் தரும் தானிய வகைகளில் ஒன்று.

கச்சானைப் பிடிங்கியவுடன் பச்சையாக அவித்து உண்பது ஒரு வகைச் சுவை. திருகோணமலை கிண்ணியாப் பிரதேசத்தில் ஒரு மணி உள்ள உருண்டைக் கச்சான் பயிரிடுவார்கள். இதனை போளைக் கச்சான் எனவும் அழைப்பார்கள்.

பெரும்பாலும் இதனை அவித்துச் சாப்பிட்டே முடிப்பார்கள். கிண்ணியாவில் 4 வருடங்கள் அரச பணியாற்றிய காலத்தில் ஆசை தீரச் சாப்பிட்ட அனுபவம் எனக்குண்டு.

கச்சானைச் சேனைப் பயிர்ச் செய்கையாக நாடு முழுவதும் செய்து வருகின்றார்கள். பெரிய பசளை எதுவும் தேவைப்படாமல் குறைந்தளவு முயற்சியில் அறுவடை செய்யக் கூடிய பயிர் கச்சான் தான். மூடை மூடையாகக் கச்சான் நாடு முழுவதும் வியாபாரத்திற்குச் செல்லும். கஸ்டப் பிரதேச விவசாயிகளிடம் அடி மாட்டு விலைக்குக் கச்சானை வாங்கிக் கொள்ளையடிக்கும் வியாபாரிகளும் உள்ளனர்.

வருடம் முழுவதும் மழை வெய்யில் குளித்து வீதியோரத்தில் கச்சான் வியாபாரம் செய்து வாழ்க்கையைக் கொண்டு செல்வோர் நாடு முழுவதும் உள்ளனர். பஸ்களில், ரெயில்களில் கச்சான் விற்றுச் சீவியம் நடத்தும் சில ஆயிரம் பேர் நாடு முழுவதும் உள்ளனர்.

நாள் முழுவதும் அலைந்து திரிந்து வியாபாரம் செய்வார்கள். ஓசை படாமல் உச்ச வருமானம் கிடைக்கும் தொழில் இது.

பஸ், ரெயின் பயணங்களில் கச்சானைக் கொறித்தால் அதிக தாகம் எடுக்கும். இதனால் தண்ணீர்ப் போத்தல் வியாபாரமும் கூடவே இந்த வியாபாரிகள் செய்வார்கள்.

கச்சான் கோதுகள் பஸ், ரெயின் எங்கும் கால்களில் கிடந்து உழக்கப்பட்டு அரியண்டத்தைக் கொடுக்கும்.

இன்று இலங்கையில் மிக்சர் எனும் சிற்றுண்டி வியாபாரம் நாடு முழுவதும் வெற்றி நடை போடுகின்றது. இந்த மிக்சர் கைத்தொழிலில் பிரதான உள்ளீடாக எமது நாயகன் கச்சானே உள்ளார்.

வறுத்த கச்சான், பொரித்த கச்சான், பகோடாக் கச்சான், மிக்சருடன் கலந்த கச்சான் எனக் கச்சான் சிற்றுண்டிகள் அதிகம்.

தைப்பொங்கல், கோயில் பொங்கல்கள், கொண்டாட்டப் பொங்கல்களின் போது வறுத்த கச்சானை ஓர் உள்ளீடாகப் போடுவார்கள். பொங்கல் ஓர் உச்சச் சுவையில் இருக்கும்.

அது போலக் கேசரி போன்ற சிற்றுண்டிகளிலும் கச்சான் சுவையைக் கூட்டப் பயன்படும்.

கச்சான் வியாபாரம் செய்வோர்கள் சோழன் கொட்டையைப் பொரித்து வைத்து விற்பார்கள். அத்துடன் மஞ்சள் கடலையை வறுத்து, பட்டாணிக் கடலையை வறுத்து அவற்றையும் தனித் தனியாக விற்பார்கள்.

கச்சானுக்குப் பணத்தைக் கொடுத்தால் சிலர் கச்சான், சிறியளவில் சோழம், பட்டாணி, மஞ்சள் கடலை எனச் சேர்த்துப் போட்டுத் தருவார்கள். கச்சானுடன் சேர்ந்து இவற்றைக் கொறிப்பது ஒரு தனிச் சுவை தான்.

சைவக் கோயில்களில் சிதறு தேங்காய் அடிப்பார்கள். சிதறிய ஒரு தேங்காய்த்துண்டை எடுத்து அதனைக் கடித்துக் கடித்துக் கச்சானுடன் உண்டு பாருங்கள். அந்தச் சுவை வேற லெவல். அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும்.

வறுத்த கச்சானின் தோல் நீக்கிச் சீனிப்பாணி காய்ச்சி கச்சான் அல்வா செய்யும் தொழில் ஒன்று உண்டு. பவானி கச்சான் அல்வா எனும் ஒரு தனியார் வியாபாரம் கொட்டிலில் தொடங்கிக் கோபுரம் அளவு உயர்ந்த வரலாறு உண்டு.

கச்சானுக்கு வடமராட்சிப் பிரதேசத்தில் மல்லாக் கொட்டை என ஓர் பெயர் உண்டு. கச்சான் மண்ணுக்குள் விளைந்தாலும் அதன் கோதினுள் இருக்கும் முத்தினுள் மண் இருக்காது. அதனால் மண் இல்லாக் கொட்டை என அழைத்து மருவி மல்லாக்கொட்டை என அழைக்கப்படுகிறது.

கச்சானின் தாயகம் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரம் மணிலா என அழைக்கப்படுகிறது. மணிலாவிலிருந்து வந்த கச்சான் கொட்டை மல்லாக்கொட்டை என அழைக்கப்படுகிறது.

மேற்கு ஐரோப்பிய நாடான ஸ்பெயின், தென் அமெரிக்க நாடுகளைத் தனது காலனியாக வைத்திருந்த காலத்தில் அங்கிருந்து கச்சானை ஆசிய நாடான பிலிப்பைன்சில் கொண்டு வந்து நட்டது. அங்கிருந்து தான் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்குக் கச்சான் செய்கை அறிமுகமானது என்றறொரு கருத்தும் உண்டு.

கச்சான் பயிரிடுவதற்கு உகந்தது மாரி காலம். அக்காலத்தில் மண்ணில் நடுவார்கள். கச்சான் பயிர் சிறப்பாக விளைந்து கொள்ளும். நிலத்துக்குக் கீழ் கச்சான் வித்துகள் உருவாகும். நிலத்துக்கு மேலே கச்சான் பயிர் நீண்டு வளர்ந்து மஞ்சள் நிறத்தில் பூக்கும் போது ஒரு மஞ்சள் வயல் போல அது தனி அழகாக இருக்கும்.

எமது பிரதேச விவசாயிகள் இயற்கையாக முளைத்து வரும் கச்சான் வித்தை எடுத்து திரும்பப் பயிரிட்டு பயிர்வளம் பெருக்கினார்கள். ஆனால் தற்போது மரபணு மாற்றப்பட்ட முளைக்கும் திறனற்ற கச்சான் முத்துக்கள் சந்தையில் வந்து விட்டது. உண்பதற்கு மட்டுமே பாவிக்கலாம். நட்டால் முளைக்காது.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள் எம் போன்ற மரபுசார்ந்த விவசாயத்தை உடைய நாடுகளின் பயிர்ச் செய்கையைக் கட்டுப்படுத்தும் திறனைப் பெற்றுள்ளன. அதில் எமது கச்சானும் அகப்பட்டு உள்ளது.

நவீன உயிரியல் தொழிநுட்பம் காரணமாக எமது பாரம்பரிய விவசாய விதையினங்கள் பறிபோய் முளைக்கக்கூடிய கச்சான் விதைகளைப் பல ஆயிரம் ரூபா கொடுத்து வளர்ந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் காலம் ஒன்றினுள் அகப்படப் போகிறோம்.

இது ஒரு நவீன உயிரியல் காலனித்துவமாக உலகெங்கும் பரவி வருகிறது.


சிங்கள மக்கள் கச்சானுக்கு றட்டகயு என்ற பெயரை வைத்துள்ளனர். அதாவது நாட்டுக் கயு என்னும் கருத்துப்பட பெயர் வைத்துள்ளனர்.

கச்சானின் நினைவுகள் இன்னுமின்னும் நீளமானவை. அன்பான வாசகர்களே அவற்றை மனதினுள் அசை போட்டுப் பாருங்கள்.



thabendran.v@thaiveedu.com


வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS...
சமூக உளவளம் பேணும் தொடர் - 44
Psychosocial Educational Series - 44
VASANTHAM
TAMIL WELLNESS CENTRE
07 November 2022 (Monday)
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 4:30a.m - 6:30am (Tuesday)
Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588
புலம் பெயர்ந்தோர் வாழ்வில்
பால் வார்த்தவர்கள்
Activists in the Diaspora
Pon Kulendiren
Sri-Guggan
முது தமிழரை முன்நிற்க வைத்தவர்
Advocate for the Tamil Seniors
David Rajaratnam
Retired Telecom Engineer.
Former President of Brampton
Tamil Seniors Association
இனங்களுக்கிடையே உறவை
வளர்த்தமை -
சமூக உயர்வுக்காக வாதாடியமை
Race Relations and Community Advocacy
Janaki Karthigesan Balakrishnan
M.A.Sc., P.Eng.
Retired Professional Engineer
Community and Former Political Activist
உண்மைச் சம்பவங்களைக்
கண் முன் நிறுத்திய புலமை
Excellent Skill in Weaving Real
Incidents in his Writing
T.Sivapalu, B.Ed.Hons, M.A
Retired Principal former President of Canada Tamil
Writers Association & Tholkapiyam Mantram of Canada
Join us via zoom: CLICK HERE or go to link below in the email
Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!
(647) 374-4685
VASANTHAM.CA
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
HOSTED BY
DR. PARVATHY KANTHASAMY
CONTACT:
(416) 847-4172


உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்...
KENNEDY LAW OFFICE கெனடி சட்ட அலுவலகம்
REAL ESTATE LAW
BUSINESS LAW
CRIMINAL LAW
FAMILY LAW
IMMIGRATION LAW
ODSP APPEALS
SMALL CLAIMS
WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
NOTARIZING & COMMISSIONING
W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC
கனேடிய தமிழ் வழக்கறிஞர்
Tel: 416 613 4900
2390 Eglinton Ave. East, Suite# 223 Scarborough, ON. M1K 2P5 (Kennedy & Eglinton)
Fax: 416 613 4904 E: williamkennedylaw@gmail.com

# ‘தாயகக் கனவுகள்’ நூல் வெளியீட்டு விழா


எழுத்தாளரும் செயற்பாட்டாளரும் தாய்வீடு பத்திரிகையின் ஆலோசகர் குழு உறுப்பினர்களில் ஒருவருமான அருண்மொழிவர்மன் ஈழப்போராட்டம், அது குறித்த நூல்கள், அவற்றின் வாசிப்பு அனுபவங்கள் ஆகிய பரப்புக்களில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு ‘தாயகக் கனவுகள்: பிரதிகளை முன்வைத்து ஓர் உரையாடல்’ என்கிற தலைப்பில் வடலி வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலின் வெளியீட்டு நிகழ்வு சனிக்கிழமை, ஒக்ரோபர் 08, 2022 அன்று Scarborough Village Community Centre மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வினை தீபன் சிவபாலன் தலைமேற்று ஒருங்கிணைக்க ரகுமான் ஜான், அன்பு ஆகியோர் அறிமுக உரையாற்றினார்கள்.

நிகழ்வின் இரண்டாம் அமர்வாக இடம்பெற்ற கலந்துரையாடலினை எஸ்.கே. விக்னேஸ்வரன் ஒருங்கிணைத்திருந்தார். நிகழ்வில் ஈழத்து நூல்களின் விற்பனையும் கண்காட்சியும் இடம்பெற்றிருந்தது.










படம்: ஐயா 4 U

# ஆபிரிக்கப் பழங்குடியினருடன் ஒருநாள்

- குரு அரவிந்தன்

இருண்ட கண்டம் என்று சொல்லப்பட்ட ஆபிரிக்காவில் உள்ள கெனியாவிற்குச் சென்றிருந்தேன். அங்கே உள்ள பற்றைக்காடுகள் அடர்ந்த பரந்த புல்வெளி களில் மாசிமாறா என்ற பழங்குடி இனத்தவர்கள் வசிக்கிறார்கள். மந்தை மேய்ப்பதுதான் அவர்களின் தொழில்.

நைல் நதிக்கரையில் இருந்து சுமார் 500 வருடங்களுக்குமுன் மந் தைகளோடு இப்பகுதிக்கு இடம் பெயர்ந்திருந்தார்களாம். அவர்க ளது இனத்தில் ஒரு ஆண் 12 பெண்கள் வரை திருமணம் செய்ய



லாம் என்பதை 'நேஷனல் ஜோக்கிரபி' இதழில் படித்திருந்தேன். எனவே சிங்கம், சிறுத்தை, லெப்பேட் போன்ற கொடிய மிருகங்க ளுக்கு மத்தியில் மந்தைகளோடு கடினமான வாழ்க்கை வாழும் அவர்களின் கிராமத்திற்கு சென்று, அவர்களோடு உரையாடி, அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பினேன். இயற்கைச் சூழ்நிலையில் மிருகங்களைப் பார்ப்பதற்காகத் தங்கியிருந்த முகாமில் இருந்து 'சபாரி பிக்கப்' வண்டியில் சென்றேன். கண் ணுக்கு எட்டிய தூரம்வரை, சுமார் 3 அடி தொடக்கம் 6 அடி வரை ரெட்ஓட்ஸ் புற்கள் வளர்ந்திருந்தன. அந்தப் புற்களை மேய் வதற்குத் தன்ஸானியாவில் இருந்து வரிக்குதிரைகள், எருமைகள், மான்வகைகள், காட்டுப்பன்றிகள், யானைகள் என்று ஆயிரக்க ணக்காக கூட்டம் கூட்டமாக எல்லையைக்கடந்து இடம் பெயர்ந்து இங்கு வந்திருந்தன. இந்தப் புற்களுக்குள்தான் கொடிய மிருகங் கள் மறைந்திருந்து அவற்றை வேட்டையாடுவதை அங்கே தின மும் காணமுடிந்தது. அப்போதுதான், எனது விருப்பத்தை வண்டி யோட்டியிடம் தெரிவித்தேன். அவர் ஆச்சரியமாக என்னைப் பார்த் தார்.

'அவர்களைப் பற்றி என்ன தெரியும் உங்களுக்கு, உயிரோடு உள்ள மாட்டின் இரத்தத்தை அப்படியே உறுஞ்சிக் குடிப்பவர் கள், அவர்களைப் பற்றியா கேட்கிறீர்கள்? என்று கேட்டார்.

'எப்படி அவர்கள் இருந்தாலும், இவ்வளவு தூரம் வந்தபின் அவர் களைப் பார்க்காமல் போனால் மனசு சங்கடப்படும்' என்றேன்.

'ஆண் சிங்கத்தையே தனி ஒருவராக நின்று கொல்லக்கூடியவர் கள், மிருகங்களோடு வாழும் அவர்களின் கிராமத்திற்கா போகப் போகிறீர்கள்?'

முதலில் அவர் தயங்கினாலும், நான் வற்புறுத்தவே ஒருவிதமாகச் சம்மதம் தெரிவித்து ஒரு நாள் அவர்களின் கிராமத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். முக்கியமாக அவர்களைக் கேட்காமல் படம் எடுக்கக்கூடாது என்பதையும் எனக்குச் சொல்லி வைத்தார்.

கிராமத்து எல்லையில் வண்டியை நிறுத்திவிட்டு காத்திருந்தோம். எனக்கு ஒரே பதட்டமாக இருந்தது. சற்று நேரத்தில் சிகப்பு நிறத் தில் சாரம் அணிந்து, சிகப்புத் துண்டால் உடலை மூடி, மணிமா லைகள் அணிந்த உயரமான ஒருவர், சுமார் 30 வயதிருக்கும் எங் களை நோக்கி வந்தார். அவருக்குப் பின்னால் இதேபோல உடை யணிந்து வந்த இருவர் எதற்கும் தயாராகச் சற்றுத் தூரத்தில் நின்று கொண்டார்கள். அவர்களின் இடுப்பிலே குறும்வாள் தொங் கிக் கொண்டிருந்தது, கையிலே ஈட்டி வைத்திருந்தார்கள், சிங்கத் தையே கொல்லும் ஈட்டி!

எங்களைக் கண்டதும் 'சோபா' என்று சொல்லிக் குனிந்து வணங் கித் தன்னைக் கிராமத் தலைவர் என்று அவர் அறிமுகம் செய் தார். எனக்கு அவரைப் பார்த்ததும் ஓரளவு நம்பிக்கை வந்தது.

நான் பதிலுக்குக் கைகளைக்கூப்பி 'ஜம்போ, வணக்கம்' என்றேன்.

ஜம்போ என்றால் 'ஹலோ' என்று அர்த்தம். கெனியாவில் எல்லோ ரும் சந்திக்கும் போது, இந்த வார்த்தையைப் பாவிப்பார்கள். கன டாவில் இருந்து வருவதாக என்னை அறிமுகப்படுத்தினேன். 'கன டிய நண்பனைச் சந்தித்ததில் மகிழ்ச்சி' என்று கைகுலுக்கினார். அறிமுகத்தைத் தொடர்ந்து அவரிடம் சில கேள்விகளைக் கேட் டேன்.

**▸ உங்களுடைய பெயர் என்ன?**

*எனது பெயர் எரிக், எனக்கு எங்களுடைய மாசாய் மொழி, கெனி யாவின் சாம்புறு மொழி தெரியும், மற்றும் ஆங்கிலத்தில் கதைக் கவும் முடியும்.*

**▸ ஆங்கிலம் எங்கே கற்றீர்கள்?**

*இங்கே கனடிய, அமெரிக்க உதவியுடன் எங்களுக்காக ஒரு பாட சாலை தொடங்கினார்கள், அதில் கற்றுக் கொண்டேன். அந்தவ கையில் கனேடியர்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கின்றேன்.*




▸ **கிராமத்தலைவர் என்றால் வயது முதிர்ந்தவராக இருப்பார் என்றெல்லவா நினைத்தேன்.**

*உண்மைதான், எங்கள் தந்தைதான் கிராமத் தலைவராக இருந் தார். அவர் சென்ற வருடம் இறந்துவிட்டார். அதனால் நான் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.*

▸ **உங்கள் உடைகள் எல்லாம் கடும் நிறமாக இருக் கின்றனவே ஏன்?**

*இது எங்கள் பாரம்பரிய உடை. இதைச் சூக்கா என்று சொல் வோம். மிருகங்களோடு வாழ்வதால், இப்படியான நிறங்களைக் கண்டால் அனேகமாகக் காட்டு மிருகங்கள் பயத்தில் கிட்ட வர மாட்டாது.*

▸ **இந்த மாசிமாறாக் கிராமத்தில் எத்தனை வீடுகள் இருக்கின்றன.**

*எங்க கிராமத்தில் மொத்தமாக 47 வீடுகள் இருக்கின்றன.*

▸ **இங்கே எத்தனைபேர் வசிக்கிறார்கள்?**

*குழந்தைகள் உட்பட 269 பேர் இருக்கிறார்கள்.*

▸ **உங்கள் கிராமத்தைப் பார்க்கலாமா?**

*'தாராளமாக, வாருங்கள்'*

என்று எல்லை வேலியில் காவலிருந்தவர்களிடம் ஏதோ சொல்லி விட்டு, வாசலைக் கடந்து உள்ளே அழைத்துச் சென்றார்.

நடுவிலே நீண்ட பெரிய முற்றம். அதைச் சுற்றிவர நீள்சதுரமான மண்வீடுகள் இருந்தன. வீடுகளைச் சுற்றி தடிகளாலும், குச்சிகளா லும் அமைக்கப்பட்ட நீண்ட வேலி இருந்தது. சிங்கம், சிறுத்தை, லெப்பேட், கழுதைப்புலிகள், காட்டுநாய்கள், நரிகள் போன்ற கொடிய மிருகங்களிடம் இருந்து தங்களையும், மந்தைகளையும் பாதுகாப்பதற்காக அந்த வேலி இருப்பதாகச் சொன்னார்.

எங்களை வரவேற்க முதலில் பெண்களும், அதன்பின் ஆண்க ளும் கூட்டமாக வந்து நடனமாடி வரவேற்றார்கள். நடன முடிவில் ஒவ்வொரு பெண்களாக அருகே வந்து எங்கள் வலதுகையில் தட்டி தங்கள் மொழியில் வெல்கம் சொல்லிச் சென்றார்கள்.

▸ **நடனம் ஆடும்போது ஆண்கள் துள்ளித் துள்ளி ஆடு கிறார்களே ஏன்?**

*எவ்வளவு உயரத்துக்குத் துள்ளுகிறார்களோ அவ்வளவுக்கு ஆரோக்கியமானவர்கள் என்று நாங்கள் நம்புவதால், இளம் பெண்களால் அதிகம் கவரப்படுவார்கள்.*

▸ **இங்கே திருமணங்கள் எப்படி நடைபெறுகின்றன?**

*திருமணத்தை எங்கள் மொழியில் 'எங்கியாமா' என்று சொல்லு வோம். பெண்ணின் பெற்றோர் மணமகனைத் தெரிவு செய்வார் கள். அவர்களுக்கு அன்பளிப்பாகச் சில மந்தைகளைக் கொடுப் பார்கள். சில ஆண்களுக்கு நாலைந்து மனைவிகளும் இருக்கி றார்கள்.*

▸ **உங்கள் சமூகத்தில் மணப்பெண் தானாகவே வீடு கட்டவேண்டும் என்று சொல்கிறார்களே அது உண்மையா?**

*ஆமாம், திருமணம் ஆனதும் தனிக்குடித்தனம் போவதற்குப் பெண் தானே வீடு ஒன்றைக் கட்டித் திருமணத்திற்குத் தயாராக இருப்பார்.*

▸ **இங்கே இருக்கும் இது போன்ற வீடுகளா?**

*ஆமாம், வீடுகட்ட மண், மாட்டுச்சாணி, யானைச்சாணி, சாம்பல், புல், தடிகள், குச்சிகள் போன்றவற்றைப் பாவிப்பார்கள்.*

▸ **ஏன் சுவர்களில் யன்னல் இல்லை, சிறிய துவாரம் மட்டுமே இருக்கின்றது.**

*அதுவா, கொடிய மிருகங்களிடம் இருந்து பாதுகாக்க சிறிய துவாரம் மட்டும் வைத்திருக்கிறோம். இரவில் சத்தம் கேட்டால் அந்தத் துவாரத்திற்குள்ளால் பார்த்துவிட்டுத்தான், பாதுகாப்பாய் இருந்தால் மட்டும் வெளியே வருவோம்.*

▸ **உங்கள் வீட்டுக்கு உள்ளே சென்று பார்க்கலாமா?**

*'நீங்கள் எங்களைத்தேடி வந்த விருந்தாளிகள், வாருங்கள் உள்ளே'.*

என்று கதவைத் திறந்து உள்ளே அழைத்தார்.

குனிந்து செல்ல வேண்டி இருந்தது. உள்ளே காலடி வைத்ததும் கண்ணைக் கட்டி விட்டது போல இருந்தது. ஒரே கும்மிருட்டு, செல்போனில் உள்ள வெளிச்சத்தைப் போட்டுப் பார்த்தேன்.

▸ **என்ன ஒரே இருட்டாக இருக்கிறதே?**

*எங்களுக்குப் பழகிப் போச்சு, இது படுக்கையறை, இது சமை*

*யல் செய்யுமிடம், இந்தப் பக்கம் இருப்பது யாராவது ஆண்கள் வேறு கிராமங்களில் இருந்து விருந்தினராக வந்தால் தங்குமிடம்.*

சற்று நேரத்தால் கண்கள் இருட்டுக்குப் பழகிக் கொண்டன. இலங்கையிலே கிராமப் பக்கங்களில் சாணியால் மெழுகிய மண் வீட்டுத் தரைபோல இருந்தது. ஒரு வீட்டில் பிள்ளைகள் உட்படச் சராசரி ஐந்து ஆறு பேராவது இருக்கிறார்கள். வெளியே வந்ததும்



அவரிடம் கேட்டேன்.

**▶ எப்படி அடுப்பு மூட்டுகிறீர்கள்?**

*இங்கே உள்ள இரண்டு வகையான மரங்களில் இருந்து குச்சி களை எடுத்து காயவைக்கிறோம். அதன் பின் ஒன்றை ஒன்று உரசும் போது தீப்பொறிகள் வருகின்றன. காய்ந்த புல், சாணி போன்றவற்றில் இலகுவில் பற்றிக் கொள்ளும். அதன்பின் ஊதாங்குழலால் ஊதி நெருப்பைப் பெரிதாக்குவோம்.*

அருகே நின்ற இருவரிடம் இவர் தனது மொழியில் ஏதோ சொல்ல, அவர்கள் இரண்டு குச்சிகளைக் கொண்டு வந்து காய்ந்த சாணியையும், காய்ந்த புல்லையும் வைத்து நெருப்பு மூட்டிக் காட்டினார்கள். ஊரிலே மோர் கடைவதைப் பார்த்திருப் பீர்கள், அதைப்போல, நீண்ட குச்சியை உள்ளங்கைகள் இரண் டுக்கும் இடையில் வைத்துச் சிறிது நேரம் வேகமாகச் சுற்றியதும் அதிலிருந்து பொறி பறந்தது. வரலாற்றில் படித்த ஆதிகாலமக் கள் கற்களை உரசி நெருப்பு மூட்டியது போல, மாசிமாறா கிரா மத்தில் குச்சிகளைக் கொண்டு நெருப்பு மூட்டுவதை நேரே பார்த் ததில் ஆச்சரியமாக இருந்தது.

**▶ ஏன் எங்கே பார்த்தாலும் முற்றத்தில் சாணியாக இருக்கின்றது.?**

*மந்தைகளின் பாதுகாப்பிற்காக அவற்றை இரவில் இங்கேதான் படுக்க வைக்கின்றோம். காலையில் ஆண்கள் மேய்ச்சலுக்குக் கொண்டு போய்விடுவார்கள். மந்தைகளை மேய்த்துவிட்டு மீண் டும் மாலையில் வருவார்கள்.*

**▶ இந்த மந்தைகளை மிருகங்கள் தாக்குவதுண்டா?**

*ஆமாம், எவ்வளவு பாதுகாப்பாய் வேலிகளைப் போட்டாலும், அதையெல்லாம் கடந்து உள்ளே வந்து இழுத்துச் சென்று விடும்.*

**▶ இங்குள்ள சிங்கங்களுக்கு உங்களைக் கண்டால் பயம் என்று சொல்கிறார்களே அது உண்மையா?**

*சிங்கங்களால்தான் மந்தைகளுக்கு அதிகம் ஆபத்து, அதனால் கண்ட இடத்தில் அவற்றை வேட்டையாடிவிடுவோம். சிங்கங்கள் குறைந்து கொண்டே வருவதால், இப்போது அரசாங்கம் சிங்கங் களைக் கொல்லக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார்கள்.*

**▶ இந்தப் பகுதியில் எவ்வளவு சிங்கங்கள் இருக்கின் றன என்று தெரியுமா?**

*சரியாகத் தெரியவில்லை, எங்கள் கணக்கின்படி சுமார் 2,100 சிங் கங்கள் வரை இருக்கலாம் என நினைக்கின்றேன்.*

**▶ சிங்கங்கள் உள்ளே வந்து மந்தைகளைக் கொன் றால் என்ன செய்வீர்கள்?**

*உள்ளே வந்து மந்தைகளைக் கொன்றால் அரசாங்கம் நட்டஈடு தருவார்கள், வெளியே உள்ள புல்தரையில் மந்தைகள் மேயும் போது கொன்றால் நட்டஈடு கிடையாது.*

**▶ ஏன்?**

*அது அவர்களின், அதாவது அரசாங்கத்தின் நிலமாம்!*

**▶ அரசாங்கத்தின் சட்ட திட்டங்களால் நீங்கள் பாதிக்கப் பட்டிருக்கிறீர்களா?**

*நிறையவே பாதிக்கப்பட்டிருக்கின்றோம். எங்கள் மேய்ச்சல் நிலங் கள் எல்லாம் பறிபோய்விட்டன. சுதந்திரமாகத் திரிந்த நாங்கள் இப்போது குறுகிய வட்டத்திற்குள் ஒடுக்கப்பட்டிருக்கின்றோம்.*

**▶ இந்தப் பிள்ளைகளுக்குக் கல்வி அறிவூட்ட வேண் டும் என்ற நோக்கம் உங்களுக்கு இருக்கிறதா?**

*என்னுடைய தந்தை அப்படி நினைத்ததால்தான் நான் கல்வி அறிவு பெற்றேன். அதனால் இன்று உங்களோடு கதைக்க முடி கின்றது. இல்லாவிட்டால் தொடர்பு கொள்ள முடியாமல் வேறுபட் டிருப்போம். அதேபோல இந்தப் பிள்ளைகளும் கல்வி அறிவு பெறவேண்டும் என்று முடிந்தளவு முயற்சி செய்கின்றேன்.*

**▶ ஆண்கள் மட்டும்தானா? பெண்களின் கல்வி பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

*சில பெண் குழந்தைகள் படிக்க வந்தார்கள். எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் வயதுக்கு வந்ததும் அதாவது 15 வயதான தும் பெண்களுக்குத் திருமணம் செய்து கொடுத்து விடுகிறார்கள். அதன் பின் குடும்பப் பொறுப்பு காரணமாக அவர்களால் படிக்க முடிவதில்லை.*

**▶ உங்கள் சமூகத்தில் ஆண்களுக்கும், பெண்களுக் கும் சுன்னத்து செய்வதாகக் குறிப்பிட்டிருந்தார்கள், இப்பொழுதும் அது நடைமுறையில் இருக்கிறதா?**

*பெண்கள் பருவம் அடைந்தபின் சுன்னத்து செய்வார்கள், ஆனால் இப்போதுள்ள இளம் தலைமுறையினரில் சில பெண் கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் தவிர்க்கிறார்கள். ஆண்கள் இப்பொழுதும் சுன்னத்து செய்கிறார்கள். எங்கள் மொழியில் இதை 'எமுரட்டா' என்று சொல்லுவோம்.*

**▶ உங்கள் சாப்பாடு என்ன?**

*இறைச்சி, பால், சோளம் போன்ற மோனோனோ என்கிற யுகலி, அப்புறம் மரக்கறிகள், தேன் போன்றவற்றைச் சாப்பிடுவோம்.*

**▶ மாட்டின் கழுத்திலே அம்பால் துவாரம் செய்து இரத் தத்தை எடுத்து நீங்கள் குடிப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிச் செய்தால் மாடு இறந்து போகாதா?**

*இல்லை. விசேட தினங்களில் மட்டும் மாட்டில் இருந்து இரத் தத்தை எடுத்துப் பாலோடு கலந்து பரிமாறுவோம். இது ஒரு பாரம்பரிய நிகழ்வு. நன்கு பழக்கப்பட்டவர்களால், மாட்டிற்கு எந் தப் பாதிப்பும் இல்லாமல் அப்படி எடுக்க முடியும்.*

பல விடயங்கள் பற்றி உரையாடிவிட்டு, அவர்களுடைய பாடசா லைக்கு அன்பளிப்புக் கொடுத்தபோது, நன்றியுடன் அதை ஏற்றுக் கொண்டார்கள். எல்லோருக்கும் நன்றி சொல்லி விடை- பெற்றோம். வண்டிவரை வந்து மகிழ்வோடு விடைகொடுத்து அனுப்பிவைத் தார்கள். அவர்களைத் தேடிச் சென்று சந்தித்தது, மறக்க முடியாத அனுபவம் மட்டுமல்ல, தாய் மொழியோடு, வேற்று மொழிகளையும் அறிந்திருப்பது எவ்வளவு அவசியம் என்பதையும் புரிந்து கொண்டேன்.



kuruaravindan@thaiveedu.com



# புதினங்கள்... திரைப்படங்கள்...

- ஓவியர் ஜீவா

பொன்னியின் செல்வன் நாவல் தற்போது திரைப்படமாக வெளிவந்திருக்கிறது. ஒரு நாவல் திரைப்படமாக வெளிவரும்போது அதன் சாரமும் முழுமையும் திரைப்படத்தில் வெளிப்படுமா என்ற விவாதம் நீண்ட நாட்களாக நடைபெற்று வருகிறது. எழுத்துப் படைப்பின் ரசிகர்களுக்கு திருப்தியே ஏற்படாது என்பது நாம் கண்ட அனுபவம். திரைப்படங்கள் தோன்றிய காலத்திலிருந்தே, புதினங்களை திரைக்கதையாக்கி படமெடுப்பது நடந்துகொண்டு தான் இருக்கிறது. ராமாயணம், மஹாபாரதம், பைபிள் போன்ற காவியங்கள், ஏராளமான திரைப்படங்களுக்கு இன்றும் தீனியை தந்துகொண்டுதான் இருக்கின்றன. டால்ஸ்டாய், சார்லஸ் டிக்கென்ஸ் போன்ற பழங்கால எழுத்தாளர்கள் முதல் அலிஸ்டர் மெக்ளீன், ஜெப்ரி ஆர்ச்சர், 'ஜேம்ஸ் பாண்டை' படைத்த இயான் பிளெமிங், 'லார்ட் ஆப் தி ரிங்ஸ்' எழுதிய ஜே.ஆர்.ஆர். டோல்கியென், 'ஹாரி பாட்டர். எழுதிய ஜே.கே.ரௌலிங் வரை எழுத்தாளர்களின் படைப்புகள் பல திரைப்படங்களுக்கு ஆதாரமாக திகழ்கின்றன. எனது பள்ளிப்பருவத்தில் 'அங்கிள் டாம்ஸ் கேபின்' படித்துவிட்டு, திரைப்படத்தையும் பார்த்து மகிழ்ந்தது இன்றும் நினைவிருக்கிறது. இத்தனைக்கும் மகிழ வேண்டிய கதைக்கரு அல்ல. அமெரிக்காவில் ஆப்ரிக்க அடிமைகள் நடத்தப்பட்ட விதம் குறித்த கதை!

இந்திய திரைப்படங்களை பொறுத்தவரை, திரைப்படங்கள் தோன்றிய காலத்தில் புராணக்கதைகளையே திரைப்படம் ஆக்கியிருக்கின்றனர். தாதா சாகேப் பால்கேவின் முதல் திரைப்படம் 'அரிச்சந்திரா'. மெல்ல மெல்ல சமூக திரைப்படங்கள் உருவாக்க முயலும்போது, இலக்கியப்படைப்புக்களை பயன்படுத்த துவங்கினர். நாடக மேடையும் அதே காலகட்டத்தில்தான் சமூக கதைகளை மேடையேற்றத் துவங்கியது. உலக அரங்கில் புகழ் பெற்ற சத்யஜித் ராய், விபூதிபூஷண் பந்த்யோபாத்யாய எழுதிய அற்புத படைப்பான 'பதேர் பாஞ்சாலி' நாவலில் இருந்துதான் தன் கலைப்பயணத்தை துவங்கினார். பதேர் பாஞ்சாலி, மூன்று பாகங்களாக வெளிவந்தது. பதேர் பாஞ்சாலி, அபராஜிதோ, அபூர் சன்சார் என்ற திரைப்படக்காவியங்களாக உருப்பெற்றது. ராயே ஒரு சிறந்த எழுத்தாளர். பல சிறுகதைகளையும் புதினங்களை எழுதியவர். ஆனாலும் பெரும்பாலான தன் திரைப்படங்களுக்கு வேறு எழுத்தாளர்களின் படைப்புக்களையும் பயன்படுத்திக்கொண்டார். ட்ரைலாஜி வரிசையில் ராயும் அவருடைய சமகாலத்திய இயக்குனர் மிருனாள் சென்னும் ஆளுக்கு மூன்று கல்கத்தா திரைப்படங்களை இயக்கினர். அவற்றில் சத்யஜித் ராயின் மூன்று திரைப்படங்களும், வேறு பிரபல வங்கமொழி எழுத்தாளர்களின் படைப்புதான். உருது, ஹிந்தி, ஆங்கிலம் மூன்று மொழிகளிலும் எழுதிய கே.ஏ. அப்பாஸ் தன் படைப்புக்களையே திரைப்படங்களாக இயக்கியவர். ராஜ்கபூரின் பெரும்பாலான திரைப்படங்களுக்கு திரைக்கதை வசனமும் இவரே என்பது அவருடைய இன்னொரு பக்கம்.

பிரேம்சந்தின் பல படைப்புகள் படமாயிருக்கின்றன. சத்யஜித் ராய் இயக்கத்தில் 'சத்கதி' மற்றும் 'சத்ரஞ்ச் கே கிலாரி', மிருணாள் சென் இயக்கத்தில் தெலுங்கில் 'ஒக ஊரி கதா' மிக புகழ் பெற்றவை. ஹிந்தி மொழியிலும் நிறைய திரைப்படங்கள் வந்தி




ருக்கின்றன. 1938லேயே தமிழில் பிரேம்சந்தின் படைப்பு வெளிவந் திருக்கிறது என்பது பலர் அறியாதது. கே. சுப்பிரமணியம் இயக் கத்தில் 'சேவாசதனம்' படம்தான் அது!

கன்னடத்தில் சோமன துடி, ஹம்ச கீதே, சமஸ்காரா, கிருஷ்ணா ஹாலனஹள்ளி எழுதிய 'காடு' மற்றும் 'பரசங்கட கெண்டதிம்மா' (தமிழில் ரோசாப்பூ ரவிக்கைக்காரி) போன்ற திரைப்படங்கள் புதி னங்களில் இருந்து உருவாக்கப்பட்டவைதான். மலையாளத்தை எடுத்துக்கொண்டால், தகழி சிவசங்கரன் பிள்ளை எழுதிய 'செம்-மீன்' அனைவருக்கும் நினைவு வரும். கடற்புறத்து காதலை கரு வாக கொண்ட ஒரு சோகக்கதை. அதை ராமு காரியத் குழுவினர்



ஒரு மறக்கமுடியாத திரைப்பட அனுபவமாக்கித் தந்தனர். சலீல் சவுத்ரி இசையமைத்த அற்புத பாடல்கள், மார்கஸ் பார்ட்லேயின் ஒளிப்பதிவு, ரிஷிகேஷ் முகர்ஜியின் படத்தொகுப்பு, ராமு காரியத் தின் இயக்கம், சத்யன், ஷீலா, மது ஆகியோரின் நடிப்பு அனைத் தும் சேர்த்து இந்த திரைப்படத்தை பெரும் உயரத்துக்கு கொண்டு சென்றன. தகழியின் 'அனுபவங்கள் பாளிச்சகல்லு', 'ஏணிப்படிகள்' போன்ற புதினங்கள் படமாயின. அவருடைய 'கயறு' பெரும்புதினம் பல பாகங்களாக பிரித்து வெவ்வேறு திரைப்படங்களாக வெளிவந்திருக்கின்றன. மலையாளத்தின் புகழ் பெற்ற திரைக்கதையாசிரியர்களான எம்.டி. வாசுதேவன் நாயரும், பத்மராஜனும் ஏற்கனவே நாவல்கள், சிறுகதைகள் எழுதி புகழ் பெற்றவர்கள். இயக்குநர்களாகி தங்கள் கதைகளையே இயக்கிய வர்களும் கூட. நடிகரும் இயக்குனருமான மதுபால் தானே ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளராக இருந்தபோதும், பிற எழுத்தாளர்க ளின் படைப்புக்களை தான் இயக்கிய திரைப்படங்களுக்கு பயன் படுத்தி இருக்கிறார். அவற்றில் ஒன்று ஜெயமோகன் எழுதிய 'ஒழி-முறி'.

ஐம்பதுகளில், வடுவூர் துரைசாமி ஐயங்கார் எழுதிய 'திகம்பர சாமியார்' தமிழில் திரைப்படமான புதினங்களில் ஒன்று. அண் ணாதுரை எழுதிய 'ரங்கோன் ராதா', நாமக்கல் கவிஞர் எழுதிய 'மலைக்கள்ளன்' இந்த இரண்டு திரைப்படங்களுக்கும் திரைக் கதை வசனம் எழுதியவர் இன்னொரு கதாசிரியரான மு. கருணா-நிதி. இது போல தமிழில் நிறைய முயற்சிகள் நடந்திருக்கின்றன. இவற்றில் மாபெரும் வெற்றி பெற்ற திரைப்படம் தில்லானா மோக னாம்பாள். கொத்தமங்கலம் சுப்பு ஆனந்த விகடனில் எழுதிய தொடர்கதையை அருமையான திரைக்கதை அமைத்து இயக்கி னார் ஏ.பி. நாகராஜன். வெகு பொருத்தமான நடிகர்கள், அற்புத மான இசையமைப்பு அனைத்தும் இன்றும் இந்த திரைப்படத்தை ரசிக்க வைக்கின்றன. இதன் வெற்றி இதே கூட்டணியில் அதே எழுத்தாளர் எழுதிய ராவ்பகதூர் சிங்காரம் புதினத்தை 'விளை யாட்டுப் பிள்ளை' என்ற பெயரில் எடுக்கத் தூண்டியது. தில்லா னாவின் மந்திரம் இதில் பலிக்கவில்லை! ஏற்கனவே அகிலன் எழு திய 'பாவை விளக்கு', 'குலமகள் ராதை' (வாழ்வு எங்கே) போன்ற கதைகளுக்கு திரைக்கதை வசனம் எழுதி அனுபவப்பட்டவர் ஏ.பி.என்.

கல்கி எழுதிய சில புதினங்கள் படமாகியிருக்கின்றன. கே. சுப் பிரமணியம் இயக்கிய 'தியாக பூமி, சிவாஜி நடித்த 'கள்வனின் காதலி', ஜெமினி நடித்த 'பார்த்திபன் கனவு' தொடங்கி இப்போது அவருடைய மிகப்புகழ் பெற்ற படைப்பான 'பொன்னியின் செல் வன்' வரை வந்தாயிற்று. ஜெயகாந்தன் தமிழின் மாபெரும் எழுத் தாளர். அவருக்கும் திரைப்படம் இயக்கும் வேடிக்கை வந்தது. ஏற்கனவே 'பாதை தெரியுது பார்' படத்தில் பணி புரிந்த அனுப வம்... அவரது முதல் திரைப்படமாக 'உன்னைப்போல் ஒருவன்' வெளிவந்தது. காந்திமதியும் பிரபாகரும் முக்கிய வேடங்களில் நடித்திருந்தனர். பொழுதுபோக்கு அம்சங்கள் இல்லாததால் தமிழ் மக்கள் இந்த திரைப்படத்தை புறக்கணித்தனர். அடுத்து 'யாருக் காக அழுதான்' குறுநாவலை நாகேஷை திருட்டு முழி ஜோசப் வேடத்தில் நடிக்க வைத்து இயக்கினார். அவரது படைப்புக்களை வேறு இயக்குநர்கள் இயக்கியபோது சில பெரும் வரவேற்பை

பெற்றன. கே. விஜயன் இயக்கிய 'காவல் தெய்வம், பீமசிங் இயக்கிய 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்', 'கருணை உள்ளம்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'பாரிசுக்கு போ' மலையாளத்தில் மம்முட்டி நடிக்க 'சரோ-வரம்' என்ற பெயரில் வெளியானது. பி. லெனின் இயக்கிய 'ஊருக்கு நூறு பேர்' யாருக்கும் நினைவில்லா திரைப்படம் ஆனது.

மூத்தறிஞர் என்று அழைக்கப்பட்ட ராஜாஜி எழுதிய 'திக்கற்ற பார்வதி' சிங்கீதம் ஸ்ரீனிவாசராவ் இயக்கத்தில் தமிழில் வெளியானது. வெகுசிலரே இந்த படத்தை பார்த்திருப்பார்கள்.

சுஜாதாவின் பல புதினங்கள் படமானாலும் வெகு சிலவே வெற்றி பெற்றன. 'கரையெல்லாம் செண்பகப்பூ', 'பிரியா', 'காயத்ரி' போன்ற திரைப்படங்கள் கொஞ்சம் பேசப்பட்டவை. ராஜேஷ்குமார், ராஜேந்திரகுமார் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகள் சில திரையை கண்டிருக்கின்றன. ஹிட்ச்காக் இயக்கிய சைக்கோ படத்தின் உள்ளூர் பிரதியான 'மூடுபனி' டைட்டிலில் கதை ராஜேந்திரகுமார் என்று இருந்தது. நீல பத்மநாபன் எழுதிய 'தலைமுறைகள்' கௌதமன் இயக்கத்தில் 'மகிழ்ச்சி' என்ற பெய



ரில் வெளிவந்தது. தலைப்பு முதல் நடிகர் தேர்வு வரை பல தவறுகள் இருந்ததால் யாருக்கும் மகிழ்ச்சி தராமல் போய்விட்டது.

சாண்டில்யன் ஏற்கனவே திரைத்துறையில் போர்ட்டர் கந்தன் போன்ற திரைப்படங்களில் பணி புரிந்த நிலையில் இருந்தும் அவரது புதினங்கள் திரைக்கு வந்தது போல நான் கேள்விப்படவில்லை. 'ஜீவபூமி' என்ற அவரது புதினம் சிவாஜி நடிப்பில் பாதியில் முடங்கிப்போனது. மகரிஷியின் பல கதைகள் திரைப்படம் ஆயின.

கே.எஸ். கோபாலகிருஷ்ணன் இயக்கிய 'என்னதான் முடிவு' மிகவும் சிறப்பான ஒன்றாகும். மணியன் எழுதிய. 'சொல்லத்தான் நினைக்கிறேன்', 'இதயவீணை' போன்ற திரைப்படங்கள் அனைவருக்கும் நினைவிருக்கும்! தி. ஜானகிராமனின் 'மோகமுள்' ஞான ராஜசேகரனின் சிறப்பான இயக்கத்தில், இளையராஜாவின் அற்புதமான பாடல்களோடு வந்திருந்தாலும் பொதுமக்களை ஈர்க்கவில்லை.

மகேந்திரன் இயக்கிய முதல் திரைப்படம் 'முள்ளும் மலரும்' உமாச்சந்திரனின் நாவலின் திரையாக்கம். நிறைய மாற்றங்கள் செய்து, புதிய வடிவம் தந்தார் மகேந்திரன். அடுத்து வெளிவந்த 'உதிரிப்பூக்கள்' புதுமைப்பித்தனின் 'சிற்றன்னை'யை தழுவியது. ஆனால், மூலக்கதைக்கும் திரைப்படத்திற்கும் சம்பந்தம் குறைவு என்று கதையை படித்தவர்கள் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன். தமிழில் வெளிவந்த சிறந்த படங்களில் உதிரிப்பூக்களும் ஒன்று. பொன்னீலனின் 'உறவுகள்' கதையை 'பூட்டாத பூட்டுக்கள்' என்ற பெயரில் எடுத்தார். அவ்வளவு சிறப்பாக பேசப்படவில்லை. பின்னர் அவர் இயக்கிய படங்களில் சில, எழுத்தாளர்களின் கதைகள்!

நாஞ்சில் நாடனின் 'தலைகீழ் விகிதங்கள்' தங்கர் பச்சானின் இயக்கத்தில் 'சொல்ல மறந்த கதை' ஆனது. சமீபத்தில் வெளிவந்த 'மண்டேலா' என்ற திரைப்படமும் இவர் எழுத்திலிருந்து எடுத்ததுதான். இயக்குனர் பாலா நாஞ்சில் நாடன் மற்றும் ஜெய-மோகன் போன்றவர்களின் கதைகளை படமாக்கியிருக்கிறார். வெற்றிமாறன் ஆட்டோ சந்திரன் எழுதிய 'லாக் அப்' கதையை 'விசாரணை' என்றும் பூமணி எழுதிய 'வெக்கை' கதையை 'அசுரன்' என்றும் படமாக்கினார். இப்படி சொல்லிக்கொண்டே போக பல திரைப்படங்கள் இருக்கின்றன.

பல நூற்றாண்டு சரித்திர பின்னணி கொண்ட கதைகள் ஏனோ புராணப்படங்களை போல அதிகமாக தமிழில் தயாரிக்கப்படவில்லை. வீரபாண்டிய கட்டபொம்மன், ராஜராஜசோழன் என்று நாடகமேடையிலிருந்து சில திரைக்கதைகள் உருவாக்கப்பட்டாலும் புதினங்களில் இருந்து உருவாக்கப்பட்ட புகழ் பெற்ற ஒரு திரைப்படம் எம்ஜியாரின் 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்'. அகிலன் எழுதிய 'கயல்விழி' என்ற நாவலில் இருந்து உருவாக்கப்பட்டது. இதற்கு பின்னரும் 'உளியின் ஓசை', 'பொன்னர் சங்-கர்' என்ற பெயரில் சில திரைப்படங்கள் வந்தன. இவற்றால் எந்த பயனும் இல்லாமல் போனது.

கல்கி எழுதிய 'பொன்னியின் செல்வன்' பலப்பல பதிப்புக்களை கண்ட நூல். இன்றும் பல்வேறு பதிப்பகங்கள் வெளியிட்டு வருகின்றன. அதன் கதை சுருக்கமும் ஆடியோ பதிவுகளும், காமிக்ஸ் வடிவங்களும் மிகவும் பிரபலமாக திகழ்கின்றன. இன்றும் இந்த புதினத்தை ஆராதிப்பவர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர். எம்ஜியார் முதல் பலர் இதை திரைப்படமாக்க முயன்று பின் வாங்கியிருக்கிறார்கள். இயக்குனர் மகேந்திரன், எம்ஜியாருக்காக இதன் திரைக்கதையை தயாரித்திருக்கிறார். இத்தனை வருடங்களுக்கு பிறகு இப்போதுதான் இந்தக் கதை திரையை கண்டிருக்கிறது. ஏற்கனவே இதை மேடையேற்றிய நடிகர் இளங்கோ குமார-வேலு, இயக்குனர் மணிரத்னம், எழுத்தாளர் ஜெயமோகன் மூவரும் இணைந்து இதன் திரைக்கதையை எழுதியிருக்கின்றனர். மிகப்பெரிய பட்ஜெட்டில் உருவான இந்த திரைப்படம் வெளியிட்ட சில நாட்களிலேயே பெரும் வசூலை உலகெங்கும் வாரியிருக்கிறது. இதன் வெற்றி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருப்பது என்பது உண்மை.

முதல் பத்தியில் சொன்னது போல இந்த புதினத்தின் ரசிகர்களுக்கு கதையில் இருந்தது போல உடையலங்காரம் இல்லை, தலையலங்காரம் இல்லை, நடிகர் பொருத்தம் இல்லை, கதையின் செழுமை படத்தில் இல்லை என்பது போல பல குறைகள் இருக்கும். இதற்கு முன் வந்த புதினத்திலிருந்து திரைப்படமான வடிவங்களுக்கு இத்தகைய குறைகள் சொல்லப்பட்டது இல்லையா என்றால் மிகக்குறைவு. ஏனென்றால் மக்கள் தொகையில் கதைகளை படிப்பவர்கள் ஒரு சிறிய சதவிகிதம் மட்டுமே. இது ஆர்.கே. நாராயணின் 'கைடு' கதைக்கும் நடந்தது, லட்சுமி எழுதிய 'பெண் மனம்' (திரையில் இருவர் உள்ளம்)கதைக்கும் நடந்தது. தில்லானா மோகனாம்பாள் கதையில் நாயகன் இன்னும் இளைஞன், வைத்தி இப்படி இல்லை என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள். திரைப்படம் என்பது ஒரு காட்சி வடிவம் என்பதையும் அது ஒரு தனி கலை வடிவம் என்று புரிந்தவர்களுக்கு இந்த குழப்பங்கள் எல்லாம் இல்லை! காட்சி வடிவமாக பொன்னியின் செல்வன் முதல் பாகத்தில் உடையலங்காரம், தமிழ் சூழலற்ற அரங்க அமைப்புகள், அழுத்தமுள்ள ஒரு கதாபாத்திரம் கூட இல்லாமை போன்ற பல குழப்பங்கள் இருக்கின்றன. ஆனாலும் இந்த பெருமுயற்சியை எடுத்த மணிரத்னம் குழுவினர் பாராட்டுக்குரியவர்கள்!



jeeva@thaiveedu.com



# காலனை வென்ற கலைஞன் ஓவியர் ஆசை இராசையா

- ஸ்ரீ. காயத்ரி இராசையா

பொதுவாகக் கலைஞர்கள் மறைவதில்லை, அவர்களது படைப் புக்களூடாக நம்மி-டையே என்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் எனக் கூறுவது பொருத்தமானதாகும். அந்த வகையில் தன் வாழ்நாளின் பெரும்பகுதியை கலைக்காகவே அர்ப்பணித்து, ஓவியக் கலை வரலாற்றில் தனக்கென்று ஒரு அழிக்க முடியாத இடத்தைப் பதித்துவிட்டுச் சென்றவர் ஓவியர் ஆசை இராசையா அவர்கள்.

ஓவியர் அவர்களது துறைசார்ந்த சாதனைகள், நுட்பங்கள், அவருக்கே உரிய தனித்துவமான பாணி ஆகியன பற்றி பலர், பல தடவைகள் பத்திரிகை மூலமாகவும், நேர்காணல் மூலமாகவும் இன்றும் பகிர்ந்தவண்ணமே உள்ளனர். ஓவியர் ஆசை இராசையா அவர்கள் ஓவியக்கலை உலகில் நிரப்ப முடியாத நீண்ட ஒரு இடைவெளியினை விட்டுச் சென்றுள்ளார் என பல கலைஞர்கள் வாயிலாக கூறப்பட்டு வருவது நாம் அறிந்ததே. இதுவே இக் கலை சாம்ராஜ்யத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி.

அவர் வாழ்ந்த காலத்தில் பெற்ற கௌரவங்கள், விருதுகள் ஏராளம். அவர் வாழும்போதே அக்கௌரவத்தினை வழங்கி அவரைக் கொண்டாடிய இக்கலை உலகிற்கு அவரது மகளாக எனது முதற் கண் நன்றி.

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று' என்ற திருவள்ளுவரின் வாக்குக்கமைய ஓவியர் ஆசை இராசையா அவர்களது மகளாக, பல நல்லுள்ளங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அப்பாவின் மறைவிற்குப் பின்னர் என்னைப் பலர் பல தடவைகள் கேட்டிருப்பார்கள், அப்பாவுடனான உங்கள் அனுபவத்தினை எழுதத் தொடங்கலாமே என்று. எழுதுவதற்கு நிறையவே உண்டென்றாலும், அதனை எழுதுவதற்கான மன வலிமை என்னிடம் இல்லை. எழுதத் தொடங்கலாம் என ஆரம்பித்த போதும்கூட எனது தொண்டை கனத்து கண்களினால் வழியும் கண்ணீரை கட்டுப்படுத்தும் மன உறுதி இன்னும் எனக்கு வரவில்லை. இனியும் இக்கவலைகளை மட்டும் சுமந்திருப்பேனானால், அவருக்கு என்னால் செய்ய வேண்டியுள்ள கடமைகளிலிருந்து தவறிவிடுவேன் என்பதனாலும் இப்பதிவினை வெளியிட விளைந்துள்ளேன்.

கடந்த ஒக்ரோபர் 21, 2022 அன்று என் தந்தைக்கு கிடைத்துள்ள ஒரு கௌரவத்தினை இங்கு பதிவுசெய்வதில் பெருமை கொள்கின்றேன். இவ்வருடம் நடைபெற்ற யாழ் மாவட்ட கலாச்சார விழாவில் அரங்க நாயகனாக 'ஓவியர் ஆசை இராசையா'வின் பெயரி



னைத் தெரிவு செய்தமையையிட்டு மிகவும் மகிழ்ச்சி கொள்கின்றேன். இத்தெரிவுக்கு ஓவியரின் பெயரினை முன்மொழிந்த கலாச்சார உத்தியோகத்தர் திரு. அ. சிவஞானசீலன் அவர்களுக்கும், கலாச்சார உத்தியோகத்தர். திருமதி. செ. தக்ஷாயினி அவர்களுக்கும், இக்கருத்தினை ஏற்றுக்கொண்டு ஆமோதித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மற்றும் கலாச்சாரப் பேரவை உறுப்பினர்களுக்கும் குறிப்பாக அரங்க உரை நிகழ்த்திய என் தந்தையின் ஆத்ம நண்பர்களில் ஒருவரான கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களுக்கும் என் தந்தையின் சார்பில் மனமார்ந்த நன்றிகள். இவ்விழாவிற்கு வருகை தந்திருந்த அனைத்து கலை உள்ளங்களும் இன்றைய தினம் ஓவியரை மீள்நினைத்து கண்கள் பனித்திருந்தார்கள்.

மேலும், எனது தந்தையின் இறப்பின் பின் அவரது 'விம்பம்' நூலுக்கு 'சுயநானாவித விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. உண்மையில் அந்நூலினை அவர் உயிருடன் இருக்கும்போது அவருக்கே தெரியாமல் விருதுத்தெரிவுக்கு சமர்ப்பித்த காப்பியக்கோ கவிஞர். ஜின்னா ஷெரிப்புத்தீன் அவர்களுக்கு நான் என்றும் நன்றியுடையேன். இதற்கப்பால் கவிஞருக்கும் ஓவியருக்கும் இடையில் இருந்த அண்ணன் - தம்பி உறவு இன்றைக்கும் தொடர்வது நாம் பெற்ற பேறே.

'ஒரு கலைஞர் என்பவர் அவரது படைப்பாற்றலை (Creativity) தனது கலைகளினூடாக வெளிப்படுத்துவதுடன் அவருக்கேயான பாணியினை (Individual Style) உருவாக்க வேண்டும்' என அவர் அடிக்கடி கூறிக்கொள்வது வழக்கம். அதாவது, எந்தவொரு கலையாயினும் காலப்போக்கில் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்தல் வேண்டும். வெறுமனே குருவிடம் கற்றதை கிளிப்பிள்ளை போன்று ஒப்பிப்பது ஓர் உண்மையான கலைஞர் அல்ல என அவர் கற்பிக்கும் மாணவர்களுக்கும் சரி, மகளாகிய எனக்கும் சரி அறிவுரை கூறுவதுண்டு.

உண்மையில் ஓவியக்கலையினைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தார் என்பதற்கு அவரது படைப்புக்கள் இன்றும் உணர்த்திய வண்ணம் உள்ளன. புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் நம்மவர்கள் சிலர் தமது விடுமுறையில் இலங்கைக்கு வருவதுண்டு. அவர்கள் எமது இல்லத்துக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் என் தந்தையிடம் 'இன்னும் நீங்கள் வரைகிறீர்களா? என அறிவிலித்தனமான கேள்வியைக் கேட்பார்கள். அதற்கு என் தந்தை 'என்ன கேள்வி இது? ஓவியம் வரையவில்லையென்றால் நான் இறந்திருப்பேன் என நினையுங்கள்' என நியாயமான கோபத்துடன் பதிலளிப்பார்.

அவரது ஓவியங்களில் மட்டுமல்ல, கவிதை வரிகளிலும் எனக்கு ஈர்ப்பு அதிகம். அந்த வகையில் எனது ஆழ்மனது வரை தாக்கத்தை ஏற்படுத்திய இந்த உணர்வுபூர்வமான வரிகள் எத்தனை தடவை வாசித்தாலும் புதிதாக வாசிப்பது போன்ற உணர்வே வருவதுண்டு.

எனது தாயார் தனது பிரசவத்திற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அச்சந்தர்ப்பத்தினை அவர் பின்வரும் கவிதை வரியில் குறிப்பிட்டிருந்தார்.

***விதி***
***ஏழாண்டுகள் கழித்து***
***என் மனைவி கருவுற்றாள்.***
***ஆனால்,***
***பிறப்பது,***
***ஆணா? பெண்ணா?***
***எனக்குள் ஒரு ஏக்கம்.***

***பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடியாத பெண்***
***மலடி என ஒதுக்கி வைக்கப்படுவதும்,***
***கணவனை இழந்த பெண்ணை விதவையென ஒதுக்குவதும்,***
***காலங்காலமாக அரங்கேறும் நடத்தைக் கோலங்கள்.***

***சீதனக் கொடுமையால் எத்தனை பெண்களின் வாழ்வு***
***கேள்விக்குறியாகிவிட்டன.***

***'ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டி'***
***மாதச் சம்பளத்தை நம்பி வாழும் ஒரு கலைஞன்***
***ஒரு பெண்ணுக்காயினும் சீதனம் சேர்க்கமுடியுமா?***

***பலதையும் எண்ணிக் கலங்கியது மனம்.***
***ஆயினும்,***
***கர்ப்பிணிப் பெண்ணானவள்***
***இருப்பது, நடப்பது, படுப்பது இவற்றை வைத்தே***
***அவள் கருவில் சுமப்பது ஆணா பெண்ணா?***
***எனக் கூறும் ஐதீகம் கூறியது -***
***என் மனைவி சுமப்பது ஆண் குழந்தையே யென்று.***

***சேதி கேட்டு 'யாழ்தேவி' யில் புறப்பட்டவன்***
***அதிகாலை ஐந்து மணியளவில்***
***யாழ் மண்ணில்,***
***மகப்பேற்று விடுதியில் மனைவி.***

***சத்திரசிகிச்சை வலியிலும்***
***முகத்தில் ஒரு பூரிப்பு.***
***மனம் இலேசாகியது.***
***ஆண்டவனுக்கு நன்றி.***

***ஆனாலும்,***
***தொட்டிலில் துயிலும் குழந்தையை***
***எட்டிப் பார்த்தவனை***
***பெண் குழந்தை வடிவில்***
***கைகொட்டிச் சிரித்ததாம் விதி.***

ஆண் வாரிசை எதிர்பார்த்த ஒரு தந்தையின் ஏக்கம் பெண் வாரிசைக் கண்டதும் தனது உயிர் மகள் தானெனக் கொண்டாடும் அளவிற்கு மாறியது. ஒவ்வொரு நொடியும் எனக்காகவே வாழ்ந்தார். எனது தந்தை கொழும்பு றோயல் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்ததன் காரணமாக நான் பிறந்த பின் எனது அம்மாவும் நானும் எங்களது ஏனைய குடும்ப உறுப்பினர்களுடனேயே ஊரிலேயே வசிக்க வேண்டி இருந்தது. எனது மழலைப் பருவ புகைப்படங்கள் என் அத்தைமார்களால் அப்பாவிற்கு அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். அப்புகைப்படத்திற்குப் பின்னால் கவிதை வடிவில் தனது பாசத்தை இவ்வாறு வெளிப்படுத்தியிருப்பார். 'புள்ளிச் சட்டையழகா? இந்தப் புள்ளிமான் கன்றழகா?,




'வீணை இசை பழகட்டாம் இந்த வேலையற்ற அப்பாவும், வீணையின் தந்தி இந்த மென்விரலை வெட்டாதோ?' இவ்வரிகளெல்லாம் எனது அப்பாவின் வாயாலே நான் நிறைய தடவைகள் கேட்டதுண்டு.

அவரைக் கலைஞனாக பார்த்து வியந்த பலர் அவரது வாழ்வியல் முறைமையினையும் பார்த்து ஆச்சரியப்பட்டதுண்டு. 'கண் பார்த்தால் கை செய்தல் வேண்டும்' என எனது தந்தையின் தாயார் கூறுவதற்கமைவாக, எந்த ஒரு செயற்பாட்டினையும் நேர்த்தியாகச் செய்து முடிக்கும் ஆற்றல் அவரிடம் இருந்தது. புகைப்படத்துறையில் இயல்பாகவே ஈடுபாடு உண்டென்பதால் அவரது புகைப்படங்கள் பல போட்டிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டு பரிசில்களைப் பெற்றுக்கொண்டது. யோகக்கலையினை முறைப்படி பயின்றதோடு மட்டுமல்லாமல் அது தொடர்பான பல நூல்களைக் கற்றதுடன்



தினமும் யோகப் பயிற்சியினை கிரமமாக செய்துவந்தார். ஆடை வடிவமைப்பினையும் மிக நேர்த்தியாகவும் அழகாகவும் செய்துவந்தார். இறுதிக்காலம் வரை தனது ஆடைகளை தானே வடிமைத்து அணிந்து வந்தார். இதே சமயங்களில் எனக்குரிய ஆடைகளை வடிவமைத்து எனக்கு அணிவித்து அழகு பார்க்கவும் தவறியதில்லை. சமையல் துறையில் அவரது கைப்பக்குவமே தனி ருசி. எப்பொழுதும் அவரது நண்பர்களையோ, எனது நண்பர்களையோ வீட்டுக்கு அழைத்து தானே சமைத்த உணவைப் பரிமாறுவதில் அவருக்கு அலாதி பிரியம்.

அவரது இறுதி நாட்களில் கூட வைத்தியசாலைக்கு அனுமதிக்கும் முதல்நாள் வரைக்கும் வரைந்த வண்ணமே வாழ்ந்தார். இறுதியாக அவர் தனது சுய பிரதிமை (Self Portrait) ஓவியத்தினை வரைந்து கொண்டிருந்தார். அவ் ஓவியத்தினை அவரால் நிறைவு செய்ய முடியவில்லை. ஆனால் முற்றுப் பெறாத ஓவியத்தின் மூலம் அவரது உள்ளார்ந்த உணர்வுகள் யாவுமே எம்மால் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். 'Incomplete work with complete feelings of him - as his life' தனது வலது கை செயலிழந்து வரும் தருவாயில் கூட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது என்னிடம் அடிக்கடி கூறிக்கொள்வார், மகள் எனது வலது கை செயலிழந்து வருகின்றது, நான் இடது கையினால் வரையப் பழகப்போகிறேன். கேரள ஓவியக் கலைஞர் ஒருவரும் தனது வலது கை பாதிப்பிற்குப் பின்னர் இடது கையினால் வரையத் தொடங்கினார். அவர் வலது கையினால் வரைந்த ஓவியங்களை விட இடது கை ஓவியங்கள் பலராலும் பேசப்பட்டது. ஒருவேளை எனது இடது கை ஓவியங்கள் ஓவியக்கலை வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தலாம்.' எனக் கூறினார். அவர் அவ்வாறு என்னிடம் கூறும் போது அவரது மன உறுதியினை நினைத்துப் பெருமைப்பட்டதைக் கூறவா?, இல்லை, இந்நிலைக்குக் காரணம் அந்த உயிர்க்கொல்லி நோய் என அவருக்கே தெரியாமல் எனக்குள் நானே அழுதபடி பரிதவித்து நின்றதைக் கூறவா?

தொண்டை கனத்தபடி, கலங்கிய என் கண்களை அவருக்குத் தெரியாமல் துடைத்தபடியே, 'அப்பா, நீங்கள் எதுக்கும் கவலைப்பட வேண்டாம், உங்களது இந்த மன வலிமை இருக்கும் வரை இயற்கையாற்கூட உங்களை நெருங்க முடியாது' என ஆறுதலளித்தேன்.

நான் பிறந்ததிலிருந்து அப்பாவின் இறுதி நாட்கள் வரைக்கும் அவரின் கைகளைக் கோர்த்தபடி வாழ்ந்த சந்தர்ப்பங்கள் மட்டுமே அதிகம். 'அப்பா' எனும் எந்தவொரு வரையறையும் இன்றி ஒரு நல்ல தோழனாக என் வாழ்வில் சகலமுமாய் வாழ்ந்த என் உயிர் விடைபெற்றுவிட்டது என்பதை இன்றும் மனம் ஏற்க மறுக்கின்றது. இவர் இல்லாதது ஓவியத்துறைக்கு மட்டும் வெற்றிடமல்ல, இவருடன் பழகிய அன்பர்கள் மனதில் எதிர்பார்ப்பற்ற அன்பிற்கான வெற்றிடமும் என்பதே உண்மை.

'இனியும் ஒரு பிறப்புண்டெனில் இப்பிறப்பின் தொடர்ச்சியாகவே பிறக்க விரும்புகின்றேன்' எனக் கூறிச்சென்ற ஓவியர் ஆசை இராசையா அவர்கள், தமது ஓவியங்களூடாகக் காலனை வென்று நம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.



sri.gayu@thaiveedu.com



# பார்த்திபன் மகேசு எனும் சிற்பக்கலா வினோதன்

- கிருபாராணி ஜெயன் பிள்ளை

பல அழகிய வர்ணங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு வானவில்லைப் போல, பன்முகத் திறமைகளை ஒருங்கே கொண்ட சிறப்புக்குரியவர்கள் மிக அரிதா-கவே பிறக்கிறார்கள்.

தேசம் போற்றும் சிறப்புமிக்க பெரியவர்கள், கலைஞர்கள், கல்வி மான்கள் என்று பல ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்ட பெருந் தீவாம் நெடுந்தீவின் இன்னொரு தவப் புதல்வனாகப் பார்த்திபன் மகேசு அவர்களைக் காண்கிறோம்.

உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய செல்லத்தம்பி மகேசு அவர்களுக்கும் ஆசிரியையாகப் பணி தொடர்ந்த திருமதி. வேதநாயகி மகேசு அவர்களுக்கும் தலை மகனாகப் பிறந்தவர், பார்த்திபன்.

உடன் பிறப்புகளான மைதிலி, பிரதீபன், ஹேமமாலதி, அமரர் உமாபாரதி ஆகியோருடன் மனைவி தர்மினி. அன்புக் குழந்தைகள் ஆரணன், மிகிரன் இவர்களுடன் சேர்ந்து பாசமும், ஒற்றுமையும், படரக் கல்வியறிவும் ஒருங்கே மலர்ந்து மணம் வீசும் குடும்பத்தில் மகிழ்ந்திருந்த நாள்கள் மகத்துவமானவை.

மென்மையான பேச்சும் கலைத்திறனால் விளைந்த சிறப்புக்களும் சிறுவயதில் இருந்தே ஒரு பண்பாளனாகப் பலரதும் மனங்கவர் கல்வியாளனாக அவரைத் திகழச் செய்தன.







ஆசிரியர்களான பெற்றோரின் இடமாற்றங்களுக்கு ஏற்ப ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு மகா வித்தியாலயம், வவுனியா நெடுங் கேணி மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் கோப்பாய் மகாவித்தியா லயம் ஆகியவற்றில் பயின்றார். இடைநிலைக் கல்வியுடன் க.பொ.த. உயர்தரம் வரையான கல்வியைப் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றுத் தேறினார்.

சித்திர சிற்ப ஆக்கங்களில் ஈடுபாடு கொண்டிருந்த இளைஞனான பார்த்திபனை அறிந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகம் அவருக்கு 1992ல் கல்லூரியின் சித்திர ஆசிரியராக நிய மனம் வழங்கிப் பெருமை பெற்றது. தொடர்ந்து தனது கலைப்ப ணியைச் சிறப்பாக்கும் வகையில் பிரபல சித்திரப்பாடப் பயிற்று விப்பாளரும் விரிவுரையாளருமான திரு. சண்முகராஜா அவர்களி டம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சித்திரப்பாட விசேட பயிற்சியைப் பெற்றார்.

பல்கலைத் திறமைகளையும் தொழில்நுட்ப நுண்ணறிவையும் ஒருங்கே பெற்றிருந்த, அவருடைய சிற்பக்கலை அவரை அசாதா ரணமான ஒரு தனிச் சிறப்புவாய்ந்த மனிதராக உயர்த்தியது. மிகச் சிறிய வயதிலேயே பெருமைமிக்க சாதனையாளராக இவருடைய சிற்பக் கலை மேன்மை இவரை இனம் காட்டியது. 1994-ல் வடக்கு கிழக்கு மாகாணக் கலை பண்பாட்டுத் திணைக்கள அனுசரணை யுடன் இவரால் ஆக்கப்பட்ட சவர்க்காரச் சிற்பங்களின் கண்காட்சி திருகோணமலையில் இடம் பெற்றது. தொடர்ந்து வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலும் கொழும்பு தமிழ்ச் சங்கத்திலும் காட்சிப்படுத்தப்பட்ட சித்திர சிற்ப ஆக்கங்களால் கலைத்துறை ஆர்வம் மிகுந்த பார்வையாளர்களின் பாராட்டுக்களைப் பெற்றார்.

கடும் உழைப்பும் திட்டமிடும் விவேகமும் இவரைத் தனித்துவம் மிக்க கலைஞராக வெளிக்கொணர்ந்தன. இவருடைய குறிப்பிடத் தக்க பெரு முயற்சிகளாக இன்றும் துலங்கும் அவரது படைப்பு கள் அவரின் புகழ் பேசும் வண்ணம் ஆங்காங்கே ஒளிர்கின்றன.

நெடுந்தீவு பிரதேச செயலக முன்றலில் முருகைக்கல்லினால் ஆக் கப்பட்ட இரண்டு குதிரைகள் பார்வையாளர்களைப் பரவசப்படுத் துகின்றன. யாழ்ப்பாணத் தாதியர் பயிற்சிக் கல்லூரி உள்ளரங் கில் நிறுவப்பட்ட புளோரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் வெண்ணிற உருவச்சிலை. தாதியர்களின் பயனுறுதியைப் பறை சாற்றி நிற்கின்றது.

யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நிறுவப்பட்ட விபுலானந்தர் சிலை.

நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபை ஆலயத்தின் புதிய வாயிற் கதவுகளில் செதுக்கப்பட்டுள்ள சிற்ப வேலைகள். நெடுந்தீவு மகா வித்தியாலய அதிபர் சீ.வீ.ஈ. நவரத்தினசிங்கம் அவர்களின் வெண் கல உருவச்சிலை என்பனவும்,

நெடுந்தீவு கடலோரத்தில் கண்டெடுக்கப்பட்டுப் பல வருடங்களா கப் பாடசாலை மாணவரின் விளையாட்டுப் பொருளாக இருந்த மிதவைக் கோளம் புவியியற் பாட உபகரணமாகி உலகக் கோள மாக உருப்பெற்று மகாவித்தியாலய அதிபரின் அறை வாசலில் இன்றும் அழகுற நிலைபெற்றுள்ளது.

யாழ். தென் இந்திய திருச்சபை ஆதீன பேராயர் வணக்கத்துக் குரிய எஸ். டானியல் தியாகராசா அவர்களால் இந்தக் குறுகிய வயதில் சிற்பக்கலா வினோதன் எனும் சிறப்பு விருதையும், யாழ். எம்.ஜி.ஆர் மன்றத்தினரின் பாராட்டுகளுடன் கலைமாமணி விருதி னையும் பெற்றிருந்தார். இவற்றோடு இளங்கலைஞர் விருதினை









யும் பல்நிலைப் போட்டிகளில்பங்கு கொண்டு பெற்ற சான்றிதழ்க ளால் தரம் மிக்க சித்திரக் கலைஞன் என்ற புகழ் நாமத்தையும் பெற்றிருந்தார்.

நெடுந்தீவு கனடா மக்களின் அழைப்பின்பேரில் 2019ல் கனடா வுக்கு வருகை தந்தவர். கனடாவில் வளர்ந்த இளையோரைச் சித் திர, சிற்பக்கலை ஆற்றல்களில் மேம்பட ஊக்குவிக்கும் செயற்பா டுகளைத் திட்டமிட்டு, மாதிரிப் பயிற்சிக் கருத்தரங்குகளையும் நடத்தியிருந்தார்.

தன்னுடைய தனிமைத் துயரையும்கூட, காணும் பொருளையெல் லாம் கலைவடிவாக்கிச் சென்ற இடமெல்லாம் சித்திரமும் சிறபங்க ளும் செய்து சேர்ந்தோர் களிப்புறச் சிறந்தார். தன் குடும்பம் மனைவி பிள்ளைகளில் அளவற்ற அன்பும் நேசமும் கொண்டு புலம்பெயர் தேசத்தில் அவர்கள் நலன்களுக்காகக் கடுமையான உழைப்பு மூலம் பொருளீட்டலில் ஆர்வம் கொண்டு அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டார்.

உள்ளத்திலே அன்பு மடைதிறந்த வெள்ளமாய்ப் பெருகித் தோன்ற மற்றவர்கள் பலருக்கு அவரோடு பழகும் ஆர்வம் உண் டாகும் வண்ணம் நட்பு என்கிற பிணைப்பை தாமாக வந்து சேரும் வகை தேர்ந்த புன்னகையாலும் பொருட்செறிவுணர்த்தும் பேச்சா லும் நல்லதொரு மனிதரான பாபுவுக்கு அமைந்த நண்பர்கள் பற்றி எண்ணும்போது அளவற்ற மகிழ்வு பிறக்கிறது.

அவர் சென்ற இடமெல்லாம் அவருடன் பழகியோர் இன்று அவரை இழந்து தவிக்கின்றபோது உரைக்கின்ற ஆற்றாமையின் துயர வார்த்தைகள் அவரது நட்புக்குச் சான்றாகும்.

***எய்தற்கு அரிய இயைந்தக்கால் அந்நிலையே***
***செய்தற்கு அரிய செயல்.***

தன்னுடைய குறுகிய கால வாழ்வை முன்கூட்டியே உணர்ந்தது போல பல அரிய சிறப்புமிக்க கலை வடிவங்களை இந்தக் குறு கிய வாழ்வில் செய்து அவற்றை நிழற்படங்களில் சேமித்து தன் னாலான கடமைதனை கலைத்தாய்க்கு அர்ப்பணித்த ஒரு அருங் கலைஞன்.

நாம் அறியா வகையில் உலகெங்கும் ஒளிரும் அவரது கலைப்ப டைப்புகள் பலவும் அவரின் மறைவு கேட்ட மாத்திரத்தே அறிந் தோரால் வெளிக் கொணரப்படுவதை அவதானிக்கின்றோம். திடீர் மறைவால் எம்மைத் திகைக்க வைக்கும்வரை வெகு சாதாரண மான ஒருவராக நம்மிடையே நடமாடினார் என்பது உண்மை. அவ ருடைய இருப்பு நீடித்திருப்பின் இன்னமும் ஏராளமான கலைத்து வப் படைப்புகளை உலகிற்கு அள்ளி வழங்கி இருப்பார் என்ப தில் எந்த ஐயமும் இல்லை.

குறுகிய கால வாழ்வில் எமது அன்பினைத் தன் பண்பால் ஆட் கொண்டு மறைந்த பாபு என்ற கலைஞன் பார்த்திபன் அவர்களின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கிறோம்.



kiruba.pillai@thaiveedu.com



# தன்னலமற்ற சேவையாளன் பொன். குலேந்திரன்

- பார்வதி கந்தசாமி

பொன். குலேந்திரன் பொன் எழுத்துக்களால் எழுதப்படவேண்டிய எழுத்தாளர். பல மகுடங்களைச் சுமந்தவர்.

இலங்கையின் தலைநகர் கொழும்பில் 1939-ல் பிறந்த குலேந்திரன் ஊரெழுவைச் சேர்ந்த ரஞ்சினியையைத் தனது வாழ்க்கைத் துணையாக இணைத்துக்கொண்டு இல்லறமாம் நல்லறத்தை நன்கு செலுத்தினார். தனது தாயாரின் வீடு அமைந்திருந்த நல்லூரைத் தனது நீண்டகால வதிவிடமாகக் கொண்டிருந்தார். எனினும் நிலையாக ஓரிடத்தில் தங்கியிருக்காமல் ஊர்சுற்றும் ஒரு சுறுசுறுப்

புமிக்க மனிதராகத் தன்னை வரித்துக்கொண்டார். தந்தையின் வேலைப்பணி காரணமாக இளமைப் பருவத்தில் புத்தளத்தில் வாழ்ந்தார். ஆரம்பக் கல்வியை புத்தளத்தில் தொடர்ந்திருந்தார். புத்தளத்தில் கல்வி கற்ற காலத்தில் பெருந்தொகையான இஸ்லாமியர்களையும் கிறிஸ்தவர்களையும் நண்பர்களாக்கிக் கொண்டார். தந்தையின் வற்புறுத்தலுக்கமைய புனித யோவான் கல்லூரி விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றார். 1960-ம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் புகுந்து பௌதீகவியலில் சிறப்புப் பட்டம் பெற்று, பின்னர் பிரித்தானியாவில் Charted Institute of Marketing and IEE பட்டயப் பட்டம் பெற்றார். அவர் தொலைத்தொடர்புப் பொறியியலாளராகவும், ஆலோசகராகவும் இலங்கை, ஓமான், டுபாய், பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் பணியாற்றியுள்ளார்.

மிசிசாகாவில் வாழ்ந்த குலேந்திரன் ரஜனியை மனையாளாகவும், கிருத்திகா என்ற சமூகசேவகியை மகளாகவும், ராமகிருஸ்ணனை மருமகனாகவும், கொலிவூட் புகழ் மைத்திரேயியை பேத்தியாகவும், விஸ்வாவை பேரனாகவும் உறவாகக் கொண்டு அன்பான கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தவர். தனது பேத்தியின் உயர்வைப் பேசும் போதும் அதனை எழுதும் போதும் குலேந்திரனின் பூரிப்பு அலாதியானது. தமிழர் வெற்றியை இனிதே கொண்டாடுபவர்.

குலேந்திரன் தனது பத்துவயதிலேயே எழுத்துத்துறையில் கால்பதித்தவர். அவரது இரத்தத்தில் துளிர்த்த பேத்தி மைத்திரேயியும் 10 வயதில் எழுதத்தொடங்கியதாகக் குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது. குலேந்திரன் எழுதி வெளியிட்ட நூல்கள், கட்டுரைகள் எண்ணிற்கு அடங்காதவை. அக்கட்டுரைகள், கதைகள் எல்லாமே மானுடத்தின் அவலங்களையும், தமிழ் இனத்தின் இக்கட்டான நிலையையும், புலம் பெயர்ந்தவர்களின் அனுகூலங்களையும் மையக்கருவாகக் கொண்டவையாகவே அமைந்துள்ளன. தான் சரி என நினைத்தவற்றையும் நியாயமான தீர்வுகளையும் துணிவாக முன்வைப்பவர். யாருக்கும் பயப்படாதவர்.

குலேந்திரனுடைய மின் நூல்கள்: காலம் அறிவியல் சிறுதொகுப்பு, விதை, இரு அறிவியல் நண்பர்கள், முள்வேலிக்குப் பின்னால், மரபுக்கதைகள், பார்வை, மண்ணிலிருந்து விண்வெளிக்கு, வாழு வாழவிடு என்ற உருவகக் கதைகளின் தொகுப்பு, இலங்கையில் ஞானாக்கா என்ற ராஜகுரு போன்ற பல மின்நூல்களை வெளியிட்டுள்ளார். சில சமயங்களில் ஒரு நாளிலேயே ஒரு கதை எழுதி முடித்துவிடுவதாகக் கூறியிருந்தார். அவர் எந்நேரமும் எழுதிக்கொண்டே இருப்பார். அவர் டயலிஸிஸில் இருந்த காலம்முதல் அவருடைய எழுத்து பரிணமிக்கத் தொடங்கியது. புற்றீசல் போல மின் நூல்களும், நூல்களும், கட்டுரைகளும் வெளிவரத் தொடங்கின. ஸ்காபரோ மக்கள் கூடத்தில் அவருடைய ஆரம்ப கால நூல்கள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டன. நோய்வாய்ப்பட்டிருந்தாலும் எழுதும் ஆற்றல் அவரை நோயின் கொடுமையை அறியாது இருக்கவைத்தது. எந்நேரமும் தனக்குப்பிடித்தமான நண்பர்களுடன் நூல்களைப் பற்றியும் இலங்கையின் அரசியல் நிலைபற்றியும் பேசிக்கொண்டே இருப்பார். கதை ஒன்றை யாராவது கூறிவிட்டால் அதனை மெருகூட்டித் தன்னுடைய கதையாக மாற்றி எழுதும் தன்மையையும் பல இடங்களில் கூறியிருக்கின்றார். அவர் உண்மையை மதிப்பவர். அவரிடம் அபாரமான ஞாபகசத்தியைக் காணக்கூயதாக இருந்தது. அதனை அவர் எழுதிய உண்மை தழுவிய கதைகளில் காணமுடிந்தது. மனிதர் அறியாத உண்மைக் கதைகளை வெளிக்கொண்டு வந்து தன் கதையூடாக மக்களைச் சிந்திக்க வைத்தவர்.

யூரியூப்பில் தனது சில கதைகளைத் தெரிந்து ஒலிவடிவம் கொடுக்க முற்பட்டிருந்தார். அந்த வரிசையில் முதியோர்கள் படும் மனித அவலங்களை விபரித்துச் செல்லும் தனிமை என்ற கதையின் ஒலிப்பதிவும் ஒன்று.

அறிவு, ஆற்றல், அனுபவம் ஆகியவற்றை குவியம் என்ற அவரின் இணையத்தளம் ஒன்றாகக் குவித்தது. மனிதத்தை மிக்கவைக்கும் மானுட அநியாயங்களுக்கு எதிராகக் குரல்கொடுக்கும் கட்டுரைகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினார். ஊதாரணமாக 'மனித இனமும் அணு ஆயதமும்', 'துலா', 'Violence Against Women' எனக் கட்டுரைகளையும் கதைகளையும் குவியம் என்னும் சஞ்சிகையில் எழுதிவந்தார். இலங்கையில் 'ஞானாக்கா என்னும் பெண் ராஜகுரு' என்ற கட்டுரை போன்ற கதை இன்றைய ஈழ அரசியலுடன் தொடர்பான ஒன்றாகும். Strange Relationship: A Bouquet of 21 Short Stories என்ற சிறுகதைத் தொகுப்பு 2015-ல் வெளியிடப்பட்டது. அவர் எழுதி வெளியிட்ட நூல்கள், கட்டுரைகள் எண்ணிலடங்காதவை.

கனடாச் சமூகத்தின் உயர்வுக்காகத் தன் இறுதிக் காலத்தைப் பயனுள்ளதாகக் கழித்தவர். வசந்தம் நிறுவனத்தில், மிசிசாகாவிலுள்ள பீல் முதுதமிழர் மன்றத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டதைப் புலம்பெயர்ந்த தமிழர் மறக்க முடியாது. பல்வேறு தொழில்நுட்ப திறன்களைத் தமிழ் முதியோருக்கு வழங்கும் அறிவாற்றல் படைத்த ஒருவராகவே அவர் வலம் வந்தார். இறுதிவரையில் தமிழுக்காகத் தனது நேரத்தைச் செலவிட்டுவந்தார்.

வசந்தம் - தமிழ் உளவளத் துணை நிலையத்தின் இயக்குநர் சபையில் பீல் முதுதமிழர் மன்றத்தின் அங்கத்தவராகச் செயற்பட்டவர். அக்காலகட்டத்திலேயே வசந்தம் உளவளத் துணைநிலையத்தின் வழிகாட்டலால் ஒன்ராறியோ திரில்லியம் பவுண்டேசன் என்ற நிறுவனத்தில் மூன்று வருடங்களுக்கு நிதி உதவி பெற்றுக் கொண்டார்கள்.

பீல் முதுதமிழர் மன்றத்தைக் கட்டி எழுப்பிய பெருமை குலேந்திரனுக்கு உரியது. அதை யாரும் மறுக்க முடியாது. அதற்கான இடத்தைத் தங்களது சொத்தாக வாங்கிக் கொண்டு இன்று யாருக்கும் தலை வணங்க வேண்டிய தேவை இல்லாத சொந்தக் கட்டடமாக இயங்கும் பெருமைக்கு மூலகாரணி அவர்தான். திரில்லியம் வைத்தியசாலைக்கு 'நடைபவனி' (Walkathon) மூலம் இன்று வரை 150,000-ற்கு அண்மித்த டொலர்களைத் தானமாகக் கொடுத்துள்ளார். முதியோர் இறப்புக்கான காப்புறுதி நிதியை ஆரம்பித்து முதியோர் - அவர்கள் குடும்பங்கள் நன்மை பெறும் நிறுவனமான Ontario Benevolent Association (OSTABA) அத்துடன் Screen of Peel (SOPCA) என்ற நிறுவனத்தையும் அமைக்க வழிகோலினார். புலம்பெயர்ந்த இலங்கை தபால் சேவையாளர்களுக்கெனவும் நிறுவனம் அமைக்க உதவினார். சமூகத்திலே நைந்திருக்கும் தன் நண்பர்களுக்கும், உறவுகளுக்கும், வறுமைக் கோட்டில் வாழ்வோருக்கும் அளப்பரிய உதவிகளைச் செய்தார். இலங்கையில் ஓய்வூதியம் பெற முடியமால் இருப்போருக்கு அவற்றைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளைக் காட்டி, விண்ணப்பங்களை பூரணப்படுத்தியும் தொடர்புகளை எற்படுத்தியும் அவற்றைப் பெற்றுக் கொள்ள வழிவகுத்தார்.

எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு கட்டுரைகள், சிறுகதைகள் போட்டிகளை நடத்தி தனது சொந்த நிதியிலேயே பரிசில்களையும் வழங்கி ஊக்கப்படுத்தினார். இந்த நிகழ்வு அவர் இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே இடம் பெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மக்களை நேசித்த ஒரு மனிதநேயராகத் தன்னை நிலைப்படுத்திச் சமுதாய உயர்வுக்காக அல்லும் பகலும் சிந்தித்துச் செயற்பட்ட ஒரு கர்மவீரராக மக்கள் மனங்களில்
வலம்வருகின்றார்.



parvathy.k@thaiveedu.com

# சிறுவர் மலர் மாமாவுக்கு இறுதி வணக்கம்

- வி.என். மதிஅழகன்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முதலாம் இலக்கக் கலையகம். தமிழ் நிகழ்ச்சிகள் அதிகமாக ஒலிப்பதிவு செய்யப்படுவது அங்குதான்.

சனிக்கிழமை காலையென்றால் இருபத்தி ஐந்துக்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர்கள் ஒன்றாகக் கூடிவிடுவார்கள், குதூகலமாக. எதற்காக? சிறுவர் மலர் ஒலிப்பதிவுக்காக. வர்ணமயமான ஆடைகளில் வந்திருக்கும் அவர்கள் கலையகத்தைக் களை கட்டச் செய்துவிடுவார்கள்.

அந்த சிறுவர் பட்டாளத்தை ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்து நாற்பத்தி ஐந்து நிமிடநேர நிகழ்ச்சியை நடத்திச் செல்வார் மாமா. ஆம்! மாமா - மருமக்கள் என அழைத்து வாஞ்சையான உள்ளன்போடு உறவாடி ஒலிப்பதிவு நடந்தேறும். பண்ணிசை, பாடல், வாத்திய இசை, பேச்சு, சிறுகதை, நொடிகள், குட்டி நாடகம் எனப் பல்வேறு அம்சங்களை தகுந்த ஒத்திகையின் பின்னர் அவர்கள் வழங்குவார்கள். புகழ்பெற்ற ஒலிபரப்பாளர்கள் வளர்த்து வந்த களம்தான் சிறுவர் மலர். சர்வதேசப் புகழ்பெற்ற வர்த்தகசேவை அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீட் அவர்களில் ஒருவர் என்றால் அதன் தராதரத்தை அனைவரும் புரிந்து கொள்வீர்கள்.

சிறுவர் மலர் என்றால் சரவணமுத்து மாமாவே முதலில் நினைவுக்கு வருவார். அந்த அளவுக்கு அவரது பங்களிப்பு நிலைபெற்றது. அன்று தொட்டு இன்று வரை அவர் காட்டிய வடிவமைப்பிலேதான் சிறுவர் மலர் ஒலிபரப்பாகி வருகிறது. எந்த ஒரு கலைத் துறையிலும் முதற் கலைஞர் பதித்த சுவடுகள் ஆழமாகப் பதிந்து விடுகின்றன.

சரவணமுத்து மாமா வரிசையில் மகேசன் மாமா, இராசையா மாமா, பத்மநாதன் மாமா என்போரை அடுத்து ‘வணக்கம் மருமக்களே’ என வசீகரமாக அழைத்து சிறுவர் மலரை ஒரு குறுகியகாலம் நடத்திவந்த பொன். குலேந்திரன் அவர்களின் குரல் இன்றும் என் மனதில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது. வணக்கம் மாமா என மருமக்கள் ஒன்றாக பதில் வணக்கம் சொல்லும் காட்சி மனதில் விரிகிறது.

பொன். குலேந்திரன் காலமானார் என்ற துயரச்செய்தி என் காதில் வீழ்ந்த மறுகணம் ஒலிபரப்பு நண்பர்களுக்கு அது பற்றிப் பகிர முகநூலை துணையாகக் கொண்டேன். ‘சிறுவர் மலர் மாமாவே! உங்கள் மருமக்கள் மனதில் நீங்கள் நிரந்தரமாக வாழ்வீர்கள்’ என்று அதில் குறிப்பிட்டேன். அவரது மருமக்கள் எல்லோரும் ஆகக் குறைந்தது தற்போது ஐம்பது வயதையாவது தாண்டிவிட்டிருப்பார்கள்.

கட்டுரையாளர், சிறுகதை எழுத்தாளர், நாவலாசிரியர் என அவரை நன்கறிந்த கனடிய அன்பர்கள் என் முகநூல் பதிவின் மூலமே பொன். குலேந்திரன் ‘வானொலி மாமா’வாகவும் விளங்கினார் என்பதை தெரிந்து கொண்டார்கள். நான் வானொலி நிகழ்ச்சியை நடத்தி வந்தவன் என அவர் பின்னாளில் ஒருபோதும் பறைசாற்றிக் கொண்டதில்லை. அவர் சிந்தையும் செயலும் எழுத்துடன் பின்னிப் பிணைந்திருந்தன.

பொன். குலேந்திரனை வானொலி மாமா என்ற அந்தஸ்தைக் கொடுத்து ஒலிபரப்பு நிலையத்துக்கு வரவழைத்தது, தபால் தந்திகள் அமைச்சர் அமரர் செல்லையா குமாரசூரியர் தலைமையில் 70களின் முற்கூற்றில் செயற்பட்ட தமிழ் ஒலிபரப்பு அபிவிருத்திக்கான உத்தியோகப்பற்றற்ற சபையே. அந்தச் சபையில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் க. கைலாசபதி, சட்டத்தரணி குமாரசாமி வினோதன், முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் பிரேம்ஜி ஞானசுந்தரம், டொக்டர் ஐ. இந்திரகுமார் ஆகியோரும் அடங்கியிருந்தனர்.



பொன். குலேந்திரனின் பேச்சு நடை, தமிழ் இலக்கிய ஆர்வம் என்பவற்றை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியுமுன்னரே, அவரை அந்தச் சபை நன்றாக அடையாளம் கண்டுகொண்டது. ‘சங்கநாதம்’ என்ற இளைஞர் நிகழ்ச்சியை நடத்துவதற்கு என்னைத் தெரிவு செய்ததும் இதே சபையினரே. அந்தக் காலகட்டத்தில் தமிழ் தேசிய சேவையின் மேலதிக பணிப்பாளராக கடமையிலிருந்தவர் ரொறன்ரோ ரயேர்சன் பல்கலைக்கழக ஊடக விரிவுரையாளராக பின்னாளில் சேவையாற்றிய, ஆசிய ஒலிபரப்புத்துறையின் ஜாம்பவான் எனப் போற்றப்பட்ட சி.வி. இராஜசுந்தரம் அவர்கள். ஆங்கிலப் புலமை மிக்க தமிழ் ஒலிபரப்பாளராக விளங்கிய இரா

ஜசுந்தரம் அமரர் ஆனமை கனடாவிலேயே.

ஒலிபரப்பு நடைமுறைகளுக்கு புத்தம் புதியவரான பொன். குலேந் திரனுக்கு கலையக ஒலிப்பதிவு குறித்து என்னால் அனுசரணை வழங்க முடிந்தது. அப்போது நான் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவி யாளராக ஒலிபரப்பின் ஆரம்ப நிலையில் இயங்கி வந்தேன்.

எனது திருமணத்தின் பின்னர் நான் அவரது அயலவரானேன். வெள்ளவத்தை ராமகிருஷ்ண அவெனியுவில் எமது இல்லங்கள் இருந்தன. 'தினகரன்' பிரதம ஆசிரியராக விளங்கிய ஆர். சிவகுரு-நாதன் அவர்களும் எமது அயலவரே. மூவரும் பேசிக்கொள் வோம். அனேகமாக பேச்சின் அடிநாதம் எழுத்துலகு சம்பந்தப்பட் டதாகவே இருக்கும். ஊர், உலக நடப்புகளை விரிவாகச் சொல்வ தில் பொன். குலேந்திரனுக்கு நிகர் அவரே.

நல்லூரில் பொன்னம்பலத்தாரின் மகனாகப் பிறந்து ரஜினியை கரம்பிடித்து பொலீஸ் இன்ஸ்பெக்ரர் சி. இராஜகுலசிங்கத்தின் மருமகனாக வெள்ளவத்தையில் வாழ்ந்து வந்த பொன். குலேந்தி ரன், 77 இனக் கலவரத்தை அடுத்து மத்திய கிழக்கிற்கு குடும்பத் துடன் புலம்பெயர்ந்தார். கொழும்பு சிலோன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஏ.டபிள்யூ. மயில்வாகனத்திடம் பயின்று பௌதீகவி யல் பட்டதாரியான குலேந்திரன், கொழும்பு அக்குவைனாஸ் பல் கலைக்கழக கல்லூரியில் விரிவுரையாளராக விளங்கியவர். ஜனா திபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் அவரது மாணவர்களில் ஒருவர்.

குலேந்திரன் இலங்கை தொலைத் தொடர்புத் திணைக்கள பிரதம அத்தியட்சகர் பதவியை இராஜினாமாச் செய்து ஓமான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளிலும் அதே துறையில் பணியாற் றினார். மொபைல், சற்றலைற் வலையமைப்பு தொழில் நுட்பத்தி லும் தேர்ச்சி பெற்றார். பிரிட்டனில் சேவையாற்றிய வேளையில் மகள் கிருத்திகா குலேந்திரனின் திருமணத்தையடுத்து 1996-ம் ஆண்டு கனடாவில் நிரந்தரமாகக் குடியேறினார் குடும்பத்துடன். கனடாவில் வாழும் காலத்தில் இங்கும், ஒரு வருட காலம் அமெ ரிக்காவின் ரெக்ஸாஸ் மாநிலத்திலும் தமது தெழில்சார் திறனுடன் பணியாற்றி வந்தார். ஆம். எனது நண்பன் பொன். குலேந்திரன் இலங்கைப் பட்டதாரி என்ற தகுதியோடு தனது கல்வியை நிறுத் திக் கொள்ளவில்லை. படித்துக் கொண்டேயிருந்தார். தமது தொழில்சார் தகுதிகளை வளர்த்துக் கொண்டே போனார். எந்த நாட்டிலும் உத்தியோகங்களை வழங்க நிறுவனங்கள் முன்னின் றன. இலக்கிய தாகத்தோடு எண்ணிலடங்கா நூல்களை, மின் நூல்களை, 'குவியம்' மூலமான இணையதளப் பதிவுகளை வெளி யிட்டு வந்த இவருக்கு தொழில்சார் படிப்பு எவ்வாறு சாத்தியமா யிற்று என வியந்து நிற்கிறேன்.

சிறுவர் மலர் மாமாவாக அடையாளம் காட்டிய பொன். குலேந்தி-ரன் தமது இடையறா இலக்கியப் பணியில் வளர்ந்தோர் இலக்கி யத்தில் இருந்து வேறுபட்ட சிறுவர் இலக்கிய மொழிநடையுடன் கூடிய கலையில் தனித்திறனை வெளிப்படுத்தினார். வயதைப் பொறுத்து மொழி எளிமையாக அமையவேண்டும் என்பதை அவர் மனதில் நிறுத்தினார். குழந்தை இலக்கியம் சிறப்பாக உள்ள சமு தாயமே மிகச் சிறந்த சமுதாயமாக இருக்குமென அவர் நம்பி னார். சிறுவர்களுக்கு ஏற்ற, அவர்களுக்கு ஈர்ப்பான தொனிப் பொருளில் சிறுகதைகளை எழுதி வெளியிட்டார்.

சிறுவர் கல்வியில் மட்டுமல்ல, அவர்களின் அன்றாட வாழ்விலும் சிறுவர் இலக்கியம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கும் என்ற கோட் பாட்டுக்கு ஏற்ப அவர் ஒரு வருட காலத்தில் எழுதிய 'சிறுவரின் சிந்தனைக்கு' என்ற சிறுவர் சிறுகதை நூலை நான் வாசித்துள் ளேன். அதில் 26 சிறுகதைகள் அடங்கியுள்ளன. இந்த நூலில் பொன். குலேந்திரன் 'உங்கள் மாமாவிடம் இருந்து' என்ற தலைப் பில் - 'ஹாரி போட்டர் (Harry Potter)' எழுதியது போன்ற கதை கள் அல்ல என் கதைகள் என ஆரம்பித்து சொல்லுவதை சாராம் சமாகத் தருகிறேன். 'சிறுவர்களின் சிந்தனையைத் தூண்டும் சிறுக தைகளை எழுதியுள்ளேன். ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. தம்பி தங்கையர்களே! பொறுமையாக வாசியுங்கள். கதையில் வரும் பாத்திரங்களோடு நீங்கள் எந்த வகையில் பொருந்துகிறீர் கள் என்பதை நீங்களே தீர்மானியுங்கள்'.

எனக்கும் என் நண்பருக்கும் இடையிலான ஒரு இனிய நினைவை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

2018-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ம் திகதி தாய்வீட்டில் வெளி யான கட்டுரைகளின் ஒரு கொத்தான 'வி.என். மதிஅழகன் சொல் லும் செய்திகள்' நூல் ஸ்காபறோ சிவிக் சென்ரரில் அறிமுகமாகி றது. மிஸிசாகா, பிரம்றன் பகுதிகளில் உள்ள மூத்த தலைமுறை யினர் பலரையும் அழைத்திருந்தேன். சீரற்ற காலநிலை காரண மாக அவர்களில் பலரால் வரமுடியவில்லை, பொன். குலேந்திரன் உட்பட. மனவருத்தத்தோடு மறுநாள் என்னை அழைத்த அவர், 'மதி 50 பிரதிகளோடு நீங்கள் வாருங்கள். பீல் பிரதேச முதியோர் கள் உங்களை வரவேற்பார்கள் - வாழ்த்துவார்கள்'. என்றார். பீல் பிரதேச முதியோர் தமிழ் சங்கத்தின் தலைவர் அவர். சங்கத்துக் கென புதிய கட்டடத்தையே கட்டி எழுப்பி சாதனை புரிந்தவரின் அழைப்பு. சென்றேன் மனைவியோடு. அவரின் தலைமையில் சங்க அங்கத்தினர்களை சந்தித்தேன். எனது 'நந்தாப் புகழ் பெற்ற நாயகன் நடிகமணி வி.வி. வைரமுத்து' என்ற நூலையும் சேர்த்து அவர்களிடம் வழங்கினேன்.

அப்போது பொன். குலேந்திரன், 'மதி ஏதாவது பேசுங்கள்' என் றார். 'என்ன பேசலாம்' எனக் கேட்டேன் ஜூலை 83 பற்றிப் பேசி னால் சுவைபடக் கேட்பார்கள்' என ஆலோசனை சொன்னார். வன்செயல்களில் அவரது வீடும், எனது வீடும்,நண்பர் சிவகுருநா-தன் வீடும் பஸ்பமானதை சொல்லி கப்பலேறி காங்கேசன்துறை சென்றதுவரை விலாவாரியாக பேசித்தீர்த்தேன்.


நாங்கள் எல்லோருமே வழமைநிலை திரும்பி வீடுகளை மீளக் கட் டிய பின்னர் பல சந்தர்ப்பத்தில் பீதியூட்டும் நிகழ்ச்சிகளுக்கு பஞ் சம் இருக்கவில்லை. பொன். குலேந்திரன் மாமனார் ஓய்வுபெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்ரர் சி. இராஜகுலசிங்கம் தலைமையில் விழிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. 'மதி, என்னிடமுள்ள றிே-வால்வர்களில் ஒன்றை நீர் வைத்துக்கொள்ளும்' என ஒருநாள் இரவு இராஜகுலசிங்கம் இராமகிருஷ்ண அவெனியு ரோந்தின் போது கொண்டுவந்தார். 'வேண்டாம் சுட்டால் அதன் விளைவு பார தூரமாகிவிடும். மீண்டும் கப்பல் ஏறவேண்டி வந்துவிடும்' என் றேன். சிரித்தார். அந்தச் சிரிப்பில் பொதிந்த அர்த்தங்கள் எனக்கு விளங்காதவையா என்ன? என்று நான் சொன்னபோது அவரது மருமகன் பொன். குலேந்திரன் உணர்ச்சிவசப்பட்டார். அவரது கண்களில் கண்ணீர் திவலைகளைக் கண்டேன். அனேகமாக ராம-கிருஷ்ண அவென்யூ வாழ்க்கை அன்று அவரது நினைவில் வந்தி ருக்கலாம்.

இன்று எனது கண்ணீர் மாலைகளை நண்பருக்கு அணிவித்து இறுதி வணக்கம் சொன்னேன்.

அன்னாருக்கான அஞ்சலிப் பதிவை தருமாறு தாய்வீடு ஆசிரியர் என்னைக் கேட்ட, மறுகணமே திருமதி ரஜினி குலேந்திரன் அவர் களை தொலைபேசியில் அழைத்தேன்.

அப்போது அவர் கூறிய விடயம் எனக்கு உள்ளார்ந்த ஒரு மனநி றைவைத் தந்தது. அது என்னவென்றால், பொன். குலேந்திரன் தான் எழுதிய நூல்கள், மின் நூல்கள் அனைத்தையும் எச்ச சொச் சம் எதுவும் விட்டு வைக்காமல் வெளியிட்டு முடித்துவிட்டார். அவற்றில் வாசகர்களின் வரவேற்பைப் பெற்ற 'கோபுர தரிசனம், கோடி புண்ணியம்' என்ற நூலை மட்டும் மீள சீர்படுத்தி வடிவ மைப்பு செய்து வெளியிட ஏக புதல்வியான கிருத்திகா முயல்கி றார் என்பதே!

ஓயாமல், ஒழியாமல் எழுதி எழுதிச் சென்ற, உலகமெல்லாம் இலக்கிய தொடர்புகளை பேணி வந்த ஆங்கில புலமைமிக்க தமிழ் எழுத்தாளரான பொன். குலேந்திரன் கடந்த செப்ரெம்பர் மாதம் 25-ம் திகதி தமது 83-வது பிறந்தநாளை கொண்டாடினார். மரணம் அடுத்த மாதம் சம்பவித்தது. அவரது பிரிவு ஒரு பேரிழப்பே.



mathialagan@thaiveedu.com



# தெளிவத்தை: மலையகத்தின் அடையாளம்

- மல்லியப்புசந்தி திலகர்

இலங்கையின் பதுளை மாவட்டத்தில் ஊவா கட்டவளை எனும் தேயிலைத்தோட்ட கிராமத்தில் ஆசிரியராக பணியாற்றிய சந்தனசாமிக்கும் பரிபூரணம் அம்மையாருக்கும் 1934-ம் ஆண்டு பெப்பிரவரி பதினான்காம் திகதி மகனாகப் பிறந்தவர் ஜோசப். மூன்று சகோதரர்கள், ஒரு சகோதரி என கத்தோலிக்க குடும்பச் சூழலில் வளர்ந்த இறை நம்பிக்கை கொண்ட ஜோசப், தன் தந்தையையே குருவாகக்

கொண்டு ஊவா கட்டவளை தோட்டத்துப் பள்ளியில் தொடக்கக் கல்வியை ஆரம்பித்தார். இரண்டாம் நிலை கல்விக்காக பதுளை செல்லவேண்டிய நிலையில் பேருந்து வசதிகள் இல்லாத காரணத் தால், தனது தந்தையின் பிறந்த ஊரான தமிழ்நாடு கும்பகோணம் 'லிட்டில் பிளவர் உயர்நிலைப் பள்ளி'யில் சிறிது காலம் கற்று மீண்டும் இலங்கை திரும்பி பதுளை சென். பீட்ஸ் கல்லூரியில் சாதாரணதரம் வரை கல்விகற்றார்.

தனது தந்தையின் வழியில் தெளிவத்தை எனும் தேயிலைத் தோட் டத்து பள்ளியின் ஆசிரியராகவும் தோட்டத்து லிகிதராகவும் சம காலத்தில் பதவியேற்ற ஜோசப் வாசிப்பிலும் எழுத்திலும் அக் கறை காட்டத்தொடங்கினார். குடும்பத்தினருக்கு தமிழ்நாட்டுத் தொடர்புகள் இருந்ததன் காரணமாக தமிழக சஞ்சிகைகளை வாசிக்க பழகியதுடன் தமிழக சஞ்சிகைகளுக்கு எழுதவும் தொடங் கினார். அறுபதுகளில் தமிழகத்தில் வெளிவந்த உமா எனும் சஞ் சிகைக்கு அவர் எழுதிய 'வாழைப்பழத் தோல்' என்னும் சிறுக தையே அவரது முதல் சிறுகதையாக பதிவாகிறது. அதனைத் தொடர்ந்து இலங்கையின் முன்னணி தேசிய தமிழ் பத்திரிகை யான வீரகேசரி நடத்திய மலையக சிறுகதைப் போட்டியில் 1962, 1963, 1964 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியாக சிறுகதைக்கான முதற்பரிசு பெற்று, இலங்கையில் சிறுகதை படைப்பில் பிரபல மானார். அதுவரை ஜோசப் என்றிருந்த அவரது இயற்பெயருடன் அவர் தொழில் செய்து வாழ்ந்து வந்த தெளிவத்தை எனும் பெய ரும் ஒட்டிக்கொள்ள 'தெளிவத்தை ஜோசப்' எனும் இலக்கிய பெய ருக்கு சொந்தக்காரனானார்.

1974-ம் ஆண்டு வீரகேசரியில் தொடராக வெளிவந்த 'காலங்கள் சாவதில்லை' எனும் புதினம் நூலாகவும் வெளிவந்து இலங்கை சாகித்ய மண்டல பரிசுக்கு பரிந்துரையானதுடன் நாவல் இலக்கி யத்திலும் தன்னை அடையாளப்படுத்தினார். 1979-ம் ஆண்டு தெளிவத்தை ஜோசப்பின் முதலாவது சிறுகதை தொகுப்பான 'நாமிருக்கும் நாடே' வெளியானதுடன் அந்த ஆண்டு இலங்கை அரசின் தேசிய சாகித்ய விருதினையும் வென்றது. இதே சமகாலத் தில் தொழில் நிமித்தமாக பதுளை மாவட்டத்தில் இருந்து வெளி- யேறி இலங்கையின் தலைநகரமான கொழும்பில் குடியேறினார் தெளிவத்தை ஜோசப்.

மலையகத்தின் பதுளை மாவட்டத்தில் வசித்த போது மலையகத் தமிழ் மக்களின் வாழ்வியலை தன் படைப்புக்களால் அழகியல் உணர்வுடன் வழங்கி வந்த தெளிவத்தை ஜோசப் தலைநகரில் வாழத்தொடங்கிய பின்னர் மலையகம் மட்டுமல்லாது ஒட்டுமொத்த மானிடர்க்காகவும், ஒடுக்கப்படும் மக்களுக்காகவும் தனது படைப் புகளை விரிவுபடுத்தினார். இனவாத தாண்டவமாடிய கொழும்பு சூழலில் அவர் எழுதிய 'குடைநிழல்' (புதினம்), 'நாங்கள் பாவிக- ளாக இருக்கிறோம் அல்லது 1983' (புதினம்) போன்றன இதற்கு சான்று. படைப்பு இலக்கியங்களில் மாத்திரமல்லாது இலக்கிய ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்ட தெளிவத்தை ஜோசப் மலையக சிறுகதை வரலாறு எனும் தொடர் ஆய்வினை செய்து, அதனை நூலாகவும் வெளிக்கொணர்ந்தார். இதற்காக 2000-ம் ஆண்டு இலங்கை அரச தேசிய சாகித்ய விருதினை ஆய்விலக்கியத்துக் காகப் பெற்றுக்கொண்டார்.

இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் இலக்கிய பய ணம் மேற்கொண்ட தெளிவத்தை ஜோசப் கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளில் சிறப்புரைகளை வழங்கியிருக்கிறார். எழுத்துத் துறைக்கு அப்பால் ஓர் ஆவண சேகரிப்பாளராக பல்வேறு இலக்கிய ஆவணங்களை சேகரித்து வைத்திருப்பதுடன், அவ்வப்போது இலக்கிய தகவல்களாக பத்தி ரிகைகளுக்கு எழுதியும் வருகிறார்.


இலக்கிய உலகில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அயராது உழைத்துவரும் தெளிவத்தை ஜோசப்பின் இலக்கிய பங்களிப்புக் காக பல்வேறு பல்கலைகழகங்கள், இலக்கிய அமைப்புகள் பல விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளன. 2013-ம் ஆண்டு தமிழகத் திலும் 'விஷ்ணுபுரம் விருது' தெளிவத்தை ஜோசப்புக்கு வழங்கப் பட்டுள்ளது. 'நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983' எனும் புதினத்துக்காக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் சிங் கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளையுடன் இணைந்து 'கரிகாற் சோழன் விருது' வழங்கி கௌரவித்தது. கொடகே தேசிய சாகித்ய விழாவில் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கப்பட்டுள்ள இவர், கலாச்சார அமைச்சின் 'தேச நேத்ரு' விருதுக்கும் உரிய வரானார். தனது இரண்டாவது சிறுகதை தொகுப்புக்காகவும் 2013-ம் ஆண்டு தேசிய சாகத்திய பரிசு பெற்றவர். மூன்று முறை சாகித்ய விருதினை வென்றுள்ளதுடன், இலங்கையின் அதியுயர் இலக்கிய விருதான சாகித்ய ரத்னா விருது (2014) வென்ற முதல் மலையகத் தமிழராகவும் தெளிவத்தை ஜோசப் விளங்குகின்றார். இதுவரை மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, எம்.எம். சமீம், வரதர், சொக்கன், செங்கை ஆழியான், பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, பேராசிரியர் சபா. ஜெயராசா, பேராசிரியர் அருணா- சலம், எழுத்தாளர் தெணியான் போன்ற ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆளுமைகளுக்கும் இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ளது.

'மலையகம்' எனும் சிந்தனையாளர்களின் கருத்துருவாக்கத்திற்கு உணர்வு கொடுத்தவர்கள் மலையக எழுத்தாளர்கள். அவர்கள் 1960களில் இயங்கத்தொடங்கிய 'ஆத்திரப்பரம்பரையினர்' என வர லாற்றில் பதிவாகின்றனர். அந்த ஆத்திரப்பரம்பரையைச் சேர்ந்த எழுத்தாளரே தெளிவத்தை ஜோசப். 1960 களில் எழுத்துலகில் நுழைந்து அறுபது வருடகாலம் தொடர்ச்சியாக எழுதி, இயங்கி வந்தவர்.


மலையக மக்களின் வாழ்வியலை, மாறாத மனம்கமழும் மண்வாச னையுடன் எழுத ஆரம்பித்த இவர், பின்னைய நாட்களில் தலைந கர்சார் சிறுபான்மை மக்களின் வாழ்வியல் அவலத்தை தமது படைப்புக்களில் வெளிப்படுத்தியவர். இந்த இருநிலை வியாபகம் மலையக எழுத்தாளர்களுள் தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு ஒரு தனித்துவத்தையும் அவருக்கு ஒரு பன்மைத்துவத்தையும் ஏற் படுத்தியது. புனைவு இலக்கியம் மட்டுமல்லாது புனைவு சாரா இலக்கியத்திலும் அவர் தன்னை பதிவு செய்தார். இது தமிழக, மற்றும் புலம்பெயர் தமிழ் இலக்கிய, செயற்பாட்டுச் சூழலில் தெளிவத்தை ஜோசப் அவர்களை பிரபலமாக்கியது.

மலையக எழுத்தாளராக மேற்குலக நாடுகளிலும் தமிழகத்திலும் நன்கு அறியப்பட்டவராக மலையக இலக்கிய தளத்திலிருந்து, ஈழத்து இலக்கிய தளத்திலும் தமிழ் இலக்கியத் தளத்திலும் இவ ரது ஆளுமை அடையாளம் கண்டது. இலங்கையின் பிராந்திய இலக்கியம் தவிர்ந்து சிங்கள இலக்கிய சூழலிலும் அறியப்பட்ட ஆளுமையாக இருக்கும் தெளிவத்தை ஜோசப், மலைநாட்டு எழுத்தாளர் மன்ற தலைவராக மட்டுமல்லாது சிங்கள தமிழ் எழுத் தாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் செயற்பட்டவர்.

தனது 88 ஆண்டுகால வாழ்நாளில் அறுபதாண்டு காலத்திற்கும் மேல் முழுநேர இலக்கியக்காரராகவே வாழ்ந்தவர் 2022 ஒக்டோபர் 21-ம் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தார்.



thilagar@thaiveedu.com



# சமூகப் போராளி ஸ்ரீகுகன் ஸ்ரீஸ்கந்தராஜா

- துஷி ஞானப்பிரகாசம்

மனித உரிமைகளுக்காகவும், இனச் சமத்துவத்திற்காகவும், இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்திற்காகவும் போராடவெனத் தன் வாழ்நாட்கள் முழுவதையும் அர்ப்பணித்து வாழ்ந்த ஸ்ரீகுகன் ஸ்ரீஸ்கந்தராஜா ஒக்ரோபர் மாதம் ஒன்பதாம் திகதி, 2022 ஞாயிற்றுக்கிழமையன்று பூவுலகை நீத்தார்.

1942-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் எட்டாம் திகதியன்று வடயிலங்கையின் தொண்டைமானாற்றிலே பிறந்தவர் ஸ்ரீகுகன். இலங்கையின் முந்நாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராஜாவி-



னதும் அவரின் துணைவியார் கண்மணியினதும் மகனும், காலஞ்சென்ற சட்டத்தரணி சுசீலா தெ. மூர்த்தி, வைத்திய கலாநிதி இந்திரா சிவயோகம், கலாநிதி ஸ்ரீபவன் ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் சகோதரருமான ஸ்ரீகுகன், தன் அன்புக்குரிய மனைவி ஜெனற், மகள் ஆன்யா ஆகியோரை இவ்வுலகில் விட்டுச்சென்றார்.

1958-ல் தனது பதின்ம வயதில் இலங்கையில் இடம்பெற்ற தமிழர்களுக்கெதிரான இன வன்முறையை நேரடியாக அனுபவித்தமையே தன்னைப் பின்னாளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைப்பதற்காகவும் குரலற்ற மக்களுக்காகக் குரல் கொடுப்பதற்காகவும் தூண்டியது என அவர் பதிவுசெய்துள்ளார். 1962-ல், இலங்கையை விட்டுக் கல்வியின் நிமித்தம் வெளியேறி, இங்கிலாந்து சென்று சட்டப் படிப்பை மேற்கொண்ட அவர், 1975-ல் கனடா வந்து இனப்பாகுபாட்டுக்கு எதிரான தனது செயற்பாடுகளைத் தொடர்ந்தார்.

ஆரம்பத்தில், கனடாவிலிருந்து ஜமேய்க்காவிற்கு நாடுகடத்தப்படவிருந்த அந்நாட்டு இளைஞர்களுக்காக சட்டத்துணைவராகப் பணியாற்றி வந்த அவர், 1977-ல் இலங்கையில் இடம்பெற்ற தமிழர்களுக்கெதிரான இனவன்முறைகளுக்குப்பின் கனடாவில் தஞ்சம் கோரிய தமிழர்களின் அகதிக்கோரிக்கைகளுக்கு ஆதரவாக வாதாட முன்வந்தார். 1962-ல் நாட்டைவிட்டு வெளியேறியதுமுதல் நாட்டோடும் தமிழ் மொழியோடும் பெரிதும் தொடர்பைப் பேணியிராத தான், மணிக்கணக்காக அகதிக் கோரிக்கையாளர்களின் அனுபவங்களைக் கேட்டு மொழிபெயர்க்க உதவிவிட்டு, பின்னர் பல முறைகள் தன் மகிழூந்தில் சென்று தனியாக அமர்ந்து அழுததாக அவர் கூறியுள்ளார். அந்தக் கண்ணீருக்குக் காரணம் தன் மக்களோடும் மொழியோடும் தான் பரீட்சயத்தை இழந்துவிட்டேனே என்ற விரக்தியும், அந்த மக்கள் தங்களுக்கு நடந்ததாகச் சொல்லக்கேட்ட கொடுமைகளுமே.

இதுவே அவரை 1978-லே, வேறு பலருடன் இணைந்து கனடா தமிழீழச் சங்கம் என்ற புதிய குடிவரவாளர்களுக்கான வளத்துணை அமைப்பை உருவாக்கி, அதன் தலைவராகவும் பணியாற்றத் தூண்டியது. அது முதல் கனடாவிற்கு புதிய குடிவரவாளர்களாய் இருந்த கரிபிய சமூகம், கறுப்பின சமூகம் போன்ற விளிம்புநிலைச் சமூகங்களுடன் மட்டுமன்றித் தமிழ்ச் சமூகத்துடனும் நெருங்கிய தொடர்பைப்பேணி அளப்பரிய சேவைகளை ஆற்றி வந்தார். 1980-லே கனடிய குடிவரவாளர்கள் மற்றும் அகதிகளுக்கான சபையின் அகதிகள் பிரிவின் அங்கத்தவராக ஸ்ரீகுகன் நியமனம் பெற்றார். அப்போது தமிழர்களின் அகதி விண்ணப்பங்களில் 5 விழுக்காடானவை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் நிலையே நிலவியது. அதை 1984 அளவிலே 75 விழுக்காட்டுக்கும் மேலாக உயர்த்தியதிலே அவரின் பங்கு முக்கியமானது. 1986-லே 155 தமிழ் அகதிகள் நியுபௌண்ட்லாந்துக் கரையை வந்தடைந்தபோது, அவர்களுக்கான சமூக ஆதரவைத் திரட்ட ஸ்ரீகுகன் பெரும்பங்காற்றினார். புதிய குடிவரவாளர்களிற்காக அவராற்றிய சேவைகளின் தொடர்ச்சியாக குடிவரவாளர்களுக்குச் சேவையாற்றும் ஒன்ராறியோ அமைப்புகளின் சம்மேளனத்தின் (Ontario Council of Agencies Serving Immigrants - OCASI) இயக்குனர் சபை அங்கத்தவராகவும், ரொறன்ரோ அகதிகள் விடயங்களுக்கான சபையின் (Toronto Refugee Affairs Council) உப-தலைவராகவும் பணியாற்றினார்.

கனடிய பேரொழுக்குச் சமூகத்திலே விளிம்புநிலையிலேயிருந்த புதிய குடிவரவாளர் சமூகங்களினிடையே நிலவிவந்த ஒருவருக்கொருவர்மீதான நம்பிக்கையீனத்தையும் மோதல்நிலையையும் கண்டு அவை அச்சமூகங்களின் வளர்ச்சிக்குப் பங்கம் விளைக்கும் என்பதை உணர்ந்து, அந்நிலையை மாற்ற தனது வாழ்வின் முப்பதாண்டுகளுக்கும் மேலான பகுதியை அர்ப்பணித்தவர் ஸ்ரீகுகன். இந்த நோக்கோடு, ஒன்ராறியோ மனித உரிமைகள் சபையின் (Ontario Human Rights Council) உப தலைவராகவும், நியாயமான ஊதிய வழங்கலுக்கான தீர்பாயங்களின் (Pay Equity Tribunals) அங்கத்தவராகவும், ஒன்ராறியோவின் குற்றவியல் நீதிக் கட்டமைப்பிலே கட்டமைப்பு ரீதியான இனக்காழ்ப்பை ஆராயும் ஆணையகத்தின் (Commission on Systemic Racism in the Ontario Criminal Justice System) ஆணையாளராகவும் தொண்டாற்றியுள்ளார். அத்தோடு உலகளாவிய ஆபிரிக்க முன்னேற்றச் சங்கம் (Universal African Improvement Association) மற்றும் கறுப்பின வளத்துணைத் தகவல் மையம் (Black Resource Information Centre) ஆகிய கறுப்பின மக்களின் நலம்பேண் அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்றி வந்துள்ளார். நகரில்வாழும் பல்வேறு சமூகங்களிடையேயும் நல்லுறவைப் பேணும் இன உறவுக்கான நகர்சார் கூட்டமைப்பு (Urban Alliance on Race Relations - UARR) என்ற அமைப்பின் இடைக்கால இயக்குனராக சில காலம் தொண்டாற்றியதோடு அதன் தன்னார்வ இயக்குனர்கள் சபையிலும் பல காலம் பங்காற்றினார். புதிய குடிவரவுச் சமூகங்களுக்கும் நகரக் காவற் படைகளுக்கும் இடையே புரிந்துணர்வற்ற தன்மையும் முறுகல் நிலையும் தொடர்வதை மாற்றவும் ஸ்ரீகுகன் உழைத்தார். நகர்சார் பல்பண்பாட்டு, பல்லின சமூகங்களுக்கான காவலை வழங்குவதுபற்றியதான ரொறன்ரோ பெரும்பாகச் செயற்பாட்டுக் குழு (Greater Toronto Working Group on Policing Multi-Cultural and Multi-Ethnic Urban Communities) என்ற அமைப்பை நிறுவியதோடு அதன் அங்கத்தவராகவும் பலகாலம் தொடர்ந்தார்.

1990-களின் நடுப்பகுதியிலே, ரொறன்ரோ பெரும்பாகத்திலே தமிழ்

பாடசாலை மாணவர்களிடையே குழுநிலை மோதல்களும், குற்றச் செயல்களும் பரவி, அவர்களைத் தீயசக்திகள் தமக்கான ஆதாயம்பெறப் பயன்படுத்தும் செயல்கள் பரவிவந்தது. அதன் விளைவாக பதின்ம வயதுத் தமிழ் இளையோர் கொல்லப்படுவதும் கைதுசெய்யப்படுவதும் அன்றாட நிகழ்வுகளாயின. அந்த நிலையைத் தடுத்து, அந்த இளையோருக்கான வழிகாட்டிகளாருமற்ற வெற்றிடத்தை நிரப்பவென கனடிய பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுக்கொண்டும், புதிதாகப் பட்டம்பெற்றும் இருந்த இளைஞர்கள் சிலர் ஒன்றுகூடி ஒரு அமைப்பு ரீதியாக இயங்க முற்பட்டு கனடிய தமிழ் இளைஞர் முன்னேற்ற நிலையம் (Canadian Tamil Youth Development Center - CanTYD)என்ற அமைப்பை 1998-லே உருவாக்கினார்கள். அந்த அமைப்பின் உருவாக்கத்திற்கு உறுதுணையாக இருந்ததோடு, தொடர்ந்தும் பல்லாண்டுகளாக அதனுடன் இணைந்தும் செயற்பட்டவர் ஸ்ரீகுகன். இளையோரை வலுப்படுத்தலும் அவர்களை வளப்படுத்தலும் ஒரு சமூகத்தின் வளமான இருப்புக்கு இன்றியமையாதது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர் ஸ்ரீகுகன். இதுவே அவரைக் CanTYD அமைப்புடன் மட்டுமன்றி John Brooks Community Foundation and Scholarship Fund போன்ற பேரொழுக்கு நிறுவனங்களுடனும் தொடர்ந்து பணியாற்றத் தூண்டியது.

எனக்கு அவர் அறிமுகமானது CanTYD மூலமாகத்தான். பதின்ம வயதுப் பாடசாலை மாணவர்கள் முதல் இருபதுகளின் ஆரம்பத்திலிருந்த புதிய பட்டதாரிகள்வரை கூடியிருந்த இடத்திலே நரைத்த தலையுடனும், மாறாத புன்னகையுடனும், நேர்த்தியான உடையுடனும் அவரும் எப்போதும்கூட இருப்பார். எம் அனைவருக்குமே அவர் தந்தையையொத்த வயதுடையவராகவோ, அதைவிட மூத்தவராகவோ இருந்தபோதும், அனைவரும் அவரை 'அண்ணா' என்றே அழைத்தோம். அதன் காரணம் அவர் ஒரு தந்தைக்குரிய அதிகாரத்தோடும் அந்நியத்தன்மையோடும் எம்மோடு ஒருபோதும் பழகியதில்லை. மாறாக, ஒரு சகோதரனுக்குரிய அக்கறையோடும், ஆதரவோடும், தோழமையோடும் மட்டுமே பழகினார். ஒரு சந்தர்ப்பத்திற்கூட அவர் தனது வயதையும் அனுபவத்தையும் காரணம்காட்டித் தன் முடிவை ஏனையோர் மீது திணித்தாரில்லை. அலசப்படும் எந்தவொரு விடயம் பற்றியும் தனது கருத்தைக் கூறிவிட்டு, இறுதியில் 'எப்படியிருப்பினும் இது எனது கருத்து மட்டுமே. இதுவே சரியான கருத்து என்று அர்த்தமில்லை' என்று ஆங்கிலத்திற்கூறி முடிப்பார். அவர் தனது பெயரை ஆங்கிலத்திலே எழுதும்போது Sri-Gugan Sri-Skanda-Rajah என்று பிரித்தே எழுதுவார். ஏன் உங்கள் பெயரை இப்படி விநோதமாக எழுதுகிறீர்கள் என்று ஒருமுறை கேட்டேன். அதற்கு அவர் 'நான் இலங்கையைவிட்டு வெளிநாட்டுக்கு வந்தபோது வேற்றுச் சமூகத்தவர்களும், வேற்று மொழியினரும் என் நீண்ட பெயரைப் பார்த்துப் பயந்துபோனார்கள். அதை உச்சரிக்க முயற்சிசெய்யவே மறுத்தார்கள். அவர்களுக்காக என் பெயரைச் சுருக்கிக்கொள்ளவோ அதன் அர்த்தம் கெடும் வகையில் சிதைத்துக்கொள்ளவோ நான் விரும்பவில்லை. எனவே அவர்களுக்கு இலகுவான முறையில், அதே நேரம் என் பெயர் சிதைவுறாத வகையில் இப்படி எழுத ஆரம்பித்தேன். அதையே இன்றுவரை தொடர்கிறேன்' என தனக்கேயுரிய புன்முறுவலுடன் விளக்கினார். எங்கள் தனித்துவமான அடையாளங்களைப் பேணுவதன் முக்கியத்துவம் பற்றியும், எங்கும் எப்போதும் எவ்வகையான ஒடுக்குமறைகளுக்கும் எதிராகத் துணிந்து குரல் எழுப்ப வேண்டியதன் அவசியம் பற்றியும் அவரிடம் நாம் கற்றுக்கொண்டவைகள் ஏராளம். CanTYD அமைப்பிலே பதின்ம வயதுப் பாடசலை மாணவர்களாக இருந்தவர்கள் பலருடனும் நெருக்கமான உறவை ஏற்படுத்தி தனது இறுதிக்காலம்வரை அந்த உறவுகளைப் பேணி வந்தார். அந்த இளையோரின் சட்டச் சிக்கல்களுக்கு அலோசனை வழங்குவதிலிருந்து அவர்களின் காதல் பிரச்சினைகளுக்கு செவிமடுப்பதுவரை அவர்களுக்கான அவரின் சேவை அகன்றுபரந்தது.

ஸ்ரீகுகன் அவர்கள் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று வாழ்ந்தவர். விருதுளையோ அங்கீகரங்களையோ நோக்கித் தன் பணியை அவர் செய்தாரில்லை. இருந்தபோதும், அவரின் நீண்டகன்ற பணிவாழ்வில் சில விருதுகளும் அங்கீகாரங்களும் அவரைத் தேடிவந்து கௌரவம் பெற்றுக்கொண்டன. அவற்றிலே OCASI அமைப்பால் 2014-லே வழங்கப்பட்ட 'வாழ்நாள் சாதனையாளர்' விருதும், CanTYD அமைப்பால் 2012-லே வழங்கப்பட்ட 'அர்ப்பணிப்பின் வாழ்வு' விருதும், UARR அமைப்பால் 2014-லே வழங்கப்பட்ட 'டாக்டர் வில்சன் ஹெட்' விருதும், அவர் பெரிதும் நேசித்த, மிகவும் உழைத்த அமைப்புகளால் வழங்கப்பட்ட அங்கீகாரங்கள் என்ற வகையிலே முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றைவிடவும், ஒன்ராறியோ அரசின் இருபதாண்டுகாலத் தன்னார்வத் தொண்டருக்கான விருது, ஒன்ராறியோ புதிய சனநாயகக் கட்சியின் ஜே.எஸ். வூட்ஸ்வேர்த் விருது என்பனவும் 2000ம் ஆண்டிலே அவருக்கு வழங்கப்பட்டன.

ஸ்ரீகுகன் ஸ்ரீஸ்கந்தராஜா விட்டுச்சென்றுள்ள வெற்றிடம் நிரப்பமுடியாதது. எனினும், அவர் ஊக்குவித்த, அவரின் பணிவாழ்வால் உந்தப்பெற்ற, அவரை முன்மாதிரியாக வரித்துக்கொண்ட இளையோர் பலர் இன்று கனடாவின் பல்வேறு மட்டங்களிலும் தலைவர்களாகவும், பொதுத்தொண்டாளர்களாக ஆகியுள்ளமை, அவரின் பின்னும் அவரின் பணி தொடரும் என்பதையே சுட்டுகின்றது.



dushy.gnanapragasam@thaiveedu.com



படம்: www.ninaivukal.com

# ஸ்ரீகுகனின் பணி தொடரும்! புகழ் வாழும்!

- ஹரி ஆனந்தசங்கரி

கடந்த மாதம் தமிழ்க் கனடிய சமூகம் எமது மூதோரில் ஒருவரை இழந்துள்ளோம் - ஸ்ரீகுகன் ஸ்ரீஸ்கந்தராஜா.

ஸ்ரீ அண்ணா என அன்போடு அழைக்கப்பட்ட அவர் நாலு தசாப்தங்களுக்கும் மேலாக சமூகத்திற்கு ஆதரவு வழங்கியும் வலுவூட்டியும் அத்தியாவசியமான சேவை வழங்கினார். ஸ்ரீ அண்ணா முதலில் 1970-களின் பிற்பகுதியில் கனடா தமிழீழச் சங்கத்தின் அங்கத்தவராக பணியை முன்னெடுத்தார். பின்னர் கறுப்பு ஜுலையின்பின், பெருந்தொகையான தமிழர்கள் கனடாவில் தஞ்சங்கோர ஆரம்பிக்க, அந்தப் புதியவர்களுக்கு ஆதரவு வழங்கவும் அவர்களைக் குடியமர்த்தவுமென அவர் அயராது உழைத்தார். 1983-இலே சிறப்பு நடவடிக்கைகள் செயற்றிட்டம் செயற்படுத்தப்பட்டு அதன்மூலம் 1,800 தமிழர்கள் கனடாவிலே தங்குவதற்கு அனுமதிக்கப்படுவதற்கு ஸ்ரீ அண்ணாவினதும் அவருடன் இணைந்து கனடா தமிழீழச் சங்கம் என்ற ஒற்றைக் குடையின்கீழ் செயற்பட்ட வேறுபல தமிழ்ச் செயற்பாட்டாளர்களினதும் அர்ப்பணிப்புடன் கூடிய பரிந்துரைச் செயற்பாடே காரணம்.

தமிழ் அகதிகளுக்கும் புதிய குடிவரவாளர்களுக்கும் உதவிகளை வழங்கிவந்தபோதிலும், இலங்கையின் வடக்குக் கிழக்கிலே தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஸ்ரீ அண்ணா திட்டவட்டமாக ஆதரித்தார். 1950-களிலே இலங்கையில் ஓர் இளையவனாக தான் முகங்கொடுக்க நேர்ந்த விடயங்களையும், பல இளந்தமிழர்களை நாட்டைவிட்டு வெளியேறத்தூண்டிய 1956இன் முதலாவது தமிழர்களுக்கெதிரான வன்முறையின் தாக்கங்களையும் அடிக்கடி நினைவுகூர்வார். தனது மக்கள் மீதான அன்பையும், ஓர் ஒடுக்குமுறை அரசிடமிருந்து அவர்கள் விடுதலை பெற வேண்டியதன் தேவையையும் தனது வாழ்வின் பணிக்கான தார்மீக வழிகாட்டியாக வரித்தவர் அவர்.

கனடாவிலே 1970-களிலும் 80-களிலும் கறுப்பின மக்களுக்கெதிராக இனக்காழ்ப்பை எதிர்க்கும் இயக்கங்கள் உருவானபோது அவற்றினூடாக, ஓர் அரசு தனது சிறுபான்மைகளை எவ்வாறெல்லாம் ஒடுக்குகிறது என்பதில் பல ஒற்றுமைகளைக் கண்டார். அங்கே, தனது பணியை முன்னெடுப்பதற்கான வெளியையும் உணர்வுத் தோழமையையும் கண்டடைந்தார். ரொறன்ரோ காவற்படையின் கரங்களால் கொல்லப்பட்ட பல கறுப்பின இளைஞர்களிற்கு நீதிகோரி டட்லி லோவ்ஸ் போன்ற தலைவர்கள் பேரணி சென்றபோது, ஸ்ரீ அண்ணாவும் உடனிருந்தார். காவற்படையினரிடமிருந்து அவர் பொறுப்புக்கூறலை வேண்டினார். பேரணி செல்வதோடு நிறுத்திவிடாமல், இந்த முடிவுகள் எடுக்கப்படும் அவையிலே பாதிக்கப்பட்டவர்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்தார்.

1990-களின் பிற்பகுதியிலே கனடாவிலே தமிழர் மீதான தமிழரின் வன்முறைகள் கட்டின்றிப் பெருக, அப்போது வயதில் முதிர்ந்திருந்த ஸ்ரீ அண்ணா முன்வந்து கனடிய தமிழ் இளைஞர் முன்னேற்ற நிலையம் (CanTYD) என்ற பெயருடன் உருவாகிக்கொண்டிருந்த ஒரு புதிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளராகச் செயற்படச் சம்மதித்தார். பல்வேறு துறைகளிலும் அவரின் வாழ்நாள் பங்களிப்புகளுக்காக அவர் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், CanTYD அமைப்புடன் இணைந்து அவர் ஆற்றிய பணியே அவருக்கு மிகவும் ஆத்ம திருப்தி அளித்தது என்றே நான் எண்ணுகிறேன். CanTYDலே அவரின் வெவ்வேறு உலகங்கள் ஒரு புள்ளியில் சந்திப்பதைக் கண்டார். அங்கே, அடுத்த தலைமுறையை ஆதரிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான தாகம் தீர்ந்தது. வாழ்நாள் பூராகவும் சேமித்த அறிவையும் அனுபவத்தையும் கடத்துவதற்கான வல்லமை கிடைத்தது. மக்களை ஒன்றிணைத்து கட்டமைப்புகளுக்குச் சவால் விட்டு, சமுகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை பூர்த்தியானது. இளையோருடன் அளவளாவி தனது அறிவையும் அனுபவத்தையும் அவர்களுக்கு ஊட்டுவதிலே மணிக்கணக்காகச் செலவிடுவார் அவர்.




CanTYD மீதும் தமிழ் இளையோரின் மீதுமான அவரின் தாக்கமே அவர் விட்டுச்சென்றுள்ள பெருங்கொடையும் கனடாவிற்கான அவரின் மிகப்பெரிய பங்களிப்புமாகும்.

இனக்காழ்ப்புக்கு எதிரான செயற்பாட்டாளராகவும், மாற்றுத் திறனாளிகளுக்கான செயற்பாட்டாளராகவும், அகதிகளுக்கான பரிந்துரைஞராகவும், மக்களுக்கு - குறிப்பாக இளையோருக்கு - வலுவூட்டுபவராகவும் அவர் வாழ்நாளில் ஆற்றிய பல பணிகள் கனடியர்களின் வாழ்வையும் இதயத்தையும் தொட்டுள்ளது. அவரின் பிரிவால் தவிக்கும் அதேவேளை அவர் தடம்பதித்த அமைப்புகள் ஊடாகவும் தொட்டுச்சென்ற மனிதர்கள் ஊடாகவும் அவரின் புகழும் பணியும் தொடரும் என்பதை அறிவோம்.



gary.anandasangaree@thaiveedu.com

# ‘தமிழர் மருத்துவம் ஒரு வரலாற்றுப் பார்வை’ நூல்வெளியீடு

முனைவர் பால. சிவகடாட்சம் அவர்கள் எழுதிய ‘தமிழர் மருத்துவம் ஒரு வரலாற்றுப் பார்வை’ என்னும் ஆய்வு நூல் வெளியீட்டு நிகழ்வும், ரொறன்ரோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாக நூலகத்தின் கனடிய தமிழ் ஓலைச் சுவடிகள் எண்ணிம சேகரத்தின் வெளியீட்டு நிகழ்வும் ரொறன்ரோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாக நூலகத்தில் ஒக்ரோபர் மாதம் 15-ஆம் நாள் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன் மற்றும் மருத்துவர் ராமநாதன் லம்போதரன் ஆகியோர் நூல் மதிப்பீட்டுரைகளை வழங்கினர். (இந்நூலுக்கு தமிழ்நாட்டின் SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பெ. நா. அப்புசாமி / ஏ.பி.ஜே அப்துல்கலாம் அறிவியல் தமிழ் விருதும் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.) இந்நிகழ்வை வல்லிபுரம் சுகந்தன், நற்கீரன் ஆகியோர் மிகச்சிறப்பாக முன்னின்று நடத்தினர்.









குறிஞ்சி நிலத் தலைவன்
தெளிவத்தை ஜோசப்
நினைவாக
கனடா இலக்கிய நண்பர்கள் கூடும்
நினைவேந்தல்
நவம்பர் 13, 2022 – சனிக்கிழமை
பிற்பகல் 4:00 மணி
SCARBOROUGH VILLAGE RECREATION CENTRE
3600 KINGSTON RD | SCARBOROUGH ON M1M 1R9
+1 416 731 1752, +1 416 857 6406



அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.
AATEK
HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
10 வருடங்களுக்கு மேலாக ரொரண்டோவின்
முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய
அனுபவத்துடன்
Licensed Technician
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES
E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280

# கவிக்கோ அப்துல் ரகுமானின் ஆலாபனையில்

# அபூர்வ ராகங்கள்

- இனியவன் இசாறுதீன்

கவிதையின் அடித்தளத்தில் இருக்கும் கவித்துவம் என்பது நீரோட்டம் போன்றது. அறிவியல், அறவியல், மெய்யியல், பண்பாடு, பாரம்பரியம், கலாச்சாரம் ஆகிய வாழ்வியலின் எல்லாத் தளங்களிலும் அது இயங்குகின்றது. அது வரலாற்றையும் மெய்யியலையும் இணைத்துக் கொண்டே இயங்கும் ஒரு நீரோட்டமாகும். அந்த வகையில் வசன கவிதைகள் என்று தோற்றம் தரும் கவிக்கோ அப்துல் ரகுமானின் 'ஆலாபனை' கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகளுக்குள் இந்த நீரோட்டம் உயிர்ப்புடன் இயங்குகின்றது. அவரது கவிதைகளின் அடி ஆழத்தில் உள்ள நீரோட்டத்தில் மெய்யியல் என்பதை உணர முடிகிறது.



கவிக்கோ அப்துல் ரகுமான் இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்தவர். அவர் நவம்பர் 09, 1937-ல் பிறந்து ஜுன் 02, 2017-ல் மறைந்தார். அப்துல் ரகுமான் கவிஞர் மட்டுமல்ல அவரொரு தமிழ்ப் பேராசிரியர். 'கவிக்கோ' என்று எல்லோராலும் கவுரவமாகவே அழைக்கப்பட்டார். 'வானம்பாடி' இயக்க கவிஞர்களோடு இணைந்தியங்கினார். உலகக் கவிதைகளை ஆய்வு செய்து சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார். 1961-ல் வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் விரிவுரையாளராகச் சேர்ந்த கவிக்கோ அப்துல் ரகுமான் படிப்படியாகத் தன் திறமையால் உயர்ந்து இருபதாண்டு காலம் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார்.

தமிழ்நாட்டு எழுத்தாளர்களின் கலை இலக்கியத் தமிழ் நூல்களில் கவிக்கோவின் கவிதை நூல்கள் அற்புதமானவை. உலகில் அதிக தமிழ், கலை-இலக்கிய ரசிகர்களால் அவை ஆராதிக்கப்படுபவை. பால்வீதி, நேயர் விருப்பம், தேவகானம், முத்தமிழின் முகவரி, விதைபோல் விழுந்தவன், பாலைநிலா ஆகிய கவிதை நூல்களைத் தந்திருக்கிறார். நவகவிதை, கரைகளே நதியாவதில்லை, அவளுக்கு நிலா என்று பெயர், முட்டை வாசிகள், தொலைபேசிக் கண்ணீர், உறங்கும் அழகி, காக்கைச் சோறு, பூக்காலம், தட்டாதே திறந்திருக்கிறது, எம்மொழி செம்மொழி, கம்பனின் அரசியற் கோட்பாடு என்றெல்லாம் பல கட்டுரை நூல்களையும் வழங்கியிருக்கிறார்.

தன் தாய்மொழி உருதுமொழி என்றாலும் தன் தந்தையை மிஞ்சிய கவிஞன் கவிக்கோ அப்துல் ரகுமான் புதுக்கவிதைத் துறையில் பெரும் புரட்சி செய்திருக்கிறார். 'பால்வீதி' என்ற புதுக்கவிதைத் தொகுதி மூலம். தன்னை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனம் காட்டிக்கொண்டதால் தமிழ்நாட்டுக் கவிஞர்களில் அவர் ஓர் உயர்ந்த கவிஞனாகவே இனம் காணப்படுகிறார். கவிதையை நேடியாகத் தராமல், படிமம், குறியீடு உவமை, உருவகம் ஆகிய பரிமாணங்களில் வெளிக்கொணர்ந்தார். 'கஸல', 'ஹைக்கூ' எனப்படும் பிறமொழிக் கவிதைகளையும் தமிழில் தந்தார். 'மின்மினிகளால் ஒரு கடிதம்' என்ற அவரது கவிதைநூலில் உள்ள கஸல் கவிதைகள் அதற்குச் சான்று பகர்கின்றன. 'சிறகுகளின் நேரம்' என்ற இருபெரும் திறனாய்வு நூல்களில் அவர் வாழ்க்கையை பற்றி தந்திருக்கும் செய்திகள் ஏராளமானவை. மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட மூதாதையரோடு உரையாடுவதற்கும் இந்த பூமியின் பழைய காற்றையும் வெப்பத்தையும் உள்ளும் புறமும் உணர்வதற்கும் அவை ஓர் இலக்கியக் கருத்துக்கருவூலமாகவே தென்படுகின்றன.

கவியரங்கம் என்பதே மொழியின் மிக நுட்பமான கலை வடிவம். அது ஒரு நிகழ்த்திக் காட்டும் கலை. குரல் வழியே ஒரு கவிஞர் ரசிகரின் இதயத்துக்குள் இறங்கும் முயற்சி. 1960க்குப் பின் கவிதை உலகுக்கு வந்த இவர் கவியரங்கக் கவிதைகளிலும் ஒரு கலைத் தன்மையைக் கொணர்ந்து மக்கள் மயப்படுத்தினார். அப் துல் ரகுமான் யாப்பறிந்தவர். 1950களில் மதுரை தியாகராசர் கல் லூரியில் மாணவராகத் திகழ்ந்த காலத்தில் அவர் நிகழ்த்திய தமிழ் இலக்கிய நிகழ்வுகள் அபாரமானவை. மாமன்னன் ராசராசன் பற்றி அவர் எழுதிய சந்தக் கவிதையொன்று ஒவ்வொரு ஆசிரியர் மாணவர் நாவாலும் அடிக்கடி உச்சரிக்கப்பட்டது.

*‘வீரக் களத்தில் - ரத்த*
*ஈரக் குளத்தில் - நித்தம்*
*வெற்றி பெறுவதிவன் வாடிக்கை - வாளைச்*
*சுற்றும் தொழிலோ ஒரு வேடிக்கை - நல்ல*
*ஈர உளத்தொடு பொன்*
*வாரி அளித்திடுங்கால்*
*இவனுக் கிரண்டல்ல கோடிக்கை’*

என்று சிறப்பான சந்தச் சந்தையில் அவர் மிளிர்ந்தபோதும்

*‘பால் நகையாள் வெண்முத்தப்*
*பல் நகையாள் கண்ணகிதன்*
*கால் நகையால் வாய்நகைபோய்*
*கழுத்து நகை இழந்த கதை’*

என்று சிலப்பதிகாரத்தை இரண்டடியில் சொற்சிக்கனமாகவும் இரத் தினச் சுருக்கமாகவும் செதுக்கியபோதும் அப்துல் ரகுமானுக்கு யாப்பு இப்படி இயல்பாக வாய்த்திருக்கிறது என்பதை உணர முடிகிறது. அவரது மரபார்ந்த பேரறிவும், கூடுதல் கல்வியும் கவி தைக்காகவே வரித்துக்கொண்ட வாழ்வும், கூரிய மதியும் நேரிய சொல்லும் அப்துல் ரகுமானை ஒரு வரகவியாகவே வடிவமைத் தன.

கவிக்கோ அப்துல்ரகுமான் அன்பானவர், அதிரப் பேசாதவர், அகந்தையில்லாத மனிதர், அற்புதமான கவிஞர் என்பதை அறிந் துகொண்டவன் நான். அவரோடு நெருங்கிப் பழகி தெரிந்து உணர்ந்து கொண்டு அனுபவித்த வகையில் நான் அவரது குடும்ப நண்பராகிப் போனேன். அந்த இலக்கிய நட்பையும் இதய உறவையும் இங்கே பகிர்ந்து கொள்வதால் அது ஒரு பேறு என்றே பிரியத்தோடு பெருமைப்படுகிறேன். கவிக்கோ அப்துல் ரகுமான் என்னுடைய ஆதர்ச கவிஞன் அவரது எழுத்துக்கள் மானுடத்தை மேம்படுத்தியவை. அவரது கவிதைக்கலை என்னை யும் ஆற்றுப்படுத்தியது. 1999 காலத்தில் கவிக்கோ அவர்கள் மூன்று மாதங்களைச் சவூதியில் களித்தார் அப்போது என்னுடைய ‘மழை நதி கடல்’ என்ற நூலுக்கு கவிதைகள் பற்றிய கணிப் பீட்டை துலாபாரமிட்டு ஓர் அணிந்துரையாகவே எழுதித் தந்தார். அன்றிலிருந்தே அவருக்கு நான் ஒரு நன்றியுள்ள விதையாய் இந்த பூமியில் முளைத்திருக்கிறேன் என்பதை முன்மொழியாமல் இருக்க முடியவில்லை.

கவிஞர் வைரமுத்து கவிக்கோ நினைவேற்றல் விழாவில் பேசிய போது கவிக்கோவைப் பற்றி இப்படித்தான் பெருமிதமடைந்தார். ‘அப்போதும் சொன்னேன் இப்போதும் சொல்கிறேன் கேளுங்கள். எங்களையெல்லாம் விடச் சிறந்த கவிஞர் கவிக்கோதான். அப்துல் ரகுமான் மீது நிகழ்த்தப்பட்ட மரணம் கொஞ்சம் சூழ்ச்சியானது. அவர் கவிஞர், பேராசிரியர், மார்க்கவாதி, சிந்தனைவாதி, சிறந்த மனிதர் என ஒரே நேரத்தில் ஐந்து ஆளுமைகளை வீழ்த்தி சூழ்ச்சி செய்திருக்கிறது மரணம். பாரதிதாசன் பரம்பரையில் வந்த கவிஞர் கள் அவரையே நகல் எடுத்தார்கள். ஆனால் பாவேந்தரை உள் வாங்கிக் கொண்டு கவிதைகளில் புதுத் தடம் காண்பித்தவர் கவிக்கோ மட்டும்தான். அவர் தமிழ் வேர்களில் புதிய பூக்களைப் பூக்கச் செய்ய முயற்சி செய்தவர்’ என்றார்.

‘கவிக்கோ’ என்பவர் வைகை நதிக்கரையில் மலர்ந்து தமிழ்ப் பொய்கையில் ஊறித் திளைத்த அனிச்ச மலர். ‘அந்த மானைப் பாருங்கள் அழகு’ என்ற கவியரசு கண்ணதாசன் ‘அட..! அந்த மான் கிடக்கட்டும்... அந்த மான்... இந்த இனமானத் தமிழன் எங் கள் ரகுமானின் இன்பத் தமிழ் அந்த மானைக்காட்டிலும் அழகோ அழகு’ என்றார். மக்கள் வெள்ளம் நிறைந்து ரசித்த கவியரங்கில் ‘ரகுமானோ கன்னித் தமிழுக்குக் கிடைத்த வெகுமானம்’ என்று சொன்னார் முதல்வர் கலைஞர் கருணாநிதி.

மதுரை மண் வீரம் செறிந்தது அங்கு பிறந்த சிறுவன் அப்துல் ரகுமானின் மனமோ தமிழ்க் காதல் கொண்டது. ஆனால் அவரது தாய் மொழியோ உருது. அப்துல் ரகுமானின் பரம்பரையே கவி தைப் பரம்பரை. இவரது தந்தை சையத் அஹமத், உருதுவில் கவிதை எழுதியவர் அதிக ஆற்றல் பெற்றவர். தாய் சைனப் பேகம், தாத்தா செய்யத் அஷர்ஃப் இவர் உருது மற்றும் பாரசீக மொழிகளில் கவிதை புனைந்தவர். அந்தக் கவிதை ரத்தம் இவ ருக்குள் ஓடியது. அதனால்தான் கவிக்கோ மகாகவி தாகூரைப் போலவே தன் கவிதையில் தனித்துவத்தைக் காண்பித்தார். ‘அழ கின் சிரிப்பை - தமிழ் அழகின் சிரிப்பை இவர் கை வண்ணத்தில் கண்டேன்’ என்று ஒரு சந்தர்ப்பத்தில் கவிக்கோவைப் பற்றி பாரதி தாசன் கூடப் போற்றியிருக்கிறார்.

கவிக்கோ எழுதிய வரிகள் தோல்வியின் வெற்றி. அவரது படைப் புக்களில் நாம் உலகத்தைப் பார்க்கலாம். அவரது வரிகளில் புத் தரை, ஏசு நாதரை, கன்பூசியசை, உலக ஞானிகளை ஏன் நபி நாயகத்தையும் கூட நாம் சந்திக்கலாம். ‘ரியலிசம், சர்லியசங் களை’ அலசிப் பார்க்கலாம்.

‘ஆலாபனை’ வசன கவிதைகள் மானுடத்தை பேசுகின்றன. அந்த நூலுக்காக அப்துல் ரகுமான் 1999ல் அரசாங்கத்தின் சாகித்திய அகாடமி விருது பெற்றார். கம்பன் விருது, கலைஞர் விருது, கலைமாமணி விருது, தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது, சி.பா. ஆதித்தனார் விருது என தேசிய விருதுகளையும் இன்னும் பல கவுரவ விருதுகளையும் பெற்றிருக்கிறார். ‘தமிழுக்கு அபா யங்கள் சூழ்ந்திருக்கும் இந்தச் சூழலில் அவர் இல்லையென்றா லும் அவர் படைப்புக்கள் எங்களைக் காக்கும், கண்காணிக்கும் என்பது உண்மைதான்.

கவிக்கோ அப்துல் ரகுமானின் ஆலாபனையில் அற்புத ராகமாய் ஒலிக்கிறது ‘நான் யார்?’ என்கிற கவிதை. இதை ஒரு நல்ல கவி தையின் சாரமாய் உச்சரிக்கும் சந்தோசத்தில் சஞ்சரிக்கிறது எனது மனம். இந்த அற்புத வரிகளை தமிழர்கள் தங்கள் நெஞ்சி லும் நெற்றியிலும் எழுதி ஒட்டிக் கொள்ளலாம் என்றே பரிந்துரை செய்கிறது. எந்த அரசு போர் தொடுத்தாலும் மானுடமே வெல்கி றது என்னும் அப்துல் ரகுமானின் இக்கவிதை வாசிக்கவும் வாய் விட்டுப் பேசவும் மெய்யியல் கவிதையில் வாய்த்திருக்கிறது. (ஆலானை பக்: 34,35,36,37)

*‘மகனே!’ என அழைக்கிறாள் தாய்*
*நான் மகனாகிறேன்*

*‘தம்பி’ என அழைக்கிறான் அண்ணன்*
*நான் தம்பியாகிறேன்*

*‘அண்ணா!’ என அழைக்கிறாள் தங்கை*
*நான் அண்ணனாகிறேன்*

*‘அத்தான்! என அழைக்கிறாள் மனைவி*
*நான் அத்தானாகிறேன்*

*‘அப்பா’ என அழைக்கிறாள் மகள்*
*நான் அப்பாவாகிறேன்*

*ஒவ்வோர் உறவினரும்*
*ஒவ்வோர் உறவுப் பெயரால்*
*என்னை அழைக்கின்றனர்.*
*அப்போது அந்த உறவாகவே*
*ஆகி விடுகிறேன்.*

*ஒவ்வோர் அழைப்பிற்கும்*
*நான் ஒவ்வொரு விதமாக*
*நடக்கிறேன்*

*நடக்கிறேனா?*
*நடிக்கிறேனா?*
*தெரியவில்லை.*

*வாழ்க்கை என்ற ஒரே நாடகத்தில்*
*எனக்கு எத்தனை பாத்திரங்கள்?*

*ஒவ்வொரு பாத்திரமாகும்போதும்*
*அதற்கேற்ற வசனத்தைப்*
*பேசுகிறேன்.*

*இந்த நாடகத்தில்*
*என் சொந்தப் பேச்சுக்கு*
*இடமில்லாமல் போகிறது.*

*என் சொந்தப் பேச்சு என*
*ஒன்று உண்டா?*
*தெரியவில்லை.*

*ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெயரால்*
*என்னை அழைக்கின்றனர்*
*என்னை நான் எப்படி அழைப்பது?*

*எனக்கென்று ஒரு சொந்தப் பெயர்*
*உண்டா?*
*தெரியவில்லை*

*ஒவ்வொரு பெயருக்கும்*
*ஒவ்வொரு வேஷம்*
*தரிக்கிறேன்*
*என் உண்மை வடிவம் எது*
*தெரியவில்லை*

*உண்மையில் நான் யார்?*
*வேஷங்களின் கதம்பமா?*
*பெயர்களின் மொத்தமா?*

*எல்லோரும் என்னைச்*
*சில்லறையாக மாற்றிப்*
*பங்கிட்டுக் கொண்டனரா?*
*செலவழிக்கின்றனரா?*

*அப்படியென்றால்*
*நான் என்று*
*ஏதாவது எஞ்சுகிறதா?*

*நான் என்பது*
*வெள்ளைத் தாளா?*
*ஐம்பொறியின் கிறுக்கலா?*
*தெரியவில்லை*

*வயது என்னைச்*
*செதுக்கிக் கொண்டே*
*இருக்கிறது.*

*நான் இருப்பது*
*சிற்பத்திலா?*
*உடைந்து விழுந்த சில்லுகளிலா?*
*தெரியவில்லை.*

*சமூகம் தனக்குப்*
*பொருத்தமான சட்டையாக*
*என்னை வெட்டித் தைத்துப்*
*போட்டுக் கொண்டது.*

*நான் என்பது*
*தைக்கப்பட்ட சட்டையா?*
*வெட்டி எறிந்த துண்டுகளா?*
*தெரியவில்லை.*

*தனியாக இருக்கும்போது*
*நான் நானாக இருக்க முடியவில்லை*

*என் ரத்தத்தில் ஒலிக்கிறது*
*ஒரு கும்பலின் கூச்சல்*

*நான் என்று*
*தனியே ஒன்று உண்டா?*

நான் யாரென்ற கேள்வி இந்த பிரபஞ்ச இயக்கத்தோடு இணைந்திருப்பதைப் போலவே, அக்கேள்வி எழுவதற்கான ஒரு குறிப்பிட்ட சமுதாயச் சூழலும் தொடர்பு கொண்டுள்ளது. மனிதர் என்பவர் அவர் வாழும் காலத்தோடும், சமூகத்தோடும் உறவு கொண்டவர். அவரது மொழியோடும் சூழலோடும் தொடர்புபட்டவர். நான் யார்? என் கடமை எது? எனது உரிமை யாது? என்ற கேள்விகளுக்கான விடை அவர் வாழும் காலம், சூழல் என்பனவற்றோடு ஒப்பிட்டே கண்டறியப்படும். 'மனிதர் என்பவர் புற உலகத்தோடும் அக உலகத்தோடும் தொடர்புடையவர். இவர் தன்னிடம் தான் கொள்ளும் உறவிலிருந்தும் இக்கேள்வி பிறக்கிறது. நாம் விரும்பத்தக்க சமூக உறவுகள் இல்லாத காலங்களில் இக்கேள்வி பிறக்கிறது. இவை முரண்பட்ட மனிதருக்கெதிரான அரசியல், இனவாதம், மதவாதம், சாதி, கொலை, கொடிய சமூக அமைப்பு, அடக்குமுறை, ஏற்றத்தாழ்வு, வறுமை, ஆதிக்கம், அராஜகம், கொடுங்கோலாட்சி ஆகியவைகளில் எதிரொலிக்கிறது.

மனிதர் தன்னை நெருக்கடிக்குள்ளாயிருக்கும் சமூகச் சூழலை தோண்டித் துருவி ஆராயும் பொழுது தனக்குள் ஆழத்தில் இருக்கும் இன்னொரு மனிதரை அவர் இனம் காண்கிறார். சுரண்டலை விரும்பாத தன் இனத்தை அடக்குமுறைக்கு அனுமதிக்காத, தனக்குக் கிடைத்ததை பலரோடும் பகிர்ந்து கொள்கிற ஒரு புராதன பொதுமையாளரைக் காண்கிறார். இவரே ஆதிமனிதர். தனக்குள் ஒரு ஆதிமனிதரை, அகம்பாவம் இல்லாதவரை, பொய் தெரியாதவரை, அடுத்தவனைச் சுரண்டாதவரை தன் மனத்திற்கு நேயமுள்ளவரை தனக்குள் தரிசிக்கிறார். இப்படித்தான் அவரை ஒரு கலைஞராக கவிஞராக ஒரு சமூகமாக அவருக்குள் உயிர்ப்பிக்கிறது. இவற்றைச் சித்தரிக்கும் ஓர் அர்த்தமுள்ள அபூர்வ ராகம்தான் ஆலாபனை.

கவிதை எப்போதும் பல தளங்களில் பேசும் நேராகப் பேசும், எதிர்த்துப் பேசும், அழகுபடப் பேசும் அழகற்றும் நிற்கும். கதை சொல்லும் பழமொழி போல் சுருங்கும். இசையோடு இயங்கும் உரை உரையாய் உரைக்கும். கிராமத்து மொழிபேசும் நகரத்து மொழிக்குள்ளும் நகரும். பல கவிதைகளில் எதிர்நிலைகளாகவும் இயங்கும். ஆறாவது அறிவு குறித்து அப்துல் ரகுமான் இதை ஆழமாகவும் விரிவாகவும் சித்தரிக்கிறார். அறிவு இல்லாமல் மனதகுலம் முன்னேறவில்லை. அறிவு வளர்ச்சி இல்லாமல் மனித சமுதாயம் வாழ்ந்திருக்க முடியாது. இந்த அறிவுதான் நாடு நகரம், நாகரீகம் முதலியவற்றைத் தோற்றுவித்தது. கலை, இலக்கியம், வரலாறு, பாண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றுக்கும் இந்த அறிவுதான் காரணம். இந்த அறிவுதான் நாடு, நகரம் என்று வளர்ந்தது. படை, போராயுதம், பசுமைப்புரட்சி, அணுகுண்டு உற்பத்தி, தொழில்நுட்ப வளர்ச்சி என்றெல்லாம் மனித சிந்தனை மறுவளர்ச்சி பெற்றது. அதுதான் இந்தக் காலம் என்கிறோம் அதை காலம் என்றும் சொல்கிறோம் நம்மை நாகரீகமடைந்தவர்கள் என்றும் நாம் புலம்புகிறோம்.

மதம், குலம், குடும்பம், அரசு, தேசம், ஆதிக்கம், அதிகாரம், தனி உடைமை என்பவற்றையும் இந்த அறிவுதான் தோற்றுவித்தது. வாழ்வை பல்வேறு தளங்களாகப் பகுத்து வகுத்து பிரித்து சிதைத்து விவாதித்து ஒன்றோடொன்று முரண்படச் செய்ததும் இந்த அறிவுதான். இதைத்தான் ஆறாவது அறிவு என்று கொண்டாடுகிறோம். ஆறாவது அறிவைப் பெற்றவனைத்தான் 'மனிதர்' என்று குறிப்பிடுகிறோம். ஆறறிவுக்காகவே நாம் ஆணவப்படுகிறோம். நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போதுதான் எங்கள் ஆணவத்தை விட்டுவிடுகிறோம். அதேவேளை நாம் விழிப்பு நிலையில் இருக்கும்போதே அதைச் செய்தால் நாம் மகத்தான ஒரு மானுட நிலையை அடைந்து விடுகிறோம். நம்மை அறிவாளிகளென்று நம்மை நாமே போற்றிக்கொள்கிறோம். நம்மை உயரினங்களில் உயர்ந்தவர்களாகவும் பேசிக்கொள்கிறோம். ஐயறிவு விலங்குகளைத் தாழ்ந்த இனமாக்கி நாம் ஆதிக்கம் செலுத்துகிறோம்.

நமது ஆறாவது அறிவை மிகக் கூர்மையாக கவிக்கோ அப்துல் ரகுமான் திறானய்வு செய்கிறார். நீ மனிதர்தானா? என்று கேட்கிறார் காட்டுவாசிகளிடமிருந்து நீ உன்னை உயர்வானவர் என்று கருதுகிறாயே. மரணத்துக்கு அஞ்சுகிறாய், அச்சம் உன்னை ஆட்கொண்டிருக்கிறது. பேதம் காட்டுகிறாய். பிரிவினை செய்கிறாய். ஏற்றத் தாழ்வு செய்கிறாய். எல்லாவற்றையும் கோடுகிழித்து அடைக்கிறாய், மரங்களை வெட்டிக் குவித்து வீடு கட்டினாய். விண்மீன்களை எண்ணிக்கையில் அடக்கினாய். குயிலின் இசை போதவில்லை என்றாய். பா இசைத்தாய். இன்னிசை கண்டுபிடித்தாய். மயிலின் நாட்டியம் கவரவில்லை என்ற நீதான் நவீனத்துவம் என்று நவ நாகரீக நடனங்களையும் ஆடிக் காட்டுகிறாய்.

உனக்கு உயிர்களோடு உறவு இல்லை பிரியமில்லை. இயற்கையோடு இணைவு இல்லை இயைவு இல்லை. ஏன் என்னை பிறப்பித்த பூமியோடு கூட பாசமில்லை. குழி வெட்டிக்கொண்டே இருக்கிறாய். உழவுத் தொழிலை நீ மதிக்கவில்லை. உழவர்களைத் தாழ்த்திப் பார்க்கிறாய். உனக்கு உணவு தந்தவரையே மறுதலிக்கிறாய். எல்லாவற்றையும் நீ அடக்கி ஆளுகிறாய். தானே எல்லாவற்றுக்கும் மேலானவர் என்று நினைக்கிறாய். இறுகிய இதயமுள்ள உனக்கு பணம்தான் எல்லாம் என்று அதன் பின்னாலேயே ஓடுகிறாய். அதனால் உன் வாழ்வின் எல்லைகள் சுருங்கிவிட்டன. மனித நேயம் இல்லாததால் உறவுகள் இல்லாமலேயே போய் விட்டன. தன்னலமே உன் இலட்சியமாகிவிட்டது. எல்லாவற்றையும் உனக்காகவே நீ சேர்த்துக் கொள்ள ஓடுகிறாய்.

பெண்ணை நீ மதிக்கவில்லை, அவளை நான்கு சுவர்களுக்குள் அடக்கி விட்டாய். சமையலறையை அவளுக்கு சிறையாக்கினாய். அவளைத் துய்ப்பதற்காகவே படுக்கையறையை நீ ஒரு தனித்துறையாக்கினாய். ஆண்டாண்டாய் பிள்ளை பெறும் அவளை ஓர் ஆபாச இயந்திரமாகவே ஆக்கிவிட்டாய். இப்படி உன் சுயநலத்திற்காகவே நீ எல்லாவற்றையும் உனதாக்கிக் கொண்டாய். நீ அரசியலைத் தோற்றுவித்தாய், சாதி மதங்களைத் தோற்றுவித்தாய், சட்டத்தை இயற்றினாய். பின் அதை நீ மீறினாய். கோயில்களை ஆலயங்களை மசூதிகளையெல்லாம் உன் வழிபாட்டுத்தலங்களென்று கட்டினாய். ஆனால் பேதங்களைக் கற்பித்தாய். முரண்பாடுகளைத் தோற்றுவித்தாய். நீ மதவாதியாகவும் மிதவாதியாகவும் அடிப்படைவாதியாகவும் ஏன் பயங்கரவாதியாகவும்கூட இயங்கினாய். நீ கட்டிய வழிபாட்டுத் தலங்களை உன் மதத்துவேசத்தால் நீயே தகர்த்தெறிந்தாய். எல்லாவற்றையும் கட்டியவரும் நீதான் தகர்ப்பவரும் நீதான். இறைவனிடம் இப்பொழுது கேள்விகள் கேட்கிறாய், உனக்கு இறைவனைத் தெரியவேயில்லை எல்லாவற்றையும் கூறு போட்டுப் பார்க்கும் உனக்கு முரண்பட்ட உன்னில் இறைபக்தி கூட இல்லை.

நீ எதையும் இழக்க விரும்பவில்லை மரணம் உன்னை அச்சுறுத்துகிறது. இறுகிய இதயம் கொண்ட உனக்கு இவைகள்தான் ஆறாவது அறிவு என்று எண்ணுகிறாய். இன்றைய மனிதர் உடைமைகளைத் தோற்றுவித்தது போலவே அவற்றிற்கு அவர் அடிமையானார். அரச பீடத்தில் அமர்ந்திருக்கும் மனிதர் அதிகாரத்திற்கே அடிமையானார். எல்லாவற்றையும் ஏற்றத்தாழ்வோடு பார்க்கும் அவர் அந்த வரையறைக்குள் முடங்கி விட்டார். தான் வெட்டிய குழியில் வீழ்ந்து விட்டார். இவருக்கு வாழ்க்கை தெரியாது, வாழத் தெரியாது, இயற்கை தெரியாது, உயிரினங்கள் பற்றிய அக்கறை கிடையாது. இவர்தான் இன்று உலகளவில் ஆதிக்கத்தையும் அடக்குமுறையையும் தோற்றுவித்தவர். ஆயுதங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் உண்டாக்கிக் கொண்டவர் அடுத்தவர் உடைமையை அபகரித்துக் கொண்டவர். இயற்கையை அழிப்பவர், விற்பதற்கே இந்த உலகம் சொந்தம் என்கிறார். இனவெறியை, பிரிவினையை, போர் வெறியை, கலவரத்தை இவர்தான் தோற்றுவிக்கிறார். பல நூறு கடவுள்களை சிலைகளில் செதுக்குகிறார் வேதப் புத்தகங்களில் வேற்றுமை போதிக்கிறார், மற்றவரை வேற்று மதக்காரர் என்கிறார். பிறரை தாழ்ந்த சாதி என்கிறார். இனங்களில் மதங்களில் வெறுப்பைப் போதிக்கிறானர். மனிதரில் வெவ்வேறு நிறம் காட்டுகிறார். கடவுள்களுக்கிடையில் பகையையும் உண்டாக்குகிறார். இப்படிப்பட்டவரை எப்படி மனிதரென்றழைப்பது? இவர் மனிதரே இல்லை பல்லாயிரம் ஆண்டுகள் படைக்கப்பட்டு வளர்ச்சி பெற்றாலும் அந்த மனித வரலாற்றை இவரே அழிக்க முனைகிறார்.

உலகளவில் எல்லாவற்றையும் அவற்றின் அடித்தளத்தோடு சேர்த்து மாற்ற முனைவது இந்த அறிவுதான். இவரை மனிதர் என்றால், ஆறாவது அறிவில் பெருமை கொள்பவரை ஆறறிவு விலங்கு என்றழைக்கலாம். இந்த ஏழாவது அறிவில் வியப்பது தான் மெய்யியல் பார்வை. மெய்யியல் என்பது கவித்துவத்தின் விளைச்சல், வள்ளுவரையும் இளங்கோவையும் சாத்தனாரையும் சித்தர்களையும் கணியன் பூங்குன்றனாரையும், ஆதாரமாகக் கொண்டவர்கள்தான் நாம். அவர்களைத் தொடர்ந்து அவர்களின் வழித்தடங்களைப் பின்பற்றுபவர்கள் நாம். அவர்கள் வளர்த்தெடுத்த மெய்யியலை நாம் ஆதரிக்கிறோம், ஆராதிக்கிறோம். கவிதை எழுதுபவர்கள் கவிஞர்களோ இல்லையோ ஆனால் கவிதையில் கவித்துவம் இருக்கவேண்டும். கவித்துவத்தோடு மெய்யியலை எழுத வேண்டும். கவிதையில் மெய்யியலைக் கொண்டாட வேண்டும்.

ஒரு கவிஞனே தத்துவ ஞானியாய், ஒரு தத்துவ ஞானியே கவிஞனாய் நம்மோடு வாழ்ந்திருந்தவர் கவிக்கோ அப்துல் ரகுமான். தண்ணீரிலே பிறந்து தண்ணீரிலே மரித்துப்போன மீனைப்போல தமிழோடு பிறந்து தமிழோடு வளர்ந்து தமிழோடு வாழ்ந்து தமிழோடு கரைந்துபோன ஒரு மகத்தான கலைஞன். 'பால்வீதி' தந்தவர் கவிக்கோ அப்துல்ரகுமான். புதுக்கவிதை, நவகவிதை, வசன கவிதை, யாப்புக் கவிதை, செய்யுள், வெண்பா என எல்லா வகைக் கவிதைகளையும் எழுதியவர். மூத்தோர், இளையோர், அறவியலாளர், அறிவியலாளர், அரசியலாளர் எனப் எல்லோராலும் அவரது கவித்துவத்துக்காகப் பெரும் பாராட்டுக்களைப் பெற்றவர்.

'ஆலாபனை' கவிதை நூலில் உள்ள கவிதைகள் அறிவு நுட்பம் பேசுபவர்களுக்கு சர்ச்சையாகவும் இருக்கலாம். வெண்பா எழுதுபவர்களுக்கு வேடிக்கையாகவும் இருக்கலாம். ஆனால் இவர் படைத்திருப்பது கவிதை என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. கவிதை கவிதையாக இருக்க வேண்டும். எதற்குக் கவிதையில் தத்துவம்? என்று பண்டிதர்கள் கேட்கலாம். 'ஆலாபனை' மக்களுக்கான கவிதைகள், மனிதத்தைப் பேசும் கவிதைகள் என்பதை உறுதி செய்த பின்னர்தான் அப்துல் ரகுமானுக்கு ஒரு அங்கீகாரமாக தமிழக அரசு சாகித்திய பரிசு வழங்கியது. வள்ளுவன் போல் கவிக்கோ அப்துல் ரகுமானும் தமிழுலகில் தன் கவிதைகளால் என்றும் நீடு வாழ்வார்: நிலை பெறுவார் என்பது உறுதி.



isarudeen@thaiveedu.com

# நூலகர் சாமுவேல் ஜோன் செல்வராஜா

- என். செல்வராஜா

யாழ்ப்பாண மாவட்டத்தில் மானிப்பாய் பிரதேசத்தில் நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் சாமுவேல் ஜோன் செல்வராஜா. நவம்பர் 14, 1945-ல் பிறந்த இவர், நவாலி அமெரிக்கன் மிஷன் தமிழ்ப் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றவர். பின்னர் மானிப்பாய் மெமோரியல் கல்லூரியிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் தனது உயர்கல்வியைப் பெற்றுக்கொண்டார்.

ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை பட்டினசபை பொது நூலகத்தில் நூலகராகப் பணியையேற்று அங்கு சில காலம் கடமைபுரிந்தார். பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு



மாற்றலாகி வந்து நெல்லியடி பொது நூலகத்திலும், சங்கானைப் பட்டினசபை நூலகத்திலும் பணியாற்றிய பின்னர் மீண்டும் கிழக்கின் மட்டக்களப்பு மாநகரசபை நூலகத்துக்கு மாற்றலாகிச் சென்றிருந்தார்.

சா.ஜோ. செல்வராஜா பணியாற்றிய நூலகங்கள் அனைத்தும் அவரது காலகட்டத்தில் தீவிர வளர்ச்சி கண்டதையும் அவர் அங்கு பணியாற்றிய காலகட்ட அபிவிருத்திகள், இன்றும் தமக்கு அவரை அடையாளப்படுத்திக் கொண்டிருப்பதாக அங்கு பின்னாளில் பணியாற்றிய நூலகர்கள் குறிப்பிடுவதை அவதானித்துள்ளேன். சக நூலகர்களால் மாத்திரமன்றி உள்ளூராட்சி மன்ற நிர்வாகிகளாலும் மதிப்புடன் நோக்கப்பட்ட ஒரு நூலகராகவே சா.ஜோ. செல்வராஜா எம்மிடையே நடமாடிவந்தார். இன்றும் அழியாத அவரது நினைவுகளும் மனத்திரையில் அவ்வாறே நடமாடி வருகின்றன.

ஒன்பது ஆண்டுகள் வரையிலான வயது இடைவெளியிருந்த போதிலும், எனக்கும் ஜோன் செல்வராஜாவுக்கும் இடையில் அயலூர்க்காரர் என்ற வகையிலும், யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர் என்ற வகையிலும், ஒரே நூலகத் துறையில் பணியாற்றிவர்கள் என்ற வகையிலும் யாழ்ப்பாணத்தில் நூலக விஞ்ஞானக் கல்வியைக் கற்ற காலத்திலிருந்தே அவரது இறுதி ஊர்வலம் வரையில் தொடர்பு இருந்து வந்துள்ளது.

பெரும்பாலான நூலகர்கள் தாம் பணியாற்றும் நூலகத்துடன் தமது சேவையை மட்டுப்படுத்திக்கொள்வதை வழமையாகக் கொள்கின்றார்கள். தமது பிரதேசத்திலுள்ள எழுத்தாளர்களுடனோ, அறிவுஜீவிகளுடனோ, சமூக சேவை நிறுவனங்களுடனோ தொடர்பினைப் பேணித் தமது வேலையை அதிகரித்துக்கொள்ள அவர்கள் விரும்புவதில்லை. இன்று நூலக ஜாம்பவான்களாக நாம் காணும் அனைவரும், தாம் பணியாற்றும் நூலகத்திற்கு அப்பாலும் நூலக சேவையை எடுத்துச் சென்றவர்களாகவே உள்ளார்கள்.

1891ல் தொடங்கப்பெற்ற வரலாற்றுப் பழமைமிக்க, நவாலி வாலிப கிறிஸ்தவ சங்கத்தின் (Y.M.C.A.) முக்கிய பொறுப்புகளை வகித்த ஜோன் செல்வராஜா, திரு. ஜே.ஜே. தம்பிராஜா அவர்கள் நவாலி வாலிப கிறிஸ்தவ சங்கத்தின் தலைவராகவிருந்த அந்த எண்பதுகளின் இறுதிக் காலப்பகுதியில், அதன் சிறுவர் அபிவிருத்தி உப குழுவின் தலைவராகப் (Chairman-Children Development Sub-Committee) பணியாற்றிவந்தார். 1979ல் 250 நூல்களுடன் உருவாக்கப்பட்ட நவாலி வாலிப கிறிஸ்தவ சங்கத்தின் (Navaly Y.M.C.A.) இரவல் வழங்கும் நூலகம், செல்வராஜாவின் பணிக்காலத்தின் போது 2500 நூல்களுடன் வளர்ந்திருந்தது. (தகவல்: 15.2.1986ல் வெளியிடப்பட்ட 1985ம் ஆண்டுக்குரிய வை.எம்.-சீ.ஏ. ஆண்டறிக்கை) வை.எம்.சீ.ஏயின் நுலகத்தில், இளையோரின் பாவனைக்காக சிறுவர் நூலகப் பிரிவொன்றின் தேவையை அடிக்கடி நிர்வாகத்தினரிடம் எடுத்துக்கூறிவந்த ஜோன் செல்வராஜா இறுதியில் வெற்றிகண்டார். சிறுவர் நூலகப் பிரிவொன்றை 4.10.1986 அன்று தனது தீவிர உழைப்பின் பெறுபேறாக, யாழ். ஆயர், அதி வண. D.J. அம்பலவாணர் அவர்களின் பிரசன்னத்தில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்திருந்தார்.

அந்நாட்களில் கனடாவிலுள்ள CODE (Canadian Organisation for Development through Education) நிறுவனத்தின் வாயிலாக சிறுவர்

களுக்கான ஆங்கில நூல்களை கப்பல் மூலம் எடுப்பித்து, நூல் பற்றாக்குறையால் நலிவடைந்திருந்த தமிழ்ப் பிரதேசப் பாடசாலைகளுக்கும், சனசமூக நிலையங்களுக்கும் அயோத்தி நூலக சேவைகள் அமைப்பின் வாயிலாக அவ்வப்போது விநியோகித்து வந்திருந்தேன். நண்பர் ஜோன் செல்வராஜாவின் வேண்டுகோளின் பேரில் சிறுவர்களுக்கானதும் இடைநிலைக் கல்விக்குரியதுமான 200 ஆங்கில நூல்களை அவர் உருவாக்கியிருந்த சிறுவர் நூலகத்திற்கு வழங்கவும் ஒழுங்குசெய்திருந்தேன். நவாலி வை.எம்.சீ.-ஏயில் ஒரு புத்தகக் கண்காட்சியை ஒழுங்குசெய்து நாம் வழங்கியிருந்த 200 புதிய நூல்களையும் காட்சிப்படுத்தியிருந்ததுடன் 15.12.1986ல் அதனை ஒரு கிராமிய விழாவாக ஒழுங்குசெய்திருந்ததை ஆச்சர்யத்துடன் உள்வாங்கியிருந்தேன். மேலும், அன்றைய வைபவத்தை என்மூலமாகவே அங்குரார்ப்பணம் செய்துவைத்து



குடும்பத்துடன் - நூலகர் சாமுவேல் ஜோன் செல்வராஜா.

மனம் மகிழ்ந்தார். 20.12.1986 அன்று வெளிவந்த ஈழநாடு பத்திரிகை இந்நிகழ்வுக்கு முக்கியத்துவம் வழங்கிச் செய்தியாக்கியுமிருந்தது. மட்டக்களப்பில் பணியாற்றிக் கொண்டு மாதமொருமுறை வார இறுதியில் மட்டும் வந்துபோகும் ஒருவரால் எப்படி நேர்த்தியாக இவ்விழாவை ஒழுங்குசெய்ய முடிந்துள்ளது என்பதையிட்டு எனக்கு எப்போதும் வியப்பாகவே இருந்துவந்தது. அவரிடமிருந்து ஒரு நூலகரின் தலைமைத்துவம் சார்ந்து கற்றுக்கொள்ள நிறையவே விடயங்கள் இருந்தன.

நவாலிப் பிரதேச மக்களிடம் நூலகம் தொடர்பான விழிப்புணர்வூட்டும் பல வேலைத்திட்டங்களை ஜோன் செல்வராஜா மேற்கொண்டு வந்தார் என்பதற்கு வாழும் சாட்சியாக நான் உள்ளமையால் அவற்றைப் பதிவுசெய்ய வேண்டிய பொறுப்பும் எனக்கு உள்ளது. நவாலிப் பிரதேசத்தில் நூலகவாரம் ஒன்றை 26.12.1985 முதல் 30.12.1985 வரை கிறிஸ்துமஸ் காலத்தில் அவர் ஒழுங்குசெய்து நிதி திரட்டும் பணியில் முழு நவாலிக் கிராமத்தையே ஈடுபடுத்தியிருந்தார். அவ்வாரத்தில் நடமாடும் நூல் விற்பனை நிலையமொன்றை அக்கிராமத்தில் ஏற்படுத்தியிருந்ததுடன், அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பையும், பனைவள அபிவிருத்தி சபையினரின் கண்காட்சி/விற்பனைச் சந்தை ஒன்றையும் அங்கு ஒழுங்குசெய்திருந்தார். இந்த நிகழ்வுகளின்மூலம் அவரால் அந்த ஒரு வாரத்தில் மாத்திரம் ஆறாயிரம் ரூபா நிதி திரட்டித்தர முடிந்திருந்தது என்பதை 1985ம் ஆண்டுக்கான நவாலி வை.எம்.சீ.ஏ. ஆண்டறிக்கை சொல்கின்றது.

நூலகர் ஜோன் செல்வராஜா தனது நூலகவியல் இடைநிலைப் பரீட்சைத் தேவைக்கு மட்டக்களப்பு தொடர்பானதொரு நூல் விபரப்பட்டியல் ஒன்றையே சமர்ப்பித்திருந்தார். பின்னாளில் அதனை விரிவாக்கி Batticaloaniana: A Bibliography of Batticaloa என்ற தலைப்பில் மட்டக்களப்பு நகரசபையின் வேண்டுகோளுக்கிணங்க தயாரித்து வழங்கியிருந்தார். நூற்பட்டியல் பதிவுகள் தொடர்பாக எனது உதவியையும் அவர் நாடியிருந்தார். இதனை விரிவாக அந்நூலின் முகவுரையிலும் குறிப்பிட்டு எனக்கு நன்றி தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பில் முதலாவதாக வெளியானதும் மட்டக்களப்பு பற்றி வெளிவந்ததுமான ஆவணங்களின் நூற்பட்டியலொன்று என்ற வகையில் பட்டிக்கலோனியானா முக்கியத்துவமானது. நூலகர் ஜோன் செல்வராஜா வார இறுதிகளில் நவாலிக்கு வரும் வேளையில் திருநெல்வேலியில் இருந்த எனது நூலகத்திற்கும் தவறாமல் வந்து உரையாடிச் செல்வது வழமையாகவிருந்தது. நூலகவியல் சஞ்சிகை, அயோத்தி நூலகசேவைகளின் பணிகள் தொடர்பான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பரிமாறிக்கொள்வார்.

தான் பிறந்து வளர்ந்த நவாலி மண்ணை மதித்து அம்மண்ணின் வாசிப்பை மேம்படுத்துவதில் மாத்திரம் அவர் அக்கறை கொண்டிருக்கவில்லை. அவர் பணியாற்றிய மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிரான் பிரதேசத்திலிருந்த கிரான் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்துடனும் அவர் வாழ்வின் இறுதிவரை நெருங்கிய தொடர்பினைப் பேணிவந்திருந்தார். இயல்பாக அவரிடமிருந்த நாட்டுக்கூத்து பற்றிய ஆர்வமும் அறிவும் அதற்கு ஒரு மூலகாரணமாக இருந்துவந்துள்ளது. அதனால் அவ்வாச்சிரமத்தின் கிராமியக் கலை இலக்கியப் பணிகளில் தன்னையும் ஈடுபடுத்திக்கொண்டு அம்மக்களின் ஆதரவையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

கிரான் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் 31வது வருடாந்த விழா 09.09.1988ல் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட வேளையில், கிரான் பெரியண்ணன் கலையரங்கத்தினர் 'வருகையின் தூதன்' என்ற வடமோடி நாட்டுக்கூத்து ஒன்றை மேடையேற்ற ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தனர். கிறிஸ்தவ நற்செய்திகளை பாமர மக்களுக்குப் புகட்டும் வகையில் எழுதப்பட்ட நாட்டுக்கூத்தான 'வருகையின் தூதன்' என்ற முற்தூதர் யோவானின் சரித்திரத்தையே 'வருகையின் தூதன்' கிராமிய மணத்துடன் நாட்டுக்கூத்தாக்கியிருந்தனர். இதன் தயாரிப்பிலும் மேடையேற்றத்திலும் அக்கறையுடன் பங்கேற்றிருந்த செல்வராஜா, எனது 'அண்டைவீட்டுக்காரரான' பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களிடம் அடிக்கடி வந்து கூத்துப் பற்றிய அறிவை பட்டைதீட்டிக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இவ்விரு நிகழ்வுகளையும் நினைவுகூரும் வகையில் சிறப்புமலர்

ஒன்றையும் வெளியிடும் பொறுப்பினை ஜோன் செல்வராஜாவே ஏற்றிருந்தார். இம்மலரில் பிரசுரிக்கவென 'ஈழத்து நாட்டுக்கூத்து மரபு' என்ற தலைப்பில் தேர்ந்த நூல்விபரப்பட்டியல் ஒன்றினைத் தயாரித்து வழங்குபடி எனக்கு அவர் அன்புக் கட்டளையொன்றை முன்னரே இட்டிருந்தார். அதே வேளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த கலாநிதி இளையதம்பி பாலசுந்-தரம் அவர்களிடம் 'கத்தோலிக்க சமயமும் ஈழத்து நாட்டுக்கூத்து மரபும்' என்ற கட்டுரையையும், கலாநிதி சி. மௌனகுருவிடம் 'எமது நாடக மரபு' என்ற கட்டுரையையும் மலரில் பிரசுரிப்பதற்கா கக் கேட்டிருந்தார். நாங்களும் உரிய காலத்தில் அவரிடம் அவற்றை ஒப்படைத்திருந்தோம்.

கிரான் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் விழா 09.09.1988ல் சிறப் பாக நடந்து முடிந்த சில காலங்களின் பின்னர், 1989 பெப்ரவரி மாதம் இறுதிப்பகுதியில் காலை 'வருகையின் தூதன்- சிறப்பு மல ரின்' சில பிரதிகளை எடுத்துக்கொண்டு திருநெல்வேலிக்கு வந்து, எம் மூவரிடமும் பிரதிகளை ஒப்படைத்துவிட்டு, ஏற்கெனவே அச் சாகியிருந்த மட்டக்களப்பு நூல்விபரப் பட்டியலின் ஒரு பிரதியை யும் எம்மிடம் தந்துவிட்டு மட்டக்களப்புக்குப் போவதாகக் கூறி விடைபெற்றுச் சென்றுவிட்டார். அதுவே நாம் அவரை சந்திக்கும் இறுதி நாளாக இருக்குமென்று நான் கனவிலும் கருதியிருக்க வில்லை.

இதற்கிடையில் நூலகர் உரிய தினத்தில் பணிக்கு வரவில்லை என்பதை அறிந்த மட்டக்களப்பு மாநகரசபையினர், நவாலியி லுள்ள அவரது இல்லத்திற்கு அவரைப்பற்றி விசாரித்துத் தகவல் அனுப்பியதுடன் அவரைத் தேடும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் மார்ச் மாதம் 5ம் திகதி பொலநறுவை அரசாங்க வைத்தியசாலைச் சவச்சாலையில் அடையாளம் தெரியாத நான்கு தமிழர்களின் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன என்று வைத்திய சாலை நிர்வாகம் அறிவித்திருக்கிறது. இவர்கள் பெப்ரவரி 27 முதல் மார்ச் 2ம் திகதி வரை பொலநறுவைப் பிரதேசத்தில் இடம் பெற்ற படுகொலைகளின் போது உயிரிழந்தவர்கள் என அறியப் பட்டிருந்தது. அவ்வேளையில் அவர்களில் ஒருவரின் சடலம் மட் டுமே அடையாளம் காணப்பட்டிருந்தது.

இது தொடர்பாக 06.03.1989 திகதி வெளிவந்திருந்த உதயன் செய்தி பின்வருமாறிருந்தது:

'பொலன்னறுவையில் நான்கு தமிழர்களின் சடலங்கள்'
பொலநறுவை அரசாங்க வைத்தியசாலை சவச்சாலையில் நான்கு தமிழர்களின் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன என்று நேற்று அறி விக்கப்பட்டது. ஒருவரின் சடலமே இதுவரை அடையாளம் காணப் பட்டது.

இதே வேளை பொலநறுவைப் பகுதியில் கடந்த சில தினங்களில் 16 தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய பகுதிக ளுக்குப் பயணம் மேற்கொண்டவர்களின் சடலங்களாக அவை இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இதே வேளை மட்டக்களப் புக்கு பஸ் மூலம் பயணம் செய்தபோது பொலனறுவையில் கொல்லப்பட்டவர்களில் நவாலியைச் சேர்ந்த ஜோன் செல்வராஜா (வயது 42) என்பவரும் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்னொரு சம்பவத்தில் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாண வனான நடேசன் மணிவண்ணன் என்பவரும் அதே பகுதியில் பஸ் ஸில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம் கொல்லப்பட்டார். இவர் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டி ருந்தார்.'

மேற்கண்ட செய்தி எம்மை மிகவும் நிலைகுலையச் செய்திருந்தது என்பதில் சந்தேகமில்லை. மிகவும் வருத்தத்துக்குரியவகையில், நூலகர் சாமுவேல் ஜோன் செல்வராஜா அந்த பஸ்ஸில் பய ணித்த தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக இனவாதிகளால் 01.03.1989 அன்று படுகொலை செய்யப்பட்டார். அவரது மரணச் சடங்கு நவாலியில் அவரது இல்லத்தில் நடைபெற்றிருந்தது. எனது நண்பனின், சக நூலகனின், அன்பானதோர் உடன் பிறவாச் சகோதரனின் இறுதி அஞ்சலி உரையை ஆற்றவேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டிருந்தது. எவ்வளவோ கூறவேண்டும் என்று தொடங் கிய அன்றைய மரணச்சடங்கின் அஞ்சலியுரை தொடங்கிய வேகத்தில் கண்ணீரில் கரைந்தே போய்விட்டது.

தெய்வபக்தி மிகுந்தவரான சா.ஜோ. செல்வராஜா தமிழ்ப் பிரதே சங்களின் நூலக வளர்ச்சியில், நேர்மையுடனும் அர்ப்பணிப்புட னும் அக்கறைகொண்டு செயற்பட்ட ஒரு துறைசார் நூலகர். அவர் இளவயதில் இல்லாதொழிக்கப்படாதிருந்திருந்தால் ஈழத்துத் தமிழ் நூலகத்துறை மேலும் பல நல்ல காரியங்களை அப்பெரு மகனிடமிருந்து பெற்றுச் செழித்திருக்கும். நிறைந்த கனவுகளுடன் வாழ்ந்திருந்த அவர் வாழ்வே எமக்கு ஒரு கனவாகிப் போய்விட் டது.

அவரது மறைவையொட்டி கலாநிதி வே.இ. பாக்கியநாதன் அவர் கள் வழங்கியிருந்த அஞ்சலிக் குறிப்பினை நூலகவியல் மார்ச் 1989 இதழில் பிரசுரித்திருந்தோம்.

'மட்டக்களப்புப் பொது நூலகத்தில் பிரதம நூலகராகக் கடமை யாற்றி வந்த திரு. ஜோன் செல்வராஜா, கடமைக்காகச் செல்லும் வழியில் பொலனறுவைக் காட்டுப் பகுதிக்கு அண்மையாகச் சிங் களக் காடையர்களினால் மிகக் கொடூரமான முறையில் தாக்கப் பட்டுத் தன்னுயிரை விட்டார் என்ற செய்தி நூலக உலகிற்கு ஒரு பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

பழகுவதற்கு இனியவராகவும், பண்புடையவராகவும் விளங்கிய இவர் தமது நூலகக் கல்வி, பதவி பெற்றதுடன் நிற்கவில்லை என் பதைப் புலப்படுத்தும் வகையில் அவர் பதவி வகித்த பொது நூலகங்களான திருகோணமலை பொது நூலகம், சங்கானைப் பொதுநூலகம், மட்டக்களப்புப் பொது நூலகம் ஆகியவற்றில் தமது ஆளுமையின் முத்திரையைப் பொறித்துச் சென்றுள்ளார். இறுதியாக இவர் கடமையாற்றிய மாவட்டமான மட்டக்களப்பு மாவட்டத்திற்குத் தனது பங்களிப்பைச் செலுத்தும் முகமாக மட் டக்களப்பு சார்பாக விரிவானதொரு நூற்தொகையினைத் தொகுத்து அம்மாவட்ட அரசாங்க அதிபரிடம் வெளியிடும்படி கையளித்துள்ளார். சிலர் பதவிகளினால் பெருமையடைகின்றனர். ஆனால் ஒரு சிலரோ பதவிகளைப் பெருமைப்படுத்துகின்றனர். மறைந்த செல்வராஜா இரண்டாவது வகையினைச் சார்ந்தவர் என் பது வெள்ளிடைமலை.

அமரர் செல்வராஜாவின் மறைவு நூலகர்களுக்கும், நூலகவுல குக்கும் முக்கியமாகப் பொதுசன நூலகங்களுக்கும் பேரிழப்பா கும். தமது பங்களிப்பினைச் செய்யத் தொடங்கியவுடனேயே காலன் இவரது உயிரைக் கவர்ந்து சென்றுவிட்டான். இதனால் யாழ்ப்பாணக் கல்லூரி திறன்மிக்க பழைய மாணவர் ஒருவரை இழந்துள்ளது.

நவாலிக் கிராமம் சமூகசேவகனைப் பலிகொடுத்துள்ளது. நூலகவு லகம் தலைசிறந்த நூலகரொருவரை இழந்துள்ளது. அவரது குடும்பம் பண்பும், பொறுப்புமிக்க தலைவனைப் பறிகொடுத்துத் தவித்து நிற்கின்றது. நாம் செய்யக்கூடியது ஆறுதல் வார்த்தை கூறித் தேறுதல் சொல்வதொன்றுதான்.

அன்னாரது பாரியாருக்கும் பிள்ளைகட்கும், உறவினர்களுக்கும் நூலகர்கள் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப துடன் அவரது பரிசுத்த ஆத்மா இறைவனடியில் சாந்தியடைவ தாக எனப் பிரார்த்திக்கின்றோம்.



selvarajah.n@thaiveedu.com

# சமூகத் தொண்டன்

# ‘மில்க்வைட்’ கனகராஜா

- வே. விவேகானந்தன்

யாழ்ப்பாண மண்ணிலே சமூக மேம்பாட்டுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த ஒப்புரவாளர்களுள் அமரர் ‘மில்க்வைட் கனகராஜா’ தனித்துவமான ஒருவர். இவர் வீ. முருகேசு கந்தையா - மீனாட்சி அம்மாள் இணையருக்கு மகனாக 1927-ம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார்.

கனகராஜா அவர்கள் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை ‘பீட்டர் பாடசாலை’ என அழைக்கப்பட்ட கில்னர் கல்லூரியில் கற்றார். அதன் பின்னர் மாமனார் கார்திகேசு கம்பளையில் நடத்திய வர்த்தக நிலையத்தில் மைத்துனர் செல்லையாவுக்கு உதவியாகப் பணிபுரிந்தார். சிறிது காலத்தின் பின்னர் கினிகத்தேனையில் இவரது தமையனார் இரத்தினகோபால் மேற்பார்வையாளராகப் பணியாற்றிய, அரசலாக்கந்தை இறப்பர் தோட்டப் பாட



சாலை ஒன்றில் ஆசிரியராகச் சேர்த்து விட்டார். இக்காலப் பகுதியில் தென்னக்கும்புர என்னும் இடத்தில், மகரிஷி சிவானந்தரின் சீடர் சுவாமி சச்சிதானந்தர் நடத்தி வந்த யோகாசனப் பயிற்சி வகுப்பிலும் இணைந்து கொண்டார். அப்பயிற்சியை நிறைவு செய்த அவர் திவ்ய ஜீவன சங்கத்தின் சார்பில் சான்றிதழையும் பெற்றுக்கொண்டார். அத்துடன் டாக்டர் சிவலோகநாதனிடம் தற்காப்புக் கலையினையும் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

மகரிஷி சிவானந்தரின் சிந்தனைகளால் கவரப்பட்ட கனகராஜா அவர்கள் சமூகசேவை செய்யும் நோக்குடனும், தனது தந்தையாரின் வேண்டுகோளுக்கிணங்க, குடிசைக் கைத்தொழிலாக மேற்கொண்ட சவர்க்கார உற்பத்தியை, நவீன முறையில் முன்னெடுக்கும் எண்ணத்துடனும் யாழ்ப்பாணம் திரும்பினார்.

கனகராஜா அவர்களின் தந்தையார் வீ. முருகேசு கந்தையா அவர்கள் வண்ணார்பண்ணையில், தட்டாதெரு சந்திக்கு அண்மையில், 1927-ம் ஆண்டு குடிசைக் கைத்தொழிலாக சவர்க்கார உற்பத்தியை ஆரம்பித்தார். அதனால் அவரை எல்லோரும் ‘சவர்க்காரக் கந்தையா’ என்றே அழைத்தனர். அக்காலப் பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்றதால், ஏனைய பொருள்களைப் போல, சவர்க்கார வகைகளும் இறக்குமதி செய்யப்பட்டன. அவை யாழ்ப்பாணத்திலும் பெருமளவில் விற்பனை செய்யப்பட்டன. ஆனால், அவை அழுக்கை நீக்கினவே தவிர வெண்மையைத் தரவில்லை. நீலத்தை தனியாக வாங்கி நீரில் கரைத்து மீண்டும் தோய்க்க வேண்டியிருந்தது. ஆனால் கந்தையா உருவாக்கிய சவர்க்காரம் நீலம் தோய்க்காமலேயே. அழுக்கை நீக்கியதோடு வெண்மையையும் தந்து விந்தை புரிந்தது. குறைந்த விலையில் நிறைந்த பயனைக் கொடுத்தது. மக்கள் அதனை ‘நீலக்கட்டி’ என அழைத்தனர். கந்தையா அவர்கள் சோதிட நிபுணரான இராசலிங்கம் அவர்களின் ஆலோசனைப்படி ‘மில்க்வைட்’ எனப் பெயரிட்டார். இந்தியாவில் இருந்து ஓடங்களில் கொண்டு வரப்பட்ட உவர் மண்ணைக் கொண்டு உப்புச் சவர்க்காரத்தையும் செய்தார். இப்படியாக மில்கவைற் நிறுவனம் படிப்படியாக தனது உற்பத்திகளை விரிவாக்கியது.

கனகராஜா அவர்கள், 1951-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14-ம் திகதி செல்லையா அவர்களின் மகள் நாகம்மையைத் திருமணம் செய்து கொண்டார். 1952-ம் ஆண்டு கனகராஜா மில்க்வைட் சவர்க்கார நிறுவனத்தின் உரிமையாளர் ஆனார். அவரது தலைமையில் கீழ் சவர்க்கார நிறுவனம் விரிவடைந்து பலவித உற்பத்திகளைத் தயாரிக்கத் தொடங்கியது. மில்க்வைட் நீலசோப், நியூ மில்க்வைட் சோப், மெடிக்கேட்டட் சோப், மில்க்வைட் பார் சோப், நீம் வாசனை சோப், மில்க்வைட் சலவைப் பவுடர், என்பவற்றுடன் நீம் சுகாதார தூபம், ஒலிவ் ஸ்நானப் பவுடர், நீமியா உரப் பசளை, நீமரொக்ஸ் கிருமி நாசினி, சைபால் சுத்திகரிப்பு மருந்து போன்றவற்றையும் உற்பத்தி செய்தது. அத்துடன் நூற்றுக்கணகான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனமாகவும் விளங்கியது.

சவர்க்கார உற்பத்திக்குத் தேவையான முக்கிய மூலப்பொருளான கோஸ்ரிக் சோடாவினைப் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் இருந்தே பெறவேண்டி இருந்தது. அங்கு மேற்பார்வையாளராக இருந்த அம்பலவாணர் சின்னத்தம்பி அவர்கள் பேருதவி புரிந்து கனகராஜா அவர்களுக்கு உறுதுணையாக இருந்தார். தேங்காய் எண்ணெய்யை குருநாகல் குளியாப்பிட்டி, சிலாபம், புத்தளம், நாத்தாண்டியா போன்ற இடங்களில் இருந்து பெற்றுக் கொண்டார்.

வேப்பங்கொட்டைகளை சேகரித்துத் தனது சவர்க்கார உற்பத்திக் குப் பயன்படுத்தியதோடு அவற்றைக் காயவைத்து, எரித்து, நுளம்புத் தொல்லைகளில் இருந்து விடுபடவும் ஆலோசனை வழங்கினார்.

தேசிய நலனில் அக்கறை கொண்ட கனகராஜா அவர்கள் சவர்க்




காரம் தயாரிக்கும் யந்திரங்களையும், தொழிலகத்தில், சவர்க்கா ரக் குழம்பு தயாரிக்கும் தொட்டி, சவர்க்காரம் இறுகவிடும் உரு-




ளைகள், சவர்க்காரத்தை வெட்டும் இயந்திரங்கள், முத்திரை பொ-றிக்கும் யந்திரங்கள் என ஏனைய இயந்திரங்களையும் உள்ளூரி லேயே உருவாக்கினார். இந்த யந்திரங்களை வடிவமைப்பதிலும் உருவாக்குவதிலும் நாராயணசிவம் என்பவர் நிபுணத்துவம் பெற்ற வராக இருந்தார். மில்க்வைட் தயாரிப்புகளின் முத்திரையாக VMK என்னும் மூன்று எழுத்துகள் பொறிக்கப்பட்டிருக்கும். அவை வீரகத்தி, முருகேசு, கந்தையாபிள்ளை ஆகிய பெயர்களின் முதல் எழுத்துகளின் கூட்டாகும்.

மில்கவைத் தொழிலகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சவர்க்காரங் கள் யாழ். குடாநாட்டுக்குள்ளேயும் வெளியேயும் பெருமளவில் விற்பனையாகின. வடமத்திய மாகாணத்தில், நாட்டுப்புற நகரமாக விளங்கிய, கெக்கிராவ என்னும் இடத்தில் வியாபார நிலையத்தை வைத்திருந்த, குரும்பசிட்டியைச் சேர்ந்த நாகமுத்தர் சுப்பிரமணி யம் என்பவர், லொறிக் கணக்கில் மில்க்வைட் தயாரிப்புகளை வாங்கி, காட்டுப் பகுதிகளில் சேகரிக்கப்பட்ட இலுப்பை விதை-களை மூடை மூடையாக அனுப்பி வைத்தார்.

கனகராஜா அவர்கள் சவர்க்கார உற்பத்தியை மையமாக வைத்து, இயற்கையோடு இணைந்து, ஆற்றிய சமூக, சமய, பொருளாதாரப் பணிகள் அளப்பரியனவாகும். சவர்க்கார உற்பத் தியை விளம்பரம் செய்யும் நோக்குடன் 'மில்க்வைட்' என்னும் செய்திப் பத்திரிகையை ஆரம்பித்த அவர், சிறந்த கல்விமானா கிய க.சி. குலரத்தினம் அவர்களை ஆசிரியராக நியமித்து, சிறு வர் முதல் பெரியோர் வரை பயன் பெறும் வகையில் வெளியிட்டு வந்தார். திரு. க.சி. குலரத்தினம் அவர்கள் இருபத்தைந்து ஆண் டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அரச மொழித் திணைக்களத் தில் பாடநூல்கள் எழுதிய அனுபவம் உள்ளவர் என்பது குறிப்பி டத்தக்கது. அப்பத்திரிகையில் கல்விமான்களின் வரலாறு, உடல் நலம், சித்தமருத்துவம், சிறுவர்பகுதி, மாதர்பகுதி, திருக்குறள் விளக்கம், அருள்மொழிகள், பண்பாடு, பனைவளம், பொது அறிவு வினாவிடை, யோகாசனம் என ஏராளமான செய்திகள் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிவந்தன.

ஒரு நாட்டின் எதிர்காலச் செல்வங்கள் சிறுவர்களே, என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட கனகராஜா, சிறுவர்களின் உடல் - உள வளர்ச்சிக்குப் பெரும்பணி ஆற்றினார். ஐக்கிய நாடுகள் சபை 1979-ம் ஆண்டினை சர்வதேச சிறுவர்கள் ஆண்டு எனப் பிர-கடனப்படுத்தியதைத் தொடர்ந்து, 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் ஒன்பதாம் திகதி யாழ். முற்றவெளி அரங்கில், மில்க்வைட் தொழி லகத்தின் ஆதரவில், சர்வதேச சிறுவர் ஆண்டு விழாவினை சிறப் பாக ஏற்பாடு செய்திருந்தார். இவ்விழாவில் யாழ். சிவானந்த சிறு வர் பாடசாலை, ஆனைக்கோட்டை அமெரிக்க மிசன் பாடசாலை, பெரியபுலம் மெதடிஸ் மிசன் பாடசாலை மாணவ, மாணவியர் பங் குபற்றினர். அவர்கள் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கி மகிழ் வித்தார். ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய இரு நூல்களை யும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் ஆயிரக்கணக்கில் அச்சடித்து வழங்கினார். யாழ். வை.எம்.சி.எ. மண்டபத்தில் சிறுவர் சித்திரக் கண்காட்சி வைபவத்தை திறந்து வைத்து சிறுவர்களுக்குப் பரிசில் களையும், பாராட்டுப் பத்திரங்களையும் வழங்கினார். திருநெல்வே லியிலும் கிளிநொச்சி குருகுலத்திலும் வாழ்ந்து வந்த சிறுவர்க ளுக்கு கொப்பி, பென்சில் போன்ற கல்வி உபகரணங்களை வழங்கி மகிழ்ந்தார். சிறுவர்களின் மனதில் தமிழ் உயிர் எழுத்து கள், மெய் எழுத்துகள் இலகுவாகப் பதியும் வண்ணம் பெரிய எழுத்துகளில் அச்சிட்டு வழங்கினார்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பாடசாலைகள், பொது நூல கங்கள், சனசமூக நிலையங்கள், சர்வோதயம் போன்ற சமூக அமைப்புகள் எனப் பலவற்றுக்கும் நூல்களை அன்பளிப்புச் செய் தார்.

சுதேச பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதில் அவரது சிந்தனை வியப்புக்குரியது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கற்பகதருவாகிய பனை மரங்களை வளர்ப்பதற்காக மக்களிடம் பனம் விதைகளைச் சேகரித்து, எங்கும் விதைத்துப் பனை வளத்தைப் பெருக்கினார். அத்துடன் நெல்லி, கடம்பு, மலைவேம்பு, சஞ்சீவி, வேம்பு, இலுப்பை, தென்னை போன்ற தாவர வகைகளையும் நாற்று மேடைகளில் பதிவைத்து யாழ். குடாநாடு எங்கும் விநியோகித் தார். 1977-ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது, மலையகத்தில் இருந்து தமிழ் மக்கள் குடிபெயர்ந்து, வன்னிப் பகுதியில் குடியே றிய போது அவர்களின் வாழ்வாதாரத்துக்காக முருங்கைத் தடி கள், மரவள்ளித் தடிகள், பப்பாசி விதைகள் ஆகியவற்றைச் சேக

ரித்து அங்கு நடுவித்தார். ஆனைக்கோட்டை வித்துவான் வ. கந்தையா அவர்கள் ஏராளமான முருங்கை, மரவள்ளித் தடிகளை



அவரது மனைவி, தாய்,
பித்துக்குளி முருகதாஸ் ஆகியோருடன்

வழங்கியிருந்தார். மழைக் காலத்துக்கு முன்னர் குளங்களை தூர் வாரல் அல்லது ஆழமாக்கல் முயற்சிகளுக்கு மில்க்வைட் நிறுவனம் மண்வெட்டி, தாச்சி போன்ற உபகரணங்களை வழங்கி மக்களை ஊக்குவித்தது. இவ்வாறு இலந்தைக்குளம், பாற்குளம், பரவைக்குளம், பிராமணக்குளம், நந்தாவில்குளம், கந்தரோடைக்குளம் போன்ற பல குளங்கள் தூர் வாரப்பட்டதோடு அம்மண் விவசாயத்துக்கும் நல்ல பசளையாகப் பயன்படுத்தப்பட்டது.

கனகராஜா அவர்கள் தனது முயற்சிகளில் ஏனையவர்களை இணைத்தும், சுயதொழில் செய்பவர்களுக்கு ஊக்கமளித்தும், முன்மாதிரியாக விளங்கினார். குறிப்பாக 'சுந்தர்' என அழைக்கப்பட்ட சிரித்திரன் ஆசிரியர் சிவஞானசுந்தரம் அவர்களை, பனை வளர்ப்பதில் தன்னுடன் இணைத்துக் கொண்டார். பின்னர் பனை வளர்ப்பில் சுந்தர் கொண்ட ஆர்வத்தை கனகராஜா பின்வருமாறு குறிப்பிட்டார். 'எமது பணிகளில் எம்முடன் இணைந்து வன்னிப் பிரதேசத்தில் பனம் விதைகளை விதைப்பதில் அவர் காட்டிய ஆர்வமும், கொண்ட பெருமிதமும் எனது நெஞ்சில் என்றுமே பசுமையாக நிறைந்து நிற்கும் எனவும், பனை மரங்கள் கூட சிரித்திரன் சிவஞானசுந்தரம் அவர்களை மறக்கமாட்டா' எனவும் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார். இணுவிலைச் சேர்ந்த பொன். நடராஜா அவர்கள், 'அண்ணா பற்பொடி', 'அண்ணா கோப்பி' என சுயதொழிலைத் தொடங்க விரும்பிய போது, 1960-ம் ஆண்டு கோப்பி அரைக்கும் இயந்திரத்தை இயக்கி ஆரம்பித்து வைத்து ஊக்கமளித்தார்.

கனகராஜா அவர்களின் பொதுச் சேவை எத்துணை தூய்மையாக இருந்ததோ, அதுபோலவே தொழிலகத்தின் மேல் மாடியில் இருந்த 'திருவாலவாய்' என்னும் பெயர் கொண்ட அவரது இல்லமும் கோயில் போல் காட்சியளித்தது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் திருக்குறள், திருவாசகம் போன்ற நூல்களும், யோகர் சுவாமிகள், சிவானந்தர், காந்தியடிகள் போன்றவர்களின் உருவப் படங்களும் அவர்களின் பொன்மொழிகளும் அவரது இல்லத்தை அலங்கரித்தன.

கனகராஜா அவர்கள் மில்க்வைட் தொழிலக உரிமையாளராக மட்டுமின்றி, Multi Rice Industries Ltd, Multi OIL Industries Ltd ஆகிய நிறுவனங்களிலும் தலைவராக சிலகாலம் பணியாற்றியுள்ளார். Hatton National வங்கியின் ஆயுட்கால உறுப்பினராக விளங்கிய இவர், பனை அபிவிருத்தி சபை இயக்குனராகவும் செயற்பட்டுள்ளார்.

கனகராஜா அவர்கள் சமயம், சமூகம், பொருளாதாரம், விவசாயம் போன்ற துறைகளில் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். சேர். பொன் இராமநாதன் நினைவாக முத்திரை வெளியிடப்பட்ட போது, அவரது வாழ்க்கை வரலாற்று நூலையும் வெளியிட்டார். 1977-ம் ஆண்டு மில்க்வைட் நிறுவனத்தின் பொன்விழா நினைவாக, 'பனைவளம்' என்னும் நூல் வெளியாகியது. 1987-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வீ.மு. கந்தையா நினைவுதின நிகழ்வில் 'திருவள்ளுவர் கண்ட வேளாண்மை' என்னும் நூல் வெளியிடப்பட்டது. அதேவருடம், மில்க்வைட் நிறுவனத்துக்கும், கனகராஜா அவர்களுக்கும் அறுபது ஆண்டுகள் நிறைவு பெற்றன. போர்ச்சூழல் காரணமாக சஷ்டியப்த பூர்த்தி விழா அமைதியாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் 'அறுபதுக்கு அறுபது' என்னும் நூல் வெளியிடப்பட்டது. தமிழன்னையின் பெருமை கூறும் அறுபது வாக்கியங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இவ்வாறே 'பல்லும் சொல்லும்', 'யோகக்கலை', 'வேம்பு', 'சஞ்சலம் தீர்க்கும் சணல்', 'முந்தையோர் போற்றிய முருங்கை', 'துளசியின் மகத்துவம்', 'மழைப்பதிகம்', 'நவீன முறையில் பனை வெல்லம்', 'நாவலரின் நித்திய கருமவிதி', 'படிப்பினை', சுவாமி சுத்தானந்த யோகி எழுதிய 'யோகசித்தி' போன்ற பல நூல்களை வெளியிட்டார். 'நாவலர் நீதிநூல்' என்னும் நூல் வெளியீட்டின் போது பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் முதற் பிரதியைப் பெற்று மதிப்பளித்தார்.

கனகராசாவின் நூல்கள், பொன்மொழிகள், சவர்க்காரத்திற்கான கடதாசி உறைகள், சுலோக அட்டைகள் போன்ற பிரசுர முயற்சிகளுக்குப் பத்திரிகை ஆசிரியர் க.சி. குலரத்தினம், அவர்களும், சாந்தி அச்சக உரிமையாளர் தி. நாகரத்தினம் அவர்களும் இரு கண்களாக செயற்பட்டனர். க.சி. குலரத்தினம் அவர்கள் தேவையானவற்றைப் பொருத்தமாக எழுதித் தொகுத்து உடனுக்குடன் கொடுக்க, கனகராசாவின் சகோதரியின் கணவர் தி. நாகரத்தினம் அழகாகவும் விரைவாகவும் அச்சிட்டுக் கொடுத்தார்.

கனகராஜா அவர்களின் தமிழ், சமூக, சமய, விவசாய, பொருளாதாரப் பணிகளை ஒரு கட்டுரைக்குள் அடக்கிவிட முடியாது என்பதே யதார்த்தமாகும். அவரது முயற்சிகளுக்காகப், பல்வேறு அமைப்புகளும் இருபத்தேழு பட்டங்களை வழங்கி கௌரவித்துள்ளன. இலங்கை அரசு சமாதான நீதவான் பட்டத்தினை வழங்கிப் பெருமைப்படுத்தியது. அமெரிக்காவிலே புளோரிடா மாகாணத்தில் உள்ள மானுடவியல் படிப்புகளுக்கான அமெரிக்கப் பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் வழங்கி மதிப்பளித்தது. அத்துடன் அமெரிக்க வெளியீடான WHO IS WHO பேரகராதியிலும் இவரது பெயர் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளையும் நன்கு அறிந்த கனகராஜா அவர்கள் இனம், மதம், மொழி, பிரதேச எல்லைகளைக் கடந்து சகல மக்களுக்கும் சேவை செய்தார்.

*தானாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு*

என்னும் வள்ளுவர் வாக்குக்கிணங்கத் தான் ஈட்டிய செல்வம் அனைத்தையும் சமூகத்துக்காகப் பயன்படுத்தி ஓர் ஒப்புரவாளனாக வாழ்ந்த கனகராஜா அவர்கள் 1998-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் திகதி இவ்வுலக வாழ்வை விட்டு நீத்தார். இத்தகைய சமூகத் தொண்டர்களும் யாழ். மண்ணில் வாழ்ந்தார்கள் என்பது எமக்குப் பெருமையே. இதனை இன்றைய இளம் சமுதாயமும் அறிய வேண்டியது அவசியமாகும்.



vivekananthan.v@thaiveedu.com

## மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

# குறிஞ்சித்தேன் தந்த லிங்கதாசன்

27

- மல்லியப்புசந்தி திலகர்

1960 களில் முகிழ்ந்த மற்றுமொரு மலையகக் கவிஞர் க.ப. லிங்கதாசன். பாரதியின் தாக்கத்தால் பாரதிதாசன் எனப் புனைப்பெயர் வைத்துக்கொண்டதுபோல் மலையக இளைஞர் தளபதி இர. சிவலிங்கம் அவர்களின் பாற்கொண்ட ஈர்ப்பினால் பழனியாண்டி எனும் தனது இயற்பெயரை 'லிங்கதாசன்' என வைத்துக்கொண்டவர். இவரது எழுத்தில் இர. சிவலிங்கம் அவர்களின் சிந்தனைத் தாக்கத்தைத் தரிசிக்கலாம். ஆரம்பத்தில் ஆசிரியராகவும் பின்னர்




வணிகத்துறையிலும் இருந்த இவர், சிறுகதை மற்றும் மரபுக் கவிதைகளை எழுதியுள்ளார்.

'குழந்தைக்குயில்' (1985), குறிஞ்சித்தேன் 2000 (அன்னாரது மறைவுக்குப்பின் அவரது மகன் ப. கிருபாகரன் தொகுத்து லிங்கன் பதிப்பக வெளியீடாக வந்தது) ஆகியன இவரது கவிதைத் தொகுதிகளாகும். ஔவையின் அமுத மொழிகள் எனும் சிறுவர் இலக்கிய நூலையும் எழுதியுள்ளார்.

'இரத்தத்தோடு இரத்தமாய்க் கலந்துவிட்ட மூடநம்பிக்கைகள், சாதி, சமயப் பூசல்கள், சங்கச் சண்டைகள், போட்டி - பொறாமைகள் போன்ற அறியாமைகளின்றும் விடுபட்டு ஒளி வாழ்வைப் பெறுவதற்காகவும் அறிவொளி பெற்ற ஏனைய மக்களைப் போன்று மதிக்கத்தக்க மனிதர்களாக வாழ்வு மலரவும் புத்தெழுச்சி பெறவும் வீறுநடைபோட்டு முன்னேறிச் செல்லவும் வழிதான் என்ன? என்று என்மனம் சிந்திக்கத் தொடங்கியது. என் சிந்தனைப் பறவை சிறகடித்துப் பறக்கும்போது இதய வெளியிலே உதயமாகும் ஒப்பற்ற கருக்கூடல்கள் ஒன்று திரண்டு ஆக்கங்களாய் மழையெனப் பொழிகின்றன. என் விழைநிலத்தின் உழவர்களாய்த் திகழும் என் சமூகத்தின் புதிய வாழ்வுக்காக அவர்களின் வாழ்வுப் போராட்டங்கள், பொருளாதாரச் சிக்கல்கள், கல்வியறிவு, இலக்கியம், கலை, கலாச்சாரப் பண்பாடுகளின் வளர்ச்சி என்பவற்றுக்காக எழுதினேன்.' எனத் தான் எழுத வந்த உன்னத நோக்கத்தை எடுத்துரைக்கிறார் கவிஞர் க.ப. லிங்கதாசன். (குறிஞ்சித்தேன் - முன்னுரை).

***'கற்க வழியே இல்லை! என்ற***
***கவலையை நீ யொழியடா! - கல்வி***
***கற்க வேபல கலாசாலைகள்***
***கட்டி முடிக்க நீ முந்தடா!***
***வேலை இல்லை என்ற சொல்லை***
***விரட்டியடிக்க நீ முந்தடா! - நம்***
***மலை நாட்டி லெங்கும் இழிவு நீக்கி***
***நாடி யெதையும் செய்யடா'***

என இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையிலான கருத்துக்களை எளிமையான மரபுக் கவிதையில் பாடியுள்ளார் கவிஞர் க.ப. லிங்கதாசன். இவரது 'குறிஞ்சித்தேன்' கவிதைத் தொகுதி அறுபது மரபுக் கவிதைகளைக் கொண்டது.

'மலைநாடே! எனத் தொடங்கும் முதலாவது கவிதையின் ஒரு பகுதி இவ்வாறு அமைகிறது.

***'... கற்றிருப்போரே காடு மலையெல்லாம்***
***காண விழைகிறேன் மலைநாடே!'***

இதன் மூலம் மலையகம் எவ்வாறு கல்வியில் வளர்ச்சிப்பெற்றிருக்க வேண்டும் எனும் தனது கனவை வெளிப்படுத்தியுள்ளார்.

'புதுயுகம் படைப்போம்' எனும் கவிதையில் இவ்வாறு எழுதுகிறார்.

***'... மீளா அடிமைத் துயர் மீள முனைவோம்! - எங்கள்***
***மின்னல் மலைநாட்டைப் பொன்னாக்குவோம்!***
***வேளாண்மை செய்திடவே நாம் முந்துவோம்***
***தீமை வேண்டாம் நமக்கினி அதை யொழிப்போம்!'***

இன்றைய 2022-ம் ஆண்டிலும் மலையகத் தமிழர் அடிமைத்தனத்தில் வைக்கப்பட்டுள்ளார்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையாளர் தொமாயயோ ஒபக்காட்டோ ஜெனிவா மனித உரிமை சபையில் அறிக்கையிடும்போது 1960களிலேயே தனது கவிதைகளில் அதனை வெளிப்படுத்தி இருப்பதுடன் அதில் இருந்து மீள 'வேளாண்மை செய்திடவே நாம் முந்துவோம்' என மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமையை வலியுறுத்தும் அவரது வரிகளை இங்கே தரிசிக்கலாம்.

அறுபதுகளில் மலையகத்தில் முகிழ்ந்த இன்னுமொரு கவிஞர் 'வெலிமடைக் குமரன்'.

1967-ம் 'குறிஞ்சிப் பண்ணை' எனும் பதிப்பகத்தின் ஊடாக 'தூவானம்' எனும் தொகுதியை வெளியிட்டவர் வெலிமடைக் குமரன்.

1960-க்கும் 1967-க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அவர் எழுதிய கவிதைகள் இதில் உள்ளடங்கின. கவிஞர் கண்ணதாசன் நடத்திய 'முல்லை' இதழில் தனது முதலாவது கவிதையை எழுதி கவிதைத்துறைக்குள் கால்பதித்த குமரன், தனது பெரும்பாலான கவிதைகளை ஈழத்து இதழ்கள் புறக்கணித்தன எனினும் மல்லிகைக்காதலனின் ஆர்வத்திலும் துணிச்சலிலும் 'தூவானம்' வெளியானபோது மலையகத்தில் அது பரவலாகப் பேசப்பட்ட தொகுப்பாகத் திகழ்ந்தது என மு. நித்தியானந்தன் குறிப்பிடுகிறார். (தமிலோவியன் கவிதைகள் -2000).

இவரது கவிதைகள் பொதுவாக மலையகம் என்கின்ற எல்லைகளுக்கும் அப்பால் சென்றுள்ளதை அவதானிக்கலாம். எனினும் ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் மலையக மக்கள் பிரிந்து செல்லவேண்டிய நிலை வருகையில் 'பேச்சுவார்த்தை' எனும் தலைப்பில் அவர் எழுதிய கவிதை ஒரு வரலாற்றுப் பதிவாகவே அமைகிறது.

*தாயும் மகனும் போகவடா - மகள்*
*தன்கண வனுடன் நோகவடா - அவர்*
*சேயும் பிரியும் நிலைமையடா - எங்கும்*
*சிந்தை வெடிக்கும் கவலையடா*

*தேயிலைச் செடிகள் கருகுமடா - வளம்*
*செழிக்கும் மலைகள் உருகுமடா - நாடு*
*வாயிலடித்து உருகுமடா - தம்மை*
*வளர்த்தவர் பிரிவில் குழம்புமடா*

*கள்ளத்தோணிகள் பெயரிலடா - பலர்*
*கலங்கியே ஏறுவர் கப்பலடா - அன்று*
*நல்ல தோணிகள் மூலமடா - இங்கு*
*நாங்கள் வந்தது வாழவடா*

*உள்ளம் குமுறிக் கலங்குதடா - கப்பல்*
*உறுமிக்கொண்டு கிளம்புமடா - சில*
*புல்லர் சிரிக்கின்றார்களடா - காலம்*
*புத்தியவர்க்கு பாடம் புகட்டுமடா...*

- துவானம் - பக் 22

இந்தக் கவிதை மூலம் மலையக மக்கள் இந்த நாட்டைவிட்டு விருப்பத்தோடு தாயகம் திரும்பவில்லை என்பதையும் அவர்கள் திட்டமிட்ட அடிப்படையில் நாடுகடத்தப்பட்டார்கள் என்பதையும் எடுத்துரைக்கின்றார். அவ்வாறு பிரிந்து செல்ல நேர்கையில் அவர்கள் படும் வேதனையையும் வெலிமடைக் குமரனின் கவிதைகள் பதிவு செய்வது முக்கியத்துவமுடையது. 'குறிஞ்சிப்பூ' மலையகக் கவிதைக் கதம்பத்தில் இவரது 'கவித்தொகை' எனும் கவிதையும் இடம்பெற்றுள்ளது.

எழுத்தாளராகவும் தொழிற்சங்க செயற்பாட்டாளராகவும் வாழ்ந்த சிவேரா (சி.வே. ராமையா) 'மலைமேகம்' எனும் தலைப்பில் நடைப்பா எழுதி தொகுத்தளித்தவர் (ராணி பப்ளிகேஸன் 2004). தொழிற்சங்க செயற்பாட்டாளரான இவர் 'மலைமுரசு' பத்திரிகையில் மலையகத்துப் பேச்சுத்தமிழில் நளினமான நகைச்சுவையுடன் 'தேர்தல் கூட்டம்', 'கொன்பரன்ஸ்' போன்றவை பிரசித்தம் பெற்றவை. 'சாட்டையடியென அதில் தொணித்த கேலியும் கிண்டலும் தொழிற்சங்கங்களின் உள்விவகார ஊடாட்டங்களை தோலுரித்து காட்டின' என மலைமேகம் முன்னுரையில் குறிப்பிடுகின்றார் தெளிவத்தை ஜோசப் அவர்கள்.

*'முப்பது வருட சேவையிலே என்ன செய்தீங்க*
*முக்கால்வாசி உரிமைகளைப் பறிகொடுத்தீங்க*
*ஐம்பது வருடச்சேவையில என்ன செய்தீங்க*
*அரைவாசி உரிமைகளைப் பறிகொடுத்தீங்க'*

என அறுபதுகளிலேயே தொழிற்சங்கங்களின் இயலாமைகளை, பலவீனங்களைப் பகிரங்கமாகக் கூறியவை இவர்களின் எழுத்துக்கள் என்றும் கூறுகின்றார் தெளிவத்தை அவர்கள். (மலைமேகம் - முன்னுரை)

இக்காலத்தில் பத்திரிகைகள் பலவற்றுக்கும் எழுதியவர் கவிஞர் மு. துரைசாமி. இவரது கவிதைத் தொகுதி 'நாளெந்த நாளோ?' எல்ல நிவ்பேர்க் 'குறிஞ்சிப்பேரவை' வெளியீடாக 2010-ல் வெளிவந்தது. அந்தத் தொகுதிக்கான அறிமுகவுரையில் 'பள்ளிநாட்களில் கவிஞர் எம்.சி.எம். சுபைர் அவர்களிடம் தமிழ் பயின்றிருக்கிறார். பல கவியரங்குகள் துரைசாமியின் குரல்வழிக் கவிதைகளில் குதூகளித்திருக்கின்றன. கவிஞர் நாவண்ணன் தலைமையிலும் கவிதை பாடிய கவிஞர் துரைசாமியும் அவருக்கு நிகரானவரே எனக் குறிப்பிடுகின்றார் எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்.


மலையகச் சிறுகதைத்துறையில் புகழ்பெற்ற மாத்தளை மண்ணின் மைந்தன் அல் அஸுமத். பல சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ள இவர் சில நாவல்களையும் எழுதியுள்ளார். இவரது 'அறுவடைக் கனவுகள்' எனும் நாவல் மலையகத் தேயிலை வாழ்வை நன்கு விளக்குவது. இவர் இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்னர் வேலாயுதம் எனும் இயற்பெயருடன் தேயிலைத் தோட்ட மேற்பார்வையாளராகப் பெற்றுக்கொண்ட அனுபவங்களை நாவலாக எழுதி தேயிலைத் தொழிற்றுறையின் நுணுக்கமான பக்கங்களுக்கு இலக்கியச் சுவை சேர்த்திருக்கிறார்.

இவர் மரபுக்கவிதையை முறைப்படி கற்றவர். பல கவியரங்குகளில் பங்குபற்றி கவிபாடிய சிறப்புக்குரியவர். அவற்றைத் தொகுத்துக் 'குரல் வழிக் கவிதைகள்' (2009) எனும் தலைப்பில் நூலொன்றினை வெளியிட்டுள்ளார். கல்ஹின்னை தமிழ் மன்றம் வெளியீடாக 1987ம் ஆண்டு 'மலைக்குயில்' எனும் கவிதைத் தொகுதியையும் 'புலராப் பொழுதுகள்' எனும் காவியத்தையும் தந்தவர். இவர் 'பூபாளம்' எனும் கவிதை இதழையும் நடத்தியுள்ளார். இவரும் தாயகம் திரும்புதல் எனும் பெயரில் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வதை மறுதலித்து, மலையக மக்களின் தேசமாக இலங்கை மலையக மண்ணையே வலியுறுத்தும் கவிதைகளை எழுதியுள்ளார். 'பிரஜாவுரிமைத் தூது' எனும் கவிதையும், 'புனர்வாழ்வு' (பாரதத்தில் இருந்து வந்த கடிதம்) எனும் கவிதையும் தாயகம் திரும்புதலின் வலிகளைப் பாடுகின்றன.

*'நீயும்*
*மலைநாட்டுச் சட்டியில் இருந்து*
*பாரத நெருப்புக்குள் பாய முனையாதே...'*

எனும் வரிகள் தாயகம் திரும்பிய மலையக மக்களின் சோக வாழ்வைச் சொல்லி நிற்கிறது. இவ்வாறு 1960களின் நடுப்பகுதி வரை தாங்கள் நாடற்றவர்களாக இருக்கிறோம் என்பதை தமது இலக்கியப் படைப்புகளில் 1964-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம்... அதன் விளைவாக மலையகத் தமிழ் மக்கள் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டமையை மலையக இலக்கியத்தில் பெரும்பாலும் பதிவு செய்யத்தொடங்கினர்.

(தொடரும்...)



thilagar@thaiveedu.com

# ஏ.ஜே. என்றொரு ரிஷி

- மு. நித்தியானந்தன்

பதுளை நகரசபை நூல் நிலையத்திற்கு, மௌனியின் 'அழியாச் சுடர்' என்ற சிறுகதைத் தொகுப்பைச் சிபார்சு செய்த புண்ணியவானுக்கு நன்றி சொல்ல வேண்டும். க.நா.சு.வின் முன்னுரையோடு மௌனியில் திளைத்த பள்ளிக்கூடக் காலம், 'சரஸ்வதி'யில் வெளியாகிய கட்டுரை ஒன்று அப்போது எங்களுக்கு வாசிக்கக் கிடைத்தது.

கட்டுரையின் தலைப்பு: 'மௌனிவழிபாடு'
எழுதியிருந்தவர்: ஏ.ஜே. கனகரட்ன

வாழ்நாள் பூராவுமே மறக்கமுடியாத ஒரு மகத்தான மனிதரோடு நான் எழுத்திலே எதிர்கொள்ளும் முதல் பரிச்சயம் அது என்று எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

1976-ல் ஏ.ஜே.யை யாழ். பல்கலைக்கழகத்தில் முதல் தடவையாகச் சந்திக்கிறேன். ஏ.ஜே. அப்போது பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் போதனாசிரியர். அழகான நாடி. கூர்மையான பார்வை. செதுக்கியது போன்ற நாசி. சூரியனைப் போலப் பளிச்சென்று சிரிக்கும் அழகு. முகத்தில் ஆழ்ந்த சாந்தம். மேற்தட்டு கிறிஸ்தவனின் Mannerism, ஏ.ஜே. ஒரு ரிஷிமாதிரி.

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' என்றவன் சும்மா சொல்லவில்லை. ஏ.ஜே. சிறியன சிந்தியாத பெருமகன். ஆங்கிலத்துறை கொடிகட்டிப் பறந்த காலத்தில் பேராதனையில் ஆங்கில மொழியைச் சிறப்பு நெறியில் பயின்றவர் ஏ.ஜே.

ஏ.ஜே. பல்கலைக்கழகத்திற்குள் அனுமதி பெற்ற 1954ம் ஆண்டுக் காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தில் நுழைபவர்களுக்கு நேர்முகப் பரீட்சை இருந்தது. பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வுக்கு ஏ.ஜே. இலத்தீன் மொழியையும் ஒரு பாடமாக எடுத்திருந்தார். இலத்தீன் மொழியறிவைச் சோதனையிடுவதற்காக, சில இலத்தீன் மொழிப் பகுதிகளைத் தந்து அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறுமாறு மாணவர்களைக் கோரும் ஒரு இலத்தீன் மொழி வினாத்தாளின் தலைப்பு.

Unseen Passages
(Supposed to be Unseen Passages?)

பல்கலைக்கழகப் புகுமுக மாணவர் ஒருவர் சாதாரணமாகப் பார்த்திருக்க முடியாது என்ற அனுமானத்தில் தயாரிக்கப்படும் வினாத்தாள் அது. ஏ.ஜே. அந்தப் பாடத்தில் முதல்தரப் புள்ளிகள் எடுத்திருக்கிறார். யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ஒருவன் அகில இலங்கை ரீதியில் எடுத்திருக்கும் அதியுயர் புள்ளிகள். பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகத் தேர்வில் இருந்தவர் அந்த இலத்தீன் மொழி வினாத்தாளையே தயாரித்தவர்.

'இலத்தீன் மொழியில் அந்த Unseen Passagesஇல் எப்படி இவ்வளவு அதிக புள்ளிகள் எடுத்தீர்?' நேர்முகத் தேர்வில் ஏ.ஜே.யை நோக் கிக் கேட்கப்பட்ட கேள்வி.

'நான் இந்த Passageஐ ஏற்கனவே வாசித்திருக்கிறேன்' - இது ஏ.ஜே.

இன்றும் தான் ஏ.ஜே.யின் வாசிப்பு மிக விரிந்தது.

மத்திய கால ஐரோப்பாவின் ரஸவாதத்திலிருந்து மார்க்ஸிய அழகியல் வரை, பிரெச்ட்டிலிருந்து ஜெனே வரை, ஈ.பி. தொம்ஸனிலிருந்து டெரி ஈகிள்டன் வரை அவருடைய வாசிப்பு பிரமிப்பூட்டுவது. ஆங்கில இலக்கியம் அவருடைய Forte. ஆனால், புதுமைப்பித்தனின் 'மகாமசானத்'தையும், என்.எஸ்.எம். இராமையாவின் 'வேட்கை'யையும், சட்டநாதனின் 'மாற்ற'த்தையும் அவரால் பூரண ஈடுபாட்டுடன் ரசிக்கமுடியும்.

ஜெயகாந்தன், வ.அ. இராசரத்தினம், பொ. தம்பிராசா, டொமினிக் ஜீவா, செ. கணேசலிங்கம், எஸ். பொன்னுத்துரை, மு. புஷ்பராஜன் ஆகியோரின் கதைகளை ஏ.ஜே. ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். வ.அ. இராசரத்தினத்தின் 'படகு' என்ற சிறுகதையின் ஆங்கில மொழியாக்கத்தை ஒருமுறை எனக்கு வாசித்துக் காட்டிய ஏ.ஜே., தமிழின் தனித்துவம் சிதைந்து போய்விடாமல் தான் கவனம் எடுத்து மொழிபெயர்ப்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

*'காராம் பசு நீயானால்*
*கழுத்து மணி நானாவேன்'*

என்ற நாட்டுப்பாடலையும் அவர் ஆங்கிலத்தில் நேர்த்தியாகவே மொழிபெயர்த்திருக்கிறார்.

'மத்து' என்ற அவருடைய அரசு பிரசுர வெளியீடு அவரின் பரந்துபட்ட வாசிப்புக்கு ஒரு சின்ன ஆலாபனைதான். மொழி, பொருளியல், உளவியல், சமூகவியல் என்று பலதுறைப்பட்ட அவரின் விசாலமான ஞானத்திற்கு 'மத்து' ஒரு உரைகல்.

'மார்க்ஸியமும் இலக்கியமும்' என்ற அவரது மற்றுமொரு நூல் அவரது இலக்கிய அணுகுமுறையைக் கோடிகாட்டவல்லது. எதனையும் கேள்விக்கு இலக்காக்கும், எதனையும் துருவி ஆராயும் அவரது ஆய்வுக் கோணத்தை இந்நூல் வெளிப்படுத்தும். இந்நூல் மொழிபெயர்ப்புக் கட்டுரைகளையே பெருமளவில் கொண்டதெனினும் குறித்த இக்கட்டுரைகளின் தேர்வு அவரது இலக்கிய நோக்கினையும் சுட்டி நிற்கிறது.

கலாயோகி ஆனந்தகுமாரசாமி, ரேமண்ட் வில்லியம்ஸ், சாமுவல் பெக்கெற் போன்றோரின் சிக்கலான - சற்றே ஆழ்ந்த கிரகிப்பை நாடிநிற்கிற படைப்புகளையும் ஏ.ஜே. தமிழில் தந்திருக்கிறார்.

1960ன் ஆரம்பக்கூறில் தேசிய இலக்கியம் பற்றிய சிந்தனை ஈழத்து இலக்கிய உலகில் முகிழ்ந்தபோது, அந்தச் சிந்தனைக்கு வலிமை மிகுந்த அத்திபாரத்தை நிர்மாணித்தவர் ஏ.ஜே. ஆவார். தேசிய இலக்கியம் பற்றி இக்காலகட்டத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளைப் பார்க்கையில் ஏ.ஜே.யின் கட்டுரை எவ்வளவு வலிமையானது என்பதை உணரமுடியும்.

'1818ம் ஆண்டில் எடின்பரோ மதிப்புரையில் ஸிட்னி ஸிமித் எழுதும்போது, 'ஆறுவாரப் பயணத்தில் நமது மொழி நமது உணர்வு. நமது விஞ்ஞானம், நமது வல்லபம் முதலியவற்றைச் சிப்பங்களிலும், பீப்பாய்களிலும் அவர்களுக்கு அனுப்பி வைக்கும் போது அமெரிக்கர்கள் ஏன் புத்தகம் எழுத வேண்டும்?' என்று கேட்டார். இன்று ஸிட்னி ஸிமித்தினுடைய அவமதிப்பான நிந்தனைக் கேள்வியைத் திருப்பிப் புரட்டி, 'ஏன் பிரிட்டிஷ்காரர் புத்தகங்கள் எழுத வேண்டும்? என்று கேட்கலாம்' என்று ஏ.ஜே. எழுப்பிய ஆணித்தரமான கேள்வி ஈழத்துத் தேசிய இலக்கியத்திற்குப் புதிய உத்வேகத்தையே கொடுத்தது.

எந்த நிர்ப்பந்தத்தின் பேரிலும் தனக்குச் சரி என்று படாத ஒன்றை அவர் ஏற்று எழுதியது கிடையாது. உண்மையின் ஒளியில் எதனையும் உரைத்துப் பார்க்கும் பக்குவம் அவரிடம் எப்போதும் இருந்திருக்கிறது.

சிலோன் ஒப்சேவரில் ஏ.ஜே. பத்திரிகையாளராகப் பணியாற்றிய காலம் அப்போது கல்வி அமைச்சராக இருந்த கலாநிதி பதியுதீன் மஹ்மூத் கொழும்பு ரோயல் கல்லூரியின் மாணவ அனுமதி தொடர்பாக ஒரு பணிப்புரையை விடுத்திருந்தார். கொழும்பு ரோயல் கல்லூரியின் சிரேஷ்ட பிரிவுக்கு வெளியிடங்களிலிருந்தும் மாணவர்களை அனுமதிக்கும் வகையில் சில இடங்களை ஒதுக்கிப் பரீட்சை நடத்தி அவர்களைத் தெரிவு செய்யுமாறு இப்பணிப்புரை அறிக்கையிட்டது. அமைச்சர் பதியுதீன் மஹ்மூத்தின் இப்புதிய நடைமுறைக்கு எதிராக ஒப்சேவரில் கட்டுரை எழுதுமாறு லேக் ஹவுஸ் இயக்குநர் எஸ்மண்ட் விக்கிரமசிங்க பத்திரிகையாளரான ஏ.ஜே.யைக் கேட்டிருக்கிறார்.

அமைச்சர் பதியுதீன் பணிப்பு நியாயமற்றதுதானா என்று ஏ.ஜே. விசாரணையில் இறங்கினார். மவுண்ட் லெவினியாவில் உள்ள பரிதோமா கல்லூரியின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த ஒருவர் வெளிமாவட்டங்களிலிருந்து ரோயல் கல்லூரிக்குச் சேர விரும்பியிருந்த மாணவர்கள் என்று பல தரப்பிலும் விபரங்களைச் சேகரித்த ஏ.ஜே.க்கு அமைச்சின் புதிய பணிப்புரை நியாயமானதாகவே தெரிந்தது. ரோயல் கல்லூரியின் சிரேஷ்ட பிரிவுக்கு வெளிமாவட்டங்களிலிருந்தும் மாணவர்களை அனுமதிக்கும் முற்போக்கான நடவடிக்கையாகவே அது அவருக்குப்பட்டது. இப்பிரச்சினை ரோயல் கல்லூரியின் ஜூனியர் பிரிவு மாணவர்களின் அனுமதிப் பிரவேசத்துடன் தொடர்புபட்டிருந்தது.

ஏரிக்கரை முகாமையின் அறிவுறுத்தலுக்கேற்ப இந்த நடவடிக்கையை எதிர்த்து எழுதுவது நியாயமற்றது என்று கருதிய ஏ.ஜே. இது பற்றி எதுவும் எழுதவில்லை. எஸ்மண்ட் விக்ரமசிங்க கட்டுரை பற்றிக் கேட்டபோது அமைச்சின் புதிய நடவடிக்கை தனக்கு நியாயமாகவே தெரிவதாக ஏ.ஜே. பதிலளித்தார்.

மறுவாரத்தில் ஒப்சேர்வர் ஆசிரியப் பகுதியிலிருந்து Newsdeskக்கு ஏ.ஜே. மாற்றப்பட்டதான அறிவித்தல் அவருக்குக் கையளிக்கப்பட்டது. Memo வைக் கையில் வாங்கி வாசித்து விட்டு ஏ.ஜே. கேட்டார்.

'ஒரு தாள் தருவீர்களா?'

தான் பதவியிலிருந்து விலகுவதாக அந்தத் தாளில் எழுதிக் கொடுத்துவிட்டு, பத்திரிகை அலுவலகத்தை விட்டு வெளியேறினார் ஏ.ஜே.

அதன்பின் மட்டக்களப்பு - திருக்கோயிலில் புழுதி கிளப்பிக்



படங்கள்: சாந்தகுணம்

கொண்டு போகும் பஸ் வண்டியிலிருந்து சூட்கேஸ் சகிதம் இறங்கும் பாடசாலை ஆசிரியராக ஏ.ஜே.யைக் காண்கிறோம்.

ஆங்கிலம் மட்டுமல்ல, அரசியல், வரலாறு என்று எல்லாப் பாடங்களையுமே படிப்பித்ததாக அவர் சங்கோஷத்துடன் நினைவு கூருவார். அப்பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கும் மாணவர்கள் அனுமதி பெற்றுச் சென்றுள்ளனர். பின் என்ன தோன்றியதோ, விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்த ஏ.ஜே. பிறகு படிப்பிக்கப் போகவில்லை. ஏ.ஜே. சரியான சுட்டி. 'குறுமுனியான ஏ.ஜே. கனகரட்ன குறும்புக்காரரும்' என எஸ்.பொ. தனது 'நனவிடை தோய்தல்' நூலில் குறித்திருப்பதும் அச்சொட்டான உண்மை.

பின்னால், யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுச் சங்கப் பத்திரிகையான Co-operator பத்திரிகையில் ஏ.ஜே. ஆசிரியராக அமர்ந்தார். பத்திரிகையின் தன்மை, வாசகப் பரப்பு எதுவாயினும் பத்திரிகாதர்மம் என்பது எந்தத் தளத்திலும் பேணப்பட வேண்டும் என்பதில் அவர் எப்போதும் மசிந்தது கிடையாது.

Co-operator ஆசிரியர் குழுவின் தலைவர் கு. நேசையா ஒரு காந்தியவாதி. கல்விமான். 'பத்திராதிபர் குழுக் கூட்டங்களில் சில வே-

ளைகளில் நேசையாவோடு தனது நேர்மையின் கோட்டிலே நின்று ஏ.ஜே. கர்ஜித்திருக்கிறார். இவை அறிவுபூர்வமானதாக நிதானத்தின் வழியில், பண்பு தவறாதவையாகவே இருந்தன' என்கிறார் நவாலியூர் நடேசன். Co-operator பத்திரிகையிலும் ஏ.ஜே. பிரச்சினையை எதிர்கொள்ளவேண்டி வந்தது. இப்பத்திரிகையில் ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள் Browsing Diary என்று ஒரு பத்தியைத் தொடர்ந்து எழுதிவந்தார். யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் ஒருவர் ஒரு கூட்டத்தில் ஆற்றிய உரையொன்று ஒரு பத்திரிகையில் வெளியானதைப் பற்றி ஹண்டி பேரின்பநாயகம் அம்மாதத்தில் தனது பத்தியில் கருத்துத் தெரிவித்திருந்தார். குறிப்பிட்ட அந்தக் கம்யூனிஸ்ட் பிரமுகர் ஏ.ஜே.யைச் சந்தித்த போது, ஹண்டி பேரின்பநாயகம் தன்னைப் பற்றி எழுதியிருப்பதற்குத் தான் பதில் எழுதினால் பிரசுரிப்பீர்களா? என்று கேட்டிருக்கிறார்.

'தாராளமாக...' - ஏ.ஜே.



அடுத்த இதழில் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரின் மறுப்பு வெளியாகிவிட்டது.

பத்திரிகையின் உயர்மட்ட முகாமை பதறித் துடித்தது. அவசர அவசரமாய் ஆசிரிய ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டது.

கு. நேசையா அவர்கள் பத்திரிகை நிர்வாகத்தின் தன்னிகரற்ற பெருந்தலைவர். விசாரணைக் கூண்டில் ஏ.ஜே.

'எப்படி அந்தக் கட்டுரையைப் பிரசுரிக்கலாம்?'

'வேறு ஏதோ பத்திரிகையில் வெளியான செய்திக்கு நாங்கள் எங்கள் பத்திரிகையில் பதில் எழுதினால், அதற்கு பதிலளிக்க அவருக்கு இடங்கொடுப்பது பத்திரிகாதர்மம் சார்ந்தது'.

'அதனைப் பிரசுரிப்பதற்கு முன் ஏன் நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை?'

'இது சாதாரண பத்திரிகாதர்மம் சம்பந்தப்பட்டது. நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொணர்ந்து, அனுமதிகேட்டுப் பிரசுரிக்கும் அளவிற்கு பத்திரிகாதர்மத்திற்கு மாறாக நான் இயங்குவதாக நினைக்கவில்லை'.

வேறு ஏதும் கேட்டால் மீண்டும் ஒருமுறை 'ஒரு தாள் தருவீர்களா?' என்று ஏ.ஜே. கேட்டுவிடக்கூடும் என்று யோசித்த நிர்வாகம் பிரச்சினையை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டது.

பத்திரிகாதர்மம் என்றால், 'கிலோ என்ன விலை?' என்று கேட்கும் பேர்வழிகளே பத்திரிகாசிரியர்களாகப் பவனிவருஞ் சூழலில் ஏ.ஜே. பேணிய பத்திரிகை நேர்மை உண்மையில் விதந்து நோக்கத்தக்கது. தங்களுடைய பத்திரிகையில் தாங்கள் மற்றவர்களைப் பற்றி மனம்போன போக்கில் எழுத, விமர்சனத்திற்கு இலக்கானவர் அதற்குப் பதில் அளிக்க முன்வரும்போது, அதனைக் கௌரவத்தோடு ஏற்றுப் பிரசுரிப்பதற்கு மாறாக, மாற்றுக்கருத்துகளை அப்படியே மூடிவிட நினைப்பது முறையற்றது என்பது பத்திரிகை அனுபவத்தில் பழுத்த ஏ.ஜே.யின் கருத்து. பண்பட்ட ஒரு பத்திரிகையாளனின் கருத்து இதற்கு மாறாக வேறு எம்மாதிரியும் இருக்கமுடியாதுதான்.

பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் போதனாசிரியராக நியமனம் பெற்ற ஏ.ஜே. பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் Campus Bulletin என்ற இதழையும் தயாரித்தார். ஆங்கிலத் தட்டச்சில் பதித்து, ரோனியோவில் வெளியிடப்பட்ட இந்தப் பல்கலைக்கழகச் செய்திப் பத்திரிகையின் தலைப்புகளிலும் செய்திகளிலும்கூட ஏ,ஜே.யின் கைவண்ணத்தைக் காணலாம். ஆங்கில விமர்சகர் ரெஜி சிறிவர்த்தன அப்போது பல்கலைக்கழகத்தில் ஆற்றிய ஆங்கில விரிவுரைகளின் சுருக்கத்தைக்கூட இச்செய்தி இதழ் தாங்கி வந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து பின்னால் வெளியான Saturday Review பத்திரிகையிலும் ஏ.ஜே.யின் பங்கு மிகப்பெரியது. யாழ்ப்பாணத்தில் வெளியான பத்திரிகைகள், நூல்கள் அனைத்திலும் ஏ.ஜே.யின் ஆலோசனை இருந்துகொண்டே வந்துள்ளது. மல்லிகை, அலை ஆகிய சஞ்சிகைகளில் நிறைய மொழிபெயர்ப்பு ஆக்கங்களில் அவர் உதவியிருக்கிறார்.

ஏ.ஜே. கருத்துச் சொல்வதில் மிகவும் நிதானமானவர். அதே சமயம் சிறுக்கென்று witty ஆகப் பதில் சொல்வதிலும் சமர்த்தர். யாரையும் மனம் நோகப்பண்ணும் விதத்தில் அவர் கருத்து தெரிவித்து நான் பார்த்ததில்லை. எந்தக் கற்றுக்குட்டியின் எழுத்திலும் நல்லதைத் தேடும் மனம் அவரிடமிருந்தது.

ஏ.ஜே. அடிப்படையில் ஒரு anti-establishment காரர். எந்த உன்னத நோக்கங்களும் அமைப்பாக மாற்றமுற்றதும் ஒரு அமைப்பிற் கேயுரிய சகல இறுக்கங்களும் கட்டுப்பெட்டித்தனங்களும் கவிந்து போய் அதனை வலிய சிறையாக மாற்றி விடுவதுபற்றி ஏ.ஜே. எப்போதும் சிந்தித்து வந்திருக்கிறார். மாற்றுக்கருத்துகளை மனந்திறந்து பரிசீலிக்கும் பக்குவம் அவரிடம் நிறைய.

ஏ.ஜே. போன்ற பெருமகனுடன் தொடர்பு கொண்டிருந்த நாட்கள் பொன்னானவை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நாங்கள் குருநகர் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டபோது, அந்த முகாமில் வந்து எங்களைக் காண யாருமே துணிந்திருக்கமாட்டார்கள். ஆனால், கைது செய்யப்பட்ட அதே தினத்தில், அந்த இராணுவ முகாமுக்கு வந்து, எங்களைக் காண அனுமதி கேட்டிருக்கிறார். இராணுவ அதிகாரிகள் அதற்கு அனுமதி மறுத்தபோது, தான் எங்களைக் காண வந்ததாகவும், அனுமதி மறுக்கப்பட்டதால் தான் திரும்பிச் செல்வதாகவும்சிறு குறிப்பை எழுதி எங்களிடம் கொடுக்குமாறு முகாமில் கொடுத்துச் சென்றிருக்கிறார்.

பின்னர், நாங்கள் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு,

எங்களைக் காண பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டபோது, ஏ.ஜே யாழ்ப்பாணத்திலிருந்து எங்களைப் பார்க்க வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு வந்திருந்தார். அங்கு எங்களைக் கண்டு எவ்வளவு மனம் பதைத்திருப்பார் என்பதை நானறிவேன்.

There are some people who can make time stand still. You seem to be one of them என்று 27.03.1992 திகதி இட்டு யாழ்ப்பாணத்திலிருந்து எனக்கு லண்டனுக்கு எழுதிய கடிதத்தை வாசித்துக் கண்கலங்கினேன். அப்பெருமகனை மீண்டும் சந்திக்க முடியாமல் போய்விடுமோ என்று நான் அஞ்சியிருந்தேன். அந்தத் துரதிர்ஷ்டம் நடந்தே நடந்துவிட்டது.

ஏ.ஜே. யாழ்ப்பாணத்தைவிட்டு வேறு எங்கும் போக விரும்பியது கிடையாது. அவரை லண்டனுக்கு அழைப்பதற்கு அனைத்தையும் செய்ய ஏ.ஜே. அன்பர்கள் ஒரு பட்டாளமே லண்டனில் இருந்தனர். அவர் உண்மையில் ஒரு யாழ்வாசி. அவர் அம்மண்ணை மிக நேசித்திருந்தார். அந்த வாழ்வில் அவர் சுகித்திருந்தார். எந்த இடர்ப்பாடுகளும் அவரை அசைத்ததில்லை.

'யுத்தத்தின் இருண்ட காலப்பகுதிகளில், யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்ட பிரதேசம் போலாகி, வாழ்வாதாரத்திற்கான எதுவுமே கிடைக்காத நிலையில், ஏ.ஜே.யின் செயற்பாடுகள் அனைத்தும் முடக்கப்பட்ட சூழலில், அவரைக் கொழும்பிற்கு வரச் சொல்லி ஒரு நண்பரிடம் சொல்லி அனுப்பினேன். தான் யாழ்ப்பாணத்தில் 'சேற்றில் ஊன்றிய தடி' போலாகிவிட்டதாகவும், தான் இடம்பெயர்ந்து வரவிரும்பவில்லை என்றும் ஏ.ஜே. பதில் எழுதியிருந்தார். பன்னாட்டுக் கலாசாரச் செழுமையும் பரந்த சர்வதேசப் பிரக்ஞையும் கொண்ட ஏ.ஜே. யாழ்ப்பாண மண்ணில், அதன் வாழ்வில், அனுபவத்தில், மொழியில் ஆழ வேரூன்றிப்போய்விட்ட அறிவுஜீவி என்ற வகையில், மிகச் சோதனையான ஒரு காலகட்டத்தில் அம்மண்ணை விட்டு வெளியேறுவது ஒருவிதத் துரோகச் செயல் என்று கருதியிருக்கக்கூடும் என்று நான் உணர்ந்தேன்' என்று அமரர் ரெஜி சிறிவர்த்தன எழுதுகிறார்.

யாழ் நகர் பிரதான வீதியில் சென். ஜேம்ஸ் தேவாலயத்தின் முன்னால், சின்னக்கடையைச் சுற்றி காலை உதறி வீசிக்கொண்டு நடந்து திரியும் ஏ.ஜே.யை நினைக்க மனம் கனக்கிறது. 'எங்கே நல்லவர்கள் உள்ளனரோ அதுதான் நாடாகிறது' என்று பொருள் தரும் 'நாடா கொன்றோ காடா கொன்றோ' என்கிற சங்கப்பாடல் நினைவில் எழுகிறது. ஏ.ஜே.யைக் காணவாவது யாழ்ப்பாணம் போக மனம் பரிதவித்திருந்தது. ஒரு நாகரிக மண்ணின் உன்னத விழுமியங்களை ஏ.ஜே. போன்றவர்கள்தான் உலகின் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல வல்லவர்கள்.

1950களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறையில் ஆங்கிலத்தைச் சிறப்புப் பாடமாகப் பயிலக் கிடைப்பதென்பது மிகமிக அபூர்வமான விடயமாகும். இலங்கையின் உயர்குழாத்தின் கொடுமுடியாக ஆங்கிலத்துறை திகழ்ந்த காலம். இலங்கையின் அதியுயர் அரசாங்க நிர்வாகிகளும் ராஜதந்திரிகளும் ஆங்கிலவாணர்களும் பேராதனை ஆங்கிலக் கல்விக்கூடங்களிலேயே தயாராகியுள்ளனர். இலங்கையின் அதிகாரவர்க்க பூர்சுவாக்களின் பயிற்சிப்பாசறையாக ஆங்கிலத் துறை திகழ்ந்தது.

'யாழ்ப்பாணம் ஒரு கலாசாரப் பாலைவனம்' என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முதல் உபவேந்தர் ஐவர் ஜெனிங்க்ஸ் அறிக்கையிட்ட யாழ்ப்பாணத்தின் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலிருந்து ஏ.ஜே. பல்கலைக்கழகம் புகுகிறார். சென் பற்றிக்ஸில் லத்தீனிலும் ஆங்கிலத்திலும் திறமையுடன் திகழ்ந்த ஏ.ஜே. பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வுக்காக கொழும்பு சென். ஜோசப் கல்லூரியிலும் பயின்றிருக்கிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தைச் சிறப்பாகப் பயில அனுமதிக்கப்பட்ட நான்கு பேரில் ஏ.ஜே. தவிர்ந்த மற்றைய மூவரும் பெண்களாவர். பெண்களோடு பேச சங்கோஷப்படும் ஏ.ஜே. அந்தப் பெண்மணிகளோடு எவ்வாறு காலந்தள்ளினார் என்று தெரியவில்லை. பிரெஞ்ச் மொழியையும் துணைப்பாடமாகத் தெரிந்திருந்த ஏ.ஜே., Miss. Tourqiot என்ற பிரெஞ்சு ஆசிரியையின் காலைநேர பிரெஞ்சு வகுப்புகளுக்கு ஒருபோதும் போனது கிடையாது என்று தெரிகிறது. ஏ.ஜே. தனது சக மாணவர்களால் Pepin என்று செல்லமாக அழைக்கப்பட்டிருக்கிறார்.

ஏ.ஜே. பல்கலைக்கழகத்தில் இருந்தபோது ஆங்கில விமர்சனத் துறையில் மேலாதிக்கம் செலுத்திய Practical Criticism என்ற விமர்சனநெறி பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் வியாபித்திருந்தது.

பேராசிரியர் டொரிக் டி சூசா மொழி, மொழியியலில் வல்லுநர். தீவிர இடதுசாரிச் சிந்தனையாளர். பேராசிரியர் எச்.ஏ. பாசே (H.A.Passe) கவிஞர் மில்ட்டனில் தோய்ந்தவர். கொன்ராட் அவரின் ஆதர்ச எழுத்தாளர். ரொபின் மேஹெட் (Robin Mayhead) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலிருந்து அப்போதுதான் கல்வியை முடித்திருந்தவர். எப்.ஆர். லூயிஸின் மாணவர். Scrutiny இதழில் எழுதிக்கொண்டிருந்தவர். டேவிட் கிரேக் (David Craig) மார்க்சிய சார்பு அறிஞர். ஈ.எப்.சி. லுடோவிக் (E.F.C. Ludowyk) ஆங்கிலத்துறையின் தீபஸ்தம்பம். ஷேக்ஸ்பியரையும் பிரௌனிங்கையும் டென்னிசனையும் பற்றி அவரிடம் பாடம் கேட்டவர்கள் பாக்கியவான்கள் என்பர். இவரது Understanding Shakespeare (1961) கேம்ப்ரிஜ் யுனிவர்சிட்டி பிரஸினால் வெளியிடப்பட்டது. மார்லோ, சிஞ்ச், எலியட் ஆகிய ஆங்கில நாடகாசிரியர்களையும் லுடோவிக் அனுபவித்துப் போதித்திருக்கிறார். ஏ.ஜே.யிடம் குடிகொண்டிருந்த நாடகத்துறை ஆர்வத்திற்கும் இது ஆதாரமாக அமைந்திருக்கலாம். எப்.ஆர். லூயிஸ், ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ், டெனிஸ் தொம்ப்சன், எம்ப்ஸன் போன்றோர் பேராதனையின் நவீன ஆங்கில இலக்கியத்தில் பெரிதும் பேசப்பட்டவர்கள். Practical Criticism, Modern Poetry ஆகியன தனிப் பாடநெறிகளாக அமைந்திருந்தன. இந்த நவீன இலக்கிய விமர்சகர்களிடையே உள்ளார்ந்த முரண்பாடுகள் நிலவினாலும், அப்போது அமெரிக்காவில் லேபிள் இடப்பட்ட New Criticism என்ற புதிய திறனாய்வுச் சிந்தனையைப் பற்றிநின்ற அனைவருக்கும் பொதுவான அம்சங்களாக உருவகத்தின் மீதான விருப்பு, வார்த்தைசார்ந்த கற்பனைப் படிமங்களின் செழுமை, ambiquity என்பன அமைந்தன. ஆங்கிலோ-அமெரிக்க நவீனவாதத்தின் புதியபாணிகளாக இவை அங்கீகாரம் பெற்றிருந்தன. கவிதை பற்றிய உலகளாவிய அணுகுமுறை அதுவே என்றும் அன்று போற்றப்பட்டிருந்தது.

செழுமையான 'உள்ளூர் வாழ்க்கை' பொதிந்த கவிதைகளுக்கு Practical Criticism தான் அர்த்தம் தரக்கூடியது எனப்பட்டது. வார்த்தைச் செறிவும் உருவக நேர்த்தியும் கொண்ட கவிதைகள் தரம் கூடியவை எனக் கருதப்பட்டன. எளிமையான மொழியில் அமைந்த கவிதைகள் அத்துணை தரமானவை அல்ல என்ற கருத் தும் நிலவியது.

இந்த இலக்கியச் சிந்தனைமுறையில் வளர்க்கப்பட்ட தலைமுறையைச் சார்ந்தவர்தான் ஏ.ஜே.

ஆங்கிலச் செவ்வியல் இலக்கியம் கோலோச்சிய காலம் அது.

ஏ.ஜே.யின் ஆரம்பகால விமர்சனங்களில் டி.எஸ். எலியட் அவர்களின் சிந்தனையின் ஆதிக்கம் திகழ்ந்ததை 'மௌனி வழிபாடு' (சரஸ்வதி, பெப்ரவரி 1961) என்ற கட்டுரை வெளிப்படுத்துகிறது.

அக்கட்டுரையில் ஏ.ஜே. எழுதுகிறார்:

'மற்றைய கதைகளை ஆராய்வதற்கு முன்பு எலியட் என்னும் அறிஞர் சொன்னதை ஞாபகப்படுத்திக் கொள்ளல் 'பிரபஞ்சகான'த்துக்கும் 'அழியாச்சுடரு'க்கும் மிகவும் பொருத்தமானதாக இருக்கும். 'கலையில் மனித உணர்ச்சிகளை உணர்த்தக்கூடிய ஒரே ஒரு வழி உவமைகளால் ஒப்புநோக்குதலேயாம். அதாவது, ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களால் ஒரு நிலையை அல்லது ஒன்றுபடுத்தப்பட்ட பல நிகழ்ச்சிகளை ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியுடன் ஒத்துறவாடச் செய்தல் வேண்டும். அந்த வெளியுருவங்கள் உணர்ச்சிகளை அல்லது உணர்ச்சியனுபவங்களைத் தொட்டமாத்திரத்தே அழிந்துவிட வேண்டும். அப்பொழுதுதான் குறிப்பிடப்பட்ட

உணர்ச்சி பிரதிபலிக்கப்பட ஏதுவாகவிருக்கும். வெளியுருவங்கள் உணர்ச்சிகளைத் தட்டிவிட முடியாதவைகளாக இருந்தால், இது கலையின் பரிபூரணமின்மையையே காட்டுகிறது.' இவ்வாறு கூறி னான் எலியட்.'

ஆங்கில விமர்சகர் டி.எஸ். எலியட் பிரபல்யப்படுத்திய Objective Correlative என்ற கருத்தாக்கத்தையும் ஏ.ஜே. இக்கட்டுரையில் பிர யோகித்திருக்கிறார்.

'மௌனியுடைய அநேக கதைகளில் ஒப்ஜெக்டிவ் கோரிலேட்டிவ் என்னும் தன்மை குறைந்து காணப்படுகிறது. வெளியுருவ உவமை கள் உணர்ச்சியுடன் ஒன்றுவது குறைவு. உணர்ச்சிகளைப் பிரதிப லிப்பதற்கு போதிய உயிர் அவைகளிடம் கிடையாது. 'கொஞ்சத் தூரம்', காதல்சாலை', 'எங்கிருந்தோ வந்தான்' முதலிய கதைக-ளில் சுய மனத்திருப்தியைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஏனெ-னில், கதையிலுள்ள சம்பவங்களுடன் உவமிக்கும் பொருட்கள் உணர்த்தவேண்டியவற்றைச் சரியாக உணர்த்த முடியவில்லை. உணர்ச்சிகளின் பளுவைத் தம்முள்ளடக்கிக்கொள்ள முடியாமல் கதைகள் தத்தளிக்கின்றன' என்றெழுதுகிறார் ஏ.ஜே.

ஏ.ஜே. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்றுகொண்டிருந்த காலகட்டத்தில் இடதுசாரி அரசியல் அங்கு வியாபித்திருந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல், பொருளாதார விரி-வுரையாளர்கள் London School of Economics-இல் பயின்று, பிரிட்டிஷ் இடதுசாரிப் பாரம்பரியத்தில் ஈர்க்கப்பட்டவர்களாக நாடு திரும்பினர். இந்த விரிவுரையாளர்களில் சிலர் லங்கா சமசமாஜக் கட்சி அல்லது கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாகவும் இருந் துள்ளனர். 'இடதுசாரிப் பகுப்பாய்வு இல்லாமல் எங்களுக்கு ஆங் கில இலக்கியம் போதிக்கப்பட்டதே கிடையாது' என்கிறார் அ. சிவானந்தன்.

அக்காலகட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவர் பேரவைக்கான தேர்தல் எப்போதும் இடது, வலதுசாரி முகாம்களா கவே பிரிவுபட்டிருந்தன. வலதுசாரிகள் Juntas அல்லது Kultur என்று அழைக்கப்பட, இடதுசாரிகள் Trots அல்லது Commies என்று அழைக்கப்பட்டனர்.

பல்கலைக்கழகத்தின் மாணவ விடுதிகளில் கலாநிதி என்.எம். பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா ஆகியோர் அழைக் கப்பட்டு, அவர்களின் உரைகளை மாணவர்கள் பெருந்திரளில் வந்திருந்து கேட்டனர். சேர். ஜோன் கொத்தலாவல போன்ற வலது சாரித் தலைவர்கள் அங்கே பேசப்போய், அங்கு கிடைத்த வர வேற்பைப் பார்த்து, பின்னர் அந்தப் பக்கமே தலை வைத்தும் படுத்ததில்லை.

இலங்கையை உலுக்கிய 1953ம் ஆண்டின் நாடுதழுவிய ஹர்த் தால் போராட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் இரத்தக்களரியில் முடிந்தது.

'மாணவ ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்தனர்! கண்டி பொலிசாரின் குண்டாந்தடிப்பிரயோகம்!' என்று பத்திரிகைகள் தலைப்புச் செய் திகள் வெளியாகின. (Ceylon Daily News, August 11, 1953). இருநூறுக்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் கண்டி பொலிஸ் நிலையத்தை அணுகி, நேருக்குநேர் மோதலில் ஈடுபட்ட போது, பொலிஸ் தரப்பு குண்டாந்தடிப் பிரயோகத்தை மேற் கொண்டு ஆர்ப்பாட்டத்தைக் கலைத்தனர்.

இத்தகைய பல்கலைக்கழகச் சூழலில் ஏ.ஜே. மார்க்சியத்தின்பால் நாட்டம் கொண்டவராக மாறியதில் வியப்படைய எதுவுமில்லை. மார்க்சிய அரசியல் நூல்களையும் மார்க்சிய இலக்கியங்களையும் ஆழ்ந்த அக்கறையுடன் வாசித்தார். யேட்ஸ், எஸ்ரா பவுண்ட், எலி யட், ஜோய்ஸ், டிக்கன்ஸ் ஆகியோரின் இலக்கிய ரசனையில் ஊட்டம் பெற்றவர் ஏ.ஜே. The Waste Land, The Cantos, Ulysses, Finnegan's Wake ஆகிய படைப்புகளில் எதனையும் சுட்டுவிரலில் வைத்திருப்பவர் அவர். பிரெச்ட், மால்ரோ, எசெனின், புளொக், அக்மத்தோவா, எவ்டு செங்கோ ஆகிய ஆசிரியர்களையும் அவர் விரும்பித் தேர்ந்து வாசித்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறை அறையில் ஈ.பி. தொம்சனின் The Rise of the Working Class நூலை ஆழ்ந்து தோய்ந்து வாசிப்பதை நான் பார்த்திருக்கிறேன். எட்வர்ட் ஸைத்தின் Orientalism நூலை வாசித் தபின், Orientalism Revisited என்ற கட்டுரையைக் கேட்டு எனக்கு எழுதியிருந்தார். Race and Class நூலகத்திற்குச் சென்று அந்தக் கட்டுரைப் பிரதியை அனுப்பிவைத்தேன். எட்வர்ட் சைதிற்கும் சிவானந்தனுக்கும் இப்போது நல்லுறவில்லை என்று சொன்ன போது ஆச்சரியமுற்றார். எட்வார்ட் ஸைத் ரஷ்ய நாவல்களை கணக்கில் எடுக்கவில்லை என்றும் பிரிட்டிஷ் நாவல்களையே அவர் முதன்மைப்படுத்தியிருக்கிறார் என்றும் ஏ.ஜே. குறிப்பிட்டார்.

மார்க்சியத்தில் அடித்தளத்திற்கும் மேற்கட்டுமானத்திற்கும் இடையே உள்ள உறவுகள் தொடர்பாக யாந்திரீகமாக முன்வைக் கப்படும் கருத்தோட்டத்திற்கு மாறாக, இந்த உறவுகள் குறித்து ஏ.ஜே. நுட்பமாக வாசித்து வந்திருக்கிறார்.

New Left Review (Nov-Dec 1973)இல் Raymond Williams என்ற பிரிட்டிஷ் மார்க்ஸிய அறிஞர் எழுதிய Base and Superstructure in Marxist Cultural Theory என்ற கட்டுரையை 'மார்க்சீயப் பண்பாட் டுக் கோட்பாட்டில் அடித்தளமும் மேற்கட்டுமானமும்' என்ற தலைப்பில் 'அலை' (தை-மாசி 1977) இதழில் அவர் மொழிபெ யர்த்திருந்தார். இம்மாதிரிப் பணிகள் மார்க்சிய ஆய்வு நெறிமு றைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை தமிழில் அறிமுகம் செய் யும் பெரு முயற்சிகளாகும்.

'கலை உன்னதநிலை அடைந்திருக்கும் சில காலகட்டங்களில், அவற்றிற்கும் அக்கால சமுதாய வளர்ச்சிக்கோ பொருளாதார அடித்தளத்திற்கோ இடையே நேரடியான தொடர்பில்லை' என்று மார்க்ஸ் குறிப்பிட்டதை ஏ.ஜே. எடுத்துக்காட்டுகிறார். 'இலக்கிய இரசனையற்ற சில மார்க்சியவாதிகள் கலையை வெறும் பிரச்சா ரக்கருவியாகக் கருதுவதனால் பல விபரீதங்கள் ஏற்பட்டுள்ளன' என்றும், 'இலக்கியத்தினை அதில் பொதிந்திருக்கக்கூடிய வெறும் அரசியல் சார்புகளைக்கொண்டு மார்க்ஸோ எங்கெல்ஸோ மதிப்பி டவில்லை' என்றும் ஏ.ஜே. தெரிவித்திருக்கிறார்.

இலக்கிய விமர்சனத்தில், அரசியல் கருத்துகளை அடிக்கொண்டு எழுத்தாளர்களை முதன்மைப்படுத்தும் நிலைமை ஈழத்து விமர்ச னத்துறையில் வேரூன்றி நின்றபோது, அது இலக்கிய வளர்ச்சிக் குத் துணையாக அமையாது என்று ஏ.ஜே. வலியுறுத்தினார். 'மார்க்சியமும் இலக்கியமும்' (அலை வெளியீடு, 1981), 'மார்க்சீய வாதியும் தேசிய இனப்பிரச்சினையும்' - மைக்கல் லோவியின் மொழிபெயர்ப்பு, (அலை வெளியீடு, 1978). ஆகிய நூல்கள் மூலம் மார்க்சியத்தின் புதிய பார்வைகளை ஏ.ஜே. அறிமுகப் படுத்தியுள்ளார்.

ஈழத்தின் தலைசிறந்த ஆங்கில இலக்கிய விமர்சகர் ரெஜி சிறி-வர்த்தனவின் ஆங்கில எழுத்துகளை Selected works of Regi Siri-wardena: Literature and Arts (Vol 1, 2005), Politics and Society (Vol 2, 2006) என்று ஏ.ஜே. தொகுத்து, பதிப்பித்து வெளியிட்ட இரு பெருந்தொகுதி நூல்கள் ஏ.ஜே.யின் பதிப்புப் புலமையை நிறுவு வன.

'மத்து' (மித்ர வெளியீடு, டிசம்பர் 2000)', 'செங்காவலர் தலைவர் யேசுநாதர்' (மித்ர வெளியீடு, டிசம்பர் 2000) என்ற தலைப்புகளில் வெளியான ஏ.ஜே.யின் நூல்கள் அவரது விரிந்த இலக்கிய வாசிப்பை வெளிப்படுத்துவனவாகும்.

ஏ.ஜே.யினது நினைவைப் போற்றி, அவரைப் பற்றிய நினைவுக் குறிப்புகளையும் அவரது தேர்ந்த கட்டுரைகளையும் தொகுத்து நாங்கள் வெளியிட்ட AJ: The Rooted Cosmopolitan - A Festschrift (July 2008) என்ற நூல் அவர் குறித்த முக்கிய ஆவணமாக அமைகிறது.



nithiyananthan.m@thaiveedu.com

**Allstate**
You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



**Raji Linghan**
Ajax Agency
15 Westney Road, N
**(289) 275-8795**
rlinghan@allstate.ca

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி


செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316

**வீடு | வணிகம்**
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...

**Residential | Commercial**
★ BUY ★ SELL ★ LEASE

$985,000

TORONTO
3 | 2

$849,000

AJAX
4+2 | 4

$899,000

MARKHAM
3 | 3


$689,900


OSHAWA
3 | 3

$649,900

TORONTO
4 | 2

Sell Your House for Highest Price - Here Are Some Recent Proven Results


SOLD OVER ASKING 119%
$131,000 SOLD OVER ASKING
Morningside & Stains
3 | 3 Town house


SOLD OVER ASKING 118%
$180,000 SOLD OVER ASKING
Rossland & Chrch
5+2 | 7- Detached


SOLD OVER ASKING 106%
$30,000 SOLD OVER ASKING
Middlefield & Finch
2+1 | 2 Condo


SOLD OVER ASKING 103%
$26,000 SOLD OVER ASKING
Rossland & Chrch
3+1 | 3 Town House



CALL YOUR PROFESSIONAL SERVICE
**Rave**
**P. Raveenthiran**
Sales Representative
**Dir: 416-567-2462**
Email: realtor.rave@gmail.com

HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife G1 Realty Inc.
HomeLife/Future
Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977
MLS

List your property with me...
**FREE!**
- Home Evaluation
- Home Staging
- Professional Photography
- Social Media Marketing
- Just Listed & Feature Sheet

# அண்ணாவியார் சி. ஞானசேகரம்

ஆழத்து முத்துக்கள் 202

- து. கௌரீஸ்வரன்

மட்டக்களப்பில் இன்றுவரை கூத்தரங்க நடவடிக்கைக-ளில் ஆர்வத்துடன் பங்குபற்றி வரும் குறிப்பிடத் தகுந்த அண்ணாவிமார்களுள் ஒருவராக சீலாமுனையைச் சேர்ந்த திரு. சி. ஞானசேகரம் அவர்கள் விளங்கி வருகி-றார். ஊரில் இவரை யோகன் அண்ணாவி என்றே அழைக்கின்றார்கள்.

மட்டக்களப்பு சீலாமுனையில் வாழ்ந்த சின்னையா அழகு இணையரின் முதலாவது மகனாக ஒக்ரோபர் 10, 1956ல் பிறந்த இவர், மட்டக்களப்பு மாமாங்கம் ஆரம்பப் பாடசாலை, கோட்டைமுனை



கனிஷ்ட வித்தியாலயம் என்பவற்றில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றுள்ளார்.

இவர் வாழ்ந்த சீலாமுனையிலும், அயல் ஊர்களிலும் கூத்தரங்க நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தமையாலும், இவருடைய தந்தையார் கூத்தரங்கில் பெயர் பெற்ற பெண் கூத்துக் கலைஞராகவும் கூத்துப் பயிற்சிக் காலங்களில் அண்ணாவி-மார்களுடன் சென்று கூத்துக்களைப் பயிற்றுவிக்கும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற கலைஞராகவும் இயங்கியதால் தந்தையுடன் கூடவே இவரும் கூத்தரங்கக் களங்களுக்குப் பயணித்து வரக்கூடிய ஏதுநிலைகள் வாய்க்கப்பெற்றுள்ளன. இவரிடம் காணப்பட்ட தோல் வாத்தியம் இசைக்கும் ஆற்றலைக் கண்டு அதனை வளர்த்தெடுக்க விரும்பிய இவரின் தந்தையின் ஊக்கப்படுத்தல்கள் காரணமாக சிறு வயதிலேயே மத்தளம் வாசிக்கும் தேர்ச்சியை இவர் அடைந்துள்ளார். இவருடைய வகுப்புத் தோழர்கள், 'தரம் 5 படிக்கும் போதே ஞானசேகரம் நன்றாக மத்தளம் வாசித்தான்' என்று கூறும் கதைகள் இவருடைய சிறுபராயத்து ஆற்றலை உறுதிப்படுத்தி நிற்கின்றன.

### சிறுபராயத்திலேயே...

இவர் தனது பத்தாவது வயதில் தன்னுடன் கல்வி கற்ற நண்பர்களுக்குக் கூத்தினைப் பயிற்றுவித்து ஆற்றுகை மேற்கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். இந்த வாய்ப்பை இவருக்குக் கல்வி கற்பித்த மத்தியசிங்கம் எனும் ஆசிரியர் ஏற்படுத்திக் கொடுத்ததாக மகிழ்வுடன் கூறுகின்றார். அதாவது 'குருக்சேத்திரன் போர்' எனும் வடமோடிக் கூத்து இரண்டு மணி நேரத்திற்குரியதாகச் சுருக்கப்பட்டு திரு. மத்தியசிங்கம் ஆசானின் ஏற்பாட்டில் மட்டுநகர் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் தரம் 5-ல் கல்வி கற்ற மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டு 1960-களில் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மைதானத்தின் நடுவில் வட்டக்களரி கட்டப்பட்டு அதில் அரங்கேற்றஞ் செய்யப்பட்டதாகவும் அதற்குத் தானே சிறுபராய அண்ணாவியாக மத்தளம் வாசித்ததாகவும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கூறுகின்றார்.

### பெண் கூத்துக் கலைஞனாக:

மட்டக்களப்பு கூத்துப் பண்பாடுகளில் அண்ணாவி ஒருவருக்கான அடிப்படைத் தகுதிகளுள் ஒன்றாக அண்ணாவி என்பவர் பெண் பாத்திரங்களையேற்றுக் கூத்துக்களை ஆடிப் பெயரெடுத்தவராக இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. இந்த வகையில் திரு. சி. ஞானசேகரம் அவர்கள் உள்ளூர்க் கூத்துக்களில் பெண் பாத்திரங்களையேற்று ஆடிப் பெயரெடுத்த கலைஞராகத் திகழ்ந்துள்ளார். 1977-ம் ஆண்டு சீலாமுனையில் அரங்கேறிய 'பத்மாவதி' எனும் வடமோடிக் கூத்தில் 'பத்மாவதி'யாக இவர் ஆடியுள்ளார், அதையடுத்து சீலாமுனையில் பயிலப்பட்ட 'இராம நாடகத்தில்' 'சீதை'யாக ஆடியுள்ளார். 1988-ம் ஆண்டு சின்ன உப்போடை எனும் ஊரில் பழகி அரங்கேற்றப்பட்ட 'பிரமராட்சதன் யுத்தம்' எனும் வடமோடிக் கூத்தில் 'பிராமணப் பெண்', 'வினோத வல்லி' எனும் இரு பெண் பாத்திரங்களுக்கு ஆடியுள்ளார். 1990-களில் சீலாமுனையில் பழகி அரங்கேற்றப்பட்ட 'தருமபுத்திரன்' வடமோடிக் கூத்தில் இவர் 'துரோபதை'யாக ஆடியுள்ளார்.

### அண்ணாவி எனும் சமூக அங்கீகாரம்:

உள்ளூர்க் கூத்தரங்கில் அண்ணாவி எனும் பட்டம் அண்ணாவிக்குரிய தேர்ச்சியினை பொது வெளியில் நிரூபிப்பவர்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றது. இது ஒரு சமூக அங்கீகாரமாகவே இருந்து வருகின்றது. தொடர்ச்சியான அவதானங்கள் மதிப்பீடுகள் ஊடாகவே இந்த அங்கீகாரம் கூத்துப் பண்பாடுகள் வலுவாக உள்ள சமூகங்களில் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் சி.ஞானசேகரம் அவர்களும் அண்ணாவி எனும் அங்கீகாரத்தைத் தனது தேர்ச்சியினை நிரூபித்தமையின் ஊடாகவே எய்தப்பெற்றுள்

ளார். 1970-களிலிருந்து பெண் கூத்துக்கள் ஆடிப் பெயரெடுத்து வந்துள்ளமை, மத்தளம் வாசிப்பதில் அடைந்திருந்த தேர்ச்சி என்ப னவற்றை முதன்மைத் தகைமைகளாகக் கொண்டு இவருக்கான அண்ணாவி அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதாவது 1990-ம் ஆண்டு சீலாமுனையில் 'தருமபுத்திரன்' எனும் வடமோடிக் கூத்து மறைந்த அண்ணாவியார் கிருஸ்ணப்பிள்ளை அவர்களால் திரு. செ. சிவநாயகம் அவர்களின் துணையுடன் எழுதித் தொகுக்கப் பட்டு பயிலப்படுவதற்கான சட்டங்கொடுக்கப்பட்ட போது உதவி அண்ணாவி எனும் அங்கீகாரம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் 2002-ம் ஆண்டு சீலாமுனையில் பழகி அரங்கேற் றப்பட்ட 'அருச்சுனன் பெற்ற பாசுபதம்' வடமோடிக் கூத்தினூடாக இவர் அண்ணாவி எனும் முழுமையான அங்கீகாரத்திற்குரியவ ராகினார்.

## கூத்து மீளுருவாக்கத்தில்:

தமிழ்க் கூத்தரங்க வரலாற்றில் கூத்தினைப் பயின்று வரும் கலை ஞர்களுடன் பங்குபற்றி கூத்தைச் சமகாலத்திற்குரிய உள்ளூர் ஆற்றுகைக் கலையாக மீளுருவாக்கம் செய்யும் நோக்குடன் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி. ஜெயசங்கர் அவர்களால் 2002-ம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வரும் பங்குகொள் ஆய்வுச் செயற்பாட்டில் பங்களிப்பு வழங்கி அதனூடாக உள்ளூர்க் கூத்த ரங்குகளைக் காலாவதியாகாது காலத்திற்குப் பொருந்தக்கூடியதா கத் தகவமைக்கும் காரியத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் குறிப்பிடத்தக்க பிரதானமான அண்ணாவியாராக திரு. சி. ஞான-சேகரம் அவர்கள் சிறப்பாக அடையாளங் காணப்படுகின்றார்.

இந்தவகையில் மட்டக்களப்பு சீலாமுனையில் நடந்தேறிய 'தரும-புத்திரன்' வடமோடிக் கூத்தை 'சிம்மாசனப் போர்' (2003) எனும் கூத்தாகவும், 'வாளவிமன்' வடமோடிக் கூத்தை 'அபிமன்யு இலக்க ணன் வதம்' (2004) என்னும் கூத்தாகவும், 'இராம இராவண யுத் தம்' வடமோடிக் கூத்தை 'சீதை சூர்ப்பனகை வதை' (2005) ஆக வும், 'அல்லி நாடகத்தை' 'அல்லியின் எதிர்வாதம்' (2006) எனவும், 'குயலவன்' வடமோடிக் கூத்தை 'சீதையின் துயரம்' (2007) என்றும் மற்றும் 'சுபத்திரை கல்யாணம்'(2008) வடமோடிக் கூத்தையும் பங் குகொள் நிலையில் சமகாலத்தில் முக்கியத்துவம் பெறும் பெண் ணிலைவாதச் சிந்தனைகள், ஒடுக்கு முறைகளுக்கு எதிரான சிந்த னைகள், சூழலியல் சிந்தனைகள் என்பவற்றுடன் தொடர்புறுத்தி மீளுருவாக்கஞ் செய்த ஆய்வுச் செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வத் துடன் ஈடுபட்டு, குறித்த கூத்துக்களை மீளுருவாக்கிப் பயிற்று வித்து அரங்கேற்றிய அண்ணாவியாராக இவர் தனது பங்க ளிப்பை வழங்கியுள்ளார்.

2002 தொடக்கம் இன்று வரை இரண்டு தசாப்த காலமாக இத்த கைய கூத்து மீளுருவாக்க நடவடிக்கைகளில் மிகுந்த ஆர்வத்து டன் பங்குபற்றி வருகின்றார். சீலாமுனைக் கலைக்கழகம், மூன்றா வதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான நண்பர் கள் குழாம், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் நாடகத்துறை மற் றும் நாடகத்துறை சார்ந்த மாணவர்களின் கூத்தரங்க நடவடிக் கைகள் முதலானவற்றில் இவருடைய பங்களிப்பு குறிப்பிட்டுச் சொல்லும் விதத்தில் காணப்படுகின்றன.

கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வில் பாரம்பரிய மான கூத்துப்பனுவல்கள் வாசிக்கப்பட்டு அதில் உள்ள ஆதிக்க, ஒடுக்குமுறைத் தன்மைகள் உரையாடப்பட்டு மீண்டும் கூத்துப்ப னுவல் காலத்திற்குத் தேவையான பொருத்தமான சிந்தனைகள், எண்ணக்கருக்களுடன் மீளுருவாக்கம் செய்யப்படும் போது பாடல் களைச் சந்தத்துடன் அர்த்தம் பொதிந்ததாக ஆற்றுகைக்குரிய வகையில் இலகுபடுத்திக்கொடுப்பதில் அண்ணாவியார் சி. ஞான-சேகரத்தின் பங்களிப்பு மேலோங்கிக் காணப்படும். மத்தளத்தை வாசித்து புதிய பாடல்களைப் பாடிப்பார்த்து அதனைப் பொருத்த மானதாக ஆக்குவதில் மிகவும் அக்கறையுடன் இவர் ஈடுபடுவார்.

## பல்கலையில் வருகைதரு கலைஞனாக:

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றிலே உள்ளூர்க் கலை ஆளுமைகள் வருகைதரு கலைஞர்கள் எனும் உத்தியோகபூர்வ அங்கீகாரத்துடன் அதற்குரிய வேதனங்களைப் பெற்று உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்குத் தமது வித்துவங்களைப் பயிற்று விப்பதற்கான ஏற்பாடுகள் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழ கத்தின் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் 2015களில் நடைமுறைக்கு வந்தமையால் குறித்த நிறுவகத்தில் கல்வி கற்ற நாடகத்துறை மாணவர்களுக்குக் கூத்தினைப் பயிற்று வித்த வருகைதரு கலைஞர்களுள் ஒருவராக அண்ணாவியார் சி.ஞானசேகரம் அவர்கள் விளங்கியுள்ளார். இதனூடாக 'ஆடகச வுந்தரி' எனும் வடமோடிக் கூத்தினை நிறுவகத்தின் நாடகத்துறை மாணவர்களுக்குப் பயிற்றுவித்து அரங்கேற்றியுள்ளார்.

## சிறுவர் கூத்தரங்கில்:

கூத்து மீளுருவாக்க நடவடிக்கையின் மற்றுமொரு பரிமாணமாக சிறுவர்களுக்கான கூத்தரங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சிறுவர் கூத்தரங்கினை முன்னெடுப்பதற்கான பொருத்தமான அண்ணாவியாராக திரு. சி. ஞானசேகரம் அவர் கள் இயங்கி வருகின்றார். 2012-ம் ஆண்டு சீலாமுனையைச் சேர்ந்த ஏட்டண்ணாவியார் செ. சிவநாயகம் அவர்களால் ஆக்கப் பட்ட 'மழைப்பழம்' எனும் சிறுவர் கூத்தினை அதே ஆண்டு கிழக் குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்களுக்குப் பயிற் றுவித்து அரங்கேற்றியிருந்தார். அதையடுத்து இக்கூத்தினை 2015 செப்ரெம்பரில் நுண்கலைத்துறை மாணவன் இ. கங்கைகோபாலன் என்பவரின் ஆய்வுச் செயற்பாட்டிற்காக யாழ்ப்பாணம் சுதுமலை யில் சிறுவர்களுக்குப் பயிற்றுவித்து அரங்கேற்றினார்.

இதேபோல் செ. சிவநாயகம் அவர்களால் எழுதப்பட்ட 'வனராணி' எனும் மற்றுமொரு சிறுவர் கூத்தினை திருகோணமலை மாவட்டத் தின் வெருகல் கல்லடி எனும் ஊரிலுள்ள சிறுவர்களுக்கு நுண்க லைத்துறை மாணவன் வி. விக்னேஸ்வரன் அவர்களின் ஆய்வு நட வடிக்கைக்காக 2019 ஓகஸ்டில் பயிற்றுவித்து அரங்கேற்றியிருந் தார்.

2022-ம் ஆண்டு ஜுலை மாதம் நுண்கலைத்துறை மாணவி சி.சிஜானி அவர்களால் ஆய்வுச் செயற்பாடாக மட்டக்களப்பு மகா ஜனக் கல்லூரி மாணவர்களிடையே முன்னெடுக்கப்பட்ட கூத்த ரங்க நடவடிக்கையில் செ. சிவநாயகம் அவர்களால் எழுதப்பட்ட 'அன்னப்பட்சி' எனும் வடமோடி சிறுவர் கூத்தினை மாணவர்களுக் குப் பழக்கி அரங்கேற்றியிருந்தார்.

2016 ஜுன் மாதம் வாழைச்சேனை கறுவாக்கேணி விக்னேஸ்வரா கல்லூரியில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்கும் மாண வர்களுக்கு கூத்தினைப் பயிற்றுவிக்கும் செயற்பாடு து. கௌரீஸ் வரன் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட போது 'கலிங்கப்போர்' எனும் வடமோடிக் கூத்தினை மாணவர்களுக்குப் பயிற்றுவித்து அரங்கேற்றியிருந்தார்.

## பல்துறை ஆளுமையாக:

அண்ணாவியார் சி. ஞானசேகரம் அவர்கள் வடமோடிக் கூத்தில் தேர்ச்சி மிக்க அண்ணாவியாராகத் தன்னை நிரூபித்து உள்ளூர்க் கூத்துக்களைச் சமகால நோக்கில் மீளுருவாக்கம் செய்து முன் னெடுத்து வரும் கலைஞனாக அடையாளங் காணப்படும் அதே வேளை, அவர் மட்டக்களப்பு பத்ததிச் சடங்கிற்கான பறை, உடுக்கு ஆகிய வாத்தியங்களை இசைக்கும் தேர்ச்சி மிக்க கலைஞராகவும் இயங்கி வருகின்றார். இவருக்கு உரிமையுள்ள மட்டுநகர் எல்லை வீதியிலுள்ள நரசிங்க வயிரவ சுவாமி கோவி லில் நடைபெறும் பத்ததிச் சடங்கில் பறைமேளம், உடுக்கு என் பவற்றை வாசிக்கும் தலைமைக் கலைஞனாக இவர் உள்ளார்.

இத்தோடு உள்ளூர்த் தொழில் முறைமைகளான வாவி மீன் பிடித் தல், கரைவலை வேலை முதலானவற்றிலும் தேர்ச்சி பெற்றுள்ள அதேவேளை, மனிதர்களுக்கு கால் பாதத்தில் ஏற்படும் 'சுளுக்கு' வலியைக் குணப்படுத்தும் வைத்திய நுட்பங்கள் தெரிந்தவராகவும் பல்வேறு நபர்களுக்கு அத்தகைய நோயைக் குணப்படுத்திய நபராகவும் காணப்படுகின்றார்.




gowrieeswaran@thaiveedu.com

# மைக்கல் கொலின் கவிதைகளின் அறுக்க முடியாத பலம்

**- ஆகவே ஜபார்**

திருமலை மண் ஏராளமான படைப்பாளிகளை ஈழத்திற்கு ஈய்ந்தளித்த மண். கவிஞர்கள், கலைஞர்கள், இசைஞர்கள், நர்த்தகர்கள் என அப்பட்டியல் நீளும். ஈழத்துத் தமிழிசைத் துறையில் முதலாவது இசைத் தட்டையும், இலக்கியத்தில் முதல் சரித்திர நாவலையும் இம்மண்ணே எமக்களித்தது. செறிந்த பண்பாட்டுக் கட்டமைப்பைக் கொண்ட இம் மண்ணே எமக்கு கவிஞர் மைக்கல் கொலினையும் தந்துள்ளது.

எண்பத்தேழுகளின் பிற்பகுதியில் எனக்கு அறிமுகமாகி இன்று வரை ஏறக்குறைய முப்பத்தி ஐந்து வருடங்களாக எமது நட்பு தொடர்கிறது. அவரின் அறிமுகமும் நட்பும் கிடைத்த காலத்தி-




லேயே அவர் ஒரு கவிஞராகவும், இதழாழராகவும் இருந்தார். அக் காலத்தில் திருமலையின் மகாகதை சொல்லி வ.அ. ஐயா, பாலேஷ்வரி அக்கா, அருள் சுப்ரமணியம், தாபி சுப்ரமணியம், சித்தி அமரசிங்கம் அண்ணன், இராஜேஸ்வரி அன்ரி, விஸ்வலிங்கம் ஐயா, பத்மநாதன் அண்ணன், றோச் அண்ணன், கே.கே. மதிவதனன், ஏ.எஸ் உபைதுல்லா, ராஜ்கபூர், தில்லை முகிலன், திருமலை நவம், திருமலை சுந்தா எனப் பலர் பல்வகைத் துறைகளில் படைப்புலகத்திற்குள் வேரூன்றியிருந்தனர். இதில் இளைய நுழைவாளர்களாகப் பலர் இருந்தும் சற்று வேறுபட்ட சமூக அக்கறையுடைய பார்வை கொண்டவர்களாக க. ரமணீதரன், கொலின், அஸ்ரபா நூர்தீன் போன்றோர் நுழைந்திருந்தனர். பலர் மறைந்து விட்டனர், பலர் வாழ்ந்து கொண்டிருந்தாலும் தேங்கிவிட்டனர். இன்று வரை தொடராது இயங்கிக் கொண்டிருக்கும் சொற்பப்பேரில் ரமணியும் கொலினும் அஸ்ரபாவும் குறிப்பிடத்தக்கவர்கள், கொலினுக்கு படைப்புலகில் கவிஞர், எழுத்தாளர், இதழாழர், பதிப்பாளர், சினிமா கலைஞர் எனப் பல்வகை முகங்களும் பரிமாணங்களும் உண்டு. எனினும் கவிஞர் எனும் முகத்தைத் தொடர்ந்தும் பிரகாசமாக்கிக் கொண்டு வருபவர்.

அவரால் எழுதி வெளியிடப்பட்ட ஏழு நூல்களில் ஐந்து கவிதைத் தொகுப்புகளாகும். 'என் இனிய பட்டாம் பூச்சிக்கு' எனும் இத்தொகுப்பு அவரின் ஐந்தாவது கவிதை நூலாகும். எடுத்த எடுப்பில் தலைப்பையும் கவிதைகளையும் வாசிப்பவர்களுக்கு காதல் கவிதைகளின் ஒரு தொகுப்பாகவே இது தென்படும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாசிப்புகளிலேயே கவிஞரின் ஆழ்ந்த உத்தி புரியும். பல்வகைப்பட்ட விடயங்களையும் விபரங்களையும் வாசகருக்குணர்த்தவும் நினைவு படுத்தவும் எளிதில் புரிய வைக்கவும் அவைகளை ஒருங்கே கோர்த்தெடுக்க மூவகைப் பின்னலுடனான மெல்லிய நூற்சரடு கவிஞருக்குத் தேவைப்பட்டிருக்கிறது. அச்சரடின் மூவகைப் பின்னல் தான் காதல், காதலன், காதலி. அதில் கோர்க்கப்பட்ட பல் வகையினமே தொன்மம், வரலாறு, போர், புதிது, கண்டு பிடிப்பு, விஞ்ஞானம், துயர், இழப்பு, மகிழ்ச்சி, நினைவிடம் என நீள்பவை. வகையினம் பலவாயினும் நூலிழை ஒன்றே. இத்தொகுப்பு பற்றி நிறையவே பேசலாம், சுருக்கம் கருதி இது தன்னகத்தே கொண்டுள்ள இயல்பான வீச்சு, எளிமை, பண்பு, அனுபவம், உணர்வு, ஒத்திசைவு (Rithm), எல்லாவற்றுக்கும் மேலாக இயல்பான மொழிக்கு இயல்பாய் இருத்தல் என இன்ன பிறவால் இத்தொகுப்பு பேசுதற்குரியதாகிறது. எங்கள் அன்புக்குரிய நண்பரும் சக படைப்பாளியுமான பேராசிரியர் ரமணீதரன் அவர்களின் ரசனை நோக்கில் வரிப்படுத்துவதானால் 'கொலினின் கவிதைகளுக்கு அகவை முதிர்வதில்லை. தொடர்ந்தும் இளமையும் அன்பும் ததும்புபவை, காலத்தால் சூழலால் சலிக்காது கணத்துக்குக் கணம் காதலில் அமிழ்ந்திருப்பவை'. நமது வழக்கமான பாஷையில் சொல்வதென்றால் கொலின் கவிதைகள் என்றென்றும் பதின்ம வயதுடையவை அவரைப் போலவே.

இத்தொகுப்பு நமக்குள் எண்ணிக்கையற்ற விதம் விதமான பட்டாம் பூச்சிகளைப் பறக்க விடுகிறது. எனக்குள் பறந்த பட்டாம் பூச்சிகள் சில வகைமாதிரிக்கு.

***'உன்னை ஒவ்வொரு***
***முறை பார்க்கும் போதும்***
***பெய்கிறது***
***காதல் மழை***
***என் இதயக்குளம் நிறைந்து***
***வழிய வழிய'***

***'உன்***
***உடலெங்கும்***
***ஆடைகளாய்த் தொங்கிக்***
***கொண்டிருக்கின்றன***
***எனது கவிதைகள்'***

***'மண்ணின் மணத்தோடு***
***காற்று வெளியெங்கும்***
***பிசுபிசுக்கும்***
***உன் கூந்தல் ஈரம்.***
***விழியின்***
***இமை தகர்த்து***

*வழிந்தோடும் கண்ணீரில்
கசிந்துருகும் இதயத்துக்
காதலிடை துளிர்த்தெழுந்த
என் பிரியம்
பற்றி எரிகிறது.'*

*'நீ
மெல்ல மெல்ல ஊதிக்
காயவைத்த கவிதைகள்
மீண்டும் மீண்டும் உன்
மூச்சுக் காற்றுக்காய்
நனைந்து
கொண்டேயிருந்தன.'*

*'உன் கரங்களில் நிறைய
நட்சத்திரங்களை
வைத்திருந்தாய் அவற்றை
ஒவ்வொரு திசையாய்
நீ எறிந்தபோது
எட்டுத்திசையெங்கும்
காதல் பூ பூத்தது.'*

*'வெற்றிக் களிப்பில்
நீ தந்த முத்தம் ஒரு
பேரரசை வெற்றி கொண்ட
திருப்தியில் நான்'*

*'கடையில் கிடைக்கும்
தேநீர் முழுவதும் மலையின்
மரவேர்களின் வாசம்'*

*'உன் பேரன்பு நதியெனப்
பாய்கிறது
நான் நீந்திக்
கொண்டிருக்கிறேன்
நதிநீரும் வற்றாது என்
நீச்சலும் நிற்காது
காலாதிகாலத்துக்கும்
நதிபாயும் ஓசையும்
நீச்சல் சத்தமும் ஒலித்துக்
கொண்டேயிருக்கும்.'*

*'காலத்தின் வாய் பிளந்து
காதலைத்தான்
விழுங்கினாலும் உயிரின்
ஒற்றைத் திரியில்
எரிந்து கொண்டிருக்கிறது
நாளையை நோக்கிய
நம்பிக்கை'*

*'ஒரு பட்டாம் பூச்சி பறந்து
வந்து
என் தோள் மீது அமர்கிறது
எனக்குத் தெரியும் அது
நீதானென்று'*

*'கடற்கரை மணலைத்
தட்டிவிட்டு
வீடு வருகிறோம்
என்னதான் ஆசையில்
மணலோடு விளையாடினாலும் மணல்
கடலோடுதான்
மனம் வீட்டோடுதான்.'*

*'ஈரநெருப்பின் கதகதப்பில்
உன் அணைத்தல் நீதந்த
முத்தத்தின் உயிர்
காலவெளிதோறும்
அலைந்தலைந்து
மீண்டுவருகிறது.'*

*'ஓடையெங்கும் தமிழ் மணந்து
ஓட வேண்டும்
என் கவிதைச்
சிலேடையிலும்
நீ மலர்ந்து
பாட வேண்டும்.'*

*'எங்கே இங்கிருந்த
சிவன் கோயில் என்கிறாயா
சிவனின்
தாண்டவமெல்லாம்
கோணேசர் மலையுடன்
போச்சு கோணேசர்
மலையும் போச்சு'*

ஜே.ஜே. சில குறிப்புகள் நாவலில் சுந்தரராமசாமி ஒரு பெண்ணைப் பின் வருமாறு வர்ணிப்பார். அவள் பார்க்கப் பார்க்கப் பெண்ணாகவே இருந்தாள். 'பெண்ணாகவே' என்ற ஒற்றைச் சொல்லுக்குள் பெண்ணை வர்ணிக்க எத்தனை கோடி உவமைகள் தேவைப்படுமோ அத்தனை உவமைகளும் அடங்கி விடுகின்றன. ஆக, ஒரு படைப்புக்கு எளிமையும் நறுக்குத்தனமும் இணைந்து கைகூடும் போது அப்படைப்பு மிகப் பெறுமதியாகிவிடுகிறது. எப்படைப்பும் காலத்தையும் (சங்ககாலம், சங்கம் மருவிய காலம், சோழர்காலம், பல்லவர்காலம், பக்தியற்ற மற்றும் பக்திக் காலம், ஏன் தொல்பழங்காலம்) வகைமைகளையும் (மரபுக்கு முன்னம், மரபுடன், மரபுக்குப் பின்னம், நவீனத்துடன், நவீனத்துக்குப் பின்னம், மெட்டா நவீனத்துடன் மற்றும் அதற்குப் பின்னம்) புறமொதுக்கி விட்டு எளிமையுடன் வெளிப்பாடு கொள்ளும் போது அப்படைப்புக்கு உரையெழுதவோ வியாக்கியானம் செய்யவோ ஓர் அடியார்க்கு நல்லாரோ, நச்சினார்க்கினியரோ படைப்பை நுகர்பவருக்கு அல்லது அணுகுபவருக்கு அவசியப்படுவதில்லை. அவரே அவர்களாகி விடுகிறார். அதனால் தான் எளிமையின் அதீத செல்வாக்கு படைப்பணுகல் முயற்சியின் போது புரிதல், அனுபவித்தல், தன்னைக் காணுதல், மகிழ்தல் அல்லது இன்புறல், படைப்பூக்கல் என சகலவற்றையும் சாத்தியப்படுத்தி விடுகிறது. அந்தப் பலப்புலத்தில் மைக்கல் கொலினின் கவிதைகளை நாம் அணுக வேண்டும். கவிதை மொழி அதன் உயிரான இலக்கணம், சொற்தேர்வு, அலங்காரம், ஒத்திசை, இலகு ஓசை, பேச்சுப்பாங்கு, காட்சிப் பாங்கு, குறுகத்தறிப்பு என எதனாலும் அல்லது எல்லாவற்றாலும் போஷிக்கப்படலாம். ஆனால் எளிமையால் போஷிக்கப்படும் கவிதைகள் இயல்பாகவே எல்லாவற்றாலும் பல-வேளை ஏராளமான பண்புகளாலும் போஷிக்கப்படும். இவ்வகைப் போஷிப்புக்குள் கொலின் கவிதைகள் உள்ளடங்குவதை ஒரு தேர்ந்த வாசகரால் மட்டுமல்ல ஒரு பயில்நிலை வாசகரால் கூட அவதானிக்க முடியும்.

இச்சுருக்க விஷயத்தையே தனது நீண்ட கவிப்பாங்குடனான அணிந்துரையில் கவிஞர் விக்டர்தாஸ் நறுக்காகக் குறிப்பிட்டுள்ளார்.

*'எளிய சொல்லாட்சி
சிக்கலில்லாத உவமைகள்
கண்தாண்டாத
கற்பனைகள்
மொழி மீதான முனை
முறியாப் பற்று
ஊர்மீதான காதல்
சாண்டில்யனையும் விடாத
தன்மை
பழைய வரலாறு மறவாத
குணம்
கூடவே அத்தனையிலும்
தன் காதலியை
ஏற்றிப்பாடும் பிரியம்
இவை இத் தொகுப்பின்
அறுக்க முடியாத பலம்'*

இம்மொழிதலின் கடைசி வரிக்கு அழுத்தம் கொடுத்து அடிக்கோ-டுமிட்டு கவிஞர் விக்டர்தாஸ் சொன்னதையே எனக்கும் சொல்லத் தோணுகிறது.



Jabaar@thaiveedu.com

# பால்வண்ணம் சிறுகதைத் தொகுப்பு - வாசிப்பு அனுபவம்

- குரு அரவிந்தன்

எழுத்தாளர் கே.எஸ். சுதாகரின் பால்வண்ணம் சிறுகதைத் தொகுப்பை வாசிக்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அவுஸ்திரேலியாவில் இருந்து தமிழ் இலக்கியத்திற்குத் தரமான ஆக்கங்களைத் தந்துகொண்டிருக்கும் அவரைக் கனடா வந்தபோது நேரடியாகச் சந்தித்திருக்கின்றேன். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர் மட்டுமல்ல, வெளிப்படையாக அவர் பேசுவதால் நல்ல நட்புகளைத் தேடிவைத்திருப்பவர்.

சென்னை எழுத்துப் பிரசுரத்தின் வெளியீடாக இச்சிறுகதைத் தொகுப்பு வெளிவந்திருக்கிறது. இந்த நூலுக்கான அட்டைப்படத்தை எம்.கே.எஸ். சிவகுமாரன் சிறப்பாக வரைந்திருக்கின்றார். ஜேர்மனியில் இருந்து வெளிவரும் வெற்றிமணி இதழின் ஆசிரியர் மட்டுமல்ல, மகாஜனவின் ஓவியக்கலை ஆசிரியராகவும் இருந்தவர்.

இலங்கையில் இருந்து வெளிவரும் ஞானம் இதழின் ஆசிரியரான திரு. தி. ஞானசேகரன் இந்த சிறுகதைத் தொகுப்பிற்கு முன்னுரை எழுதியிருக்கின்றார். அவர் தனது முன்னுரையில் 'தெளிந்த நீரோட்டம் போன்று அநாயாசமாக கதைகளை நகர்த்திச் செல்லும் ஆசிரியரின் திறனும், அவரது சிறந்த மொழிநடையும் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருப்பதும், பல்வேறுபட்ட கருவும் உருவும் கொண்ட கதைகள் தொகுக்கப்பட்டிருப்பதும் வாசகரது இரசனைக்கு நல்விருந்தாக அமையும்' என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஒவ்வொரு வாசகரின் இரசனையும் வித்தியாசமாக இருந்தாலும், இலக்கியத்தரம் வாய்ந்த நீண்ட காலமாக வெளிவரும் ஞானம் இதழ் ஆசிரியரின் இந்த முன்னுரையில் இருந்து இந்தத் தொகுப்பில் உள்ள சிறுகதைகளின் தரத்தை வாசகர்கள் ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

பன்னிரண்டு சிறுகதைகள் இதில் இடம் பெற்றிருக்கின்றன. இதில் ஆறு சிறுகதைகள் போட்டியில் பரிசுகள் பெற்றவை. முதலாவது கதை பால்வண்ணம். அட்டைப்படத் தலைப்பில் இடம் பெற்ற பெயரும் இதுதான். 'பால்வண்ணம் என்ற தலைப்பும் அருமை, பால் தூய்மையானது, வெண்ணிறமானது, நிறையுணவு, வீசப்பட வேண்டிய பகுதியற்றது. அதுபோல காதலும்கூட ஒரு வலி நிவாரணியாக இருக்கக்கூடியது' என்று இந்தத் தலைப்பைப் பற்றி திருமதி கோகிலா மகேந்திரன் தனது வாழ்த்துரையில் குறிப்பிடுகின்றார். 'இந்த எழுத்தாளரை உருவாக்கிய யூனியன் கல்லூரி நல்லாசிரியர்கள்' யாராக இருக்கும் என்று தாங்கள் கலந்துரையாடியதாகத் திருமதி கோகிலா மகேந்திரன் மேலும் தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டிருக்கின்றார். திருமதி கோகிலா மகேந்திரனும், நானும் மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்றவர்கள். தமிழ் இலக்கிய உலகத்திற்கு மகாஜனக் கல்லூரி தந்த 'நவரத்தினங்களில்' திருமதி கோகிலா மகேந்திரனும் ஒருவர் என்பதில் எழுத்தாளர்களாகிய எங்களுக்கும் பெருமையே!


'பால்வண்ணம் பருவம் கண்டு' என்ற பாசம் படத்தில் வந்த பாடல் மாணவப் பருவத்தில் திரைப்பட இரசிகர்களின் மனதில் பதிந்துவிட்ட வரிகள். எனக்கும் பழைய பாடல் வரிகள் பிடிக்கும் என்பதால், மாணவப் பருவத்து நிகழ்வுகளைக் கதையாக்கும் போது இந்த வரிகளும், எம்ஜிஆர், சரோஜாதேவியின் பாடல் காட்சிகளும் ஆசிரியருக்கு நினைவுக்கு வந்திருக்கலாம். கதைக்கேற்ற பொருத்தமான தலைப்பாக இருக்கின்றது. அழகைப் பார்த்து காதல் வருவதில்லை என்பதை எடுத்துக் காட்டும் இந்தக்கதை, சொல்லாத காதல்தான் ஒருதலைக்காதல் என்று இதுவரை எண்ணியிருந்த எனக்கு சொல்கிற காதலும் சிலசமயங்களில் ஒருதலைக் காதலாகிவிடுவதுண்டு என்பதைப் பரிசுபெற்ற இந்தக் கதை மூலம் அழகாகப் புரிய வைத்திருக்கிறார் ஆசிரியர்.

இன்னுமொரு கதை 'தூங்கும் பனிநீர்' மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீர் என்ற கம்பனோடு தொடர்புடைய ஏற்றப் பாடல். அடுத்தவரி என்வென்று கம்பனே ஏங்கித் தவித்த பாடல் வரியைக் கவிஞர் கண்ணதாசன் திரையுலகிற்கு அறிமுகமாக்கிய வரியே தலைப்பாக இருக்கின்றது. மூன்றாவது கதை 'வெந்து தணிந்த காடு' படம் முதலில் வந்ததா அல்லது இவரது கதை முதலில் வந்ததா தெரியவில்லை. தலைப்பு மட்டுமே தொடர்பாக இருக்கின்றது. 'அனுபவம் புதுமை' என்ற கதையின் தலைப்பும் காதலிக்க நேரமில்லை என்ற படத்தில் 'அனுபவம் புதுமை அவரிடம் கண்டேன்' பாடல் வரியில் இருந்து வந்திருக்கிறது. பழைய பாடல்களில் ஆசிரியர் ஊறிப்போனதால் அவரது விருப்பமான பாடல் வரிகளைத் தலைப்பாக்கியிருக்கலாம். இவற்றைவிட அம்மாவின் எண்பதாவது பிறந்ததின உரை, கலைந்தது கனவு, ஏன்?, தலைமுறை தாண்டிய தரிசனங்கள், யாரோ ஒளிந்திருக்கிறார்கள், பாம்பும் ஏணியும், கனவுகாணும் உலகம், நாமே நமக்கு ஆகிய கதைகள்




இதில் இடம்பெற்றிருக்கின்றன. ஒவ்வொருகதைகளும் வெவ்வேறு வகையான கருப்பொருளைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றன. எனவே நான் அந்தக் கதைகளைப் பற்றிக் குறிப்பிடுவதைவிட, நீங்களே கதைகளை வாசித்து அதன் சுவை இன்பத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

சினிமாவில் அதிக ஈடுபாடு கொண்டதாலோ என்னவோ, இவரது கதைகளில் அதிக இடங்களில் சினிமா வாசனை வீசுகின்றது. இச்சிறுகதைகளின் வடிவநேர்த்தியும், மொழி நடையும் சிறப்பாக இருக்கின்றன. பல்லாயிரக் கணக்கான இரசிகர்களும் இதுபோன்ற இவரது கதைகளால் ஈர்க்கப்படுவதில் வியப்பே இல்லை. அதனால்தான் இவரது 'வளர் காதல் இன்பம்' என்ற நாவலைத் திரைப்படமாக்க முன்வந்திருக்கிறார்கள் என்பதும் பாராட்டப்பட வேண்டியது. இதன் மூலம் மேலும் பல இரசிகர்கள் இவரது வாசகர்களாக உருவாகுவார்கள் என்பது திண்ணம். இன்னும் பல வருடங்கள் ஆரோக்கியமாக வாழ்ந்து, இது போன்ற பல ஆக்கங்களை வெளியிட்டு தமிழ் இலக்கிய உலகை மேம்படுத்த வேண்டும் என நூல் ஆசிரியர் கே.எஸ். சுதாகரை வாழ்த்துகின்றேன்.



kuruaravindan@thaiveedu.com




அட்டைப்படம் போலவே வரலாற்றின் சில நிகழ்வுகளும் அடிநுனி கத்தரிக்கப்பட்டதாக, தலையையும் காலையும் அகற்றிவிட்டு இடைக்கு மேலால் இடையில் செருகப்பட்டவை தான் அதிகம். அவை தான் உண்மை என்ற வகையில் அரைகுறையாக, முழுமையற்ற விதத்தில் எம்முள் இன்றுவரை சேகரமாகி செரிமானமாகி உள்ளன. அப்படிப்பட்ட அரைகுறை வரலாறுகளின் கறைபடிந்த பக்கங்களின் உண்மைகளை, மர்மங்களை உலகறியச் செய்கிறார் சரவணன்.

வரலாற்றில் எழுதப்பட்ட எண்ணற்ற பயன்மிகு நூல்கள் சிறந்த வாசகர்களையும் ஆய்வாளர்களையும் சென்றடையாமை, அந்த நூல்களின் பெறுமதி உணரப்படாமை, அத்தகைய நூல்கள் பிரபலம் பெறாமைக்கும் பயன்பாட்டுக்கு உதவாமைக்கும் காரணிகளாகின்றன. அத்தகைய ஒரு நிலைமைக்கு இந்நூல் ஆளாகக்கூடாது என்பதால் இந்நூலை எனது 100வது நூலறிமுகத்தில் இணைக்கின்றேன். அறியப்பாடாத ஆளுமைகளை அறியப்படுத்தும் அருமையான நூல் அறியப்படாமல் இருக்கக்கூடாதல்லவா?

வரலாறு என்பதே ஒருவகையில் இருட்டடிப்பும் இழுத்தடிப்பும் சார்பியமும் தான். அவசியமானவர்கள் அவசியமற்றவைகளை வேண்டுமேன்றே தள்ளிப்போடும் கைங்கரியம் தான் அனேகமாக வரலாற்று நூல்களில் அரங்கேற்றப்பட்டுள்ளன. (பின்னால் வந்த ஆளும் அதிகார தரப்பு முன்னால் சென்ற தோற்கடிக்கப்பட்ட அல்லது வீழ்த்தப்பட்ட தரப்பை குரூரமாக விமர்சித்து வந்துள்ளதை இஸ்லாமிய வரலாற்று நூல்களிலும் காண முடிகிறது.)

அத்தகைய வரலாற்று அவலங்களை அற்புதமாக தோலுரித்து தலைப்புக்கு ஏற்றாற்போல அறியத் தருகிறார் சரவணன். நீண்ட காலனிய வேர்களைக் கொண்ட இலங்கை வரலாறும் அப்படிப்பட்டதுதான்.

ஓரினத்தின் மேன்மையை, மொழியை உயர்த்தி மற்றமைகளை அடக்கி ஒடுக்கி உதறித் தள்ளிய ஆயிரம் சம்பவங்களை சரித்திர நிகழ்வுகளை இங்கு நாம் காணலாம். அவற்றின் எதிராளிகள் தான் இன்றுவரை முரண்பட்டு முட்டி மோதுமளவு இறுகிய உள்ளம் கொண்டவர்களாக எம்மை மாற்றி விடுபட முடியாதபடி பாடாய் படுத்துகின்றன.

பொதுவாக சமயமாகட்டும், சட்டமாகட்டும், சரித்திரமாகட்டும் பரம்பரை பரம்பரையாக, வாய்வழியாக, பாடத்திட்டம் வழியாக வந்து எம்மிடம் சேர்ந்தவை, அனுபவத்தில் கண்டவை இவை மட்டுமே உண்மையானவை, ஊர்ஜிதமானவை என்பதை உள்மனம் அப்படியே உறுதி செய்திருக்கும். இவற்றுக்கு அப்பால் ஏதாவது புதுமைகள் நுழைகையில் அங்கீகரிப்பது, ஜீரணிப்பது, சமரசம் செய்வது விட்டுக் கொடுப்புடன் நடப்பது எமக்கு மிகவும் கஷ்டமாக அமையும்.

ஆண்டாண்டு காலமாக கூறப்பட்டு வந்ததால் அலுத்து புளித்துப் போன விடயங்களை எல்லாம் கடந்து புதிய விடயங்களை சொல்கிறார் சரவணன். ஏலவே பரீட்சயமான ஆளுமைகள் பற்றிய அறியாத பக்கங்கள் சரியான ஆதாரத்துடன் கூறப்படுகையில் உண்மையில் சுவாரஷ்யமாகவே அமையும். நூல் முழுக்க அதன் உயிரோட்டத்தை காணலாம். பேசப்படும் ஆளுமைகளுடன் மிகவும் நேரடியாக தொடர்புபடும் அல்லது அவர்களாகவே அனுபவங்களை பகிரும் சொந்த மூல நூல்களில் இருந்து தகவல்கள் தரப்பட்டுள்ளதால் இவை இன்னும் செழுமை பெற்று உறுதி செய்யப்படுகின்றன. இன்னொரு வகையில் சொல்வதானால் மூடி மறைக்கப்பட்ட, திரிபுபடுத்தப்பட்ட எமது தேசத்தின் வரலாற்றை கற்பதற்கான புத்தக வடிவிலான புதுமையான நூலறிமுகமும் தான் இது எனலாம்.

பொதுவாக ‘தாம் அறியாதவற்றை மக்கள் எதிர்ப்பார்கள்’ என்ற கூற்றுக்கு இணங்க இங்கும் சில அஜீரணங்கள் தோன்றுவது இயல்பானது. ஊட்டப்பட்ட, போஷிக்கப்பட்ட, திணிக்கப்பட்ட, வரலாறாக்கப்பட்ட, ஊறிப்போன சிந்தனைகளை, தகவல்களை எல்லாம் அகற்றி களைந்துவிட்டு இன்னொரு தளத்தில், கோணத்தில், பார்வையில் நின்று அத்தகைய சம்பவங்களை அணுகுவது, அலசுவது பலருக்கும் சற்று விருப்பமற்ற அஜீரணமாகும் செயல்தான்.

ஆனால் சரவணன் செய்திருப்பது அத்தகைய இறுக்கமான மன நிலையில் இருந்து விடுபட்டு புதிய பார்வையில் வரலாற்றை நோக்கி திரும்பியே ஆகவேண்டும் எனும் உண்மையை தான். ஆகவேண்டியதும் அதுவே தான்.

தன் சார்பிலும் இருட்டடிப்பிலும் எழுதப்பட்ட இலங்கை வரலாற்றை, அதில் மிகைத்துள்ள சார்பியங்களை திரைநீக்கம் செய்துவிடுகிறது நூல்.

பலபோது இலங்கை அரசியலில் அவசியமானவர்களாக மட்டும் கருதப்பட்டு ஆளும் அதிகார வர்க்கத்தால் உயர்த்திப் பிடித்தவர்கள், தமக்கு எதிராக வருமென கருதி பிழையான கருத்தியல்களை கட்டமைத்து அவசியமற்றவர்கள் எனக்கருதப்பட்டு வேண்டும் என்றே மறக்கடிக்கப்பட்டவர்கள், தூக்கி வீசப்பட்டவர்கள் என்ற வகையில் ஒரு சில ஆளுமைகளை மட்டும் நூல் பேசுகின்றது.

உண்மையில் ஐவர் ஜென்னிங்க்ஸ் இங்கு முதலாவது பல்கலையை ஆரம்பித்தது இலங்கையின் சுதேசிகளுக்கு சார்பாக வல்ல, தமது காலனித்துவ சுய நலன்களை இங்கு நிலைநாட்டி சுரண்டிப்பறித்து விழுங்கவும் தமக்கு சார்பான நிர்வாகிகளை தோற்றுவிக்கவுமே, காலனியத்தின் வேரை இன்னும் அகலிக்கும் தூரநோக்கே அங்கிருந்து. இன்றும்கூட அவரால் வரையப்பட்ட சட்ட யாப்புகள் தானே உலக நாடுகள் பலதிலும் உயிர் வாழ்கின்றன.

கண்டியை வெல்ல எத்தகைய கபடத்தனமான நாடகத்தை அரங்கேற்றியுள்ளார் ஹென்றி மாஷல்.

அதிகாரத்தின்முன் ஆன்மாவின் இயல்பான காதலுணர்வுக்கு ஆளாகி சரணடைகிறார் மெயிற்லன்.

நொக்ஸை படுத்தியபாடும் நொக்ஸ் பட்டபாடும் பற்றிய விபரங்கள் இலங்கை பற்றிய மர்மங்களை வெளிப்படுத்துகின்றன.

புரோஹியர் இல்லாவிட்டால் இலங்கையின் பெறுமதி இன்னும் அறியப்பட்டு இருக்கவே முடியாது.

உலக வரலாற்றில் ஐரோப்பா அரேபியர்களுக்கு கடன்பட்டிருப்பது போல, இலங்கையும் விதேசிகளுக்கு கடன்பட்டுள்ளது உண்மைதான்.

ஒல்கொட்டின் வரலாறும் அப்படித்தான். ஆதர் சீ கிளாக்கின் வாழ்வின் பின்னாலும் ஏராளமான மர்மங்கள் உள்ளன. தேயிலையை கொண்டு வந்த டைலரும் இதே நோக்கில் தான் நடந்து கொண்டார்.

தேயிலைக் கொழுந்துகளுடன் வாழ்வை அடைத்துக்கொண்டு தவிக்கும் மலையக மக்கள், இந்திய வம்சாவளி மக்களின் வாழ்வியல் சிக்கல்களும் உரிமைகளும் இன்னுமே தீர்க்கப்படாத நிலையில் சுயநலன்களுக்காக இழுபறியாகி உள்ள அரசியலாகியுள்ள அவலத்தை எல்லாம் கடந்து பல நூற்றாண்டுகளுக்கு முன், ஏன் பெருந்தெருக்களும் தொடருந்து பாதைகளும் மட்டும் அன்றே அமைக்கப்பட்டன என்ற வினா மூலம் எப்படி அவர்கள் உழைப்பால் சுரண்டப்பட்டு பொருளாதார நலன்களுக்காக உறிஞ்சப்பட்டனர் என்பதை புரியலாம். (மலையகம் குறித்த மேலதிக தகவல்களை கள்ளத் தோணியில் அறிமுகம் செய்ய உள்ளேன்).

உண்மையில் இலங்கையின் காலனித்துவ அரசியல் ஆக்கிரமிப்பு கால அரசியல், சமூக மாற்றத்தில் முக்கிய வகிபாகத்தை ஆற்றிய இலங்கையரல்லாத 24 ஆளுமைகள் பற்றியதான அறிந்தும் அறியாத நூலாக தலைப்பிடப்பட்ட நூல் எமது பார்வையை இன்னொரு பக்கம் கொண்டு செல்கிறது.

இலங்கை வரலாறு குறித்தான எனது வாசிப்பு அனுபவத்தில் இன்னொரு இனத்தில், சமயத்தில் இருந்தவாறு அதுவல்லாத மற்ற சமயங்களை அதன் ஆளுமைகளை பேசுவது பன்மைத்துவ புரிதலின் வெளிப்பாடு என்பேன். இங்கு நாம் அதிகம் பேசாத அத்தகைய ஆளுமைகள் அரசியல் தளத்தில் நின்று பேசப்படுகின்றன. இங்கு பதூதாவும் துக்ளக்கும் போல இலங்கைக்கு வந்த இன்னொரு அசோகனாக ஒல்கொட்டும் சங்கமித்தையாக Petrovna Blavatsky-யும் வருகிறார். பைபிளை தமிழுக்கு தந்த Philippus Baldaeus-ம் வந்து செல்கின்றனர்.

அந்த நோக்கில் தான் அ. மாக்ஸின் நான் புரிந்து கொண்ட நபிகளாரையும், மாட்டின் லிங்ஸின் முஹம்மதையும் மைகல் ஹெச்ஹாட்டையும் எஸ் ராவின் கோடுகள் இல்லாத வரைபடத்தில் வரும் இப்னு பதூதாவையும், முஸ்லிம் மன்னராட்சியில் இந்தியாவின் முன்னேற்றம் போன்ற நூல்களையும் வாசித்துள்ளேன்.

அந்த வரிசையில் தான் இந்த நூலிலும் இப்னு பதூதாவில் தொடங்கி மைக் வில்சன் வரையான மர்மங்களை கண்டுகொள்ளலாம்.

பதுதாவின் ரிஹ்லா மூலம் அறிந்த பதூதாவும் கலாநிதி சுக்ரி வழியாக அவரது அகன்ற ஆய்வுகள் மூலம் கண்ட பதூதாவும் வேறுபட்ட ஆளுமை. கோடுகள் இல்லாத வரைபடம், மற்றும் தேசசஞ்சாரி மூலமாக எஸ் ராவின் பதூதா பற்றிய பார்வைக்கும் சரவனின் சமூக மாற்றத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கிய பதூதா பற்றிய பார்வைக்கும் நிறையவே வித்தியாசமான கோணங்கள் உள்ளன. பதூதாவுடன் துக்ளக்கும் வருவது சுவையாக உள்ளது.

துக்ளக்கின் நிர்வாக சீர்கேடுகள் மற்றும் முட்டாள் தனமான செயற்பாடுகளுக்கு பின்னால் உள்ளவர் பதூதா என்பதும் ஆய்வாளர்களது பார்வை. வரலாற்று உண்மையும் அதுதானே. 14-ம் நூற்றாண்டு இந்தியாவை, இலங்கையை அறிய பதூதாவை வாசித்தே இருக்க வேண்டும். அப்போது தான் இரண்டு தேசங்களிலும் நிகழ்ந்த அரசியல் மற்றும் சமூக மாற்ற தளங்களின் வீச்சை உணர முடியும்.

இடையில் பெண் ஆளுமையாக வரும் ஆயிஷா ரவூப் எனும் விதேச ஆளுமை பற்றிய குறிப்புகளும் பயன் மிக்கவை (இது குறித்து தனியாக ஒரு பதிவு எழுதியுள்ளேன்)

இஸ்லாமிய சிந்தனைப்பரப்பில் ஒரு விடயத்தை கண்மூடித்தனமாக ஏற்கவோ நம்பவோ அங்கீகரிக்கவோ இடமில்லை. சொல்லப்படும் விடயம் பற்றிய தெளிவு ஆதாரத்தினடியாக அமைய வேண்டும். அப்போதுதான் அது அரத்தமுள்ளதாக பெறுமானம் மிக்கதாக அமையும்.

ஏன்? எப்படி? எதற்கு? எதனால்? யாரால்? என்ன நோக்கத்திற்காக? போன்ற வினாக்களை முன்வைத்து சிந்திப்பதால் தான் ஒரு நிகழ்வின் ஆழ அகலங்கள், மர்மங்கள் துலாம்பரமாகும். வெறும் எடுகோள்கள், அனுமானங்கள் ஊகங்கள் அர்த்தமற்றவை. விழுமியமிழப்பை (Valueless) பறைசாற்றுபவை. எதிர்ப்பை மட்டும் கக்கும் விசமத்தனமானவை.

ஆனால் முன்வைக்கும் அனைத்துக்குமே மூலாதார, முதன்மை நூல்களையே ஆதாரமாக்கி அலசும் பணி அசகாய சூரர்களின் பணி. அதுவே வரலாற்றுக்குச் செய்யும் அறிவுப்பணி. அழியாத ஆய்வு மரபை அடியொட்டிய பணி. இந்த உன்னத வரலாற்றுப் பணியைத்தான் சரவணன் துணிந்தெழுந்து எழுதியுள்ளார்.

மர்மத் திரைகளை விலக்கி தெளிவூட்டியுள்ளார். காய்தல் உவத்தலின்றி துலாம்பரமாக வரலாற்று வியாக்கியானம் செய்து விப

ரிக்கிறார்.

இப்படியெல்லாம் விபரிக்க வரலாற்று நூல்களை கற்றால் மட்டும் போதாது, வரலாற்றுணர்வும் ரத்தத்தில் கலந்து சங்கமித்திருக்க வேண்டும். அப்படி கலந்தால் மட்டுமே வரலாற்றெழுது கையூடாக இந்தளவு சுவாரஷ்யமாக விறுவிறுப்பாக எழுத முடியும்.

எத்தனையோ வரலாற்று நூல்களை ஆளுமைகளை அலசும் பெருத்த நூல்களை படித்துள்ளேன். ஆனால் நான்கைந்து பக்கங் களில் ஓர் ஆளுமையின் அறியப்படாத புதுமையான வாழ்வி யலை அதன் பின்னாலுள்ள மர்ம அரசியலை இப்படி சுவைபட மூலாதார நூல்களுக்கூடாக படிக்கக்கிடைப்பது இங்கு தான்.

இதனால்தான் சரவணனின் இலங்கையின் கடந்தகாலம் பற்றிய வரலாற்று எழுத்துகள், மீள உயிர்பெற்று எழுந்து வீரியத்துடன் நின்று எதிர் காலத்தன்மை பெற்றுவிடுகின்றன. தகவல்களை மட் டும் உள்வாங்கி, மெய்சிலிர்த்து, புருவமுயர்த்தி புடைத்துவிட்டு, அடங்காமல் புதுமையான தகவல்களின்பால் பயணிக்க, உண்மை களை கண்டறிய களமமைக்கிறார் சரவணன்.

எழுந்தமானமான பார்வை, ஒற்றைப்பரிமாண புள்ளியில் சுழன்று தவித்துக் கொண்டிருத்தல், நுனிப்புல் மேய்தல், உதிரியான தக வல்களை கோர்த்தல், இணைத்தல் போன்ற அரத்தமற்ற அனைத் தையுமே தவிர்த்து, தகர்த்து ஒழுங்குபடுத்தப்பட்ட உண்மையான, ஊர்ஜிதமான, பன்முக பரிமாணம் கொண்ட பார்வைக்கு அழைத் துச் செல்கிறார்.

கூறியதையே திரும்பத் திரும்பக் கூறும் மூடிய, இருண்ட சார்பிய தகவல் மூலங்களிலிருந்து முழுமையாக விலகி உண்மையான மூலங்களின்பால் திறந்த புதிய பார்வையை நோக்கி நகர்த்திச் செல்கிறார் சரவணன்.

இதுவே அவரது கைதேர்ந்த ஆழமான வாசிப்பினதும் காய்தல் உவத்தல் அற்ற எழுத்தினதும் பெருத்த வெற்றி என்பேன்.


இங்கு பேசப்பட்டுள்ள அனைத்து விதேச ஆளுமைகளும் யாரின் சுக்கானின் கீழால் இயக்குவிக்கப்பட்டார்கள்? எதற்காக வந்தார் கள்? எதற்காக அழைத்து வரப்பட்டார்கள்? இடையில் ஏன் துரத் தப்பட்டார்கள்? ஏன் நாடுகடத்தப்பட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன? இன்றைய சமகால அரசியல் நிலைமையின் மூலங்களை எப்படி எப்படி எல்லாம் உரசி உராய்ந்து ஒப்பிட்டு பார்க்க வேண் டும்? என்பதனை எமக்கான வினாக்களாக்கி அழகுற உணர்த்து கிறது இந்நூல்.

மொத்தத்தில் நூல் தூக்கலாகவும் அசத்தலாகவும் உள்ளது.

சரவணன் வரித்துக்கொண்ட அரசியல் எவ்விதத்திலும் சமரசமற் றது. எவற்றையும் அரசியலாக நோக்குபவன் மாத்திரமல்ல, பத்தி ரிகையாளனாக மாத்திரமல்லாது அரசியல் களப் போராளியாக வும் வீதியில் இறங்கியவன்' என பின்னட்டை குறிப்பிடுவதை அவ ரது எழுத்துக்கள் ஊர்ஜிதம் செய்கின்றன.



bisthamy.ahamed@thaiveedu.com



# தோல்வியடைந்த நாட்டிலிருந்து உலகை வென்ற இலக்கியப் படைப்பு

- சுப்ரமணியம் ஜெயசீலன்

விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் போன்ற பல்வேறு துறைகள் மனித வாழ்வியல் மாற்றங்களுக்கு எத்தனை அத்தியாவசியமானதோ அதனை விடவும் ஒரு மடங்கு அதிகளவு கலை இலக்கியங்கள் அல்லது படைப்பிலக்கியங்கள் மனிதரின் வாழ்வுதனைச் செழுமைப்படுத்த உதவும். அது, மனிதத்தை விதைத்து வளரச்செய்யவும் இன்றியமையாதது என்றால் மிகைப்படப் போவதில்லை. அந்த வகையில் சக மனிதரைச் சாகடிக்கத் துடிக்கும் இன்றைய உலகில் மனிதத்தின் மகத்துவத்தை அடிக்கடி யதார்த்தமாய் நினைவூட்டுவதில் படைப்பிலக்கியங்களின் வகிபாகம் ஓர் வரம்பிற்குள் கட்டுப்படுத்தக்கூடியதல்ல.

அண்மையில் இலங்கையின் எழுத்தாளர் ஷெஹான் கருணாதிலக்க எழுதிய மாலி அல்மேதாவின் - ஏழு நிலவுகள் (The Seven Moons of Maali Almeida) என்ற நாவல் சர்வதேச ரீதியில் பெரிதும் போற்றப்படும் இலக்கிய விருதுகளில் ஒன்றான புக்கர் (Booker) விருதினைப் பெற்றுக்கொண்டுள்ளது. இலங்கை இலக்கிய வரலாற்றில் புக்கர் விருது பெற்றுக் கொள்ளப்படும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

30 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1992ம் ஆண்டில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கனடிய பிரஜையான மைக்கல் ஒன்டாச்சி என்ற படைப்பாளியின் 'ஆங்கில நோயாளி' (English Patient) என்ற நூலுக்குப் புக்கர் வழங்கப்பட்டது.

ஒக்ரோபர் 17-ம் திகதி லண்டனில் நடைபெற்ற புக்கர் விருது வழங்கும் நிகழ்வில் பிரித்தானிய அரசி கமிலா பார்க்கரின் கரங்களிலிருந்து இந்த அதி உயர் விருதினை ஷெஹான் பெற்றுக்கொண்டார். இந்த விருதுடன் ஷெஹானுக்கு 50,000 ஸ்ரெலிங் பவுண் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

விருது வென்றெடுத்த ஷெஹான் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் விழா மேடையில் பேசி அனைவரையும் நெகிழச் செய்திருந்தார்.

'நாடு தோல்வியடைந்துள்ள தருணத்தில் இது ஓர் வெற்றி' என அவர் மேடையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவின் அருந்ததி ராய் மற்றும் இந்தியப் பூர்வீகத்தைக் கொண்ட பிரித்தானியரான சல்மான் ருஸ்டி ஆகிய புகழ்பூத்த எழுத்தாளர்களும் புக்கர் விருதுகளை வென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'வழிபாடு செய்யக் கூடிய இரண்டு கடவுள்கள் இருக்கின்றார்கள், அவர்கள் மின்சாரமும் சந்தர்ப்பமும்' என ஷெஹான் தனது நாவலை ஆரம்பித்துள்ளார். இதனால் தனக்குக் கிடைக்கப்பெற்ற புக்கர் விருதினை ஓர் சந்தர்ப்பமாக ஷெஹான் குறிப்பிடுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. எனினும், புக்கர் விருது வழங்கும் ஜூரி குழுவின் அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக இந்த நூலுக்கு விருது வழங்க எடுத்த தீர்மானம் - இந்த வெற்றி மிகவும் மகத்துமானது என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

இந்த நாவலை எழுதுவதற்கு உறுதிபூணலுடன் தெரிவு செய்த விடயம் மற்றும் நகைச்சுவைசார் கதைகூறும் நுட்பம் என்பனவே



ஷெஹான் கருணாதிலக்க அல்மேதாவின் ஏழு நிலவுகள் நூல் புக்கர் பரிசு வெல்வதற்கு ஏதுவாக அமைந்தது என ஜூரி உறுப்பினர்கள் கூறுகின்றனர்.


சைனமன் (Chinaman : The Legend Of Pradeep Mathew) - ஷெஹானின் கன்னி நாவலுக்கு பல்வேறுபட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தம் தொடர்பிலான ஷெஹான் கருணாதிலக்கவின் மாலி அல்மேதா, இன்னமும் இலங்கைவாழ் வாசகர்களுக்கு வெகுவாகப் பரீட்சயமில்லாத காரணத்தினால் வெளிநாட்டு நூல் திறனாய்வாளர்கள் மற்றும் விமர்சகர்கள் சிலரின் நூல் பற்றிய பார்வையை நாம் இங்கு நோக்குவது பொருத்தமாக அமையும்.

சுதந்திரமாகப் பிரவகிக்கும் சாதாரணத்தன்மைக்கு எதிரான சந்தம்

அவரது எழுத்தாற்றுகையின் கவர்ச்சிமிகு சிறப்பம்சமாகும் என பிர பல எழுத்தாளர் லுடொவிக் ஹான்டர் டில்னி தெரிவிக்கின்றார்.

'தான் பிறந்த நாட்டில் இடம்பெற்ற நினைத்துப் பார்க்க முடியாத பயங்கரமான சம்பவங்கள் பற்றிய விபரிப்பாக இந்த நாவல் நகர்ந்து செல்கின்றது. அத்துடன் இந்தச் சம்பவங்கள் தொடர்ந் தும் இடம்பெற்று வருகின்றன என்பதனைக் காண்பிக்கும் நோக் கில் ஓர் ஒளிக் கீற்றைப் பீய்ச்சுகின்றார், அது எவ்வாறு வாசகர்க- ளின் இதயங்களைக் கவரும் என்பது பற்றி அவருக்குத் தெரி யாது. எனினும், ஷெஹானின் ஏழு நிலவுகள் என்ற படைப்பினை புக்கர் விருது வழங்கும் ஜூரிகள் கோபமும் ஹாஸ்யமும் பிணைந்த ஓர் கோப நகைச்சுவையாகக் கருதுகின்றனர்.'




இந்த நூல் புக்கர் பரிசிற்கான இறுதிச் சுற்றுக்காகத் தெரிவு செய் யப்பட்டதன் பின்னர் பி.பி.சீ ஊடகத்தின் பிரபல ஊடகவியலாளர் ரெபேகா ஜேன், நூல் பற்றிய தனது பார்வையை வெளியிட்டிருந் தார்.

'இந்த நூலின் ஆரம்பத்தில் விகாரமடைந்த ஓர் தோற்றம் காணப் பட்டாலும், கதையானது பரலோகத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பரலோகத்திலும் பூலோகத்திலும் மாறி மாறி நடைபெறும் சம்ப வங்களின் திரட்சியாகக் கதையோட்டம் நகர்த்தப்பட்டுள்ளது. இலங்கையின் உள்நாட்டு போர் இடம்பெற்ற காலத்தில் 1990ம் ஆண்டில் கொலை செய்யப்பட்ட மாலி அல்மேதா என்னும் புகைப்படக் கலைஞர், தம்மை யார் கொலை செய்தார்கள் எதற் காகக் கொலை செய்தார்கள் என்ற கேள்விகளுக்கு விடை காணும் தேடலாக நூலின் கதை அமைந்துள்ளது. ஆரம்ப காலங் களில் இந்த நூலை பிரசுரம் செய்வதற்கு முடியாத நிலைமை காணப்பட்டதாக ஷெஹான் என்னிடம் கூறியிருந்தார். புக்கர் விருது கிடைக்கப் பெற்றதன் மூலம் இந்த நூலிற்கான வாசகர் வட்டம் மேலும் பல்கிப் பெருகும்' என ரெபேகா ஜேன் குறிப்பிட் டுள்ளார்.

பிரபல சுயாதீன ஊடகவியலாளர் டொமிவா ஓவாலேட், இந்த நவாலைப் பற்றி... 'இலங்கையின் மரணத்தின் பின்னரான வாழ்க்கை' என்ற தலைப்பில் தனது சுருக்கமான நூற் திற னாய்வை வெளியிட்டிருந்தார். புகைப்படக் கலைஞர் ஒருவரின் மரணத்தின் பின்னரான வாழ்க்கையை நகைச்சுவை மற்றும் வியா கூலத்தன்மை ஆகிய உணர்வுகளினால் பிணையப்பட்டுள்ள நாவல், இலங்கையின் சிவில் போரின் பெருஞ்சோகத்தை வெளிக் கொணரும் முனைப்பாகப் படைக்கப்பட்டுள்ளது.

சிங்களத் தந்தைக்கும் பேர்கர் தாய்க்கும் மகனாகப் பிறக்கும் மாலி, நிக்கோன் கமராவை அதிகம் நேசிக்கும் ஓர் சுற்றுலாப் புகைப்படக்கலைஞராவார். சூதாட்டத்தில் ஈடுபடும் ஓரினச் சேர்க் கையாளரான மாலி, ஓர் நாத்திகனாவார். கதையின் ஆரம்பத்தி- லேயே உயிரிழக்கும் மாலி, மீண்டும் உயிர்த்தெழுந்துகொள்வதா கச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

மாலி என்பவர் இலங்கையில் இடம்பெற்ற ஈழப்போரின் ஓர் சாட் சியாளர். பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் பணியாற்றி வரும் மாலி போரை நிறுத்தக் கூடிய, அரசாங்கங்களைக் கவிழ்க்கக்கூ டிய வகையிலான புகைப்படங்களை எடுக்க வேண்டும் என்ற அபிலாஷையைக் கொண்டுள்ளார்.

இவ்வாறு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தனது குடும்ப வீட்டின் கட்டில் ஒன்றின் கீழே வைக்கப்பட்டுள்ளது. பரலோகத்தில் இருக் கும் மாலி, தனது நண்பியான ஜெகீ மற்றும் அவரது உறவினரான பெண் ஒருவருடனும் தொடர்பு கொள்ளவும், புகைப்படங்களை அவர்கள் எடுப்பதற்குத் தூண்டுவதற்கும், மோதலின் ஆழமான வன்முறைத்தன்மையை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்குத் தலைநகர் கொழும்பில் இந்தப் புகைப்படங்களை விநியோகிப்ப தற்கும் மாலிக்கு ஏழு நிலவுகள் அல்லது ஏழு நாட்களே எஞ்சியி ருக்கின்றன.

அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் இந்த நாவலின் ஏழு நிலவு கள் என்பது பற்றி மாலி என்னும் கதையின் நாயகன் விபரிக்கின் றார். 'கடந்த கால வாழ்க்கையை நினைவுபடுத்துவதற்கு அனைத்து ஆத்மாக்களுக்கும் ஏழு நிலவுகளுக்கு இடையில் சஞ் சரிப்பதற்கு அவகாசம் உண்டு, அதன் பின்னர் மறந்து போய்வி டும். உங்களை மறந்து போக வேண்டுமென அவர்களுக்குத் தேவையுண்டு. ஏனெனில் உங்களை மறந்தால் எதுவும் மாற்றம- டையாது' (every soul is allowed seven moons to wander the in Be- tween. To recall past lives. And then, to forget. They want you to forget. Because, when you forget, nothing changes.)

இந்த நாவல் முழுவதுமாக இரண்டாம் நபர் ஒருவரின் கோணத்தி லிருந்து பார்த்துக் கதை கூறும் வகையில் கதையோட்டம் நகர்த் திச் செல்லப்பட்டுள்ளது. இந்த நாவலில் உவமானங்கள் மிக நேர்த்தியான முறையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கதையின் முழு ஓட்டத்திலும் செழிப்பான இலக்கியநயம் கலந்திருந்த போதிலும் ஆழத்தில் இலங்கையின் சிவில் யுத்தம் மற்றும் உண்மைச் சம்பவங்கள் என்பன புரையோடிப் போயுள் ளன. இந்த நூலின் ஊடாகத் தனது நாட்டு வரலாற்றில் கோர யுத்தம் இடம்பெற்ற பயங்கரமான காலச் சூழ்நிலைக்குக் கலைந யம் மிக்க நியாயத்தை ஷெஹான் வழங்கியுள்ளார் என டொமிவா குறிப்பிட்டுள்ளார்.

'எனக்குப் பல விருதுகள் கிடைத்துள்ளன. எனினும் இந்தப் புக்கர் விருது இதயத்திற்கு மிகவும் உயரியதாகவே தெரிகின்றது அவ் வாறே நான் கருதுகின்றேன், சய்னமன் நாவலுக்கும் பல விருது கள் கிடைக்கப்பெற்றன. இதனால் விருதுகள் எனக்குப் புதிய தல்ல' என ஷெஹான் விருது பெற்றுக்கொண்டதன் பின்னர் ஊட கங்களுக்கு வழங்கிய நேர்காணல்களில் கூறுகின்றார்.

கொழும்பின் பெற்றோல் வரிசைகளிலும் மின்சாரத் துண்டிப்புக ளுக்கு மத்தியிலும் சிறைப்பட்டு வரிசைகளில் காத்திருந்த போது... எனது இந்த நாவல் சிறந்த நாவல்களில் ஒன்றாக இறு திச் சுற்றுக்குத் தெரிவாகியது.

போராட்டம் முன்னெடுக்கப்பட்டது, புதிய நம்பிக்கைக் கிரணங்கள் படரத் தொடங்கின, இந்த வெற்றியை விடவும் ஓர் நல்ல எதிர் காலம் எனக்கு உண்டு' என்கிறார்.

'நூல்கள் மெதுவாக வாசகர்களைக் கவர்ந்திழுக்கின்றது, இருட் டில் அமர்ந்து கொண்டு கடந்த 10 - 12 ஆண்டுகளாக இந்த நூலை எழுதினேன்' என்பதன் ஊடாக ஓர் படைப்பாளியின் பாதை பட்டுப்பாதை அல்ல என்பதனை எமக்கு ஷெஹான் மிருதுவாக விபரிக்கின்றார்.

ஷெஹானின் புக்கர் விருது வென்ற நாவலின் மூலப் பிரதியானது சட்ஸ் வித் தி டெட் (Chats With The Dead) என்ற பெயரில் இந்தி யாவில் பிரசுரிக்கப்பட்டது. இந்த நூலில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என ஷெஹான் கருதிய போதிலும் அவரது பிரசுரிப்பாளர் நூலை பிரசுரம் செய்யவே விரும்பினார். பத்து - பன்னிரெண்டு ஆண்டுகளாக ஷெஹான் சேகரித்த பல்வேறு விட யங்கள் இந்த நூலில் காணப்படுகின்றது.

இந்த நவாலில் ஷெஹான் ஆழமான கதையொன்றைக் கையில் எடுத்து வெற்றிகொண்டுள்ளார். ஷெஹானின் முதலாவது நாவ லான சய்னமன் நாவலும் கிரிக்கட் விளையாட்டை மையமாகக் கொண்டாலும் அது கிரிக்கட் விளையாட்டுப் பற்றி மட்டுமே பேசும் கதைக்கரு கிடையாது. அதேவிதமாக மாலி அல்மேதாவின் ஏழு நிலவுகள் நாவலும் இலங்கையை மையமாகக் கொண்டாலும் அதன் கருப்பொருள் சர்வதேச ரீதியில் பொருந்தக்கூடிய அம்சங் களைத் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது.

அமெரிக்காவின் மினாசொட்டா மாநிலத்தைச் சேர்ந்த ஓர் வாசகரி னாலும் இந்தக் கதையைப் படித்து விட்டு எதிர்வினையாற்றக்கூ டிய வகையிலான கதைக்கருவினையே ஷெஹான் பயன்படுத்தி யுள்ளார். எழுதுதல் மற்றும் மீள எழுதுதல் அவரது எழுத்து முறை யாகக் காணப்படுகின்றது.

நான் 1983 மற்றும் 1989 காலங்களை நோக்கிப் பயணிக்கும் போது நீங்கள் உயிர்த்த ஞாயிறுத் தற்கொலைத் தாக்குதலைக் கடந்து செல்ல நேரிட்டுள்ளது. நாம் ஒருபோதும் கடந்த காலத்திற் குச் சென்று ஒன்றை ஏற்றுக்கொள்ளவோ அல்லது படிப்பினையை கற்றுக்கொள்ளவோ கூடியவர்கள் அல்லர். இந்த நூல் அதனைச் செய்கின்றது. இந்த நூல் உங்களைக் கடந்த காலத்திற்கு அழைத்துச் சென்று அதனை மீளப் பார்ப்பதற்கு வழியமைத்துக் கொடுத்துள்ளது. அர்த்தபூர்மான மாற்றமொன்றை ஏற்படுத்தும் நோக்கில் இந்த முனைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏழு நிலவுகள் நூலில் நகைச்சுவைக்கு மேலதிகமாகப் பல விட யங்கள் காணப்படுகின்றன. இறந்தவர்கள் தாங்கள் செல்ல வேண் டிய இடத்திற்கு அணி திரள்வது மட்டும் இந்தக் கதையில் கூறப் படவில்லை. உயிரிழந்தவர், அவர் உயிரிழக்க நேரிட்டமைக்கான காரணம், அவரைக் கொன்றவர்கள் பற்றிய தேடலாக அமைந்துள் ளது. சய்னமன் நாவலில் கிரிக்கட் விளையாட்டை ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்ட ஷெஹான், இந்த நாவலில் இளம் தலை வர்களுக்குக் கடந்த காலம் பற்றிய படிப்பினைகளைக் கூற விழைகின்றார்.

இளம் தலைவர்கள் புத்தகங்களின் ஊடாக கடந்த காலத்திற்குச் சென்று படிப்பினைக் கற்றுக்கொள்ள வழியமைத்துக் கொடுக்க வேண்டுமென ஷெஹான் குறிப்பிடுகின்றார்.

மாலி அல்மேதாவின் ஏழு நிலவுகள் நூல் எடுத்த மாத்திரத்தில் எளிமையாக வாசித்துப் புரிந்து கொள்ளக்கூடிய தோற்றத்தைத் தருகின்றது. எனினும் அது ஆழமான அர்த்தபுஷ்டிகளைத் தன்ன கத்தே செழுமையாகத் தாங்கிக் கொண்டுள்ளது. கதைகளையும் சம்பவங்களையும் ஒன்றுடன் ஒன்று அபாரமான முறையில் பிணைந்திருக்கின்றார். தனது நூலின் பாத்திரங்கள் கதையோட் டத்துடன் முழுமையாக இயைந்து செல்ல வேண்டும் என்பதில் ஷெஹான் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டுள்ளார். சய்னமன் மற்றும் ஏழு நிலவுகள் ஆகிய இரண்டு நூல்களும் சோகரசம் விர விக் காணப்படும் சம்பவங்கள் நிரம்பப்பெற்றவை எனினும் சாதக மான நிலைப்பாட்டைத் தனது கதையாற்றலினால் அவர் வெளிப் படுத்தியுள்ளார்.

'இந்த நூல் பல ஆண்டுகளாக உருவாக்கப்பட்டது. நான் இந்த நூலைப் பல தடவைகள் மாற்றியமைத்துள்ளேன்.' என்று கூறுவ தன் மூலம் தனது அரிய படைப்பின் மீது கொண்டுள்ள அர்ப்ப ணிப்பையும் காதலையும் அவர் தெளிவாக வெளிப்படுத்துகின் றார்.

அச்சு மற்றும் பிரசுரம் என்பன மிகவும் சிரமமானதாகக் காணப்ப டும் நாடு ஒன்றில் வாசிப்புக் கலை மருவிச் செல்லும் என்பது நிதர்சனமானது. இவ்வாறான ஒரு நாட்டில் புக்கர் பரிசு வென்ற ஷெஹான் வாசிப்புப் பற்றி விதந்துரைக்கின்றார்.

'இலங்கைக்கு நன்மை நடக்க வேண்டுமாயின் வாசிக்கக் கூடிய மக்கள் இருக்க வேண்டும். நாள்தோறும் வாசியுங்கள். எந்தப் புத் தகத்தையாவது வாசியுங்கள், சேக்ஷ்பியரின் நூல்களை வாசிக்கத் தேவையில்லை, நீங்கள் விரும்பும் எதையாவது வாசியுங்கள். நீங் கள் தேவதைக் கதைகளை விரும்பினால் அதை வாசியுங்கள். அதேபோன்று நாள்தோறும் எழுதுங்கள். நல்லதொரு ஊடாடு தலை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது. நாம் நிறைய பேச வேண்டிய இனமாவோம். மனிதகுலமே கதைகளி னால் நிரம்பியுள்ளது. அதுவே ஒவ்வொருவரையும் புரிந்துகொள் ளக்கூடிய ஒரே வழியாகும். வாசிப்பும் எழுத்தும் உங்களை எழுத் தாளனாகப் பரிணமிக்கச் செய்ய உதவும். பிள்ளைக்குத் தந்தை யான குடும்பஸ்தனான நான் வாசிப்பதற்கான நேரத்தைத் தேடிக் கொள்கின்றேன். உங்களினால் ஒரு மாதத்திற்கு ஒரு புத்தகத்தை வாசிக்க முடியும்?' என்கிறார் ஷெஹான்.

உண்மையில் ஓர் நாட்டின் இருண்டயுகம் பற்றிய காலச்சூழ்நிலை- களை எடுத்து இயம்புவது அடுத்த தலைமுறைகளுக்கு மிகவும் அத்தியாவசியமானவையாகும். ஏனெனில் கடந்த காலக் கசப்பான அனுபவங்களில் கற்பிதங்களைக் கற்றுக்கொண்டு அவை மீள ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்கு இந்த இலக்கியங்கள் இன்றியமை யாதவை. யுத்தம் பற்றிய புள்ளிவிபரங்கள் அறிக்கைகளின் ஊடாக, வரலாற்றுப் போர்த் தகவல்கள் ஊடாக வாசகரை நெருங் கிவிட முடியாது. கலை ஆழம் செறிந்த படைப்பிலக்கியங்களின் வாயிலாக வாசகர் நெஞ்சங்களில் ஆழமான மாற்றங்களை உரு வாக்கி எதிர்கால இழப்புக்களைத் தடுக்கவும், தவிர்க்கவும் முடி யும் என்பது திண்ணம்.

புலம்பெயர்ந்து இருந்தாலும் ஷெஹான் கருணாதிலக்க தாய்நாடு மீது கொண்ட அதீத பற்றுதலினால் இவ்வாறான ஓர் படைப்பி லக்கியம் வாயிலாக யதார்த்தத்தை வெளிப்படுத்திக் கடந்த காலத் தவறுகளை நினைவூட்டி பல்வேறு படிப்பினைகளை இலக் கிய நயத்துடன் விதந்துரைத்திருப்பது நன்றி பாராட்டுதலுக்குரி யது.

'இலங்கைச் சொந்தங்களே எமது கதைகளைக் கூறுவோம், கூறிக் கொண்டே இருப்போம். நன்றி.' என, புக்கர் விருது விழா மேடை யில் தமிழ் மொழியில் உரக்கக் கூறித் தனது உரையை ஷெஹான் கருணாதிலக்க நிறைவு செய்திருந்தார்.



jeyaseelan.s@thaiveedu.com

# ஓர் ஒல்லாந்தத் தளபதியின் யாழ்ப்பாண நினைவுத்திரட்டு

- மணி வேலுப்பிள்ளை

**1667** ஜனவரி 26-ம் திகதி ரொட்டர்டாமில் பிறந்த ஹென்றிக் சுவார்தகுரூன் (Hendrick Zwaardecroon) 1694 முதல் 1697 வரை யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்த தளபதியாக விளங்கியவர். மூன்றே மூன்று ஆண்டுகளுக்குள் அவர் வட - கீழ் இலங்கை முழுவதையும் கண்காணித்து, தனது பின்னவர்களுக்கு வழிகாட்டவென விட்டுச்சென்ற நினைவுத்திரட்டு அரியதொரு வரலாற்று ஆவணமாகும்.

தனது தாய்மொழியில் அவர் எழுதிய நினைவுத்திரட்டு பிரித்தானிய ஆட்சியாளரால் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டு, இலங்கை அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 1911-ல் வெளியிடப்பட்டது. அதன் படப்பிரதி ஒன்று கலிபோர்ணியா பல்கலைக்கழக நூலகத்திலிருந்து திரு. பத்மநாப ஐயர் ஊடாக அண்மையில் எமக்குக் கிடைத்தது. ஆங்கில மொழிபெயர்ப்பில் 95 பக்கங்கள் கொண்டது.

இலங்கையில் தாம் கட்டியாண்ட வட - கீழ்ப் புலத்தை யவ்னாபற்றம் (Jaffnapatam) என்று ஒல்லாந்தர் குறிப்பிட்டார்கள். இது யாழ்ப்பாணப் பட்டினம் என்பதன் ஒல்லாந்த உச்சரிப்பு. ஒல்லாந்தரின் சொல்லாட்சியில் இது யாழ்ப்பாண மாநகரத்தை மட்டும் குறிக்கவில்லை. ஒல்லாந்தரின் ஆளுகைக்கு உட்பட்ட வட-கீழ்ப் புலம் முழுவதையும் குறித்தது.

### ஆள்புலம்:


தீவகம், குடாநாடு, வன்னி, மன்னார், புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய தமது ஆள்புலத்தைக் கட்டியாள்வது, பொருள்வளம் பெருக்குவது, வணிகம் புரிவது, வரி வசூலிப்பது... பற்றி எல்லாம் தன் பின்னவர்களுக்கு அவர் மதியுரைகளும், அறிவுறுத்துரைகளும் விடுத்துள்ளார்.

### தீவகம்:

'நாங்கள் காரைதீவை Amsterdam என்றும், வேலணைதீவை Leyden என்றும், புங்குடுதீவை Middleburg என்றும், நெடுந்தீவை Delft என்றும், நைனாதீவை Haarlem என்றும், அனலைதீவை Rotterdam என்றும், இரணைதீவை de Twee Gebroeders அல்லது Hoorn & Enkhuisen என்றும் குறிப்பிடுகிறோம்' என்று தெரிவித்து தமது தாயக வேட்கையை வெளிப்படுத்துகிறார்.

### குடாநாடு:

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரிவுகளையும், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை,


MEMOIR

HENDRICK ZWAARDECROON,

ஆனைக்கோட்டை, நல்லூர், கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, வல்லை, வல்லிபுரம் ஆகிய ஊர்களையும் பற்றிய குறிப்புகள் இந்நினைவுத்திரட்டில் திரும்பத் திரும்ப இடம்பெற்றுள்ளன.

### வன்னி:

தமது ஆள்புலத்தில் மிகவும் பரந்து விரிந்தது வன்னியே என்று

கூறும் ஒல்லாந்த தளபதி வன்னியரைப் பயன்படுத்தி புளியங்குளம், மாங்குளம், வேப்பங்குளம், முள்ளியவளைப் பகுதிகளின் கானக வளங்களைக் கையகப்படுத்தும் விதத்தை அவர் எடுத்துரைக்கிறார். அதேவேளை 'வன்னியரின் கொட்டத்தை அடக்க வேண்டும்!' என்றும் அறிவுறுத்துகிறார்.

### மன்னார்:

முத்துக்குளிப்பு தொழிலையும், கற்பிட்டி-அரிப்பு - மாந்தோட்டை -முசலி - செட்டிகுளம் பகுதிகளின் இயற்கை வளங்களையும் குறிப்பிடுகிறார். காலி - மாத்தறைப் பகுதிகளிலிருந்து புத்தளம், மன்னார் வழியாக வடபுலச் சந்தைக்கு யானைகளைக் கொண்டு வருவதற்கு வசதியாக புத்தளம் - மன்னார் பாதையை அகட்டும் பணியை திறம்பட மேற்கொண்ட அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

### கிழக்கு:

திருகோணமலை, தென்னைமரவாடி, கொட்டியாரம், பெரியதம்பனை, தம்பலகாமம், மட்டக்களப்பு பகுதிகளின் தெங்குவளம், பனைவளம், யானை வணிகம் என்பவற்றை விருத்திசெய்யும் விதங்களையும் அவர் விதந்துரைக்கிறார்.

### திணைக்களங்கள்:

அவரது நிரலின்படி கோட்டை, அரசியல் மன்றம், செயலகம், திறைசேரி, நீதிமன்று, குடிமை நீதிமன்று (காணிக் கந்தோர்), வேலைக்களம், பண்டசாலை என்பன யாழ்ப்பாணத் திணைக்களங்களாய் அமைந்தன.

### படைத்துறை:

தன்னையும் உள்ளடக்கி அவர் முன்வைக்கும் படைத்துறைப் பட்டியலில் தளபதி, துணைத்தளபதி, சிப்பாய்கள், மாலுமிகள், குடிப்படையினர், கூலிப்படையினர் அடங்கியிருந்தனர். படையினருக்கு வேண்டிய பீரங்கிகள், பீரங்கி ஊர்திகள், துவக்குகள், தோட்டாக்கள், வெடிமருந்து வகைகள், எரிகுண்டுகள், எறிகுண்டுகள் முதலியவை போதியளவு இருப்பில் இருந்தன. அவர்களுக்கு தானியமும், எண்ணெயும், மிளகும், சாராயமும் தாராளமாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்.

### பணித்துறை:

திசாவை, அதிகாரி, தலைமை எழுதுநர், பிசுக்கால், வரிவசூலிப்பவர், தோம்புக்காரர், கணக்கப்பிள்ளை, சம்பளக் கணக்குப்பிள்ளை, சிறாப்பர், உலாந்தா (அளவையாளர்), நடுத்தீர்ப்பாளர், ஆராய்ச்சி, உடையார், விதானையார், கையாள் (நீர்ப்பாசனத்துக்கு பொறுப்பானவர்), பட்டங்கட்டி (முத்துக்குளிப்புக்கு பொறுப்பானவர்), திருமண ஆணையாளர், தீயணைப்புப் படை கண்காணிப்பாளர், நகர பாலகர், மேற்பார்வையாளர்கள், பணிவிடையாளர்கள், கூலியாட்கள், நெசவாளர்கள், பண்டாரப்பிள்ளை, அடிமைகள் முதலியோர் பணித்துறையினுள் அடங்குவர்.

### வருவாய்:

யானை, கறுவா ஏகபோக வணிகம், தலைவரி, பதின்மை வரி, சோலை வரி, சுங்கத்தீர்வை, கடவுச்சீட்டுக் கட்டணம், உரிமக் கட்டணம் மூலம் வருவாய் ஈட்டப்பட்டது. தலைவரி என்பது ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய ஒரேயளவு வரி. பதின்மை வரி என்பது ஒருவரின் வருமானத்தில் 10 விழுக்காடு. குடிமக்களின் வருமானமும் வாழ்க்கைத்தரமும் உயர்ந்துவருவதால், தலைவரியும், பதின்மைவரியும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது அவரது கோரிக்கை.

### பொருளாதாரம்:

இலாபம் மிகுந்த யானை, கறுவா வியாபாரம் ஒல்லாந்த ஆட்சியாளரின் ஏகபோகமாய் இருந்தது. பூநகரி, புளியங்குளம், பூவரசங்குளம், கரிக்கட்டுமூலை, முல்லைத்தீவு பகுதிகளை உள்ளடக்கிய வன்னிப்புலத்தில் யானைகளைப் பிடித்து வடபுலத்துக்கு கொண்டு வந்து விற்பது பற்றிய கணக்குவழக்கு மிகவும் நுணுக்கமாய் தரப்படுகிறது.

### வணிகம்:

வங்காள மரக்காயர்கள் அரிசி, சீனி, வெண்ணெய் முதலிய பொருட்களை இங்கு கொண்டுவந்து விற்று, அவற்றுக்குப் பதிலாக காசை விடுத்து யானைகளைக் கேட்டுவாங்கி, மரக்கலங்களில் ஏற்றிச்செல்வதாகத் தெரிவிக்கிறார். யானைகளின் பெறுமதி அத்தகையது!

'அக்கரையிலிருந்து' அடிமைகள் கொண்டுவரப்படுவதை 'இறக்குமதி செய்யப்படுவதாகக் கூறும் தளபதி, அவர்களை 'பிராணிகள்' என்று குறிப்பிடுகிறார். 1694 முதல் 1696 வரை 3,589 அடிமைகள் 'இறக்குமதி செய்யப்பட்டதாகவும்', ஒவ்வோர் அடிமையையும் ஒரு சிறங்கை அரிசிக்கு உள்ளூர்வாசிகள் வாங்கிச்செல்வதாகவும் தெரிவிக்கிறார்.

'இப்பிராணிகளை' வன்னியர்கள் வாங்கிச்சென்று வயல்வேலை செய்விப்பதாகவும், கண்டி அரசுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதாகவும், போர்மூளும் வேளைகளில் படைவீரர்களாகப் பயன்படுத்துவதாகவும், அவர்கள் பொக்குளிப்பான் வாய்ப்பட்டு மடிவதாகவும், உள்ளூரில் பொக்குளிப்பான் பரவுவதாகவும், அவர்களின் 'இறக்குமதியால்' கிடைக்கும் தீர்வையை விஞ்சிய கேடு விளைவதாகவும் முறையிடுகிறார்.

உள்ளூரிலிருந்து தேங்காய், நெல்லு, புகையிலை, பாக்கு, வெற்றிலை, மிளகு, வாழைப்பழம், கொடிமுந்திரி, பனங்காய், ஊமல், வைக்கோல் என்பன சந்தைக்கு வருவதை தெரிவிக்கும் தளபதி ஆடு, மாடு, கோழி வளர்ப்பையும் எடுத்துரைக்கிறார்.

சிரட்டைக்கரி, சங்கு, சுண்ணாம்பு, ஆளி எண்ணெய், தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய், துவக்குமருந்து, துத்தநாகம், செப்பு, வெட்டுமரம், பவளக்கல், பாய், கயிறு, தீராந்தி, சிலாகை, ஓடு, சிப்பி, சோகி முதலியவை யாழ்ப்பாண பட்டினத்தின் உற்பத்திப்பொருட்கள்.

துவக்குச் சோங்கு, பீரங்கி ஊர்தி ஆக்குவதற்கு வேண்டிய மரவகைகள் வன்னிக் காட்டிலிருந்தும், யாழ்ப்பாணம் முதல் மன்னார் வரையான கரையோரத் தோப்புகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

பருத்தித்துறையில் பவளக்கல் அகழப்பட்டு, சூளையில் சுடப்பட்டு, சுண்ணாம்பு ஆக்கப்பட்டு, தோணிகளிலும் தெப்பங்களிலும் கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, நாகபட்டினத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. காங்கேசன்துறையில் சுண்ணக்கல் சுடுவோருக்கும் பவளக்கல் வழங்கப்பட்டது.

'காரைதீவில் சிறந்த சாயவேர் கிடைக்கிறது. மன்னாரிலும் பெருமளவு கிடைக்கிறது. வன்னியிலும் ஊர்காவற்றுறையிலும் கிடைக்கும் சாயவேர் தரம் தாழ்ந்தது. அதை ஏனைய சாயவேர்களுடன் கலந்து சாயம் ஆக்கப்படுகிறது. சோழமண்டலத்திலிருந்து இறக்குமதியாகும் துணிமணிகளுக்கு சாயம்பூசி விற்கப்படுகிறது' என்பது ஒரு குறிப்பு.

'நெடுந்தீவிலிருந்து உடலுறுதிவாய்ந்த குதிரைகள் கொழும்புக்கும், நாகபட்டினத்துக்கும் ஏற்றுமதிசெய்யப்பட்டு, ஏலங்கூறி விற்கப்படுகின்றன. பருமன் குறைந்த, குறைகள் மிகுந்த குதிரைகள் சுட்டுக்கொல்லப்படுகின்றன. ஆதலால் உடலுறுதிவாய்ந்த குதிரைகள் பெருகி வருகின்றன. அராபிய, பாரசீக நாடுகளிலிருந்தும்

சிறந்த குதிரைகள் தருவிக்கப்படுகின்றன' என்பது வேறொரு குறிப்பு.

'பருத்தித்துறையிலும், ஊர்காவற்றுறையிலும் கடவுச்சீட்டுகள் வழங்கும் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. வெளியார் கட வுச்சீட்டு இல்லாமல் பயணம் செய்வதையும், உரிமம் இல்லாமல் சாமான் சண்டி ஏற்றி இறக்குவதையும், அடிமைகளின் திருட்டை யும், யானைகளின் ஊடுருவலையும், வன்னியரும் - சிங்களவரும் அத்துமீறி நுழைவதையும் தடுக்கும் வண்ணம் பூநகரியிலிருந்து, குறிப்பாக ஆனையிறவு, பளை பாலங்களிலிருந்து கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும்' என்று அறிவுறுத்துகிறார் தளபதி.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் தெங்குவளம், நெல் சாகுபடி பற்றிக் குறிப்பிடும்பொழுது, 'அங்கு யானைக ளுக்கு ஓலை கொடுக்க அதிக தென்னைகள் தறிக்கப்படுவதால், தெங்குவளம் குன்றி வருகிறது. அதற்காக மாவட்டவாசிகளின் தலைவரியை மேலிடம் குறைத்திருக்கத் தேவையில்லை, அவர் களை சுதந்திர வர்த்தகம் புரிய அனுமதித்திருக்கத் தேவை யில்லை. அவர்களின் தேங்காய் ஏற்றுமதி தடைசெய்யப்பட வேண் டும்' என்று கேட்டுக்கொள்கிறார்.

## மக்கள்:

தளபதியின் கணக்குப்படி யாழ்ப்பாணப் பட்டினத்தின் மக்கள் தொகை 1,69,299 பேர். அவர்களை மலபாரிகள் என்று குறிப்பிடும் தளபதி, ஒருசில தடவைகளே மக்கள் என்று குறிப்பிடுகிறார். ஆனால் சிங்களவர் என்பது அவருக்குத் தெரிந்திருக்கிறது. அவர் கணிப்பில் மலபாரிகள் (அதாவது யாழ்ப்பாணப் பட்டினத்து மக் கள்) 'தற்பெருமையும், செருக்கும், பிடிவாதமும், சோம்பலும்' மிகுந்தவர்கள்.

'பொய்சொல்லி ஏமாற்றும் தந்திரம் படைத்த இந்த இனத்துடன் மிகவும் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும். தமக்கு நன்மை கிடைக்கும் என்றால், இவர்கள் பொய்ச்சத்தியம் செய்ய வும், பொய்ச்சாட்சியம் சொல்லவும் தயங்கமாட்டார்கள். ஒருவர் மீது ஒருவர் வன்மம் கொண்டு, வல்லடி வழக்குத் தொடுத்து, வெல்லும்வரை வழக்காடி மகிழ்வார்கள். அதற்காக போர்த்துக் கேயர் காலத்தில் தீர்க்கப்பட்ட வழக்குகளையே புதுப்பிப்பார்கள்.'

'முன்னர் அஞ்ஞான மன்னரும், பின்னர் போர்த்துக்கேயரும் ஆண்ட காலங்களில் இவர்கள் சாதி, சாதியாகப் பிரிந்து வாழ்ந்து பழகியபடியால், சாதிப்பிரிவுகளில் நாம் தலையிடக் கூடாது' என்று தனது பின்னவர்களுக்கு புத்திமதி கூறும் தளபதி தனது ஆள்புலத்தில் 40 சாதிகளை எண்ணிக் கணக்கிட்டுள்ளார்.

எண்ணிக்கை மிகுந்தவர்களாய் வேளாண்மையில் ஈடுபட்ட வெள் ளாளரின் ஆதிக்கம் பற்றி கொழும்பு ஆளுநருக்கும், இந்திய தலைமை ஆளுநருக்கும், பற்றேவிய உச்சபீடத்துக்கும் முறைப் பாடு தெரிவிக்கிறார். 'வெள்ளாளரின் சாதித் திமிருக்கு இடங் கொடுத்தால் மாத்திரமே, மற்றெல்லா அலுவல்களிலும் அவர்கள் கூனிக் குறுகி, கெஞ்சிக் கூத்தாடி வேலை செய்வார்கள்' என்று வலியுறுத்துகிறார்.

'காசாளர்களின் உடந்தையுடன் செட்டிவியாபாரிகள் தரம் குறைந்த வராகன் நாணயங்களை சோழமண்டலத்திலிருந்து தருவித்து, நல் லது கெட்டது தெரியாத அப்பாவிக் குடிமக்களுக்கு, குறிப்பாக திருகோணமலைக்கு வரும் சிங்களவருக்கு கைமாற்றிக் கொடுத்து கொள்ளை இலாபம் சம்பாதித்ததை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்பது அவரது வேண்டுகோள்களுள் ஒன்று.

'பண்டசாலைப் பணியாளர்கள் சிறுகச்சிறுக அரிசியைக் களவெ டுத்து உள்ளூர்வாசிகள் ஊடாக சந்தையில் விற்றுக் காசாக்கி வருகிறார்கள். ஆகவே தேவைக்கதிகமாக அரிசியச் சேமித்து வைக்கக்கூடாது' என்று வேறு எச்சரிக்கிறார்.

'கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் பன்றி இறைச்சி இடைவழியில் பழுதடைந்துவிடும். கரையோரங்களில் கிடைக்கும் கருவாடு பழுத டையாது. ஆனால் அதன் நெடியை தாங்க முடியாது என்பது இன்னோர் எச்சரிக்கை.

'சாராயத்தை அளவாகக் குடித்தால் நலம் பயக்கும், அளவுக்கு மிஞ்சினால் ஆபத்து விளையும்' என்று அறிவுறுத்தும் அதே வேளை, சாராய வியாபாரிகளும், ஏற்றி இறக்குவோரும் கலப்ப டம் செய்வதாகக் கேள்வி' என்றும் குறிப்பிடுகிறார்.

## குருமார்:

'ஆட்டிறைச்சியும், கோழி இறைச்சியும், வெண்ணெயும் கிடைக்கும் தேவாலயங்களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் மட்டுமே எமது குரு மார் சமயம் பரப்பச் செல்கிறார்கள். பச்சிலைப்பள்ளி, திருகோண மலை, மட்டக்களப்பு போன்ற வறிய பகுதிகளுக்குப் போகாமல் தலைமறவாகி விடுகிறார்கள்.

கட்டளையிட்டால் மாத்திரமே அங்கு போவார்கள். போகும்பொ ழுது மனைவிமாரையும் கூட்டிக்கொண்டு போகிறார்கள். இவர் களை விருந்தோம்புவது அந்த ஏழைகளுக்கு எவ்வளவு கடினம்! அவர்களையும், சில தேவாலயங்கள் குதிரைக் கொட்டில்கள் போல் தென்படுவதையும் எண்ணி வருந்துகிறேன்' என்று கூறுகி- றார்.

1697-ல் மேலிடத்து உத்தரவின்படி தளபதி ஹொன்றிக் சுவார்தகு- ரூன் தற்காலிகமாக ஆணையாளர் பதவியேற்று இந்தியாவுக்குப் புறப்படும் தறுவாயில் தனது பின்னவர்களுக்கு விட்டுச்சென்ற வழி காட்டியின் சுருக்கம் இது. அவர் யாழ்ப்பாணம் திரும்பும்வரை மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் அதில் இடம்பெற் றுள்ளன.

இந்தியாவில் தற்காலிக ஆணையாளராகப் பணியாற்றிய வேளை யில், அதாவது 1714-ல் ஒல்லாந்தரின் இந்திய ஆள்புலத்து ஆளு நராகப் பதவியுயர்வு பெற்றபடியால், அவர் யாழ்ப்பாணம் திரும்ப வில்லை. 1724-ல் ஓய்வுபெற்று, தாயகம் திரும்பாமல், பற்றேவியா சென்று, அங்கேயே வாழ்ந்து, 1728-ல் அவர் இயற்கை எய்தினார்.

*Memoir of Hendrick Zwaardecroon, Commandeur of Jaffnapatam, (afterwards Governor-General of Nederlands India), 1697. FOB THE GUIDANCE OF THE COUNCIL OT JAFFNAPATAM, DURING HIS ABSENCE AT THE COAST OF MALABAR, Translated by SOPHIA, Dutch Translator, with an Introduction and Notes by the Government Archivist. COLOMBO: H. C. COTTLE, GOVERNMENT PRINTER, CEYLON, 1911.*



mani.v@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***

# தீரன் ஆர்.எம். நௌஸாத் கதைகள் ஈழத்து தமிழ் முஸ்லிம் வாழ்வியலின் அகமும் புறமும்

- ஜிஃப்ரி ஹாசன்

வாசகரைப் பிரதியோடு ஒன்றிணைக்கும் சுவாரஸ்மான எழுத்து நடை கொண்ட தமிழ்ப்படைப்பாளிகளில் ஒருவர் தீரன் ஆர்.எம். நௌஸாத். அவரது கதைகளுக்குள் துலங்கும் கலையின் உணர்வெழுச்சியும், புனைவின் அழகியலும் தீரனை அந்த இடத்துக்கு உயர்த்துகின்றன. கதைகளின் வழியே அவர் உருவாக்கும் சமூக வெளியும், நிலவெளியும், தென்கிழக்கிலங்கை யின் முஸ்லிம் பண்பாட்டு உரையாடல் மொழியும், அவரது சலிப் பற்ற விவரண நடையும் (பெரும்பாலான கதைகளில் இதனைக்




காணலாம்) பிரதியின் பத்தைத் (pleasure of the text) தூண்டு கின்றன.

நௌஸாத் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர். அவர் ஈழத்து முஸ் லிம் மக்களின் வாழ்க்கையை, கலாச்சார நடைமுறைகளை, அவர் களின் அரசியல் மனநிலையை, அதன் சரிபிழைகளை செறிவான புனைவுகளாகத் தந்தவர். இன்னும் விரித்துச் சொல்வதானால், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கையை, பண்பாட்டுக் கோலங்களை, அதன் இறுக்கங்களை, அவர்களின் அரசியல் இயக்கம் சார்ந்த செயல்பாடுகளை, ஈழப்போராட்ட காலத்தில் தமி ழர் - இஸ்லாமியர்களுக்கிடையில் (சில சக்திகளால் அரசியல் நோக்கங்களுக்காக) ஏற்படுத்தப்பட்ட முரண்களையும் அதன் விளைவுகளையும் செறிவான புனைவுகளாக கிழக்கிலங்கை-குறிப்பாக தென்கிழக்கு வட்டார மொழி உரையாடல்களைக் கையாண்டு புனைவாக்கமாகத் தருபவர் என சொல்லிவிடலாம். தமிழகத்தில் காலச்சுவடு பதிப்பகம் இவரது நட்டுமை, கொல்வ தெழுதுதல்-1990 ஆகிய நாவல்களையும்,வெள்ளிவிரல் எனும் சிறு கதைத் தொகுப்பையும் வெளியிட்டிருக்கிறது.

தீரன் நௌஸாத் தனது வெள்ளிவிரல் சிறுகதைத் தொகுப்பின் முன்னுரையில் தான் எழுதத் தொடங்கியதன் பின்னணியை எழுது கிறார்.

‘யுத்தமே என்னை எழுதத்தூண்டிற்று. முப்பது வருட யுத்த காலம் முழுவதும் நான் முப்பது வருட சேவைக்காலமுள்ள அரசு ஊழிய னாகவே இருந்தேன். இக்காலகட்டத்தில் யுத்த அரசியல் செய்து கொண்டிருந்தவர்களினதும் அரசியல் யுத்தம் செய்து கொண்டிருந் தவர்களினதும் யுத்தமும் செய்யாமல் அரசியலும் செய்யாமல் அலைந்துகொண்டிருந்தவர்களினதும் நடத்தைக் கோலங்களைக் கண்டு மனம் பேதலித்த நிலையில் உளநோயின் விளிம்பில் நிற் கும் ஒருவன் என்ன செய்யலாம்...? ஒன்றில் தற்கொலை செய்ய லாம். அல்லது ஏதேனும் எழுதலாம். நான் இரண்டாவதைத் தெரி வுசெய்தேன்’.

அவர் யுத்தத்தின் நேரடிக் கோரங்களை, அதன் வன்முறைசார்ந்த அழிப்புகளை தன் கதைகளில் பெரிதாக பேசாவிட்டாலும், அவர் சொல்வதைப் போன்று போரின் வலியை அது ஏற்படுத்திய அதிர் வுகளை, ஒரு சமூகம் உள்ளார்ந்து அனுபவிக்க நேர்ந்த மனத்து யர்களை, வெப்பியாரங்களை எல்லாம் இயன்றளவு அவரது கதை களுக்குள் கொண்டுவந்து காட்டினார். ஆனால் ஓட்டமாவடி அற பாத் போர் சூறையாடிய முஸ்லிம் வாழ்க்கையைப் பதிவுசெய்தது போல் இவரது கதைகள் அந்தப் பரப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவில்லை.

நௌஸாத்தின் பிரதான புனைவுத்தளம் என்பது தென்கிழக்கு முஸ் லிம் பண்பாட்டு வாழ்வியல் என்றே சொல்லலாம். ஆனால் போரில் நேரில் ஈடுபட்டு உயிர்நீத்த பலரின் குறிப்பாக தற்கொ லைப் போராளியின் கதையான விட்டு விடுதலையாகி, அல்லது இந்த கொடிய போர் நெருக்கடிகளிலிருந்து விலகி வாழ தாய் லாந்து சென்று விட்ட தாய் மொழி கதையில் வரும் தாமோதரம் போன்றவர்களின் வாழ்வு, அல்லது நல்லதொரு துரோகம், மலர்வு 74 உதிர்வு 98 போன்ற கதைகள் ஓரளவு தீரனின் சுய பிரகடனத் துக்கு ஆதாரமாக அமையும் கதைகள்தான். ஆனால், உண்மை யில் போருக்கு வெளியேதான் அவரது பெரும்பாலான கதைகள் சஞ்சரிக்கின்றன. அந்தக் கதைகளின் வழியே அவர் உருவாக்கும் கதாபாத்திரங்கள் தென் கிழக்கிலங்கையின் கிராமிய தமிழ் முஸ் லிம் வாழ்வியலின் முகத்தையும் அகத்தையும் கொண்ட மனிதர் கள். அந்தப் பண்பாட்டின் பிரதிநிதிகள் போன்றவர்கள். அந்த வாழ்வு குறித்த மிக எளிமையான சித்தரிப்புகள்.

தன் புனைவில், கிழக்கிலங்கை தமிழ் முஸ்லிம் பண்பாட்டையும் சமூக உளவியலையும் யதார்த்தமாகச் சித்தரித்துக்காட்டிய ஒரு படைப்பாளி என்ற வகையிலும், தமிழ் முஸ்லிம் வாழ்வியலை ஈழத்தமிழ்ப் படைப்புகளில் ஆழமான புனைவு மொழியில் பதிவு செய்தவர் என்ற வகையிலும் ஈழ இலக்கியத்தில் தீரனின் இடம் நிலையானதாக உருவாகி விட்டிருக்கிறது. அதுவே அவரது முதன்மை அடையாளமாகவும் கருதப்படமுடியும். தீரன் நௌஸாத்தின் சிறுகதைத் தொகுப்புகள் என்றளவில் வல்லமை தாராயோ, வெள்ளி விரல், தீரதம் ஆகியவை வெளிவந்திருக்கின்றன.

இவரது முதல் சிறுகதைத் தொகுப்பான வல்லமை தாராயோ 1990க்கும் இரண்டாயிரத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட கதைகளைக் கொண்ட தொகுப்பாகும். ஒரு கதைதான் 1986ல் எழுதப்பட்டது. ஈழப்போர் உக்கிரமாக மனித வாழ்வைச் சூறையாடிச் சிதைத்துக் கொண்டிருந்த காலகட்டம் அது. ஆனால் அந்த சிதைவை, சீரழிவை, போரின் சிதிலத்தை அவ்வளவு ஆழமாக தன் பெரும்பாலான கதைகளுக்குள் தீரன் கொண்டு வரவில்லை. ஆனாலும் ஆங்காங்கே அந்த வாழ்வை ஓரளவு பதிவு செய்திருக்கிறார். அவரது முதல் தொகுப்புக் கதைகள் எழுதப்பட்ட காலப்பகுதி, ஈழத்தைப் பொறுத்தவரை வட - கிழக்கில் தமிழர்களுக்கும் - தமிழ் முஸ்லிம்களுக்குமிடையிலான உறவில் விரிசல்கள் திட்டமிட்டு அரசியல் சக்திகளால் தோற்றுவிக்கப்பட்ட காலம். அதன் உள்ளரசியலை சரிவரப் புரிந்துகொள்ளாமலே மதத்தால் மட்டுமே வேறுபாடு கொண்ட தமிழர்களான இரு தரப்பாரும் இரு துருவங்களாக / எதிரிகளாக மாறினர். தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்தாண்ட இனத்துவ அரசியலுக்கு இரு சமூகங்களிலிருந்தும் தீவிரப் போக்குடையோர் முதலில் பலியாகினர். இதன் விளைவு மிக மோசமானதாக அறுவடை செய்யப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் இங்கிருந்து வந்த இலக்கியப் படைப்புகள் இந்த விடயத்தை மையமாகப் பேசத் தொடங்கின. குறிப்பாக கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் படைப்பாளிகளது கவிதைகள், சிறுகதைகளில் தமிழர் - இஸ்லாமியருக்கிடையில் திட்டமிட்டுத் தோற்றுவிக்கப்பட்ட முரணுலகின் மோசமான பக்கங்கள் தீவிரமாக பேசப்பட்டன. ஆனால் அவை பெரும்பாலும் ஆழ்ந்த அரசியல் நோக்கற்ற, பக்கச்சார்பான பார்வைகளாகவும், வெறும் சுய-பச்சாதாபம் பொங்கும் உணர்ச்சி நிலை சார்ந்த சித்தரிப்புகளாகவுமே சுருங்கி நின்றன.

இந்த மோசமான அரசியல் சூழலில் வெளிவந்த அவரது சாந்தி என்கிற கதை இந்த சூழலுக்கு எதிரான ஒரு மாற்றுப் பார்வையை முஸ்லிம் சமூகவெளியில் விதைத்தது. தவிர, இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரியப் பண்பாட்டின் வேர்களை நோக்கிய உரையாடலுக்கான ஒரு சிறந்த தொடக்கமாகவும் அமைந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக மேற்கொண்டு அந்த உரையாடல் நிகழ முடியாமல் முஸ்லிம் பண்பாட்டுச் சூழல் இன்றுள்ளது போலவே அன்றும் இறுகிப்போயிருந்தது. முஸ்லிம்கள் மத்தியில் அப்போதிருந்தே படிப்படியாகத் தோற்றம் பெறத் தொடங்கிய மத, இனத்தூய்மை வாத நோக்குகளுக்கான ஒரு மறுப்பாகவும் அந்தக் கதை அமைந்தது.

சாந்தி கதையில் ஒரு முஸ்லிம் தம்பதியினருக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கிறது. அதற்கு பெயர் வைப்பதில் கணவனுக்கும் மனைவிக்குமிடையில் நிகழும் முரண்களின் அழகியலாக கதை நீண்டு செல்கிறது. கணவன் குழந்தைக்கு பாத்திமா சாந்தி என பெயர் வைக்க விரும்புகிறான். அதற்கான நியாயங்களை முன்வைக்கிறான். அழகிய கருத்துள்ள தமிழ்ப் பெயர் என்கிறான். மனைவியோ அதைக் கேட்டு கடுமையாகத் திடுக்குற்று பதறுகிறாள்.

'தம்ளாக்கள் வெக்கிற பேருலா இது? என்ட புள்ள தம்ளச்சியா?' என அவள் மறுக்கும் போது தமிழர்கள் மதம் என்கிற கோடால் துண்டாடப்பட்டதன் அவலம் தொனிக்கிறது. 'நாமென்ன அறபா கதய்க்கம் அறபுல பேரு வெய்க்க?' கணவனின் பேச்சில் தமிழ் முஸ்லிம் பண்பாட்டின் குருதி பாய்வது போல் இந்த இடத்தில் நாம் உணர்கிறோம். புள்ளக்கி அழகான பேரு வெய்ங்கண்டு அதீஸ் இரிக்கி' என்கிறாள் மனைவி. 'அறபுப் பெயர்கள் வெய்ங் கண்டு ஹதீஸ் இரிக்கா?' தன் முடிவில் பிடிவாதமாக இருந்து கடைசியில் பாத்திமா சாந்தி என்றே பெயர் வைக்கும் தந்தையை நௌஸாத் சித்தரித்து இறுகிப்போன பண்பாட்டுச் சூழலில் ஒரு வெடிப்பை ஏற்படுத்துகிறார். ஆனால் தொடர்ந்து இத்தகைய மாற்று உரையாடல்களை தன்புனைவுகளில் நிகழ்த்துவதற்கான பயணத்திலிருந்து அவர் பின்வாங்கினார். இங்கு நிலவிய சகிப்புணர்வற்ற சூழலின் தாக்க விளைவு காரணமாகவே அந்தப் பின்வாங்கல் நிகழ்ந்திருக்கக்கூடும்.

அதேநேரம் இனமுரண்பாட்டு சூழல் தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் அரச நிறுவனங்களுக்குள்ளும், அதிகாரிகளுக்குள்ளும் இனவாதக் கருத்துகள் ஆழப்படிந்து, சந்தர்ப்ப சூழல்களுக்கேற்ப அது பயன்படுத்தப்பட்டு நல்லிணக்க சூழல் சிதைக்கப்பட்ட அவலத்தையும் தீரனின் கதைகளுக்குள் நாம் காண்கிறோம். எடுத்துக் காட்டாக, அணிலே அணிலே ஓடிவா, நல்லதொரு துரோகம், மலர்வு 74 உதிர்வு 98 போன்ற கதைகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதில் முதல் இரு கதைகளும் ஈழத்தில் தமிழர்-சோனகர் (தமிழ் முஸ்லிம்கள்) உறவுகள் மோசமடைந்திருந்த காலப்பகுதியில் இவ்விரு சமூகங்களின் சமூக உளவியலின் குறு-கலையும், பரஸ்பர சந்தேகங்களையும் பகிர்ந்துகொள்கின்றன.

நல்லதொரு துரோகம் பொலிஸ் அதிகாரிகளாக இருந்த நிஸங்க போன்ற பாலியல் குற்றவாளிகள் எப்படி போர்க்காலத்தில் தன் குற்றங்களை மறைத்துக் கொண்டு மேலும் சொகுசுகளை அனுபவித்து வந்தார்கள் என்பதை மிக எளிமையாக முன்வைப்பதைக் காணலாம். தென்கிழக்குப் பகுதியில் மாஞ்சோலைக்கிராமத்தின் (சிலவேளை ஊரின் பெயர் கற்பனையாக இருக்கலாம்) பொலிஸ் காவலரணுக்குப் பொறுப்பாக இருந்த நிஸங்கவையும், அவனுக்கு காவலுக்காக அவன் கூடவே சுற்றித் திரியும் முஸ்லிம் ஊர்காவல்படையைச் சேர்ந்த ஐயூபையும் முக்கிய பாத்திரமாக வார்த்து கதையை சொல்லிச் செல்கிறார் தீரன். நிஸங்கவுக்கு விசுவாசியாக இருக்கும் ஐயூப் கடைசியில் ஓர் அப்பாவிச் சிறுமியை நிஸங்க வன்புணர்வு செய்ய முயலும் போது அவனைக் கொல்வதன் மூலம் அந்த நல்லதொரு துரோகத்தை செய்து முடிக்கிறான். போர்க்காலத்தில் சாதாரணமாக நடைபெற்ற பாலியல் வன்புணர்வு, துஷ்பிரயோகம் போன்றவை கதையின் ஒரு பக்கம் என்றால் நல்லதொரு துரோகத்தின் மூலம் ஐயூப் அணிந்த சீருடைக்குள்ளிருந்த மனிதம் கதையின் இன்னொரு பக்கமாகும்.

அணிலே அணிலே ஓடிவா ஈழப்போராட்டத்தின் விளைவாக இனங்களுக்கிடையில் ஏற்பட்ட பரஸ்பர சந்தேகங்கள், புரிதல் சார்ந்த சிக்கல்கள், சுயநல மறுப்புகளை முன்வைத்து நகரும் கதை. சிங்கள - தமிழ் - முஸ்லிம் என கதபாத்திரங்கள் தங்கள் இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்றனர். தபாலகப் பொறுப்பாளரான நசீர், மேற்பார்வைக்காக வரும் தபால் உயர் அதிகாரியான விநாயகமூர்த்தி, தபால் ஊழியரான இந்திக்க மற்றும் அணில் ஆகியோரே கதைப் பாத்திரங்கள். அவர்களைச் சுற்றி நகரும் கதையின் மைய உள்ளீடாக இலங்கையின் இன முரண்பாடு எனும் எளிய அரசியல் சூத்திரமே தெரிகிறது.

சாதாரண தபால் ஊழியனான இந்திக்க என்கிற சிங்கள இளைஞன் தபாலகத்தை அண்டி இருக்கும் மரத்தில் வசிக்கும் ஓர் அணிலுடன் சிநேகபூர்வமாக பழகுகிறான். அதன் மீது அன்பு செலுத்தும் அவன் பௌத்தர்களிடமிருக்கும் கொல்லாமை எனும் பௌத்த அறத்தின் குறியீடாகவே சித்தரிக்கப்படுகிறான். அதே நேரம் இலங்கையின் சமூகங்களுக்கிடையிலான இனத்துவப் பிளவையும், முரண்பாட்டு அரசியலையும் ஆழமாகவும் பகடியாகவும் கதை தொடுகிறது.

கடைசியில் விநாயகமூர்த்தி அணிலை இந்திக்கவுக்குத் தெரியாமல் கறி சமைத்துவிடுகிறார். பதறிப்போகும் நசீர் 'இது இந்திக்கவின்ட அணில் ஐயா...' 'அவன் வளர்த்த அணில்' என்கிறார்.

'உதுக்கென்ன சோனகருந்தான் வளர்க்கிற ஆடு, மாடுகளைத் தானே வெட்டுவினம்... அது பாவமில்லையா?' என விநாயகமூர்த்தி திருப்பிக் கேட்கிறார். இந்த எளிய நியாயப்படுத்தல்களையும், சமப்படுத்தல்களையும் கொண்டு இரண்டு தரப்பினரும் தங்களை சல்லித்தனமான அரசியல் சமூகமாக காட்டிக்கொள்வதை இலேசாகச் சாடுகிறது கதை. இதுபோன்ற தங்கள் தவறுகளை ஏற்று சுயவிசாரணைக்குத் தயாரற்ற, சுயமறுப்புக்கும் தயாரற்ற

சமூகங்களின் குரலைத்தான் தீரன் இந்தக் கதைக்குள் கவனப்படுத்த விரும்பி இருந்தார் என நினைக்கிறேன். கதையில் வழக்கமாக அவர்கள் பரிமாறிக்கொள்ளும் குற்றச்சாட்டுகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். ஆனால் இந்தக் கதையின் மையத் தொனி தமிழர்களினதும் சோனகர்களினதும் நடத்தைகள், உளவியல் மீதே காட்டமான எதிர் விமர்சனத்தை முன்வைக்கிறது. கிழக்கில் தமிழர்களும், சோனகரும் முதிர்ச்சியற்ற விதத்தில் குறுகிய மனப்பாங்கோடு நடந்துகொண்டனர். இந்த நெருக்கடியான அரசியல் சூழலை எதிர்கொள்ளத் தேவையான விவேகமான முன்னோக்கிய பார்வைகள் அவர்களிடம் இருக்கவில்லை என்பதையே கதை உரத்துச் சொல்ல முற்படுகிறது. சிங்கள இளைஞனான இந்திக்க அணில் மீது கொண்ட பரிவையும், ஜீவகாருண்யத்தையும் வெளிப்படுத்தும் தீரன் விலங்குகளை நேசித்தவர்கள் போர்க்காலத்தில் நிகழ்த்திய மனிதக்கொலைகள் குறித்து ஒரு மெல்லிய விமர்சனக் குரலையேனும் இந்தக் கதைக்குள் எழுப்பவில்லை. தமிழர் - முஸ்லிம்கள் முரண் அரசியலாகவே கதை நகர்த்தப்பட்டு விடுகிறது.

ஆனால் இதே காலப்பகுதியில் இந்த இன முரண்பாட்டுச் சூழலை சிங்கள எழுத்தாளரான நிரங்க விக்கிரமசிங்க, தீரனைப்



போன்று விலங்கைத் தலைப்பிட்டு எழுதிய தனது பாம்புகள் எனும் கதையில் வேறு விதமாக சித்தரித்துக் காட்டுகிறார். இலங்கைத் தமிழ் - சிங்கள மக்களுக்கிடையிலான சகவாழ்வைப் பேசும் கதையாக அதனை அமைத்தார். சிங்கள - தமிழ் புதுவரு டத்தை ஒரு குறியீடாக வைத்து இன நல்லிணக்கத்தை அக்கதை பேசுகிறது. போர் உக்கிரமாக நடந்துகொண்டிருந்த அக்காலப்பகுதியில் சிங்களத் தரப்பிலிருந்து எழுதப்பட்ட அக்கதை இலங்கையின் இன முரண்பாட்டுச் சூழலில் இனங்களுக்கிடையிலான ஒரு பரஸ்பரப் புரிதலையும், இணக்கப்பாட்டையும் நோக்கிய அழைப்பாக அந்தக் கதை முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால் தீரனின் அணிலில் அந்தப் பார்வை வீரியம் கொண்டு எழாமல் போயிற்று. இக்கதை அப்போதே மருதமுனையிலிருந்து வெளிவந்த முனைப்பு சஞ்சிகையிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

கிழக்கிலங்கைத் தமிழர்களினதும் இஸ்லாமியரினதும் மரபார்ந்த நம்பிக்கைகளான காணாமல்போன பொருட்கள் பற்றி குறிபார்த்தல், சில வியாதிகளுக்கு ஆன்மீக மருத்துவத்தை நாடுதல் போன்ற பாரம்பரிய சமூகவியல் தன்மைகளையும் தீரனின் சில கதைகள் பதிவு செய்கின்றன. வதனமார், வெள்ளிவிரல் போன்ற கதைகள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டான கதைகளாகும்.

வதனமார் அத்தகையதொரு சமூக நம்பிக்கையை பேசும் கதை. காணாமல் போன தங்களின் உடைமைகளை குறிசொல்பவர்களிடம் சென்று கண்டுபிடிக்க முனையும் ஒரு போக்கு கிழக்கிலங்கை மக்களின் ஒரு பொதுவான நம்பிக்கையாக இருந்தது. இந்த நம்பிக்கை இழையின் விசித்திரமான நீட்சிதான் இந்தக் கதை. அறிவியல் நம்பிக்கைளுக்கு அப்பால்பட்ட ஒரு நம்பிக்கையில் மையம் கொண்டிருந்த இந்த சமூக நம்பிக்கை நீண்ட காலமாகவே புழக்கத்திலிருந்து வந்த ஒன்று. நௌஸாத் இந்தக் கதையில் தனது குரலை இந்த நம்பிக்கையின் பிரதிநிதியாக அல்லது விசுவாசியாகவே பதிவுசெய்கிறார். கதைக்குள் பேயாடுபவர்களின் வாயிலிருந்து உதிரும் உச்சாடனங்கள் தொடங்கி அவனது அசைவுகள், அதன் சூழல் வரை நௌசாத் மிக அற்புதமாக வர்ணிப்பது புனைவின் அழகியல் உச்சமாக வெளிப்படும் தருணமாக இருக்கிறது. தீரன் நௌஸாத்தால் மிகச்சிறந்த புனைவுகளை எழுத முடியும் என்பதற்கு இது போன்ற கதைகள் நல்ல எடுத்துக்காட்டானவை.

கதையில், தனது பிரியத்துக்குரிய மாடான கறுப்புளாப்பட்டியை பறிகொடுத்த சேணியன் ஆனைச்சித்தனிடம் குறிகேட்டு வருகிறான். கோழி இரத்தம் குடித்துக் குறிசொல்லும் ஆனைச்சித்தனின் குறிசொல்வதற்கான பாவனைகள் கதைக்குள் அற்புதமாக சித்தரிக்கப்படுகின்றன. கதை பழைமையான சமூக நம்பிக்கை குறித்த பதிவு என்பதற்கு அப்பால் தீரனை ஒரு திறமையான படைப்பாளியாக நிறுவுகிறது.

வேக்காடு தென்கிழக்கு முஸ்லிம் பேச்சுமொழியில் நகரும் கதை. கிழக்கு முஸ்லிம் அரசியலை அதாவது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃபின் மரணத்துக்குப் பின் கட்சிக்குள் நிகழ்ந்த தலைமைத்துவப் போட்டியை பற்றி பேசும் ஒரு சாதாரண கதைதான் என்றாலும், தென்கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டு மொழியையும் சமூக உளவியலையும் ஒரு புள்ளியில் இணைக்கிறது. தீரன், இலங்கைத் தென் கிழக்கு முஸ்லிம்களின் வாழ்வியலை எழுதும் போது அதிகமும் அவர்களின் அரசியல் இயக்கமான முஸ்லிம் காங்கிரஸ் பற்றி எழுதுவது அந்த மக்களின் குறிப்பாக தீரன் காலத்துத் தலைமுறையினர் அந்த அரசியல் இயக்கத்தோடு ஒரு மதம் போன்று பிணைந்திருந்ததையே அது எடுத்துக்காட்டுகிறது. கிட்டத்தட்ட மத வழிபாட்டுக்கு நிகரான அளவில் ஒரு குறிப்பிட்ட காலம் அந்தக் கட்சி மீதான பற்றும் அந்த மக்களின் வாழ்வியலோடு கலந்திருந்தது என்பதற்கு தீரனின் சில கதைகள் சாட்சியாக இருக்கின்றன. ஆனால் தீரனிடம் அந்த வழிபாட்டு மனநிலை இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு படைப்பாளியாக அந்தப் பலவீனத்தை அவர் கடந்திருந்தார். கதைகளைத் தாண்டி அவரது கொல்வதெழுதுதல் 1990 நாவல் முழுக்க அந்த அரசியல் இயக்கத்தின் மீதான மிகையற்ற பகடிகளையும், அதன்மீதான ஆழ்ந்த விமர்சனங்களையும் நம்மால் படிக்க முடிகிறது.

மீள்கதவு எனும் கதை போரால் பாதிக்கப்பட்டு மக்களுக்கான நிவாரணங்களைப் பெறுவதில் நடக்கும் ஊழல் இழுத்தடிப்புகளையும் அந்த மக்கள் மீதான சுரண்டல்களையும் அரச நிர்வாகத்தின் முடிச்சவிழ்க்கித்தனங்களையும் கதை நுண்மையாக வெளிப்படுத்துகிறது. இத்தகைய கதைகள் சாமான்ய மக்களின் பக்கம் ஒரு படைப்பாளிக்கு இருக்கும் பொறுப்புணர்ச்சியிலிருந்து உருவாகியவை.

சாமான்ய மக்களுக்குள் நிகழ்ந்த பாலுறவு மீறல்கள், களவொழுக்கம் சார்ந்த வாழ்வியல் தீரனின் படைப்புலகின் இன்னொரு பக்கச் சித்திரமாக உள்ளது. அவரது தீரதம் தொகுப்பிலுள்ள கள்ளக்கோழி, மறிக்கிடா போன்ற கதைகள் இந்தத் தளத்தில் நகர்பவை. கள்ளக்கோழி விவாகரத்துப் பெற்ற ஒரு இளம் பெண்ணின் வாழ்வு பற்றியும், பிரிந்த கணவனுடன் அவள் தன் பாட்டனுக்குத் தெரியாமல் இரவு நேரங்களில் களவாக காம விளையாட்டில் ஈடுபடுவது பற்றியும் பேசுகிறது. பிரிந்த அந்த இளம் தம்பதிகளின் பெற்றோரின் வரட்டுக் கௌரவங்களாலும், போலி வாய்ச்சவாடல்களாலும் இணைய முடியாது இரு துருவங்களாக்கப்பட்ட, அவர்களின் பாலியல் வேட்கையை இருவரும் இரவில் இரகசிய உறவின் மூலம் தீர்த்துக்கொள்வதை தீரன் சித்தரிக்கிறார். விவாகரத்துக்குப் பின் அவளது மறுவாழ்வு பற்றியோ, அவளது தேவைகள் பற்றியோ கொஞ்சமும் சிந்தித்துப் பார்க்காத பெற்றோரிய அதிகாரத்தை மிக எளிமையாகத் தகர்க்க முனையும் கதை இது.

ஆனால் இந்த மீறலுக்கு மறுதலையான ஒரு பெண்ணின் உள்ளொடுங்கிய வாழ்க்கையை பொன்னெழுத்துப் பீங்கான் கதை

யில் சித்தரித்துக் காட்டுகிறார் தீரன். பெண்களுக்கும், ஆண்களுக்குமான ஆசாரமான ஒழுக்கத்தை முன்வைக்கும் கதை அது. தனி-மனிதத் தெரிவுகள், உணர்ச்சி வேறுபாடுகள், ஒரு பெண்ணுக்கு பண்பாட்டின் வழியே உருவான தீவிர எல்லைகளை மீறுவதிலுள்ள சிக்கல்களை லண்டனுக்குச் சென்றுவிட்ட தன் மகளுக்கு ஒரு தாய் கெசட் பீஸ் வழியே கூறும் அறிவுரையே கதை. பண்பாட்டை நீங்கிச் சென்றாலும் ஒரு ஆடையைப் போல் பெண் அதனையே எப்போதும் உடுத்திக்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தாயிடம் தீவிரமாக வெளிப்படுகிறது. தாயான சவரியத்தும்மா அவளது கணவன் தன்னுடன் மட்டுமே கொண்டிருந்த பாலியல் உறவை, ஒழுக்கத்தை உயர்வாகப் போற்றுகிறாள். அது ஒன்றும் கீழ்மையானதல்லாவிட்டாலும் மிக மிகச் சாதாரணமான ஒரு நிலை என்பதை அவள் புரிவதில்லை. சவரியத்தின் கணவன் பாலியல் ஒழுக்கத்தை அவள் போற்றும் போது அப்போதைய கிழக்கிலங்கைச் சமூகத்தில் பாலுறவு மீறல் சகஜமானதாக இருந்திருப்பதான தோற்றப்பாட்டையும் கதை உருவாக்குகிறது.

மறிக்கிடாவில் சிறிய ஆட்டுப் பண்ணை வைத்திருக்கும் அகிலம் மக்கா இளமையும் அழகும் கொண்டவள். கணவன் சின்னப்பு வயதானவன். அவளது தேவைகளுக்கு ஈடுகொடுக்க முடியாத நைந்தவன். அகிலமக்கா வளர்க்கும் பெட்டை ஆடுகளோடு மறிப்படுவதற்காக சின்னப்பு மய்தீன் காக்காவின் கிடாவைக் கொண்டு வருமாறு கேட்கிறான். தன் கிடாவுடன் வந்த மய்தீன் காக்கா மறிப்படுவதற்கான கூலியாக ஒரு தடவை மறிப்பட 3000 ரூபாயும் இரண்டாவது தடவை மறிப்பட 2000 ரூபாயும் அகிலம்மக்காவிடம் பேரம் பேசுகிறான். பார்த்துத் தருகிறேன் எனச் சொல்லும் அகிலமக்காவுக்கும் அவனுக்குமிடையில் கடைசியில் ஆட்டுத் தொழுவத்துக்குள்ளேயே கலவி நடக்கிறது. மறிக்கிடாவின் கூலியாகவா தன்னைக் கொடுக்கிறாள் அகிலம்மக்கா என்றால் அப்படி அல்ல. அந்த வாழ்க்கைக்குள்ளிருந்த இருண்மையான சூட்சுமங்களை வெறும் கிளுகிளுப்போடு கடந்துவிடக்கூடிய தருணங்களல்ல இந்தச் சித்தரிப்புகள் எனத் தோன்றுகிறது. வயதான கணவனான சின்னப்புவால் தனக்கு கிடைக்க வேண்டிய பாலியல் வாழ்க்கை குறித்த ஏமாற்றங்கள் மீதான கோபமாகவும் கலகமாகவுமே இந்த மீறலைப் பார்க்க வேண்டி இருக்கிறது.

முஸ்லிம் வாழ்வியல் சார்ந்த தீரனின் புனைவுகளில் அவரது ஒய்த்தா மாமா கதை முஸ்லிம் பண்பாட்டிலிருக்கும் சிறுவர்களுக்கான விருத்தசேதனம் (சுன்னத் செய்தல்) எனும் சடங்கைப் பற்றிப் பேசும் கதை. சுன்னத்துச் செய்யப்படவிருக்கும் ஒரு சிறுவனின் மனவுலகும், ஆதங்கமும், அவனைச் சுற்றிய பெரியவர்களின் எதிர்பார்ப்புகளும், பகடிகளும், வன்மங்களும் என கதை கட்டமைந்திருக்கிறது. சுன்னத் பற்றி ஏற்கனவே அச்சமடைந்திருக்கும் சிறுவனின் மனத்துயரத்தை கொஞ்சமும் கவனத்திற் கொள்ளாது அவனை தொடர்ந்தும் பகடிசெய்து அச்சப்படுத்தும் கலந்தன் காக்கா போன்றவர்கள் அந்தக் காலகட்ட முஸ்லிம் சிறுவர்களின் மிகப்பெரும் எதிரிகளாகவே இருந்தனர். சுன்னத்துக் கால சிறுவர்கள் அடையும் உள நெருக்கடியை சிக்கல்களை மேலும் இவர்கள் ஆழமாக்கிச் செல்கின்றனர். இந்தக் கதை முஸ்லிம் பண்பாட்டிலுள்ள சுன்னத் எனும் சமூக சம்பிரதாயத்தின் மீதான ஒரு பதிவாக மட்டுமே இயங்குகிறது. அது குறித்து கலக உரையாடல்களை முன்னெடுத்துச் செல்வது தீரனின் நோக்கம் இல்லை.

வெள்ளிவிரல் பாரம்பரிய கிழக்கிலங்கை மக்களின் ஆன்மீக மருத் துவ முறையையும், ஒரு பெண்ணின் இணங்காத வாழ்க்கைத் துணை மீதான வெறுப்பால் அவள் பூணும் நாடகியத் தன்மை யான நோயையும் நடத்தையையும் மையமாகப் பேசும் கதை. தன் கணவன் அவளைத் தொடும்போது அவள் உடலே பற்றி எரிவ தாக சொல்லி தன் பாட்டியுடன் பரிகாரியிடம் வரும் அவளோடு பரிகாரி உரையாடி அவளது விசித்திரமான நோய் எதனால் என் பதை தனக்குள்ளே அறிந்துகொள்கிறார். ஒரு நாள் பாட்டியை வெளியே அனுப்பிவிட்டு சிகிச்சையளிப்பதாகக் கூறி இருவரும் உறவு கொள்வதை கிழவி ஒளிந்திருந்து பார்த்து அதிர்ச்சியடைகி றாள். ஆனால் கிழவிக்கு அது பரிகாரியின் சிகிச்சைக்கு கிடைத்த வெற்றியாகவே எண்ணுகிறாள். ஒரு ஆணுடன் உடலால் இணைந்து வாழ இனி அவளால் முடியும் எனக் கிழவி எண்ணிக் கொள்கிறாள். ஆனால் ஒரு காலகட்டத்தில் பெண்கள் தனக்கு ஒவ்வாத ஒருவனை திருமணம் செய்து வைத்தால் அதற்கு எதிர்வினையாக தனது பிடிவாதத்தால் இத்தகைய வேஷங்களை, பொய் யான நோய்களைச் சூடிக்கொண்டனர். இத்தகையதொரு பெண் ணின் கதைதான் வெள்ளிவிரல். இந்தக் கதைக்குள் வெள்ளிவிரல் பரிசாரியின் போலித்தனமும், அந்தப் பெண்ணின் போலித்தனதும் ஒருசேரக் கிழிக்கப்படுவதைக் காண்கிறோம்.

ஈழத் தமிழ்ச் சிறுகதை வெளியில் தீரன் சில புதிய பரிசோதனை முயற்சிகளையும் அப்போதே செய்து பார்த்திருக்கிறார். எடுத்துக்காட்டாக வெள்ளிவிரல் தொகுப்பிலுள்ள விட்டுவிடுதலையாகி என்கிற கதை புலிகளின் தற்கொலைப் போராளி ஒருவர் தன் இலக்கில் குண்டை வெடிக்கச் செய்து இறந்துவிட்ட பின் அவரது ஆவி பேசுவது போன்ற கதை. தான் குண்டை வெடிக்க வைக்கும்போது தன் இலக்கு தவிர்ந்து அதில் கொல்லப்பட்ட பல அப்பாவிகளை நினைத்து அந்த ஆவி வருந்துகிறது. மொத்த ஈழப்போரிலும் நடந்த கொலைகள் பற்றிய பச்சாதாபமாகவும், மனச்சாட்சியின் குரலாகவும் அந்தக் கதை நீண்டு செல்கிறது. ஆனால் இறந்த ஒரு மனிதனின் ஆவி பேசுவது போன்ற கதை முயற்சிகள் அப்போது ஈழத்தமிழ் சூழலில் இடம்பெறவில்லை. 2021 ஆண்டுக்கான Man Booker விருதுக்கான குறும்பட்டியலில் இடம்பெற்ற இலங்கை ஆங்கில எழுத்தாளரான ஷெஹான் கருணாதிலகவின் The Seven Moons of Maali Almeida நாவலின் மையக்கதாபாத்திரமான மாலி கூட கொல்லப்பட்ட ஒரு மனிதனின் ஆவிதான். கதை முழுக்க மாலியின் ஆவி பேசுவது போன்று அமைக்கப்பட்டிருக்கிறது. புக்கர் குறும்பட்டியலில் இடம்பெற்ற நாவலுக்கு இத்தகையதொரு கதைகூறலுக்காகவும், அதன் கதைப்பின்னணிக்காவுமே இந்தளவு முக்கியத்துவம் கிடைத்திருக்கிறது. ஒருவகையில் பார்த்தால் இந்தக் கதைகூறல் உத்தியை தீரன் அப்போதே விட்டுவிடுதலையாகி கதையில் பரீட்சித்துப் பார்த்திருக்கிறார். ஆனால் கதை அவரது வழமையான ஒரு எளிய அரசியல் சூத்திரப் பார்வையிலிருந்து இன்னொரு தளத்துக்கு வாசகரைக் கொண்டு செல்வதில்லை என்பது பலவீனமாக வெளிப்படுகிறது.

ஈழ இலக்கியவெளியில் தீரனுக்கு மற்றொரு இடமும் இருக்கிறது. அவரது அறிவியல் புனைவுகளால் உருவாவது அந்த இடம். அறிவியல் புனைவுகளை ஈழத் தமிழ்ச் சூழலில் பரிசோதித்துப் பார்த்த ஒருவர் அவர். அவரது வல்லமை தாராயோ தொகுப்பிலுள்ள ஓரிரு கதைகள் ஈழத்தமிழ்ச் சிறுகதை வெளிக்கு முற்றிலும் புதுமையான கதைக்களத்தைக் கொண்டவை. கனவுப் பூமி 3398 ஆண்டு நடைபெறும் கதை. தன் படைப்பு மனதால் காலத்தை முன்னோக்கிச் செல்லும் தீரன் அப்போதைய சமூக நிலை பற்றி மிக நுண்மையாகக் கதையாடுகிறார். இந்தக் கதையை அவர் 1995-ல் சரிநிகரில் எழுதினார். 3398 ஆண்டு வயோதிகசனத்தொகையை அரசாங்கம் கட்டுப்படுத்துவதற்கான யோசனையைச் சுற்றி கதை நகர்கிறது. அதற்கான அறிவியல் மொழியும் சில சங்கேதச் சொற்களையும் தீரன் பொருத்தமாகக் கையாள்கிறார். தங்கி வாழ்வோரான வயோதிகரை கொல்லும் திட்டமே அரசிடம் இருப்பது போன்று தெரிகிறது. உலகம் இன்று எதிர்நோக்கியுள்ள தங்கி வாழ்வோர் நெருக்கடியையும், அதனைக் கட்டுப்படுத்துவதற்காகவா கொவிட் 19 தொற்று போன்றவை கொண்டு வரப்பட்டன என்ற சந்தேகங்கள் இன்று பல்வேறு மட்டங்களிலும் நிலவுகிற சூழலில் இது பற்றி அப்போதே தீரன் சிந்தித்திருக்கிறார் என்பது உண்மையில் பெரிய ஆச்சரியமாக உள்ளது.

'ஓம் தீரனின் மற்றொரு அறிவியல் கதை 'கலியுகம்'. கி.பி. 4998 ஆண்டு விண்வெளியில் எல்லையற்ற பரப்பில் ஓர் இடம். அந்தர நிலையில் ஓர் ஆய்வுகூட உப கிரகம். அதனுள் லம்யா உட்கார்ந்திருந்தாள். கைகள் இரண்டும் தன்னிச்சையாகவே C.R.S. கதிர்களை பேஸிமிலியின் மீது பிரயோகித்துக் கொண்டிருந்தன. லம்யாவைச் சுற்றிலும் விஞ்ஞானத்தின் ஆச்சரிய நுட்பங்கள் அடங்கிய உபகரணங்களும் வயர்களும் மூடியிருந்தன. அவளது தலையின் மீது எம்.ஜீ. இணைப்பு...'

என கதையில் வரும் விவரணம் மொத்தக் கதையின் கருவையும் ஓரளவு தொடுவது போலுள்ளது. ஆனால் இந்தக் கதைகளை அப்போதே தீரனால் எழுத முடிந்திருப்பது மிக ஆச்சரியமாகவும்

அதிர்ச்சியாகவும்தான் இருக்கிறது.


ஆழமான புனைவெழுத்தாளராகிய தீரனால் மிக ஆழமாகவே அறிவியல் தகவல்களைக் கற்று ஆழமான சிறந்த புனைவாக ஆக்க முடிந்திருக்கிறது. ஈழத்தைப் பொறுத்தவரை புதிய தலை முறைகூட இந்தத் தளத்தில் பெரிதாக எழுதவில்லை. அனோஜன் மட்டுமே ஒரு கதை எழுதியதாக ஞாபகம்.

தீரனின் இந்த வெற்றிகரமான புனைவுமொழிக்காகவும், புனைவாற் றலுக்காகவும், புதிய பரீட்சார்த்த முயற்சிகளுக்காகவும் அவருக்கு ரிய இடத்தை வழங்கியாக வேண்டும். எனினும், அவர் ஆழமாக காலூன்றி நிற்கும் தனது பண்பாட்டு வெளியை மிகச்சிறந்த புனைவாக தனது சிறுகதைகளில் கொண்டு வரவில்லை என்ற புகார் எனக்கு இருக்கிறது. ஓர் ஆழமான இலக்கிய நோக்கில், மறுவாசிப்பில் அவர் தனது நட்டுமை நாவலில் அடையும் வெற்றி யைப் போன்று கதைகளுக்குள் பெரிய வெற்றி எதனையும் அடை யவில்லை என்றே நான் சொல்வேன்.

ஈழத் தமிழ் முஸ்லிம் வாழ்வியலையும், அரசியலையும் ஆழ்ந்து செல்லாது மிக அவசரமாகப் பதிவு செய்தது போன்ற மிக மோலோட்டத் தன்மையையே அவரது கதைகள் கொண்டிருக்கின் றன. தீரன் சில கதைகளில் பல்வேறு நிலைகளையும், தனக்கு பரிச்சயமற்ற வாழ்வியல் சூழல்களையும் (உதாரணமாக: தாய் மொழி போன்ற கதைகள்) சித்தரித்துக்காட்ட முயலும் போது அச லாக அந்த வாழ்க்கையைச் சொல்ல முடியாத நெருக்கடிக்கு உள்ளாகிறார். அதை அவர் தனது பலமான புனைவு மொழியால் மிக எளிதில் கடந்து சென்றாலும் கதைக்குள் ஆழ்ந்து செல்லும் தீவிர வாசகருக்கு அவர் செயற்கையாக உருவாக்கும் புனைவுல கின் யதார்த்தங்கள் பாவனை செய்யப்பட்ட தோற்றத்தையே அளிக்கின்றன. கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் மிக மிக வரையறுக்கப்பட்டவையாக, ஒரு சிறிய அனுபவத்தையே அளிக் கக்கூடியவர்களாக, அதுவும் காலமும் சூழலும் சார்ந்து முடிந்துவி டக்கூடியவர்களாகவே சிருஷ்டிக்கிறார். இதெல்லாம் அவர் கதைக ளுக்கு ஏன் நடந்தது என்றால் அவை ஒரு படைப்பாளியாக அவர் தன் அனுபவங்களிலிருந்து தனக்கு பரிச்சயமான, இயல்பான வாழ்க்கையிலிருந்து கதைப் பொருளைத் தேர்வுசெய்யத் தவறிய சந்தர்ப்பங்களிலேயே நிகழ்ந்துள்ளது. அத்தகைய கதைகள் அவ ரால் பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்ட போட்டிகளுக்காக குறித்த காலப்பகுதி ஒன்றுக்குள் எழுதப்பட்டவை. இந்த போட்டி சார்ந்த பதட்டங்கள் அவரது இயல்பான படைப்பு மனதை தனக்கு பரிச்சயமற்ற வேறுபட்ட வாழ்க்கைகளையும் பேசும் நிலைக்கு (அறிவியல் கதைகள் விதிவிலக்கு) அவரைக் கொண்டு சென்றுள்ளது.

இன்னொரு புறம் அவரது சொந்தப் பண்பாடு சார்ந்த கதைகளி லும் மனித வாழ்வின் பல்வேறு அனுபவங்களையும் சாரத்தையும் முன்வைக்கும் நிலைத்த கதைச்சம்பவங்களையோ, கதாபாத்திரங் களையோ அவர் உருவாக்கி இருப்பதாகவும் தோன்றவில்லை. ஆனால் அவரது நாவல்களுக்குள் அவர் அத்தகைய பாத்திரங் களை உருவாக்கினார். ஒரு சிறுகதைக்குள் சாத்தியமான அள வில் அந்தப் பணியை தீரன் செய்யவில்லை என்பது அவரது கதையுலகிலிருந்து நாம் வந்தடையும் மிக முக்கிய புரிதலாக இருக்கிறது.

இந்தப் பலவீனம் கசியும் அவரது கதையுலகின் என்றும் அசைக்க முடியாத பலமான பக்கமாகத் திகழ்வது தன் பெரும்பாலான கதைகளில் தென்கிழக்கு முஸ்லிம் மக்களின் பண்பாட்டு வாழ்க் கையையும் அரசியலையும் அவர்களின் மண்வாசக மொழியில் அவரது தலைமுறையில் மிகத் திறமையாகப் பதிவு செய்திருக்கி றார் என்பதுதான். புதிய தலைமுறையில் கிழக்கிலங்கைத் தமிழ் முஸ்லிம்களின் பண்பாட்டு வாழ்வியலை எழுதும் ஓரிரு நட்சத்தி ரங்கள் கிழக்கு வானில் இப்போது ஒளிரத் தொடங்கி இருக்கின்றன.



jiffry.hassan@thaiveedu.com










உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

# வசந்தம் இதழ் குறித்து

- அருண்மொழிவர்மன்

ஈழத்தவர்கள் மீதான இந்திய ஆதிக்கம் பற்றிய உரையாடல்கள் மிக நீண்டகாலமாகவே தொடர்ந்துவருகின்றன. அரசியல் தளத்திலும் பண்பாட்டுத் தளத்திலும் பிரக்ஞைபூர்வமாக இந்த உரையாடல்களை முன்னெடுக்கவேண்டிய தேவைகள் முன்னெப்போதையும் விட அதிகரித்திருக்கின்ற சமகாலச் சூழலில், ஈழத்தின் கலை இலக்கியச் செயற்பாடுகள் குறித்தும் அவற்றின் வரலாறு குறித்தும் பதிவுகளையும் சிறப்பிதழ்களையும் கொண்டுவருவது முக்கியமானதாகும். அதிலும் ஈழத்தின் பதிப்பு முயற்சிகளும் நூல் வெளியீடுகளும் இந்தியாவின் அரசியல் நடைமுறைகள் மற்றும் பண்பாட்டு ஆதிக்கத்தால் தொடர்ந்தும் நலிவடைந்தே செல்கின்ற காலப்பகுதியில் இத்தகைய முயற்சிகளைச் செய்வது காத்திரமான ஒரு நடவடிக்கையாகும். அந்தச் சிறப்பிதழில் 1965 முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த வசந்தம் என்கிற இதழ் குறித்தும் எழுதுவது பொருத்தமானதென்றே கருதுகின்றேன்.

*'ஈழத்து இலக்கியம் என்று ஒன்று உண்டா?' என்று கேட்பவர்கள் எம்மத்தியில் பலர் இன்னும் இருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? எம்மேல் எம் சக்திக்கு மேற்பட்ட ஒன்று மேலாதிக்கம் வகிக்கிறது என்பதைத்தான். இதிலிருந்து விடுபட முடியாமல், இதை எதிர்த்து நின்று முன்னேற முடியாமல் திணறுகிறோம், திக்குமுக்காடுகிறோம். அதுதான் இந்திய ஆதிக்கம் என்பது.*

*நாமும் மனிதர்கள் என்ற முறையில், நமக்கும் தனித்துவமான கலாச்சார பண்பாடு உண்டு என்ற முறையில், நாமும் சுயமாக சிருஸ்டிக்கக் கூடியவர்கள் என்ற முறையில் இந்த ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கத்தான் வேண்டும். எமது கலாச்சார பாரம்பரியத்தின் ஆண்மையைத் தனித்துவத்தை நாம் நிலைநாட்டித்தான் ஆக வேண்டும். எந்த நாட்டுக் கலை இலக்கிய சிருட்டிகளுக்கும் ஈழ நாட்டுக் கலை இலக்கியம் தாழ்ந்ததல்ல, சமதையானதுதான் என்பதை நாம் நிலைநிறுத்தியேயாகவேண்டும். இந்த மனப்பான்மை எங்கள் இலக்கிய கர்த்தாக்கள் மத்தியிலும் கண்டிப்பாக ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும்.*

*எதற்கெடுத்தாலும் இந்தியக் கலைஞர்கள், எவர் வாங்கினாலும் இந்தியப் பத்திரிகைகள், எந்தப்படம் என்றாலும் இந்தியப் படம் தான் என்ற நிலை இருக்கும் வரைக்கும், இலங்கைக் கலைஞர்கள் வளர முடியுமா? இலங்கைப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் தான் நிலைக்க முடியுமா? இல்லவே இல்லை'* என்று நவம்பர் 10, 1965ல் வெளியான வசந்தம் இதழின் ஆசிரியர் தலையங்கம் குறிப்பிடுகின்றது. இது வசந்தத்தின் மூன்றாவது இதழ் என்பதை வைத்துப் பார்க்கின்றபோது வசந்தம் 1965ல் வெளிவரத் தொடங்கியிருக்கின்றது என்பதனை அறியமுடிகின்றது.

நூலகம் இணையத்தளத்தில் வசந்தத்தின், 1965: நவம்பர். 1966: மார்ச், மே, ஜுலை. ஒகஸ்ட், செப்ரெம்பர், ஒக்ரோபர். 1967: ஜனவரி ஆகிய மாதங்களில் வெளியாகிய 8 இதழ்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை வாசித்ததன் அடிப்படையில் வசந்தம் முன்னெடுத்த, சமகாலத்திற்கும் தேவையான உரையாடலினை உணரக்கூடியதாக உள்ளது.

வசந்தம் இதழின் தோற்றம் குறித்து ஆராயும்போது அது எந்தவொரு அமைப்பினதும் உத்தியோகபூர்வ இதழாக வெளிவந்ததாகக் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அதன் உருவாக்கத்திலும் கருத்தியல் பின்னணியிலும் சீனச் சார்பான இடதுசாரிகளின் தாக்கம் இருப்பதை அறியமுடிகின்றது. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரின் கலை, இலக்கியம் குறித்த நிலைப்பாட்டையே வசந்தமும் பிரதிபலித்திருப்பதையும் நாம் அவதானிக்கலாம். அதில் பங்களித்தவர்களையும் நோக்கும்போது முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சார்ந்தவர்களால் வெளியிடப்பட்ட இதழாக வசந்தம் இருக்கலாம் என்று கருதமுடிகின்றது.

வசந்தத்தின் முதலாண்டு நிறைவடைந்தது குறித்து ஒகஸ்ட் 1966 இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது:

'கலை இலக்கியப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கவேண்டும் என்ற உள்ளுணர்வால் உந்தப்பட்ட இலக்கிய அன்பர்கள் சிலர் கொழும்பிலும் கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள இலக்கியப் பிரமுகர்கள் பலருடன் தொடர்புகொண்டு பலமுறை உரையா




டியதுடன் அதற்கான ஒரு சில ஆரம்பவேலைகளையும் ஏற்பாடுகளையும் செய்துவிட்டபடியால் மேற்கொண்டும் காலதாமதம் செய்வது அந்த முன்முயற்சியைத் தளர்த்திவிடும் என்ற காரணத்தால் உடனடியாகவே பத்திரிகை ஆரம்பிப்பது என்றும், அதை யாழ்ப்பாணத்திலேயே நடத்தவேண்டும் என்றும் முடிவுக்கு வந்தோம்.'

'வசந்தம் பத்திரிகைக்கு இவ்வளவு முயற்சிகள் செய்யப்படுகின்றனவே, இவை அவசியம்தானா என்ற கேள்வியும் சிலர் மத்தியில் எழலாம். இவர்கள், ஈழத்துக் கலாச்சார வளர்ச்சி எதிர்நோக்கும் - இன்னும் கடக்கமுடியாத பெருமலைகளாக இருக்கும் மேற்கத்தேயப் பிடிப்பையும் இந்திய கலாச்சாரத் தாக்கத்தையும் உணரமுடியாதவர்களாக இருப்பதும், கலாச்சார எழுச்சி எப்படி அரசியல், பொருளாதார சமூக மாற்றத்திற்கு அவசியமானது என்பதைப் புரிந்துகொள்ளாததும்தான் காரணமாகும்.'

'மேற்கத்தேய ஊடுருவலை, இந்தியத் தாக்கத்தை எதிர்த்து நின்று வளர்த்த ஈழத்துக் கலை இலக்கிய நிலைப்பாடு ஒன்று இருக்கிறது, அதில் நிலைத்து நின்று மக்களே கலை இலக்கியத்தின் ஊற்றுக்கண் என்பதைக் கண்டுகொண்டு அவர்கள் மத்தியில் பட்டை தீட்டப்படாத ஒழுங்கு முறையாய் அமையாத கருவூலங்க


ளைக் கற்றுத்தேர்ந்து, அவற்றை ஒளிவீசும் மாணிக்கங்களாகத் திரும்பவும் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதே வசந்தம் செய்யவேண்டிய கலை இலக்கியப் பணியாகும்.'

இதழொன்றினைத் தொடங்குகின்றபோது அதற்கான தெளிவான வேலைத்திட்டமும் திட்டமிடலும் இருப்பது மிகவும் அவசியமானது. ஈழத்திலிருந்து தொடங்கப்படுகின்ற இதழ்கள், பதிப்புமுயற்சிகளுக்கு சந்தையும் சந்தைப்படுத்தலும் அதற்கான வலையமைப்புகளை உருவாக்குவதும் பேணுவதும் சவாலாகவே இருக்கின்றன. இவற்றின் காரணத்தால் எழுகின்ற நிதிச்சிக்கல்களும் சோர்வும் மன உளைச்சலும் ஒருகட்டத்திற்குமேல் இந்த முயற்சிகளுக்குத் தடையாக அமைந்துவிடுகின்றன. ஈழத்தின் ஆரம்பகால கலை இலக்கிய இதழ்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, எனது அணுக்கத்திற்குக் கிடைத்த அவற்றின் வெளியீடுகளை வாசித்து அறிமுகக் கட்டுரைகளை எழுத ஆரம்பித்தபோது அந்த இதழ்கள் அனைத்துமே ஏதோவொரு விதத்தில் அல்லது சந்தர்ப்பத்தில் இந்தச் சவால்கள் குறித்துக் குறிப்பிட்டிருக்கின்றன என்பதை அவதானித்தேன். வசந்தத்தின் ஆசிரியர் குழு இது குறித்து ஆலோசித்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முன்னைய இதழ்களான பாரதி, புதுமை, இலக்கியம், மரகதம் போன்ற பத்திரிகைகளுக்கு ஏற்பட்ட கதி வசந்தத்திற்கு ஏற்படவே கூடாது என்று உறுதியெடுத்து, ஒவ்வொரு மாதமும் பத்திரிகைக்கான செலவை விற்பனையையோ விளம்பரங்களையோ எதிர்நோக்காமல் தாமே நிதி திரட்டிப் பத்திரிகையைக் கொண்டுவரமுடியும் என்று திட்டமிடுகின்றனர். வசந்தம் இதழ் ஒன்றின் விலையானது 35 சதங்களாக இருந்தபோது, 2000 பேரிடம் 10 ரூபாய்கள் வீதம் சந்தாதாரராகச் சேர்த்துக்கொண்டால் இதழினைத் தடங்கலின்றி கொண்டுவரமுடியும் என்கிற நிதித்திட்டமிடலினையும் இதழில் காணமுடிகின்றது. இவ்வாறு சந்தாதாரர்களைச் சேர்ப்பது குறித்தும் சந்தாதாரரை ஊக்குவிக்கப் பரிசுகளைக் கொடுப்பது பற்றியும் அறிவித்தல்கள் சில இதழ்களில் காணக்கிடைக்கின்றன, ஆயினும் அதில் எவ்வளவு வெற்றியடைந்தார்கள் என்பதையும் இதழ் எவ்வளவுகாலம் தொடர்ச்சியாக வெளியானது என்பதையும் அறியமுடியவில்லை. எனக்கு வாசிக்கக் கிடைத்த இதழ்கள் நவம்பர், 1965 முதல் ஜனவரி 1967 வரையான காலப்பகுதியைச் சேர்ந்தவை.

வாமணன் எழுதிய சுழலும் உலகில் என்கிற தொடர் பத்திவடிவில் வெளிவந்துள்ளது. இதில் செ. கணேசலிங்கனின் நீண்ட பயணம் நாவல் வெளியீட்டுவிழா தமிழ்நாட்டில் நடந்தபோது கி.வா.ஜ ஈழத்து எழுத்தாளர்களின் எழுத்துகளுக்கு அடிக்குறிப்பு தேவை என்று சொன்னதைக் குறிப்பிட்டு 'இந்த அகம்பாவங்களை எல்லாம், இலங்கைக்கு அழைத்து நிலப்பாவாடை விரித்து வரவேற்றால் வேறு என்னதான் சொல்லமாட்டார்கள்' என்று குறிப்பிடுகிறார். அண்மையில் ரொறன்ரோவில் ஆனந்தப் பிரசாத்தின் 'சொல்லப்படாத கதை' நூல் வெளியீட்டு விழாவில் பேசிய சிவதாசன் ஆனந்தப் பிரசாத்தின் நூலில் ஈழத்து வழக்குச் சொற்கள் அதிகமாக உள்ளதாகவும் இது இந்திய வாசகர்களுக்கு விளங்காது என்பதால் அவர்களுக்கு விளங்கக்கூடிய சொற்களைப் பாவித்து திருத்தியிருக்கவேண்டும் என்று தனது உரையில் குறிப்பிட்டதை இங்கே நினைவுகூரவேண்டியுள்ளது. கி.வா.ஜ.வுக்கு முன்னரும், ஈழத்துக்கு வந்திருந்த கங்கை இதழின் ஆசிரியர் பகீரதன் ஈழத்து எழுத்தாளர்கள் பத்து வருடங்கள் பின்தங்கி இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தார், பகீரதன் முதல் ஜெயமோகன் வரை பெரியண்ணன்கள் பெரியண்ணன்களாகத்தான் இருக்கிறார்கள், பெரியண்ணன்களாக இருப்பதால் கிடைக்கின்ற சலுகைகளையும் அதிகாரத்தையும் அனுபவித்துக்கொள்ளும் அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள் ஆனால் அந்த ஆதிக்க மனப்பாங்கை எதிர்க்கும் சுயமரியாதையற்றவர்களாக ஈழத்தவர்கள் பலரும் இருப்பதுதான் நாம் கவனத்திற்கொள்ளவேண்டியது.

இலக்கியத்தைப் போலவே ஈழத்துத் திரைப்படங்களுக்கும் ஈழத்தவர்கள் மத்தியில் இருந்துகூட போதிய ஆதரவு கிடைப்பது இல்லை. அதேநேரத்தில் ஈழத்தவர்களின் பெருமளவு பணம் தென்னிந்திய திரைப்படச் சந்தைக்குள் சென்றுகொண்டே இருக்கின்றது. இன்று மிகப் பிரமாண்டமான பொருட்செலவுகளுடன் தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் எடுக்கப்படுவதற்கு புலம்பெயர் நாடுகளில் அந்தத் திரைப்படங்கள் பெருந்தொகைக்கு விற்கப்படுவது ஒரு முக்கியமான காரணம். மக்கள் வாழ்வைப் பிரதிபலிக்காத, கலையாகவும் வெற்றிகொள்ளாத மசாலாக் குப்பைகளாகவே வெளிவருகின்ற திரைப்படங்களின் உருவாக்கத்தில் ஈழத்தவரின் பணம் சுரண்டப்படுவதுடன் பண்பாட்டு ரீதியிலும் எதிர்மறையான தாக்கத்தையே நிகழ்த்துகின்றது. இன்றைய நிலையில் புலம்பெயர் நாடுகளில் இரண்டாண்டுகளுக்கு தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களை திரையிடாமலும் கொள்வனவு செய்யாமலும் விட்டுவிட்டால் தென்னிந்தியத் தமிழ்த் திரையுலகின் பிரமாண்டங்களை நம்பிப் படமெடுப்போரும் 'ஸ்டார்' நடிகர்களும் வங்குரோத்து ஆகிவிடும் நிலைதான் இருக்கின்றது. ஆனால் இதை ஈழத்தவர்கள் புரிந்துவிடாமல் இருப்பதோடு அவ்வப்போது தென்னிந்திய தமிழ்த் திரையுலக பிரபலங்கள் சொல்லும் ஈழ ஆதரவு கருத்துக்களுக்கே பரவசம் அடைந்துகிடப்பது பெரும் அவலம் என்றே சொல்ல வேண்டும். 1966 ஜூலை இதழில் இடம்பெற்றுள்ள 'ஒரு கோடியே நாற்பத்தொருலட்சத்து நாற்பத்தோராயிரம்' என்ற கட்டுரை குறித்த அந்தத் தொகையான பணம் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சினிமா என்ற பெயரில் கொள்ளை போயிருக்கின்றது என்பதை விபரங்களுடன் சுட்டிக்காட்டியிருக்கின்றது. இன்றைய சூழலில் ஈழத்தவர்கள் பாராளுமன்ற அரசியல் குறித்து நிறைய உரையாடுகின்றபோதும் பொருளாதாரம் குறித்து உரையாடுவதோ பிரக்ஞைபூர்வமாகக் கவனம் செலுத்துவதோ மிகவும் அரிதாகவே உள்ளது. திரைப்படத்துறை என்று இல்லாமல் சடங்குகள், விழாக்கள் போன்றவற்றிற்கான ஆடை கொள்வனவு உட்பட இந்தியாவுக்குப் போய்ச்சேரும் ஈழத்தவர்களின் நிதிவளம் குறித்து நாம் பிரக்ஞைபூர்வமான உரையாடல்களை முன்னெடுக்கவேண்டியது மிகவும் அவசியம். இதே இதழில் இடம்பெற்றுள்ள, இன்றைய ஈழத்தில் தமிழ் சினிமாவின் அவசியம் என்ற கட்டுரை சினிமாக்கலையை விமர்சன ரீதியாகப் பார்க்கவேண்டும் என்று வலியுறுத்துவதுடன் இந்தியத் திரைப்படங்களில் வெளிக்காட்டப்படும் பண்பாடு எம்மை எப்படிப் பாதிக்கின்றது, அது தென்னிந்திய மக்களில் பெரும்பான்மையானோரின் வாழ்வைக் கூட பிரதிபலிக்காமல் எவ்வளவு போலியானதாக இருக்கின்றது, அதனால் எவ்வாறு ஒரு கூட்டம் பெருமளவு பணத்தினைச் சுரண்டுகின்றது ஆகிய விடயங்கள் குறித்தும் விரிவாக அலசுகின்றது.

கலை இலக்கிய இதழாகவே வசந்தம் வெளிவந்தபோதிலும் அது பண்பாடு, வரலாறு, சமகால நிகழ்வுகள் குறித்த விமர்சன பூர்வமான நோக்கிலான கட்டுரைகளைக் கொண்டு வெளிவந்திருப்பது அதன் தனிச்சிறப்பு. கே. டானியல், டொமினிக் ஜீவா, செ. கணேசலிங்கன், நீர்வை பொன்னையன், பெனடிக்ற் பாலன், எஸ்.அகஸ்தியர், அ.ந. கந்தசாமி, செ. யோகநாதன் உள்ளிட்டவர்கள் அதில் புனைவுகளை எழுதியுள்ளார்கள். அதுதவிர, நிறையக் கட்டுரைகள் புனைப்பெயர்களில் எழுதப்பட்டிருக்கின்றன. அன்றைய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த பலரும் இதில் பங்களித்திருக்கின்றனர் என்பதை அவதானிக்கமுடிகின்றது. மலேசியாவில் இடம்பெற்ற முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு குறித்த விமர்சன நோக்கிலான கட்டுரை 3 இதழ்களில் தொடராக வெளிவந்திருக்கின்றது. இதுதவிர இலங்கையில் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் சிங்களத்தைத் தம் போதனாமொழியாக ஏற்றுக்கொண்டமை குறித்த தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு, குளங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டும் கைவிடப்பட்டும் வருதல், 1965ல் நடந்த பல்கலைக்கழக மாணவர் வேலை நிறுத்தம் பற்றிய பல்கலைக்கழக விசாரணைக் கமிஷன் அறிக்கை தவறவிட்ட முக்கியமான விடயங்கள் பற்றி ஆராய்ந்த 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்தனர்' என்கிற கட்டுரை, சிங்களப் பண்பாட்டில் பிரபலமாக இருந்த முகமூடி நடனம் குறித்த மானிடவியல் நோக்கிலான கட்டுரை, 1966ல் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடனான போரின் பின்னர் இந்தியா தனது நாணயப் பெறுமதியை இறக்கியபின்னரும் தென்னிந்தியப் பொருட்களின் விலை அதற்குரிய விகிதத்தில் குறைக்கப்படாமல் ஈழத்தில் விற்கப்படுவதால் சுரண்டப்படும் பணம் போன்ற, முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை அக்கறையுடன் விமர்சன ரீதியில் அலசி அணுகிய கட்டுரைகள் வசந்தத்தில் தொடர்ந்து வெளிவந்திருக்கின்றன. கலை இலக்கியம் என்பவற்றை அணுகும்போது அரசியல், பண்பாட்டு அரசியல், வரலாறு, பொருளியல் போன்றவற்றின் சட்டகங்களில் வைத்து ஆய்வது முக்கியமானது. வசந்தம் அந்தப் பணியைச் செவ்வனே செய்துள்ளது.



arunmozhivarman@thaiveedu.com

# பா. செயப்பிரகாசத்தின் படைப்புலகம்

**- சு. வேணுகோபால்**

**எழுத்தாளர் பா. செயப்பிரகாசத்தின் திடீர் மறைவு நினைத்துப் பார்க்காத ஒன்று. அவரைப் பற்றி நான் எழுதி பிரசுரத்திற்கு அனுப்பாத கட்டுரையைப் படிக்க விரும்பினார். என்னிடம் கேட்டார். அவரது எழுத்தின் பலம் பலகீனம் குறித்து எழுதியிருந்ததால் அனுப்பத் தயங்கினேன். இதழில் வெளியிடாமலும் தள்ளிப்போட்டேன். கட்டுரை வரட்டும் என்று தாய்வீடுக்கு அனுப்பிய மூன்று நாட்களுக்குக்குள் அவரது மரணச் செய்தி வந்தது எனக்கு வருத்தமாகவும் திகைப்பாகவும் இருக்கிறது.**

**தமிழ்ச்சிறுகதை உலகிற்கு எழுத வந்த புதிதில் சில அழுத்தமான கதைகளைத் தந்திருக்கிறார். அதன் வழி அவர் நிலைத்திருப்பார். மானிடத் துக்கத்தை நாம் பகிரும்படி எடுத்து வைத்திருக்கிறார். என் கட்டுரையை அவர் படிக்க வாய்ப்பு இருந்தும் தள்ளிப்போட்டு விட்டேன். என் ஆழ்ந்த வருத்தத்தையும் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறேன். விரிந்த வயல் வெளியின் நடுவே பூத்திருக்கும் ஒற்றை ரோஜா செடிகூட விவசாயிக்குக் களைதான் என்று எழுதிய பா. செயப்பிரகாசத்தை எப்படி மறக்க முடியும்.**

செயப்பிரகாசத்தின் படைப்புகளைப் படிக்கிறபோது ஒரு கரிசல் கிராமத்தின் சித்திரம் உருவாகிறது. பல்வேறு சாதி மக்கள் வாழும் அவ்வூரின் சகல முரண்பாடுகளையும் விமர்சனப்பூர்வமாகப் பேசுகிறது. எப்போதும் அவர் ஏழை எளியவர்களின் பக்கமும் ஒடுக்கப்படும் தலித்துகளின் பக்கமும் பாட்டாளியின் பக்கமும் நின்று அவர்களின் நியாயத்தை, வீழ்ந்துபடும் அறத்தை, குரலற்றவர்களின் குரலை ஒலிக்கிறார். பாலியல் சுரண்டலுக்கும் பாலியல் பலாத்காரத்திற்கும் உள்ளாக்கப்படும் உழைக்கும் பெண்களின் வலியை அறச்சீற்றத்தோடும் கருணையோடும் பார்க்கும் பார்வை வெளிப்படுகிறது. பாலியல் மீறல்கள்கூட நிலவுடைமை ஆசாமிகளின் வலையில் வீழ்ந்ததாக ஊகிக்கும்படி இருக்கிறது. பாலியல் உறவு காதலில் விளைந்தவையாக இருப்பதில்லை. சாதிய கிராமத்தின் வாழ்க்கை சார்ந்த தொழில் பின்னணியில் பல கதைகளை எழுதியிருக்கிறார். மேல் சாதியார்களால் அவர்கள் அடைகிற அவமானங்களை, நிராதரவான நிலைகளை, ஒடுக்கப்படும் குரூரங்களை அநீதியின் சுமைகளை வெளிப்படையாகத் தன் படைப்புகளின்வழி முன்வைக்கிறார். ஒருவகையில் தன் சுயசாதியின் சாதிய மனப்போக்கிற்கு எதிரான நிலையைத் துணிச்சலாக படைப்புகளில் கொண்டு வந்தவர் செயப்பிரகாசம். அதிகமும் சமூக அரசியலை, குடும்ப அரசியலை பேசும் படைப்புகளாகவே இருக்கின்றன. சில படைப்புகளில் புரட்சிகர செயல்களில் ஈடுபட்ட மார்க்சியவாதிகளின் செயல்களை தியாகங்களை வாஞ்சையோடு எழுதியிருக்கிறார்.

முற்போக்கு படைப்பாளிகளில் பா.செ.யின் தனித்துவம் என்பது முற்போக்கு எண்ணங்களுக்கு கதையை இட்டுக்கட்டுவதில்லை. தான் வாழும் சமூகத்திலிருந்து அவர் அறிய நேர்ந்த மனிதர்களிடமிருந்து மூலாதாரங்களை எடுத்துக்கொண்டு படைத்திருக்கிறார். அதனால் அப்படைப்புகளின் நம்பகத்தன்மை வலுவாக இருக்கின்றன. சமூக முரண்பாடுகளை, குடும்ப முரண்பாடுகளைச் சொல்லும் கதைகளிலும் உண்மையின் அடிப்படைகளிலிருந்தே உருவாக்கியிருக்கிறார். எனவே கதைகளின் பேசுபொருள் சமூகத்தில் நிலவும் பிரச்சினைகள்தான். அவர் படைப்புகளின் சாரம் வறுமையில் அல்லல்படும் ஏழைஎளிய உள்ளங்களின் அவலம். அவர்கள் அதிகார வர்க்கத்திடமும் ஆதிக்க சாதியினரிடமும் சிக்கி நசுங்கும் துயரம். ஆண் ஆதிக்கத்தால் நெருக்கப்படும் பெண்களின் ஒடுக்கம்தான்.

உழைத்த உழைப்பிற்கு கூலி கேட்கச் சென்ற பாட்டாளியை முதலாளியின் எடுபிடிகள் அடித்து நெருப்பைக் கொட்டி துரத்தியடிக்கிற செயலை, (பலிபூக்கள்) விவசாய வேலைகள் இல்லா காலங்களில் காட்டிற்குச் சென்று விறகு கொண்டுவரும் பெண்களை பாலியல் வல்லுறவிற்கு ஆளாக்கி சிதைத்த காட்டுலாகா அதிகாரிகளை, நீதிமன்றத்திலும் வெல்ல முடியாது அவமானத்தோடு திரும்பும் பெண்களை (இருளுக்கு அழைப்பவர்கள்), விவசாயத்திற்கு அச்சாணியாக நின்று தொழில் செய்யும் ஆசாரியின் இளம் மனைவியை பாலியல் உறவிற்குள் வளைத்துப் போட்டிருக்கும் ஆதிக்கசாதியிடம் நியாயம் கேட்டு முன்னிரவில் படியேறி படியேறி அழைத்தும் துச்சமென ஒதுக்கும் சாதிய சமூகத்தை (காடு), கிராமத்தின் அனுசரணையையும், பரிவையும் போற்றுகிற மில் முதலாளி, அதே கிராமத்து மனிதர்களின் கூலி உயர்வை ஏற்றுக் கொள்ளாது வறுமைக்குத் தள்ளுகிற வீம்பு (மூன்றாவது முகம்), கம்பீரமும் துணிவும் மிக்கவளாக வாக்கப்பட்டு வரும் தலித் பெண்ணை ஆதிக்கசாதியினர் ஒடுக்கும் வன்மம் (தாலியில் பூச்சூடியவர்கள்), முதலாளி வீட்டுத் திருமணம், ஏழைவீட்டுத் திருமணம் என ஒரே நாளில் இரண்டு திருமண நிகழ்வுகள், ஆள் அம்பாக ஒன்றின் வரவேற்பு. யாருமற்று மாலையோடு வரும் ஏழை தம்பதி இன்னொரு பக்கம். அந்த ஏழை மணாளன் புதுமனைவியை வீட்டிலே விட்டுவிட்டு முதலாளியின் திருமணவீட்டின் இரவுநேர வரவேற்பிற்கு ஒயில் ஆடப்போகும் நிலை (கரிசலின் இருள்கள்), ஆதிக்கசாதிகளின் பெண்ணொருத்தி தலித் இளைஞனை காதலித்து ஊரைவிட்டு அவனோடு போய்விடுகிறாள். இரண்டாண்டுகள் கழித்து ஊர்பார்க்க ஆசைப்பட்டு எருதகட்டு நாள் விழாவிற்கு வருகிறாள். சாதிவெறி அடங்காமலே கனன்று கொண்டிருப்பதை உணரமுடிகிறது. தப்பித்து கணவனின் சொந்தங்கள் இருக்கும் இடத்திற்கு வந்து ஒளிகிறாள் (எருதுகட்டு). வண்ணான் எப்போதும் மதிக்கும் முற்போக்கும் எண்ணம் கொண்ட மனிதரின் அடி ஆழத்திலும் சாதிய உணர்வு இருப்பதைச் சொல்லும் ‘இழிவு’ போன்ற பல கதைகள், நேற்றைய கிராமத்தின் சாதிய இறுக்கத்தை எந்த ஒளிவுமறைவு இல்லாமல் மிக வெளிப்படையாகப் பேசுகின்றன.

இரவு, சில இளைஞர்கள் ஊர்க்கோடி சத்திரத்தில் கூடியிருக்கின்றனர். பாலியல் தொழில் நடக்கப்போவதற்கான சமிஞை முதலாளி காதுக்கு வருகிறது. முதலாளி அல்லக்கையுடன் போகிறார். அவர் வருவதை அறிந்த இளைஞர்கள் தெறித்தோடி மறைகின்றனர். இந்த ஓர் இரவு மட்டும் தங்கிவிட்டுச் செல்வதாகக் கைக்குழந்தையைக் காட்டி குறவன் மன்றாடுகிறான். அவர் முடியாது என்று இரவில் ஊரைவிட்டு துரத்தி அடிக்கிறார். ஊர் அடங்க, தன் வைப்பாட்டி வீட்டிற்குச் செல்கிறார்.

செயப்பிரகாசத்தின் தொடக்ககால கதைகள் நுட்பமும் நுண்ணிய தகவல்களும் கொண்ட மிகச் சிறப்பான கதைகள். ஏழைகளின் வறுமையை, நிராதரவான நிலையை துரோகத்தைத்தான் எழுதினார். அதில் எந்த முன்முடிவுகளும் இல்லாமல் ஆதிக்க சமூகத்தின் கரங்களில் அவர்கள் என்னவாக ஆகிறார்கள் என்பதை விலகி நின்று சொன்னார். பிற்காலக்கதைகளில் இந்த விவரணையின் நுட்பம் மங்கிப்போனது. மட்டுமல்லாமல், கதை வேரூன்றி கொள்வதற்காக கிராமிய தகவல்கள் ஒன்றிரண்டு தூவலாக தூவப்படுவதாக ஆகிப்போனது. அரசியல் நோக்கம் கூடுதலாகத் தலைதூக்கியதால் மற்ற அம்சங்கள் கழன்றுகொண்டன. பிற்காலக் கதைகளை தன் அரசியல் நிலைப்பாடுகளுக்குத் திருப்பிக்கொண்டார். நல்லவர், கெட்டவர் என்ற எதிரெதிர் நிலை கொண்டவையாக அமைத்ததால் கெட்டவரின் வேறு அம்சங்கள் கூடிவராமல் போய்விட்டன. கருப்பு வெள்ளைப் பாத்திரங்களாக அமைந்துவிட்டன. தொடக்ககாலக் கதைகள் சாதிய சமூகத்தின் இறுக்கம் நகர்த்திய முடிவுகள். அதில் தனிமனிதரின் ஒடுக்குமுறையாக அல்ல. சமூகத்தின் ஒடுக்குமுறையாக அமைந்ததால் பாத்திர வார்ப்புகளில் ஆசிரியரின் அரசியல் நிலைப்பாடு ஏறிஅமரவில்லை. ஒரு சமூகத்தின் மனப்போக்கை படம்பிடித்தார் அவை கரிசலின் வாசம் நிரம்பியவை. எனவே அவை உண்டாக்கிய பாதிப்பை பிற்காலகதைகள் ஏற்படுத்துவதில்லை. உதாரணமாக ‘எருதுகட்டு’ கதை அதன் பண்பாட்டு வடிவத்தை ஆழமாக உள்ளிழுத்துக்கொள்ளாமல் காதலர்கள் தங்கள் கிராமத்திற்கு வருவ



தற்கு ஓர் உத்தியாகவும் ஆடுகளம் சாதிய முரணை அறியக்கூடிய இடத்திற்காகவும் மட்டும் பயன்படுத்திக் கொண்டார். அதேசமயம் 'தாலியில் பூச்சூடியவர்கள்' கதையில் கையில் அக்கினிசட்டி ஏந்தி ஆடிவரும் காட்சியும் அதன் பின்புலமும் செறிவாகப் பதிவாகியிருக்கிறது. 'கயத்தாறு புளியமரம்' கதையில் ரேக்ளா பந்தயம் நடைபெறுகிறது. அதன் சாத்தியங்களை அவர் பயன்படுத்திக் கொள்வதில்லை. அதேசமயம் 'அம்பலகாரர் வீடு', 'அக்கினி மூலை' கதைகளில் சாமியாடிகளின் பண்பாட்டு வடிவை மிகச்சிறப்பாகப் பயன்படுத்தி, கதைகளை உச்சமான பாதிப்பிற்குக் கொண்டு சென்றிருக்கிறார். 'இருளுக்கு அழைப்பவர்கள்' கதையில் காட்டைப்பற்றியும், 'காடு' கதையில் ஆசாரியின் பட்டறைத் தொழில் பற்றியும் நுட்பத்தோடு பதிவுசெய்தபடி கதையின் விமர்சன கோணத்திற்கு ஆழம் கூட்டியிருக்கிறார். இந்த கலைமனத்தில் உருவான கதைகள் சிறப்பாக இருக்கின்றன. இந்த அம்சம் அவரது ஆரம்பகாலக்கதைகளில் இயல்பாகத் தேடி வந்திருக்கின்றன.

செயப்பிரகாசம் காமத்தை அதன் மீறல்களை மானுடத்தின் இயல்பாகக் காணவில்லை. ஆதிக்கசாதியின் பாலியல் சுரண்டலாக மட்டுமே பார்க்கிறார். எனவே வேறு பார்வைகளுக்கு அவர் செல்லவில்லை. எழுபதுகளின் இறுதி காலத்தில் ரிக்கார்டு டான்ஸ் என்ற பெயரில் இரவுநேரக் கலைநிகழ்ச்சியாக நடத்தும் வசக்கமாக இருந்தது. அதில் நடனமாடிய பெண்கள் வறுமையின் பிடுங்கல்களில் இருந்து வந்தவர்கள். அந்தத் தொழில் இலைமறை காயாக பாலியல் சுரண்டலையும் நிகழ்த்தியதால் அரசு ரிக்கார்ட் டான்ஸ் நிகழ்விற்குத் தடைச்சட்டம் கொண்டுவந்தபோது அதனைத் தொழிலாக ஏற்றிருந்த பெண்கள் பாலியல் தொழிலாளிகளாக மாறிப் போனதை ஒரு வரலாற்றின் துயரமாகக் காட்டியிருக்கிறார், 'வேரில்லா உயிர்கள்' கதையில். இக்கதையில் ரிக்கார்ட் டான்ஸ் சூழல் போதுமான அளவு பின்னப்பட்டிருக்கிறது. 'அம்பலகாரர் வீடு' கதையில் வறுமையும் விவசாயம் பொய்த்துப் போனதும் பெண்ணை பாலியல் தொழிலுக்குள் தள்ளிவிட்டதைச் சொல்கிறது.

பால்வினை நோய் தாக்கியிருப்பதை மறைத்து மனைவியோடு உறவு வைத்துக் கொள்கிறார். 'இரவுகள் உடையும்' கதையில் வரும் கதாமாந்தன். இதனால் அவனது மனைவிபடும் துயரம் விவரிக்கப்படுகிறது. மணவாழ்வு பற்றி அவள் கண்ட கனவுகள் எல்லாம் சிதைந்து சுக்குநூறாகிறது. 'சாமியார் மடம்' கதையில் பக்தி என்ற போர்வையில் மனைவிமார்களை அலி மடத்திற்கு அருகில் பாதுகாப்பான உறவினர் வீட்டில் தங்கவைத்துவிட்டு ஆண்கள் மடத்தில் குடித்து கூத்தடிக்கிறதைச் சொல்கிறது. இந்த போலி ஆன்மீகத்தை சாடுவது கதையின் நோக்கம்.

சில கதைகளில் உறவை தெளிவற்றவிதத்தில் குழப்பிவிடுகிறார். அதாவது நடையில் அல்ல, படைப்பாளிக்கே ஒரு தெளிவற்ற பார்வை இருப்பதைக் காணமுடிகிறது. வெளியூரிலிருந்து கதை சொல்லியின் கிராமத்தில் வந்து ஒரு பெண்ணும் இரு ஆண்களும் தங்கியிருக்கின்றனர். அவர்களின் தொழில் வேட்டையாடுவது. ஒருவன் கணவன், மற்றொருவன் கணவனின் நண்பன். அவளுக்கு ஒரு நிறைவேறாத காதலும் உண்டு. அதில் அவளுக்கு வருத்தம். சரி இந்த வாழ்வின் மர்மம் என்ன? ஏதும் சொல்லப்படவில்லை.

ஆணாதிக்கத்தை, அவர்களின் பொறுப்பின்மையை, ஏமாற்றுத்தனத்தை எடுத்துவைத்துப் பேசுவதை ஓர் இலக்கியக் கடமையாகக் கொண்டிருக்கிறார். 'கோயில் மாடு', 'மகன்' போன்ற கதைகளில் வெளிப்படையாகவும் 'மயானகாண்டம்', 'கயத்தாறு புளியமரம்', 'காற்றில்லா கூடுகள்' போன்ற கதைகளில் குறிப்பாகவும் சொல்கிறார். கயத்தாறு புளியமரம் கதையில் வரும் 80 வயது கிழவருக்கு பெண்கள் என்றால் பிடிக்காது என்று மருமகளால் சுட்டிக்காட்டப்படுகிறார். கதையில் இதற்கு கிழவரின் வாழ்விலிருந்து எந்த ஆதாரமும் இல்லை.

ஒரு பெண்ணிற்கு குழந்தைப் பேறுகாலம் நெருங்கிவருகிறது. கணவன் தொலைவில் வேலையில் இருக்கிறான். முதல் பிரசவம். கணவன் அருகில் இருக்க விரும்புகிறாள். அது பற்றி கனவு காண்கிறாள். அவனுக்கு வேலை நெருக்கடி வரமுடியாமல் போகிறது. ஆண் குழந்தை பிறந்திருப்பதாகச் செய்தி வருகிறது. இனிப்பு மிட்டாய் வாங்க கணக்கரிடம் 12 ரூபாய் கேட்கிறான். அவர் இன்றிலிருந்து இவனுக்கு நீ செய்யும் செலவுகளை எழுதிவை, பயன்படும் என்கிறார். அனைவரின் முகமும் சகவக்கலையாகிறது. இந்தக் கதைக்கு 'சவ ஊர்வலம்' என்ற பொருத்தமற்ற தலைப்பு வைக்கிறார்.

பா.செ.யின் சிறுகதைகளைப் படித்ததும் முதலில் தோன்றியது ஒரு நல்ல பதிப்பாசிரியர் தேவை குறித்துதான். அவசியம் என்ற வார்த்தையையும் அழுத்திச் சொல்ல வேண்டியதிருக்கிறது. பதிப்பாசிரியர் என்றதும் வெட்டி எடுப்பதல்ல. செம்மையாக்கம் செய்வதற்காக. இலக்கியத்தின் ஆழ அகலங்கள் தெரிந்த பதிப்பாசிரியரின் கைப்பட்டு, படைப்பாளியுடன் உரையாடி செம்மையாக்கம் செய்திருக்க வேண்டிய பல இடங்கள் கண்ணில்படுகின்றன. இந்த செம்மையாக்கம் நிகழ்ந்திருந்தால் படைப்புகள் நேர்த்தியும் ஆழ

மும் பெற்றிருக்கும்.

'கரிசலின் இருள்கள்' கதையில் முதலாளி வீட்டுத் திருமணத்தில் கூட்டம் கூடுகிறது. ஏழையான மாசானம் மகன் மார்த்தாண்டம், பேச்சியைத் திருமணம் செய்துகொண்டு கம்மாய்க் கரை வழியாகத் தனியாக வருகின்றனர் என்கிறார். எந்த ஏழையாக இருந்தாலும் உடன் நான்குபேர் வராமல் இருப்பார்களா? வீட்டிற்கு வந்த பின் மனைவியை தனிமையில் விட்டுவிட்டு ஒயிலாட்டம் ஆட முதலாளி வீட்டுக்குச் செல்ல ஆயத்தமாகிறான். இது மிகையாகப் படுகிறது. சரி, அந்த வீட்டில் வேறு பெண்பிள்ளைகள் இல்லை. பக்கத்து வீட்டுக் கிழவிகள், பெரியவர்கள், குமரிகள்கூட இல்லை? 'காடு' கதையில் ஆசாரிக்கு தலையில் புற்றுநோய் வந்திருப்பதாகச் சொன்னார்கள் என்ற தொடர் வருகிறது. அந்த அடையாளம் சும்மா ஒரு கேலிக்குத்தானா? வேறு நோக்கத்திற்கா? இது கதையில் சம்பந்தமற்று வந்து விழுகிறது. தெளிவில்லை. 'இரவுகள் உடையும்' கதையில் பால்வினை நோயை கணவனிடமிருந்து மனைவி பெறுகிறாள். மருத்துவமனைக்கு அழைக்கிறாள். வர மறுக்கிறான். தாம்பத்தியத்தில் அவள் விரும்பிய சின்னச்சின்ன ஆசைகள் சிதைந்து போனதால் துயரம் கொள்கின்றாள். எல்லாம் சரி. கதையின் இறுதி பகுதியில் ஒரு குழந்தை இருப்பதாக வருகிறது. குழந்தை இருந்தால் தாயுடன் பிணைந்த ஒன்றாகவல்லவா வரும். கதையின் தொடக்கத்திலி ருந்தே இணைந்து வரவேண்டிய பாத்திரம் திடீரென கதையின் முடிவில் முளைக்கிறது. இப்படி செம்மையாக்கம் செய்யவேண்டிய இடங்கள் இவரது கதைகளில் இருக்கின்றன.

'பலிப்பூக்கள்' கதையில் சிறவன் கம்பங்காட்டில் களை பறிக்கும் போது ராமப்பயிரை பிடுங்கிவிடுகிறான். இதற்கு காட்டைவிட்டே துரத்தியடிக்கிறார் சின்ன முதலாளி. பின் கூலி கேட்கச்சென்ற சித்தியை வைப்பாக இருந்துகொண்டால் கூலி தருவதாக கையாள் சொல்கிறான். தட்டிக்கேட்கச் சென்ற கணவரின் முகத்தில் நெருப்பு கங்கைக் கொட்டி விரட்டி அடிக்கின்றனர். இரவெல்லாம் துடித்து செத்துப்போகிறான் (பக்கத்து வீடுகளிலிருந்து யாரும் வருவதில்லை. தெருவே இல்லை) சக பாட்டாளிகள் விசாரிக்கக் கூட வருவதில்லை. முதலாளிமார்கள் கடுமையாக நடப்பதுண்டு தான் அதற்கும் எல்லை உண்டு. ஏழை என்பதால் எதையும் செய்துவிட முடியாது. அனலை ஏந்திக் கதறி அவன் செத்துப்போவதெல்லாம் ரொம்பக் கூடுதலாக இருக்கிறது. ஒருவித கழிவிரக்கத்தை ஏற்படுத்த மிகையான செயல்களை இட்டுக்கட்டிவிடுகிறார். 'மனிதனைத் தின்னும் சிங்கங்கள்' கதையில் வரும் ராமகிருஷ்ணன் அருமையான வெகுளிப் பாத்திரம். மனிதர்களிடம் தன் அளவில்லாத பிரியத்தை காண்பிப்பவன். அவனது வாஞ்சையை சாதிசனம் நேசிக்கிறது. அவனை சினிமா பாணியில் இழுத்துவந்து (அமைதிப்படை) அரசியல்வாதியாக்கி சாதி ஓட்டுக்களை வாங்கிப் பெரிய ஆளாக மாற்றுகின்றனர். சமூகத்தின் மனப்போக்கை எள்ளி நகையாட இப்படிக் கதையை வார்த்திருக்கலாம். ஆனால் அந்தக் காரியத்தை அக்கதை செய்யவில்லை. செயற்கையாக இருக்கிறது. அபூர்வமான மனிதர்கள், தனித்துவமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் என களத்தேர்வு சிறப்பான ஒன்று. அதன் போக்கில் சென்று பார்க்காமல் அரசியல்படுத்த தன் நோக்கில் திருப்பும்போது மானிட இயல்பு நழுவிப்போகிறது.

இவரிடம் உள்ள கவிதை மனம் யதார்த்த கதைவெளிக்கு பொருத்தமற்ற சொற்களையெய்வதில் ஆசை கொள்கிறது. வாசிக்கும்போது வசீகரத்தைத் தருவதைப்போல தோன்றலாம். ஆனால் சூழலுக்கும் மனவார்ப்பிற்கும் தொடர்ந்து வந்த விசயத்திற்கும் முரணாக இருக்கின்றன.

'துயர சூரியனில் உருகுகிற சந்திர காந்தக்கற்களாய், கண்களில் நீர்த்துளிகள் உருளும்', 'ஜன்னல் வழி நட்சத்திர மேகத்தைப் பார்க்கையில்' 'பூவுகளின் ஒலியில் நாணமமா மிதந்தாள்', 'வீறிட்ட அலறலில் லாட்ஜ் அசைந்தது', 'ஒரு கோடை இரவின் மரணத்தில்', 'மலர்ந்த யுகத்தின் ஞானவீச்சு அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை.' 'சூரிய விதைகள் கனல் துண்டுகளாய் விழுந்தன', 'இன்னும் மண்ணெண்ணெய் விளக்குகளைத் தள்ளிவிட்டுத் தொழிலாளி வீடுகளில் மின்விளக்குகள் வரவில்லை.' 'தம்பியும் தங்கையும் முகங்களில் பரிதாபம் பிஞ்சுவிடப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்', 'மழைக்காலமானால் ஒரு பொட்டுத் தண்ணீர் இல்லாமல் வடிந்து விடுகிற வெள்ளப்பெருக்கு', 'வீட்டில் கவிந்த வெக்கையை கணவன் மனைவி உறவுக்கிடையில் உள்ள சடவு என்னும் விசிறியால் வீசிப்போக்க முற்பட்டாள்', 'நடுச்சாமம் பன்னிரண்டு மணிக்கு மின்சாரம் செத்துப்போனது', 'பயத்தில் நசுங்கினாள்', 'பள்ளம் நோண்டி வட்ட மேடை கட்டியிருக்கிறார்கள்' இப்படியான தொடர்களில், 'கோடை இரவின் மரணம்', 'பரிதாபம் பிஞ்சுவிட' 'சடவு என்னும் விசிறியில்', 'பள்ளம் நோண்டி' என்று வித்தியாசமாகச் சொல்வதற்காக புதிய சொற்களைப் பொருத்தமில்லாமல் போடுவது நல்லுணவில் கல் ஊடாடி பற்களை நரநரக்க விடுவதுபோல அபத்தமாகிவிடுகிறது.

கதை நிகழும் ஊர், மாந்தருக்கும் வைக்கும் புனைபெயர் செயற்கையாக இருக்கின்றன. வசந்தம் நகர் என்பதற்கு வசந்தபுரம் என்று வைக்கிறார். சுடலையாண்டி என்பதற்கு சுடலை பாண்டி என்று பெயர் வைக்கிறார். உண்மையில் நடந்த சம்பவத்தைக் கதையாக்கும்போது பெயர் வைப்பதில் சிக்கல்கள் உண்டு. பா.செ. வைக்கும் பெயர்களைப் பார்த்தால் உண்மையான பெயர்களை மாற்றி வைக்கிறார் என்று சொல்வதுபோல இருக்கிறது. பதிலாக கரிசல் ஊர்ப்பெயர்களையே வைத்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

செயப்பிரகாசத்திடம் இருக்கும் அதே கவிதை மனம் புறஉலக அனுபவத்தை மொழியில் அபாரமாக வசப்படுத்தி இருப்பதையும் முன்வைக்க வேண்டியிருக்கிறது. 'அழகு சோம்பல் முறித்துக் கொண்டது', 'தூங்கும் மனசுக்குத் தீனி போடாதே', 'காலங்களின் ருசிகூட தெரியாமல் போயிற்று', 'இரவில் பெய்து முடிந்த மழை போல் அவன் எவருக்கும் தெரியாமல் போய்விட்டான்', பீடியைப் பற்றி, 'இருளுக்கு பொட்டிட்டது போல் கனியும் சிவப்பு நட்சத்திரம்', 'அன்றைக்குச் சூரியன் வந்தது. மாந்தளிர் போன்ற கிழக்கு, இளம் பெண்ணின் வாழ்க்கையை விதைத்துக் கொண்டே வந்தது' 'பெண்ணின் காலில் அவன் விழுந்த அந்த வெள்ளை ஆத்மாவைப் பற்றிய செய்தி, தெற்கிலிருந்து வடக்காய்ச் செல்லும் காற்றில் ஊர் முழுதும் ஒருமுறை போய்வந்தது', 'வாத நாராயண மர நிழல்கள் கீழே உருள்கின்றன', 'சிறு மழைத்தூறலில் கரம்பை மண் கட்டிலின்மேல் பொக்குகள் நனைந்து விரிவது போல் விரிந்தது'.

தொகுப்பாசிரியர் பணி என்பது இவ்விதமான பொருத்தப்பாட்டை அறிந்தும் பொருத்தமற்று விழுந்த சொற்களை, வரிகளை செம்மையாக்குவதற்குத்தான். அவ்விதம் செம்மையாக்கம் செய்யப்பட்டிருந்தால் பல கதைகள் இலக்கியத்தரம் பெற்றிருக்கும். பா.செ. தேர்ந்தெடுக்கும் பிரச்சினைகள் சரியானவை. அவரது அரசியல் பார்வை சரியானதுதான். ஆனால் அது கலைவடிவம் கொள்வதில் பல சிக்கல்களைக் கொண்டிருக்கின்றன. பலசமயம் மறுபக்க உண்மையை மறைத்துவிடுகின்றன. இடைக்காலத்தில் எழுதப்பட்ட 'இரவுகள் உடையும்', 'மூன்றாவது முகம்' போன்ற கதைகளில் ஆசிரியர் உள்ளே புகுந்து தனது விமர்சனங்களை விளக்கங்களை அடுக்குகிறார்.

செயப்பிரகாசம் இடதுசாரி அரசியலை தீவிரமாக முன்னெடுத்தவர், மனஓசை இதழில் ஆசிரியராக இருந்தவர். புதிய சமூக புரட்சி நிகழவேண்டும் என்ற கனவில் இயங்கியவர். இந்தப் புரட்சிக்கு ஏதுவான சில கதைகள் எழுதியிருக்கிறார். ஆச்சரியம் என்னவென்றால், அக்கதைகளில் ஆசிரியரின் தலையீடு இல்லை. அவை அழகான சிறுகதைகளாக கூடிவந்திருக்கின்றன. 'சூரியன் உதிக்கும் வீடு, 'வளரும் நிறங்கள்', 'புதியன' இக்கதைகள் முற்போக்கு செயல்பாடுகளைத் தூக்கிப்பிடிக்கின்றன. அவை நம்பகத்தன்மையோடு படைக்கப்பட்டிருக்கின்றன.

ரயில்வே பாதையருகே தனித்த ஒரு வீடு. சிறிய விவசாயக் குடும்பம். விடிகாலை நேரத்தில் இரு காவல்காரர்கள் புரட்சியாளன் அவ்வீட்டில் மறைந்திருப்பதாக அறிந்து வருகின்றனர். அந்த வீட்டுப் பெண்மணியிடம் போலீஸ் தேடிவரும் நபர் இங்கு ஒளிந்திருப்பதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது என்கின்றனர். மாட்டுக்கு கழனித் தண்ணிர் காட்டிக் கொண்டிருக்கும் வேலையாளை 'இப்படித் தாமதமா வர்றயே. வேலை எப்போ முடியும்' என்று சத்தமிட்டுவிட்டு, காவலரிடம் 'தெரியாதுங்க ஐயா' என்கிறாள். வீட்டையும், வீட்டின் பின்புறமும் சோதனையிடுகின்றனர். ஆள் தப்பித்து விட்டதாகக் கருதுகின்றனர். 'இப்படியான ஆள் மறுபடி வந்தால் எங்களுக்குத் தகவல் தரவேண்டும். அவன் ஆபத்தானவன்' என்கின்றனர். 'சரிங்க ஐயா' என்கிறாள். இன்னும் ஒரு மணிநேரத்திற்

குமுன் இருட்டில் வந்திருக்க வேண்டும் என்று பேசியபடி கிளம்
பிப் போகின்றனர். மாட்டிற்கு தண்ணீர் காட்டிக்கொண்டிருந்தவர்
'நன்றி அம்மா' என்கிறார். அவன்தான் புரட்சியாளன் என்பது தெரி
யவருகிறது. அப்பெண்மணி 'நல்லவர்களுக்குத்தானே உதவினேன்
இதிலென்ன நன்றி தம்பி' என்கிறாள். கதை இந்த மனிதாபிமான
உணர்விற்கும் அப்பால் செல்கிறது. தனித்த ஒற்றைவீடாக இருந்த
அவ்விடத்தைச் சுற்றிப் புதிய புதிய வீடுகள் எழுகின்றன. சில
ஆண்டுகளிலே அந்த வீடு மையத்தில் இருக்கச் சுற்றிலும் வீடுக-
ளாக மாறுகின்றன. சமூக மாற்றத்திற்கான அர்ப்பணிப்பு அவ்வீட்
டுப் பெண்மணிபோல பலபேர் கைகோர்த்து வேறொரு பரிமா
ணத்தைக் கொள்வதாகச் சுற்றி எழும் வீடுகள் அமைகின்றன.
புதிய விடியலை தனித்து இருந்த அந்த வீடும் அந்தப் பெண்ம
ணியும் தொடங்கிவைத்த அந்த முன்னணியை 'சூரியன் உதிக்கும்
வீடு' படிமமாக மாற்றுகிறது. பிரச்சாரம் இல்லாமல் எழுதப்பட்ட
நல்ல முற்போக்குக் கதைகளில் இக்கதைக்குத் தனித்த இடம்
உண்டு.

அலுவலக அதிகாரச் சூழலில் நசுங்கும் கீழ்நிலை ஊழியரைப்
பற்றிய கதை 'ஆறு நகரங்கள்'. நேபாளத்திலிருந்து உறவுகளைத்
துறந்து மொழி தெரியாமல், தாம்பத்திய வாழ்வை அனுபவிக்கா
மல் சொந்த மரணங்களுக்குச் செல்லாமல் தமிழகத்தில் அல்லல்
படும் காவலாளி பற்றிய கதை 'இரவுக் காவலன்', சாதியார்களி
டையே முன்பு இருந்த ஒற்றுமை குலைந்து சாதிவெறியர்களாக
மாறிப்போன காலத்தைச் சொல்லும் 'சாதி' கதை. நுகர்வுக் கலாச்
சாரத்தில் விழுந்து மூழ்கும் நம் அறியாமையைச் சொல்லும் 'எதை
யும் செய்வீர்' என வேறு தளங்களில் நின்று கதைகள் எழுதியி
ருக்கிறார். 'சாதி', 'எதையும் செய்வீர்' கதைகளின் பேசுபொருள்
கள் முக்கியமானவை. ஆனால் அக்கதைகள் நம்மைப் பாதிப்ப
தில்லை. கலையாக உருப்பெறவில்லை. 'இரவுக்காவலன்'
கதையை ஆசிரியரே சிறு வரலாறுபோல தொகுத்துச் சொல்லிவிட்
டார்.


இவரது கதைகளில் வறுமையின் கோலத்தைச் சொன்ன கதைகள்
தான் உச்சத்தைப் பெற்றிருக்கின்றன. 'பொய் மலரு', 'கோபுரங்
கள்', 'சரஸ்வதியின் மரணம்', 'ஒரு ஜெருசலம்', 'அம்பலகாரர்
வீடு', 'ஒரு கிராமத்து ராத்திரிகள்' முதலியவை மறக்கமுடியாத
கதைகள். தங்கை அக்காளிடம் தன் குழந்தைகளை ஒப்படைத்து
விட்டு இறந்து போகிறாள். வறுமையிலும் ஒத்தபேரியாக நின்று
அக்குழந்தைகளை வளர்க்கிறாள். பெரியம்மா ஆதரவில் வளரும்
அக்குழந்தைகள் படிப்பில் ஊரே மெச்சும்படியாக வளர்கின்றனர்.
காமராசர் அப்பள்ளிக்கு மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கி
வைக்க வருகிறார். அவரின் கையால் முதல் உணவை தங்கை
யின் மூத்த மகன் பெறும்படி ஆசிரியர்கள் ஏற்பாடு செய்கின்றனர்.
இதைக் கேள்விப்பட்ட பெரியம்மா. 'நான் உசுரோட இருக்கி
றப்போ உங்கள நான் பிச்சை எடுக்க விடுவேனா' என்று அரற்று
கிறாள். 'கோபுரங்கள்' கதையில் அந்தக் கிராமத்து பெரியம்
மாவை ஒரு காவியநாயகியாக மாற்றியுள்ளார். கிராமங்களில் இப்
படியான ஒன்றுவிட்ட உறவுகளுக்கு தியாகங்கள் செய்த நேற்
றைய தலைமுறையின் உன்னதங்களுக்கு இக்கதையை சாட்சி
யாக வடித்துள்ளார்.

ஓர் இழவு காரியமாக சித்தியும் சித்தப்பாவும் கைக்குழந்தையோடு
கம்மாய்க் கரைவழியாக வருகின்றனர். ஓடையில் விளையாடிக்
கொண்டிருந்த சிறுவன் சித்தியின் வருகையைப் பார்த்து ஓடி
இணைகிறான். இழவு காரியம் முடிந்து ஊருக்குக் கிளம்பும்போது
தன் அம்மாவிடம் அக்காள் பையனை அழைத்துச்செல்வதாகக்
கூறுகிறாள். பாட்டி அவன் படிப்புக்கெடுமே என்கிறாள். ஆனால்
சித்தியுடன் செல்ல பிரியப்பகிறான். சிறு நகரில் இறங்கித்தான்
இந்த ஊருக்கு வரவேண்டும் - சித்தியின் ஊருக்குச் செல்லவேண்
டும். ஒருமுறை தன் தகப்பனார் இருந்தபோது அந்த நகரப்பே
ருந்து வளாகத்தில் சேவு வாங்கித் தந்திருக்கிறார். இப்போது சித்
தியுடன் அந்த நகரில் இறங்கி நடக்கிறான். டீக்கடைகளில் சேவு,
முறுக்கு, ஓமம் பெரிய தட்டுகளில் கூமாச்சியாக வைத்திருப்ப
தைப் பார்க்கிறான். நடந்து செல்லும் சாலையிலும் சில கடைக-
ளில் சேவு கோபுரம் தெரிகிறது. ஊரைக் கடக்கின்றனர் வெயில்
கொளுத்துகிறது. சூட்டுக்கு கொளுஞ்சிச் செடியில் மிதித்து
மிதித்து செல்கிறாள் சித்தி. பின்னாளிலிருந்து சிறுவனின் அழு
கைச்சத்தம் வருகிறது. சித்தி திரும்பி நின்று என்னவென்கிறாள்.
'சித்தி சேவு வேணும்' என்கிறான். கையில் வைத்திருந்த கைக்கு
ழந்தையை கணவனிடம் கொடுத்துவிட்டு சிறுவனை அணைத்து
கணவனைக் கண்கலங்கப் பார்க்கிறாள். வாங்கித்தரமுடியாத
அந்த கையறுநிலையை கும்மி கொதிக்கும்படி 'சரஸ்வதி மரணம்'
கதையில் கொண்டுவந்திருக்கிறார். இக்கதைகளில்தான் படைப்பா
ளியின் கண்டடைதல் நிகழ்ந்திருக்கின்றன. அவை வாசகனுக்கும்
திறப்புகளை உண்டாக்குகின்றன. மற்ற கதைகளில் வாழ்வின்
முரண்களை விமர்சனப்பூர்வமாக எடுத்து வைக்கிறார் அவ்வளவே.

சாதிய முரண்களின் பின்னணியில் எழுதப்பட்ட கதைகளில் மகத்
தான சாதனை என்று சொல்லத்தக்ககதை. 'தாலியில் பூச்சூடியவர்
கள்'. ஒரு படைப்பாளியாக நமக்குத் தந்திருக்கும் மேலும் சில
நல்ல கதைகள் என 'அக்கினி மூலை', 'காடு', 'இழிவு', 'வேரில்லா
உயிர்கள்' போன்ற கதைகளைச் சொல்லாம். கிராமத்து இரவுக-
ளின் பின்னணியில் உருவான பல கதைகள் சிறப்பாக வந்துள்
ளன. இரவுகளைப் பேசிய நல்ல கதாசிரியர் செயப்பிரகாசம்.

இக்கதைகள் அடைந்த கலை வெற்றியை இன்னும் சில கதைகள்
அடைந்திருக்கக்கூடும். ஆனால் கதைகளைக் குறிப்பிட்ட நோக்
கங்களை நோக்கி நகர்த்தத் தொடங்கும் இடத்திலிருந்து அவை
ஏற்றக்க வேண்டிய வண்ணங்களைத் தவறவிடுகிறார். ரிக்கார்ட்
டான்ஸ் ஆடும் பெண்கள் மேடையில் ஆடும் அந்தக் கணத்தில்
சந்தோசமாகவே இருப்பர். தனது நடனத்தில் கைத்தட்டல்களை
வாங்க நினைப்பர் அங்கு வறுமை தலைதூக்காது. தனது கவலை
களை மறந்து மகிழ்ச்சிகொண்டு ஆடுவர். தன் சோகங்களை மறக்
கும் வடிகாலும் அதுவே. பெருமிதம் கொள்வர். இப்படி எத்த
னையோ மகிழ்ச்சியான தருணங்கள் இக்கட்டான வாழ்க்கைச் சூழ
லிலும் வெளிப்படும். இம்மாதி இடங்களுக்கு பா.செ. செல்வ
தில்லை. மலைமகள் என்ற ஈழப்போராளி, பெண் படைப்பாளி
யும்கூட. போருக்கு ஆயத்தமாகும் சூழலில் குழி தோண்டுவது,
குண்டுகளைச் சுமந்து கொண்டு வைப்பது போன்ற வேலைகளில்
ஈடுபடுகின்றனர். அவளுக்கு அங்கு ஒரு காதல் மலர்கிறது. காத
லனைக் கண்களால் பார்த்துச் சிரிப்பதும், சைகையால் சந்தோசத்
தைப் பரிமாறிக் கொள்வதாக எழுதுகிறார். இந்த அவதானிப்பை
எழுதுபவன்தான் முக்கியமான படைப்பாளி. பா.செ. கதையைத்
தொடங்கிப் பாதிவரை நிதாமாகச் செல்கிறார். பின்பகுதியில்
முரண்பாடுகளை வாசகர் முன்நிறுத்தும் நோக்கத்தில் நகர்த்தும்
போது வண்ணங்கள் கூடிவராமல் போய்விடுகின்றன. கி.ரா.,
தி.ஜா. போன்றவர்கள் முழு கதைக்கும் தன் அவதானிப்பை
செலுத்தியிருக்கிறார்கள். பா.செ.க்கு கிராமிய பின்புலம் அழகாக
வேகூடி வந்திருக்கின்றன. அதன் முழு அழகையும் அவர் பயன்ப
டுத்திக் கொள்ளவில்லை என்பதும் அக்கதைகளிலே உண்டு. பிற்
காலக் கதைகளில் மனதை அதற்கு முழுக்க ஒப்புக் கொடுக்கா
ததால் வண்ணங்கள் முழுமையாக உருவாகி வரவில்லை.

செயப்பிரகாசத்தின் பார்வை சமூக, குடும்ப உறவுகளின் மீது
விழுகிறது. அதன் முரண்களின் சிக்கல்களை ஆராய்கிறது.
உழைக்கும் மக்களின் வலிகளை பரிவுடன் பார்க்கிறது. அவர்
தவறுகளை மனிதாபமானத்துடன் அணுகுகிறது. இந்தக் கிராமம்
இத்தனை சாதிய சிக்கல்களுடன் பின்னப்பட்டு ஒருசாராரை
அமுத்தி நசுக்குகிறதே என்று வெளிச்சத்தில் வைக்கிறது. அவர்க
ளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கி
றது. பெண்களை சிறுமைபடுத்திக் கொண்டிருக்கும் ஆண்களின்
ஆணவத்தை உடைக்கிறது. வர்க்க முரண்பாடு, தத்துவம் பற்றி
யெல்லாம் தெரியாது பசியை, வறுமையை, எளிய ஆசையை
வெளிப்படுத்தும் குழந்தைகளின் உள்ளங்களைக் காண்கிறது.
எல்லா சிடுக்குகளோடும் வாழும் அந்தக் கரிசல் கிராமத்தின்மீது
அவருக்குக் கருணையும் இருக்கிறது. இந்த மக்கள் சாதிச்
சண்டை, ஏற்றத்தாழ்வு இல்லாமல் வாழ்ந்தால் என்ன என்ற கனவு
அவருக்கு இருக்கிறது. இதன் வெளிப்பாடுதான் அவரது படைப்
புகள். இவரது விமர்சனப் பார்வை கிராமத்தின் வேறுவகையான
அழகியலை முழுதாகக் கொண்டுவர முடியாமல் ஒடுக்கியும் விட்
டது. கி.ரா.விற்கும் விமர்சனப் பார்வை உண்டு. ஆனால் தன்னை
ஒடுக்கிக் கொள்ளாது வெளிப்படுத்த முடிந்திருக்கிறது. செயப்பிர
காசத்திடம் நாம் இனி எதிர்பார்ப்பது இந்த
எல்லைகளை விரிப்பதைத்தான்.




venugopal@thaiveedu.com

# இரகசிய உரையும்

# அறுபத்தியொரு பொய்களும்

**- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ**

இரண்டாம் உலகப்போரின் முடிவிற்கும் கெடுபிடிப் போரின் முடிவிற்கு இடையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவத்துவம் பெற்ற நிகழ்வுகளில் ஒன்று 1956ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 25ம் திகதி சோவியத் ஒன்றியத்தின் இருபதாவது மாநாட்டின் மூடிய அமர்வில் நிகிதா க்ருஷ்சொவ்வால் நிகழ்த்தப்பட்ட இரகசிய உரையாகும். இந்த உரையானது ஸ்டாலின் மீது குற்றங்களை




அடுக்கியது. ஸ்டாலின் ஆட்சியின் தவறுகளையும் அதற்கான முழுப்பொறுப்பாளி ஸ்டாலினே என்றும் சொன்னது. இந்த 'இரகசிய உரை', உலகளாவிய கம்யூனிச இயக்கத்தில் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியது. பல தசாப்தங்களாக கம்யூனிஸ்டுகளுக்கு எதிரானவர்களால் எழுப்பப்பட்ட அனைத்து மோசமான குற்றச்சாட்டுகளையும் 'உள்ளேயே' உறுதிப்படுத்துவதாக அமைந்தது க்ருஷ்சொவ்வின் குறித்த 'இரகசிய உரை'. அவரது முயற்சிகளின் உடனடி விளைவாக, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்த அவரது எதிரிகள், குறிப்பாக ஸ்டாலினின் நெருக்கத்துக்கு உரியவர்கள் (மொலோடோவ், மாலென்கோவ், ககனோவிச் போன்றவர்கள்) அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டனர். அல்பேனியா மற்றும் சீனாவின் தலைமையில் ஸ்டாலினைப் பாதுகாத்தவர்கள் போல் தோற்றமளிக்கும் நிலை ஏற்பட்டது. அவர்கள் சோவியத் யூனியனுடனும் தத்துவார்த்தத் தளத்தில் பாரிய வேறுபாட்டைக் கண்டனர். இது நீண்டகாலத்தில் சர்வதேச கம்யூனிசத்திற்குள் பிளவு ஏற்படக் காரணமானது. 'இரகசியப் பேச்சு' நவீன வரலாற்றின் ஒரு உரைகல்லாக மாறியது. சோவியத் வரலாறு மற்றும் அரசியலில் ஸ்டாலினுக்கு எதிரான விளக்கங்களுக்கு முக்கிய ஆவணமாக இது அமைந்தது.

இன்றுவரை ஸ்டாலின் மீதான தவறுகளுக்கான அடிப்படையாக அமைவது க்ருஷ்சொவ்வின் இந்த 'இரகசிய உரையில்' இடம்பெற்ற குற்றச்சாட்டுகளே. இந்தப் பின்புலத்திலேயே பேராசிரியர் குரோவர் ஃபர் (Grover Furr) எழுதியுள்ள 'Khrushchev Lied' (பொய்யுரைத்தார் க்ருஷ்சொவ்) என்ற புத்தகத்தை நோக்க வேண்டியுள்ளது. இப்புத்தகம் க்ருஷ்சொவ் தனது புகழ்பெற்ற 'இரகசிய உரையில்' ஸ்டாலின் மீது சுமத்தியுள்ள அறுபத்தியோரு குற்றச்சாட்டுகளை அடையாளம் கண்டு அவற்றின் உண்மைத் தன்மையை விசாரிக்கிறது. இந்த 61 குற்றச்சாட்டுகளில் 60 குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதை ஆதாரங்களோடு நிரூபிக்கிறது. 61வது குற்றச்சாட்டை நிரூபிக்கவோ அல்லது மறுக்கவோ முடியவில்லை என்று தன் முன்னுரையில் ஃபர் குறிப்பிடுகிறார். மேலும், க்ருஷ்சொவ் குறைந்தது 40 சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே பொய் சொன்னார் என்பதை காட்டுகிறார். இந்தச் சான்றுகள் முதன்மை ஆதாரங்களில் இருந்து ஏராளமான மேற்கோள்களின் உதவியோடு ஆதாரபூர்வமாக நிறுவப்பட்டுள்ளன. இவை அனைத்தும் ரஷ்ய மொழியிலிருந்து நூலாசிரியரால் நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 1991-ல் சோவியத் ஒன்றியம் முடிவுக்கு வந்ததில் இருந்து, முக்கியமாக முன்னாள் சோவியத் காப்பகங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற முதன்மை ஆவணங்களின் வெளிச்சத்தில் இக்குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றாக விசாரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகம் இருபதாம் நூற்றாண்டின் மிகவும் முக்கியமான ஒரு கதையாடலைக் கேள்விக்கு உட்படுத்துகிறது. அரைநூற்றாண்டுகாலப் பொய்களை அம்பலப்படுத்துகிறது. ஒக்ரோபர் 1964-ல் தலைமையிலிருந்து அகற்றப்படும் வரை க்ருஷ்சொவ் மற்றும் அவரது துணை அதிகாரிகள் ஸ்டாலினைப் பற்றி பொய்க

ளைப் பரப்பினர். இந்தப் பொய்கள் உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான கம்யூனிஸ்டுகளை மனச்சோர்வடையச் செய்தது. உலகளாவிய கம்யூனிச இயக்கத்தின் மீது விழுந்த மீளவியலாத அடி இது. க்ருஷ்ச்சொவ்வின் குறித்த உரையானது 1964-ல் அவர் அதிகாரத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதற்குப் பிறகும் விளைவுகளை ஏற்படுத்தியது. 2007-ம் ஆண்டு இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் த கார்டியன் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில், கொர்பச்சொவ் தனது சொந்த பெரெஸ்ட்ரோயிகா என்று அழைக்கப்படுவதை க்ருஷ்ச்சொவ்வின் உரையின் நேரடி தொடர்ச்சியாக வகைப்படுத்தினார்.

இந்தப் புத்தகம், கம்யூனிஸ்டுகளுக்கு எதிரானவர்கள் மற்றும் ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கு நிச்சயமாக விரும்பத்தகாதது. சோவியத் வரலாற்று அறிஞர்கள் எவரும் இப்புத்தகத்தில் ஒரு புள்ளியில் கூட முரண்படவில்லை. ஆனால் கெடுபிடிப்போர் வரலாற்றாசிரியர்கள் பல மொழிகளில் க்ருஷ்ச்சொவ்வின் பொய்களை மீண்டும் மீண்டும் கூறினர். ஏனைய வரலாற்றியலாளர்கள் அவர்களிடமிருந்து 'மைய நீரோட்ட' வரலாற்றுக் கணக்கை உருவாக்கினர். அது இன்று உலகளாவியதாக மாறிவிட்டது. அதேவேளை 1980-களின் பிற்பகுதியில் க்ருஷ்ச்சொவ் விட்டுச் சென்ற இடத்தை மிகைல் கொர்பச்சொவ் தேர்ந்தெடுத்தார். அவர் ஸ்டாலின் மற்றும் ஸ்டாலின் காலம் பற்றிய பொய்களைப் பரப்புவதில் மேலும் முன்னேறினார். போலியான 'முதன்மை ஆதாரங்களை' உருவாக்குவது உட்பட, கம்யூனிச எதிர்ப்பு மற்றும் ஸ்டாலினுக்கு எதிரான பொய்களை மற்றும் கட்டுக்கதைகளைப் புனைந்து அவற்றையே ஒரு பிம்பத்தைக் கட்டமைக்கப் பயன்படுத்தினார். ஸ்டாலின் பற்றிய புனைவுகளுடன் கூடிய இந்த 'புதிய அலை' இன்றுவரை தொடர்கிறது. அவ்வகையில் இந்தப் புத்தகம் முக்கியமானது.

க்ருஷ்ச்சொவ், ஸ்டாலின் மீது முன்வைத்த குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து, புள்ளிக்கு புள்ளியாக, அவற்றின் உண்மைத்தன்மை அல்லது பொய்யை ஆராயும் பணியை ஃபர் விரிவாகவும் ஆழமாகவும் ஆதாரபூர்வமாகவும் மேற்கொண்டுள்ளார். அவர் அடைந்த முடிவு புத்தகத்தின் தலைப்பிலேயே தெரிகிறது. ஃபர் க்ருஷ்ச்சொவ்வின் குற்றச்சாட்டுகளை ஒன்பது பொது வகைகளாகப் பிரிக்கிறார், 'லெனினின் உயில்' முதல் கிரோவ் படுகொலையில் ஸ்டாலின் உடந்தையாக இருந்ததாகக் கூறப்படுவது, இரண்டாம் உலகப் போரில் சோவியத் போர் முயற்சியை ஸ்டாலினின் தவறாக நிர்வகித்தது, ஸ்டாலினின் கடைசி ஆண்டுகள் வரை என ஒவ்வொரு காலகட்டமாகப் பிரித்து க்ருஷ்ச்சொவ்வின் பொய்களை வகைபிரித்து அலசுகிறது இந்தப் புத்தகம். இந்த விசாரணை சொல்லும் செய்தி மிகவும் எளிமையானது. ஸ்டாலினுக்கு எதிராக க்ருஷ்ச்சொவ் முன்வைத்த குற்றச்சாட்டுகளில் ஒன்றுகூட உண்மை என்று நிரூபிக்கப்படவில்லை என்பதுதான் இந்த நூலின் விசாரணையின் சாராம்சம். இது சோவியத் வரலாற்றின் இன்றியமையாத படைப்பாகும். வரலாற்று உண்மையை மீட்டெடுக்கும் ஒரு துணிச்சலான முயற்சியாக இந்தப் புத்தகம் தனிச்சிறப்புடன் மிளிர்ந்து நிற்கிறது.

20-ம் நூற்றாண்டில், இரண்டாம் உலகப்போரின் பின்பு உலகின் கண்களும் எல்லா இடங்களிலும் சுரண்டப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் நம்பிக்கைகளும் சோவியத் ஒன்றியத்தின் மீது குவிந்திருந்தன. பெரும்பான்மையான மனிதகுலத்தின் நிலைப்பாட்டில் இருந்து பார்த்தால், தொழிலாள வர்க்கங்கள், போல்ஷிவிக் புரட்சி, சோவியத் யூனியனின் தொழில்மயமாக்கல் மற்றும் கூட்டுமயமாக்கல், ஹிட்லரின் படைகளின் தோல்வி, ஏகாதிபத்தியத்திற்கு எதிராக கம்யூனிஸ்ட்களின் மீதான ஈர்ப்பு மற்றும் அவர்களின் தலைமையிலான போராட்டங்கள் - இவையே மிகப் பெரிய நிகழ்வுகளாகும். உலக வரலாற்றில் இந்த மகத்தான சாதனைகள் அனைத்தும் ஸ்டாலின் காலத்தில் நடந்தவை.

ஸ்டாலின் தவறுகளுக்கு அப்பாற்பட்டவரல்ல. ஆனால் கட்டமைக்கப்பட்ட பொய்களின் தீவிரமும் அதுவே சோவியத் ஒன்றிய எதிர்ப்பாகவும், கம்யூனிச எதிர்ப்பாகவும் கட்டமைக்கப்படுவதற்கும் க்ருஷ்ச்சொவ்வின் பொய்கள் எவ்வாறு பயன்பட்டுள்ளது என்பதை அறிந்திருப்பதும் அவசியமானது. மார்க்சியத்தை நன்கு கற்றறிந்தாலோ, மார்க்சிய நடைமுறையில் மிகுந்த பரிச்சயம் பெற்றதாலோ, உண்மையான புரட்சிவாதி என்பதாலோ அறிவுத்திறனும் புத்திக் கூர்மையும் உடையவர் என்பதாலோ எந்த ஒரு மனிதரும் தவறுகளுக்கு அப்பாற்பட்டவராகிவிட முடியாது. தவறுகள் மூலமே சரியானவை பெரும்பாலும் தெரியவருகின்றன என்பதும் செயலற்றோரே தவறற்றோராக இருக்க முடியும் என்பதுவும் நாம் கருத்திற்கொள்ள வேண்டியது. சோவியத் ஒன்றியம் போன்ற பெரிய நாட்டில் ஜாரிய ஏகாதிபத்தியத்தின் கீழ் குறை விருத்தியடைந்த ஒரு முதலாளித்துவ அமைப்பின் வரலாற்றுப் பின்னணியில், சோசலிச ஆட்சியை நிறுவி நிர்வகிப்பது எளிதல்ல. அது மட்டுமின்றிப் புரட்சியின் வெற்றியை அடுத்து இடையறாது அயற்தலையீடுகளும் பல்வேறு சோவியத் விரோத நடவடிக்கைகளும் மிகுந்த உலகச் சூழலில் சோவியத் ஒன்றியத்தையும் அதன் பாட்டாளிவர்க்க அரசு அதிகாரத்தையும், பேணிக் காப்பது மிகச் சிக்கலானது. லெனின் தலைமை முகங்கொடுக்க வேண்டியிருந்த பிரச்சினைகளை விடப் பெரிய பிரச்சினைகளுக்கு ஸ்டாலின் தலைமை முகங்கொடுக்க வேண்டிருந்தது. சோவியத் புரட்சி எந்த நிலையிலும் ஒரு சீரான முறையில் மேல்னோக்கி முன்னேறவில்லை. இந்த உண்மைகளையும் நாம் தெரிந்திருக்க வேண்டும்.

இந்தப் புத்தகம் சில விடயங்களை வலியுறுத்துகிறது. 'ஸ்டாலின் காலத்தைய' சோவியத் ஒன்றியத்தின் வரலாறு முற்றிலும் மாற்றி எழுதப்பட வேண்டும். சோவியத் வரலாற்றின் ஸ்டாலின் காலத்தைப் பற்றி நம் அனைவருக்கும் வேண்டுமென்றே பொய்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. சோவியத் வரலாற்றினை ட்ரொட்ஸ்கி - க்ருஷ்ச்சொவ் - கெடுபிடிப்போர் - கொர்பச்சொவ் ஆகியோரின் அடிப்படையில் காண்பது தவறானது மட்டுமல்ல: அந்த அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட வரலாறு வேண்டுமென்றே பொய்யாகப் படைக்கப்பட்டது. நம் அனைவருக்கும் மிகவும் அவசியமான, உண்மை வரலாற்றைக் கண்டறிய தேவையான ஆதாரங்களை ஆவணக் காப்பகங்கள் இப்போது தருகின்றன. இதற்கான நல்லதொரு தொடக்கப்புள்ளியே இந்தப் புத்தகம்.

ஸ்டாலின் காலத்தைப் பற்றிய நேர்மையான விளக்கத்தை முன்வைக்கும் எந்தவொரு புத்தகத்துக்கும் அல்லது ஸ்டாலின் ஒரு இரத்தவெறி பிடித்த பைத்தியக்காரன் என்ற மரபு ஞானத்தை மறுக்கும் எந்தவொரு புத்தகத்துக்கும் ஒரு வெளியீட்டாளரைக் கண்டுபிடிப்பது சிரமம். சோவியத் ஒன்றியத்தின் சரிவுக்குப் பின்னரான ஆண்டுகளில், ரஷ்யாவில் வெளியிடப்பட்ட ஸ்டாலின் ஆண்டுகள் பற்றிய ஆய்வுகளில் சில அந்த காலகட்டத்தில் சோவியத் கொள்கையை விமர்சிக்கின்றன, மற்றவை அதே கொள்கைகளை பாராட்டுகின்றன. சுவாரஸ்யமாக, ஸ்டாலின் ஆட்சிக்கு ஆதரவான எந்தவொரு ஆய்வும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படவில்லை. ஸ்டாலினுக்கு விரோதமான பல ரஷ்ய படைப்புகளும் 1930கள் தொடக்கம் 1950கள் வரையான உண்மையான சோவியத் அனுபவத்திற்கு விரோதமான படைப்புக்களும் முக்கிய அமெரிக்க வெளியீட்டாளர்களால் வெளியிடப்பட்டுள்ளன. இதுவே ஸ்டாலின் காலம் பற்றிய ஒரு சித்திரத்தை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருந்தது. இந்த மொழிபெயர்ப்புக்களின் வழியே ஸ்டாலின் மீதான பொய்கள் கட்டமைக்கப்பட்டு பரப்பப்பட்டது.

1990-களின் முற்பகுதியில் சில சோவியத் காப்பகங்கள் ஓரளவு திறக்கப்பட்டதிலிருந்து, இதுவரை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல 'உண்மைகள்' மறுமதிப்பீடு (குறிப்பாக மேற்கத்தேய ஆய்வாளர்களால்) செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்டாலின் காலத்தில் அடக்குமுறைகளால் இறந்தவர்களின் எண்ணிக்கையும் இதில் அடங்

கும். முன்னர் சில அறிஞர்கள் 50 மில்லியன் மக்கள் வரை இறந்ததாகக் கூறினர். ஆனால் இப்போது கிடைக்கின்ற அறிக்கைகளின்படி 1953 டிசம்பரில் க்ருஷ்சொவ்விற்கு அனுப்பப்பட்ட அறிக்கையின்படி, மொத்தமாக இறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 1.9 மில்லியனே. இதற்குள் பட்டினியால் இறந்தோர், தொழில்முகாங்களில் மரணித்தோர், மரணதண்டனை விதிக்கப்பட்டோர் என அனைவரும் அடக்கம். அதேபோல 1932-33ல் உக்ரேனிய விவசாயிகள் திட்டமிட்டு பட்டினிக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்று பரப்பப்பட்ட தகவல் பொய்யானது என்று நிறுவப்பட்டுள்ளது.

இங்கு கவனிப்புக்குரியது யாதெனில், க்ருஷ்ச்சொவ்வின் சில குற்றச்சாட்டுகள் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டன. 1941-ல் ஜேர்மனியர்கள் படையெடுத்தபோது ஸ்டாலின் 10 நாட்கள் ஓடி ஒளிந்தார் என்று க்ருஷ்சொவ் சொன்ன கதை 1995-97-ல் ஸ்டாலினின் அலுவலகத்திற்கு வருகை தந்தவர்களின் அதிகாரப்பூர்வ பதிவின் வெளியீட்டின் மூலம் பொய்யானது என நிறுவப்பட்டது. தன்னைச் சுற்றி ஆளுமை வழிபாட்டை ஊக்குவித்தார் என்பதுதான் ஸ்டாலினுக்கு எதிரான க்ருஷ்ச்சொவ்வின் முக்கிய குற்றச்சாட்டு. தீவிரமான ஸ்ராலினிச எதிர்ப்பாளரான மெட்வெடேவ் தொடங்கி மற்றைய ஸ்டாலினிய எதிர்ப்பு அறிஞர்களே இந்தக் கூற்றில் சந்தேகத்தை ஏற்படுத்தும் ஆதாரங்களை மேற்கோள் காட்டியுள்ளனர். க்ருஷ்ச்சொவ்வின் இந்தக் குற்றச்சாட்டுக்கு எந்த ஆதாரமும் இல்லாததையும் இணைத்து, ஸ்டாலின் வழிபாட்டு முறையை நம்பவில்லை என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது. முரண்பாடாக, 1964-ல் குருசேவ் அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்டபோது, அவர் தனது சொந்த ‘ஆளுமை வழிபாட்டை’ ஊக்குவித்ததாக குற்றம் சாட்டப்பட்டார்.

இந்நிலையிலும் இன்றும் சில அறிஞர்கள் குருசேவின் உரையை நம்பகமான ஆதாரமாக மேற்கோள் காட்டுகின்றனர். - இது கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாகச் செய்யப்பட்டு வருகிறது. இப்புத்தகத்தின் வழியே முன்னாள் சோவியத் ஆவணக் காப்பகங்களில் இருந்து ஏராளமான ஆவணங்களை வாசகர்களுக்கு பாரவைக்குத் தருவதன் மூலம் க்ருஷ்ச்சொவ்வின் உரையைப் பொய் என்று நேரடியாக அம்பலப்படுத்தும் நூற்றுக்கணக்கான முதன்மை ஆதாரங்களை ஃபர் மேற்கோள் காட்டுகிறார். ‘இரகசிய உரை’ பற்றிய ஃபர்ரின் ஆய்வு, சோவியத் வரலாற்றின் ‘ஸ்டாலினுக்கு எதிரான பொய்களைக் கட்டமைக்க’ ஒரு அடித்தளமான ஆவணத்தின் உண்மைத்தன்மையை கேள்விக்குட்படுத்தியுள்ளது. ஸ்டாலின் மீதான குற்றச்சாட்டுகள் பற்றிய உண்மைத்தன்மையை அறியும் பணியில் பல ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

1980களின் முற்பகுதியில் ட்ரொட்ஸ்கிச அறிஞரான Pierre Broué மற்றும் Arch Getty ஆகியோர் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள ட்ரொட்ஸ்கிய ஆவணக் காப்பகத்தில் இருந்த ஆவணங்களை சான்றாகக் கொண்டு ‘சோவியத்துக்கு எதிரான ட்ரொட்ஸ்கியின் குழு’ உண்மையில் இருப்பதை நிரூபித்த ஆதாரங்களைக் கண்டுபிடித்தனர். 1930களில் மொஸ்கோ விசாரணைகளில் சோவியத்திற்கு எதிராக இக்குழு செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன. ஆனால் ட்ரொஸ்கியவாதிகள் அவ்வாறானதொரு குழு இருக்கவில்லை என்று வாதிட்டனர். 1991-ம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தில் Gettyஇன் கட்டுரை (Trotsky in Exile: The Founding of the Fourth International,’ Soviet Studies, vol. XXXVIII, no 1, January 1986) வெளியான பிறகும் கூட,பல கோர்பச்சேவ் கால ‘புனர்வாழ்வு’ ஆணைக்குழுக்கள் அத்தகைய ‘குழு’ இல்லை என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தன.

1993-ல் John Costello மற்றும் Oleg Tsarev ஆகியோர், மாஸ்கோ விசாரணையில் மீண்டும் குற்றம் சாட்டப்பட்டபடி, ட்ரொட்ஸ்கி உண்மையில் ‘பயங்கரவாதத்தை’ - ஸ்டாலினின் கொலையை - ஆதரித்தார் என்பதற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்தனர். பார்க்க: John Costello and Oleg Tsarev, *Deadly Illusions*. New York: Crown Publishers, 1993. வரலாற்றாசிரியர் Mark Tauger ‘ஹோலோடோமோர்’ (Olodomor) என்று அழைக்கப்படும் உக்ரேனில் ஏற்படுத்தப்பட்ட பஞ்சம் என்ற பொய்யை நிரூபிப்பதற்கான ஆதாரங்களை வெளியிட்டுள்ளார். பார்க்க: Mark Tauger, Natural Disasters and Human Action in the Soviet Famine of 1931-1933, The Carl Beck Papers in Russian and East European Studies, No 1506, University of Pittsburgh 2001. இதன் பின்னர் உக்ரேனில் ஏற்படுத்தப்பட்ட பஞ்சம் என்ற கதையாடல் என்பது பொய்யானது என்பதை பலர் நிறுவியுள்ளார்கள். திட்டமிட்ட பஞ்சம் என்று தன் முற்கால எழுத்துக்களில் எழுதியதை தவறானது என்றும் அதைத் தான் மீளப்பெற்றுக் கொள்வதாகவும் புகழ்பூத்த பிரித்தானிய வரலாற்றாசிரியரான Robert Conquest தெரிவித்தார். இந்தப் பட்டினி பற்றிய விரிவான தகவல்களைக் கொண்ட நூல் R.W. Davies மற்றும் Stephen Wheatcroft எழுதி 2004ம் ஆண்டு வெளிவந்த The Years of Hunger: Soviet Agriculture 1931-1933. இதே நூலாசிரியரான Stephen Wheatcroft ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரி அல்ல என்றும் அவர் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்றும் ஆதாரங்களோடு வாதிடுகிறார். பார்க்க: Stepen Wheatcroft, ‘From Team-Stalin to Degenerate Tyranny,’ in E.A. Rees (ed.), The Nature of Stalin’s Dictatorship: The Politburo, 1924-1953, New York: Palgrave Macmillan, 2004, 79-107. அதேபோல் ரஷ்ய வரலாற்றாசிரியர் யூரி என். ஜுகோவ் (Yuri Zhukov), சோவியத் ஒன்றியத்தில் வேட்பாளர்கள் போட்டியிடத்தக்க ஜனநாயகத் தேர்தல்களை நடைமுறைப்படுத்த ஸ்டாலின் கடுமையாகப் போராடினார் என்றும், ஆனால் இந்த முயற்சியில் அவர் தோற்கடிக்கப்பட்டார் என்பதையும் ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளார். பார்க்க: Yuri Zhukov. Different Stalin. USSR Political Reforms in 1933-1937. Moscow 2003. யூரி ஜுகோவ்வினுடைய இந்த நூல்தான் க்ருஷ்ச்சொவ்வின் பொய்களை அம்பலப்படுத்திய முதலாவது புத்தகமாகும். இந்தப் புத்தகம் ஸ்டாலின் மீதான அவதூறுகள் என்ற கோணத்தில் ஆராயப்பட்ட நூலாகும்.

மேற்சொன்ன தகவல்கள் க்ருஷ்ச்சொவ்வின் பொய்களை வெவ்வேறு கோணங்களில் நிரூபித்திருந்த போதும் அவரது புகழ்பெற்ற உரையின் உண்மைத் தன்மையை முழுமையான ஆராய்ந்த நூல் என்றவகையில் குரோவர் ஃபர் எழுதியுள்ள ‘பொய்யுரைத்தார் க்ருஷ்ச்சொவ்’ முக்கியமானது. இதன் நிறைவு அத்தியாயம் சில வினாக்களை எழுப்புகிறது. அவற்றில் இரு வினாக்கள் முதன்மையானவை. முதலாவது ஸ்டாலினை ஏன் க்ருஷ்ச்சொவ் தாக்கினார்? இரண்டாவது, க்ருஷ்ச்சொவ்வின் சதிக்குப் பின்னால் உள்ள காரணம் என்ன? இவை இரண்டும் வரலாற்று வெளிச்சத்தில் அதிகம் பேசப்படாத பக்கங்கள். சோவியத் ஒன்றியத்தின் வரலாற்றையும் அரசியலையும் படிக்கும் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய புத்தகம் இது. ஒரு வார்த்தையில், இது வரலாற்று அறிவியலுக்கு ஒரு பெரிய பங்களிப்பு என்றே சொல்லத் தோன்றுகிறது. அதே வேளை வரலாற்றுவரைவியல் தொடர்பான எண்ணற்ற கேள்விகளை இந்தப் புத்தகம் எழுப்புகிறது.



meenilankco@thaiveedu.com

தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com Fax: 1-416-849-0594 Tel: 1-416-857-6406

# போரின் பாதிப்பு இன்றும் தொடரலாம்.

# இலவச உளநல சேவைகள்

தமிழில் (தேவைப்படின் ஆங்கிலத்தில்) நம்பகமான, இலவச, துறைசார் உளநல சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள, Toronto East Psychological Services இனை 416–289–0792 என்ற இலக்கத்தில் அழைத்து உங்கள் விருப்பத்தை பதிவு செய்யுங்கள்.

Dr. Pushpa Kanagaratnam, clinical psychologist, மேற்பார்வையின் கீழ், கார்த்திகை மாதத்தில் இருந்து பங்குனி மாதம் வரை வழங்கப்பட இருக்கும் இந்த சேவைகளை பெற்றுக் கொள்ள, புரட்டாதி மாத இறுதிக்குள் பதிவு செய்யுங்கள். முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சந்திப்புகள் நேரடியாகவோ, கணினி வழியாகவோ வழங்கப்படும்.

உங்கள் செய்தியை பதிவு செய்கையில், விளம்பர அழைப்பு என குறிப்பிடுங்கள். பொருத்தமானவர்கள், ஒரு குறுகிய ஆரம்ப நேர்காணலின் பின், சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

**Dr. Pushpa Kanagaratnam**, Ph.D., C. Psych.
**Clinical Psychologist**
**Toronto East Psychological Services**



Toronto East Psychological Services

2100 Ellesmere Rd, Suite 334, Scarborough, ON M1H3B7
Phone: (416) 289-0792 | Fax: (416) 289-6270

# சிங்களச் சமூகத்தில் சாதிபேதமும் ஒதுக்கலும்

காலிங்க ரியூடர் சில்வா,
பி. கொட்டிகாவத்த,
டி.எம்.- திலங்க,
சண்டிம அபயவிக்கிரம


தமிழில்: க. சண்முகலிங்கம்

**பின்னணி:**

இந்தியாவிலும் இலங்கையிலும் இந்துக்களின் சாதிமுறைமை-யோடு சிங்களவர்களின் சாதிமுறைமையை ஒப்பீடு செய்த எழுத்தாளர்கள் பலர், சிங்களச் சாதிமுறைமை ஒப்பீட்டளவில் இறுக்கமற்றது, நெகிழ்ச்சியானது எனக் கூறியுள்ளனர். இவ்வாறான நெகிழ்ச்சித் தன்மைக்கு சமயம் சார்ந்த காரணம் ஒன்றைக் கூறுவர். பெரும்பான்மைச் சிங்களவர்களின் சமயமான பௌத்தம் சாதி முறையின் தளர்ச்சிக்குக் காரணமாயிற்று என்பர். அத்தோடு சிங்களச் சமூகத்தில் தீண்டாமை பற்றிய தெளிவான வரையறை கிடையாது என்பதும், அடித்தளச் சாதிகள் எனப்படுவோரின் சனத்தொகை விகிதாசாரம் மிகக்குறைவு என்பதும் இன்னொரு காரணமாகும். காலனித்துவத்திற்கு முந்திய காலத்து அரசு (Pre-Colonial State) சாதியை சமயச்சார்பு அற்றதாக ஆக்குவதற்கு (Secularization) உதவியது என்ற கருத்தை ரால்ப் பீரிஸ் கூறியுள்ளார். ஆயினும், காலனித்துவத்திற்கு முந்திய அரசு சாதி முறையை அங்கீகாரம் கொடுத்து ஏற்புடைமை வழங்கியதோடு உற்பத்தி, பரிவர்த்தனை சேவைகள் என்பனவற்றை இயக்குவதற்காக ஒழுங்கமைத்து இயக்கியது. நிர்வாக, ஆட்சித் தேவைகளுக்காகப் பயன்படுத்தியது. இதனாலேயே சாதியின் சமயச்சார்பின்மை (கண்டி) அரசில் சாத்தியமான ஒன்றாயிற்று. பிரித்தானியர் ஆட்சிக்கு முற்பட்ட கால கண்டி அரசில் நிலத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான மனித உழைப்பைப் பயன்படுத்துவதற்கு சாதிமுறை பயன்பட்டது. சாதியுடன் பிணைப்புற்ற இந்த நில உடைமை முறையை எட்மண்ட் லீச் என்ற மானிடவியலாளர் ‘சாதி நில மானியம்’ (Caste Feudalism) என வருணித்தார். நிலப்பிரபுத்துவக் குடும்பங்கள் சேவைச் சாதிகளின் ஊழியத்தைப் பெற்றுவந்தன. இவ்வகையில் சிங்களச் சமூகத்தில் சாதி இருந்துவந்தது. சமூக விரோதச் செயல்கள் என்பனவற்றிற்கான தண்டனையாக சில குடும்பங்களை அவற்றின் சாதிப் படியில் இருந்து கீழ் இறக்கி, தாழ்த்தப்பட்ட சாதியாக ஆக்கும் தண்டனை முறையை கண்டி அரசு செயற்படுத்தியதாலும் தாழ்த்தப்பட்ட சாதிகள் உருவாகின. இத்தண்டனையை ‘ஹட்டற கிரீம’ என்று அழைப்பர். றொபர்ட் நொக்ஸ் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டுரையில் நாம் சிங்களச் சமூகத்தின் சாதிமுறையின் முக்கிய பிரிவுக-ளைக் குறிப்பிடுவதோடு, சாதிப் படிமுறையின் அடி நிலையில் உள்ள சாதிகளின் விசேட இயல்புகளை எடுத்துக் கூறுவோம். ‘அடிநிலைச் சாதிக் குழுக்கள்’ எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும் நாம் குறிப்பிடுவோம். எமது கருத்துக்கள் நாம் நடத்திய இனவரைவியல் ஆய்வின் காண்புகளின் படி அமைந்துள்ளன.

**சிங்களச் சமூகத்தின் சாதி முறையின் இயல்புகள்:**

சிங்களச் சமூகத்தில் 15 வரையான சாதிகள் முக்கியமானவை. இவை ஒவ்வொன்றும் தமது தனித்துவத்தையும், அந்தஸ்து நிலையையும் வெவ்வேறு அளவுகளில் நிலைநிறுத்தியும் வருகின்றன. சாதிகள் உருவாக்கம் பெற்ற முறையில் கண்டிக்கும், தாழ்நிலக் கரையோரப் பகுதிக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. இரு பகுதியினதும் வரலாறு வேறுபட்டதாக இருந்தமை இதற்கான காரணமாகும். சிங்களத் தேசியவாதத்தின் எழுச்சி காரணமாகக் கண்டிக்கும், தாழ்நிலக் கரையோரப் பகுதிக்கும் இடையிலான வேறுபாடுகள் நீங்கி, பொதுவான அடையாள உணர்வும் வளர்ச்சி பெற்றுள்ளது. இரு பகுதியாரிடையும் கலப்பும், இடைத் தொடர்புகளும் அதிகரித்தும் வந்துள்ளன. சிங்களச் சாதிமுறை சுயத்துவமானது. பரவலான இந்தியத் தாக்கத்திற்கு உட்பட்டு வளர்ந்தது.




அதன் உருவாக்கம் தனித்துவமான வரலாற்றுச் சூழல்களில் உருவானது எனக்கூறப்படுகிறது. (பராக்கிரம 1998, றையன் 1993) சிங்களச் சாதி முறையை நால்வருண மாதிரி என்னும் இந்து சாதி

மாதிரி கொண்டு விளக்க முனைதல் உண்மை நிலையைத் திரிபு-படுத்திக் கூறுவதாக இருக்கும் (கன்னங்கர 1993). சில சாதிகள் குடியேறிய மக்கள் குழுக்களால் உருவானவை என்பது உண் மையே. இதைக் கொண்டு முழுச் சாதிமுறையினையும் இறக்கு மதி செய்யப்பட்ட ஒன்று எனக் கூறமுடியாது. சிங்களச் சமூகத்தில் தனித்துவம் உடைய எத்தனை சாதிகள் உள்ளன என்பது பற்றி யும், அச்சாதிகள் ஒவ்வொன்றினதும் சனத்தொகைப் பலம் யாது என்பது பற்றியும் கருத்துவேறுபாடுகள் உள்ளன. இலங்கையில் சாதியடிப்படையிலான சனத்தொகைக் கணக்கெடுப்பு எதுவும் நடை பெறாமையால் இன்று சாதிகளின் சனத்தொகையைக் குத்து மதிப்பாகவே கணக்கிடமுடியும். அன்றாடத் தொடர்பாடல், உரை யாடல்களில் எவரும் தாம் இன்ன சாதியைச் சேர்ந்தவர் என்ப தைக் குறிப்பிடுவதில்லை. அவ்வாறு குறிப்பிடுதல் மிக அருமை யான நிகழ்வாகவே இருக்கும். சாதி என்ற விடயம் பற்றிய பேச்சு நெருங்கிய உறவுடையவர்களிடையே தனிப்பட்ட உரையாடல்க ளில் மட்டுமே இடம்பெறும். தனிப்பட்ட சச்சரவுகளின் போதும் ஆட்களின் சாதியைக் குறிப்பிட்டு வசையாக ஏசுதல் வழமையாக இடம்பெறும். அரசியல் பிரசார மேடைகளில் ஒரு பிரிவினரை இன் னொரு பிரிவினர் எதிர்த்துப் பிரசாரம் செய்யும் போதும் சாதி பேசு பொருளாக இருப்பதுண்டு.

மரபு வழிப்பட்ட கிராமிய வாழ்க்கையில் ஒவ்வொருவரும் என்ன சாதியைச் சேர்ந்தவர் என்பது கிராமத்தவர் யாவருக்கும் தெரிந்த விடயமாக இருக்கும். கிராமங்களில் கூட சாதிப் பெயர்கள் பகி ரங்கமாகக் கூறப்படுவதில்லை. பொதுவாக 'எங்களுடைய ஆள்' (அப்பே எக்கனக்), 'வெளியாள்' (பிட்டமினிகெக், பிட்டமினிக) ஆகிய சொற்களால் சாதியடையாளம் குறிப்பிடப்படுவதுண்டு. இளம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமணம் செய்து வைப் பதற்கான பேச்சின்போது சாதி முக்கிய விடயமாக இருக்கும். ஓர் ஆணும் பெண்ணும் காதலிக்கத் தொடங்குமுன்னரும் சாதிப் பொருத்தம் உள்ளதா என்பதைப் பார்த்துக் கொள்வர். சிங்களச் சமூகத்தில் கலப்பு மணங்கள் ஆங்காங்கே இடம்பெறுவதுண்டு. ஆயினும், பெரும்பாலானோர் இயன்றளவுக்குச் சாதிக் கலப்பைத் தவிர்த்தே வருகின்றனர். பொது வாழ்வில் ஈடுபடும் நபர்களின் சாதி அடையாளம் யாவரும் அறிந்த ஒன்றாகவே இருக்கும். பொது வாழ்வில் உள்ள ஒருவரின் சாதியினைச் சேர்ந்தோர், அவ ரின் சாதி அடையாளத்தைப் பயன்படுத்தி தமக்கு நன்மைகளை யும், சலுகைகளையும் தேடிக்கொள்வது வழமையாகும். சாதிக ளும், அரசியல் கட்சிகளும் தேர்தல்களின் போது சாதி உணர்வுக ளைத் தூண்டி வாக்குச் சேகரித்தலும் வழமையான ஒன்றாகும் (ஜிஜின்ஸ் 1979).

சமூக வாழ்க்கையில் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் மக் களிடையே உள்ள சாதி அந்தஸ்து வேறுபாடுகள் குறித்துப் பேசு தல் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையாகவே அமையும். முன் பின் அறிமுகம் இல்லாத ஒருவரின் பெயரைக் கொண்டே அவர் என்ன சாதியைச் சேர்ந்தவர் என்பதை அறிந்துகொள்ளுதல் (ஏறக் குறைய நாற்பது, ஐம்பது வருடங்களுக்கு முன்) சாத்தியமானதாக இருந்தது. இப்போது இருபது முப்பது வருடங்களாக மக்கள் அடிக்கடி தம் பெயர்களை மாற்றிக் கொண்டு வருவதால் பெயர் கள் மூலம் சாதி அடையாளத்தை அறிந்து கொள்ளுதல் இயலாத விடயமாகும். மதிப்புக்குரியதாகவும் ஆதிக்கசாதியினரின் பெயர்க ளாகவும் கருதப்பட்டவற்றை சாதிப்படியில் 'தாழ்த்தப்பட்டநிலை யில்' இருப்போர் வைத்துக் கொள்வதன் மூலம் தம் சாதியடை யாளத்தை மறைத்து வருகின்றனர் (சில்வா 2005, 2006). சாதி அடிப்படையிலான தொழில்கள் மறைந்து வருகின்றன. இளைஞர் கள் தம் பரம்பரைச் சாதித் தொழிலை செய்வதற்கு விரும்பாமல் இருப்பதே இதற்கான காரணமாகும். ஆயினும், நிலமானிய வழ மைகளின்படி சாதிகளினால் கிடைத்த சலுகைகளைப் பேணுதல், சாதியக் கருத்துக்கள் என்பன இன்னும் நீடித்து வருகின்றன. ஒரு பகுதியினர் பரம்பரை வழியிலான பாதகமான தாக்கங்களுக்கு உள்ளாவதும் இன்றும் தொடர்கிறது. இவ்விடயம் குறித்தும் அவ் வித பேதங்கள் எத்தகைய இனவரைவியல் சூழ்நிலைகளில் (Ethnographic Situations) இடம்பெறுகின்றன என்பது குறித்தும் இக்கட்டுரையில் பின்னர் எடுத்துக் கூறுவோம்.

கொவிகம சாதி, சனத்தொகையில் பிற யாவற்றிலும் கூடிய எண் ணிக்கையுடைய பெரிய சாதியாகும். சாதி அந்தஸ்திலும் இச்சாதி முதன் நிலையை வகிக்கின்றது (பார்க்க அட்டவணை 1.1). கொவி கம சாதியின் உயர் நிலையில் உள்ள 'ரதல' உபசாதி செல் வாக்கு மிக ஆதிக்கசாதிக் குடும்பங்களைக் கொண்ட சிறிய குழு வாக உள்ளது. இவர்களின் செல்வாக்கும் அந்தஸ்தும் பின்வரும் நான்கு விடயங்களால் கட்டிக் காக்கப்படுகிறது.

- திருமண உறவுகள் ஊடாக ரதல குடும்பங்களின் கூட்டும் பிணைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளமை.
- பரம்பரை உரிமையாக காணிகளின் மீது உள்ள நில உடைமை ஆதிக்கம்.
- அரச சேவை, வர்த்தகம், தொழில்துறைகளில் வகிக்கும் உத்தி-யோக நிர்வாகப் பதவிகள்.
- தலதாமாளிகை போன்ற சமய நிறுவனங்கள் மீது வைத்திருக் கும் கட்டுப்பாடும் சடங்கியல் அதிகாரமும்.

சாதிப் படிநிலைகளின் கீழ்நிலைகளை நோக்கிச் செல்லும்போது சாதி அந்தஸ்தும் குறைந்து செல்கிறது. ஆயினும், சாதிகளி டையே எந்தச் சாதி உயர்ந்தது அல்லது தாழ்ந்தது என்ற சர்ச் சைகள் உள்ளன. 15 சாதிகளில் ஒவ்வொரு சாதிக்கும் தெளிவான அடையாளப் பெயர்கள் உள்ளன. சில பெயர்கள் மதிப்புடைய பெயர்கள் வேறு சில மதிப்புக் குறைந்தவை. உதாரணமாக மேளம் அடிக்கும் சாதிக்கு 'நகடி', 'பெரவ' என்ற இரு பெயர்கள் உள்ளன. இவற்றுள் 'நகடி' மதிப்புடைய பெயர். 'பெரவ' என்ற பெயர் மதிப்புக் குறைந்த பெயர். சாதிகளின் சனத்தொகை பற் றித் திட்டவட்டமான நம்பகமான தகவல்கள் இல்லை. கொவிகம சாதி மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய 50 வீதம் ஆக உள் ளது. பத்கம, வகும்புர என்ற இரண்டும் அடுத்த நிலையில் கணிச மான சனத்தொகை உடையனவாக உள்ளன. இக்காரணத்தால் இச்சாதிகள் இரண்டும் பலம் பொருந்திய சாதிகளாக இருக்கின் றன. கொவிகம சாதி அதிகாரமும், மதிப்பும் மிக்கதாக இருந்து வந்தது. இச்சமூக அந்தஸ்து அச்சாதியால் மரபுவழியில் பெறப் பட்டதாக இருந்தது. குறிப்பாக கொவிகம சாதியின் உபபிரிவான 'ரதல' செல்வாக்கு மிக்க ஒரு பிரிவினராவர். ஏனைய சாதிகள் யாவும் இந்த ஆதிக்க சாதிக் குழுவிற்கு ஒத்து ஊதுவனவாகவும், அவர்களின் ஆதிக்கப்பிடியில் வைத்து ஆட்டப்படுவனவாகவுமே இருந்தன. ஆயினும், காலனித்துவ ஆட்சிக் காலத்தில் நிலைமை யில் மாற்றம் ஏற்பட்டது. கொவிகம சாதியினர் இன்றும் அதிகாரத் தையும், செல்வாக்கையும் உடையவர்களாய் உள்ளனர். சிறிய சாதிகளாயினும் செயலூக்கம் மிக்கனவான சில சாதிகள் கல்வி, வர்த்தகம், தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட புதிய வாய்ப்புக்க ளைக் காலனித்துவ ஆட்சியின் போது பயன்படுத்தி முன்னேற்றம் அடைந்தன.

சிங்களச் சமூகத்தின் சாதிகளை நான்கு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

- கொவிகம
- கரையோரத் தாழ்நிலப்பகுதியின் சாதிகள்
- சேவைச் சாதிகள்
- அடிநிலைச் சாதிகள்

சிங்களச் சாதிமுறைத் தொழில் சிறப்புத் தேர்ச்சியின் (Labour Specialisation) திறன்மிக்க வடிவமாக இருந்தது என விக்கிரம சேகர (1961) அதன் இயல்பை எடுத்துக்காட்டினார். ஒரு சாதி, படிநிலைக் கட்டமைப்பின் எந்த நிலையில் உள்ளதோ, அதன்படி அரசுக்கும், உயர்நிலையில் உள்ள சாதிகளுக்கும், குறித்த சாதி வழங்க வேண்டிய சேவைகள் எவையென வகுத்துரைக்கப்பட்டிருக் கும். அச்சேவைக் கடப்பாடுகள் குறிப்பிட்ட வகைச் சடங்கியல் அம்சத்தையும் குறிப்பிட்டவகைப் பொருளாதார நடவடிக்கைகளை யும் உள்ளடக்கியதாக இருக்கும். கொவிகமவும் அதன் உபபிரிவு களும் சாதிப் படிநிலையின் உயர்நிலையில் இருந்தன. பெரும்

பான்மைச் சாதியாகவும் இவை விளங்கின. நிர்வாகப் பதவிகளும், சடங்கியல் தன்மையுடைய பதவிகளும் கொவிகம சாதியினரின் ஏகபோக உரிமையாக இருந்தன. பயிர்ச்செய்கை நிலத்தின் பெரும்பகுதி இச்சாதியினரின் உடைமையாக இருந்தது. சாதி முறைமையின் சலுகைகளை ஏறக்குறைய முழுமையாக இச்சாதியினர் அனுபவித்தனர். கௌரவப் பதவிகள், ஏனைய சாதிகளின் சேவைகளைப் பெறுதல், நிலத்தின் உடைமை காரணமாகக் கிடைக்கும் பொருளாதார நன்மைகள் என்பனவற்றை கொவிகம சாதி பெற்று அனுபவித்தது.

கரையோரத் தாழ்நிலச் சாதிகள் கரையோரம் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளான மீன்பிடி, சுண்ணக்கல் அகழ்வு போன்ற தொழில்களில் ஈடுபட்டன. தம்மிலும் சாதிப்படியில் உயர்நிலையில் இருந்தோர்களுக்குச் சேவைக் கடமைகளை ஆற்றும் கடப்பாடு இச்சாதிகளைச் சேர்ந்தோருக்கு இருக்கவில்லை. ஆதலால் தாம் ஒப்பீட்டளவில் சுதந்திரமானவர்கள் என்பதை உணர்ந்தனர். மீன்பிடி, கறுவாப்பட்டை உரித்தல், சாராயம் வடித்தல், சுண்ணக்கல் அகழ்வு போன்ற தொழில்களை இச்சாதியினர் செய்து வந்தனர். அவர்களது தொழில் நடவடிக்கைகள் சந்தையோடு தொடர்புடையனவாய் பணவருவாயைத் தருவனவாக அமைந்தன. கரையோரச் சாதிகளில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவத்திற்கு மாறினரேனும் அவர்களிடம் சாதியின் பிடி தளர்ந்தது எனக் கூறமுடியாது (Stirrat 1982).

சேவைச் சாதிகள் பரம்பரை வழியில் தமக்கு மேலானவர்களான சாதிகளுக்குச் சாதிச் சேவைகளை வழங்கும் கடப்பாட்டைக் கொண்டிருந்தனர். இவர்களின் சேவைகளுக்கான கூலி பண்டங்களாக வழங்கப்பட்டது. சேவைச் சாதிகளில் சில, காணிகளில் பயிரிடும் உரிமையைப் பெற்றிருந்தன. கபடாகம (அரசனின் கிராமங்கள்) விகாரகம கிராமங்கள் (கோவிற் காணிகள்), தேவாலகம் (கத்தறகம தெய்யோ முதலிய கடவுளரின் தேவாலயங்களின் கிராமங்கள்), கோறளேகம் (பிரதானிகளின் கிராமங்கள்) என்ற நான்கு வகைக் கிராமங்களின் காணிகளைப் பயிரிடும் உரிமையைச் சேவைச் சாதிகள் பெற்றிருந்தன. ஒவ்வொரு சாதியும் வழங்க வேண்டிய சேவையோடு தொடர்புபட்டதாய் பயிரிடும் உரிமை அமைந்தது.

பத்கம, வகும்புர என்ற இரு சாதிகளும் சனத்தொகையடிப்படையில் நோக்கும்போது பெரிய சாதிகளாகும். இச்சாதியினர், பாதிப்புக்கு உட்பட்ட சாதிப் பிரிவினர்களாய் நாட்டின் உள்ளூர்ப் பகுதிகளில் வாழ்கின்றனர். மத்திய, சப்பிரகமுவ மாகாணங்களில் இச்சாதியினர் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர்.

- காணியற்றவர்களாய் இருத்தல்
- வறுமையால் பீடிக்கப்பட்டோராக இருத்தல்
- இளைஞர் வேலைவாய்ப்பற்றவர்களாய் இருத்தல்
- சட்டம் ஒழுங்குக்குக் கட்டுப்படாதவர்களாய் வன்முறையில் ஈடுபடுதல்

ஆகிய இயல்புகள் இவர்களிடம் இருப்பதைப் பல ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன (ஜிஜின்ஸ் 1979, முவர் மற்றும் பெரரா 1978. பெரரா 1985). வரலாற்று ரீதியாக இச்சாதிகள் பொருளாதார நிலையில் தங்கியிருப்போராகவும் இருந்து வந்துள்ளனர். இதனால் நில உடைமையாளர்களான கொய்கமவிற்கு மரியாதையுடன் நடந்து கொள்வர். வகும்புர, கொய்கமக் குடும்பங்களின் வீட்டுப் பணியாளர்களாகவும், பத்கம அல்லது பதுசாதியினர் விவசாய வேலைகளைச் செய்வோராகவும் இருந்து வருகின்றனர்.

சேவைச் சாதிகள் மத்தியில் வறுமை தற்போது ஒரு பிரச்சினையாக உள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. மரபு வழிமுறையில் இச்சேவைகளை வழங்குவோருக்கு எஜமானர்களின் பொருளாதார உதவி கிடைத்தது. இது இப்போது செயற்பாடு இழந்த வழமையாகி விட்டது. சேவைச் சாதிகளிற்கு நிலத்தின் உரிமையில் கட்டுப்பாடு இருந்து வந்தது. மரபு வழியாக காணிகளின் பயிரிடும் உரிமையைப் பிரயோகிப்பதில் சிக்கல்கள் தோன்றின. 1940களின் பின்னர் தொற்றுநோய்த் தடுப்பு வேலைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. இதனால் சுகாதாரச் சேவைகள் மேம்பட்டன. இதன் பயனாக முன்னேற்றம் ஏற்பட்டதால் சேவைச் சாதிகளின் சனத்தொகை விரைவாக அதிகரித்தது.

அடிநிலைச் சாதிகள் என்போர் சாதிமுறையின் கீழ்ப்படியில் உள்ளோர் ஆவர். இச்சாதிகள் இந்து சாதிமுறையின் தலித்துகள் அல்லது 'தீண்டப்படாதோர்' என்பவர்களுக்கு ஒத்த நிலையில் உள்ளவை. சிங்களச் சாதிமுறைக்கு வெளியே உள்ளவர்களாகவும் இவர்கள் கருதப்படுகின்றனர். இவர்கள் பிச்சை எடுத்தல், மரண தண்டனையை நிறைவேற்றும் வேலை போன்றவற்றில் ஈடுபட்டு பிழைப்பைத் தேடுபவர்களாகவும் இருக்கின்றனர். மேற்படியில் உள்ள சாதிகள் இவர்களோடு தொடர்புகளைத் தவிர்க்கின்றனர். இச்சாதிகள் தூய்மையற்ற சாதிகள் எனவும் கருதப்படுகின்றன. றொடியா என்னும் அடிநிலைச் சாதி 'றொட்டு' (அழுக்கு) என்பதன் தொடர்புடையதாக உள்ளது. 'றொட்டு' என்றால் 'அழுக்கு' என்பது பொருள். இவ்வாறே மரண தண்டனையை நிறைவேற்றும் தொழிலைச் செய்வோரான சாதிகள் 'இரத்தக்கறை' உடையவர்கள், துடக்கு உடையவர்கள் எனக் கருதப்படுவர்.

சிங்களச் சாதிமுறையில் துடக்கு பௌதிக ரீதியானது. உடலியல் பதார்த்தங்கள் ஊடாக எழும் துடக்கும், சடங்கியல் துடக்கும் சிங்களச் சாதிமுறையில் முக்கியத்துவம் பெறவில்லை. இதனால் ஒருவருக்கு பௌதிக ரீதியாக ஏற்படும் துடக்கு நிரந்தரத் துடக்காகக் கருதப்படுவதில்லை. ஆதிக்கசாதிகள் மேற்சொன்ன அடிநிலைச் சாதிகளுடன் தொடர்பை வைத்துக் கொள்ளாமல் விடுவதற்குரிய காரணம் தீண்டாமை என்ற காரணத்தால் அன்று. இச்சாதிகள் மந்திரம், பில்லி, சூனியம் போன்றவற்றில் ஈடுபடுபவர்கள். குறிப்பாக றொடியா இவற்றில் கைதேர்ந்தவர்கள். இவற்றின் பாதக விளைவுகளைத் தவிர்ப்பதற்கே ஆதிக்கசாதிகள் இவர்களை விலக்கி வைக்கின்றார்கள். அடிநிலைச் சாதிகள் 'காட்டு மனிதர்கள்', 'நாகரீகம் அடையாதவர்கள்' என்றும் கருதப்படுவர். இவர்கள் ஆதிவாசி இனக் குழுக்களின் (Tribals) சந்ததியினர். இதனால் இவர்கள் எப்போது என்ன செய்வார்கள் என்று கூறமுடியாது. எதிர்வு கூறமுடியாத நடத்தையுடைய இவர்கள் வன்முறைத் தாக்குதலைச் செய்யக்கூடியவர்கள். இவர்களைச் சமூகவாழ்வில் ஒதுக்கி வைப்பதே நல்லது எனவும் கருதப்படும் (பார்க்க றொபர்ட் நொக்ஸ் 1911, டென்காம் 1912). அத்தோடு இம்மூன்று குழுக்களும் ஒன்றுசேர்ந்து சிங்களச் சமூகத்தின் சனத்தொகையின் 1 வீதம் ஆகவே உள்ளனர். சனத்தொகை அடிப்படையிலான இந்தச் சாதகமற்ற நிலையும் கிராமச் சமுதாயத்தில் இருந்து விலகி காடுகளிற்கு அருகிலும், சவக்காலை போன்ற இடங்களுக்கு அருகிலும் வாழ்விடங்களை அமைத்து வாழ்வதற்குத் தூண்டியுள்ளது.

ஒப்புநோக்கில் இச்சாதிகளை இந்தியாவின் 'தலித்துகளுக்கு' ஒப்பானவர்களாகக் கூறலாம். ஆயினும் இச்சாதியினர் தம்மைத் தலித்துகள் என அடையாளப்படுத்த விரும்புவதில்லை. இச்சாதிகள் யாவற்றையும் ஒருங்கு சேர்த்துச் சிங்களச் சாதிமுறைக்கு வெளியே உள்ள புறச்சாதிகள் (Out Castes) என்ற பெயரிட்டு அழைத்தாலும், அவற்றின் சனத்தொகை மிகக் குறைந்த வீதமாகவே உள்ளது. இதனைவிட சேவைச் சாதிகள் என நாம் வகைப்படுத்திய சாதிகளும் பல பாதகமான நிலைமைகளுக்கு உள்ளாவதையும், அச்சாதிகளும் சாதிமுறையின் பாரபட்சமான நடைமுறைகளினால் பாதிப்புற்றவர்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

அடுத்து வரும் பகுதியில் நாம் சேவைச் சாதிகள் அல்லது புறச்சாதிகள் எனக் கருதப்படக்கூடிய சாதிகள் வாழும் கிராமங்களில் நடத்திய இனவரைவியல் மதிப்பீட்டு முடிவுகள் பற்றிக் குறிப்பிடுவோம்.

| அட்டவணை 1.1 | | | |
|---|---|---|---|
| சிங்கள சமூகத்தின் சாதிக் கட்டமைப்பு | | | |
| தர வரிசை | சாதியின் பெயர் | தொழில் | சனத் தொகை வீதாசாரம் |
| 1.1.2.3. | கொவிகம ரதல கொவிகமபட்டி | ஆதிக்ககுலம் சுதந்திரமான விவசாயிகள் மந்தை மேய்ப்பு | |
| 2. | கராவ | மீன்பிடி | |
| 3. | சலாகம | கறுவாப்பட்டை உரித்தல் | |
| 4. | துராவ | சாராயம் வடித்தல் | |
| 5. | ஹுனு | சுண்ணக்கல் அகழ்வு | |
| 6. | ஆசாரி / கல்லாது நவண்டன | தச்சுவேலை இரும்பு வேலை | |
| 7. | ஹேன / ரத | சலவைத் தொழில் | |
| 8. | வகும்புர / ஹக்குறு | கருப்பட்டி காய்ச்சுதல் | |
| 9. | கும்பல் /பத்தல | குயவர் தொழில் | |
| 10. | துர வெல்லதுறய் / போதி பன்னதுறய் | போதி மரத்தை காவல் செய்தல். அரண்மனையின் மந்தை மேய்போர் / யானைப்பாகன் | |
| 11. | நகடி / பெறவ | மேளமடித்தல் / நடனமாடுதல் | |
| 12. | பத்கம / பது | வேலைக்காரர் / பொருட்களைச் சுமப்போர் | |
| 13. | ஹகல | மரண வீட்டு வேலை / மரண தண்டனை நிறைவேற்றுதல் வேலை. | |
| 14. | கின்னர | பாய்முடைதல் | |
| 15. | றொடி | பிச்சை எடுத்தல் / கூட்டுத்தடி செய்தல் | |

பிறர் என்ற வகையில் புவியியல் ரீதியாகச் சிதறியிருக்கும் பொற வக்கார ஒலி, பலி, ஹின்ன, அம்பட்டர், தெமல ஹட்டார போன்ற சிங்களச் சாதிகள் அடங்கும் தரவரிசை சர்சைக்குரியது.

இவ்வட்டவணை ஜிஜின்ஸ் (1979), றையன் (1993), பீரிஸ் (2001), சில்வா (2002) ஆகியோரின் ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

**வெலிவிற்ற : நகடி / பெரவ சாதியினர் பெரும்பான்மை யாக வாழும் கிராமம்**

மேளமடிக்கும் சாதி, நகடி / பெரவ என அழைக்கப்படும். இச்சாதியினர் பெரும்பான்மையாக வாழும் வெலிவிற்ற, கண்டிய நிலமானிய முறைமையின் மையப் பகுதியில் அமைந்த கிராமமாகும். இக்கிராமம் மலைகளால் சூழப்பட்ட பள்ளத்தாக்கில், கண்டிநகரில் இருந்து தென்கிழக்காக பத்து மைல் தொலைவில் உள்ளது. கண்டி இராச்சியத்தின் தலைநகராக இருந்த கண்டி 1815க்கு முந்திய காலத்தில் அப்பகுதியின் அரசியல் சமூக உறவுகளில் முக்கிய பங்கை ஏற்றிருந்தது. வெலிவிற்றவும் அதன் அருகே உள்ள சில கிராமங்களும் 'கபடாகம' என்ற வகைக் கிராமங்களாகும். அரசனின் கிராமங்கள் (கபடாகம) ஆகிய இக்கிராமங்களின் நிலங்களின் விவசாய உற்பத்தியின் மேன்மிகை அரண்மனைக்குக் கொடுக்கப்பட்டது. இந்நிலங்களில் பயிரிடும் உரிமை பெற்றிருந்தோர் அரசினிற்குரிய சேவைகளையும் வழங்கினர். நிலங்களில் பயிரிடும் உரிமையை உடையோர் தம் சாதிச் சேவைகளை வழங்கும் முறை (Service Tenure System) இக்கிராமங்களில் நடைமுறையில் இருந்தது. 1815ல் கண்டியைப் பிரித்தானியர் கைப்பற்றிய பின்னர் சாதிச் சேவை வழங்கும் முறையான 'ராஜகாரிய' 1832ல் நீக்கப்பட்டது. அதன் பின்னர் குறிப்பிட்டதொரு நிலமானிய அதிகார பீடத்திற்குச் சேவையை வழங்கும் கடப்பாடு வெலிவிற்ற கிராமத்தவர்களுக்கு இல்லாது போயிற்று. காலனிய ஆட்சியின் கீழ் ஏற்பட்ட இந்த மாற்றம் நிலமானியத்தை முற்றாக ஒழித்தது

| அட்டவணை 1.2 | | | |
|---|---|---|---|
| வழங்கும் சேவைகள், அந்தஸ்து என்பனவற்றின் அடிப்படையில் சிங்களச் சாதிகளின் வகைப்பாடு | | | |
| சாதிப் பெயர் | சேவைகள் | | |
| | ராஜகாரிய / பத்தல் | சடங்கு | தொழில்கள் |
| வகை 1 | | | |
| கொவிகம 1. ரதல் 2. கொவிகம 3. பட்டி | ஆதிக்க சாதியினர் | உத்தியோகம்: துறவிகள், | நில உடை-மையாளர், விவசாயிகள், மந்தை மேய்ப்போர் |
| வகை 2 | | | |
| கராவ | மகாபத்த பொருட்களைக் கொண்டு செல்லுதல் / ஏற்றியிறக்கல், | | மீன்பிடி |
| சலாகம | மகாபத்த | | கறுவாப்பட்டை வேலை |
| துராவ | | சாராயம் வடித்தல் | |
| ஹுனு | ஹுனுபத்த | | சுண்ணாம்புக்கல் வேலை |
| வகை 3 | | | |
| ஆசாரி கல்லாது நவண்டன | கொட்டல்பத்த | | இரும்பு, பொன், செம்பு, பித்தளை, தந்தம், மரவேலை |
| ஹேன / ரத | ரதபத்த | பூப்புச் சடங்கு, திருமணம், மரணச் சடங்கு | சலவைத் தொழில் |
| வகும்புற / கக்குறு | | திருமணம் | இனிப்பு வகைகள், கருப்பட்டி காய்ச்சுதல் |
| கும்பல் / பதகல | பத்கல பத்த | மண்விளக்குகள் கொடுத்தல் | மட்பாண்ட வேலை |
| துற வெல்ல துறய் / போதி பன்ன துறய் | குறுவே பத்த | போதி மரத்தைக் காவல் காத்தல் | யானை பிடித்தல், பாகன் வேலை |
| நகடி / பெறவ | பெறவ பத்த | கோவிலில் மேள மடித்தல் / பேயோட்டும் சடங்கு | சோதிடம், மேளமடித்தல் |
| வகை 4 | | | |
| ஹகல | மரண தண்டனையை நிறைவேற்றுபவர் | | மரணவீட்டில் மேளமடித்தல் |
| கின்னர | கின்னரபத்த | | |
| ரொடி | | மந்திரம், வசியம் | பிச்சையெடுத்தல் தும்புத்தடி மேளம்செய்தல், தோல் தொழில் |

என்று கூறமுடியாது. பதிலாக அரைகுறை நிலமானிய (Semi - feudal) முறையான மறுசீரமைப்பு அங்கு நிகழ்ந்தது. குறிப்பாகக் கிராமத்தின் பயிர்ச்செய்கை நிலங்கள் ஒரு சில ஆதிக்கசாதிக் குடும்பங்களின் உடைமையாக ஆயின. இவ்வுயர் சாதிக்குடும்பங் கள் தமது ஆதிக்க சாதிப் பகட்டுக்களைக் காண்பிக்கும் முறை யில் அக்கிராமத்தின் சேவைச் சாதிகளைத் தம் கீழ் வைத்திருந்த னர். (பார்க்க சில்வா 1986, 1992).

வெலிவிற்றவின் சாதிக் கட்டமைப்பை உற்று நோக்கினால் அதன் நிலமானியப் பின்னணி தெளிவாகப் புலப்படும்.

அட்டவணை 1.3 இன் பிரகாரம் பட்டி (கொவிகம உபபிரிவு) சாதிக்குக் கீழே தரப்பட்ட மூன்று சாதிகளும் சேவைச் சாதிகளா கும். இவை ஆதிக்க சாதியினருக்குச் சேவைக் கடமைகளைச் செய்வனவாய் இருந்தன. வெலிவிற்றவில் சாதி வேற்றுமைகள் முக் கியத்துவம் உடையன. பட்டி என்னும் உபசாதி கொய்கம சாதிக் குள் கீழ்நிலையில் உள்ளவர்களாய் இருந்துள்ளனர். மந்தை மேய்த்தல் இச்சாதியினர் மரபு வழித்தொழிலாகும். ஆயினும் வெலிவிற்றவின் பட்டி சாதியினர் எக்காலத்திலாவது மந்தை மேய்த்தல் தொழிலைச் செய்தார்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை.

| அட்டவணை 1.3 | | | | | |
|---|---|---|---|---|---|
| வெலிவிற்றவின் சாதிக் கட்டமைப்பு - 1979 | | | | | |
| சாதியின் பெயரும் சேவைத் தொழிலும் | நெல் விவசாயத்துடன் உள்ள தொடர்பு | குடும்பங்களின் எண்ணிக்கை | வீதாசாரம் | மக்கள் தொகை | வீதாசாரம் |
| பட்டி (உத்தி-யோகத்தர்கள்) | நில உடைமையாளர் / சொந்த நிலத்தில் விவசாயம் செய்பவர் | 14 | 7.0 | 82 | 6.7 |
| நவண்டன (தச்சர், கொல்லர் வேலை) | சொந்த நிலத்தில் விவசாயம் செய்பவர் | 3 | 1.5 | 22 | 1.8 |
| ஹேன (சலவைத் தொழில்) | சொந்த நிலத்தில் விவசாயம் செய்பவர் | 18 | 9.0 | 94 | 7.7 |
| பிறர் | | 4 | 2.0 | 21 | 1.7 |
| மொத்தம் | | 200 | 100.0 | 1228 | 100.0 |

முற்காலத்தில் அரசனின் கிராமமாக இருந்த இக்கிராமத்தின் பட் டிச் சாதியினர் நிர்வாக உத்தியோகப் பணிகளைச் செய்தார்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இச்சேவைக் கிராமத்தை வெளி யில் இருந்து தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அதிகாரக் குழு வின் கீழ் பட்டிச் சாதியினர் நிர்வாக உத்தியோகப் பதவிகளை வகித்தனர். பட்டி உயர்குழு வெலி விற்றவின் சாதிக் கட்டமைப் பின் உயர்படி நிலையில் இருந்தது. அதற்கு அடுத்த நிலையில் நவண்டன, ஹேன என்ற இரு இடைத்தரச் சாதிகள் இருந்தன. இவ்விரு சாதியினரும் கிராமத்தின் படித்தர அமைப்பில் தமக்கு உரிய நிலையின்படி மேலே உள்ளவர்களுக்கு விவசாயம், சேவைத் தொழில்கள் என்பனவற்றில் கடப்பாடுகளைக் கொண்டி ருந்தனர்.

பெரவ(நகடி), சாதிப் படிநிலையின் கடைசிப் படியில் இருந்தனர். கண்டி நகரில் நடைபெறும் பல்வேறு சடங்குகளில் (மேளமடித் தல், நடனம் ஆடுதல்) ஆகிய சேவைக் கடமைகளைச் செய்வது பெரவ சாதியின் கடப்பாடு ஆகும். பள்ளத்தாக்கில் உள்ள வெலி விற்ற கிராமம் அருகே உள்ள கண்டியின் சேவைக் கிராமமாக விளங்கியதோடு, அதன் வரலாற்று ரீதியான சேவைக்கடமையினை யும் நிறைவேற்றி வந்தது. குத்தகை விவசாயிகள் என்பதே நெல் வேளாண்மையில் பெரவ சாதியின் மரபு வழி வகிபாகம் ஆகும். பரம்பரை பரம்பரையாக வரும் இவ்விடயம் எமது இனவரைவியில் மதிப்பீடு நடைபெற்ற வேளையிலும் நில உடைமை முறையில் சில மாற்றங்களுடன் தொடர்ந்து கொண்டிருந்தது. இது உணர்த்து வது யாதெனில் வெலிவிற்றவில் சாதி ஒரு குறியீட்டு வடிவிலான அம்சம் மட்டுமன்று. அது நிலமானியக் காலம் முதல் வளர்ச்சி பெற்ற பொருளாதார அரசியல் கட்டமைப்புகளுடன் தொடர்புபட்ட விடயமும் என்பதாகும். 1979ல் வெலிவிற்றவில் கரையோர நாட் டைச் சேர்ந்த நான்கு குடும்பங்கள் குடியேறி இருந்து வந்ததை யும் மதிப்பீட்டின் போது காணமுடிந்தது. இக்குடும்பங்களின் சாதி பற்றிய விபரம் தெளிவற்றதாக இருந்தது.

இக்கிராமத்தில் வெவ்வேறு குறிச்சிகள் இருந்தன. ஒவ்வொரு குறிச்சியிலும் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த குடும்பங்களின் குடியிருப்புகள் ஒரு தொகுதியாக இருக்கும். பட்டி உபசாதியின் வீடுகள் வீட்டுத் தோட்டங்களின் மத்தியில், கிராமத்தின் மத்திய பகுதியில் இருந்தன. அவர்கள் வாழும் பகுதிக்கு அதன் அந் தஸ்தை வெளிப்படுத்தும் தனித்துவமான பெயர் இருந்தது. கிரா மத்தின் நெல்வயல்களும் பல கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந் தன. உதாரணமாக பெரவ சாதியினரின் கண்டம் 'பெரக்கறகெ தறே' (மேளமடிப்பவர் வீட்டு) என்று ஆரம்பிப்பதாக இருக்கும். பட்டி உபசாதியினர் பெயர்கள் அவர்களது பரம்பரையில் வாழ்ந்த மதிப்புக்குரிய ஒருவரின் பெயருடன் ஆரம்பிக்கும் (உதாரணம் 'ராஜபக்ச வாசல முதியான்சலாகே'). சாதிகளின் பரம்பரைத் தொழிலோடு விவசாயத்திலும் சேவைச் சாதியினர் ஈடுபடுவர். விவ சாயம் செய்யும் சேவைச் சாதியினரில் சொந்த நிலத்தில் பயிரிடு பவர், குத்தகைக்குப் பயிர்செய்பவர் என இரு வகையினர் உள்ள னர். வெலிவிற்றவின் பெரவ சாதியினரில் பெரும்பாலானோர் பட்டி உபசாதியினரின் காணிகளில் குத்தகை விவசாயிகளாகவே பரம் பரை பரம்பரையாக இருந்துள்ளனர். (பட்டி, 'ரட்ட அத்தோ' என வும் அழைக்கப்பட்டனர்). இப்பகுதியின் நெற்காணிகளின் பெரும் பங்கின் உடைமையாளர்களாக பட்டி சாதியினர் இருந்தனர். சேவைச் சாதிகளின் குத்தகைக் குடியானவர்கள் ஆதிக்கசாதியின ரின் கட்டுப்பட்ட அடிமைகள் போன்றே அவர்களின் வீட்டுத் திரும ணம், மரணம் ஆகிய நிகழ்வுகளின் போது சேவைகளை வழங்கு வர். பிரித்தானியர் காலத்திலும், சுதந்திரத்தின் பின்னரும் பட்டி, 'ரட்ட அத்தோ' குடும்பங்கள் உயர் நிர்வாகப் பதவிகளை வகித்து வந்தனர். (உதாரணம் விதானை, கோறளை, பதிவாளர்). இக்கார ணத்தால் ஆதிக்கசாதிக் குழு ஒன்று அரசுக்கும் சாதாரண குடி யான்களுக்கும் இடைநடுவில் தொடர்புப் பாலம் போன்று செயற்ப டும் நிலை இருந்தது. தாழ்த்தப்பட்ட சாதியினர், ஆதிக்கசாதியின ருடன் கொள்ளும் சமூக இடையூடாட்டத்தில் சில விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. ஆதிக்கசாதி ஆட்களை விளித்துப் பேசும் போது எச்சொற்களால் அழைப்பது, ஒருவர் எப்படி உடை அணிய வேண்டும், இருக்கைகளில் அமர்ந்து பேசலாமா, பந்தி போசனத்தில் பங்கு கொள்ளலாமா என்பன பற்றிய விதிகள், வீட் டுவேலைகள் எவை என்பன விதிக்கப்பட்டிருந்தன. இவ்விதிமுறை கள் ஆதிக்கசாதியினர் மேலானவர்கள் என்பதையும் சேவைச் சாதி கள் கீழ்நிலையினர் என்பதையும் எடுத்துக் காட்டும் நோக்குடை யவை. வெலிவிற்றவின் பட்டி சாதியினர்தான் 1920கள் முதல் கண் டியின் பாடசாலைகளில் தரமான கல்வியை முதலில் பெறத் தொடங்கினர். தாம் பரம்பரையாக வகித்து வந்த நிர்வாகப் பதவி-களை விட உயர்வான பதவிகளைக் கல்வியின் மூலம் பட்டி சாதி பெற்றுக் கொண்டது. இதனால் ஆதிக்கசாதியிடம் அரசுப் பதவிக-ளின் வழியான அதிகாரம் குவிந்தது. இது இலங்கையின் பிறப குதிகளிலும், தென் ஆசியா நாடுகளிலும் காணப்பட்ட பொதுப் போக்கு ஆகும்.

வெலிவிற்றவின் எந்தச் சாதியும் ஆதிக்கசாதியுடன் சமூகத் தொடர் புகளை வைத்துக் கொள்வதிலோ, பௌதிக ரீதியான தொடர்பு களை வைத்துக் கொள்வதிலோ தடைகள் கிராமத்திற்கு உள்ளோ, வெளியிலோ இருக்கவில்லை. சமூக மாற்றங்களின் பய னாக ஏற்பட்ட நன்மைகளை முதன் முதலில் பெற்றுக் கொண்டவர் களாகவும், கல்வி, தொழில் வாய்ப்புகளின் நன்மைகளை அனுப வித்தவர்களாகவும் பட்டி, ஆதிக்கசாதியினர் விளங்கினர். சேவைச் சாதிகள் இவ்வாறு சமூக அசைவியக்கம் மூலம் உயர்ச்சியடைவ தற்கும் பல தடைகள் இருந்தன.

- சிற்றுடைமையாளர்களாகவோ அல்லது குத்தகைக்குப் பயிர் செய்வோராகவோ சேவைச் சாதியினர் இருந்தனர். அவர்கள் பயிர்ச்செய்கை நிலத்தைத் தமது சொந்த உடைமையாகப் பெற்றுத் தம் வருமானத்தை உயர்த்தும் வழிகள் இருக்க வில்லை.
- பட்டி சாதியினர் உத்தியோகங்களைப் பெற்று நகரங்களுக்குத்

தம் வதிவிடத்தை மாற்றிய போதும், வெலிவிற்றக் காணிகளின் உடைமையாளர்களாகத் தொடர்ந்து இருந்தனர். தலத்தில் இல்லா நில உடைமையாளர்களாய் தம் அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்திருந்தனர்.

- ஆதிக்கசாதியினர் விதானை போன்ற உத்தியோகப் பதவிகளில் இருந்தனர். இதனால் சேவைச் சாதிகள் தம் பிள்ளைகளின் சாதிப் பெயர்களை மாற்றுவதற்கு இவர்கள் தடையாக இருந்தனர். பெயர்கள் மூலம் சாதியடையாளம் வெளிப்படுத்தப்படும் நிலை தாழ்த்தப்பட்ட சாதிப் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்தது.
- வெலிவிற்ற கபாடகம கிராமமாக முன்பு இருந்தது. கபடாகம (அரசனின் கிராமம்) அடிப்படையிலான சாதி விதிகள் நடைமுறையில் செயற்பாடு இழந்தபோதும், வெலிவிற்ற கிராமத்தின் சமூக வாழ்விலும் பொருளாதார நடவடிக்கைகளிலும் சாதி தீர்மான சக்தியாக 1960 வரையும், அதற்கு அப்பாலும் கூட நீடித்தது.

1950களில் ஏற்பட்ட இரு வகையிலான தாக்கங்கள் ஆதிக்கசாதி நில உடைமை வகுப்பினரின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தின. ஒன்று தேர்தல், அரசியல் போன்றன கிராமங்கள் வரை ஊடுருவியதாகும். குறிப்பாக 1956ம் ஆண்டின் தேர்தல் தேசிய மட்டத்தில் அதிகாரத்தில் குறிப்பிடக்கூடிய மாற்றத்தை ஏற்படுத்தியது. வெலிவிற்றவின் பெரவ சாதித் தலைவர்கள் மகாஜன எக்சத் பெரமுன (மக்கள் ஐக்கிய முன்னணி) என்ற கட்சியின் உள்ளூர் வேட்பாளரை ஆதரித்தனர். சமூகத்தில் வசதிகள் அற்றவர்களாய் உள்ள ஏழைகளுக்கு ஆதரவு கொடுத்தல் என்ற கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் போட்டியிட்ட மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் உள்ளூர் நிலவுடைமையாளர்களில் இருந்து வேறுபட்ட ஒரு வழியில் அதிகாரத்தையும் செல்வாக்கையும் வெலிவிற்றவின் பெரவ சாதித் தலைமை பெற்றுக் கொண்டது. அப்பகுதிகளில் மரக்கறிப் பயிர்ச்செய்கை 1950களில் விருத்தியாயிற்று. இதனால் வர்த்தக முறையில் மரக்கறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட தாழ்த்தப்பட்ட சாதி விவசாயிகள் நன்மை பெற்றனர். குத்தகை விவசாயிகளும் இதனால் நன்மை பெற்றனர். இது இரண்டாவது முக்கிய மாற்றமாகும். இவ்விரண்டும் சேவைச் சாதிகளின் மத்தியில் இருந்த இயக்க ஆற்றல்மிக்க குழுக்களுக்கு சாதித் தடைகளை மீறி முன்னேறுவதற்குத் துணை செய்தன. அத்தோடு இவை இரண்டும் அரசின் ஆதரவையும் பெற்றுக் கொள்ளவும், சமூகத்தில் தம் நிலையை உயர்த்திக் கொள்ளவும் சேவைச் சாதிகளுக்கு உதவின. 1958ல் நெற்காணிச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் ஆதிக்கசாதியினருக்குச் சேவை செய்து வந்த பெரவ சாதி குத்தகை விவசாயிகள் சிலருக்கு நன்மையாயிருந்தது. குறிப்பாக நகரங்களில் வாழ்ந்த நில உடைமையாளர்களிற்கு வழங்க வேண்டிய குத்தகையை சட்டப்படி ஒழுங்கமைத்தது. தாழ்த்தப்பட்ட சாதியினரான வர்த்தகப் பயிர்ச்செய்கை விவசாயிகள் பலர், இவ்வுயர் சாதி நில உடைமையாளர்களின் நிலங்களைக் கொள்வனவு செய்தனர். இதனால் இவ்விவசாயிகளின் சொத்துக்களும், இலாபமும் அதிகரித்தன. கல்வி கற்றவர்களான தாழ்த்தப்பட்ட மக்கள் பிரிவு ஒன்று சேவை சாதிகள் மத்தியில் இருந்து படிப்படியாக மேற் கிளம்பியது. ஆதிக்க சாதி நில உடைமையாளர்களின் சாதிப் பகட்டுகளை இப்பிரிவினர் கேள்விக்கு உட்படுத்தினர். தாம் இயற்கையாகவே உயர்ந்தவர்கள் என்ற கருத்துடைய ஆதிக்கசாதியினர், உயர் அந்தஸ்து கோரும் நடத்தைகளிற்கு தாழ்த்தப்பட்டோர் மத்தியில் இருந்து தோன்றிய படித்த வகுப்பினர் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இன்றும்கூட சாதி வேறுபாடுகள் தொடர்ந்த போதும் ஆதிக்க சாதியினர் தாழ்த்தப்பட்டோரை இழிவாக நடத்துதல் இயலாததாயிற்று. தாழ்த்தப்பட்ட மக்களிடையேயும் போட்டிகளும் அரசியல் சச்சரவுகளும் இருந்து வருகின்றபோதும், ஆதிச் சாதியினர் தமது சலுகைகளையும் முன்னுரிமைகளையும் பெருக்கிக் கொள்ள எடுத்த முயற்சிகளை முறியடிக்கும் வகையில் தம்மிடையே ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.



shanmugalingam@thaiveedu.com



# தமிழ்வலை - 85


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-85 வினா

**இடமிருந்து வலம்**

1 பலசரக்கு

2 பேர்போன வரலாற்றறிஞர்

6 நுண்ணறிவு

8 பொருநை

9 ஆசிரியர்

11 பாற்சோற்றுக்கட்டி

12 பிறந்த நாடு

15 சொந்த நன்மை

16 முன்னாள் திருகோண்மலை நா. உ.

17 ஒரு வேலிமரம்

**மேலிருந்து கீழ்**

1 பூ

2 14ம் நூற்றாண்டில் இலங்கை வந்த இஸ்லாமிய யத்திரிகர்

3 தமிழக நாளிதழ்

4 வழி

5 பி.பி.சி.யின் ஒரு பிற்மொழிச் சேவை

7 கல்கியின் இயற்பெயர்

10 குழந்தை மொழியில் தாய்க்குத் தாய்

11 கோல்

13 பழங்கால கிரேக்க மக்கள்


14 பழங்கால மகளிர் விளையாட்டு

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 84க்கான விடைகள்



## தமிழ்வலை-84 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

தவமணி சண்முகம், ஸ்கார்பரோ
விசுவநாதன் தாமரை, ரொறன்ரோ
சுமதி சிவகரன், ரொறன்ரோ
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ.
உமா கதிர், ஏஜக்ஸ்.
த.செ. நடராசா, ரொறன்ரோ.
மணிஸ்வரன் மகிந்தா, நோத்யோர்க்
பவளராணி அழகரத்தினம், நோத்யோர்க்

### பரிசுபெறும் போட்டியாளர்

**சிவரதி A.R. காந்தி,**
**ரொறன்ரோ.**

thamilvalai@thaiveedu.com




# ரீவீஜ-யின் தொழிற் தரம்




ஜார்வீஸ் வீதிக் கலையகத்தில் ரீவீஜ மிகப் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. பல்வேறு நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன. வார இறுதி நாட்களில் அங்கு நிகழ்ச்சி ஒளிப்பதிவுக்கு வருவோர் கூட்டம் அதிகமாக இருந்தது. நிலக்கீழ் அறைகளில் இயங்கிய ரீவீஜ-யின் சந்தைப்படுத்தும் பிரிவில் பணியாற்றுவதற்கு அதிகளவில் தொண்டர்கள் வந்துசேர்ந்தார்கள். இளையவர்கள் முதல் மூத்தவர்கள் வரை அதில் அடங்கியிருந்தனர். அனைவரும் ரீவீஜ தமது சொந்த நிறுவனம் போன்ற உரிமை உணர்வுடன் பணியாற்றினார்கள். அதில் பணியாற்றிய பலர் என்னுடன் பேசும்போது, தாங்கள் தமிழ் மக்களைத் தொலைபேசியில் அழைத்து ரீவீஜ ஒளிபரப்பு சேவைக்கு சந்தாதாரராகும்படி கேட்கும்போது, ‘இந்த சேவையில்தான் விக்னேஸ்வரன், மதிஅழகன், கமலா தம்பிராஜா ஆகியோர் பணியாற்றுகிறார்களா?’ என்று கேட்பார்களென்று சொல்லும்போது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அப்போது மூன்று தமிழ் தொலைக்காட்சி சேவைகள் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டமையால், தாம் சரியான சேவையைத்தான் வாங்குகின்றோமா என்பதை மக்கள் உறுதிசெய்யவேண்டியிருந்தது. அந்தப் பிரிவை நிர்வகித்தவர் சுதன் பாலச்சந்திரன். மிக ஈடுபாட்டுடன் அங்கு பணியாற்றினார். ஜாவீஸ் கலையகத்தில் ரீவீஜ-யுடன் இணைந்துகொண்டவர்களில் சுமதி பலராம், வரகுணன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வரகுணன் தமிழ்நாட்டில் வைத்தியக் கலாநிதிப் பட்டம் பெற்றவர். மேடை நிகழ்ச்சிகளில் பாடுவது, அந்நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதுபோன்ற திறமைகளைக் கொண்டிருந்தார். ரீவீஜ-யில் இணைந்தவுடனேயே சில விளம்பரங்களை சிறந்த முறையில் தயாரித்துத் தனது படைப்பாற்றலை வெளிப்படுத்தினார். பின்னர் ரீவீஜ-யில் தொடர்ந்து பலவிதமான நிகழ்ச்சிகளைச் செய்தவர் வரகுணன். சுமதி பலராம் சில நிகழ்ச்சிகளைத் தயாரித்ததோடு, நிர்வாக உதவியாளராகவும் ஆர்வத்துடன் பணியாற்றியவர். சதாமதி, பாலேந்திரன் (பாலி) ஆகியோர் ரீவீஜ நிகழ்ச்சிகளுக்குத் தேவையான கலைஞர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துபவர்களாக சுறுசுறுப்பாகப் பணியாற்றினார்கள்.

ஒரு தொலைக்காட்சி நிலையத்தில் நிர்வாகிகள், தயாரிப்பாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் போன்றவர்களுடன் நிகழ்ச்சிகளின் தயாரிப்புகளுக்கு உதவும் பலவகைப் பணிகளையும் செய்வதற்கான பணியாளர்களும் மிகவும் முக்கியமானவர்கள். குறிப்பாக, நிகழ்ச்சிகளுக்கான அரங்க அமைப்புகளுக்கு உதவுபவர்களைக் கூறலாம். அரங்க அமைப்பாளர்களென்று எவரையும் பணிக்கு அமர்த்தாவிட்டாலும் அரங்குகளை அமைப்பதற்கான உதவிகளைச் செய்வதற்குப் போதிய பணியாளர்கள் ரீவீஜ-யில் இருந்தார்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைச் செய்யும்போது வெவ்வேறு அளவிலான சிறுசிறு மேடைகளைக் கலையகத்திலேயே தயாராக வைத்திருத்தல் வேண்டும். இவற்றை றொஸ்ட்ரம் (rostrums) என்று சொல்வார்கள். இவற்றைக்கொண்டு நிகழ்ச்சிகளுக்கு வேண்டிய அளவான மேடைகளை அமைத்துக்கொள்ளலாம். இத்தகைய தேவைகளை பாலேந்திரன், கணேஸ் முருகேசு ஆகியோர் கவனித்துக் கொண்டனர். இவ்வாறாகத் தொழில்முறையில் இயங்கும் ஒரு பெரிய தொலைக்காட்சி நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தையும் நாம் சிறிய அளவில், ஆனால் எமது தேவைகள் அனைத்துக்கும் ஈடுகொடுக்கும் வகையில் மேற்கொண்டோம்.

**உயர் நிர்வாகத்தில் மாற்றம்:**

இவையனைத்தும் மிக வேகமாக நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் திடீரென ரீவீஜ-யின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகப் பதவிவகித்த மோகன் நடராஜா 2001ம் ஆண்டு, ஒக்ரோபர் மாதக் கடைசியில், ரீவீஜ ஆரம்பித்த இரண்டு மாதங்களில் பதவிவிலகிச் சென்றார். ஆனால் அவர் பதவிவிலகிச் செல்கிறார் என்று நான் முதலில் நினைக்கவில்லை. நான் ரீவீஜ-யின் உயர்மட்ட நிர்வாகத்துடன் அதன் நிர்வாகம் சம்பந்தமாக எந்தவித தொடர்பையோ பேச்சுவார்த்தையையோ மேற்கொள்ளாமல், ரீவீஜ-யின் நிகழ்ச்சிகள் சம்பந்தமான பணிகளை மட்டுமே செய்துகொண்டிருந்ததால், மோகன் நடராஜா பதவி விலகியது எனக்குத் தெரியாது. அவர் ஏதோ தனது சொந்த விடயமாக மலேஷியாவுக்குச் சென்றிருப்பதாக மட்டும் அறிந்திருந்தேன். அவர் திரும்பி வருவாரென்று நான் நினைத்திருந்த வேளையில் குமரன் என்று அழைக்கப்படும் சிவகுமரன் திடீரென ரீவீஜ-யின் பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தராக (C.O.O.) நியமிக்கப்பட்டார். அவரை ரீவீஜ-யின் பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தியபோது, அவர் ரீவீஜ கலையகத்தை ஸ்காபரோ நகரில் நிறுவுவதற்கான நடவடிக்கைகளைப் பிரதானமாக முன்னெடுப்பாரென்று கூறப்பட்டது.

**முதல் நேரடி விசேட ஒலிபரப்பு:**

நாம் எமது தயாரிப்புப் பணிகளை முழுமுச்சுடன் செய்துகொண்டிருந்தபோது, 2001ம் ஆண்டின் தீபாவளியை முன்னிட்டு ஒரு விசேட ஒளிபரப்பை நேரடியாக மேற்கொள்வதென்று முடிவெடுத்தோம். ரீவீஜ ஒளிபரப்பை ஆரம்பித்து ஏறக்குறைய இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. தீபாவளிக்கான நிகழ்ச்சித் திட்டமிடல் கூட்டத்தை நடத்தி, எவ்வளவு நேரத்திற்கு அந்த நேரடி ஒளிபரப்பை மேற்கொள்ளப்போகிறோம், என்னென்ன நிகழ்ச்சிகளை ஒளிபரப்பப்போகிறோம், யார் யார் நேரடியாக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கப்போகிறார்கள், மற்றும் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய பணிகள் எவையென்பவற்றை மிகத் துல்லியமாகத் தீர்மானித்தோம். தீபாவளியிலன்று இடம்பெறவிருக்கும் நேரடி ஒளிபரப்புக்கான நிகழ்ச்சிகளை நிரைப்படுத்தி, நிகழ்ச்சி நிரல் தயாரித்து, அவற்றுக்கான ஒளிநாடாக்களைப் பிரதான கட்டுப்பாட்டறைக்கு வழங்கும் பொறுப்பு, நிகழ்ச்சி வழங்கல் உத்தியோகத்தரான ஆத்மன் ரவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

எமது முதலாவது தீபாவளி நேரடி ஒளிபரப்பு 2001ம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் தீபாவளித் தினத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஏற்கனவே செப்ரெம்பர் 11 தாக்குதல் சம்பவத்தின்போது ஒரு சிறு செய்தியறிக்கையை, ரீவீஜ ஆரம்பித்து ஐந்து நாட்களில் நேரடியாக ஒளிபரப்பியிருந்தாலும் நான்கு மணித்தியாலங்களுக்கு நீடித்த விசேட நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பியமை அதுவே முதல்முறை. முன்கூட்டியே திட்டமிட்டு, சிறிதும் தவறுகள் ஏற்படாமல் செய்துமுடிப்பதே நேரடி ஒளிபரப்பின் தனித்துவம். நிகழ்ச்சி வழங்கல் பொறுப்பை வகித்த ஆத்மன் ரவி தனது பணி

யைச் சிறப்பாகச் செய்தார். நேரடி ஒளிபரப்புக்கான தொழில்நுட்பப் பணிகளை ரீவீஜ-யின் புதிய இளம் பணியாளர்கள் உரிய முறையில் சீராக நிறைவேற்ற, நேரடி ஒளிபரப்பில் அனுபவம் வாய்ந்த வீ.என். மதிஅழகன் தொகுத்து வழங்க ரீவீஜ-யின் முதல் நேரடி ஒளிபரப்பு சிறப்பாக நடைபெற்றது. ரொறன்ரோவின் தமிழ் வானொலிகளில் நேரடியாக ஒலிபரப்புச்செய்து பழகியிருந்த தமிழ் பிரியனும் அன்றைய ஒளிபரப்பின் பிற்பகுதியில் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதில் மதிஅழகனோடு இணைந்துகொண்டார். அன்றைய நேரடி ஒளிபரப்பு மீண்டும் ஒரு தொழிற்தரம்மிக்க ஒளிபரப்பாக அமைந்தது.

எமது வாராந்தக் கூட்டத்தில் ரீவீஜ பணியாளர்கள் நிகழ்ச்சிகளுக்கான பிரேரணைகளைச் சமர்ப்பித்து, அவற்றின் சாதக பாதகங்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுப் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் சிறந்த முறையில் திட்டமிட்டு, நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்புவதே எமது நிகழ்ச்சி நிர்வாகச் செயற்பாடாக இருந்தது. ரீவீஜ-யில் பணிக்குச் சேர விண்ணப்பிப்பவர்களை பணிக்கு அமர்த்தும் பொறுப்பு ரீவீஜ-யின் உயர் நிர்வாகத்துக்குரியது. அவர்களது சம்பள விபரம் முதலியவற்றை உயர்மட்ட நிர்வாகிகளே புதிதாக வருபவர்களுடன் பேசி முடிவெடுப்பார்கள். எனக்கு ரீவீஜ-யில் பணியாற்றுபவர்கள் என்ன அடிப்படையில் பணியாற்றுகிறார்கள், அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுகிறதா அல்லது தன்னார்வத் தொண்டர்களாகப் பணியாற்றுகிறார்களா என்பனபோன்ற விபரங்கள் தெரியாது. எனது பணி ரீவீஜ-யில் இணைபவர்களைத் தொழில்முறையில் பயிற்றுவிப்பது மட்டுமே.

**ரீ.வீ.ஜ. இடமாற்றம்:**

இப்படி ஜாவீஸ் வீதியில் ரீவீஜ மிக நேர்த்தியாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தபோது 2002ம் ஆண்டு, மார்ச் மாதமளவில் ரீவீஜ-யின் உயர் நிர்வாகப் பொறுப்பிலிருந்த பிரபாகரன், குமரன் ஆகியோர் என்னிடம், தாங்கள் ரீவீஜ கலையகத்தை ஸ்காபரோவிலுள்ள பீ.என்.ஆர். கலையகத்திற்கு மாற்றுவதென்று முடிவெடுத்திருப்பதாகவும் அதற்குத் தயாராகும்படியும் கேட்டுக்கொண்டார்கள். இத்தகைய முடிவுகள் ரீவீஜ-யின் செயற்பாட்டுக்கான பல காரணங்களை முன்னிட்டு குறிப்பாக, நிதிநிலையைப் பொறுத்து எடுக்கப்படும் நிர்வாக முடிவு. நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கான செலவைத் தாங்க முடியுமா முடியாதா என்று தீர்மானிப்பவர்கள் ரீவீஜ-யின் நிதியைக் கையாளும் உயர்நிர்வாகமட்டத்தில் இருப்பவர்களே. தொலைக்காட்சி நிலையத்தின் நிதி நிலைமைகளுக்கேற்றவாறும் அதேவேளை தொலைக்காட்சி ஒளிபரப்பின் தரம் குன்றாமலும் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கும் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் பணியாளர்களைப் பயிற்றுவித்து உருவாக்குவதுமே எனது பணி. ரீவீஜ-யின் நிர்வாகம் மேற்கொண்ட முடிவுக்கமைய அதன் இடப்பெயர்வு நடவடிக்கையை மேற்கொள்ளத் தயாரானோம்.

ரீவீஜ செயற்பாட்டை ஜார்வீஸ் வீதிக் கலையகத்தில் தொடர்ந்து நடத்துவது பொருளாதார ரீதியில் சிரமமானதென்பது உணர்ந்து கொள்ளத்தக்கதுதான். மேலும், போதிய இடவசதி, வாகனத் தரிப்பிட வசதிகள் போன்றவை போதாமலிருப்பது ரீவீஜ-யின் வளர்ச்சிக்கு சாதகமான நிலைமைகளல்ல. எனவே, விரிவுபடுத்தலுக்குப் போதுமான வசதிகளுடன் தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிக்குச் செல்வது நல்ல முடிவென்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், என்னைப் பொறுத்தளவில் ரீவீஜ-யை ஜார்வீஸ் கலையகத்தில் ஆரம்பிப்பதற்கு எடுத்த முடிவு மிகவும் நல்ல முடிவு. ஏனெனில், தொலைக்காட்சித் துறைக்கு முற்றிலும் புதியவர்களான எம் இளைஞர்கள், சிறிய அளவிலேனும் கனடிய தொலைக்காட்சித் துறையைச் சேர்ந்தவர்கள் நிகழ்ச்சிகள் தயாரிக்கும் ஒரு கலையகத்தில் தமது ஆரம்பப் பயிற்சிகளைப் பெற்றமை, அவர்கள் தொழில்முறைத் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புச் சூழலை ஓரளவுக்கேனும் அறிந்துகொள்ள உதவியது.

நாம் இடம்பெயர்ந்து செல்லவிருந்த பீ.என்.ஆர். கலையகம் ஸ்காபரோ, பாஸ்மோர் வீதியில் அமைந்திருந்தது. அதன் உரிமையாளர் நறீந்தர் ச்சனா அவர்கள். இந்தக் கலையகத்தை மோகன் நடராஜாவும் நானும் ரீவீஜ ஆரம்பிப்பதற்கான திட்டமிடல் கட்டத்திலேயே சென்று பார்த்திருக்கிறோம். அந்தக் கலையகம் எமது தயாரிப்புத் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான வசதிகளைக் கொண்டிருக்கிறதென்று நாம் கருதியிருந்தபோதும் அங்கிருந்து நிகழ்ச்சிகளை ஒளிபரப்புக்கு அனுப்புவதற்கான ஃபைவர் (fiber) வசதி இல்லாத காரணத்தால் பிரதான கட்டுப்பாட்டறையை நிர்மாணிக்க முடியாதென்று கருதி, அந்தக் கலையகத்தை அப்போது தெரிவுசெய்யவில்லை. இப்போது ஜாவீஸ் கலையகத்தில் இயங்குவதற்கான செலவுகளை ஒப்பிடும்போது பீ.என்.ஆர். கலையகத்தில் பிரதான கட்டுப்பாட்டறையை அமைத்து, நிகழ்ச்சிகளை ஒளிபரப்புக்கு அனுப்புவதற்கான மாற்று வழிகளைக் கையாள்வது செலவு குறைவானதென்று ரீவீஜ நிர்வாகம் கருதியதால் இப்போது இந்த இடமாற்றம் விரைவாக மேற்கொள்ளப்பட்டது. இடம்மாறும் நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்றது. பீ.என்.ஆர். கலையகத்தில் பிரதான கட்டுப்பாட்டறையொன்றை அமைக்கும் வேலைகள் முடிவடையும்வரை ஜாவீஸ் கலையகத்தின் கட்டுப்பாட்டறையை வைத்திருப்பதென்று முடிவானது. இடமாற்றம் முழுமையாக நடைபெறும்வரை வழமையான நிகழ்ச்சித் தயாரிப்புகளை ஆரம்பிக்காது அன்றாடச் செய்திகளை மட்டுமே தயாரிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

நாம் ஏற்கனவே தயாரித்த நிகழ்ச்சிகள், ரீரீஎன்-னிலிருந்து பெற்ற நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் முதலியவற்றை ஜாவீஸ் கலையகத்திலுள்ள கட்டுப்பாட்டறையிலிருந்து நாதன், சுதன் ஆகியோர் ஒளிபரப்பிக் கொண்டிருக்க, ஏனையவர்கள் பீ.என்.ஆர். கலையகத்தை ரீவீஜ கலையகமாக மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். அன்றாடச் செய்திகள் மட்டுமே பீ.என்.ஆர். கலையகத்தில் தயாரிக்கப்பட்டன. ஆனால் பீ.என்.ஆர். கலையகத்தில் போதிய கணினித் தொடர்புகளை ஏற்படுத்தும்வரை செய்தித் தயாரிப்புக்கான ஆயத்த வேலைகள், ஸ்காபரோவிலுள்ள ரமேஷ் ராஜதுரையின் வீட்டில் மேற்கொள்ளப்பட்டது. ரமேஷின் வீட்டில் கணினிகள் பொருத்தப்பட்டு நாளாந்தம் மதிஅழகன் அங்கு சென்று செய்திகளைத் தொகுத்தபின்னர் தொகுக்கப்பட்ட செய்திகள் பீ.என்.ஆர். கலையகத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, அன்றாடச் செய்தி நிகழ்ச்சி தயாரிக்கப்பட்டது. செய்தி தயாரித்து முடிந்ததும் சுமதி பலராம் செய்தி ஒளிப்பதிவு செய்யப்பட்ட நாடாவை எடுத்துச்சென்று ஜாவீஸில் இயங்கும் பிரதான கட்டுப்பாட்டறையில் ஒப்படைக்க, ரீவீஜ-யின் செய்திகள் தங்குதடையின்றி நாளாந்தம் ஒளிபரப்பாகின. இப்படி அனைவருமே மிகச் சுறுசுறுப்பாகத் தமது பணிகளைச் செய்தமையால் ஒளிபரப்பில் எவ்வித தடங்க லும் ஏற்படாமல் ரீவீஜ-யின் இடமாற்றம் மிக நேர்த்தியாக இடம்பெற்றது. பீ.என்.ஆர். கலையகத்தில் பிரதான கட்டுப்பாட்டறை மிக விரைவாகவே அமைக்கப்பட்டுவிட்டது. அந்த வேலைகள் முடிவடைந்ததும் ரீவீஜ முழுமையாக ஸ்காபரோ நகரில் இயங்க ஆரம்பித்தது.

பீ.என்.ஆர். கலையகத்தின் உரிமையாளர் நறீந்தர் ச்சனா அவர்கள். அந்தக் கலையகத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்து, பல்வேறு ஒளிபரப்புச் சேவைகளில் ஒளிபரப்பும் சில



பீ.என்.ஆர். கலையகத்தில் அதன் உரிமையாளர் நறீந்தர் ச்சனா, தயாரிப்பாளர் தீபன் ராஜலிங்கம், பிரதம நிதி உத்தியோகத்தர் (CFO.) ஜெயராமன், நிரவாக உதவியாளர் ஜெனி ஜோசஃப்

இந்தியர்களது நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு வேண்டிய தொழில்நுட்ப வசதிகளையும் உதவிகளையும் ச்சனா வழங்கிக்கொண்டிருந்தார். அதுவரை மிக அமைதியாக இயங்கிக் கொண்டிருந்த அவரது கலையகம் ரீவீஜ-யின் வருகையால் திடீரெனப் பரபரப்பானது. ரீவீஜ-யின் தயாரிப்புப் பிரிவைவிட சந்தைப்படுத்தும் பிரிவில் அதிகளவு பணியாளர்கள் பணிபுரிந்ததால் அனைவரும் இயங்கு

வதற்கான போதிய இடவசதி பீ.என்.ஆர். கலையகத்தில் இருக்கவில்லை. எனவே, அதனோடு இணைந்து அருகேயிருந்த மற்றுமொரு யூனிற்றையும் ரீவீஜ வாடகைக்குப் பெற்று இரண்டிலும் ரீவீஜ இயங்கியது. நாம் அனைவரும் சனாஜி என்று அழைக்கும் நறீந்தர் ச்சனா அவர்கள், உடனடியாகவே மிகுந்த உற்சாகத்து



ரீவீஜ ஸ்காபரோக் கலையகத்தின் வெளிப்புறத்தில் நேரடி ஒளிபரப்பு தொகுப்பாளர்கள் - கலா, சுதாகரன் படப்பிடிப்பாளர் - செல்வன்

டன் ரீவீஜ பணியாளர்களுடன் பழகத் தொடங்கிவிட்டார். ஸ்கா-பரோ நகரம் ஆரம்பத்தில் தமிழர்கள் குடியேறிய இடம். பின்னர் அதை அண்டிய மார்க்கம், ஏஜக்ஸ் நகரங்களில் தமிழ்ச் சமூகம் மிக விரிவடைந்திருந்தமையால், பெரும்பான்மையான தமிழ்மக்கள் வாழும் பகுதிகளுக்கு மத்தியில் ரீவீஜ கலையகம் அமைந்திருப்பது சகலருக்கும் வசதியாக இருந்தது. விரைவுப் பயணத்தை மேற்கொள்ளும் நானூற்றியொன்று பிரதான நெடுஞ்சாலை ரீவீஜ கலையகத்திற்கு அண்மையில் இருந்ததால், மிஸ்சிஸாகா போன்ற சற்றுத் தொலைவிலிருந்த நகரங்களிலிருந்தும் தமிழ் மக்கள் மிகச் சுலபமாக வந்து போகக்கூடியதாக இருந்ததோடு, போதிய வாகனத் தரிப்பிடங்களுடன் மிகவும் அமைதியான இடத்தில் ரீவீஜ அமைந்திருந்ததால் பணியாளர்கள், நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவோர் அனைவருக்கும் மிக வசதியான இடமாக ரீவீஜ நிலையம் அமைந்திருந்தது. அது ரீவீஜ-யின் இயக்கத்துக்கு மிகுந்தளவில் உதவியது.

**இலங்கைப் பயணம்:**

2002ம் ஆண்டு, ஜுன் மாதமளவில் ரீவீஜ ஸ்கார்பரோ நகரில் சீராக இயங்கத் தொடங்கிவிட்டது. இப்போது ஜாவீஸ் வீதியில் ரீவீஜ-யை ஆரம்பித்த நிலை மாறி, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு, ஊடகத்துறை பற்றிய போதுமான அறிவுகொண்ட இளைஞர்கள் பணியாற்றும் ஒரு தொழில்முறைத் தொலைக்காட்சி நிறுவனமாக இந்த ஒருவருடத்தில் ரீவீஜ தரமுயர்ந்திருந்தது. அந்த நிலையில் நான் பல நாட்களாகத் திட்டமிட்டிருந்த இலங்கைப் பயணத்தை மேற்கொள்ளத் தயாரானேன்.

1990ம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் 22ம் திகதி இலங்கையை விட்டுப் புறப்பட்ட நான் பின்னர் இலங்கைக்குச் செல்லவில்லை. எனது ஊடகத் தொழில் வாழ்க்கையின் மிக முக்கியமான காலகட்டத்தில் திடீரென அதைக் கைவிட்டு வந்த நான், கனடா நாட்டில் என்னையும் எனது குடும்பத்தையும் நிலைநிறுத்தும் முயற்சியில் ஏறக்குறையப் பன்னிரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. நான் நாட்டைவிட்டுப் புறப்பட்டபோதிருந்த மனநிலையில் ஒருவருடனும் பேசக்கூட முடியாது வந்துவிட்டேன். இப்போது கனடாவில் ஓரளவு அமைதியான வாழ்க்கை வாழத் தொடங்கிவிட்ட நிலையில் திரும்பிச்சென்று, எனது தாயார், சகோதரி, சக ஊடகவியலாளர்கள், மற்றும் நண்பர்களைப் பார்ப்பதற்கு மிக ஆவலாக இருந்தேன். இப்போதிருப்பதுபோல் சுலபமான, செலவற்ற தொலைத்தொடர்பு வசதி களற்ற அந்தக் காலகட்டத்தில் அந்தப் பன்னிரண்டு வருடங்களாக நான் பலருடன் தொடர்புகளைக் கொண்டிருக்கவில்லை. ரூபவாஹினியில் பணியாற்றிய யாக்கூப், ரவீந்திரன்,வர-தராஜன் ஆகியோர் மட்டுமே அவ்வப்போது கடிதத் தொடர்பில் இருந்தனர். 2000ம் ஆண்டின் பிற்பகுதியில் அல்லது 2001ம் ஆண்டின் முதற் பகுதியில் நான் குடும்பத்தோடு இலங்கை செல்லத் திட்டமிட்டிருந்த வேளையில்தான் ரீவீஜ ஆரம்பிக்கும் திட்டத்திற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தன. நான் இலங்கை செல்லும் முடிவைக் கைவிட்டு, ரீவீஜ ஆரம்பிக்கும் முயற்சியில் பங்கெடுத்துக்கொண்டேன். இப்போது ரீவீஜ-யில் எனது பணியை ஆரம்பித்து, ஒரு வருடம் பூர்த்தியாகி, சகலரும் குறிப்பிடத்தக்க பயிற்சி பெற்று இயங்கத் தொடங்கியதும் நான் எனது இலங்கைப் பயணத்தை 2002ம் ஆண்டு, ஜுலை மாதம் மேற்கொண்டேன். எனது பணியிடத்தில் மூன்று வாரங்களுக்கான விடுமுறை பெற்றிருந்தேன். ரீவீஜ நிர்வாகத்திற்கும் நான் இலங்கை செல்லும் தகவலை அறிவித்திருந்தேன். ஜுலை மாதத்தில் ரீவீஜ-யில் பணிபுரியும் ரமேசும் தனது குடும்பத்துடன் இலங்கை செல்லும் முடிவெடுத்திருந்தார். ரமேஷ் அப்போது சில நிகழ்ச்சிகளுடன் பிரதானமாக நாளாந்த செய்திகளைத் தயாரித்துக் கொண்டிருந்தார். ரீவீஜ முற்றாக ஸ்காபரோவுக்கு இடம்மாறியதும் பிரதான கட்டுப்பாட்டறையை இயக்கும் பொறுப்பை சுதன் சின்னையா ஏற்றுக்கொள்ள, அதுவரை அந்தப் பொறுப்பை வகித்த எஸ். நாதன் செய்திகளைத் தயாரிக்கத் தொடங்கியிருந்ததால் ரமேசும் தனது விடுமுறையை எடுத்துக்கொள்ளத்தக்கதாக இருந்தது. காலப்போக்கில் தீபன் ராஜலிங்கமும் செய்திகளைத் தயாரிக்கத் தொடங்கினார்.

இலங்கைப் பிரஜைகளாக, இலங்கைக் கடவுச் சீட்டுடன் நாட்டை விட்டுப் புறப்பட்ட நானும் எனது குடும்பத்தாரும் நான் புறப்பட்டு ஏறக்குறையப் பன்னிரண்டு வருடங்களின்பின்னர் கனடாப் பிரஜைகளாக, கனடாநாட்டுக் கடவுச் சீட்டுகளோடு இலங்கைக்குத் திரும்பிச் சென்றமை, ஒரு நம்ப முடியாத விநோத அனுபவமாக இருந்தது. நாம் பிறந்து, சிறுவயதில் ஓடியாடிய பள்ளிப்பருவ நாட்களிலோ ஏன், 1990ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையிலோ நான் கற்பனைகூடச் செய்துபார்த்திராத ஒரு விடயம். ஆழமாக நினைத்துப் பார்க்கும்போது ஒருவித சோக உணர்வை ஏற்படுத்தும் நிகழ்வு. எமது வருங்கால சந்ததியினர் முற்றிலும் புதிய இனக்குழுக்களாக, பல்வேறு தேசங்களின் பிரஜைகளாக வாழப்போகின்ற இந்தச் சமூக இடப்பெயர்வின் ஆரம்ப கர்த்தாக்களாக நாம் அமைந்துவிட்டதையெண்ணி மகிழ்ச்சியடைவதா கவலைகொள்வதா என்று தெரியவில்லை. சூழ்நிலைகளுக்கேற்ப வாழ்வதுதான் தரித்திருத்தலுக்கான (survival) ஒரே வழியென்று யதார்த்தமாக மட்டுமே சிந்திப்பவர்களுக்கு இது அவ்வளவு பெரிய விடயமல்ல. ‘எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே, அதன் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே’ என்று, தாம் வாழும் நிலத்தோடும் இனத்தோடும் உணர்வுபூர்வமான பிணைப்பைக் கொண்டவர்களுக்கு இந்த நிலை விபரிக்க இயலாத சுமையான உணர்வாக இருக்கும் என்பது நிச்சயம்.

2002ம் ஆண்டு, ஜுலை மாதம் நான் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் மிகவும் மகிழ்ச்சிதரும் ஒன்றாக அமைந்தது. எனது ஊடக நண்பர்கள் பலர் என்னை நேரில் சந்தித்தார்கள். நான் இலங்கையின் பல பகுதிகளுக்கும் எனது பிள்ளைகளை அழைத்துச்சென்று காண்பிப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருந்ததால் என்னை நேரில் சந்திக்க முடியாதவர்கள், தொலைபேசியில் தொடர்புகொண்டு, நான் இலங்கை வந்திருந்ததையிட்டுத் தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டார்கள்.

நான் நாட்டைவிட்டுச் சென்ற வேளையிலிருந்த இலங்கை ஊடகத்துறை முற்றிலும் மாறிவிட்டிருந்தது. பல தனியார் வானொலி, தொலைக்காட்சிச் சேவைகள் தோன்றியிருந்தன. எனது சக ஊடக நண்பர்கள் பலர் பல்வேறு தனியார் ஊடக நிறுவனங்களில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். சி. நடராஜசிவம் சூரியன் எஃவ்.எம். வானொலியின் தமிழ்ப்பிரிவுக்குப் பொறுப்பானவராக இருந்தார். அருணா செல்லத்துரை சக்தி தொலைக்காட்சியில் தமிழ் செய்திப் பிரிவுக்குப் பொறுப்பானவராக இருந்தார். எழில்வேந்தன் சக்தி தமிழ் வானொலிச்சேவையின் பொறுப்பாளராக இருந்தார். ரூபவாஹினியில் பணியாற்றிய எம். வரதராஜன் சக்தி தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளின் தயாரிப்புக்குப் பொறுப்பான உயர் பதவியிலிருந்தார். நான் ரூபவாஹினியை விட்டுச் செல்லும்போது தயாரிப்பாளராக இருந்த எஸ். விஸ்வநாதன் இப்போது தமிழ்ப் பிரிவின் இயக்குநராகவும் தயாரிப்பு உதவியாளர்களாக இருந்த யூ.எல். யாக்கூப், ஆர். ரவீந்திரன் ஆகியோர் தயாரிப்பாளர்களாகவும் உயர்ந்திருந்தனர். அவர்கள் அனைவரையும் நேரில் கண்டு, பேசி மகிழ்ந்தேன். நான் இலங்கையில் மலைநாடு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குக் குடும்பத்தவர்களுடன் சென்றேன். யாழ்ப்பாணம் சென்றபோது, நெல்லியடிக்குச் சென்று அப்

போது யாழ்ப்பாணம் வந்திருந்த ரமேஷ் குடும்பத்தாரைச் சந்தித்தமை மகிழ்ச்சியளிக்கும் நிகழ்வாக அமைந்தது. ரமேஷ் எம்முடன் நயினாதீவுக்கு வந்து அங்கு நயினாதீவைப்பற்றிய ஒரு விவரணம் தயாரிப்பதற்கான காட்சிகளைப் படம் பிடித்தார். நான் அங்குள்ள மக்களை நேரில் கண்டு விபரங்களைக் கேட்டறிய அவர் அவற்றையெல்லாம் படமாக்கினார். விடுமுறையில் சென்றிருந்தபோதும் ரீவீஜ-யுக்காக நிகழ்ச்சி தயாரித்தோம். மட்டக்களப்பு சென்று, பிள்ளைகளுக்கு இலங்கையின் கிழக்கு மாகாணத்தைக் காண்பித்ததோடு, அப்போது மட்டக்களப்பில் நோய்வாய்ப்பட்டிருந்த ஜோர்ஜ் சந்திரசேகரனை நேரில் சந்தித்தேன். அவர் 'நாற்காலிகள்'


மட்டக்களப்பில் ஜோர்ஜ் சந்திரசேகரனுடன்

என்ற எனது மொழிபெயர்ப்பு நாடக நூலுக்கு அணிந்துரை எழுதி அனுப்பியிருந்தார். அவரது கையெழுத்து தெளிவில்லாமலிருந்தமையால் அதை அவர்முன்னே வாசித்து, விளங்கிக்கொண்டேன்.

கொழும்பு திரும்பிய என்னை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நண்பர் சந்திரமோகனும் ரூபவாஹினிக்காக எஸ். விஸ்வநாதனும் செவ்வி கண்டார்கள். அப்போது ரூபவாஹினியின் செய்திப்பிரிவில் பணியாற்றிக்கொண்டிருந்த யூ.எல். யாக்கூப் தயாரிப்புக் குழுவினரோடு வீட்டுக்கு வந்து ஒரு பேட்டி நிகழ்ச்சியை ஒளிப்பதிவு செய்தார். எம். வரதராஜன் சக்தி ரீவீ-க்காக எனது பேட்டியை பம்பலப்பிட்டியிலிருந்த ஒரு வீட்டில் வைத்துப் படமாக்கினார். என்னைப் பேட்டி கண்டவர், அபர்ணாசுதன். அத்தோடு வரதராஜன் என்னைச் சக்தி தொலைக்காட்சி நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கு பணியாற்றிய புதிய ஊடகவியலாளர்களுடனான ஒரு சந்திப்பு நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்திருந்தார். கலைஞர்


சக்தித் தொலைக்காட்சியில் எம். வரதராஜனுடனும் ஒலி, ஒளிபரப் பாளர்களுடனும்

எஸ். ராமதாஸ் அவரது விசாகம் விளம்பர நிறுவனத்துக்காக அப்போது ஒரு பெரிய நிகழ்ச்சியை கொழும்பின் பிரதான பகுதியில் ஏற்பாடு செய்திருந்தார். அது என்ன நிகழ்ச்சியென்பதை இப்போது மறந்துவிட்டபோதிலும் கொழும்பிலுள்ள பெரும்பாலான அனைத்துக் கலைஞர்களும் அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றினார்கள். அந்த நிகழ்ச்சிக்கு என்னை விசேட விருந்தினராக அழைத்து கௌரவப்படுத்தினார் எஸ். ராமதாஸ். எனது கொழும்பு ஊடக வாழ்க்கைக் காலத்தில் நான் சந்தித்த, பழகிய பல கலைஞர்கள் அன்று என்னை மிகவும் மகிழ்ச்சியுடன் நலம் விசாரித்து உரையாடியமை எனக்கு மனநிறைவைத் தந்தது. பலர் நான் ரூபவாஹினியின் தமிழ்ப் பிரிவுக்காகத் தயாரித்த நூற்றுக் கணக்கான நிகழ்ச்சிகள் பற்றி வியந்து பேசி, நான் திடீரென விலகிச் சென்றமை


சக்தித் தொலைக்காட்சி நேர்காணல்
அறிவிப்பாளர் - அபர்ணாசுதன், தயாரிப்பாளர் - எம். வரதராஜன் மற்றும் படப்பிடிப்புக் குழுவினர்

தமக்கு அதிர்ச்சியாகவும் கவலையாகவும் இருந்ததாகத் தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார்கள். அந்த நிகழ்ச்சிக்கு நான் அழைத்துச்சென்ற எனது மகன் மதுரன், இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தான். நான் நாட்டைவிட்டுப் புறப்பட்டபோது அவனுக்கு இரண்டு வயது. நான் இலங்கையில் எப்படி இருந்தேன், என்ன செய்தேன் என்பவற்றையெல்லாம் அவர் நேரடியாக அறிந்திருக்கவில்லை. ராமதாஸின் அந்த நிகழ்ச்சியில் எனக்கு அளிக்கப்பட்ட மாலை மரியாதைகளும் பல கலைஞர்களும் என்னைக்கண்டு மகிழ்ச்சியடைந்து பாராட்டிப் பேசியமையும் மகன் மதுரனுக்குப் புதிதாகவும் வியப்பாகவும் இருந்திருக்கவேண்டும். நிகழ்ச்சி முடிந்து நாம் வீடு திரும்பும்போது, 'அப்பா, நீங்கள் இதையெல்லாம் விட்டிட்டு, ஏன் கனடாவுக்கு வந்தனீங்கள்?' என்று கேட்டான். அதைத்தான் விதியென்று சொல்வது என்பது எனக்கு இலகுவான பதிலாக இருந்தது. மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் எனது நண்பர்களைக் கண்டு கொண்டாடிய மனத் திருப்தியோடு, நான் இலங்கையில் பணியாற்றியதற்காக எனக்குக் கிடைக்கவேண்டிய சேமலாப நிதியைப் பெறுவதற்கான ஒழுங்குகளையும் செய்துவிட்டு, மகிழ்ச்சியுடன் கனடா திரும்பினேன். ரமேஷ் நான் கனடா திரும்பி ஒரு சில கிழமைகளின் பின்னர் ரீவீஜ-யில் பணிக்குத் திரும்பினார்.

**தொலைக்காட்சி நாடகம்:**

இப்போது ஆரம்பத்திலிருந்ததுபோல் ரீவீஜ-யின் பணியாளர்களைப் பயிற்றுவிப்பதற்கு அதிக நேரம் செலவிடவேண்டி இருக்கவில்லை. அவரவர் தமக்கான பணிகளைத் தாமாகவே செய்யத் தொடங்கிவிட்டார்கள். புதிய நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவதும் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கத்தை மேற்பார்வைசெய்வதும் எனது பணியாக இருந்தது. ரீவீஜ பணியாளர்கள் இப்போது கலையகத்தில் தயாரிக்கும் நிகழ்ச்சிகளைக் கையாளக்கூடிய அடிப்படை ஆற்றலைப் பெற்றுவிட்டார்கள். அடுத்து, அவர்களுக்கு விவரண நிகழ்ச்சிகள் (Documentaries) தயாரிப்பதற்கும் வெளிக்களத்தில் படம்பிடிக்கும் நாடகங்களைத் தயாரிப்பதற்கும் பயிற்சியளிக்கவேண்டும். இவற்றில் விவரண நிகழ்ச்சி தயாரிப்பதற்கு மிகுந்த நேரத்தைச் செலவிடவேண்டும். வெளிக்களப் படப்பிடிப்பாக நாடகம் தயாரிப்பதற்கு விவரண நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குச் செலவிடப்படவேண்டியளவு நேரம் வேண்டியதில்லை. ஆயினும் ஒப்பீட்டளவில் அதிக பணம் செலவிடவேண்டும். இரண்டுமே தொலைக்காட்சிச் சேவைகளுக்கு முக்கியமான நிகழ்ச்சிகள். அவற்றைத் தயாரிக்குமளவுக்கு ரீவீஜ நிறுவனமும் அதன் பணியாளர்களும் தயாராகவேண்டுமென்று காத்திருந்தேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து 2002ம் ஆண்டு, ஜுலை மாத இறுதியில் கனடா திரும்பியதுமே, பயிற்சியளிப்பதற்காக வெளிக்களப் படப்பிடிப்பில் ஒரு தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரிப்பதென்று திட்டமிட்டேன். அது ஒரு பயிற்சியளிப்பதற்கான தயாரிப்பு மட்டுமே. ஏனெனில், அத்தகைய நாடகத் தயாரிப்புகளைக் கிரமமாகத் தயாரிக்கக்கூடிய நிதிநிலைமை அப்போது ரீவீஜ-யிடம் இருக்கவில்லை. இந்த நாடகத் தயாரிப்புக்கான செலவை ஈடுசெய்யும் வகையில் ஒரு அனுசரணையாளரை பாலேந்திரன் ஏற்பாடு செய்தார். எழுத்தாளர், கவிஞர் கலைவாணி இராஜகுமாரனின் நாடகப்

பிரதியொன்றைத் தயாரிப்புக்காகத் தெரிவுசெய்தேன். 'நாற்சார வீட்டினிலே' என்ற அந்தப் பிரதி மேடைக்காக எழுதப்பட்ட நாடகம். ஊரில் நாற்சார வீடென்று சொல்லப்படுகின்ற பழைமையான, பெரிய வீட்டில் வாழ்ந்த குடும்பத்தின் தலைவியான தாயார், கனடாவுக்குக் குடிபெயர்ந்த தனது மகனின் வீட்டில், நான்கு சுவர்களுக்குள் அடைபட்டு வாழும் நிலையை விளக்கும் யதார்த்த நாடகம். அதை அரைமணித்தியாலத் திரை நாடகமாக எழுதியிருந்தேன். இலங்கையின் மூத்த வானொலி, மேடை, திரைப்பட நடிகையான சுப்புலக்சுமி காசிநாதன் அவர்கள் பிரதான பாத்திரத்தில் நடிக்க, சுகந்தன், மயில், பவானி சத்தியசீலன் ஆகியோர் ஏனைய பாத்திரங்களில் நடித்தார்கள். விஜயகுலதுங்கத்தின் வீட்டில் படம் பிடிக்கப்பட்ட இந்த நாடகத்தில் வரன் படப்பிடிப்பாளராகப் பணியாற்றினார். ரீவீஜ-யின் தயாரிப்புப் பிரிவில் பணியாற்றிய அனைவரும் இந்தப் படப்பிடிப்பில் ஏதாவதொரு பங்களிப்பைச் செய்பவர்களாகவோ தயாரிப்பை அவதானிப்பவர்களாகவோ பங்குபற்றினார்கள். ரமேஷ் ராஜதுரை நாடகம் இயக்குவதை அவதானிப்பவராக என்னுடன் சேர்ந்து பணியாற்றினார். படப்பிடிப்பைத் திட்டமிட்டவாறு இரண்டு நாட்களில் நடத்தி முடித்தோம். அப்போது மிக இளவயதினராக இருந்த திலீபன் ராஜலிங்கம், படத் தொகுப்பாளராகப் (editor) பணியாற்றினார். அவரது வீட்டில்வைத்துத் தனது கணினிகளைப் பாவித்தே அவர் படத்தொகுப்பைச் செய்தபோது ரமேசும் நானும் சென்று அவருடனிருந்து அந்த நாடகத்தைச் செய்துமுடித்தோம். நாடகத்துக்கான இசையை எஸ்.வீ. வர்மன் தனது வீட்டிலுள்ள கலையகத்திலேயே ஒலிப்பதிவு செய்து தந்தார். அந்த நாடகம் ஒளிபரப்பப்பட்டபோது, அது பயிற்சிக்காகத் தயாரிக்கப்பட்ட நாடகம்போலல்லாது, ஒரு தொழில்முறைத் தயாரிப்பாகவே அமைந்து நேயர்களின் வரவேற்பைப் பெற்றது. இவ்வாறு படிப்படியாகப் பெரிய தயாரிப்புகளைச் செய்ய, ரீவீஜ இளைஞர்களின் தன்னம்பிக்கை மட்டம் உயர்ந்து செல்வதை அவதானிக்கமுடிந்தது.

**விவரண நிகழ்ச்சி:**

அடுத்து, காத்திரமான விவரண நிகழ்ச்சியொன்றை ரீவீஜ தயாரிப்பாளர்கள் தயாரிக்கவேண்டுமென்று விரும்பினேன். விவரண நிகழ்ச்சியென்பது, தகவல் நிகழ்ச்சிகளின் சிறப்பான வடிவம். வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களுக்கான மிக முக்கியமான நிகழ்ச்சி. வானொலியில் இது உரைச்சித்திரம் (feature) என்று அழைக்கப்படும். எந்த விடயத்தைப்பற்றியும் மிக விரிவாகவும் ஆழமாகவும் அதேநேரம் சுவைபடவும் மக்களுக்கு விளக்குகின்ற இந்தவகை நிகழ்ச்சி, மக்களின் அறிவை வளர்ப்பதால் அது முக்கியமான நிகழ்ச்சியென்று கருதப்படுகிறது. ஏற்கனவே சிறுசிறு விவரண நிகழ்ச்சிகளை ரீவீஜ தொலைக்காட்சியில் செய்திருந்தாலும் மிக விரிவாகச் செய்யக்கூடியதாகவும் அதேநேரம் ஆய்வுக்காக அதிக நேரத்தையும் பணத்தையும் செலவிடவேண்டியிருக்காத ஒரு விடயத்தைக் கையாள்வதென்று எண்ணியிருந்த நேரத்தில் 2003ம் ஆண்டு, மார்ச் மாதம் 20ம் திகதி அமெரிக்கா ஈராக்மீதான போரை ஆரம்பித்தது. வழமைபோல் அமெரிக்காவின் ஆதரவு நாடுகளும் ஈராக்கிற்கு எதிராக அந்தப் போரில் அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டன.

நியூயோர்க்கில் உலக வர்த்தக மையத்தின் மீதான செப்ரெம்பர் 11 தாக்குதலைத் தொடர்ந்து 2001ம் ஆண்டு, ஒக்ரோபர் 7ம் திகதி அமெரிக்கா ஆஃப்கானிஸ்தான்மீதான போரை ஆரம்பித்தபோது ரீவீஜ அப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்தப் போர் பற்றிய செய்திகளை எமது அன்றாட செய்தியறிக்கையில் ஒளிபரப்பியதோடு, அந்தப் போர் பற்றி ஓரிரு செய்திக்கண்ணோட்டங்களிலும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் ரீவீஜ அதிலே பெரிதாகக் கவனம் செலுத்தவில்லை. ஆஃப்கானிஸ்தான் மீதான போர், இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கான பதில் நடவடிக்கையாகவே மக்களால் பார்க்கப்படுமென்பதால் அதுபற்றி விரிவாக ஆராய்வதற்கோ பேசுவதற்கோ அவசியமிருக்கவில்லை.


ஆனால், 2003ம் ஆண்டில் ஈராக்மீது அமெரிக்கா தொடுத்த போரும் அமெரிக்காவின் நேச நாடுகள் அதில் பங்குபற்றியமையும் அமெரிக்கா தொடுக்கின்ற போர்களின்மீது மக்களை சந்தேகம்கொள்ள வைத்தது. ஈராக் பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களை வைத்திருப்பதாகக் குற்றம்சுமத்தி அமெரிக்கா போர் தொடுத்ததை சாதாரண மக்கள்கூட நம்பவில்லை. ஈராக் அதிபர் சதாம் ஹுசெயின் அவர்கள் இராணுவச் சீருடையில் பற்றவைத்த சுருட்டுடன் மக்கள் மத்தியில் நின்று அமெரிக்காவுக்கு சவால் விட்டு, வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தமை மக்களின் அபிமானத்தைப் பெற்றிருந்தது.

அதுமட்டுமல்ல, இதழியலைப் (journalism) பொறுத்தளவிலும் அது ஒரு முக்கிய யுத்தமாகக் கவனத்தைப் பெற்றது. அந்த யுத்தத்தில்தான் அமெரிக்கா முதல்முறையாக செய்தியாளர்களைப் போர் வீரர்களோடு யுத்தமுனைக்கு அனுப்பி Embedded Jaurnalism என்னும் செய்தி சேகரிக்கும் முறையை அறிமுகப்படுத்தியது. இந்தவகை செய்தி சேகரிக்கும் முறையை இதழியல் தர்மத்தை மதிக்கும் செய்தியாளர்கள் வரவேற்கவில்லை. துருப்பினருடன் செல்லும் செய்தியாளர்களுக்குப் படையினர் குண்டுகளை ஏவுவது மட்டுமே தெரியும். அவை எங்கு போய் விழுந்தனவென்று தெரியாதென்று வாதிட்டார்கள். படையினருடன் செல்லும் செய்தியாளர்கள் யுத்த வீரர்களின் நடவடிக்கைகள்பற்றி மட்டுமே செய்திகளை அனுப்புவார்கள். யுத்தத்தால் பாதிக்கப்படும் பொதுமக்களைப் பற்றி அவர்களால் சரியான தகவல்களைக் கொடுக்கமுடியாதென்பதே அதன் அர்த்தம். இந்தச் செய்தி வழங்கும் முறையை இலங்கைப் படையினரும் 2009ம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது பின்பற்றியதாக அறிகிறேன்.

இப்படிப் பல காரணங்களால் முக்கியத்துவம்பெற்ற ஈராக் போர் பற்றிய விவரணத்தை ஒரு தொடர் நிகழ்ச்சியாக ரமேஷ் ராஜதுரை தயாரித்தார். நான் அதற்கான பிரதிகளை எழுதி, குரல் கொடுத்தேன். அந்த விவரண நிகழ்ச்சியின்பின்னர் ரீவீஜ-யில் எண்ணற்ற விவரண நிகழ்ச்சிகள் தயாரித்து ஒளிபரப்பப்பட்டன. ரீவீஜ-யின் பிரதான தயாரிப்பாக விவரண நிகழ்ச்சிகள் அமைந்தன. ரீவீஜ தயாரித்து ஒளிபரப்பிய அனேகமான மிக முக்கிய விவரண நிகழ்ச்சிகளில் பெருமளவானவற்றை ரமேஷ் ராஜதுரை தயாரித்தாரென்பது குறிப்பிடத்தக்கது.


ரீவீஜ
தயாரிப்பாளர்
ரமேஷ் ராஜதுரை

இப்படி நான் தொலைக்காட்சித் துறையில் எவையெல்லாம் முக்கியமானவையோ அவை நிகழ்ச்சிகளாகட்டும், நிகழ்ச்சி நிர்வாகமாகட்டும், தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளாகட்டும், ஒளிபரப்பு நெறிமுறைகளாகட்டும் நான் கற்றவையனைத்தையும் நன்கு திட்டமிட்டு சிறந்தமுறையில் ரீவீஜ-யில் இணைந்த இளைஞர்களுக்குச் சொல்லிக்கொடுத்தேன். அவர்களும் மிகவும் ஆர்வமாகவும் அர்ப்பணிப்புடனும் அவற்றை மிக விரைவாகவே கற்று, தொழில்முறை ஊடகவியலாளர்களாக உருவானார்கள். நாம் எமது காலத்தில் வானொலி, தொலைக்காட்சித் துறைகளில் பெற்ற பயிற்சிகளின் பின்னர் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் அப்படியான பயிற்சிகளை புலம்பெயர் வாழ்க்கைச் சூழலில் ரீவீஜ-யில் பெற்றுக்கொண்டார்கள். ஒரு தமிழ் ஊடக நிறுவனமாக ஊடகத்துறையில் புதிய தலைமுறையினருக்கு பயிற்சிகளை வழங்கிய ரீவீஜ நிறுவனம் அதையிட்டுப் பெருமைகொள்ளலாம். அந்தப் பயிற்சிகளை வழங்கியமை, எனது ஐம்பது வருட ஊடகத் தொழில் வாழ்க்கையில் முக்கிய நிகழ்வு என்ற மகிழ்ச்சியும் மனத்திருப்தியும் எனக்கும் உண்டு.



*wikneswaran.p@thaiveedu.com*

# வேடரும் காலனியமும்

- க. பத்திநாதன்

இன்றைய நவீன உலகில் ஒவ்வொரு நாட்டின் பூர்வீக குடிகளுக்கும் அவரவர்களுக்கான பல சிறப்புரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இது அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா... ஏன், நமது அண்மைய நாடான இந்தியாவிலும்கூட கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆனால் எமது நாடான இலங்கையில் பூர்வ குடிகளான வேடர் என்போர் அரும் பொருட் காட்சியகத்தில் இருக்கும் காட்சிப் பொருட்களாகவும், அழிந்து வரும் உயிரினம் ஒன்றை பாதுகாக்க வேண்டிய பச்சாதாபச் சிந்தனையுடனும் தான் பார்க்கப்படுகின்றனர். இன்னமும் வேடுவர் என்பவர்களுக்கான அடையாளமானது கொத்தும் குழையும், அம்பு வில்லும் கொண்ட மனித உருவங்களைச் சித்தரிக்கும் விம்பமாகவே பார்க்கப்படுகின்றது. இது சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பாரபட்சமின்றி புழக்கத்தில் உள்ளதும் கசப்பான உண்மை.

இலங்கைத்தீவின் பூர்வீக குடிகளாக வேடர்கள் காணப்படுகின்றமை பலருக்கும் தெரிந்த விடயமாகும். அண்மைக்காலமாக வேடர் மானுடவியல் சார் பார்வைகள் பல ஆய்வாளர்களிடையே அகலித்துள்ளன. இது இலங்கையர் நமக்கும் மிகத் தேவையான விடயப்பொருள்தான். காரணம் இன்றைய நவீன உலகானது வரலாறு, பண்பாட்டு மற்றும் மானிடவியல் சார்ந்த ஆய்வாளர்களையே பெரிதும் வேண்டி நிற்கிறது. இலங்கையைப் பொறுத்த மட்டில் இவ்வகையான மானிடவியலாய்வை வேடர் சமூகத்தின் பால் தொடக்கிவிட்ட பெருமை ‘செலிக்மனையே’ சாரும். இது இவ்வாறிருக்க அவரின் காலத்திலும் சரி, அவருக்குப் பின்னரான காலத்திலும் சரி இலங்கையின் ஆதிமக்களான வேடர் சமூகத்தின் வாழ்வும், வளமும் ஓர் அரிய வகை ஆய்வுப்பொருளாகவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது இவ்வகையான ஆய்வுப்பரப்பில் விடப்பட்ட அல்லது விட்டுக்கொண்டு இருக்கின்ற மிகப்பெரும் ஆய்வறிவுத்தவறாகும்.

வரலாற்றுக் காலம் முதல் இன்றைய காலம் வரை இலங்கையின் வேடர் சமூகம் சார்ந்தும், அவர் தம் பண்பாடு, சடங்கார்ந்த விடயங்கள் மற்றும் மரபு சார்ந்து பல ஆதாரங்கள் தீவின் நெடுகிலும் கொட்டிக்கிடக்கின்றன. அவ்வாறு இருக்கையில் ஏன் இச்சமூகம் சார்ந்த பார்வைகளானது, இன்னமும் ஒரு பாவப்பட்ட உயிரிக்கு உதவுவதாகவும், நம்மால் தான் உதவ முடியும் என்றெண்ணிக் கொண்டு இச்சமுகத்தின்பால் பூர்வ குடியென்ற உருவைச் சிதைப்புச் செய்வதாகவும் காணப்படுகின்றன, காணப்பட்டு வருகின்றன என்பதனை நுணுகி ஆராயும் போதுதான், சுனாமிச் சுழியாய் பீடித்துள்ள இக்காலனிய சிந்தனையும், அதன் சிலந்திச் சிக்கலும் பற்றி அறியக்கிடைக்கின்றது.

## காலனியம் என்றால் என்ன?

‘குடியேற்றவியல் (Colonialism) என்பது, ஒரு தேசத்தின் எல்லைகளுக்கு வெளியே உள்ள ஆட்சிப்பகுதி ஒன்றின் மீது, ஒரு குறித்த தேசமானது தனது இனத்தை குடியேற்றம் செய்வதன் மூலமோ, தனது நிர்வாக அலகினடிப்படையில் அடிமைப்படுத்துவது மூலமோ, அதன் இறைமையை விரிவாக்கம் செய்வதைக் குறிக்கும். இக்குடியேற்ற செயற்பாட்டின் போது உள்ளூர் மக்கள் நேரடியாக அடிமைப்படுத்தப்படுகிறார்கள். அல்லது, சொந்த நிலங்களைப் பறிகொடுத்து, இடம்பெயரச் செய்விக்கப்பட்டு, திக்கற்றவர்களாக ஆக்கப்படுகின்றார்கள்.

குடியேற்றம் செய்பவர்கள், பொதுவாகக் குடியேறிய பகுதிகளின் நில வளங்கள், சுதேசிகளின் உழைப்பு, சமயச்சடங்குகள் என்பவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். சில வேளைகளில் தமது பண்பாட்டு, சமய மற்றும் மொழிக் கட்டமைப்புகளை உள்ளூர் மக்கள் மீது திணிப்பதும் உண்டு. இவ்வாறான குடியேற்றலியம் என்பது மேற்படி செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கும், வளர்த்தெடுப்பதற்குமான ஒரு தொகுதி நம்பிக்கைகளைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுவதும் உண்டு.

பொதுவாக, குடியேறுபவர்களுடைய பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும், உள்ளூர் மக்களுடையவற்றைக் காட்டிலும் உயர்ந்தவை என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருப்பது தான் குடியேற்றவியலின் உச்சகட்ட வெற்றி. குடியேற்றலியத்தின் தோற்றப்பாடு, பல்வேறு காலகட்டங்களிலும் உலகம் தழுவிய நிலையில் காணப்பட்டாலும், இது பொதுவாக ஐரோப்பியப் பேரரசுகள் தொடர்பிலேயே சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றது.’ (நன்றி - விக்கிபீடியா).

இவ்வாறான போக்குடன் தான் காலனியம் என்ற சொல்லாடலானதும், அதன் கருத்தியலும் இன்று வரையிலும் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதையொட்டிய பார்வையுடன் நவீன சிந்தனையையும், காலனியத்தினையும் பார்க்க பலரும் எத்தனிக்கின்றனர். அதனடிப்படையில் பார்க்க முனைந்தன் விளைவாகவே காலனியவாதிகளாக ஐரோப்பியர் மாத்திரம் கருத்தில் எடுக்கப்படுவது ஆகும். இது இவ்வாறிருக்கையில் தான் இலங்கையின் வேட சமுகத்துள் காலனியப் பாதிப்பை ஐரோப்பியர் மாத்திரம் ஏற்படுத்தவில்லை எனும் பார்வையுடன் இப்பத்தி விரிகின்றது.

## ஐரோப்பியக் காலனியமும் வேடரும்:

ஐரோப்பியருக்கும் அப்பால் எவ்வகையான காலனியவாதிகள் உள்ளனர், காலனியம் என்பது உண்மையில் எதைக் குறிக்கின்றது முதலான சிந்தனைகளை அறிஞர்கள் பலர் ஏற்படுத்தியுள்ளனர். அவ்வகையில்த்தான் ஐரோப்பியரும், அவர்தம் நவீன கல்வி, சிந்தனை என்பன இலங்கை வேடுவர்களின் மீது ஏற்படுத்திய காலனியத் தாக்கதினைச் சற்றுப் பார்க்கலாம்.

ஏலவே சொன்னது போல் நவீன கல்வியும், அதன் சிந்தனையும் பின்வரும் நடைமுறைகளை வேட இனக்குழுமம் சார்ந்து ஏவிவிட்டது. அதாவது:

- நாகரிகம் அடையாதவர்களை நாகரிகம் அடைய வைக்கப்

போகின்றோம்.

- அபிவிருத்தி அடையாதவர்களை அபிவிருத்தி அடைய வைக் கப்போகின்றோம்.
- கல்வியறிவு இல்லாதவர்களுக்கு நவீன கல்வியைக் கொடுக்கப் போகின்றோம்.

எனும் நயவஞ்சகத் தொனியில் உண்டு பண்ணிய தொன்னூற்றி ஐந்து வீதமான வேலைப்பாடுகள் வேடர் இனக்குழுமத்தினை அவர்தம் தனித்துவப் போக்கில் இருந்து விடுபடச்செய்தனவாக வும், பண்பாட்டுச் சிதைப்புச் செய்தனவாகவுமே காணப்படுகின் றன. அவை இன்று வரை பல்வேறு பரிணாமங்களில் நீங்காத நோயாய் பீடித்த வண்ணமே உள்ளன.

முதலில் வேடர் தம் பண்பாட்டு மரபுகளான வாழ்க்கை முறை, மரபு, சடங்கார்ந்த நடவடிக்கைகள் என அனைத்துக் கூறுகளினை யும் எளிய விடயங்களாகக் கருதும் மேட்டுமை சிந்தனையையும், கல்விப்புலத்தினையும் ஏற்படுத்தினர். பின்னர் பொருளாதார ரீதி யில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துகிறோம் என்ற போர் வையில் இயற்கை வாழ்விட முறைகளைச் சிதைத்தனர். இவ்வா றான செயற்பாடுகளினால் வேடக்குழுக்களின் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறை, அவர் தம் சூழலியல் சார்ந்த அறி வுப்புலமை, இயற்கையைப் பேணி வந்த நற்றிறக்கட்டமைப்புக் கள் என்பன எவ்வாறு அல்லோல கல்லோலப் பட்டுப்போயுள்ளன, போகின்றன என்பது பற்றி இன்னமும் ஆழமாக புரிந்து கொள்ளப் படாமலே உள்ளது.

இலங்கையில் இன்று வாழ்கின்ற வேட சமூகத்தின் மூத்த பிரதி நிதி ஒருவர் தனது மன ஆதங்கத்தினை இவ்வாறு வெளிப்படுத்தி னார். ‘இந்த நாட்டில் பூர்வ குடிகளான நாம் எமது ஆதிப்பண் பாட்டினை எந்த வித நவீன சிந்தனைகளும் இடையில் புகுந்து கொள்ளா வண்ணம் மிகவும் சாதாரணமாகவும், சுதந்திரமாகவும் கற்றுக் கொள்வதற்கான ஏதாவது வாய்ப்புக்கள் உண்டா? அன்று தொடங்கி இன்று வரைக்குமான அரசுகளால் ஏற்படுத்தப்படுகின்ற எந்த நடவடிக்கைகளை உங்களால் எமக்கான அபிவிருத்திச் செயற்பாடாகச் சொல்ல முடியும்? எமது பிள்ளைகள் எங்கள் மொழியில் தமது கல்விப்புலமையை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பும் இல்லை. எமது பண்பாட்டை எமது குஞ்சுகளுக்குக் கடத்தக்கூடிய சூழலும் இல்லை. இது இவ்வாறு இருக்கையில் தான் இவற்றை வெறும் மனக்குமுறலாக மட்டும் இன்றைய அறி வுப்புலத்தினரால் கடந்து செல்ல இயலுமா?

இவரின் இக்கருத்தின் ஊடாக சில விடயங்களை நாம் கேள்விக்கு உள்ளாக்க வேண்டிய தேவையுண்டு.

## ஐரோப்பியரை விடுத்தும் காலனியவாதிகள் உண்டா?

இக்கேள்வி பலருக்கு வியப்பை உண்டு பண்ணலாம். காரணம் எமது அறிவுப்புலமானது காலனியம் சார்ந்து இவ்வாறான மீள் வாசிப்புக்கு வழிசமைத்தது குறைவு. வேடர் வழக்காற்றியலைப் பொறுத்த மட்டில் காலனியத் தாக்கமானது பல் நெடுங்காலமாக ஏற்படுத்தப்பட்டு வந்துள்ளமையினை நன்கறிய முடியும். அதற்கு வரலாற்று நெடுகிலும் இலங்கையில் வந்தேறிய சோழர் முதலான வந்தேறு குடிகளே சாட்சியாகும். காலனியம் சார்ந்தும், நவீனவா தத் தாக்கம் சார்ந்தும் ஒரு வேட்டுவ முதுசம் தனது வரலாற்றுப்பு ரிதலை இவ்வாறு பதிவு செய்தார். ‘குஞ்சான் (மகன்) நம்மட சமூ கத்த கட்டுப்படுத்தினது வெள்ளக்காரன் மட்டுமில்ல. அந்தக் காலத்துல இருந்து இஞ்ச வந்து குடியேறின வந்தேறு குடிகளான சோழர் தாண்டா.’

இவரது இம்மாணிக்கக் கருத்தின் ஆழமானது மிகப்பெரியது. உண்மையில் ஐரோப்பிய வருகைக்கு முன்னரான பிற நாட்டவ ரின் வருகையினை நாம் இவ்வாறுப் பிரித்துப் பார்க்க முடியும்.

- இலங்கையின் தெற்கேயிருந்த ருகுணப் பேரரசு.
- மட்டக்களப்பு மண்முனையில் உன்னரசகிரியைத் தோற்றுவித்த வர் எனக்கூறப்படும் வெளிலிருந்து வந்த ஆடகசவுந்தரியின் ஆட்சி.
- சோழப்பேரரசின் ஆட்சி.
- கிழக்கில் ஆட்சிபுரிந்த வெளியிலிருந்து வந்த மாஹோன் ஆட்சி.
- ஐரோப்பியக் காலனியவாதிகளான போர்த்துகேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் அரசு.
- சுதந்திரத்திற்குப் பின்னரான சுதேசிய அரசு.

(நன்றி:- பேரா. மௌனகுரு)

மேற்சொல்லப்பட்ட மற்றும் சொல்லத்தவறிய அனைத்து வகை யான வந்தேறு குடிகளும் வேட்டுவக்குடிகளை தமக்கிசைந்த வகைகளில் சாதிகளாகவும், குடிகளாகவும், ஆரியச் சமய இடைச் செருகல்களினை மேற்கொண்டனர். மாஹோனின் வருகையின் பின் னர்தான் இயல்பாக இருந்த சமூகக்கட்டமைப்பானது குடிகள் எனும் ஏற்றத்தாழ்வுகளுக்குள் புகுந்து கொண்டமைக்கு வரலாறு சாட்சி.


ஆரியரும் சரி, ஐரோப்பியரும் சரி மதம் சார்ந்த விடயங்களிலும், சடங்கார்ந்த நடவடிக்கைகளிலும் தான் மிகப்பாரியளவிலான கால னியப் போர்களை மிக நுணுக்கமாகத் தொடுத்தனர். தன்னொடு வாழ்ந்த, தனக்காக வாழ்ந்த, முன்னோரை வழிபட்டும் வாழ்வுக் கான ஆதாரமுமாகவுமே வேடுவர்கள் கொண்டு வாழ்ந்தனர். ஆனால் இந்தக் காலனியக்கூட்டங்கள் சொர்க்கத்திற்கு படையல் அனுப்ப வைத்தன. மனிதரை விட மாட்டை உயர்வாக நினைக்க வைத்தன. சக மனிதனிடம் நீர் வாங்கிக் குடிப்பதை விட மாட்டு மூத்திரத்தைக் குடிப்பது புனிதம் என்றன. பல்லாயிரமாண்டுகலாக பேசிய மொழியை நீச மொழி என்றன. இவ்வாறு படிப்படியாக முன்னேறிய இவர் தம் காலனியாதிக்கம் சொந்த நிலத்தையும் பறித்தெடுத்து திக்கற்றவர்களாக ஆக்கியதை பலர் அறிந்தும் அறியாமல் உள்ளனர்.

இன்றைய காலத்தில் காலனியாதிக்கம் பல பரிணாமங்களை மிகச்சாதுரியமாக வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதைப் போல் தனது வேலையைக் காட்டிக்கொண்டுதான் இருக்கின்றது. அண் மைய கால இலங்கையைப் பொறுத்த மட்டில் தமிழர் பிரதேசங்க ளில் புத்தர் சிலையை வைத்தல் பெரும்பான்மைச் சிந்தனை. ஆதிக்க மனோபாவம். ஆனால், வேடர் சமூகங்கள் பரந்து வாழும் கிராமங்களில் தமிழ் தெய்வங்களான அம்மனுக்கு கோயில் கட்டுவதோ, அதை நாகரிகமாக நினைத்து வணங்கப் பண்ண வைப்பதோ, கோயிலின் பெயருடன் ‘ஸ்ரீ’ என்ற எழுத்தைப் புகுத்துவதோ, இன்னும் சொல்லப் போனால் ஒரு இனத்தினை அதன் பெயரையே பொதுவில் சொல்லத் தயங்கவைப்பதும்கூட பெரும்பான்மைச் சிந்தனை. ஆதிக்க மனோபாவம். இவ்வாறு பல வற்றைச் சொல்லலாம், இப்பத்தி போதாது.

ஆகவேதான், காலனியம் என்பது ஐரோப்பியருடன் வந்து முடிந்த விடயம் மட்டுமல்ல. அது, ஆரியக்காலம் முதல்... ஏன் இன்றும் மேட்டுமைச் சிந்தனையுடன் காணப்படும் சாதிய ஒடுக்குதலும் இன, மத, மொழி சார்ந்த சகல விடயங்களும்... இன்று வரை வேடப் பழங்குடிகளை காலனியாதிக்கத்துள் வைத்திருப்பதை புத் திஜீவிகள் துரிதமாக உணர வேண்டிய காலம்.



pathinathan@thaiveedu.com




முழுமையாக விரட்டிவிட முடியாதபடி எனது கண்களின் ஓரத்தில் நித்திரை குடியிருந்தது. குளியலறைச் சத்தங்களையும் தாண்டி மகளின் பாட்டுக்கேட்டுக் கொண்டிருந்தது. மனைவி குசினிக்குள் தேநீர் தயாரித்தபடி திட்டிக் கொண்டு இருந்தாள்.

'இருட்டு நேரத்தில இப்ப என்ன அவசரத்துக்கு இவள் விழுந்து கெட்டு போகணும் எண்டு அடம்பிடிக்கிறாள். வயசுக்கு வந்த பொம்பிளப்பிள்ளை எண்ட ஒரு பயமும் இல்லை. எல்லாம் இந்த மனுசன் கொடுக்கிற இடம்.' எல்லா சத்தங்களையும் தாண்டி மனைவியின் பேச்சும், சலிப்பும் மிகத்தெளிவாக கேட்டுக்கொண்டிருந்தது.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கல்விபயிலும் மகள் விடுமுறை வந்ததும் திருகோணமலைக்கு ஓடுவது ஊர்மேல் உள்ள பாசம் என்று மனைவி நினைத்துக்கொண்டிருக்கிறாள். இன்

றைக்கு எங்க சுத்தப் போறாளோ என்று பயந்து கொண்டிருந் தேன் நான்.

நேரம் அதிகாலை 4.30ஐ நெருங்கிக்கொண்டிருந்தது. ஏலவே கட்டி வைக்கப்பட்டிருந்த பயணப்பொதிகளை பத்திரமாக வாக னத்தில் ஏற்றிக் கொண்டு இருந்தேன். எனக்கும் மனைவிக்கும் இடையில் பிள்ளைகள் தொடர்பில் எழுதப்படாத ஒரு ஒப்பந்தம் இருந்தது. அது மனைவியின் பக்கம் இருந்து வந்த ஒரு வற்பு றுத்தலுடன் கூடிய உடன்படிக்கை என்றும் கொள்ளலாம்.

'நம்மிட பிள்ளைகளுக்கு எது வேணுமெண்டாலும் சொல்லிக்கொ டுங்க ஆனா இந்த வரலாற்றைத் தேடுறன் எண்டு நீங்க அழிஞ் சமாதிரி அதுகளையும் அழிச்சிடாதிங்க' என்ற வாக்கியந்தான் அந்த கண்டிப்பான ஒப்பந்தத்தின் சுருக்கம். வெளிப்படையாக ஒப்பந்தம் என்று நான் சொல்லிக்கொண்டாலும் தனிப்பட்டரீதியில் மீறமுடியாத உத்தரவாகவே அதைக் கருதவேண்டியிருந்தது.

எங்கள் ஒப்பந்தத்தைக் காப்பதில் நான் நேர்மையாகவே நடந்து கொண்டிருந்தேன். ஆனால் விதி வலியது பிள்ளைகள் தாங்களா கவே சுயதேடல்கள் ஊடாக வரலாற்றுப் பொக்கிஷங்கள் மீது அதிக ஆர்வம் கொண்டவர்களாக வளர்ந்து வந்தார்கள். அதுமட் டுமில்லாது தங்களுக்குப் புரியாதவற்றைத் தெளிந்துகொள்வதற் காக சிலவேளைகளில் என் விருப்பத்தையும் மீறி இரகசியமாக என்னை தங்களுடன் கடத்திச் சென்றுவிடுவார்கள்.

இயலுமானவரை பிள்ளைகளுடன் சேர்ந்து ஒப்பந்தமீறல்களைச் செய்யாமல் இருப்பதற்கும், ஒருவேளை தவிர்க்கமுடியாமல் செய் தால் மாட்டிக்கொள்ளாமல் இருப்பதற்கும் எனக்குத் தெரிந்த எல்லா வித்தைகளையும் பயன்படுத்தி திண்டாடிக்கொண்டிருந் தேன் நான். இன்றைய கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிய பயணமும் அது ஆரம்பிக்கின்ற அதிகாலை வேளை யும் எனக்கு மிகுந்த சந்தேகத்தை தருவதாக இருந்தன.

மகள் ஏதோ திட்டம் போட்டு வைத்திருக்கிறாள் போலிருந்தது எனக்கு. இத்தனை அவசரம் அதற்காகத்தான் இருக்கும். நாளை ஞாயிற்றுக்கிழமை அவளுடைய நண்பிகளுடன் சுற்றுவதற்காக தீர் மானித்திருப்பாள். எனவே இன்று போகும் வழியில் எதையோ பார்த்துவிட்டுப் போகப்போகிறாள் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன். பயண ஆயத்த வேலைகள் முடிந்ததும் எங்களைச் சுமந்துகொண்டிருந்த வாகனத்தை மிகலாவகமாத் திருப்பி பிரதான வீதியில் மிதமான வேகத்தில் ஓடத்தொடங்கினாள் மகள். 'ஒரு அவசரமும் இல்ல ஆறுதலா போகலாம்' என்றாள் பின்னிருக்கை யில் இருந்தபடி மனைவி. 'ஓம் அம்மா. அப்பா முன்னுக்குத் தானே இருக்கிறார். நீங்க பயப்படாம தூங்குங்க' என்றாள் மகள்.

வாகனம் சன நெருக்கம் இல்லாத வேளை என்பதால் மெல்ல மெல்ல வேகமெடுத்து பாதையில் விரைந்துகொண்டிருந்தது. முன் னால் வரும் வாகனங்களின் முகப்பு வெளிச்சம் பாதையை மறைத்துப் பயத்தினைத் தந்தது. இருக்கையில் நிமிர்ந்து உட் கார்ந்தவாறு 'பாத்து ஓடு பிள்ளை' என்றேன். 'உங்களுக்கு வயசா யிடிச்சு அப்பா' என்றாள் கொடுப்புக்குள் சிரித்தவாறே மகள். பின் னால் இருந்த மனைவி கடவத்தை வரும் முன்னமே உறங்கிப் போயிருந்தாள்.

'அப்பா... நாம இண்டைக்கு கந்தளாய்ச் சிவன் கோயிலுக்கு போறோம். அங்க நங்கை சானியின் கல்வெட்டை நான் பாக்க ணும்' என்றாள் சாதாரணமாக. சண்டாளி இப்போதாவது சொன் னாளே என்று மனதுக்குள் திட்டிக் கொண்டேன். 'கந்தளாய்க்கெல் லாம் சரிவராது. அம்மாவுக்கு முழங்கால் நோவு. இறங்கியெல் லாம் ஏறேலாது. நேர வீட்ட போவோம்' என்றேன் நான்.

'அதெல்லாம் நான் சமாளிச்சுக்கொள்ளுறன். இப்ப எனக்கு நங்கை சானியப் பற்றிச் சொல்லுங்க' என்றாள் சிரித்தவாறே மகள். 'கரைச்சல் குடுக்காத பிள்ளை, எனக்கு அதெல்லாம் மறந்




துபோச்சு' என்றேன் சற்றுக் கடுமையாக. 'மறக்கிற விசயம் மாதி ரித் தெரியலையே அப்பா. நங்கை சானியிட கல்வெட்டைப் பற்றி நீங்க எழுதின கட்டுரைத்தாளில ஆதினி, நந்தன், கேசவன், அறி வாட்டி இன்னும் கனபேரப்பற்றி நீங்க குறிப்பெல்லாம் எழுதி வச் சிருக்கிறத பார்த்தனான். எழுதின சிலது கொஞ்சம் அழிஞ்சும் போயிட்டுது. என்ன நாவல் எழுத முயற்சி செய்தீங்களா?'

மகள் கேட்டுக்கொண்டிருக்கும்போதே எண்ணங்கள் கடகடவென காலங்கள் கடந்து வரலாற்றுத் தேடல்களுக்குப் பின்னால் பைத்தி யம் பிடித்ததுபோல அலைந்த காலங்களுக்குள்போய் சிக்கிக் கொண்டது. வரலாற்றுப்போதை தலைக்கேறி பித்துப்பிடித்துப் போயிருந்த காலப்பகுதியொன்றில் வரலாற்று நாவல் எழுதவும் நான் முயற்சி செய்திருந்தேன். யார்செய்த புண்ணியமோ அவ்வா றான அபாயகரமான சோதனைகளில் இருந்து தமிழ் இலக்கிய உலகம் தப்பித்துக்கொண்டது.

நிஜவாழ்க்கையின் அழுத்தங்கள் என்னை உலுப்பி சுயநினை வுக்கு கொண்டுவந்து, என்கால்களைத் தரையில் தொடச்செய்த நாளொன்றில் நான் தேடித்தேடிச் சேகரித்த வரலாற்றுப் புதையல் களையெல்லாம் மூட்டைகட்டிவைத்துவிட்டு ஒரு சாதாரண குடும் பஸ்தனாக மாறிப்போனேன். சுமார் இருபது வருடங்களுக்கு பின் நங்கை சானியை ஞாபகப்படுத்துகிறாள் மகள். ஆயிரம் வருடங்க ளுக்கு முன்னால் கந்தளாயில் நடமாடித்திரிந்த அந்தப்பெண் ணும், அவள் காலத்தவராக நான் கற்பனைபண்ணி வைத்திருந்த மனிதர்களும் எனது மனக்கண்ணில் மறுபடியும் வந்துபோனார்கள்.

'சொல்லுங்கப்பா.... பிளீஸ்... சொல்லுங்க....' மகள் விடுவதாக இல்லை. சிறுவயது முதலே மகனுக்கும், மகளுக்கும் கதை கேட் பது என்றால் அலாதி பிரியம் ஏதோ வசியம் செய்தவர்கள் போல மனம் ஒன்றி நேர காலம் பார்க்காமல் கதை கேட்டுக் கொண்டி ருப்பார்கள். நானும் எந்தத் தயாரிப்பும் இல்லாமல் வாயில் வந் தபடி கதை சொல்லிக் கொண்டே இருப்பேன்.

உருண்டோடிப் போன இத்தனை வருடங்கள் அவர்களது உடலி லும், வயதிலும் மாற்றத்தை உருவாக்கி இருக்கிறதே தவிர கதை கேட்பதில் அவர்களை இன்னும் குழந்தையாகவே வைத்திருப்பது ஆச்சரியம் தருவதாக இருந்தது. வேறு அவசர வேலைகள் வரும் பொழுது மகனை ஒருவாறு பேசி சமாளித்து கதை சொல்வதில் இருந்து விலகிவிடலாம் ஆனால் மகள் ஒரு பிடிவாதக்காரி தனக்கு திருப்தி வரும் வரை கதை கேட்டுக் கொண்டே இருப் பாள். இலேசில் அவளிடமிருந்து சாக்குப் போக்குச் சொல்லி தப் பிப்பது என்பது இயலாத காரியம்.

பின்னிருக்கையை பயத்துடன் திரும்பிப் பார்த்தேன். வயது தந்த அயர்ச்சியில் மனைவி தன்னைமறந்து தூங்கிக்கொண்டிருந்தாள். மகள் விடுவதாக இல்லை. தனது இறுதி முயற்சியாக 'நேற்று முழுக்க அலைச்சல் அப்பா, இப்ப எனக்கு நித்திரை வாற மாதிரி இருக்குது' என்றபடி உடலை சற்று வளைத்து சோம்பல் முறிப்பது போல் செய்தாள் மகள். நான் கவனித்ததாகக் காட்டிக்கொள்ளா மல் இருந்தேன். ஆனாலும் என் நினைவுகள் வரலாற்றுக் காலத்

திற்கு போவதும் வருவதுமாக சலனப்பட்டுக் கொண்டிருந்தது.

பேச்சுவார்த்தை பயனளிக்காமல் போகவே வேண்டுமென்றே வீதியில் இருந்த சிறிய பள்ளத்தில் வாகனத்தைப் போட்டு எடுத்தாள் மகள். நல்லவேளை மனைவி விழித்துக்கொள்ளவில்லை. 'ஏய்... உன்ர சேட்டைக்கு ஒரு அளவில்லையா?' என்று அரட்டியபடி கொஞ்சம் முறைத்துப் பார்த்தேன். மகள் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. பிடிவாதக்காரி... ஐந்திலேயே வளைச்சிருக்கணும் என்று என்னையே நான் நொந்துகொண்டேன். இனியும் மௌனமாக இருந்தால் வயலுக்குள் வாகனத்தை இறக்கி ஓட்டினாலும் ஓட்டுவாள் என்று நினைத்தபடி கதையைச் சொல்லத் தொடங்கினேன். இருந்தாலும் வரட்டுக் கௌரவம் விடவில்லை.

'நீ கேட்ட கதையில்லை. ஒரு பிடிவாதக்காரியிட கதைதான் சொல்லப்போறன். அதில ஒரு ஓரத்தில நங்கை சானியும் வருவா' என்றேன் பொய்க்கடுப்புடன். 'என்ர அப்பாவப்பற்றி எனக்குத் தெரியாதா' என்று தொடங்கி எனக்கு ஐஸ் வைப்பதற்காக என்னென்னவோவெல்லாம் மகள் சொல்லிக்கொண்டிருந்தாள். எனக்கு எதுவுமே காதுக்குள் விழவில்லை.

மனது முழுக்க கந்தளாய்க் கதைக்களம் நிறைந்திருந்தது. கந்தளாய்ச் சிவாலயத்தில் உள்ள ஆயிரம் ஆண்டுகள் பழமையான அந்தக் கல்வெட்டுக்களைத் தடவிய நாள்முதல் கருவாகி ஒருமாத காலத்துக்குள்ளேயே முழு உருவாகிப்போன ஆதினியின் கதை இருபது ஆண்டுகள் பிரசவிக்கப்படாமல் எனக்குள் ஒளிந்து கொண்டிருப்பதை அப்போதுதான் உணரத்தலைப்பட்டேன். இந்தக் கால இடைவெளி எனக்குத்தான் வயதைக்கூட்டியிருக்கிறதே தவிர கதை அதே இளமையோடு இருப்பதுபோலவே தோன்றியது.

'கனகாலத்துக்கு முதல் யோசிச்ச கதையச் சொல்லுறன். இடையில கேள்விகேட்டு என்ன குழப்பக்கூடாது. ம்... போட்டுக் கேட்டால் காணும்' என்று சொன்னதோடல்லாமல் 'என்னதான் கதையக் கேட்டாலும் ரோட்டில கவனம் இருக்கணும்' என்று கண்டிப்பான குரலில் கூறினேன். பதிலுக்கு 'ம்...' என்ற சத்தம் மட்டும் பக்கத்தில் இருந்து வந்தது.

## இடையர்கல்:

கதை கேட்கிற அவசரத்தில 1996 என்று நினைத்துக் குழப்பிக் கொள்ளக்கூடாது. ஆதினியின் கதை இன்றைக்கு சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் கந்தளாயில் நடந்தது.

பொ.ஊ.பி.(கி.பி.) 1096 ஆவணி மாதம் நான்காம் திகதி மாலை நேரம்.

மூன்று பக்கங்களும் மலைகளால் சூழப்பட்டு பிரம்மாண்டமான அணைக்கட்டின் உதவியுடன் உருவாக்கப்பட்டிருக்கும் கந்தளாய் குளம் மாலை நேரச் சூரிய ஒளியில் மனதுக்கு இதமான காட்சியைத் தருகிறது. கந்தளாய்க் குளக்கட்டின் ஊடாகச் செல்கின்ற பெருந்தெரு நம்மை பிராமணர்கள் வாழ்கின்ற சதுர்வேதி மங்கலம் என்ற பிரம்மதேயத்திற்குள் கொண்டு சேர்க்கிறது.

குளத்துக்கு அருகில் உள்ள மேடான நிலப்பரப்பில் விஜயராஜ சதுர்வேதிமங்கலம் என்ற பிராமண குடியிருப்பு அமையப்பெற்றிருக்கிறது. குடியிருப்பின் தாழ்வான சுற்றயல் பகுதிகளில் வடபிடாகை, தென்பிடாகை என்ற இரு பிரதேசங்கள் இருக்கின்றன. அவற்றில் கம்மாளச்சேரி, பறைச்சேரி, இடைச்சேரி, வலைச்சேரி, தீண்டாச்சேரி, வண்ணாரச்சேரி முதலான பல்வேறு சேரிப்புறங்கள் அமைந்திருக்கின்றன. கந்தளாய் குளத்தில் இருந்து நீரைக் கொண்டுவரும் இரண்டு பெரும் வாய்க்கால்களான விக்ரமசோழ வாய்க்கால், வாசுதேவ வாய்க்கால் என்பன சதுர்வேதி மங்கலத்தினை ஊடறுத்து விக்ரமசோழ வாய்க்கால் வடபிடாகை ஊடாகவும் வாசுதேவ வாய்க்கால் தென்பிடாகை ஊடாகவும் செல்கிறது. இவற்றிற்கு இடைப்பட்ட பிரதேசங்களை மேற்படி வாய்க்கால்களில் இருந்து வரும் கிளையாறுகளான கண்ணாறுகள் வளமுள்ளதாக்கின்றன.

விஜயராஜ சதுர்வேதிமங்கலம் மிகவும் திட்டமிட்ட முறையில் உருவாக்கப்பட்ட அனைத்து வசதிகளும் கொண்டமைந்த ஒரு நகரப்பகுதியாகும். ஆலயங்கள், மருத்துவமனை, அரச கட்டடங்கள், அங்காடிகள், மடங்கள், கல்விக்கூடங்கள், மக்கள் குடியிருப்புகள் என்று மிக நேர்த்தியான முறையில் வடிவமைக்கப்பட்ட பிரதேசம். இங்கிருக்கும் ஆலயங்கள் கருங்கற்களால் உருவாக்கப்பட்ட கற்றளிகள். நகர மத்தியில் விஜயராஜேஸ்வரம் என்ற மிகப்பெரிய சிவாலயமும் அவ்வாலயத்தில் இருந்து அரைமைல் தொலைவில் கிழக்குப் பக்கமாக முத்தங்கை அம்மன் ஆலயமும் தெற்குப் பக்கமாக சிலமைல் தொலைவில் விஜயராஜ விண்ணகரமும் அமையப்பெற்றிருக்கின்றன. விஜயராஜ விண்ணகரம் ஒரு விஷ்ணு கோயில். இதற்கருகில் இருக்கும் மருத்துவமனைக்கு வீரசோழன் ஆதுலர் சாலை என்று பெயர்.

சதுர்வேதி மங்கலத்தில் இருக்கும் பெருந்தெருக்கள், அங்காடிகள், மடங்கள் என்பனவற்றைப் பார்வையிட்டவாறே ஊரின் எல்லைப்பகுதிக்கு வந்தால் அங்கே செப்பனிடப்படாத குண்டும், குழியுமான வீதிகளைப் பார்க்கலாம். அவற்றில் முதலாவதாக இடதுபுறம் திரும்பும் அகலமான வீதி நம்மை இடைச்சேரிக்கு அழைத்துச் செல்லும். தூசு நிறைந்த தெருவில் கால்நடைகளின் கழிவுகளில் மிதிபடாமலும், சிறுசிறு முட்புதர்களில் கால்களைக் கீறிக்கொள்ளாமலும் நடந்து சென்றால் நாம் இடைச்சேரியை அடையலாம். அங்கு அருகருகாக ஆறு சிற்றூர்கள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் இடையர்கல்.

இடைச்சேரியிலுள்ள வீடுகள் களிமண்ணினால் கட்டப்பட்டவை. அவற்றின் கூரை தென்னோலையினால் வேயப்பட்டிருக்கும். பெரிதும் சிறிதுமாக தங்களுக்குரிய வசதிகளுக்கேற்ப இடைச்சேரி மக்கள் தங்கள் வீடுகளை அமைத்து இருக்கிறார்கள். அவர்களது வீட்டுக்கு அருகிலேயே தாங்கள் வளர்க்கும் ஆடு, மாடு போன்ற கால்நடைகளுக்கான சிறிய பட்டிகளையும் அமைத்திருக்கிறார்கள்.

இடைச் சேரியில் உள்ள தெருக்கள் பெரும்பாலும் மக்களதும், கால்நடைகளதும் நடமாட்டத்தால் உருவானவை. அவை ஒருபோதும் வீதிகளாக அமைக்கப்படாதவை. எல்லாச் சிற்றூருக்கும் பொதுவான பெருந்தெரு பொது வேலைத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட போதும் பல வருடங்களாக செப்பனிடப்படாததால் குண்டும் குழியுமாகக் காட்சி தருகிறது.

இடைச்சேரியில் பெரும்பாலானவர்களின் வீட்டுக்கு வெளியே கிடாய் தோலினாலான படுக்கையைக் காணக்கூடியதாக இருக்கும். இரவுகளில் வீட்டையும் கால்நடைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கு பொருத்தமான கண்காணிப்பிடமாக அது அமைந்திருக்கிறது. தனிநபர்களின் வீடுகளைத் தவிர பொது கட்டடங்களை இங்கு காண்பது அரிது. கல்லாலான கோயில் எதுவும் இங்கு காணப்படவில்லை. ஆனால் பொதுவான இடங்களில் உள்ள பெரிய மரத்தின் அடியில் மடை வைத்து வழிபடுவதற்கான ஏற்பாடுகளைக் காணக்கூடியதாக இருக்கின்றன.

கல்விச்சாலைகள் ஏதும் இல்லாததால் எந்நேரமும் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களை நாம் வீதியில் காணக்கூடியதாக இருக்கும். சற்றுப்பெரிய பிள்ளைகள் தங்களது தாய் தந்தைக்கு உதவியாக வேலை செய்து கொண்டிருப்பார்கள். பெண்கள் பெரும்பாலும் தயிர், வெண்ணெய், நெய் உருவாக்குவதில் கவனம் செலுத்துவார்கள். ஆண்கள் ஆடு மாடுகளை மேய்ப்பதிலும் தயிர், வெண்ணை, நெய் முதலான உற்பத்திப் பொருட்களை விற்

பனை செய்வதிலும் கவனம் செலுத்துவார்கள். சிலர் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டு கிழங்கு வகைகளையும், காய்கறிகளையும் உற்பத்தி செய்யக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

பெரும்பாலான இடைச்சேரி மக்கள் விஷ்ணுவை வழிபடும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். அத்தோடு அவர்களிடையே பல் வேறு வகைப்பட்ட சிறு தெய்வ வழிபாடுகளும் பரவலாக வழக்கில் இருந்து வருகிறது. இடைச்சேரி மக்கள் அனைவரும் மந்தை மேய்ப்பதினைத் தொழிலாகக் கொண்டிருக்கின்ற போதும் அவர்களிடையே நார்க்கட்டி இடையர், மணிக்கட்டி இடையர், கல்கட்டி இடையர், சிறுதாலி, பெருந்தாலி இடையர் போன்ற பல்வேறு உட் பிரிவுகளையும் காணக்கூடியதாக இருக்கும்.

நாம் வந்து சேர்ந்த நேரத்தில் கேசவன் என்று அழைக்கப்படுகின்ற சுமார் நாற்பத்தெட்டு வயது மதிக்கத்தக்க மனிதர் இடையர் கல்லின் பிரதான தெருவில் தனது வீட்டினை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார். கேசவனுடைய நடையில் ஒரு தளர்வு இருந்தது. வீடு நோக்கி செல்கிறோம் என்ற ஆவல் அவருக்கு துளியளவும் இருப்பதாக உணரமுடியவில்லை. கடந்து செல்லும் சகமனிதர்களோ அல்லது கால்நடைகளோ அவரது கவனத்தை ஈர்த்ததாகத் தெரியவில்லை. எதையோ தொலைத்து விட்ட யோசனை-யோடு பாதையை வெறித்துப் பார்த்தபடி நடந்து கொண்டிருக்கிறார்.

நமது கதையின் நாயகி ஆதினியைச் சந்திப்பதாக இருந்தால் கேசவனுக்கு பின்னால் செல்வதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. ஆதினி கேசவனின் மகள். மாலை நேரங்களில் அவள் எங்கே இருப்பாள் என்று யாராலும் சொல்லிவிட முடியாது. ஆனால் கேசவன் வீட்டு வாசற்படியை மிதிப்பதற்கு முதல் அவள் என்னவோ சாகசங்கள் செய்து வீட்டுக்கு வந்து விடுவாள் என்பது ஊரறிந்த இரகசியமாக இருந்தது.

கேசவன் கடந்த எட்டு ஆண்டுகளில் எதிர்கொண்ட பல துன்பகரமான திருப்பங்கள் அவர் முகத்தில் பல கவலை ரேகைகளை கீறிவிட்டிருந்ததோடு திடகாத்திரமான அவரது உடலிலும் தனது கைவரிசையை காட்டி இருந்தது. இந்த வயதில் அவர் அறுபது வயது மதிக்கத்தக்கவர் போல தோன்றுவதற்கு இந்தக் குறுகிய காலத்தில் அவர் சுமந்த வாழ்க்கைச் சுமையே காரணமாகிப்போனது.

நீண்ட நாட்களாக சீவப்படாத நரை முடிகள் நிறைந்த தலையும், எதிலும் ஆர்வம் இல்லாது அலட்சியமாக நோக்கும் கண்களும், ஒட்டிப்போன கன்னங்களுமாக காட்சி தருகிறார் கேசவன். கடின உழைப்பினால் உரமேறிப்போய் இறுகியிருந்த அவர் உடம்பில் மாடு, ஆடு மேய்ப்பில் ஏற்பட்ட காயங்களின் வடுக்கள் நிறைந்திருக்கிறது. தினமும் வெயிலில் வேலைசெய்து கறுத்துப்போயிருந்த உடம்பின் இடைக்கு கீழான பகுதியை அழுக்கு நிறைந்த வேட்டி மறைத்திருக்கிறது. இடையின் இடதுபக்கத்தில் தீக்கடை கோலினைச் சுமந்த தோல்பையொன்று தொங்கிக்கொண்டிருக்கிறது. கழுத்தில் வாடிப்போன காந்தள் மலர்களாலான மாலை காய்ந்து போயிருந்தது. அது அவரது நடைக்கேற்ப அங்கும் இங்கும் ஆடிக்கொண்டிருந்தது. அவருடைய வலது கையில் துணியிலான பை எதையோ சுமந்தபடி இருக்கிறது. உறிகளைத் தாங்கி மரத்துப் போயிருந்த வலதுபக்க தோளினை அடிக்கடி தனது இடது கையினால் அழுத்திப் பிடித்தபடி நடந்து கொண்டிருந்தார் கேசவன்.

மாலைநேரம் வீடு திரும்பும் கால்நடைகளாலும் அதன் மேய்ப்பர்களாலும் எழுப்பப்படுகின்ற புழுதிக்கு நடுவில் ஒரு கரு நிழலாக கேசவன் அசைந்து கொண்டிருக்கிறார். அவருடைய நினைவுகள் எல்லாம் கடந்த காலத்தில் அவர் எதிர்கொண்ட துன்பியல் நிகழ்வுகளை மீள அசைபோட்டவண்ணம் இருக்கிறது.

அவரது வாழ்வின் துன்பம் சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்தது. திருமணம் முடித்து ஐந்தாண்டுகளின் பின் ஆதினி பிறந்த சந்தோசத்தில் கடனுக்கு அதிகளவிலான ஆடுகளை வாங்கி வளர்க்கத் தொடங்கினார். வீட்டுக்கருகில் இருந்த இடம் போதாமையினால் கந்தளாய்க் குளத்திற்கு அருகில் இருந்த காட்டை அண்டிய மேய்ச்சல் நிலப்பரப்பில் பட்டிகட்டி ஆடுகளை வளர்த்து வந்தார். அருகில் ஒருசிலர் சிறியளவில் ஆட்டுப்பட்டிகளை வைத்திருந்தமை கேசவனுக்கு உதவியாகவும் இருந்தது. ஒரு ஆறு மாதகாலம் எல்லாம் நல்லபடியாகவே உருண்டோடியது. அவர் பல கனவுகளோடு வளர்த்து வந்த ஆட்டுப் பட்டியினை சிறுத்தைகள் குறிவைக்கத் தொடங்கியதில் இருந்து பிரச்சினை ஆரம்பமானது. ஆடுகளை அவர் பாதுகாப்பான பகுதி ஒன்றுக்கு மாற்றிக் கொள்வதற்கு முன்னமே பல ஆடுகளை சிறுத்தைகள் கொன்று விட்டிருந்தன. இந்த விரக்தியில் மிகுதி ஆடுகளை அவர் விற்றுவிட்டார். விற்ற பணம் அவர் எடுத்த கடனின் முதலின் ஒரு பகுதியையும், வட்டிப்பணத்தையும் கட்டமட்டுமே போதுமானதாக இருந்தது. இந்தத் துன்பத்திலிருந்து அவர் மீள்வதற்கு முன்னம் வீட்டுக்கருகில் அவர் ஆசையாக வளர்த்து வந்த பசு மாடுகளுக்கு எப்படியோ நோய் தொற்றிக் கொண்டது. என்னென்னமோ வைத்தியம் பார்த்தும் அவரிடமிருந்த ஐந்து மாடுக-ளில் இரண்டை மட்டுமே அவரால் காப்பாற்ற முடிந்தது.

இந்தத் தொடர்ச்சியான இடர்பாடுகளுக்கு நடுவில் அவருக்கு இருந்த ஒரே ஆறுதல் மனைவி கோமதிதான். கடன்காரர்களின் நெருக்குதல், மேலதிக உழைப்புக்காக கூலி வேலைக்குச் செல்லும் போது ஏற்படும் அவமானங்கள், குடும்ப கஷ்டம் இவை அனைத்துக்கும் கோமதி ஆறுதல் தருபவளாக இருந்தாள். கோமதி மீதான அதீத அன்பினால் அடுத்து வந்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஆதினிக்கு நான்கு சகோதரர்கள் கிடைத்தார்கள். முதல் இருவரும் தனித்தனியாகவும் கடைக்குட்டிகளாக இரட்டையர்களும் பிறந்தார்கள். விளைவு நல்ல திடகாத்திரமாக வேலை செய்துகொண்டிருந்த கோமதி நோயாளிபோல் மாறிப்போனாள். எட்டு வயதுக்குள்ளேயே குழந்தை வளர்ப்பதில் ஆதினி நல்ல தேர்ச்சி பெற்றவள் ஆகிப்போனாள்.

வருசத்துக்கு ஒரு பிள்ளை பெற தெரிகிறது வாங்கிய கடனை கொடுக்க தெரியவில்லை என்ற பரிகாசப் பேச்சுக்கும் ஏச்சுக்கும் ஆளாகிப்போனான் கேசவன். வருடந்தோறும் வயதோடு கடனும், குடும்பச் சுமையும் கூடிக்கொண்டே வந்தன மாறாக உடல் வலுவிழுந்து கொண்டுபோனது.

ஆட்டுக்காக் கொடுத்த கடனை ஒழுங்காக கட்டாததால் ஊர் மகாசபை முன்னால் ஒருமுறை கேசவன் குற்றவாளியாக நிறுத்தப்பட்டான். கேசவனுக்கு கடன் கொடுத்திருந்த சதுர்வேதி மங்கலத்து பிராமணன் கடும்கோபம் கொண்டவனாக கட்டாத கடனுக்காக அந்தக் கூட்டத்திலேயே கேசவன் தன்னை வாழ்நாள் அடிமையாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று வாதிட்டான். தான் இல்லாமல் போனால் தன்னுடைய ஐந்து பிள்ளைகளும் மனைவியும் நாதியற்றுப் போவார்கள். அதனால் எப்பாடுபட்டாவது கடனை விரைவில் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன் என்று கூட்டத்தில் இருந்த பெரியவர்களின் கால்களில் எல்லாம் விழுந்து கேசவன் கெஞ்சவேண்டிய-தாயிற்று. இன்று அதை நினைத்தும் கேசவனின் உடலெல்லாம் சிலிர்த்து உறைந்துபோய்விடுவது போலிருந்தது.

அந்த இக்கட்டான சூழ்நிலையில் கடவுள் போல் வந்து கேச-வனை காப்பாற்றியவர் கிரமவித்தன் என்கின்ற பிராமணர். சதுர் வேதி மங்கலத்தில் பெரும் செல்வந்தரான இவர் அரசியல் பலமும் கல்வியில் நிறைய பாண்டித்தியமும் பெற்றவர் என்று கேச-வன் அறிந்திருந்தான். அவர் இடைச்சேரி ஊர்த்தலைவர்களிடம் கேசவனைப்பற்றி கேட்டறிந்த பிற்பாடு கேசவன் கடனை திருப்பிக் கொடுப்பதற்கு தான் பொறுப்பு நிற்பதாக ஊர் மகாசபை முன்

னால் வாக்களித்தார்.

அவர் பேசத் தொடங்கியதும் ஊர் மகா சபையில் இருந்த சத்தங்கள் எல்லாம் அடங்கிப்போயின. கடன் கொடுத்த பிராமணரும் அவர் சார்பாக ஆக்ரோசமாகப் பேசிக்கொண்டு இருந்தவர்களும் திடீரென்று அமைதியாகி அமர்ந்து கொண்டார்கள். இறுதியில் தனக்கு சொந்தமான தற்போது ஆலயப் பராமரிப்பில் இருக்கும் சில கால்நடைகளை கேசவன் பராமரிப்பில் விடுவது என்றும் அதில் வரும் பால், தயிர், வெண்ணெய், நெய் முதலானவற்றில் விஜயராஜேஸ்வரத்துக்கு தேவையானவற்றை வழங்கிவிட்டு மேலதிகமாக உள்ளதில் ஒருபகுதியை ஆட்டுக் கடன் கழிப்பதற்காக பயன்படுத்த வேண்டும் என்றும் மறுபகுதியை கேசவன் தன்னுடைய குடும்பப் பராமரிப்புக்காக பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் ஏற்பாடாகியிருந்தது.

உண்மையில் அந்நேரத்தில் தான் வணங்கும் விஷ்ணுவே கிரமவித்தன் என்ற உருவில் வந்து தன்னை காப்பாற்றியதாக கேசவன் கருதிக் கொண்டார். அன்று முதல் கேசவன் வீட்டில் கிரமவித்தன் புராணத்தை அடிக்கடிகேட்கக்கூடியதாக இருந்தது.

இந்த ஏற்பாடுகள் நிகழ்ந்து ஒரு வருட காலம் ஆகிறது. ஆட்டுக் கடனின் ஒரு சிறிய பகுதியை இந்தக் காலப்பகுதியில் கேசவன் கட்டிவிட்டிருந்தான். ஆனால் அவனைத் துரத்தும் துரதிருஷ்டம் விடுவதாக இல்லை. கடந்த இரு மாதங்களாக வழமைக்கு மாறான வறட்சி கந்தளாயில் நிலவுகிறது. மாடுகளுக்கு தேவையான மேய்ச்சல் தரைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வறண்டு போய்க் கொண்டிருக்கின்றன. முன்னம் போலில்லாமல் மாடுகளிலிருந்து கிடைக்கும் பாலின் அளவும் நன்றாக குறைந்து போய்விட்டது. எனவே கிடைக்கும் பாலில் ஆலயத்துக்கு உரிய பகுதியை வழங்குவதே பெரும்பாடாக இருப்பதால் கடனைச் செலுத்துவதும், குடும்பத்தைக் கொண்டு நடத்துவதும் கேசவனுக்கு கடினமாக இருக்கிறது.

இன்றும் அப்படித்தான் அவன் கொண்டுசென்ற பால், தயிர், வெண்ணை, நெய் முதலான பொருட்களில் ஆலயத்திற்கு உரியதை செலுத்திவிட்டு மிகுதிப் பொருட்களுடன் ஆட்டுக்கடன் செலுத்துவதற்காகச் சென்றான். அங்கிருந்த கணக்குப்பிள்ளையின் புரியாத கணக்கு வழக்குகளுக்குள் அவன் கொண்டுசென்றவற்றில் பெரும்பகுதி போய்விட்டது. மிகச்சிறிய அளவில் எஞ்சிய பகுதியை அங்காடியில் கொடுத்து அதற்குப் பதிலாக விலைமலிவான சிலவகை கிழங்குகளை மட்டுமே அவனால் பெற்றுக் கொள்ள முடிந்தது.

கடந்த இரு மாதங்களில் பல நாட்களாக கிழங்குகளை அவித்து கொடுத்ததில் பிள்ளைகளுக்கு நாவில் சுவை கெட்டுப்போய்விட்டது. இது வேண்டாம் அப்பா சோற்றுக் கஞ்சியாவது குடிப்போம் என்று பிள்ளைகள் வாய்விட்டு கேட்கத்தொடங்கி ஒரு மாதமாகிறது. ஆனாலும் என்ன செய்வது இயற்கையின் சதியால் அதே கிழங்குகளுடன் கேசவன் இன்றும் வீட்டை நோக்கிச் செல்லவேண்டியதாக இருக்கிறது.

வீட்டுத் தோட்டம் செய்துவந்த கோமதியின் உடல்நிலை குன்றிப் போனதால் வீட்டிலும் காய்கறிகள் கிடைப்பது அரிதாகிப்போனது. இந்தக் கிழங்குகளைக் கண்ட பின்னால் தன்னுடைய பிள்ளைகளின் முகத்தில் ஏற்படப்போகும் ஏமாற்றங்களை நினைத்து பயந்தவனாக கேசவன் தன்னுடைய வீடு இருக்கும் பகுதிக்குள் வந்து சேர்ந்தான்.

இடையர் கல்லில் இருக்கும் வீடுகளில் அளவில் மிகச்சிறியவற்றில் கேசவனின் வீடும் ஒன்று. களிமண்ணினால் சுவர்கள் கட்டப்பட்டு தென்னை, பனை ஓலைகளால் கூரை வேயப்பட்டிருக்கும் அந்த வீட்டுக்குள் எப்படி ஐந்து குழந்தைகளோடு அவன் வசிக்கிறான் என்பதை ஊரவர்கள் அதிசயமாகப் பார்த்தார்கள்.

கேசவனைக் கண்டதும் வீட்டுக்கு அருகில் இருந்த மாட்டுத்தொழுவத்தில் இருந்த மாடுகள் அவனை வரவேற்றுக் குரல் கொடுத்தன. வீட்டுக்குள் இருந்த பிள்ளைகள் ஆர்வத்துடன் வாசற்படியை நோக்கி ஓடிவரும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. தயங்கியவாறு வாசலில் வைக்கப்பட்டிருந்த குடத்து நீரில் கால்களைக் கழுவிக் கொண்டு கேசவன் வீட்டுக்குள் காலடி எடுத்து வைப்பதற்கும் திடுதிப்பென்று எங்கிருந்தோ ஓடிவந்த ஆதினி வாசலை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது.

தினமும் கடன்காரனிடம் ஏற்படும் அவமானம், வளரும் பிள்ளைகளுக்கு நல்ல உணவை கொடுக்க முடியவில்லையே என்ற ஆதங்கம், தொடர்ச்சியான வேலைப்பளுவினால் உடலில் ஏற்படும் வலி, எதிர்காலம் பற்றிய பயத்தினால் மனதில் ஏற்படும் குழப்பங்கள் என்ற எல்லா உணர்வுகளின் ஒட்டு மொத்த உருவமாக இருந்த கேசவனுக்கு மகள் மாலை நேரத்தில் ஊர் சுற்றிவிட்டு வருகிறாள் என்பதைக் கண்டதும் அதிக ஆத்திரம் உண்டானது.


'பெண் பிள்ளை மாலைபட்ட நேரத்தில ஊர் சுத்திற்று வாற' என்று கேட்டவாறே பளீரென ஆதினியின் கன்னத்தில் கேசவன் பலமாக அறைந்தான். கேசவனின் கையிலிருந்த கிழங்குப் பையினை வாங்கிக்கொண்டிருந்த கோமதி அதிர்ந்து போனாள். அவள் வாயிலிருந்து 'ஆதினி' என்ற வார்த்தை கீச்சிடும் குரலில் வெளிவந்தது. கன்னத்தில் அறை விழுந்த வேகத்தில் சுவரில்போய் மோதப் போன ஆதினியைப் பிடிப்பதற்காக கோமதி பாய்ந்து சென்றாள்.

ஆர்வத்தோடு அப்பாவைக் காண ஓடிவந்த பிள்ளைகள் அப்படியே சிலை போல நின்றார்கள். கடைக்குட்டி இரட்டையர்கள் பயத்தில் அழத் தொடங்கிவிட்டார்கள். ஆதினி விழுந்த வேகத்தில் அவள் மடியில் கட்டியிருந்த துணிப்பை அவிழ்ந்து அதனுள் இருந்த ஆற்று மீன்கள் வீடு முழுவதும் சிதறி விழுந்தன.

ஆதினி அறை விழுந்த அதிர்ச்சியில் இருந்தாளே ஒழிய வாய்விட்டு அழவும் இல்லை அவளது கண்களிலிருந்து கண்ணீர் வரவுமில்லை. கோமதி ஒன்றும் சொல்லவில்லை என்றாலும் அவள் பார்வையில் ஏன் அடித்தீர்கள் என்ற ஆதங்கம் தெளிவாக தெரிந்தது. மற்றப் பிள்ளைகளின் முகத்தினைப் பார்ப்பதற்கு கேசவனுக்கு திரணி இருக்கவில்லை. ஒன்றும் பேசாமல் விடுவிடுவென்று வீட்டுக்கு வெளியில் வந்து மாட்டுக் கொட்டகைக்குள் ஐக்கியமாகிப் போனான். சுதாரித்துக்கொண்ட கோமதி ஆதினியை தேற்றிவிட்டு அவள் கொண்டுவந்திருந்த ஆற்று மீன்களையும், கேசவன் கொண்டுவந்திருந்த கிழங்குகளையும் எடுத்துக்கொண்டு சமையல் கட்டுக்குள் போனாள். குழந்தைகள் அனைவரும் ஆதினியோடு வந்து ஒட்டிக்கொண்டார்கள்.

மாடுகளுக்கு வைக்கோலும் தண்ணீரும் வைத்துக்கொண்டிருந்த கேசவனுக்கு வேலையில் கவனம் ஒட்டவே இல்லை. நான் ஏன் அப்படி நடந்துகொண்டேன் என்று திரும்பத் திரும்ப மனம்வருந்தியவனாக அந்தரப்பட்டுக்கொண்டிருந்தான். சாணம் அனைத்தையும் அள்ளியபின்னும் உடலைச் சுத்தம்செய்துவிட்டு வீட்டுக்குள் செல்வதற்கு அவனுக்கு மிகுந்த தயக்கமாக இருந்தது. இந்தநேர இடைவெளியில் வீட்டுக்குள்ளிருந்து கோமதியின் கைவண்ணத்தில் பொரிக்கப்பட்ட மீன்களின் வாசமும், கிழங்கு அவியலின் வாசமும் சேர்ந்து வீசத்தொடங்கியிருந்தது. பசித்திருந்த பிள்ளைகள் ஆர்வத்தோடு அவற்றைச் சாப்பிடுவதை அவர்கள் எழுப்பிய ஒலிகளில் இருந்து கேசவனுக்கு உணரக்கூடியதாக இருந்தது.

'வீட்டுக்குள் வந்து உணவருந்துங்கள்' என்றழைத்த கோமதியின் வேண்டுதலை புறக்கணித்தவனாக கேசவன் வாட்டிய இலையில் இருந்த இரவு உணவினை அவசர அவசரமாக உண்டுவிட்டு வாசலில் கிடந்த கிடாய்த்தோலில் உறங்க முயற்சித்தான். ஓலைக்குடிசையின் கிடுகு இடைவெளிக்குள் இருந்து உற்றுப்பார்த்த இரு கண்களின் வீரியம் தாங்காமல் கேசவனின் முதுகு கூசிக்கொண்டு இருந்தது.



jeevarajah@thaiveedu.com



பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களின் அபிமானத்தை பெற்ற
'ஒருத்தி ' திரைப்படத்தை தொடர்ந்து
கனடிய ஐரோப்பிய தமிழக கலைஞர்களின் உருவாக்கத்தில்
கனடாவில் முதல் முறையாக வெளியாகும்
ஒரு தமிழ் திரைப்படத்தின் பாகம் இரண்டு
NOVEMBER
5
SATURDAY
1pm & 4pm
FIRST PREMIERE
FUTURE ZENITH CAPITAL
MORTGAGE INVESTMENT CORPORATION
PRESENTS
ஒருத்தி 2
A Ps Suthakaran Film
DOP - Jeevanram | Editing - Eswaramoorthy | Music - Babu - Srivijay | Film Score - Pravinkumar | Lyrics - Varuon |
Associate Director - Ruthran | Assistant Director - Ramalingam | Camera Assistant - Theepan | Design - M. Kumarraja
Produced by
Anusha Suthakaran
YORK CINEMAS, 115 York Blvd, Richmond Hill (Leslie & Hwy 7)
Ticket Booking : 416 720 9303 www.oliparappu.com

# ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில்

# பெண் நிலைவாதம்

- சி. ரமேஷ்

ஐக்கியநாடுகள் சபை 1975-ம் ஆண்டை மகளிர் ஆண்டாக அறிவித்ததையும், 1975 தொடங்கி 1985 வரையான பதினொரு ஆண்டுகளை அனைத்துலக மகளிர் ஆண்டாகக் கொண்டாடத் தீர்மானித்ததையும் அடுத்து, இலங்கையில் பெண்ணியம் பற்றிய கருத்துக்கள் பெண்நிலை வாதம் என்னும் பெயரில் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையில் தோற்றம் பெற்ற பெண்கள் அமைப்புக்கள், சுய உரிமை போராட்டத்தில் தீவிரமாக இயங்கிய விடுதலை இயக் கங்கள் பலம் பெற்று வளரவும், விடுதலைப் போராளிகளாய் அதி களவு பெண்கள் அணியில் சேரவும், தமிழ்ப் பெண்மையின் பாரம் பரியப் படிமங்கள் மாற்றுருவாக்கம் பெறவும் பேரளவில் உழைத் தன. 1970-களுக்குப்பின் ஆயுதப்போராட்டம் வலுப்பெற்ற சூழ்நி லையில் பயங்கரவாதச்சட்டம், அவசரகாலச்சட்டம் முதலானவை மனிதருக்குரிய அடிப்படைச் சுதந்திரத்தைக்கூடத் தட்டிப்பறித்தன. மனித உரிமைகள் மீறப்பட்ட சூழலில் இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கு எதிராக 1971-ல் சிவில் உரிமை இயக்கம், 1972-ல் சற்யோதய, 1979-ல் நிறுவப்பட்ட இனங்களுக்கு இடையிலான நீதி, சமத்துவத்திற்கான இயக்கம் முதலானவை தோற்றம் பெற் றன. இவ்வமைப்புக்களிற் பெண்கள் சுயாதீனமாக இயங்கினாலும் இவை தனித்துவமான பெண்கள் அமைப்பாகத் தொழிற்பட வில்லை. 1977-ல் புத்தளத்திலுள்ள சிலாபத்தில் இயங்கிய வில் பொத்த பெண்கள் சேமிப்பு இயக்கம் பத்துப் பெண்கள் ஒன்றி ணைவால் உருவானது. வறுமைக் கோட்டுக்கு கீழ்வாழும் மக்க ளுக்கு கொடுக்கப்படும் நிவாரண உதவிகளை வீட்டுத் தலைவர்க ளாகிய ஆண்கள் குடித்தே செலவழித்து வந்தநிலையில் அது குறித்து உரிய அதிகாரிகளிடம் கதைத்து அப்பணத்தை சம்மந் தப்பட்ட பெண் விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் நோக் கில் இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. மாதத்துக்கு ஒரு ரூபா என்ற சேமிப்பு நிதியத்தை ஆரம்பித்த இவர்கள் 20 வருடங்களில் 1500,000 ரூபா என்ற அளவிற்கு சுழல் நிதியமாக இந்நிதி விரிவ டைந்தது. கால்நடை வளர்ப்பு, குடிசைக்கைத்தொழில்கள், விவசா யம், மரக்கறிப் பயிர்ச்செய்கைகள், வீட்டுத்தோட்டங்கள் என சுய தொழிற் முயற்சிகளுக்கு இவ்வமைப்பு இற்றைவரை உதவி செய்துவருகிறது. அத்துடன் இவ்வியக்கம் உள்ளூரில் கிடைக்கப் பெற்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பூக்கள், அழுத்தப்பட்ட ஆடைகள், கடித உறைகள் போன்றவற்றைத் தயாரித்து கடதாசி- களை மீள் சுழற்சிகளுக்கும் உட்படுத்தி வருகின்றன. தச்சுத்தொ ழில், கட்டட நிர்மாணத்தொழில் போன்ற மரபுரீதியற்ற தொழில்க ளில் இந்த இயக்கம், பெண்களுக்குப் பயிற்சிகளை வழங்கி வரு கின்றது.

ஆயினும் இலங்கை அரசு நிறுவனரீதியான அமைப்புக்களில் மாற்றங்களைக் கொண்டு வந்தது. உலகம் முழுவதும் 1975 - 1985 வரையான ஆண்டுகாலப்பகுதியை ‘பெண்கள் தசாப்தம்’ ஆகப் பிரகடனப்படுத்திய வேளையில் பெண்கள் நலன்கள் தொடர்பான பங்களிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஐக்கிய தேசிய கட்சி தன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெண்கள் நலன் தொடர்பான ஏற்பாட்டையும் சேர்த்துக் கொண்டது.

1978-ல் இலங்கையில் பெண்கள் பணியகம் நிறுவப்பட்டது. இத னைத் தொடர்ந்து 1983-ல் மகளிர் விவகார அமைச்சும் உருவாக் கப்பட்டது. பெண்கள் எதிர்நோக்கும் சமத்துவமின்மைப் பிரச்சி னைக்கு வழிகாணுமுகமாக பெண்நிலைவாத அமைப்புக்கள் புதிய உத்வேகத்துடன் செயற்பட்டன. இவ்வமைப்புக்கள் பெண்க ளின் அடிப்படை உரிமைகளுக்காக மட்டும் போராடியதுடன் நில் லாது பெண்களின் சமூக, பொருளாதார உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தன. 1979-ல் முதல் சுயாதீன பெண்கள் அமைப்பு ‘பெண்களின் குரல்’ என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. பெண்க ளின் நலன்சார்ந்த செயல் திட்டங்களை அறிமுகப்படுத்திய இவ்வ மைப்புகள் பெண்கல்வி, மற்றும் பெண்ணுரிமைகள் தொடர்பான மனவுணர்வுகளைத் தட்டி எழுப்பும் நடவடிக்கைகளிலும் ஈடுபட் டன.

பெண்கள் மீது கொண்ட விசேட அக்கறை, பெண்களுக்கு எதி ரான அடக்குமுறை, பாராபட்சம், வீட்டிலும் வெளியிலும் பெண் கள் மீது திணிக்கப்படும் இரட்டைச்சுமை ஆகியவற்றைக் கருத் தில் கொண்டு 1980களுக்குப் பின் ‘பெண்கள் முன்னேற்றச் சங் கம்’, ‘பெண்கள் ஆய்வுவட்டம்’, ‘பெண்கள் ஆய்வுக்கான நிலை யம்’, ‘முஸ்லிம் பெண்களின் ஆய்வு மற்றும் செயல் நடவடிக்கை அமைப்பு’ எனப் பெண்களுக்கென மாதர் அமைப்புக்கள் பல உருவாக்கப்பட்டன. பெண்களின் அடிப்படைப் பிரச்சினைகளை விளங்கிக்கொண்டு அதற்குத் தீர்வுகாணல், பால்நிலைச் சமத்து வத்தை ஏற்படுத்துதல், பெண்களின் இழந்த வரலாற்றை மீட்டெ டுத்தல், அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தல் என முக் கிய விடயங்களை வெளிப்படுத்தும் நோக்கில் இவ்வமைப்புக்கள் செயற்பட்டன. கிராமியப் பெண்களின் வாழ்க்கையில் மறுமலர்ச் சியை ஏற்படுத்தும் நோக்கிலும் சில அமைப்புக்கள் இயங்கின. அப்பாந்தோட்டையில் காணப்பட்ட ‘பெண்கள் அபிவிருத்தி சமா ஜம்’, நுவரேலியாவில் இயங்கிய ‘சிங்கள, தமிழ் கிராமியப் பெண் கள் வலையமைப்பு’ முதலான பெண்கள் இயக்கங்கள் பெண்கள் வறுமையில் இருந்து விடுபடுவதற்கும் அவர்கள் பொருளாதாரச் சுமையில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக இயங்குவதற்கும் இவ் வாறன கிராமிய பெண்கள் அமைப்புக்கள் உதவின. இலங்கை யில் கிராமியச் சமூகங்களில் பெண்களுக்காக சுய ஆட்சியை உருவாக்குவதிலும் அவர்களை அரசியலில் ஈடுபாடுடையவராக மாற்றுவதற்கும் இப்பெண்ணிய அமைப்புக்கள் முன்னின்று உழைத்தன. ‘பெண்கள் முன்னேற்றச் சங்கம்’ உத்தியோகபூர்வ

அமைப்பில்லாதிருந்தாலும் இரண்டு வருட காலம் இயங்கியது. இதன் பின் உருவாக்கப்பட்ட 'பெண்கள் ஆய்வுவட்டம்' பெண்களின் ஆராய்ச்சி, எழுத்தாற்றலை ஊக்குவிப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்டது. இந்த ஆய்வு வட்டத்தில் சர்வமங்களம் கைலாசபதி, சிவரமணி, ஒளவை, மல்லிகா, சோமேசசுந்தரி, பார்வதி கந்தசாமி, ரஜனி திரணகம, சுல்பிகா முதலானோர் அங்கம் வகித்தனர். இவ்வமைப்பினால் வெளியிடப்பட்ட 'சொல்லாத சேதிகள்', 'பெண்நிலைவாதம் பொருத்தமானதே' குறித்தான நூல்கள் இரண்டும் முக்கியமானது.

இதில் கேள்வி - பதில் அடிப்படையில் அமைந்த 'பெண்நிலைவாதம் பொருத்தமானதே' என்னும் நூல் பெண்நிலைவாதத்தின்






அரசியல், பொருளாதார, வரலாற்று அம்சங்களை மிகச் சுருக்கமாக எடுத்துக் காட்டுகிறது. பெண்கள் மீதான சமூக, பொருளாதார, கலாசார ஒடுக்குமுறைகளைக் களையும் நோக்கிலும் பெண் சுதந்திரத்தையும் அதனைப் பெறுவதற்குமான போராட்டத்தை முன்னெடுக்கும் வகையிலும் உருவாக்கப்பட்ட இந்நூல் பெண்நிலைவாதம் பற்றிய அத்தியாவசியமான அடிப்படை விளக்கங்களையும் விளக்கிநிற்கிறது. மொழிபெயர்ப்பு நூலான இந்நூல் பெண்ணிலைவாதச் சிந்தனைகளை எளிமையான முறையில் சுருக்கமாகவும், தெளிவாகவும் தருகின்றது.

ஈழப்போராட்ட முன்னோடிகளில் ஒருவரான புஸ்பராணி மயிலிட்டியைச் சேர்ந்தவர். சுதந்திரனில் 'மலரரசி' என்ற பெயரில் கவிதைகள் எழுதியவர். இதனைத் தொடர்ந்து லண்டன் முரசிலும் கவிதை, கட்டுரைகளை எழுதியவர். ஈழப்போராட்டத்தின் இயக்கங்களின் தலைமைப்பொறுப்புக்களில் இருந்தவர்களுடன் இணைந்து ஈழப் போராட்டத்தை முன்னெடுத்தவர். தமிழர் கூட்டணியினரின் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் பலவற்றிலும் கலந்து கொண்டு தீவிரமாக இயங்கியவர். 1973-ம் ஆண்டு தமிழர் கூட்டணியினர் இலங்கையின் குடியரசு தினத்தை எதிர்த்து பட்டினிப் போராட்டத்தை நடத்திய போது அதிலும் கலந்து கொண்டவர். அதேவருடம் யாழ். முற்றவெளியில் நடந்த தமிழர் கூட்டணியினரின் மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு எஸ்.ஜே.வி. செல்வநாயகம், செனட்டர் நடராஜா, பாரளுமன்ற உறுப்பினர்களான வி.என். நவரத்தினம், துரைரத்தினம் முன்னிலையில் உரையாற்றியவர்.

1973-ம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் மாநில மாநாட்டுக் கூட்டத்திலும் கலந்து கொண்டு உரையாற்றியவர். தமிழர் இளைஞர் பேரவையின் மாதர் கழகத்தின் முதலாவது அமைப்பாளரும் இவரேயாவார். இவர் இளைஞர் பேரவையின் அமைப்பாளராக இருந்த வேளையில் இவரோடு இணைந்து கல்யாணி, டொரத்தி, ஆனந்தராணி, திலகமணி, திலகவதி, ஊர்மிளா, சாந்தா, கனகராணி, தேவா, பகவதி, கீதாஞ்சலி, குலம், பாப்பா, சங்கானையம்மா, நவம், குலம் முதலான பெண்மணிகளும் செயற்பட்டனர். புலோலி வங்கிக் கொள்ளையில் உருக்கப்பட்ட நகைகளை கொழும்புக்கு கொண்டு செல்ல உதவியவர் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்டு கடுமையான தண்டனைக் குள்ளானவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பங்காளியாக நின்று முதன்முதலில் சிறைசென்ற பெண்மணியும் இவராவார். இயக்கங்களுக்குள் ஏற்பட்ட தலைமைப் போட்டியின் காரணமாக ஆயுதப் போராட்டத்



தில் இருந்து விலகி பிரான்ஸ் சென்றவர்.

தமிழர் இளைஞர் பேரவையின் மாதர் கழகத்தின் உருவாக்கத்தை அடுத்து தமிழர் கூட்டணியினரால் தமிழர் மகளிர் பேரவை உருவாக்கப்பட்டது. இதன் தலைவியாக முதற் போராளியான சிவகுமாரனின் அன்னை அன்னலட்சுமி பொன்னுத்துரை தெரிவுசெய்யப்பட்டார். இதன் பொதுச் செயலாளராக மங்கையக்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் விளங்கினார்கள். இப்பேரவையின் முக்கிய பணிகளாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் உண்ணாவிரதங்கள், சத்தியாக்கிரகங்கள், சட்டமறுப்பு போராட்டங்கள் போன்றவற்றில் கலந்து கொள்ளல் ஆகும். ஆயினும் இப்பேரவை ஆணாதிக்க சமூக கட்டமைப்பின் கீழ் அதற்கு கட்டுப்பட்டு இயங்கியதொன்றாகவே விளங்கியது. தலைமைத்துவத்தால் இடப்படுகின்ற கட்டளைகளைச் செயற்படுத்துவதற்காகவும் அதேசமயம் தமிழர் கூட்டணியின் வாக்கு வங்கியை நிரப்புவற்காகவும் உருவாக்கப்பட்ட அமைப்பாக இது காணப்பட்டது.

1972-ல் புதிய புலிகள் இயக்கம் உருவாக்கப்பட்ட போது அதன் செயற்குழு தலைவராக உமாமகேஸ்வரன் உள்வாங்கப்பட்டார். இக்காலப் பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கத்தின் செயலாளராக ஊர்மிளா கடமையாற்றினார். தமிழர் பேரவையின் தீவிர செயற்பாட்டாளரான இவர் புலிகள் இயக்கத்துக்குள் உள்வாங்கப்பட்டார். தமிழகத்தில் இருந்த விடுதலைப் புலிகள் அலுவலகத்துக்குப் பொறுப்பாளராகப் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் நியமிக்கப்பட்டார். பின்னர், இவரது நன்நடத்தையில் ஏற்பட்ட களங்கத்தின் காரணமாக இவர் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்டார் என வேலுப்பிள்ளை பிரபாகரன் தரப்பினரால் கூறப்பட்டது. போராளிகள் காதல், திருமண உறவு என்பவற்றைக் கொண்டிருக்கக் கூடாது என்ற நிபந்தனையை அப்போதிருந்த புதிய புலிகள் இயக்கம் விதித்தது. இவ்விதியின் அடிப்படையில் ஊர்மிளாவுக்கும் செயற்குழுத் தலைவராக இருந்த உமாமகேஸ்வரனுக்கும் இடையிலான உறவினைக்

காரணமாகக் காட்டி அவரையும் ஊர்மிளாவையும் இயக்கத்திலி ருந்து நீக்கினர்.

அதன்பின்னர் வவுனியா காந்தியப் பண்ணைகளில் புனர் வாழ்வு வேலைகளில் ஈடுபட்ட ஊர்மிளா மஞ்சள் காமாலைநோயாளால் பீடிக்கப்பட்டு இறந்து போனார். இக்காலப் பகுதியில் புலிகளிடம் இருந்து பிரிந்து வந்து 'புதியபாதை' அமைப்பினை நிறுவியவர் கள் தைமாதம் 1981ம் ஆண்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழ கத்தை நிறுவினர். போராட்டத்தில் பெண்களையும் இணைத்து செயற்படும் வண்ணம் இவர்களால் 1982-ல் உருவாக்கப்பட்ட அமைப்பே 'பெண்கள் விடுதலை இயக்கம்' ஆகும். இப்பெண் கள் இயக்கத்தில் ராதா (யூலி), உஷா(சரோஜினதேவி) ஆகியோர் தீவிரமாகச் செயற்பட்டனர். 1983ம் ஆண்டு காந்தியப் பண்ணை அரசபடையினரின் தீவிர தேடுதலுக்குள்ளாக்கப்பட்டபோது முன் னணி உறுப்பினர்களான ராதாவும் உஷாவும் இந்தியாவுக்குத் தப் பிச் சென்றனர். இதன் பின் பெண்கள் விடுதலை இயக்கம் முடி வுக்கு வந்தது.

1983ம் ஆண்டு ஏற்ப்பட்ட யூலைக் கலவரத்தை அடுத்து பெண் கள் தொடர்பான விழிப்புணர்வுகள் மக்கள் மத்தியில் ஏற்பட்டன. பெண்கள் தாம் சுயமாக இயங்கவும் பழைய சம்பிரதாயச் சடங் குகளில் இருந்து விடுபட்டு தம்உரிமைகளைப் பெற்றுக் கொள் ளும் முகமாகவும் அமைப்புக்கள், விடுதலை இயக்கங்கள் சார்ந் தும் இயங்கத் தொடங்கினர். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பே தமிழீழ பெண்கள் இயக்கம் (T.W.O). ஆயுதம் ஏந்திப் போராட வந்த தமிழ்ப் பெண்களை அர சியல் நீரோட்டத்தில் கலக்கவிடாது கழகம் முடக்கிப் போட்டது. நூற்றுக்கணக்கான பெண்களைக் கொண்டிருந்த இவ்வமைப்பில் இருந்து உஷா எனபவர் மாத்திரமே கழகத்தின் மத்திய குழுவில் அங்கம் வகித்தார். தமிழீழ பெண்கள் இயக்கம் தமக்கென 'தோழி' என்ற சஞ்சிகையையும் வெளியிட்டது. இதன் ஆசிரியராக செல்வநிதி தியாகராசா(செல்வி) விளங்கினார். வவுனியா சேமம டுப் பகுதியைச் சேர்ந்த செல்வி நாடக நெறியாளரும் நடிகையு மாவார். செல்வி தனது ஆரம்ப அரசியல் செயற்பாடுகளைத் தமி ழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் தொடர்ந்தவராக இருந்தாலும் ஏனைய விடுதலை அமைப்புக்களுடன் தோழமையுடன் பழகியவர். யாழ் பெண்கள் ஆய்வு வட்டம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அவை மற்றும் இலக்கியவட்டத்தின் உறுப்பினராகவும் இருந்தவர். இரண்டு நாடகங்களையும் எழுதியிருக்கிறார். அவற் றில் ஒன்று பாலஸ்தீன கைதிகள் பற்றியது. 'பூரணி இல்லம்' என்ற பெண்கள் மையத்தின் உறுப்பினராக இருந்து ராஜினி திர ணகமவுடன் இணைந்தும் பணியாற்றியவர். வடக்கில் நடந்த யுத் தத்தின் போது பாதிப்புக்கும், குண்டுத் தாக்குதலுக்கும் உள்ளான வர்களுக்கு நிவாரண உதவிகளை இவ்வமைப்பு செய்து கொடுத்தது. ஜனநாய மறுப்புடன் கூடிய கொலைவெறிச் செயற் பாடுகள் அதிகரித்து வளர்ந்து வந்த சூழலில் மாற்றுக் கருத்தா ளர்களின் மரணத்துக்காகத் தொடர்ந்தும் குரல் கொடுத்தவர். பெண்விடுதலையுடன் கூடிய சமூக விடுதலைக்காகத் தொடர்ந்தும் முன்னின்று உழைத்தவர்.

பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்தில் தான் சார்ந்த அமைப் பின் தவறான செயற்பாடுகளைக் கண்டித்து உட்கட்சிப் போராட் டம் என்ற மட்டத்தில் முன்னெடுத்தவர். தான் சார்ந்த அமைப்பில் இருந்து விலகி இவர் செயற்பட்டபோது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அந்நிலையிலும் தனது அரசியல் செயற்பாட்டை தொடர்ந்தும் முன்னெடுத்தார். அமைப்பு பிளவுண்டு உட்கட்சி மோதல் தீவிரம் பெற்ற நிலையில் தான் சார்ந்த அமைப்பிலிருந்து வெளியேறி தீப்பொறி என்ற அமைப்பினூடு தனது செயற்பாட்டை முன்னெடுத்தவர். ஈழத்து பெண் கவிஞர்களின் கூட்டுக் கவிதைத் தொகுப்பாக வெளியிடப்பட்ட 'சொல்லாத சேதிகள்' என்ற தொகுப்பில் செல்வியின் கவிதைகள் இடம்பெற்றன. அத்தோடு செல்வியின் கவிதைகளும் சிவரமணியின் கவிதைகளும் சேர்ந்த தொகுப்பொன்றை தாமரைச் செல்வி பதிப்பகம் தமிழகத்தில் வெளியிட்டிருந்தது என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. செல்வி யின் கவிதைகள் 'மனஓசை', 'மண்', 'அரங்கேற்றம்', 'ஓசை', 'நான்காவது பரிமாணம்', 'சரிநிகர்', 'திசை' போன்ற இதழ்களி லும் வெளிவந்தன. சில கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க் கப்பட்டு தொகுப்புக்களிலும் இடம்பெற்றன. உலகப் புகழ்பெற்ற



'Poetry International Award' கவிதைக்கான சர்வதேச விருது செல் விக்கு சர்வதேச கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள் கூட்டமைப்பான Poets Essayists and Novelists (PEN) அமைப்பால் வழங்கப்பட்டது. இது மானுட சுதந்திரத்திற்காகவும், அடிப்படை உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்த சுதந்திரம் மறுக்கப்பட்ட கவிஞர்களுக்காக வழங்கப்படுகின்ற விருதாகும்.

தன் பாதுகாப்பு குறித்து எதுவித அக்கறையும் எடுக்காத நிலை யில் தன் செயற்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்தவர். விடுத லைப் புலிகள் உள்ளிட்ட சில இயக்கங்களின் மனித உரிமை மீறலை விமர்சிக்கின்ற நாடகமொன்றை அரங்கேற்றத் தயராகிக் கொண்டிருக்கையில் 30.08.1991ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். செல்வியின் விடுதலைக்காக பல சர்வதேச நாடுகள் குரல் கொடுத்தன. சர்வதேச மன்னிப்புச் சபை உள்ளிட்ட பல மனித உரிமை நிறுவனங்களும் அவரது விடுதலையைக் கோரியிருந்தன. ஆயினும் எதுவும் பயனளிக்கவில்லை. தமிழீழ பெண்கள் இயக் கப் பெண்களுக்கான அறிவியல், அரசியல் வகுப்புக்கள் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த ஆண்களாலேயே நடத் தப்பட்டன. ஆணாதிக்கச் சட்டகத்துக்குள் ஒத்து உறவாடிச் செல்லும் அமைப்பாகவே இவ்வமைப்புச் செயற்பட்டது. கழகத் தில் இடம்பெற்ற உடபூசல்கள், பிளவுகளை அடுத்து இம்மகளிர் அமைப்பு 1986-ல் கலைக்கப்பட்டது. திடீரென அமைப்பு கலைக் கப்பட்டமை இவ்வமைப்பைச் சேர்ந்தபெண்கள் பலர் தம் உறவி னரோடு வாழ முடியாது வறுமைக்குள் போராடித் தவிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். வசதி படைத்த சிலர் வெளிநாடுக ளுக்குச் செல்ல நேரிட்டது. ஒரு சிலர் காணாமல் போயினர். வேறு சிலர் இயக்கத்துக்குள் இருந்த ஆண்களையே காதலித்து திரும ணம் செய்து கொண்டனர்.

தமிழர்களின் தேசவிடுதலையைக் கருத்தில் கொண்டு தமிழ் ஈழவி டுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்ற நிலையில் பெண்களும் இயக்கங்களுக்குள் உள்வாங்கப்பட்டனர். பரந்துபட்ட முறையில் மக்களைப் போராட்டங்களுடன் இணைக்கவும் விடுதலை குறித் தான எண்ணக்கருவை மக்கள் மனதில் விதைக்கவும் பெண்போரா-

ளிகளின் தேவை உணரப்பட்ட நிலையில் பெண்கள் தமிழ் ஈழத்தின் விடுதலைக்கான போராளிகளாய் உள்வாங்கப்பட்டனர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்(E.P.R.L.F) பெண்களுக்கான வெகுஜன ஸ்தாபனமாக தோற்றம் பெற்றதே ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி(E.W.L.F) ஆகும். ஈழமக்களின் பெரும் பங்கினராய் உள்ள பெண்களை அணிதிரட்டும் வகையில் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு தேசவிடுதலைக்காய் போராடியதோடு மக்கள் மத்தியில் பெண்விடுதலை தொடர்பான விளிப்புணர்வையும் ஏற்படுத்தியது. பெண் அடிமைத் தனத்தை மீட்டெடுக்கும் வகையில் இவர்களால் 1984-ல் உருவாக்கப்பட்ட ‘செந்தனல்’ பத்திரிகை ஈழ விடுதலைப் போரில் பெண்களை இணைத்துக் கொள்வதற்கும் புரட்சிகர யுத்தத்தில் அவர்களைப் பங்கெடுக்க வைப்பதற்கும் உதவியது.

பெண் விடுதலை என்பது சமூகவிடுதலைக்காய் பெண்கள் போராடுவதனூடகவே சாத்தியப்படும் என்பதை இவ்வியக்கம் உணர்த்தி நின்றது. ஈழப் பெண்களின் விடுதலை என்பது தேசவிடுதலைப் போரிலும் தங்கியிருந்தமையால் தேசிய புரட்சியை மையப்படுத்திய ஆக்கங்களையும் செந்தனல் இதழ் தாங்கி வந்தது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பும் பெண்களை இந்தியாவுக்கு அனுப்பி பயிற்சியளித்தது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பின் மக்கள் விடுதலைப் படையில் (P.L.A) பெண்களும் அங்கம் வகித்தனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல்முதலில் களப்பலியான பெண் போராளி ஷோபா மதிவதனி (வனிதா) ஆவார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பின் மக்கள் விடுதலைப் படையில் உறுப்பினராக இருந்த இவர் 3.5.1985ம் ஆண்டு காரைநகர் கடற்படைத்தளம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது களப்பலியானார். இவர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் சகோதரியாவார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பின் பெண்கள் எவரும் அங்கம் வகிக்கவில்லை. யாழ்ப்பாண வட்டாரக் குழுவில் மாத்திரம் தாரிணி, அஞ்சலி ஆகிய பெண்கள் அங்கம் வகித்தனர். வருடந்தோறும் ‘நெருப்பு தினம்’ என்ற பெயரில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பு பெண்களுக்கான தினத்தை நினைவு கூர்ந்து வந்தது. இத்தினத்தில் ‘அராஜகம் ஒழிக’ என்று பொதுக் கோசம் எழுப்பிக்கொண்டு தீப்பந்தத்துடன் ஊர்வலம் போவர். பின்னர் பொதுக்கூட்டமுடன் நெருப்பு தினம் நிறைவுக்கு வரும். இதில் ஆண்களும் கலந்து கொண்டனர். ஆண் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிய அமைப்பில் பெண்கள் அரசியலின் துணைப்பாத்திரங்களாகவே செயற்பட்டனர். ஆகையால் பெயரளவிலான அரசியல் உரிமைகளையே இங்கும் பெண்கள் அனுபவிக்க நேர்ந்தது.

தமிழ் தேசிய விடுதலை முன்னணியில் (என்.எல்.எவ்.ரி) புரட்சிகர பெண்கள் அணி (Radical Woman league) ஒன்றும் செயற்பட்டதாக அறிய முடிகிறது. இப்பெண்கள் அமைப்பால் 1984-ல் ‘சக்தி’ என்ற சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. பெண்நிலைவாதச் சிந்தனைகளைத் தாங்கி வந்த இச்சஞ்சிகை பெண்கள் அணிக்கான யாப்பு ஒன்றையும் தன்னகத்தே கொண்டிருந்தது.


சரவ்தேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஈழப்பெண்கள் விடுதலை முன்னணியினர் 08.03.86ம் ஆண்டு மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இப்பேரணியில் ஈழப்பெண்கள் விடுதலை முன்னணி, தமிழ் மகளிர் அவை, சுதந்திரப் பறவைகள் அமைப்பு, கிராமிய முற்போக்கு பெண்கள் அமைப்பு, ஈழத்தாய்மார் சங்கம் முதலானவற்றின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

தேசவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் ஆண் மேலாதிக்க ஒடுக்குமுறையையும் அதை நியாயப்படுத்தும் கலாசார அடக்குமுறைகளையும் இல்லாது ஒழிக்கும் வகையிலும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு பெண்கள் 1983 முதல் உள்வாங்கப்பட்டனர். 1985 - 1987 காலகட்டத்தில் இயங்கிய மகளிர் அணி ‘சுதந்திரப் பறவைகள்’ என அழைக்கப்பட்டன. இவ்வணி தன் கொள்கைகளையும் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தும் முகமாக 1984 மார்கழி முதல் ‘சுதந்திரப் பறவைகள்’ என்ற சஞ்சிகையை வெளியிட்டது. பிற்போக்கான மரபுவழிக் கலாசாரங்கள் அழித்தொழிக்கப்பட்டு பெண் சுயமாக வாழவேண்டும் என்ற நோக்கோடு மகளிர் கலாசாரப் பிரிவும் உருவாக்கப்பட்டது. இதன் நிமித்தம் விடுதலைப் புலிகளின் உத்தியோகப் பூர்வ வானொலிகளிலும் தேசிய தொலைகாட்சியிலும் பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

1985 ஆவணி 18-ல் பெண்புலிகளின் முதலாவது பயிற்சிமுகாம் அதிகார பூர்வமாகக் கொடியேற்றித் தொடங்கிவைக்கப்பட்டது. அன்றிலிருந்து இறுதிப் போர்வரை பல்லாயிரக் கணக்கான பெண்கள் அணிதிரண்டு போராட்டத்தில் பங்குபற்றினர். 1986-ல் மன்னார் அடம்பனில் சிங்கள இராணுவத்தின் மீதான தாக்குதலோடு பெண்புலிகளின் தாக்குதல் வரலாறு தொடங்குகிறது. இதனை அடுத்து இந்திய இராணுவத்துடன் புலிகளுக்கு மோதல் ஏற்பட்ட போது கோப்பாய்க்கும் நாவற்குழிக்குமிடையில் நடந்த சண்டையில் லெப். மாலதி வீரச்சாவடைந்தார். இவரே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் களப்பலியான முதலாவது பெண்புலி ஆவார். சோதியா யாழ்ப்பாணத்திலுள்ள கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழ்நாட்டில் பொன்னம்மானிடம் ஆயுதப் பயிற்சியைப் பெற்றிருந்த இவர், மிகுந்த செயற்பாட்டுத் திறனும் நிர்வாகத் திறனும் கொண்ட போராளியாவார். மருத்துவப் போராளியாக ஆரம்பத்தில் செயற்பட்டுப் பின்னர் மகளிர் படையணியின் முதலாவது சிறப்புத் தளபதியாக வே. பிரபாகரன் அவர்களால் நியமிக்கப்பட்டவர். 11.01.1990-களில் மணலாற்றுக் காட்டுப் பகுதியில் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து, இவரது வித்துடல் கிளாலி மகளிர் பயிற்சி முகாமில் அடக்கம் செய்யப்பட்டது. 14.07.1996 காலப்பகுதியில் வே. பிரபாகரனால் மேஜர் சோதியா படையணிக்கான அத்திவாரம் இடப்பட்டது. வன்னியின் காட்டுப் பகுதியில் அமைந்திருந்த மகளிர் அடிப்படை பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற சுமார் முந்நூறு வரையான போராளிகள் இணைந்து மேஜர் சோதியாவின் பெயர் கொண்ட தாக்குதல் படையணியொன்று உருவாக்கப்பட்டது.

இவரின் மரணத்தை அடுத்து அந்த முகாம் ‘மேஜர் சோதியா பயிற்சிப் பாசறை’ என்ற பெயருடன் இயங்கத் தொடங்கியது. சோதியா படையணியின் சிறப்புத் தளபதியாக துர்க்கா நியமிக்கப்பட்டிருந்தார். இவரும் ஒரு மருத்துவப் போராளியாக இருந்து தாக்குதல் தளபதியாகத் தரமுயர்த்தப்பட்டவர். படையணியில் முதன் முதலில் உருவான படையணி சோதியா படையணி ஆகும். இதனைத் தொடர்ந்து 1995ம் ஆண்டு சூரியக் கதிர் நடவடிக்கையின் முடிவில், விடுதலைப்புலிகள் மகளிர் படையணி, தன்னை இரண்டாம் லெப். மாலதி படையணியாக உருமாற்றிக் கொண்டது. இதனுடைய கட்டளைத் தளபதியாக விதுஷாவும், துணைத் தளபதியாக கமலினியும் செயற்பட்டனர். இது தவிர தற்காப்புப் பயிற்சி உட்பட பல சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்ட சிறப்பு தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட சிறுத்தைப் படையணியிலும் விடுதலைப் புலிகளின் வானூர்தி எதிர்ப்புப் படையணியான அன்பரசி படையணியிலும் கடற்புலியிலும் ஈருடக தாக்குதல் படையணியிலும் பெண்கள் உள்வாங்கப்பட்டு இருந்தனர்.

விடுதலைப் போராட்டத்தில் பெண்களையும் அணி சேர்ப்பதனூடாக படிப்படியாக சமூக மாற்றத்தை ஏற்படுத்தி பெண் விடுதலையையும் தேசவிடுதலையையும் சாத்தியமாக்கலாம் என விடுதலைப் புலிகளின் தலைவர் உறுதியாக நம்பியதன் விளைவாக உருவாக்கப்பட்ட மகளிர் அணி, பின்னாளில் இலங்கை அரசின் படைபலத்தைச் சிதைத்து யுத்தத்தின் போக்கையே நிர்ணயிக்கின்ற பெரும் படையணிகளாக எழுந்து நின்றது.



ramesh.s@thaiveedu.com

# வட்டார வழக்கும் அணிகலன்களும் - சம்மாந்துறை

- எம்.ஐ.எம். சாக்கீர்

**அறிமுகம்:**

ஆடை அணிகலன்கள் தொடர்பான வட்டார வழக்குச் சொற்கள் குறித்த பிராந்தியத்தின் தனித்துவத்தையும், கலாச்சார சிறப்புகளையும் அறிய உதவுகின்றன. ஆடை அணிகலன்களைப் பொறுத்தவரை மூலப்பொருட்கள், தொழிலாளர்கள், மற்றும் அணிகலன்கள், அளவீட்டு முறைகள் என்று பலவாறாக சொற்களின் புழக்கத்தைக் காணலாம். இக்கட்டுரை அணிகலன்களையே பிரதானமாக நோக்குகின்றது.

**அணிகலன்கள்:**

அழகு, அந்தஸ்து, செழிப்பு போன்றவற்றை வெளிக்காட்ட நகைகள் அணியப்படுகின்றன. இவை தவிர ஆரோக்கியம், வழிபாடு, சடங்குகள் நிமித்தமும் அணிகலன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தங்கம், ஐம்பொன், வெள்ளி, செப்பு, வெண்கலம் போன்ற உலோகங்கள் மற்றும் பாசிமணிகள், மினுங்கும் கற்கள் போன்றவை ஆபரணங்களின் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன.

கேசம், நெற்றி, மூக்கு, காதுச்சோணை, காதுமடல், மேற்கை, மணிக்கட்டு. கை விரல், கழுத்து, இடுப்பு, கரண்டைக்கால், கால் விரல் ஆகிய பாகங்களில் அணிகலன்கள் அணியப்பட்டன.

நகை என்பதை பூணாரம் என்றும் நகநட்டு (நகைநட்டு), நக (நகை) என்றும் பேச்சுவழக்கில் வழங்கப்படுகின்றது. ஆபரண மூலங்களாக பயன்படும் ஐம்பொன் - அம்பொன், பொன் என்றும், வெண்கலம் - வெங்கலம் ஆகவும் செப்பு - செம்பு ஆகவும் பேச்சுவழக்கில் வழங்கப்படுகின்றது. பெறுமதிமிக்க இரத்தினங்கள், வைரம், மாணிக்கம் முதலியவை கல் என்றே பொதுவாக அழைக்கப்படுகின்றன.

பெண்களே அதிகம் அணிகலன்களை அணிபவர்களாக காணப்படுகின்றனர். சம்மாந்துறைக் கிராமத்தில் அணிகலன்களுக்கு வழங்கப்பட்ட வட்டார வழக்குச் சொற்களை அவதானிக்கின்றபோது இச்சொற்கள் பொதுவாக கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் பிரயோகிக்கப்பட்ட சொற்களாகவே காணப்படுகின்றன.

தலையில் அணிபவையாக: சீவி முடித்த கொண்டை குலையாமல் -கொண்டை (கூந்தல் முடிச்சு) அவிழாமல் இருக்க கொண்டையில் குத்தப்படும் ஊசிபோன்ற அணிகலன்களான கொண்டக்குத்தி, கொண்டக்கூர் என்பவற்றை குறிப்பிடலாம். இவற்றில் சங்கிலி இணைக்கப்பட்ட கொண்டைக்குத்தி, மாலக்கொண்டக்குத்தி எனவும் முனையில் பூவேலைப்பாடு உடையவை பூக்கொண்ணடக்குத்தி எனவும் அழைக்கப்படும். நெற்றியில் மத்தியில் தலைமுடியில் கொழுவி அணியப்படும் ஆபரணம் நெத்திச்சுட்டி என அழைக்கப்படுகிறது. இதில் சூரிய சந்திர அலங்காரங்கள் இருப்பின் அவை பொழுது, நிலவு என அழைக்கப்பட்டன. தற்காலத்தில் முற்றாக கைவிடப்பட்ட அணிகலனாக காணப்படுகின்றது.

கழுத்து அணிகலன்களாக மாலை பொதுவாக காணப்படுகின்றது. கழுத்தில் அணிவிக்கப்படும் அந்தங்கள் இணைக்கப்பட்ட தொங்கிக்கொண்டிருக்கும் கொடிகள் அனைத்தும் மாலை எனப்படும். பேச்சுவழக்கில் மால என்றே வழங்கப்படுகின்றது கழுத்தணிகளுள் மிக எளிய வடிவமாக இதனைக் கொள்ளலாம்.

கழுத்தோடு ஒட்டி அணியப்படும் நகைகள் கழுத்தொட்டி என பொதுவாக அழைக்கப்படும். இவற்றில் அட்டியல் (அட்டிகை), உக்கட்டு (உட்கட்டு) போன்றவற்றை குறிப்பிட்டுச் சொல்லலாம். அட்டியல் கழுத்தோடு ஒட்டியபடி அணியப்படும், பொதுவாக வேலைப்பாடுகள் குறைவாக காணப்படும், சிலவற்றில் கற்களும் பதிக்கப்பட்டிருக்கும்.

உக்கட்டு இல்லத உக்கட்டுமணி என்பது உருண்டை வடிவ வெள்ளிமணிகளலான கோர்வை போன்றது. அட்டியலை விட சிறியதாக காணப்படும். நீளமாக கோர்வை செய்யப்பட்டது உருண்ட மணிமாலை (உருண்டைமணி) எனப்படும்.

மணிமாலைகளும் அணியப்பட்டுள்ளன, இவை தங்கம் அல்லாது அம்பொன் (ஐம்பொன்), கற்கள், பாசிமணிகளால் வடிவமைக்கப்பட்டிருக்கும். பவளமணிமாலை பவளக்கற்களைக் கொண்ட கோர்வையாக காணப்படும், வைரமணிகோவை என்பது வைரம்போன்ற பளிங்குகளை கொண்டு கோர்வை செய்யப்பட்டது. காரமணி எனப்படும் மாலை துளையுடைய தங்கமணிகள், பளிங்கு மணிகள் இடையிடையே விருப்பத்திற்கு தக்கவாறு கோர்வை செய்யபட்ட மாலையாகும். பலவண்ணமுள்ள மணிகளால் கோர்வை செய்யபட்ட மாலை சவுக்குமணிமாலை எனப்படும். இதில், கருப்பு மணிகள் மட்டும் உள்ளது கருகமணிமாலையாகும். கீரமணி-மாலை மிகச்சிறிய மணிகளைக் கொண்ட மாலை, பாவக்கொட்ட மாலை - பாகல் விதைகளைப் போல தங்கமணிகள் இணைக்கப்பட்ட மாலை.

மாலைகளில் கொழுவப்படும் தங்க வேலைப்பாடுடை தகடு போன்ற அணிகலன் பதக்கம் எனப்படுகின்றது. இதனை ஆங்கிலச் சொல்லான பெண்டன் என்றும் அழைக்கின்றனர். இதில் முத்துக் கோர்வை செய்யப்பட்டது முத்துப்பதக்கம் எனப்படும்.

மணிக்கோர்வை என்பது ஐம்பது தொடக்கம் அறுபது வரையான தங்க மணிகளைக் கொண்ட அளவில் வேறுபட்ட மாலைகளை இணைத்து உருவாக்கப்படும். இது பொன்மணிக்கோவை என்றும், ஏழுமணிக்கோவை என்றும் அழைக்கப்படுகின்றது. இதே போன்று காசிமாலை என்பது சிறிய சிறிய பதக்கங்களை இணைத்து மாலையாக கோர்வை செய்யப்படுகின்றது. காறை எனப்படும் ஆபரணம் சிறுவர்கள், பெண்கள் அணியும் கழுத்து வளையலாகும். மேலும் திருமண நிகழ்வுகளில் மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை அணிவிக்கும் பதக்கத்துடன் கூடிய மாலை தாலிக்கொடி எனப்படுகின்றது, அதில் இணைக்கும் வேலைப்பாடுடைய பதக்கம் போன்ற அமைப்பு சவடி எனப்படும், சவடி பிறைவடிவில் செய்யப்பட்டால் அது தாலிப்பொற (தாலிப்பிறை) என அழைக்கப்படுகின்றது. இவைதவிர பூச்சிமணி, பொன்னுக்கட்டு போன்ற ஆபரணங்களும் கழுத்தில் அணியப்பட்டுள்ளன.







காதில் அணியப்படும் அணிகலன்களாக காதின் கீழ்ச்சோணை யில் அணியும் மாதுளம்பூ வடிவான காதுப்பூ, காதுச் சோணை யின் அடிப்பாகத்தில் ஒட்டினாற்போல் அணியும் மின்னி, சிமிக்கி அல்லுக்குத்து என்ற காதுச்சோணையின் மடலோரமாக துளைத்து அணியும் வளையம். போன்றவற்றை குறிப்பிடலாம் இவை தவிர காதில் தொங்கும் படியாக அணியும் தூக்கு பல வடிவில் காணப் படுகின்றது. கிளிக்கூண்டு போன்ற அரைக்கோள வடிவான தூக் கத்தைக் கொண்ட கிளிக்கூட்டுத்தூக்கு, லிப்ஸி அல்லது ஜிப்ஸி எனப்படும் காதின் கீழ்ச்சோணையில் அணியும் வட்ட வளையம் போன்ற நகை, காதின் மேற்சோணையில் அணியும் வாளி அல் லது கொப்புவாளி, போன்றவற்றை குறிப்பிடலாம்.

பொதுவாக அனைவரும் இடுப்பில் வெள்ளி அல்லது தடித்த நூலாலான அரைஞாண் அணிந்திருப்பர். இதை அறுணாக்கயிறு, அறுநாக்கொடி என்று அழைப்பர். இதில் தாயத்து, அச்சரம் இணைத்து இடுப்பில் கட்டுவதும் உண்டு. மெழுகுசீலை அல்லது செம்புத்தகட்டில் எழுதிய அட்சரங்கள் அரக்கூடு, அச்சிரக்கூட்டி னுள் வைத்து கட்டப்படும். பெண் குழந்தைகளுக்கு பெண்ணு றுப்பை மறைக்கும் வகையில் அரசிலைவடிவில் வெள்ளியால் செய்யப்பட்ட அலமாடி (அரைமூடியும்), ஆண் குழந்தைகளுக்கு ஆணுறுப்புக்குத் துணையாக தம்பித்தொணையன் அல்லது குஞ் சுபிடிமாங்காய் எனப்படும் அணிகலனும் அரைஞாண் கயிற்றில் இணைத்து தொங்கவிடும்.

கைகளில் வளையமாக காப்பு அணியப்படும். இதில் பல வகை கள் உள்ளன. வளைக்கப்பட்ட குழல் வடிவான பூட்டி விரிக்கக் கூடிய கொம்புக்காப்பு, அகலமான தங்ககட்டியால் செய்யப்பட்ட அலங்காரம் இல்லாத பூட்டித் திறக்கக்கூடிய பட்டணக்காப்பு, மணிக்கட்டில் அலங்கார வேலைப்பாடுடன் கூடிய முகப்பணிக் காப்பு, பூட்டுக்காப்பு பூட்டுத்திறப்புக்காப்பு, அடுக்குக்காப்பு, கொலுசுக்காப்பு, சபோனா போன்றவற்றைக் குறிப்பிடலாம். மணிக் கட்டோடு ஒட்டியபடி அணியும் கைப்பட்டியும் கையில் அணியப் பட்டுள்ளது. இவைதவிர மேற்கையில் தாவத்து, தாவத்துக்கூடும் அணியப்பட்டுள்ளது.

கைவிரல்களில் அணிபவையாக மோதிரம் அடுக்குமோதிரம், கல் மோதிரம், முத்துமோதிரம் போன்றவற்றை குறிப்பிடலாம். இது போல, கால்களில் அணியப்படும் ஆபரணங்களாக கால் விரலில் அணியப்படும் வளையமான கால்மோதிரம், கணுக்காலில் அணி யப்படும் காலில் அணியும் சங்கிலி போன்ற கரணை, மணிகள் இணைக்கப்பட்ட கொலுசம், தடித்த வளையமான கொம்புக்காப் பைப் போல் பருமனான் தண்டை, தண்டைச்சரடு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மூக்கின் நுனியில் துளையிட்டு அணியும் மூக்குத்தி மற்றும் அல் லுக்குத்து என்பவை முஸ்லிம் பெண்களிடம் தற்போது புழக்கத்தி லிருந்து மறைந்து வருகின்றது. மேலும் ஆண்கள் அணியும் பெரிய திருமண மோதிரம் கணையாளி என அழைக்கப்படுகின்றது.

இச்சொற்களை ஆவணப்படுத்துவது இரண்டு வகையில் முக்கியத் துவம் பெறுகின்றது.

- இவற்றிறுள் பெரும்பாலான அணிகலன்கள் புழக்கத்திலிருந்து மறைந்துள்ளன. அதே வேளை பதிய வகை அணிகலன்கள் புழக்கத்திற்கு வந்துள்ளன. இவ்வடிவ மாறுதல்கள் தொடர்ந் தேர்ச்சையாக நடந்து வருகின்றது. இம்மாற்றங்களின் பரிணா மத்தை அறிந்து கொள்ளவும் காலமாற்றத்தில் அணிகலன்கள் தொடர்பான சமூக பிரக்ஞையை அறிந்து கொள்ளவும் இது அவசியமாகின்றது.
- கடந்தகால பிரதிகளை வாசிப்புச் செய்கையில் ஏற்படும் இடர் பாடுகளை களைவதற்கு உதவுதல். உதாரணமாக சம்மாந் துறை இஸ்மாலெவ்வைப் புலவர் பாடியதாக கிடைத்துள்ள 'மலடி' என்ற பிரார்த்தனைப்பாடல் பின்வருமாறு அமைகின்றது

*தாவத்து மோதிரமும்*
*தாலியும் கூடச்செய்து*
*வேலிக்குள் வைத்தென் பிள்ளை*
*வேறொருவர் கூட்டிச் சென்றார்...*

இப்பாடலைப் புரிந்து கொள்ள தாவத்து என்று குறிப்பிடப்படுவது அணிகலன் என்பதை அறியவேண்டியிருக்கின்றது. மேலும் பல நாட்டார் கவிகளில் ஆபரணங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள் ளன.

அதே போல் சில நாட்டார் கவிகளை அவதானிக்கலாம்:

*அளிகம்பை வட்டையில அஞ்சேக்கர் செஞ்சிருக்கன்*
*தாலிக்கொடி வாங்க என்ட தங்கமயில் நாகூருக்கு*

*கண்டுக்கிளியாருக்கு கலியாணம் என்டு செல்லி*
*குண்டுமணி தேடி நான் குனியாத பத்தையில்ல*

*மாலக்கொடியே எண்ட மாமிபெத்த மாங்கனியே*
*சீவன் கிடந்தால் உன்னை சிறைமீட்பன் தப்பாம*

*தோடு சிமிக்கியெங்கே தோகைமயில் வடிவுமெங்கே*
*மாலை பதக்கமெங்கே மகளின் மான்விரட்டிப் பார்வையெங்கே.*

*காப்பெங்க கண்ணே உண்ட காதிலிடும் தோடுமெங்கே*
*மாலை பதக்கமெங்கே கண்டார் மான் வெருட்டுப் பார்வை எங்கே*

*போறாய்கா புள்ள ஒனக்கு புத்தி சொல்லத் தேவையில்ல*
*ஊரார் மணிக்கோர்வை உடைஞ்சிதண்டா வந்திவரும்*

*முத்திலியம் பழத்தினிலே முத்துப் பதிச்சதுபோல்*
*கையிலிருந்த கணையாழி கண்ணடிச்சி மின்னுதுகா*
*திருக்கொண்டைப் பூப்பொல காது முழுக்க அல்லுக்குத்து*
*தைக்கிதுகா என்மனச தல நிமித்திப் பாரு கண்ணே*

*தண்டை பதிந்திருக்கு கொலுசுமிழுபட்டிருக்கு*
*தளர்ந்த நடையிருக்கு என்ட தாள் விளக்க காணவில்லை*

ஆகவே இவற்றை அறிந்துகொள்ளவும் அவற்றினூடு கடந்தகால பண்பாட்டைத் தரிசிக்கவும் வட்டார வழக்காறுகள் பதிவு செய்யட வேண்டியுள்ளன.



saakir.mim@thaiveedu.com

# பாரதியார் பார்வையில்

# பாரதியார்

- கிருங்கை சேதுபதி

**தன்னைப் பற்றித் தானே எழுதியுள்ள குறிப்புகளைக் கொண்டு, மகாகவி பாரதியார் குறித்து இந்தத் தலைப்பில் புதுச்சேரி பாரதி அன்பர்கள் அறக்கட்டளை நடத்திய மாதக் கூட்டம் ஒன்றில் உரையாற்றியிருக்கி றேன். ஆனால், அந்த வகைமையில் அடங்காத இந்தத் தலைப்பில் சுட் டப்பட்ட பாரதியார்கள் இருவர். பின்னவர் மகாகவி பாரதியார். முன்ன வர் வரகவி பாரதியார். இருவரும் சமகாலத்தவர்கள். அதைவிடவும் வியப்புக்குரிய செய்தி, இருவரது பெயரும் சுப்பிரமணிய பாரதி என்பதா கும். மகாகவி பாரதியாரே, இவரை 'பாரதி' என்று அழைக்கவும் செய்தி ருக்கிறார் என்பதும் இங்கு விளக்கம் பெற வேண்டிய செய்தி. இதனால் குழப்பமும் புதிய தெளிவும் பாரதியியலில் நேர்ந்திருக்கின்றன. இவை குறித்து இக்கட்டுரையில் காணலாம்.**

***

மறைந்து ஒரு நூற்றாண்டு முடிந்துபோன நிலையிலும் மகாகவி பாரதியாரின் படைப்புகள் அனைத்தையும் முழுமையாய்த் தொகுத்து வெளியிட்டோம் என்று நிறைவுகொள்ள முடியாத நிலை யில் இன்னமும் பாரதியின் ஆக்கங்கள் தேடவேண்டியுள்ளன. அதிலும் அவர்தம் பெயரில் வந்துள்ள ஆக்கங்களில் சில அவரு-டையதில்லை என்பனவற்றை விடுத்து, விடுபட்டவை என்று பின் னர் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டவற்றையும் இணைத்து முழுமை யாய்க் கொண்டுவரும் காலம் எப்போது வரும் என்று தெரிய வில்லை.

பேரறிஞர் ம.பெ. தூரன் தொடங்கி, பேராசிரியர் ய. மணிகண்டன், ஆய்வாளர் ஆ.இரா. வேங்கடாசலபதி வரையில் பாரதியாரின் விடுபட்ட ஆக்கங்களைத் தேடித் தொகுத்து தந்தவர்கள் பலர். இவர்களுள் காலவரிசையில் பாரதியாரின் ஆக்கங்களைத் தொகுத்துப் பெருந்தொகுதிகளாக வெளியிட்ட பெருமை திரு. சீனி. விசுவநாதனையே சாரும். அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சி குறித்து எழுதியவை இன்னும் சுவை மிகுந்தவை. அதில் ஒன்று இந்தக் கட்டுரையோடு தொடர்புடையது.

***

'பாரதி: நூற்பெயர்க்கோவை' தொகுதிக்கான பாரதி நூல்களை நான் தேடிக் கொண்டிருந்த நேரம்.

மதுரையில் ஒரு பழைய புத்தக வியாபாரி. அவர் கடைக்கு நான் சென்றேன். அவர் எனக்கு ஓரளவு பரிச்சயமானவர். அவர் என் னைக் கண்டதும் தம்மிடம் பாரதியின் அரிய நூல் தொகுதி இருப் பதாகவும், தேவைப்பட்டால் கொண்டு வந்து தருவதாகவும் தெரி வித்து, முன் பணமாக நூறு ரூபாயைக் கேட்டார்.

எனக்கோ தாங்க முடியாத சந்தோஷம். அதனால் உடனே அவரி டம் நூறு ரூபாயைக் கொடுத்துவிட்டேன். மறுநாள் அவரே நான் தங்கி இருந்த ஓட்டலுக்குப் புத்தகக் கட்டுடன் என்னைத் தேடி வந்து விட்டார்.

உள்ளபடியே பெரிய தொகுதிகள் கொண்ட கட்டுதான்.

அவசரம் அவசரமாக அவரிடமிருந்து கட்டைப் பெற்றுப் பிரித்துப் பார்த்தேன். உடனே அதிர்ச்சி அடைந்தேன். நான் ஆவலோடு எதிர்பார்த்த பாரதி நூல்களாக அவை இல்லை. ஒரு கணம் பேச நாவெழவில்லை.

என் முகவாட்டத்தைக் கண்ட அந்தப் புத்தக வியாபாரி, 'என்ன சார், பாரதியின் அரிய நூல்களைக் கொண்டு வந்து தந்திருக்கி றேன். பேசாமல் இருக்கிறீர்களே?' என்று கேட்டார்.

'இவை அரிய நூல்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பாரதி நூல்கள் இல்லை. வேறொருவர் எழுதியவை' என்று நான் கூறி னேன்.


ஆனால் அவரோ 'நான் கொண்டு வந்தவை பாரதி நூல்களே. விலை அதிகம் கேட்பேன் என்று நினைத்து நீங்கள் இப்படிச் சொல்கிறீர்களா? நான் நியாயமான விலையைத்தான் கேட்பேன். முதலில் புத்தகங்களைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். பிறகு விலையை முடிவு செய்து கொள்ளலாம்' என்றார்.

நான் அவரிடம் சற்று விளக்கமாக, 'புத்தகங்களின் பெயரையும், ஆசிரியரின் பெயரையும் பாருங்கள். நூலின் ஆசிரியர் பெயர் வர கவி அ. சுப்பிரமணிய பாரதியார் என்று உள்ளது. நூல் தொகுதி களின் பெயரோ ஜடாவல்லபர் என்பதாகும். நான் தேடும் நூல்க ளின் ஆசிரியர் சி. சுப்பிரமணிய பாரதியார்' என்று தெரிவித்தேன்.

அப்போது அந்த வியாபாரி, 'என்ன சார், நீங்கள் சொல்லும் பார-தியை வரகவி என்று தானே குறிப்பிடுகிறார்கள். சொல்லின் ஆரம்ப எழுத்தின் பேதத்தைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? அ. சுப்பிரமணிய பாரதியா? சி. சுப்பிரமணிய பாரதியா? என்று. நீங்கள் பாரதி நூல்கள் தேவை என்று சொன்னதால், என் வசம் இருந்த இந்த நூல்களைக் கொண்டுவந்தேன். எனக்கும் இப்போ துதான் விஷயம் புரிகிறது' என்பதாகச் சொல்லி, என்னிடம் பெற்ற முன் பணத்தொகையைத் திருப்பித் தர முன்வந்தார்.

அவர் எனக்காக எடுத்துக் கொண்ட பிரயாசைக்காக ஐம்பது ரூபாய் கொடுக்க விரும்பினேன். முதலில் மறுத்த அவர், என்னு டைய வற்புறுத்தலினால் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சி தெரிவித் தார்.'

(https://bsubra.wordpress.com/2006/12/16/bharathi-scholar-seeni-viswanathan-on-his-encounters-with-subramaniya-bharathiyaar/)



மேற்கண்டவாறு, பாரதி ஆய்வாளர் திரு. சீனி. விசுவநாதனின் தேடல் அனுபவத்தில் நிகழ்ந்த குழப்பம் யாருக்கும் வந்துவிடலா காது என்று எச்சரித்தவர்களில் ஒருவர் சக்தி சுப்பிரமணியம். சென்னை, பாரி புத்தகநிலையத்தின் வாயிலாக, மகாகவி பாரதி யார் (புதுமைக் கண்ணோட்டம்) என்ற நூலில் பின்வருமாறு ஒரு எச்சரிக்கையை அவர் தந்திருக்கிறார்:

‘பாரதியின் பெயரால் வெளிவந்துள்ள கட்டுரைகள் பல. கதைக ளும் உள. இவை யாவும் மகாகவி சுப்பிரமணிய பாரதி எழுதிய வைதானா? ஐயம். இந்த ஐயப்பாட்டுக்குக் காரணம் என்ன? வர-கவி அ. சுப்பிரமணிய பாரதி என்ற பெயர் கொண்டவர் ஒருவரும் இருந்தார். அவரை நான் கண்டிருக்கிறேன்: பேசியதும் உண்டு. அந்தக் காலத்தில் அவரும் சுதேசமித்திரனுக்குக் கதைகளும் கட் டுரைகளும் எழுதிவந்தார். எனவே, பெயர் கண்டு எல்லாம் மகா-கவி பாரதி எழுதியவையே என்று முடிவு செய்வது சரியாகுமா? யோசித்தல் வேண்டும்.’ (சக்திதாசன் சுப்பிரமணியம், பாரதியின் புதிய கண்ணோட்டம், ப.223)

சி. சுப்பிரமணிய பாரதியாருக்கும் வரகவி என்ற முன்னொட்டுச் சிறப்புப் பெயர் உண்டு. பாரதி என்பது அவருக்கு வழங்கப் பெற்ற பட்டப் பெயர். அதுவே, மகாகவி என்ற முன்னொட்டுடன் நிலைத்தும் விட்டது. அதனால், அப்பெயருக்குமுன்னர், இந்த ‘வர கவி’ பெரிய அளவில் நிலைகொள்ள முடியவில்லை. அதுபோல், வரகவியாகிய அ.சுப்பிரமணிய பாரதிக்கு, ‘பாரதி’ என்பது இயற் பெயரா, அல்லது தகுதி குறித்து வழங்கப்பெற்ற சிறப்புப் பெயரா என்பது ஆய்வுக்குரியது.

மேலும், மகாகவி பாரதியின் ஒருசாலை மாணாக்கரான நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரும் வரகவி அ.சுப்பிரமணிய பாரதியோடு இணைத்துக் கருதத்தக்கவர். இவர்கள் இருவரும் மகாகவி பாரதி யுடன் பழகிய அனுபவங்களை, அவர் பாடிய, படைத்த ஆக்கங் கள் குறித்துச் சில அரிய தகவல்களை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், நம்மில் பலருக்கு நாவலர் சோமசுந்தர பாரதியாரைத் தெரிந்த அளவிற்கு, வரகவி அ. சுப்பிரமணிய பாரதியைத் தெரிந் திருக்கும் வாய்ப்புக் குறைவு என்றே தோன்றுகிறது. இவ்விரு பார-தியார்களையும் இணைத்துப் பயன் பெற்றது, சுதேசமித்திரன் இதழ். எனவே, இந்தக் குழப்பம் அவ்வப்போது தலைதூக்குவது தவிர்க்க முடியாதது. எனினும், இதனைப் போக்கும் தெளிவை, பாரதி ஆய்வாளர் திரு. பெ.சு. மணியும் ‘சுதேசமித்திரன்’ தொடங் கப்பெற்றதன் பின்புலத்தை விளக்கும் கட்டுரையொன்றில் பின்வரு மாறு குறிக்கிறார்:

‘மற்றொரு சமயத்தில் வரகவி சுப்பிரமணிய பாரதியிடம் (மகாகவி பாரதியார் அல்லர்) ஜி.சுப்பிரமணிய ஐயர், பின்வருமாறு கூறிய-தாக வரகவி சுப்பிரமணிய பாரதி பாரதமணியில் எழுதி வந்த தொடர் கட்டுரையில் நினைவு கூர்ந்துள்ளார். ‘நம் நாடு தழைக் கவேண்டும். நம்நாட்டில் கல்வி, கைத்தொழில், செல்வம், ஆசாரச் சீர்திருத்தம், தேசாபிமானம், தன்னைத்தானே காத்துக் கொள்ளத் தக்க ஆற்றல் இவைகள் பெருக வேண்டும் என்கிற விருப்பம் என் னுடைய இளவயதிலேயே முளைத்தது. ஆனாலும் அந்த விருப்

பம் 1878ம் வருஷத்திலேதான் ‘ஹிந்து’ என்னும் பத்திரிகையாகப் பரிணமித்தது. அப்பால் ஆங்கிலங் கற்ற நம்மவர்களுக்கு உழைப்பதை விட சாமான்ய தென்னிந்தியத் தமிழ்நாட்டுக் குடி மக்களுக்குத் தக்க அறிவையூட்டுவதுதான் சிறந்தது என்கிற விருப்பம் உதித்த அடுத்த நான்கு வருஷகாலத்திற்குள் அதாவது 1882ம் வருஷத்தில் அவ்விருப்பம் சுதேசமித்திரன் பத்திரிகையாகப் பரிணமித்தது. ‘(இ.சுந்தரமூர்த்தி, மா.ரா.அரசு, (ப.ஆர்), இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், ப.59)

***

**வ**ரகவி அ. சுப்பிரமணிய பாரதி, மகாகவி பாரதியின் சமகாலத்தில் வாழ்ந்த படைப்பாளி. இவர், மகாகவி பாரதியை விடவும் ஈராண்டுகள் அகவையில் மூத்தவர். திருச்சி மாவட்டம் முசிறி வட்டம், தொட்டியம் வட்டாரத்தைச் சார்ந்த அலைகரை கிராமத்தில் 1880ம் ஆண்டு ஸ்ரீ ஐயாத்துரை ஐயரின் மகவாகப் பிறந்தவர். பள்ளிக் கல்வியை உள்ளூரிலும், கல்லூரிக் கல்வியைத் திருச்சிராப்பள்ளி தூய வளனார் கல்லூரியிலும் பெற்ற இவர், மரபுசார் நெறிகள் பிடித்துந்த, ஆங்கிலக் கல்வியை இடையிலேயே விடுத்துத் தமிழ்பயில விழைந்தார். திரிசிரபுரம் அ.சிவானந்த சாகர யோகீசுவரரின் மாணாக்கரானார். இயல்பிலேயே கவிபுனையும் ஆற்றல் கைவரப்பெற்ற இவர் முருகபக்தரும் கூட. ‘வேல் வணக்கம்’ என்ற தலைப்பில், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), திருஏரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல் (திருத்தணி), பழமுதிர்சோலை ஆகிய அறுபடைத்தலங்களில் எழுந்தருளியுள்ள முருகவேளைப் போற்றி, இவர் பாடிய பாடல்கள் ஏழு. (இதில், திருவாவினன்குடிப் பாடல்கள் மட்டும் இரண்டு. ஏனையவை முறையே ஒவ்வொன்று)

இன்றளவும் பாரதியார் கவிதைத் தொகுப்பு நூல்களில், அவர் பாடிய பக்திப் பாடல்களில் ஒன்றாக இடம்பெற்றுவரும், ‘எமக்கு வேலை’ என்ற தலைப்பிலான கவிதை,

***தோகைமேல் உலவுங் கந்தன்***
***சுடர்க்கரத் திருக்கும் வெற்றி***
***வாகையே சுமக்கும் வேலை***
***வணங்குவது எமக்கு வேலை***
என்பதாகும்.

(இது பாரதியார் இயற்றிய பாடல் இல்லை. சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய செவ்வந்திப்புராணத்தில் இடம்பெறும் செய்யுள். பாரதியின் கட்டுரையொன்றில் மேற்கோளாகக் காட்டப்பட்ட இப் பாடலை, பாரதியின் பாடலாகச் சேர்த்துவிட்டது இன்றளவும் நிலைபெற்றுவிட்டது.)

இப் பாடலின் ஈற்றடியில் இடம்பெறும் ‘வேலை வணங்குவது எமக்கு வேலை’ என்ற தொடரை நினைவுறுத்துவதுபோல, வரகவி அ.சுப்பிரமணிய பாரதியின் வேல் வணக்கப்பாடல்கள் ஏழின் ஈற்றடிகளும் அமைந்துள்ளன.

***‘வேலைக் காண்பதே யெமக்கு வேலை’***
- திருப்பரங்குன்றம்.

***‘வேலை அடுப்பதே யெமக்கு வேலை’***
- திருச்செந்தூர்.

***‘வேலை நாடுவ(து) எமக்கு வேலை’***
- திருவாவின் குடி (பழனி)

***‘வேலை விளம்புவ(து) எமக்கு வேலை’***
- பழனி

***‘வேலைப் பணிவதே எமக்கு வேலை’***
- திருவேரகம் (சுவாமிமலை)

***‘வேலை வேண்டுவ(து) எமக்கு வேலை.’***
- திருத்தணி

***‘வேலை சேவிப்ப(து) எமக்கு வேலை’***
- பழமுதிர் சோலை

என அமைகின்றன அப்பாடலின் தொடர்கள். மகாகவி பாரதியின் தாக்கம் இவற்றில் இருக்கவும் கூடும்.

***

1900ம் ஆண்டு சென்னைக்கு வந்த வரகவி அ.சுப்பிரமணிய பாரதி, 1903ம் ஆண்டு, ஜி. சுப்பிரமணிய ஐயர் நடத்திய சுதேசமித்திரனில் எழுதத் தொடங்கினார். பின்னர், அப்பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் சேர்ந்தார். மொழிபெயர்க்கும் பணியை ஏற்றுக் கொண்டார். மொழிபெயர்ப்பு, கவிதை ஆகியன கடந்து கட்டுரைகளும் எழுதிய இவர், சில புதினங்களும் எழுதியிருக்கிறார். தமிழகச் சிற்றூர் ஒன்றைக் களமாகக் கொண்டு இவர் புனைந்த ஆக்கம், ‘ஜடாவல்லவர்.’ இதுதான் இவரது முதல் புதினம் என்பர். இதேபோல், விஜயபாஸ்கரன், சுந்திரவல்லி, சிநேகலதா உள்ளிட்ட புதினங்களைப் படைத்ததோடு, ‘ஸ்வயம்ப்ரகாச விஜயம்’ என்ற நூலையும், ஸ்ரீமத் பாகவதம், ஆநந்த ராமாயணம் ஆகிய நூல்களையும் தமிழாக்கித் தந்திருக்கிறார். ‘பாலவிநோதினி’ என்ற குழந்தைகளுக்கான மாத இதழைத் தொடங்கி, 16 ஆண்டுகள் நடத்தி வந்த பெருமைக்குரியவர்.

சுதேசமித்திரன் இதழியல் பணியில் இருந்த காலத்தில் இருந்தே மகாகவி பாரதியின் நட்புக்குப் பாத்திரமாகிய இவர், பாரதியின் உற்ற தோழரான வ.உ. சிதம்பரனாருடனும் நட்புறவு பேணியிருக்கிறார். அவருக்குக் ‘கப்பலோட்டிய தமிழன்’ என்ற திருப்பெயரை முதன்முதலில் சூட்டியவரும் இவரே.

‘கப்பலோட்டிய தமிழனுக்கு, பிரம்பூர்ச் சிறிய வீடு பிரும்மானந்தம் தரக்கூடிய மாளிகையாக விளங்கியது. இந்தச் சிறு வீட்டில் கப்பலோட்டிய தமிழனைத் தனிப்படச் சந்தித்துப் பேசச் சமயமே அகப்படாது. எப்போதும் எவரேனும் சிலர் வந்து கூடிப் பேசியபடியேயிருப்பார். பிரம்பூர் நம் நண்பருக்கு வாழ்க்கைக்குரிய வசதியளிப்பதாயில்லாமற் போகவே நண்பர் ஒரு வருஷத்துக்கெல்லாம் தூத்துக்குடி சென்றார். அப்பால் நண்பரைக் காண முடியாமற் போயிற்று. அவ்வாறு ஏழு வருஷ காலம் கழிந்தது. அப்பால் ஒரு சமயம் நான் தனுஷ்கோடிக்குப் பிரயாணம் போகையில், மதுரை ஸ்டேஷனில் என்னை அவர் காண நேர்ந்தது. பார்த்தும், ‘பாரதி, எங்கே இந்தச் சீமைக்கு வந்துவிட்டாய்?’ என்று கேட்டுக்கொண்டே என்னைத் தழுவிக்கொள்ள ஆவலுடையவரானார். நான், ‘கும்பிடப் போன தெய்வம் குறுக்கிட்டாற்போலாயிற்று! நல்ல காலம்’ என்று சொல்லிக்கொண்டே இறங்கினேன். அப்பால் ஸ்நேக வாஞ்சையுடன் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்து பிரிகையில் தங்கள் புத்தகம் விற்பனையான வகையில் இருபது ரூபாய் தருகிறேன். வைத்துக் கொள்ளுங்கள்’ என்று ரூபாய் இருபது தந்தேன். அவர், ‘பாரதி இந்த ரூபா இருபதும் இருபது நூறு’ என்று கை குவித்தார். ‘இந்தா, இவைகளைச் சமயம் வந்தபோது உன்னுடைய பாலவிநோதினியில் பிரசுரம் செய்’ என்று மூன்று விஷயங்களடங்கிய ஒரு காகிதப் பையைக் கொடுத்தார். அதை நான் ‘பாக்கியம்! இது எனக்கு இருபதாயிரம்’ என்று பெற்றுக் கொண்டேன். அதற்கு மேல் தாமதிக்கப் புகைவண்டி இடந்தரவில்லை’ என்று பாரதமணி இதழில், (ஜனவரி-1943, பக்.29-30) குறிப்பிடுகிறார், வரகவி அ.சு. பாரதி.

14.03.1955ம் ஆண்டு மறைந்த இவர், மகாகவி பாரதி குறித்துத் தந்துள்ள இரு பதிவுகள் இங்கு குறிப்பிடத்தக்கவை. பாரதியியலுக்கு மேலும் செறிவூட்டக் கூடியவை.

ஒன்று பாரதி சொன்ன ஒரு சின்னக்கதை மற்றொன்று பாரதி

பாடிய ஒரு பாடலுடன் கூடிய நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம். இரண்டும் காற்றில் கலந்த கருத்தாக்கங்கள் அச்சு வடிவெய்தாத ஆக்கங்கள். கேட்ட அனுபவத்தை மீளவும் நினைவுகூர்ந்து இவர் எழுதியிராவிடில், இவை நம் கைவசமாகியிருக்க முடியாது. அவற்றைப் பின்வரக் காணலாம்.

ஆனந்தவிகடன் தீபாவளி மலரில் (27.10.1940, பக்.71-72) மகாகவி பாரதியின் படத்துடன், வரகவி திரு. அ.சுப்ரமண்ய பாரதி என்ற பெயர் தாங்கி வெளிவந்த கட்டுரை, 'பாரதி சொன்ன சின்னக் கதை'. அது மீள நினைந்து 35 ஆண்டுகளுக்குப் பின்னர் எழுதப் பட்ட கட்டுரை.

***

'எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. 1905-ம் வருஷம் ஒரு நாள் மாலைப்போழுதில் நானும் பாரதியாரும் எங்கள் காரியாலயத்திலிருந்து ('சுதேசமித்திரன்' ஆபீஸிலிருந்து) வெளியே வந்தோம். ஆகா! என்ன சொல்வேன்! பொழுது மலைவாயில் விழுந் தருணம்! இளம் வெய்யிலும் இளந்தென்றலும் வீசுந் தருணம்! உத்தி-யோக உழைப்பில் அலுத்த பறவைகளெல்லாம் - காரியாலயமாகிய கூண்டிலிருந்து வெளிப்பட்டுத் தாராளமாய் மூச்சுவிட்டுக் கொண்டு செல்லுந் தருணம்! ஆதலால் சென்னை அரண்மனைக் காரத் தெருவின் வழியே உத்தியோகஸ்தர் பலர் கும்பல் கும்பலாக - புத்தீசலெனப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களைக் கண்டதும் பாரதியார், 'பாரதி, பார்! குழி விழுந்த கண்களும் பொலிவிழந்த முகமும் உடைய சிரசில், முண்டாசென்னும் மூட்டை சுமந்து கொண்டு செல்லும் அடிமைகளை!' என்று கூறி, 'சிவ! சிவ' என மந்திரம் ஜபித்து, 'என்று ஒழியுமோ, இந்த அடிமை வாழ்க்கை' என்று சொல்லி நடந்தார். நானும் நடந்தேன்.

அழகான கடற்கரையின் அருகே ஒரு புல் தரை. அங்கே போய் இருவரும் அமர்ந்தோம். அங்கொரு சிறு புழு நெளிந்து நெளிந்து சென்றது. அதைக் கண்ட பாரதியார் என்னைப் பார்த்துச் சொன்னார்... 'பாரதி, ஒரு விஷயம் கேள்: இதோ பார்! அழகான புழு ஒன்று நகர்ந்து நகர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. இதன் உடம்பில் மேடு, பள்ளம், கோணல், வளைவு, கொம்பு, மயிர் ஒன்றுமில்லை. இந்தப் புழு சிறந்த ஞானி!

'சென்றது கருதார், நாளைச் சேர்வதுங் கருதார்!'

என்ற லக்ஷணப்படி முன் பின் கவலையே இது கொள்வதில்லை. 'பதறின காரியம் சிதறும்' என்று புழுவுக்கு நன்றாய்த் தெரியும். பல சாஸ்திரங்கள் படித்திருக்கிறது'-

பாரதியார் இப்படித் தான் பேசுவார். அதுவும் தெற்றித் தெற்றிப் பேசுவார். முடிவில் 'சபாஷ்!' என்று மெச்சும்படி விஷயம் முடியும். ஆதலால் அவர் பேசும்போது நான் குறுக்கே பேசுவது கிடையாது. அவரிடம் எனக்கு மரியாதை கலந்த பக்தியுண்டு. அது என்னை அறியாமலே அவரிடம் ஏற்பட்டதாகும்.

பாரதியார் மேலும் சொல்கிறார்...

'அதுவும் தவிர, புழு மிகவும் கீர்த்தி பெற்ற ஜலத்திலே பிறந்தது. இதன் சுற்றத்தார்களில் பலர் நேர்த்தியான இறகுகள் படைத்தவர். வானத்திலே பறந்து ஆகாசத் தத்துவங்களையெல்லாம் உணர்ந்து புகழ் பெற்றவர். உயர்ந்த மரக் கிளைகளின்மீது சென்று பூக்களிலுள்ள தேனைப் பருகி பிரம்மானந்தமடைந்ததாகச் சரித்திரம் இருக்கிறது.

இந்தப் புழு, பட்டுப்பூச்சி கோத்திரத்தில், வண்ணாத்திப்பூச்சி சூத்திரத்தில் பிறந்தது. இத்துடன் இதற்கு ஸத்வ குணம் அதிகம். இது ஆகாரத்திற்காக மற்றோர் உயிரைக் கொலை செய்யாது. 'அஹிம்சா பரமோ தர்ம' என்ற வேத விதிப்படி நடந்து வருகிறது.

இதோ பார், சிற்றெறும்புகளை! சிற்றெறும்பு கொஞ்சமேனும் அழகில்லாத ஜந்து. உடலிலே சதைப்பற்று சிறிதுமில்லாதது. ஓர் உருவமா கணக்கா, எதுவுமில்லை. இதற்கு வித்தையும் ஞானமுமில்லை. ஆனால் எப்போதும் முயற்சி எப்போதும் சலனம். இப்போது வயிறு நிறைந்த போதிலும் உடனே புறப்பட்டு நாளைக்கு உணவு தேடும். கோடை நாளிலே மாரி காலத்துக்கு உணவு தேடி வைக்கும். எப்போதும் அவசரம்! எப்போதும் அவசரம்!

சிற்றெறும்புகளில் சிலவற்றிற்கு இறகுண்டு. ஆயினும் அவ்விறகு, வண்ணாத்திப் பூச்சி, பட்டுப் பூச்சி இவற்றின் சிறகுகளைப்போல் அதிக உயரம் பறக்க ஏற்றவையல்ல. அழகும் சக்தியுமில்லாத இறகுகள். அந்த எறும்புகள் தேனுண்டு பார்த்தவைகள்.

எறும்புக்குக் கோத்திரமுமில்லை, சூத்திரமுமில்லை. தவிர, அதற்கு ஸத்வ குணமும் கிடையாது. கோபமும் குரூர விருத்தியும் அதிகம். தன் உணவுக்காக எதையும் கொன்று தின்றுவிடும்.

இந்தப் புழுவையும், எறும்பையும் பற்றிய விருத்தாந்தம் ஒன்று கூறுகிறேன், கவனி.

ஒரு புழு இப்படித்தான் தன்னிச்சையாகப் போய்க் கொண்டிருந்தது. எறும்பு ஒன்று அதை அணுகியது. புழு, 'தூர விலகிப் போ. கிட்ட வராதே' என்றது. ஏன் தெரியுமா? 'எறும்பு மாமிசந்தின்னும் அசிங்கியமான பிராணி. அஞ்ஞானப் பிண்டம்' என்று புழு நினைத்துக்கொண்டது, அதனால்.

எறும்பு, புழு சொன்னதை இலக்ஷ்யம் செய்யாமல் அதன் அருகே சென்றது. புழு, 'எங்கே வந்தாய்?' என்று கேட்டது.

'உன்னைத் தின்னும் பொருட்டு' என்றது எறும்பு.

'அட சவமே! ('சவமே, சவமே' என்று அடிக்கடி பாரதி தம் சம்பாஷணையில் சொல்வது வழக்கம்) நம்முடைய சரீரத்தின் அளவு எத்தனை? உன்னுடைய ஆகிருதி யென்ன? உன்னை ஒரு க்ஷணத்தில் நசுக்கிப் போடுவேன்? என்ன துணிச்சல்! விலகிப் போ' என்று புழு கட்டளையிட்டது.

இதற்குள் எறும்பு புழுவை நெருங்கி அதன் உடலில் ஒரு மத்தியைத் தன் சிறிய பற்களினால் கடித்துப் பற்றிக்கொண்டது.

புழு, 'சண்டாளப் பயலே! விடடா! விடடா! நீ நாசமாய்ப் போக!' என்று கூச்சலிட்டது உடலை மாறி மாறி வளைத்தது. (இப்படிச் சொல்லுகையில் பாரதியாரும் தம்முடலை நெளித்துக் கொண்டது நன்றாய் ஞாபகத்துக்கு வருகிறது)

சிற்றெறும்பு ஒன்றையும் கவனிக்கவில்லை. அப்பால், புழு சிற்றெறும்பைக் கெஞ்சத் தொடங்கியது. 'என் அப்பனே! ரொம்ப நோகிறதடா! உனக்குக் கோடி புண்யமுண்டு! விட்டு விடடா! நோவு பொறுக்க முடியவில்லையடா!' என்று பிரார்த்தனைகள் செய்து பார்த்தது.

எறும்பு இதைக் காதில் வாங்கிக் கொள்ளவேயில்லை. ஆயினும் புழுவைத் தனியே இழுப்பது அதற்குக் கஷ்டமாயிருந்தபடியால் அதைவிட்டுப் போய்விட்டது.

உடனே புழு - 'தொலைந்தான் தாசி மகன்! பிழைத்தோம்' என்று சொல்லிக் கொண்டே நகர்ந்து சென்று, ஒரு சிறு செடியின் நிழலையடைந்து அமைதியாய் பகவானை நோக்கி ஜபம் பண்ணுகிற பாவனையில் இருந்தது.

இதற்குள் நான்கு சிற்றெறும்புகளுடன் பழைய சிற்றெறும்பு அங்கு வந்துவிட்டது. புழு அதைக் கண்டதும் நடுங்கி ஓடப் பார்த்தது.

எறும்புகளுக்குள் ஐக்யமுண்டு. ஒன்றுக்கு நான்கு சகாயமாக வரும். புழுக்களுக்குள் அப்படியில்லை. ஒரு புழுவை மற்றொரு புழு கவனிக்காது. 'அவனவன் பாடு தலைக்கு மேலே பாரமாயி ருக்கிறது! அவனுக்கு நாம் துணை செய்யப் போனால் நமக்கும் ஏதேனும் துன்பம் வரும். வழியோடு போகிற சனியனை விலைக்கு வாங்கிக் கொள்வதா?' என்று ஒவ்வொரு புழுவும் சித்தாந்தம் செய்து கொண்டு சும்மா இருந்து விடும்.

ஆதலால் புழுவுக்கு யாரும் துணை வரவில்லை. ஐந்து சிற்றெறும் புகளாகக் கூடி வந்து அதைக் கொன்று தின்றுவிட்டன.

பாரதி! எறும்பைப் போலிருப்பது நல்லதா? புழுவைப் போலிருப் பது நல்லதா? ஆலோசனை செய்து பார்!' என்று கூறிச் சடக்கென் றெழுந்து -

*'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே - நம்மில்*
*ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே'*

எனப் பாடிக் குதூகல நடை நடந்தார். நானும் அவருடன் நடந்து, இருவருமாய்த் திருவல்லிக்கேணிக்குப் போய்ச் சேர்ந்தோம்.'

***

இதில், சொல்லப்படும் புழுவும் எறும்பும் கண்முன் கண்டவை. ஆனால், பாரதியின் மனக்கண்ணில் அவை, இந்திய மாந்தர்கள் ஆகிவிடுகின்றன. தேச விடுதலைச் சிந்தனையில் எப்போதும் ஆழ்ந்திருக்கும் பாரதியின் உள்ளம் ஒற்றுமையின் வலிமையைப் புழுவையும் எறும்பையும் கொண்டு உணர்த்திக் காட்டிநிற்கிறது. எழுதுவதுபோலவே பேசுவதும், பேசுவதுபோலவே எழுதுவதும் பாரதியின் இயல்பு. அதிலும் அவர் தேர்ந்த கதைசொல்லியாக விளங்கியிருக்கிறார் என்பதற்கு, வரகவி பாரதி நிரல்படத் தொகுத்து எழுதும் இடத்தில் அழகாகச் சித்திரப்படுத்தியும் காட்டி யிருக்கிறார்.

- புழு, உடலை மாறி மாறி வளைத்தது. (இப்படிச் சொல்லுகை யில் பாரதியாரும் தம்முடலை நெளித்துக் கொண்டது நன்றாய் ஞாபகத்துக்கு வருகிறது)
- பாரதி! எறும்பைப் போலிருப்பது நல்லதா? புழுவைப் போலி ருப்பது நல்லதா? ஆலோசனை செய்து பார்!' என்று கூறிச் சடக்கென்றெழுந்து - 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே - நம்மில் ஒற் றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே' எனப் பாடிக் குதூகல நடை நடந்தார்.

இந்த இரண்டு இடங்கள் வரகவி பாரதிக்குள் இந்த நிகழ்வு நிலைச்சித்திரமாகி நிலைத்திருப்பதற்கானவை.

***

இதே போல், அமைவது 'பாரதியும் நௌரோஜியும்' என்ற கட் டுரை. இதுவும் அதே காலக்கட்டத்தில், (1905ம் ஆண்டு) நிகழ்ந்த துதான். முன்னதில் கதையென்றால், இதில் கவிதை. இடைப்பட்ட நிலையில் பாரதி நிகழ்த்திய உரையும் இடம்பெறுகிறது.

***

'மழை பெய்து பூமி குளிர்ந்ததென்றால் சகல ஜீவராசிகளும் சந் தோஷமடையும். அது போல் 1905ம் வருஷம் செப்டம்பர் மாதம் 4-ந் திகதியன்று பரத கண்ட முழுவதும் ஸந்தோஷமடையும்படி ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி அவர்களின் 81ம் பிறந்த நாள் உதய மாயிற்று. அன்று இந்தியா தேசம் எங்கும் அந்த மஹாநுபாவரு- டைய பிறந்த நாளை எல்லோரும் கொண்டாடினர்.

அன்றைய தினம் மாலை சுதேசமித்திரன் காரியாலயம் கலைகிற சமயம். அப்போது, 'பாரதி, இரு! வீட்டுக்குப் போகாதே, வந்தேன்' என்று சொல்லிக் கொண்டே தேசீய கவிச் சக்ரவர்த்தியாகிய எனது நண்பர் ஸ்ரீ பாரதியார் மடமடவென்று இறங்கி வந்தார்.

அவருடைய அந்த ஆனந்த நடன தரிசனம் இப்போதும் என் முன் நிற்கிறது. அதை இப்போது நினைப்பினும் தேகம் புளகாங்கிதம- டைகிறது. அந்த வீரப் பார்வையே இந்த முதிர்ந்த வயதிலும் எனக்கு உற்சாகமுண்டாக்கித் தேச பக்தியில் நினைப்பூட்டுகிறது.

என்னருகில் வந்த அவர் என் வலது தோளைத் தட்டிக் கொடுத்து 'இதை இப்போதே நல்ல காகிதத்தில் அச்சுப்போல் எழுது, இதோ வந்தேன்' என்று என்னிடம் ஒரு துண்டுக் காகிதத்தைக் கொடுத்துவிட்டு மாடிக்குத் திரும்பினார். பின் மறுபடியும் கன்றை நினைத்துக் கொண்ட தாய்ப் பசுவைப்போல் என்னிடம் வந்து 'தெரியுமோ, இல்லையோ? இன்று மஹான் தாதாபாய் நௌரோ- ஜியின் பிறந்த நாள் கொண்டாட்டம். திருவல்லிக்கேணியில் நமது நண்பர் ஸ்ரீநிவாஸய்யங்கார் வீட்டில், நீயும் வா!' என்று கூறிச் சரே லென்று மேலே சென்றார். இது அவர் வழக்கம்.

ஈச்வர கைங்கர்யத்தில் ஈடுபடுவது போன்ற உணர்ச்சி என் மனதி லுண்டாயிற்று. பாரதியார் தந்த காகிதத்தைப் பார்த்தேன். அதில் பாரதியார் சில பாடல்கள் எழுதியிருந்தார். அவர் வார்த்தைக்கு வார்த்தை ஓரங்குல நீளம் இடம்விட்டு ஒரு பக்கத்தில் நாலைந்து வரிகள்தான் எழுதுவார் இன்று மிக நெருக்கமாக எழுதியிருந்தார். ஆதலால் அப்பாடல்களை நான் நிதானமாய்ப் படித்துப் பார்த்துத் தெரிந்து கொண்டு பத்து நிமிஷத்தில் எழுதி முடித்தேன்.

நான் அதை எழுதி முடித்த மறு க்ஷணத்தில் பாரதியாரும் அவர் தம் நண்பர் சிலரும் மாடியிலிருந்து இறங்கி வந்தார்கள். நான் எழுந்து அவர்களைப் பார்ப்பதற்குள், 'பாரதி! எழுதியாயிற்றா? நீயே வைத்திரு. நான் கேட்பேன் அப்போது கொடு. வா, போக லாம்' என்றார்.

நான் புறப்படுவதற்குள் பாரதியார் தம் தாண்டவநடையில் காரி யாலயத்தைக் கடந்து வெளியேபோய்விட்டார். நானும் வேகமாகத் தொடர்ந்தேன். சற்று நேரத்தில் நாங்கள் அரண்மனைக்காரத் தெரு வின் கோடியை அடைந்தோம். அப்பால் ஜட்கா பறந்தது.

சற்று நேரத்தில் திருவல்லிக்கேணி வடக்கு மாடவீதியில் நண்பர் ஸ்ரீநிவாஸய்யங்கார் வீட்டு மேல் மாடியிலிருந்தோம். அந்த மாடி அன்று திவ்ய அலங்காரத்துடன் விளங்கியது. சிறிய கூட்டந்தான். அதில் பாரதியாரைவிட வயதிற் பெரியார் பலர் இருந்தனர். அறி விலும் தேச பக்தியிலும் அவரை மிஞ்சினவர் எவருமில்லை.

இச்சமயம் பார்த்தஸாரதிப் பெருமாள் கோவில் அந்திகாலப் பூஜையின் மணிச் சத்தம் கேட்டது. எல்லோரும் பாரதியாரின் திரு வாய் மொழி கேட்க ஆயத்தமானோம். பாரதியார் நகை முகங் கொண்டு வீரப் பார்வையுடன் எழுந்தார். அவருடைய கழுத்தில் ரோஜா மாலை கரகோஷ சப்தத்துடன் குடி புகுந்தது.

பாரதியார் உபநியாஸ ஆரம்பத்தில், 'என்ன ஆச்சரியம் இது! ஸர்வ லோக சரண்யனாகிய ஸ்ரீ கிருஷ்ணபசுவானுடைய ஜன்ம தினக் கொண்டாட்டத்தை ஹிந்துக்கள் மாத்திரமே கொண்டாடுகின் றனர். நௌரோஜியவர்களின் ஜன்மத் திருநாளையோ ஹிந்துக்கள், முகம்மதியர், பவுத்தர், சமணர் முதலிய எல்லா மதத்தினரும் கொண்டாடுகின்றனர். அவர் உலகில் புகழுடம்பை நிலைநாட்ட அவதரித்த மஹானன்றோ?' என்றார். உடனே 'ஓம் சக்தி' என்றார்.

அப்பால், 'பெரியவர்கள், தங்களை வணங்கும் ஸ்திரீகளுக்கு, 'வீரஸூபவ' என்று ஆசீர்வாதம் செய்வது நம் தேச வழக்கம் 'வீர ஸூபவ' என்றால் 'நீ வீரர்களுக்குத் தாயாகக் கடவாய்' என்பது பொருள். வீரரென்றால் வில்லெடுத்துப் போர் புரிபவர் என்பது மாத்திரமல்ல இது சாதாரண ஜனங்கள் சொல்லும் பொருள். உலக நன்மையின் பொருட்டுச் சாமான்யரால் முடியாத அரிய பெரிய காரியங்களை ஒருவனாகவே இருந்து நிர்வகித்து முடிப் பவனே வீரன், இப்படிப்பட்ட வீரனைப் பெறுவதைக் காட்டிலும் ஸ்திரீ ஜன்மம் பெறக் கூடிய பாக்யம் வேறில்லை. குஜராத் மாகா ணத்தில் நௌஸாரி என்ற ஊரில் 1825ம் வருஷம் செப்டம்பர் மாதம் 4ம் திகதியன்று ஒரு பார்லி மாது ஒரு வீரனை ஈன்று இந்

தப் பாக்யத்துக்குப் பாத்திரமானாள். அந்த வீரனே தாதாபாய் நௌரோஜி என்னும் திவ்ய நாமம் பெற்றவர்' என்று பேசி மீண்டும், 'ஓம் சக்தி' என்று கர்ஜித்தார்.

'தாதாபாயின் தந்தை அவர் குழந்தையாயிருக்கும் போதே காலமாகிட்டார். அவரை அவர் தாயார் வளர்த்தார்' என்று பாரதியார் சொல்லி, பிள்ளைகளை வளர்ப்பதில் அன்னைமார் கவனிக்க வேண்டியவைகளை எடுத்துக் காட்டினார்!

'கணவன் இறந்த பின் மக்களை ஒன்றுக்கும் பயன்படாமற் செய்வதில் தேர்ச்சி பெற்ற ஸ்திரீகள் நம் தேசத்தில் அநேகருண்டு. அவர்களைப் போலில்லாமல் தாதாபாயின் தாயார் அவரைத் திறமையுடன் வளர்த்தார். அதிக தாக்ஷண்யம் கொடுத்தல் முதலிய மடச்செய்கைகளை அந்த அம்மாள் கைக் கொள்ளவில்லை' என்று கூறி, 'ஓம் சக்தி' என்று கோஷித்தார்.

'தாதாபாய் தமது 29வது வயதில் கணித நூலும் இயற்கை நூலும் கற்பிக்கும் போதகராக அவர் கல்வி பயின்ற எல்பின்ஸ்டன் காலேஜிலேயே உத்யோகம் பெற்றார்.

ஏதாவது ஒரு தொழில் கிடைக்குமானால் சாதாரண இந்தியர் இந்திர பதவி கிடைத்துவிட்டதாக மதித்து, அப்பால் உயர அவர்கள் எவையுமில்லாமல் அதிலேயே கிடந்து வாணாளைக் கழிக்கின்றனர். இப்படிப்பட்ட இழிவான நிலையை மறந்து நௌரோஜி முயற்சியே உருவமாகக்கொண்டவராய் விளங்கினார்' என்றார். உடனே 'ஓம் சக்தி' என்று மகிழ்ந்தார்.

'நௌரோஜி அப்பால் ஒரு வருஷ காலத்தில் அந்த உத்தியோகத்தை விட்டொழிந்து இங்கிலாந்து சென்று அங்கே வாணிபத் தொழிலை ஸ்தாபித்தார்.

ஒரு மனிதன் செய்யக்கூடிய தொழில்களிளெல்லாம் மிகச் சிறப்புற்றது வாணிபத் தொழிலே. இதை நௌரோஜி உணர்ந்திருந்தார். இரட்டை அக்ஷரம் பெற்றுவிட்டால் பிறகு வர்த்தகம் முதலிய பயன்படும் தொழில்களை இகழத் தொடங்கிவிடும் புல்லரைப் போலன்றி, கலா சமுத்ரமாகிய நௌரோஜி வாணிபத்தில் ஊக்கங் காட்டினார்' என்றார்.

இங்கே நமது 'பி.ஏ., எம்.ஏ, பட்டதாரிகளை 'இரட்டை எழுத்துப் பேர் வழி' யென்று குறிப்பிட்டு அவர்கள் மனப் பான்மையைக் கண்டித்தார்.

'பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியா செழிப்புற்றிருக்கிறதென்கிற எண்ணம் தவறு வறுமையால் வாடுகிறது என்று நௌரோஜி அவர்கள் 1880ம் வருஷம் இங்கிலாந்து சென்றபோது பிரிட்டிஷாருக்கு நன்கு விளங்க வைத்தார்' என்று சொல்லி, இந்த இடத்தில், 'எலுமிச்சங்காயளவு பொன்னை அடைந்த ஒரு தொழிலாளன், 'ஊரில் எலுமிச்சங்காயளவு பொன்னில்லாதவரே இல்லை' என்று அரசனிடம் கூறியதற்குச் சமானமாக, பிரிட்டிஷ் ஆட்சியில் உத்யோகஸ்தர் குதூகலமடைகின்றனர். அந்தக் கொள்கை மிகமிக இழிவானதாகும்' என்று காட்டினார்.

'வயது எண்பதிற்கு மேலாயும் நமது கிழவருக்குச் சரீர பலம் சிறிதேனும் குறையவில்லை. சில தினங்களுக்கு முன் டாக்டர் ஸ்ரீ மாதவராயர் இங்கிலாந்து சென்றிருந்தார். அப்போது அவர் நௌரோஜியவர்களைத் தரிசனம் செய்து, 'ஸரீர ஸ்திதி எப்படி?' என்று விசாரித்தாராம்.

'எனக்குச் சரீரம் எப்போதும் போலத்தான் இருக்கிறது. ஆனால் வருஷங்களை எண்ணிப் பார்க்கும்போது வயது முதிர்ந்திருப்பது தெரிகிறது' என்று நமது கிழச்சிங்கம் கூறியதாம். வயது மிகைக் கள்ளதாகிய அநுபவமும் ஞான முதிர்ச்சியும் இளமைக்குள்ளதாகிய சரீர திடனும் ஊக்கமும் இம்மகானிடத்தில் கலந்திருக்கின்றன' என்று கூறி, 'ஓம் சக்தி' என்று ஆனந்தமடைத்தார்.

இன்னும், நௌரோஜி இந்தியாவின் வறுமை என்று ஒரு புத்தகம் எழுதியுள்ளார். இப்புத்தகந்தான் தமது நெஞ்சில் தேசாபிமானத்தை நட்டதென்று ஸ்ரீ ஜி. சுப்ரமண்ய ஐயர் கூறுவார். அவர் நௌரோஜியவர்களை 'மஹரிஷி நௌரோஜி' என்றே அழைப்பார். ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலே நௌரோஜியைத் தமது உபாசனா தெய்வமாகக் கொண்டிருக்கிறார்' - என்றும் விளக்கினார்.

முடிவில், தாம் பாடிய வாழ்த்துப் பாக்களை என்னிடமிருந்து வாங்கி வாசித்தார்:'

***

இவ்வாறு முடிகிற இக்கட்டுரையின் இறுதியில் சொல்லப்பெறும் வாழ்த்துப் பாக்கள், 'தாதாபாய் நௌரோஜி' என்ற தலைப்பின் கீழ், 'முன்னாளில் இராமபிரான்' என்று தொடங்கி, அனைத்துப் பாரதியார் கவிதைகள் தொகுப்பு நூலிலும் காணக்கிடைக்கின்றன.

இந்தக் கட்டுரை, பாரதியார் நௌரோஜி குறித்துப் பாடிய பாடல்களின் தோற்றப் பின்புலத்தைக் கூறுவதோடு, அவர் உரைநிகழ்த்தும் பாங்கையும் சித்திரப்படுத்திக் காட்டுகிறது. இதே உரைதான், பாரதியார் ஆசிரியராகி இருந்து வெளிக்கொணர்ந்த சக்கரவர்த்தினி இதழில், (செப்டம்பர், 1905) 'தாதாபாய் நவுரோஜி' என்ற தலைப்பின்கீழ் ஒரு கட்டுரையாக வெளிவந்திருக்கிறது. (சீனி. விசுவநாதன், கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொ-1, பக்.49-56)

***

வழக்கமாக, பாரதி தன் உரையை நிகழ்த்தி முடித்தபின் அப்படியே கட்டுரையாக அதனை எழுதி வெளியிடுவதுண்டு. அவ்வாறு, அவர் நிகழ்த்திய உரைகளையும், அவற்றுள் எழுத்துவடிவேற்ற கட்டுரைகளையும் தொகுத்து, வகுத்து, பகுத்து, ஆய்ந்து தனி நூலாக்கியிருக்கிறேன். மகாகவி பாரதியாரின், 125ம் ஆண்டு பிறந்த நாளை முன்வைத்து, புதுச்சேரி கபிலன் பதிப்பகம், 'சொற்பொழிவாளர் பாரதியார்' என்ற தலைப்பில் அந்நூலை (2007ம் ஆண்டு) வெளியிட்டிருக்கிறது. அதில் சேர்க்க விடுபட்டுப்போன அரசியல் சொற்பொழிவும் வாழ்வியல் கட்டுரையும் இதுவாகும்.

இதேபோல், மகாகவி பாரதியின் 130வது பிறந்த நாளை முன்வைத்து 'பாரதி என்றொரு கதைசொல்லி' (பழனியப்பா பிரதர்ஸ், 2016) என்னும் தலைப்பில் ஒரு நூலையும் வெளியிட்டிருக்கிறேன். வ.ரா., தங்கம்மாள் பாரதி, சகுந்தலா பாரதி உள்ளிட்டவர்களுக்கு, பாரதியார் கதை சொல்லிய பாங்கை விளக்கித் தந்த அந்த நூலில் இடம்பெற்றிருக்க வேண்டிய, கதை, வரகவி பாரதி நினைவுபடுத்தி எழுதிய சின்னக்கதை.

இவற்றை மீளவும் நினைவுகூர்ந்து வரகவி எழுதியிராவிடில், மகாகவியின் வாழ்வில் நிகழ்ந்த இரு நிகழ்வுகள் அறிய இயலாது போயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தன்னைப் பாரதி என்று அழைத்த மகாகவியை, 'தேசீய கவிச்சக்ரவர்த்தி' என்றும், வ.உ. சிதம்பரனாரை, 'கப்பலோட்டிய தமிழன்' என்றும் சிறப்புப் பட்டமளித்துப் போற்றிய வரகவி பாரதியின் வரலாறும், அவரிடம் வ.உ. சிதம்பரனார் வெளியிடத் தந்த மூன்று விஷயங்கள் அடங்கிய காகிதப்பை என்னவாயிற்று என்ற தகவலும் தேடுதற்குரியன. மேலும், மகாகவி பாரதியாரைப் பார்த்த வரகவி பாரதியார் மேலே சொல்லியவை போக, இன்னும் சொல்லிய செய்திகள் அடங்கிய கட்டுரைகளும் பிற படைப்புகளும் தேடி வெளியிடப் பெற வேண்டியது காலத்தேவை என்பதை நினைவுபடுத்துவதே இக்கட்டுரையின் எதிர்பார்ப்பாகிறது.



sethupathi@thaiveedu.com

# இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் சமகாலப் பயன்பாட்டு நிலையும்

22

- கௌசல்யா சுப்பிரமணியன்

இசைத்தமிழ்ப் பாடற்பரப்பினையும் அவற்றின் சமகாலப் பயன் பாட்டு நிலைகளையும் ஆராயும் இத்தொடரில் தமிழிசை மூவரின் காலகட்டத்திற்குப் பின்னரான வரலாற்றை நோக்கிவருகிறோம். அவ்வரலாற்றில் 'பாட்டுக்கு ஒரு புலவ'னாகத் திகழ்ந்த மகாகவி சுப்பிரமணியப் பாரதியார் இக்கட்டுரையில் கவனத்திற்கு இட்டு வரப்பட்டுள்ளார். தமக்கு முற்பட்டகால வரலாற்றினையும் தமக்குப் பின்னரான வரலாற்றினையும் உணர்ந்த தீர்க்கதரிசியாகத் திகழ்ந்து செயற்பட்டவரே பாரதியார்.

இத்தகு திறன்கள் கொண்டவரான பாரதியாரின் இசைத்தமிழ் ஆளுமையம்சங்களை நோக்குவதற்கு முன் இவரின் ஆளுமைத் திறன்களின் உருவாக்கத்திற்கு முன்னோடிகளாய்த் திகழ்ந்தவர்கள் எனக் கருதத்தக்க முக்கிய சிலருடைய ஆக்கங்கள் பற்றி கடந்த சில கட்டுரைகளில் நோக்கிவந்தோம். பாரதியாரை மட்டுமல்லாது இசைத்தமிழ்ப் பாடற்பரப்பின் வரலாற்றினையும் கூடப் புரிந்து கொள்வதற்கு துணைபுரியும் என்ற நோக்கிலேயே மேற்கூறியோரின் வரலாறுகள் இங்கு நோக்கப்பட்டன. இவ்வகைத் திறன்களுடன் வேறு பலரும் மேற்குறித்த காலங்களில் வாழ்ந்திருந்தாலும் எடுத்துக்காட்டுகளாக அமைந்த சிலரையே சுட்டியிருந்தோம்.

இவ்வாறு செயற்பட்ட இவர்களின் பாடல்களில் ஒரு பகுதி இலக்கியப் பண்பு கொண்டவையாகத் திகழ்பவையாகும். ஆயினும் அவற்றுட் பெரும்பகுதி இசைப்பண்புகள் கொண்டவையேயாம். அதாவது இசைப்பாடல்கள் என்பதான கணிப்புக்குரியவையாக அவை அமைந்துள்ளன. அவ்வாறான பாடல்களின் இசைப்பண்புகளை - பாடல் வடிவங்களையும் மற்றும் மெட்டுகள் ஆகியவற்றைப் பற்றிய விளக்கங்கள் முன்னரே பதிவாகியுள்ளன. மேற்படி வடிவங்கள் மற்றும் மெட்டுகள் ஆகியவற்றை பாரதியார் தமது பாடற்பரப்பில் பயன்படுத்தியுள்ளார் என்பதும் கூடச் சுருக்கமாக முன்னரே நோக்கப்பட்டுள்ளது. அவ்வகையிலேயே இவர்கள் பாரதியார் பாடல்களுக்கு உந்துசக்தியாகத் திகழ்ந்தவர்கள் என்பதான கணிப்பும் ஏற்கெனவே முன்வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையிலே நேரடியாகவே பாரதியார் நமது கவனத்துக்கு இட்டுவரப்படுகிறார்.

**மகாகவி சுப்பிரமணியப் பாரதியார்: (1882-1921)**

தமிழகத்திலுள்ள எட்டயபுரம் என்ற ஊரில் சின்னசாமி ஐயர் இலட்சுமி அம்மாள் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த பாரதியாருக்குச் சுப்பிரமணியன் என்னும் பெயர் சூட்டப்பட்டது. 39 வயது வரை மட்டுமே வாழ்ந்த இவருக்குத் தாயாரின் அன்பும் ஐந்து வயதுவரையே கிடைத்தது. தாயாரின் மறைவால் தந்தை மறுமணம் செய்து கொண்டார். ஏழு வயதில் இவருக்கு உபநயனம் நடைபெற்றது. பதினொரு வயதில் எட்டயபுரம் சமஸ்தானப் புலவர் பெருஞ்சபையில் இவர் தமது புலமையை நிறுவிப் 'பாரதி' என்ற பட்டத்தைப் பெற்றார். பாரதி என்றசொல் 'கலைமகள்' என்ற பொருள் தருவதாகும். இவ்வாறு இவர்பெற்ற பாரதி என்ற பட்டமானது இவரது அடையாளப் பெயராகவே நிலைத்துவிட்டது.

இவர் திருநெல்வேலி இந்துக்கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் பொழுது பதினான்கு வயது நிரம்பிய நிலையில் ஏழு வயது நிரம்பிய செல்லம்மா என்னும் பெண்ணுடன் பால்ய விவாகம் நடைபெற்றது. அவர் படிப்பை முடிக்கும் காலத்தில் - பதினைந்து வயதில் - தந்தையை இழந்தார். தந்தையின் இறப்பினைத் தொடர்ந்து இவர் காசி சென்று அத்தை குப்பம்மாள் - கிருஷ்ண-சிவன் ஆதரவில் அங்குள்ள இந்துக் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்தார். அங்கு மெட்ரிகுலேஷன் தேர்விலும் தேர்ச்சி பெற்றதோடு அலகாபாத் சர்வகலாசாலையின் பிரவேசப் பரீட்சையிலும் முதற்தரத்தில் தேர்ச்சியெய்தினார். காசி இந்து கலாசாலையில் பயின்றபோது அவர் சமஸ்கிருதம் மற்றும் ஹிந்தி என்பவற்றையும் கற்றிருந்தார். இவ்வாறான இவருடைய கற்றலானது இவர் தமது சொந்த ஊரான எட்டயபுரம் திரும்புதலுடன் நிறைவுக்கு வந்தது. அதன்பின் இவரது எழுத்துப்பணிகள் தொடங்குகின்றன. சில காலம் ஆசிரியப்பணியில் ஈடுபட்டிருந்த இவர் அதனைவிடுத்து இதழாசிரியராகவே தனது வாழ்க்கையைத் தொடர்ந்துள்ளார். இவ்வகையான இதழாசிரியச்சூழல் சார்ந்தே அவருடைய எழுத்துப்பணிகளில் - குறிப்பாக கவிதைகள், கட்டுரைகள், மற்றும் கதைகள் ஆகியவற்றில் - ஈடுபட்டுவந்தார்.

மேற்படியான செயற்பாட்டில் 'விவேகபாநு' இதழில்(1902) இவரது 'தனிமை இரக்கம்' என்ற முதல் பாடல் அச்சேறுகிறது. 'சுதேச மித்திரன்' இதழின் உதவியாசிரியராகவும் மாதப் பத்திரிகையான 'சக்கரவர்த்தினி'யின் ஆசிரியராகவும் பணிபுரியும் வேளைகளிலும் இவரது எழுத்துப்பணிகள் தொடர்கின்றன. இக்காலகட்டத்தில் ஆரம்பத்தில் சமூக சீர்திருத்தவாதியாகச் செயற்பட்டவரான பாரதியார் அதன் தொடர்ச்சியாக அக்காலச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு நாட்டுவிடுதலையை நாடும் அரசியலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். இச்சூழலிலேதான் அவர் ஒரு விடுதலைக் கவியாக மேற்கிளம்பினார்.

பாரதியார் பெண்ணடிமைத்தனத்தைப்பற்றித் தமது கவிதைகளிலும் கட்டுரைகளிலும் குறிப்பிடுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது, அவர் பின்னொருமுறை காசிசென்றபோது அங்கு விவேகானந்தரின் சிஷ்யை நிவேதிதாவைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பைப் பெற்றதேயாகும். அவரைத் தமது ஞானகுருவாகவும் ஏற்றுக்கொண்டார். சென்னை திரும்பி(1906) புரட்சிகரமான வாரப் பத்திரிகையான 'இந்தியா'வின் பொறுப்பாசிரியராகப் பதவியேற்கிறார். 'பாலபாரதா' ஆங்கில வாரப் பத்திரிகையும் இதே ஆண்டில் ஆரம்பமாகிறது. இதிலும் பாரதியார் கட்டுரைகள் எழுதினார். பாரதியார் பத்திரிகைகளில் வெளியிட்ட தேசிய கீதங்களில் விருப்பம் கொண்டு வி. கிருஷ்ணசாமி அய்யர் என்பார் பாரதியாரின் 'சுதேச கீதங்கள்' என்ற தலைப்பில் மூன்று கீதங்களை அச்சிட்டு இலவசமாக விநியோகிக்கிறார். அதனைத் தொடர்ந்து 'சுதேசகீதங்கள்' என்ற கவிதைத் தொகுப்பு பாரதியாரால் 1908ல் வெளியிடப்படுகிறது. பின்னர் மறு ஆண்டே 'ஜன்மபூமி' என்ற கவிதைத் தொகுதியும் வெளியிடப்படுகிறது. 1910ல் பிரிட்டிஷ் அரசை எதிர்த்

ததால் மேற்கூறிய பத்திரிகைகள் மட்டுமல்லாது ‘விஜயா’, ‘சூர் யோதயம், பாலபாரதா, கர்மயோகி முதலியனவும் நின்று போயின.

நவீன தமிழ்க் கவிதை முன்னோடியாகச் (பா மற்றும் பாவின வடி வங்களில் இறைபுகழ் பாடுதல், நீதிகூறுதல் முறையிலிருந்து வேறுபட்டு) செயற்பட்ட பாரதியார் ‘சாதி மறுப்பு’, ‘பெண்விடு தலை’, ‘இந்திய விடுதலை’ முதலிய பல பரிமாணச் செயல்பா டுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவராவார். பத்திரிகைத் தடைச்சட்டம் ஏற்பட்ட காலகட்டத்தில் சென்னையை விட்டு பாண்டிச்சேரி செல்லவேண்டிய சூழ்நிலை இவருக்கு ஏற்படுகிறது. பாண்டிச்சேரியில் இருக்கும் காலகட்டத்தில் (1908-1918) இவர் அங்கு மீண்டும் ‘இந்தியா’ பத்திரிகையைத் தொடர்வதோடு அர விந்தருடன் வேதநூல் ஆராய்ச்சிகள் பலவற்றிலும் ஈடுபட்டுள்ளார்.

இவரது ‘கனவு’ என்ற சுயசரிதைப்பாடல் அடங்கிய ‘மாதா மணி வாசகம்’ என்ற நூல் அக்காலத்தில் வெளியிடப்படுகிறது. அவற்று டன் கீதையும் மொழிபெயர்க்கப்படுகிறது. தொடர்ந்து நெடும் பாடல்களான ‘கண்ணன் பாட்டு’, ‘குயில்பாட்டு’, ‘பாஞ்சாலிசப தம்’ என்பவை எழுதப்படுகின்றன. ‘பாஞ்சாலிசபதம்’ நூலின் முத லாவதுபாகம் மட்டும் முதற்கண் வெளியிடப்படுகிறது. இரண்டா வது பாகம் வெளியிடத் தடை ஏற்பட்டதால் அவர் இறந்த பின் னரே வெளியிடப்பட்டது. காரணம் பாஞ்சாலி சபதத்தில் கூறப்பட்ட திரௌபதியின் விடுதலை பாரதமாதாவின் விடுதலையாகக் கருதப் பட்டதேயாகும். ‘ஞானபானு’ பத்திரிகைக்கு விடயதானம் செய்த லோடு ‘ஞானரதம்’ என்ற நூலையும் அவர் எழுதினார்.

பின்னர் சென்னை மீண்ட பாரதியார் ‘கண்ணன் பாடல்’ நூலி னைத் தொடர்ந்து ‘நெல்லையப்பன் சுதேசகீதங்கள்’, ‘நாட்டுப்பு றப்பாடல்’ ஆகிய நூல்களையும் வெளியிடுகிறார். பின்னர் சென் னையில் ‘சுதேசமித்திரன்’ பத்திரிகை உதவி ஆசிரியராக மீண் டும் செயற்படுகிறார்(1920). அக்காலத்திலும் எழுத்துப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். 1921ல் பாரதியாரின் மறைவுக்குப் பின் னர் முதலில் நாட்டுடைமையாக்கப்பட்ட(1949) முக்கிய நூல்களா கத் திகழ்பவை பாரதியாருடைய நூல்களேயாகும்.

பாரதியார் வாழ்ந்தகாலத்தில் பாடல்கள் புனைவோரிடம் கடினமான மொழிநடையே பொதுவழக்கிலிருந்தது. இந்நிலையை மாற் றியமைத்தமையே பாரதியின் பெருஞ்சாதனை என்பதைப் பலரும் அறிவர். ‘ஓரிரு ஆண்டு மொழிப்பழக்கமுடையவர்களேகூட பாடல் களை நெருங்கிச் சுவைக்கமுடியும்’ என்ற நிலையைத் தமிழ்ப் பாடல்களுக்குக் கொண்டுவந்தவர் பாரதியாரேயாவார். இவர்காலத் திற்கு முன் பலர் இவ்வாறான எளிமையான பாடல்களை இயற்றத் தொடங்கியிருப்பினும் பாரதியாரே இம்முயற்சியில் கருத்தூன்றிச் செயற்பட்டு நின்றவராவார். புதுக்கருத்துகளைப் புகுத்தி வீறுணர்ச் சிமிகு பாடல்களை இயற்றியுள்ளார். பாடல்களின் மொழிசார் வெளிப்பாட்டுநிலை பற்றிய இவரது கருத்துகளை இவர் எழுதிய ‘பாஞ்சாலி சபதம் என்ற ஆக்கத்தின் முன்னுரைக்குறிப்பிலே தெளிவாகவே அறிந்துகொள்ள முடியும்.

அம்முன்னுரைக்குறிப்பு வருமாறு:

‘பாடல்கள் கற்றோரை மட்டுமல்லாது பாமரரையும் சென்றடையும் வண்ணம் இறுக்கமான செய்யுள் நடையிலிருந்து மாறுபட்டு எளிய பதங்கள், எளிமையான நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனத்துக்குரிய அவர்கள் விரும்பும் மெட்டு இவை அனைத்தையும் கொண்டு தற்காலத்தில் காவியமொன்று செய்து தருவோனே நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகிறான்’

மேற்படி கூற்றிலமைந்தவாறான ‘தாய்மொழிக்குப் புதிய உயிர்தரக் கூடிய பாடல்களையே’ பாரதியார் இயற்றி மக்களுக்குக் கொடுத் துள்ளார். எளிய பதங்களைக் கொண்டு வலிமை வாய்ந்த உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய பாடல்களை எழுதலாம் என நிரு பித்தவர் பாரதியார். சுதந்திர வேட்கையை மக்களுக்குப் புகட்டி அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவிக்கவும் மூடநம்பிக்கை களைக் களைந்தெறிந்து புதிய சிந்தனைகளைப் புகுத்தவும்வல்ல பல பாடல்களைத் தந்தவகையிலேயே அவர் ‘புதுநெறி காட்டிய புலவன்’ என்பதான கணிப்புக்குரியவரானார்.

*‘சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது செற்புதிது*
*சோதி மிக்க நவகவிதை எந்நாளும் அழியாத மகா கவிதை’*

என எட்டயபுரம் மன்னருக்கு எழுதிய ‘சீட்டுக்கவி’ ஒன்றில் அவர் தம்கவிதைகளைத் தாமே மதிப்பிட்டுள்ளார் என்பதையும் நாமறி வோம். அவருடைய அச் சுயமதிப்பீடானது இன்றுவரை பொருத்த மானதாகவே கணிக்கப்பட்டுவருகிறது.

இவரது எழுத்துக்கள் யாவும் பொதுவாகப் பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் வேறுபாடில்லாதும் கொச்சையாக இல்லாம லும் அழகோடும் வலிமையோடும் எண்ணத்தெளிவோடும் இருக் கும்.

‘மனத்தில் உண்மையான ஆழ்ந்த உணர்ச்சி இருக்க வேண்டும். தெளிவு இருக்கவேண்டும். அவ்வாறிருந்தால் தெளிந்த நடையிலே எளிமையான முறையிலே வெளியிடத் தோன்றும்’ எனக்கூறும் அவர் தியாகராஜசுவாமிகளின் கீர்த்தனைகள் மேற்படி இயல்புகள் கொண்டு திகழ்வதாலேயே இன்றும் அனைவராலும் போற்றப்படுவ தாக அமைந்துள்ளது என்கிறார். (பார்க்க: சங்கீத விஷயம்)

நாட்டுவிடுதலை இயக்கம் வீறுகொண்ட காலங்களில் பாரதியார் பாண்டிச்சேரியிலிருந்து சென்னைக்கு மீண்டதால் உணர்ச்சி பொங் கும் தேசியப் பாடல்களை அக்காலத்தில் பெருமளவில் பாடினார். எனவே மக்களும் இவர் காலத்தில் இவரைத் ‘தேசபக்திப் பாட கர்’ என்றே கருதினர். இவரது ஏனைய பாடல்களான ‘பக்திப்பா டல்கள்’, ‘கண்ணன் பாட்டு’, ‘குயில்பாட்டு’, ‘பாஞ்சாலி சபதம்’ என்பவை அக்காலத்தில் அதிக கவனிப்பைப் பெறாதிருந்தன. இவரது உரைநடையும்கூட அக்காலத்தில் உரிய கவனத்தைப் பெற்றிருக்கவில்லை. இந்திய விடுதலைக்குப் பின்னரே இவற்றின் முக்கியத்துவத்தினை மக்கள் பரவலாக உணர்ந்தனர் எனலாம்.

பாரதியார் பல்வேறு சந்தர்ப்பங்களில் இயற்றிய பாடல்களைப் பின்வரும் பிரிவுகளில் அடக்கலாம். ஒன்று, ‘தேசபக்திப்பாடல் கள்’, ‘தோத்திரப்பாடல்கள்’ முதலான பெரும் பிரிவுகள். இன் னொன்று, ‘குயில் பாட்டு’, ‘கண்ணன் பாட்டு’ மற்றும் காவியமாக அமைந்த ‘பாஞ்சாலி சபதம்’ என்பவைகளான நெடும்பாடல்கள். மூன்றாவதாக அமைவது, மன்னர்களையும் மகான்களையும் பாடி யவை, இயற்கையைப் பாடியவை, பெண்மையைப் பாடியவை என்பனவாக அமைந்த ‘பல்வகைப் பாடல்கள்’ ஆகும். இம் மூன்று பிரிவுகளிலும் அடக்கி பாரதியார் பாடல்களை நோக்க லாம். இவையனைத்தும் பாரதியார் கவிதைகள், (பதிப்பு: சீனி. விசுவநாதன், 2, மாடல் ஹவுஸ்லேன், சி.ஐ.டி. நகர், சென்னை - 600035) என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

பாரதியார், ஷெல்லி முதலிய மேலைநாட்டுக் கவிஞர்களின் படைப்புகளால் உந்துசக்தி பெற்றவராவார். நோபல் பரிசுபெற்ற இந்தியக் கவிஞரான இரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளாலும் ஈர்க்கப்பட்டவர். அவர்களைப் போலத் தாமும் புகழ்பெறவேண்டு மென விழைந்தவருங்கூட. இதனை அவருடைய எழுத்துகள் தெளிவாகவே உணர்த்துகின்றன.

இதுதொடர்பிலான அவருடைய இரு கூற்றுகள் வருமாறு:

‘ஐரோப்பியர்கள், அமெரிக்கக் கவிஞரான ‘வால்ட் விட்மான்’ என் பவரைக் காளிதாஸன், கம்பன், ஷேக்ஸ்பியர், மில்டன், தன்தே, கெத்தே முதலிய மகாகவிகளுக்குச் சமான பதவியுடையவராக மதிக்கிறார்கள்’.

‘கீர்த்தியடைந்தால் மஹான் ரவீந்தரரைப்போல அடையவேண்டும். வங்காளத்தில் மாத்திரமா? இந்தியா முழுமையுமா? ஆசியா முழு துமா? ஜெர்மனி, ஆஸ்த்ரியா, பிரான்ஸ் பூமண்டலம் முழுமையும்

பரவின கீர்த்தி. இத்தனைக்கும் அவர் பாடிய பாட்டுக்களோ வங்கபாஷையிலே உள்ளன. வெறும் மொழிபெயர்ப்புகளைத்தான் உலகம் பார்த்திருக்கிறது. அதற்குத்தான் இந்தக் கீர்த்தி' ('ஸ்ரீ ரவீந்தர திக்விஜயம்' என்ற கட்டுரையில்.

பாரதியாரின் மேற்கூறிய பாடற் பரப்புகளில் 'தேசபக்திப் பாடல்கள்' இங்கு முதற்கவனத்திற்கு வருகின்றன. தேசபக்திப் பாடல்கள் இயல்பான உண்மைநிலைகளை கூறுவனவாகவும் தேசத்தை மிகைப்படுத்திக்கூறும் போக்கற்று அமைந்திருக்க வேண்டும் என்பதே பாரதியாருடைய கொள்கையாகும். பாரதியார் முதலில் எழுதிய சிறந்த மூன்று பாடல்கள் திரு ஏ. கிருஷ்ணசுவாமி ஐயர் என்பவரின் உதவியால் அவற்றின் சிறப்புக் கருதி சிறு நூலாக மக்களுக்கு இலவச விநியோகம் செய்யப்பட்டது என்ற செய்தியை முன்னரே நோக்கியுள்ளோம். அவற்றில் மூன்று சரணங்கள் கொண்ட முதற் பாடலின் ஒரு பகுதி வருமாறு,

பல்லவி
*'வந்தே மாதரம் வந்தே மாதரம்*
*என்று வணங்கேனோ?*

சரணம்
*'எந்தையும் தாயு மகிழ்ந்து குலாவி*
*யிருந்தது மிந்நாடே - அதன்*
*முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து*
*முடிந்தது மிந்நாடே - அவர்*
*சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து*
*சிறந்தது மிந்நாடே - இதை*
*வந்தனை கூறி மனதி லிருத்தி யென்*
*வாயுற வாழ்த்தேனோ - இதை' (வந்தே...)*

- பாரதியார் கவிதைகள்: பக்:24-25

இப்பாடல் நாம் எமது நாட்டில் எப்படியெல்லாம் கூடி மகிழ்ந்திருந்தோம் என்பதை நினைவில் மீட்பதாக அமைந்த சிறப்புடையதொரு பாடலாகும். ஆறு சரணங்கள் உடைய அடுத்த பாடலின் சில பகுதிகள்,

பல்லவி
*'வந்தே மாதரம் என்போம் - எங்கள்*
*மாநிலத் தாயை வணங்குது மென்போம்*

சரணம்
*ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்*
*ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்*
*வேதிய ராயினு மொன்றே - அன்றி*
*வேறு குலத்தின ராயினு மொன்றே' (வந்தே...)*

- பாரதியார் கவிதைகள்: ப:21

என அமைந்த இப்பாடல் ஆயிரம் ஜாதிகள் இருந்தாலும் அனைவரும் ஒரு தாய் (பாரதமாதா) வயிற்றுப் பிள்ளைகளாக ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு எனவும் நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே அமையும் என்ற ஞானம் வரவேண்டுமென்கிறார். அடுத்தமைந்த பாடல் மூன்று பாடல் எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்ததாகும். அப்பாடலிலொன்று வருமாறு,

*'மன்னு மிமயமலை யெங்கள் மலையே*
*மாநிலம் மீதது போற்பிறி திலையே*
*இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே*
*இங்கிதன் மாண்பிற்கு கெதிரெது வேறே*
*பன்னரு முபநிட நூலெங்கள் நூலே*
*பார்மிசை யேதொரு நூலிது போலே*
*பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே*
*போற்றுவ மிஃதை யெமக்கிலை யீடே...'*

- பாரதியார் கவிதைகள்: ப:26

மேற்படிப் பாடல் எமது நாட்டின் இமயமலை, கங்கையாறு என்பவற்றின் சிறப்பையும் தேன் கதலி கனிகள் நிறைந்தநாடு எனவும் பல முனிவர்கள் வாழ்ந்த நாடு எனவும் உபநிடதநூலின் மேன்மை வீரம், புத்தரின் ஞானம், சிறந்த கானம் என்பவற்றின் சிறப்புகளையும் கூறுவதாயமைந்தது.

இவற்றிற்குக் கிடைத்த வரவேற்பினைத் தொடர்ந்து பாரதியார் பெருந்தொகையான தேசபக்திப் பாடல்களை இயற்றியதோடு இவ்வகைப்பாடல்கள் இல்லையென்ற குறையை நிவர்த்தி செய்தார். புகழ்பெற்ற தேசபக்திப் பாடல்கள் சில வருமாறு:

'பாரத சமுதாயம் வாழ்கவே...', 'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே...', ஜெயபேரிகை கொட்டடா...', 'ஜெயம் உண்டு பயம் இல்லை மனமே...', 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்...'(இப்பாடல் 'ஸ்ரீகிருஷ்ணதோத்திரம்' என்ற தலைப்பில் மறை பொருளாகச் சுதந்திர உணர்வையூட்டவல்ல பாடல்), 'சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்...', 'ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்...', 'பாருக்குள்ளே நல்ல நாடு...', 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே...' முதலிய வீராவேசக் கனல்பறக்கும் பாடல்கள் உறங்கிக் கொண்டிருந்த தமிழகத்தை விழிப்புறச் செய்தன. அச்சத்தில் இருக்கும் பாரத தேசத்து மக்களின் அவர்வாழ்ந்த காலத்து நிலையினை 'நொண்டிச்சிந்து' வடிவத்தில் - இகழ்ந்து, துடிக்கின்ற நெஞ்சத்தோடு பாடியதாக அமையும் ஏழு கண்ணிகள் கொண்ட பாடலின் ஒரு கண்ணியின் சில அடிகள் வருமாறு,

*'நெஞ்சு பொறுக்குதிலையே - இந்த*
*நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்...*
*அஞ்சி யஞ்சிச் சாவார் - இவர்*
*அஞ்சாத பொருளில்லை யவனியிலே...'*

- பாரதியார் கவிதைகள்: பக்:51-52

அடுத்தமைந்த பாடல், செயற்திறனின்றி வாய்ப்பேச்சுடனேமட்டும் வாழும் சோம்பேறிகளையும் உயிருக்குப் பயந்து ஒதுங்கிச் செயற்படாதிருப்போரையும் பரிகாசம் செய்து அறிவுறுத்தும் வகையில் 18 கண்ணிகளிலமைந்த கிளிக்கண்ணிவகைப் பாடலொன்றுள்ளது. அதன் ஒரு கண்ணி வருமாறு:

*'நெஞ்சில் உரமு மின்றி*
*நேர்மைத் திறமு மின்றி*
*வஞ்சனை சொல்வாரடீ - கிளியே*
*வாய்ச்சொல்லில் வீரரடீ...'*

- பாரதியார் கவிதைகள்: பக்: 104-105

மேற்படிப் பாடல்கள் 'குதம்பாய்' எனப் பெண்ணைக் குறிப்பதாக அமைந்த குதம்பைச் சித்தர் பாடல்களை எமக்கு நினைவுறுத்துவன. தமிழின் சிறப்பினைக் கூறும் அடுத்தமைந்த பாடல் பாரதியின் தீர்க்கதரிசனப் பார்வையை எமக்குத் தெளிவுறுத்துகிறது.

*'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவ தெங்குங் காணோம்...'*

- பாரதியார் கவிதைகள்: பக்: 61-62

எனத் தொடங்கும் இப்பாடலிலே அவர், '...தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்...' எனவும் வேற்று மொழி நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படவேண்டுமெனவும் தமிழிலுள்ளவை பிறநாட்டவர் மதிக்குமளவு புலமையுடன் திகழவேண்டுமெனவும் கம்பன், வள்ளுவர், இளங்கோ போன்ற திறனுடையவர்கள் இப்பூமிதனில் எமது நாட்டிலேயே பிறந்தவர்கள். வேறு நாடுகளில் பிறக்கவில்லை எனவும் பல செய்திகளைப் பெருமிதத்துடன் கூறுகிறார்.

அச்சவுணர்வு தவிர்க்கவேண்டுமென்பதைப் பல பாடல்களில் அவர் வெளிப்படுத்தியுள்ளார். 'அச்சமில்லை அச்சமில்லை...', 'ஜயமுண்டு பயமில்லை மனமே...', 'ஜயபேரிகை கொட்டடா...' முதலான தொடக்க அடிகளுடைய பாடல்கள் இவ்வகையிலமைந்தனவாகும். இவருடைய ஆக்கமான 'புதிய ஆத்திசூடி' என்ற பாடலானது 'அச்சம் தவிர்' என்றே தொடங்கித் தொடர்கிறது என்பதும் நாமறிந்ததே.

பாரதியின் மேற்சுட்டியவாறாகத் தொடரும் தேசபக்திப் பாடல்களில் மேலும் இருவகைப் பாடல்கள் இங்கு தனிக் கவனத்துக்குரியவையாகும். அவற்றுளொருவகையானவை, பாரத நாட்டை 'பாரதமாதா' எனத் தெய்வநிலையில் உருவகப்படுத்திப் பாடுவனவா

கும். 'பாரதமாதா', 'பாரதமாதா நவரத்தினமாலை', 'பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி', 'பாரததேவியின் திருத் தசாங்கம்' என்ற தலைப்பிலமைந்த பாடல்கள் இவ்வகையினவாகும். இன்னொரு வகையின தேசவிடுதலைக்குப் பெரும் பங்காற்றியவர்களான 'தாதாபாய் நவுரோஜி, பால கங்காதர திலகர், லாலா லஜபதி ராய், மகாத்மா காந்தி முதலியவர்களைப் போற்றும் வகையில மைந்தனவாகும். இவ்விருவகைப்படல்களில் சிலவற்றை மட்டும் இங்கு நோக்குவோம். முதற்கண் பாரத மாதாவைப் புகழ்ந்து பாடும் பாடலொன்று சிந்துப்பாடல் அமைப்பில் 12 கண்ணிகளில் அமைந்திருக்கிறது. அதன் சந்த மெட்டுடன் அமைந்த ஒரு கண்ணி வருமாறு,

*தான தனதந் தனதானதனந்தன*
*தானனத் தானா னே*

*'முன்னை யிலங்கை யரக்கரழிய*
*முடித்தவில் யாருடை வில்? - எங்கள்*
*அன்னை பயங்கரி பாரததேவிநல்*
*ஆரிய ராணியின் வில்...'*

- பாரதியார் கவிதைகள்: பக்: 38-40

அடுத்து 'பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி'யிலமைந்த ஐந்து பாடல்களில் ஒருபாடல் வருமாறு,

*'புள்ளினம் ஆர்த்தன, ஆர்தன முரசம்*
*பொங்கின தெங்குஞ் சுதந்திர நாதம்*
*வெள்ளிய சங்க முழங்கின கேளாய்:*
*வீதியெ லாமணு குற்றனர் மாதா!*
*தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன*
*சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றனர்.*
*அள்ளிய தெள்ளமு தன்னையெ மன்னை*
*ஆருயி ரேபள்ளி யெழுந்தரு ளாயே'*

- பாரதியார் கவிதைகள்: பக்: 44-45

மேற்படிப் பாடல் 'திருமுறை'கள், 'திவ்யப் பிரபந்தங்கள்' என்ப வற்றில் இறைவரைத் துயில் எழுப்புதற்கு அமைந்த திருப்பள்ளி-யெழுச்சி போன்று இவற்றில் 'பாரத மாதா' தெய்வமாகப் போற்றித் துயில் எழுப்பப்படுகின்றமையைக் காண்கின்றோம். இக்கட்டுரையில் தேசியப்பாடல் வரிசையில் நிறைவாக அமைந்த பாடலொன்று 'மகாத்மா காந்தி பஞ்சகம்' ஆகும். சுதந்திரத்திற்கு அஹிம்சை வழியைப் பின்பற்றி இயந்திரத் துப்பாக்கிகளுக்கெதிராக அச்சமில்லாது செயற்பட்ட மகானாக அமைந்தவரான மகாத்மா காந்தியைப் போற்றிப் பாரதியார் பாடிய ஐந்து பாடல்களில் ஒரு பாடல் வருமாறு,

*'வாழ்க நீ! எம்மான், இந்த*
*வையத்து நாட்டி லெல்லாந்*
*தாழ்வுற்று வறுமை மிஞ்சி,*
*விடுதலை தவறிக் கெட்டுப்*
*பாழ்பட்டு நின்ற தாமோர்*
*பாரத தேசந் தன்னை*
*வாழ்விக்க வந்த காந்தி*
*மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க'*

- பாரதியார் கவிதைகள்: பக்: 120-121

மேற்படிப் பாடலின்,


*'...பெருங்கொலை வழியாம் போர்வழி யிகழ்ந்தாய்,*
*அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்,*
*அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்,*
*அறவழி யென்று நீ யறிந்தாய்...'*

ஆகிய அடிகளால் அஹிம்சைவழியான அறவழி போர்வழியை விடச் சிறந்தவழி என்பதை மகாத்மாகாந்தி உணர்த்தியது கூறப்படுகிறது.


(தொடரும்...)



kawsalya.s@thaiveedu.com



# கரிகாலன் பெருமை



4

**- பொன்னையா விவேகானந்தன்**

‘அவன் முருகனைப்போல் சீற்றம் கொள்பவன். தீயவரை அழிக்கும் முருகனின் சினத்துக்கு அது ஒப்பானது. தாய்வயிற்றில் இருக்கும்போதே அரசுரிமை பெற்றவன். அவன் பெருமை அறியாமல் மோதியவர்கள் தோற்றபின் தமது தவறு உணர்ந்து அவன் ஏவும் தொழில்களைச் செய்வார்கள். கடல்மேல் கதிர்களைப் பரப்பும் கதிரவனைப் போன்றவன். பிறந்து தவழ்கின்ற போதே சோழநாட்டைத் தன் தோள்மீது தாங்கிக்கொண்டு வளரச்செய்தவன்.

யாழி என்னும் விலங்கின் குட்டியினைப் போன்ற வலிமை மிக்கவன். இக்குட்டி தாயிடம் பாலுண்ணும் காலத்திலேயே தான் உண்ண விரும்பி வேட்டையாடச் சென்று யானையை வீழ்த்தவல்லது. அத்தகைய வலிமை கொண்டவன் கரிகாலன்.

இளம்பருவத்திலேயே சேரரையும் பாண்டியரையும் வென்றவன். வெண்ணி என்ற ஊரிலே இந்தப் போர் நடைபெற்றது. பெரும் முயற்சியை உடைய அவன் அப்போரில் வென்றான்’ என எதிர் வந்தோன் கரிகாலன் போர்த்திறத்தைக் குறிப்பிடுகின்றான்.

### பரிசில் பெறுதல்

கரிகாலனை எவ்வாறு காண வேண்டும் என்பதையும் பரிசு பெறுகின்ற வழிமுறைகளையும் அவன் கூறுகின்றான்.

அவனுடைய காலடி நிழலைச் சென்றடைந்து வணங்குங்கள். அவன் பார்வை படுமிடத்தில் முன்னால் நில்லுங்கள். உங்களைக் கண்டு, உங்கள் தோற்றத்தினாலேயே உங்கள் வறுமையை உணர்ந்து கொள்வான். பசுவானது பால் கொடுக்கும் நோக்கத்தோடு ஈன்ற கன்றினைப் பார்ப்பதுபோல உங்களைப் பார்ப்பான். உங்கள் இசைக்கருவிகளின் ஒலியைக் கேட்பதற்கு முன்னரே உங்கள் கந்தைகளைக் களைந்து புத்தாடைகள் தருவான்.

குங்குமப்பூ கலந்த கள்ளைப் பொற்கலத்திலே தருவான். நீங்கள் உண்ண உண்ண மேலும் தருவான். ஒவ்வொரு நாளும் அப்படிப் பருகலாம். பொன்னாலான தாமரையை உங்கள் கரிய முடியிலே சூடுவான். நூல் கொண்டு பிணையப்படாத பொன்னரி மாலைகளை விறலிக்குக் கொடுப்பான்.

எங்களை தேரேற்றி வழியனுப்பும் வகையில் எமக்குப் பின்னால் ஏழடி நடந்து வந்தான். யானையின் தந்தத்தால் செய்யப்பட்ட தேர் அது. வெண்குதிரைகள் பூட்டப்பட்ட உயரமான தேர் அது. குதிரைகளை விரட்டும் கோல் தராது, குதிரைகள் பூட்டிய தேரை மட்டுமே தந்தான். நாம் தேரோட்டும் பயிற்சி பெறாதவர்கள். கோல் கொண்டு விரட்ட பாய்ந்தோடும் குதிரைகளை எமக்குக் கட்டுப்ப

டுத்தத் தெரியாது என்பதால் அவன் கோல் தரவில்லை.

நீ யாழ் வாசிப்பது எப்படி இருந்தாலும் ஏனைய சிறந்த யாழ்ப் பாணர்களுக்கு வழங்கும் பரிசில்களைப் போலவே உனக்கும் தரு வான். பல ஊர்களைக் கொண்ட நாடுகளையும் தருவான். அவை மிக வளம் பொருந்திய ஊர்கள். அங்கு வாழ்வோர், வேறிடங்க ளுக்குச் செல்லார்.

நல்ல யானைகளைத் தருவான். அந்த யானைகளுக்கு எல்லோ ரும் வழிவிடுவார்கள். இதுபோன்று தன்னிடம் வரும் பொருநர், பாணர், விறலியர் அனைவருக்கும் ஓயாது பரிசில் கொடுத்துக் கொண்டேயிருப்பான்.

அவன் தருபவற்றையெல்லாம் உங்களால் கொண்டுவர முடியாது. உங்களால் எடுத்துவர முடியாவற்றை உங்களைப் போல் அங்கு அவனை நாடிவரும் பிறருக்கு நீங்கள் கொடுக்க வேண்டியிருக் கும். அங்கிருந்து புறப்பட முடிவு செய்வீர்கள். அது அவனுக்குத் தெரியவரும். அந்தப் பிரிவைப் பொறுக்காதவனாய் தன்னைத் தானே வெறுத்துக்கொள்வான். உங்களுக்கு எளிதில் விடைதர மாட்டான். நிலையில்லாத உலகத்தில் புகழ் ஒன்றே நிலைபெறும் என்பதைச் சீர் தூக்கிப் பார்ப்பான். சரி, போய் வாருங்கள் என எளிதில் விடை தரான். அவன் 'செல்க வென விடுக்குவன் அல் லன்' எனக் கரிகாலனின் கொடைச்சிறப்பைக் கூறுகின்றான்.

தொடர்ந்து அவன் நாட்டின் சிறப்பை எடுத்துரைக்கின்றான்.

'ஒல்லென்ற ஓசையோடு அலைகள் புரளுகின்ற கடற்கரை அங்கு உண்டு. அங்கு நெல் நிறையவே விளைகின்றது. அவை குதிர்க ளில் சேமிக்கப்படுகின்றன. கூடு எனப்படுகின்ற அவை எல்லா இடங்களிலும் உள்ளன. தாழ்ந்த தென்னைகளும் குளிர்ந்த சோலைகளும் இங்கு இருக்கின்றன. அங்கு நல்ல குடிமக்கள் வாழ்கின்றார்கள்.

அங்கே இரத்தத்தோடு கலந்த சோற்றை கரிய காக்கைகளுக்கு வைப்பார்கள். ஊனைத் தின்று தின்று வெறுத்த காக்கை அதை உண்ணாது விடுக்கும் வேளைகளில் நொச்சி மர நிழலில் இருக் கும் ஆமைகளின் குட்டிகளைத் தூக்கி வந்து கூடுகளில் பாது காத்து பசி வரும் வேளையில் உண்ணும். உழவர்களின் பிள்ளை-களான சிறுமிகள் மணற் குன்றிலே வண்டல் இழைத்து விளை யாடுகின்றார்கள்.

பகையில் முதிர்ந்தவராயினும் கரிகாலனுடைய அவையிலே புகும் போது பகைக்குக் காரணமான வேறுபாடுகளை மறந்து ஒன்றுபடு வார்கள். அவன் நாட்டிலே உள்ள காஞ்சி மரத்திலும் மருத மரத் திலும் மயில்கள் தங்குகின்றன. பாகற் பழத்தையும் கொத்தாகப் பழுத்திருக்கும் பலாப்பழத்தையும் உண்டு ஆடுகின்றன.

*முடக் காஞ்சிச் செம்மருதின்*
*மடக்கண்ண மயில் ஆலப்*
*பைம்பாகற் பழந்துணரிய*
*செஞ்சுளைய கனி மாந்தி...*

நிலவளம் சிறந்திருக்கின்றமையால் கரும்புகள் நன்றாக விளை கின்றன. அவற்றை ஆலைகளில் இட்டுச் சாறு பிழிவார்கள். கரும்பை அறுக்கும்போதும் நெல்லை அரியும்போதும் உழவர்கள் ஊக்கத்தோடு ஆரவாரம் செய்வார்கள்.

நீரற்ற இடங்களில் அடம்பங்கொடி இருக்கின்றது. பகன்றை படர்ந்திருக்கின்றது. புன்க மரமும் உண்டு. தாழ்ந்த அச்சோலைக-ளில் ஞாழல் என்ற மரங்களும் உள்ளன. இவ்வாறாகப் பல்வகை மரங்களைக் கொண்ட இவ்விடங்களில் வாழ்ந்து சலிப்பு ஏற்பட் டால் மாந்தர் முல்லை நிலத்துக்குச் செல்வர்.

முல்லை நிலத்தில் தளவு என்ற செம்முல்லை படர்ந்திருக்கும். நல்ல தேனை அது தரும். பொன் போன்ற பூச்சொரியும் கொன்றை மரங்களும் காயா மரங்களும் அங்கு உண்டு. இவ்வா றான முல்லை அழகிலே திளைப்பர். இங்கே வாழ்வதுவும் சலித் துப் போனால் மீண்டும் மருதநிலம் செல்வர்.

நெய்தல் நிலம் பேரழகு மிக்கது. சுறா மீன்கள் உலாவுகின்ற பெருங்கடலைக் கொண்டது. இறாலை உண்ட நாரைகள் புன்னை மர நிழலில் வந்து தங்கும். அங்கே அலைகள் எழுப்புகின்ற ஓசைகளுக்குப் பயந்து பனை மரத்தில் சென்று தங்கும். அங்கே குலைகுலையாகக் காய்க்கும் தென்னைகளும் கமுகுகளும் வாழைகளும் உள்ளன. புன்னை மரங்களின் செறிவில் பேராந்தை கள் வாழும். அங்கு வாழும் பரத குலத்தவர் இதை வெறுத்தாரா யின் குறிஞ்சி நிலத்துக்குச் செல்வர்.

குறிஞ்சி நிலத்திலே வண்டுகள் யாழைப் போல் இன்னிசை தரவல் லன. இதற்கு ஏற்ப, மயில்கள் தோகை விரித்து ஆடுவதைக் காணலாம். நிலவின் நிறம் கொண்ட மணற் பரப்பில் அவை ஆடும். அங்கே வாழும் மக்கள் தேனையும் கிழங்கையும் விற்பார் கள். நெய்தல் நிலமிருந்து சென்ற பரதவர் மீன் நெய்யையும் கள் ளையும் கொடுப்பர். அங்கு கரும்பு, கள், மான் தசை என்பன பண்டமாற்றுச் செய்யப்படுகின்றன.

குறிஞ்சி நிலத்திலே குறிஞ்சிப் பண்ணைப் பாடுவார்கள். குறிஞ் சிப் பாடல்களைப் பரதவர்களும் பாடுவார்கள். நெய்தல் பூவை மலைவாழ் மக்களும் சூடுவார்கள்.

முல்லை நிலமான காட்டில் உள்ளவர்கள், மருதநிலப் பண்ணைப் பாடுவார்கள். மருதநிலப் பாடகர்கள் முல்லை நிலத்துப் பாடல் களைப் பாடுவார்கள். முல்லை நிலக் காட்டுக் கோழிகள் மருத நிலத்து நெல்மணிகளை உண்ணுகின்றன. வீட்டுக்கோழிகள் மலை யில் விளையும் தினையைக் கவர்ந்து உண்ணுகின்றன. குறிஞ்சி நிலக் குரங்குகள் நெய்தல் நிலக் கழிகளில் குளிக்கின்றன. கழிமு கத்து நாரைகள் மலைகளுக்குச் சென்று தங்குகின்றன. இவ்வகை யாக 'தண்வைப்பின் நால்நாடு குழீ,' என நானிலச் சிறப்பும் கொண்டது சோழநாடு என்கின்றான் பரிசில் பெற்று வந்தோன்.

நிறைவில் ஆற்றுப்படுத்துவோன் காவிரி ஆற்றைப் பற்றிக் குறிப் பிடுகின்றான்.


கடும் வெப்பம் நிலவும் காலத்தில் மரங்களில் தீப்பற்றும், அருவி கள் வற்றிவிடும். மேகங்கள் கடல்நீரை முகப்பதை மறந்துவிடும். கடும் வெப்பத்தையும் தாங்கவல்ல கஞ்சாச் (குல்லை) செடிகள் கூட வதங்கிவிடும். இவ்வாறு பஞ்சம் தோன்றி, மக்களிடையே நற் பண்புகள் குன்றும் காலத்திலும் காவிரி ஆற்றின் நலம் குன்றாது.

நில்லாது ஓடிக்கொண்டிருக்கும் காவேரி, நறைக் கொடியையும் நரந்தைப் புல்லையும் அகிலையும் சந்தனத்தையும் துறைதோறும் தந்து இளைப்பாறிச் சென்று கொண்டிருக்கும். காவிரி நுரைக ளைத் தலைகளாகக் கொண்ட புதுவெள்ளத்தைச் சுமந்து வரும். ஆரவாரத்துடன் வரும். குளங்களிலும் கோட்டகம் என்னும் மடுக் களையும் நிறைத்துச் செல்லும்.

அவ்வாற்றில் மகளிர் குதித்துக் குளித்து விளையாடுவார்கள். காவிரி எடுத்து வரும் நீரினால் நெல் சிறந்து விளைகின்றது. உழ வர்கள் அவற்றை அறுவடை செய்து நெற்கதிர்களைக் கட்டாக அடுக்குகின்றார்கள். அதைச் சூடு என்பார்கள். இப்படி அரிந்தெ டுத்த கதிர்களைப் பின்னர் கடா மாடுகளை விட்டு மிதிக்கச் செய்து நெல்லைப் பிரித்தெடுத்துத் திரட்டிக் குவிக்கின்றார்கள்.

காவிரிக் கரைகளில் வேலிக்கு ஆயிரக் கலமாக விளைகின்றது நெல். இந்த வளம் காவிரியால் உண்டானது. இந்த வளம்மிக்க நாட்டுக்கு உரியவன் கரிகாலன்.

இத்துணை சிறப்புமிக்க வேந்தனாகிய கரிகாலனைத் தாமதமில்லா மல் சென்றடைந்து, வேண்டிய பரிசில்களைப் பெறுவாயாக என ஆற்றுப்படுத்துகின்றான் பரிசில் பெற்றோன்.



vivekanandan.p@thaiveedu.com

# கம்பனின் கருவூலம் திறந்து...

- மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

10

சென்ற இதழில் தாடகை வதையைத் தொடர்ந்து விசுவாமித்திரரால் இயற்றப்பட்ட வேள்விக்கு இராமனும் இலக்குவனும் காவலாக இருந்து அதனை நடத்தி வைத்தமை தொடர்பான செய்திகளையும் அதனைக் கூறும் கம்பரின் பாடல்களுள் சுவைமிக்க பாடல்கள் சிலவற்றையும் படித்து மகிழ்ந்தோம்.

இந்த இதழில் பாலகாண்டத்தின் 9வது படலமாகிய அகலிகைப் படலத்தைப் பற்றிப் பார்க்க இருக்கிறோம். நிலவளமும், நீர்வள மும் நிறைந்த மருத நிலத்தால் சூழப்பட்ட மிதிலை நகரத்தி லுள்ள மக்களுக்காக அந்நாட்டு மன்னன் சனகன் செய்கின்ற வேள்வியைக் காண இராம இலக்குவர்களை அழைத்துக் கொண்டு விசுவாமித்திரர் மிதிலை நோக்கிச் செல்லும் வழியில் கல்லாகச் சபிக்கப்பட்ட அகலிகை சாபம் நீங்கி இயற்கையான உருவமெய்திய செய்திகள் இப்படலத்தில் கூறப்படுகின்றன. இப் படலத்தில் வரும் பாடல்களில் கூறப்படும் சில கிளைக்கதைச் செய்திகளோடு கம்பனின் கவி நயங்களையும் சில பாடல்களில் நுகர்வோம். வாருங்கள்.

மிதிலை நோக்கி வந்த மூவரும் வழியில் எதிர்ப்பட்ட சோணை நதியை அண்மித்துள்ள ஒரு சோலையை அடைந்து அங்கே தங் குகிறார்கள். அந்தச் சோலை பற்றிய வரலாற்றை இராம இலக் குவர்களுக்கு விசுவாமித்திரர் எடுத்துக் கூறுகிறார். காசிப முனிவ னது மனைவியாகிய திதி என்பவள் அசுரர்களாகிய தனது மக்கள் தேவர்களால் அடியுண்டு மாண்டு போனதால் துயரமடைந்து தேவர்கள் தலைவனாகிய இந்திரனைக் கொல்லும் வலிமையுடன் மூவுலகையும் ஆளவல்ல ஒரு மகனைப் பெறுவதற்குத் தன் கண வனிடம் அனுமதி பெற்றுப் பலநாள் தவம் புரிந்த இடம் இதுவெ னக் கூறிப் பாற்கடல் கடைந்ததால் அதனின்றும் தோன்றிய அமு தம் காரணமாகத் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே உண் டான போரில் அசுரர்கள் தோற்று மடிந்ததே அவளுடைய துயருக் குக் காரணமாயிற்று என்றும் அந்தக் கதையை அவர்களுக்குக் கூறலாயினார்.

ஒரு தேவ கணப்பெண் திருமாலிடம் சென்று திருமாலின் பக்கத்தே அமர்ந்திருக்கும் திருமகளைப் புகழ்ந்து யாழை மீட்டிப் பாடித் துதிக்கின்றாள். அதனால் மகிழ்ந்த திருமகள் தன்தலையில் சூடி யுள்ள மாலையை அப்பெண்ணுக்கு வெகுமானமாகக் கொடுக்கி றாள். அந்த மாலையைப் பெற்றுச் சென்ற அந்தப் பெண் தன்னெ திரில் வந்த திருமால் அடியவனாகிய துருவாச முனிவனுக்குக் கொடுக்க அதனைப் பெற்றுக்கொண்ட துருவாச முனிவர் மகிழ் வெய்தியவாறு தேவலோகத்தைச் சேர்கின்றார். அங்கே ஐராவதம் என்னும் யானை மீது தேவமாதர் சூழ்ந்துவர இந்திரன் பவனி வரு வது கண்டு துருவாச முனிவர் வியப்பெய்துகிறார். இந்தக் காட் சியை நான்கு பாடல்களிலே கம்பர் கூறுகின்றார். அவற்றி லொன்று.

*அரம்பை மேனகை திலோத்தமை உருப்பசி அனங்கன்*
*சரம்பெய் தூணியிற் தளிரடி நூபுரந் தழைப்பக்*
*கரும்பை யுஞ்சுவை கைப்பித்த குதலையர் விளரி*
*நிரம்பு பாடலோ டாடினர் வீதிகள் நெருங்க.*

- கம்ப. பால. 486

கருப்பஞ் சாற்றையும் தங்களது இனிய குதலைச் சொற்களால் கசப்பாகும்படி செய்கின்ற அரம்பை, மேனகை, திலோத்துமை, ஊர்வசி ஆகிய தேவலோகப் பெண்கள் மன்மதனுடைய மலரம்பு கள் பெய்ததொரு துளிர் போன்ற மென்மையான கால்களிலே அணிந்த சிலம்புகளின் ஒலி மிகுமாறு விளரி என்னும் இசை நிறைந்த பாட்டுடனே நடனமாடிக்கொண்டு வீதிகளில் நெருங்கி வரவும் இந்திரன் வந்து கொண்டிருந்தான் என்பது பாடலின் பொருளாகும். நாவுக்கு இனிமை தருகின்ற கருப்பம் சாறு கூட செவிக்கு இனிமை தருகின்ற மங்கையரின் குதலை மொழியால் கசப்பாகி விடுகின்றதெனக் கூறும் கம்பரின் கற்பனைத் திறனை எவ்வாறு விதந்துரைப்பது.

இந்திரன் யானை மீது அமர்ந்து வருகின்ற அழகிய காட்சியைக் கண்ட துருவாச முனிவன் தான் வைத்திருந்த திருமகளின் மாலையை இந்திரனுக்குத் தர அவன் அதனைத் தோட்டியால் வாங்கி யானையின் தலைமீது வைக்க அது அம்மாலையைத் துதிக்கையால் எடுத்துக் காலில் போட்டு சிதைத்தது. அதனைக் கண்டு சினமுற்ற முனிவன் 'திருமகள் அளித்த மலர்மாலை உனக்கே தக்கது என மகிழ்ந்து நான் கொடுக்க அதனை நீ செல் வச் செருக்கினால் அலட்சியம் செய்து சிதைத்தாயாதலால் உனது செல்வங்கள் யாவும் பாற்கடலில் போய் மறைய நீ வறுமையி னால் வருந்துவாயாக' எனச் சாபமிட இந்திரனது பொருள்கள் யாவும் பாற்கடலில் புகுந்து ஒளிந்துகொண்டன. துருவாச முனிவ- னின் சாபத்தால் எல்லாச் செல்வங்களும் கடலினுட் புகுந்து ஒளித் துக்கொண்டதால் அவனால் ஆளப்படுகின்ற உலகமனைத்தும் வறுமையின் கொடுமையால் வருந்தவே தேவர்கள் யாவரும் திரு மாலிடம் சரணடைகிறார்கள். திருமால் அவர்களுக்கு அபயம- ளித்து இழந்த செல்வங்களை மீண்டும் பெறுதற்குத் திருப்பாற்கட லைக் கடையுமாறு கட்டளையிடுகிறார். திருமாலின் கட்டளைப்ப டியே பாற்கடலைக் கடைவதைக் கம்பர் இவ்வாறு கூறுகிறார்.

*மலைபி டிங்கினர் வாசுகி பிணித்தனர் மதியை*
*நிலைபெ றும்ப டிநட்டனர் ஓடதி நிரைத்தார்*
*அலைபெ றும்படி பயோததி கடைந்தனர் அவனி*
*நிலைத ளர்ந்திட அனந்தனும் கீழுற நெளிந்தான்*

- கம்ப. பால. 499

திருமாலின் கட்டளைப்படி அசுரர்களையும் இணைத்துக் கொண்டு மந்தர மலையைப் பிடிங்கி எடுத்து வந்து வாசுகி என்னும் பாம் பால் கட்டி, சந்திரனைத் தூணாக நிலைத்து நிற்கும்படி நட்டு மூலிகைகளை நிறைத்து அலைகள் மிக்கு எழும்பும் வண்ணம் திருப்பாற் கடலைக் கடைந்தார்கள். தேவர்கள் அசுரர்களின் துணைக் கொண்டு வாசுகியின் வாய்ப்புறத்தில் அசுரர்களும் வாற் புறத்தில் தேவர்களுமாகப் பாற்கடலைக் கடையும்போது ஏற்பட்ட அதிக பாரத்தால் பூமி நிலைகுலைய பூமியைத் தாங்குகின்ற ஆதிசேடனும் உடல்வருந்தி நெளிந்தான் என்பது இப்பாடலின் பொருள்.

பாற்கடலைக் கடையும்போது வாசுகி தன் தலையிலிருந்து நஞ் சைக் கக்கிக்கொண்டிருக்கையில் தேவர்களின் வேண்டுகோளி னால் சிவபெருமான் அதனை உட்கொண்டு தன் மிடறில் நிறுத்தி வைத்தார். துருவாச முனிவனின் சாபத்தால் கடலில் சென்றொ- ளித்த தேவலோகப் பொருள்கள் யாவும் வெளியே வந்தன. கடை தலினால் அங்கு தோன்றிய அமுதம் காரணமாகத் தேவர்களுக் கும் அசுரர்களுக்கும் பிணக்கு உண்டாக திருமால் மோகினி வடி வமெடுத்து அசுரர்களை வஞ்சனையால் ஒடுங்கச் செய்து தேவர்க ளுக்கே அவ்வமுதத்தைக் கொடுத்தான் என்னும் கதையை விசு வாமித்திரர் இராம இலக்குவர்களுக்குக் கூறுகின்றார். பின்னர் மூவரும் செல்லும் வழியில் எதிர்ப்படும் கங்கையாற்றின் வரலாற் றையும் விசுவாமித்திரர் கூறக் கேட்டபடி அதனைக் கடந்து விதேக நாட்டை அடைகிறார்கள். அந்நாட்டுச் சோலைகள், கழனிகள், நீர் நிலைகள், ஆறுகள், நீரோடைகள், குளங்கள் ஆகியவற்றின் சிறப் புகளைக் கம்பர் பல அழகிய நயம் மிக்க பாடல்களில்

வருணிக் கின்றார். அவற்றுள் ஒரு பாடல் நீர்நிலைகளின் சிறப்பை இவ் வாறு வருணிக்கின்றது:

*தூவி யன்னந்தன் இனமென்று நடைகண்டு தொடரும்*
*கூவு மென்குயிற் குதலையர் குடைந்ததண் புனல்வாய்*
*ஓவில் குங்குமச் சுவடுற வொன்றொடொன் றூடிப்*
*பூவு றங்கினும் புள்ளுறங் காதன பொய்கை*

- கம்ப. பால. 542

குளங்களிலே மகளிர் இறங்கி நீராடி விளையாடும்போது அழகிய சிறகுகளையுடைய அன்னங்கள் அவர்களைத் தமது இனமான அன்னப் பறவைகள் என்று எண்ணி மயங்கி அப்பறவைகள் அவர் பின்னால் செல்கின்றன எனக் கற்பனை செய்கிறார் கம்பர். கூவும் குயிலின் மென்மையான இனிய குரலையொத்த மழலைச் சொற்க ளையுடைய மகளிர் மூழ்கி விளையாடிய குளிர்ந்த நீரினிலே அவர்கள் பூசியிருந்த குங்குமக் குழம்பின் சுவடுகள் கலந்து அங் குள்ள அன்னப் பறவைகளின் உடல்மீது படிவதால் தம்மை ஒன் றையொன்று நோக்கும்போது பிற இனப் பறவைகள் என மயங் கித் அவை தம்முள் மாறுபடுகின்றன என்னும் கம்பரின் கற்ப னைத் திறன் களிப்பூட்டுவதாக உள்ளது. மயக்கவணி கொண்ட பாடலாக இப்பாடல் அமைந்துள்ளது. சிவந்த குங்குமக் குறியும், அதன் மணமும் பொருந்திய ஆண் பறவைகளைப் பெண் பற வைகள் கண்டு அவை வேறு பேடைகளுடன் புணர்ந்து வந்தன வாகக் கருதி அவற்றுடன் ஊடல் கொண்டு பிணங்கிக் கொள்வ தாகவும் இதனைப் பொருள் கொள்ளலாம். இவ்வாறு இரவு வரும் நேரத்தில் இப் பொய்கையிலுள்ள மலர்கள் குவிந்து உறக்கம் கொண்டாலும் ஒலியெழுப்பியவாறு தம் இளைப்புத் தீரக் கவலை யின்றி உறங்குவதை விடுத்து உறக்கம் கொள்ளாமல் இருக்கின்ற பறவைகளைக் கொண்டுள்ளன அங்கேயுள்ள பொய்கைகள் என் னும் கம்பனின் கற்பனையும் ‘பூவுறங்கினும் புள்ளுறங்காதன பொய்கை’ என்னும் சொல்லாட்சியும் நம்மை வியக்க வைக்கின் றன.

இத்தகைய சிறப்புமிக்க பொய்கைகள், நீர்நிலைகள் யாவற்றை யும் கடந்து மூவரும் மிதிலையின் மதிற்புறத்தை அடைந்தபோது கௌதம முனிவனது மனைவியான அகலிகை கல்லாய்க் கிடக் கும் இடத்தைக் காண்கின்றனர்.

*கண்ட கல்மிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ*
*உண்ட பேதமை மயக்குற வேறுபட் டுருவம்*
*கொண்டு மெய்யணர் பவன்கழல் கூடிய தொப்பப்*
*பண்டை வண்ணமாய் நின்றனள் மாமுனி பணிப்பான்.*

- கம்ப. பால. 547

அவர்கள் கண்ட கல்லின் மீது இராமனது காலின் தூளி பட்ட மாத்திரத்தே இறைவன் திருவடியைச் சேர்பவர் புன்புலால் யாக்கை ஒழித்து ஒளிமயமான வடிவத்தைப் பெறுவது போல அக லிகை சாபம் நீங்கிக் கல்லுருவம் மாறி இயல்பான உருவத்தைப் பெற்றாள். இந்தப் பாடலின் முதலடி எல்லாச் சீர்களும் மோனை கொண்டதாக முற்று மோனையில் அமைந்திருப்பது சிறப்பு. அவ் வேளையில் சாபம் நீங்கி ஒருபுறத்தே ஒதுங்கி நின்ற அகலி கையை இராமன் யாரெனக் கேட்க விசுவாமித்திரர் அவளுடைய வரலாற்றை இராமனுக்கு எடுத்துரைக்கிறார்.

கௌதம முனிவனின் மனைவியாகிய அகலிகையின் அழகில் மயங்கிய இந்திரன் தந்திரத்தால் கௌதம முனிவனை வெளியே போகுமாறு செய்துவிட்டு அக்கௌதம முனிவனைப் போலவே வடிவமெடுத்து வந்து அவளுடன் காம இன்பம் அனுபவிக்கிறான். தன் கணவன் என்றே நினைத்துக்கொண்டு அவளும் உடன்பட்டி ருக்கையில் அவ்விடம் திரும்பி வந்த கௌதம முனிவன் சினம் கொண்டு இருவருக்கும் சாபம் அளிக்கிறான். ‘பெண்களுக்கு அடையாளமாக உள்ள குறி ஆயிரம் உனது உடம்பு முழுவதும் உண்டாகக் கடவன’ என இந்திரனுக்குச் சாபமிட்டவுடனேயே பெண்குறிகள் ஆயிரம் அவனது உடம்பில் பொருந்தின. ஒரு பெண்ணின் குறியில் விழைந்து தீச்செயல் புரிந்தமையால் அதில் வெறுப்பேற்படுமாறு இவ்வாறு சாபமிட்டார். தன்மனைவியையும் நோக்கி ‘கற்புத் தவறிய விலைமகள் போன்றவளாகிய நீ கல்லா கக் கடவாய்’ எனச் சாபமிட்ட மாத்திரத்தே அவள் கருங்கல் வடி வமாக இவ்விடத்திலே வீழ்ந்தாள். சிறியோர் செய்த பிழையெல் லாம் பெரியோர் பொறுப்பது கடனே எனத் தனக்கு அளித்த சாபத்துக்கு விமோசனம் அருளவேண்டும் என அவள் முனிவனி டம் வேண்ட, ‘தயரத குமாரனாகிய இராமனின் திருவடித்தூளி உன்மீது படியும்போது இக்கருங்கல் வடிவத்தை நீங்குவாய்’ எனப் சாப விமோசனம் அருளினான் என்று ராமனுக்கு அக்கல் பெண்வடிவம் பெற்ற கதையைக் கூறி இராமனைப் புகழ்வதாக ஒரு சிறந்த பாடலைக் கம்பர் வடித்துள்ளார்.

*இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனியிந்த உலகுக் கெல்லாம்*
*உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவ துண்டோ*
*மைவண்ணத் தரக்கி போரின் மழைவண்ணத் தண்ணலேயுன்*
*கைவண்ண மங்குக் கண்டேன் கால்வண்ண மிங்குக் கண்டேன்.*

- கம்ப. பால. 558


இவ்வாறாக நீ அவதரித்து வந்து தீயோரைக் கடிந்து நல்லோரைப் பாதுகாப்பதென்பது நிகழ்ந்த பின்பு இவ்வுலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் ஈடேறும் வழியேயன்றிப் பிறிதொரு துன்பம் ஏற்ப டுமோ? கருநிறத்தையுடைய தாடகையோடு செய்த யுத்தத்தில் உனது கைத்திறனை அங்கு பார்த்தேன். உனது திருவடியினது அருள் வண்ணத்தை இங்கு கண்டேன் என இராமனைப் புகழ்ந்து அகலிகையின் கதையை விசுவாமித்திரர் சொல்லி முடித்ததைக் கம்பர் மிக அழகுமிக்க அடுக்குச் சொற்களால் பாடியுள்ளது நம் மைப் பரவசப்படுத்துகிறது. மழை வண்ணத்து அண்ணல் என இராமனை வருணித்துள்ளது இராமனைக் கண்டவரின் மனக் கொதிப்பை நீக்கும் குளிர்ந்த கருமை நிறம் கொண்ட கருணை மழை பொழிபவன் இராமன் என்னும் பொருளைக் குறிப்பதாகவுள் ளதைக் காணலாம். மைவண்ணத்து அரக்கி என்றும் மழை வண் ணத்து அண்ணல் என்றும் இருவரையும் வேறு படுத்தியிருப்பதும் கை வண்ணம் அங்குக் கண்டேன் கால் வண்ணம் இங்குக் கண் டேன் என முரண் தொடை அமைந்திருப்பதும் கம்பரின் கவிநயத் தின் உச்சம் எனலாம். கம்பரின் இவ்வாறன சிறந்த பல பாடல்கள் கவியரசு கண்ணதாசனிலும் பாடல்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியி ருப்பதை குறிப்பிட்டுக் கூறவேண்டும். அவர் மக்கள் திலகம் எம். ஜி. ஆர் நடித்த பாசம் என்னும் திரைப்படத்துக்கு எழுதி விசுவநா தன் இசையமைப்பில் பாடகர்கள் சிறிநிவாஸ் சுசிலா ஆகியோர் பாடிய ‘பால் வண்ணம் பருவங் கண்டு வேல் வண்ணம் விழிகள் கண்டு மான் வண்ணம் நான் கண்டு வாடுகின்றேன்’ எனத் துவங் கும், இன்றும் எல்லோரதும் மனங்களை விட்டகலாத இனிய பாடல் மேலேயுள்ள கம்பரின் பாடலின் பாதிப்பு என்பதைக் கவிய ரசு கண்ணதாசனே கூறி வைத்துள்ளார். ‘கண் வண்ணம் அங்கே கண்டேன் கை வண்ணம் இங்கே கண்டேன்’ எனக் கம்பரின் வரி கள் அச்சொட்டாக இப்பாடலில் பதிந்துள்ளன. கம்பனைப் படித்த கவிஞர்கள் எழுதுகின்ற கவிதைகளிலே கம்பனின் பாதிப்பு இருந்தே தீரும் என்பது நிதர்சனமான உண்மை என்பதைக் கூறிக் கொண்டு அகலிகைப் படலத்தின் இறுதிப் பாடலுடன் நிறைவு செய்வோம்.

*குணங்களா லுயர்ந்த வள்ளல் கோதமன் கமலத் தாள்கள்*
*வணங்கினான் வலங்கொண் டேத்தி மாசறு கற்பின் மிக்க*
*அணங்கினை யவன்கை யீந்துஆண்டு அருதவனோடு வாசம்*
*மணங்கிளர் சோலை நீங்கி மணிமதிற் கிடக்கை கண்டார்.*

- கம்ப. பால. 562

எல்லா நற்குணங்களாலும் சிறப்புற்று உயர்ந்து வரையாது கொடுக்கும் வள்ளல் தன்மையுடைய இராமன் கௌதம முனிவ னது திருவடிகளை வலம் வந்து வணங்கித் துதித்து மாசற்ற கற் பின் மிக்க தெய்வப் பெண்போன்ற அகலிகையை அம்முனிவனி டம் சேர்ப்பித்து விட்டு அரிய தவத்தினையுடைய விசுவாமித்திரரு டன் மிகுந்த வாசனை வீசுகின்ற அந்தச் சோலையின்றும் புறப் பட்டு மிதிலை நகரின் மணிகள் இழைக்கப்பட்டுள்ள மதில்கள் இருக்கின்ற பக்கம் நோக்கி நடக்கலாயினார். அடுத்த இதழில் மிதிலைக் காட்சிப் படலத்தில் நாமும் அவர்களுடன் வலம்வந்து களிப்போம்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com

# ஆதித் தமிழர் திணை வழிக் குடிகள்

# சோழ மன்னர்கள்

பகுதி - I

21 - செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தொல்காப்பியம் பொருளதிகாரம், பாடல் பாடும் புலவனுக்காக வகுக்கப்பட்ட 'கவிதை மரபாகும்' தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்களையே முன்னிறுத்தி அந்'நூற்பாக்களில் பயின்று வரும்' கவிதை மரபுகளிலிருந்து, அக்காலச் சமூகம், அரச உருவாக்கத்தின் அடிப்படை, வளர்ச்சி, அரச விரிவாக்கம் முதலாய தகவல்களைப் பிரித்தெடுத்து 'ஆதித் தமிழர், திணைவழிக் குடிகள், திணை வழியாகவே அரசு தென்னாட்டில் உருவாகியிருக்கிறது, விரிவாகியிருக்கிறது' என்பதை நிறுவுவது இவ் ஆய்வின் கருதுகோளாகும்.

அரச விரிவாக்கம் - வேளிர், முற்காலப் பாண்டியர், சேரர் -வேளிர் மன்னர்கள், முற்காலப் பாண்டிய மன்னர்கள், முற்காலச் சேர மன்னர்களின் அரச விரிவாக்கம் பற்றி விரிவாக ஆராயப்பட்டு கீழ்க் காணும் முடிவுகள் நிறுவப்பட்டன.

- பொ.ஆ.மு. 5-ம் நூற்றாண்டளவில் குழுக்கள் நிலையிலிருந்து அரசு விரிவாக்கம் காணும் முயற்சிகள் பற்றிக் கண்டோம்.
- இருங்கோவேளைக் கபிலர் பாடிய புறநானூறு 201-ம் பாடலில் கூறப்பட்ட தகவலுடன் இம்முடிவுகள் ஒத்துப் போவதாகக் கண்டோம்.

*'நாற்பத் தொன்பது வழிமுறை வந்த*
*வேளிருள் வேளே'*

- புறநானூறு 201, 11-12

கபிலர் காலம் ஏறக்குறைய பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டு என்று கொண்டால், சராசரி ஒரு மன்னனது ஆட்சிக் காலம் 25 ஆண்டுகள் எனக் கொண்டு (49*25=1225), பொ.ஆ.மு. 1000-ம் ஆண்டுகளுக்கு முன்பே வரலாறு தொடங்கியிருக்கலாம் என்று கண்டோம்.

- வரலாற்றுக்கு முந்திய காலம் ஆராயப்பட்டது.
- தொல்காப்பியம் வழி 'திணைக் குழுக்கள்' பற்றி ஆராயப்பட்டது.
- பண்டைய வேளிர் குலத் தலைவர்களுள் முன்னிலையில் வைத்து எண்ணத்தக்கவனும், தமிழ் நாட்டுக் காலக் கணிப்பிற்கு முக்கிய புறச்சான்றாக இன்று கிடைத்துள்ள அசோகன் கிர்னார்(Girnar) இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டவனுமான அதியமான் நெடுமான் அஞ்சி பற்றியும் அவனோடு தொடர்புடைய அதியமான் நெடுமிடல் அஞ்சி, மலையமான் திருமுடிக்காரி, வல்வில் ஓரி, பெருஞ்சேரல் இரும்பொறை, இன்னும் இவர்களை ஒத்த பிற அரசர்கள், குறுநில மன்னர்கள், புலவர்கள் ஆகியோர் பற்றியும் சங்க காலத்தை நிர்ணயிக்கக் கூடிய தகவல்கள் ஆராயப்பட்டன.

## பாண்டிய மன்னர்கள் - அரச விரிவாக்கமும்:

- தமிழ்நாட்டு மன்னர் குடிகளில் பாண்டியர் பழமையானவர்கள், அவர்களுக்கு நீண்ட வரலாறு உண்டு. சங்க காலப் பாண்டியர்களுள் பெருவீரனான தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், அவனோடு தொடர்புடையவர்களான சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, சோழன் கிள்ளிவளவன் முதலிய மன்னர்கள், அள்ளூர் நன்முல்லையார், ஆலங்குடி வங்கனார், ஆலம்பேரி சாத்தனார், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் முதலிய புலவர்கள் பற்றிய, சங்க காலத்தை நிர்ணயிக்கக் கூடிய தகவல்கள் ஆராயப்பட்டன.
- மொத்தம் - 54 அரசர்களும் புலவர்களும் இவ்விரு வேந்தர்களுடனும் தொடர்புடையவர்களாக ஏறக்குறையச் சம காலத்தவர்களாக அறியப்படுகிறார்கள்.
- தொல்காப்பியம், 'நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து' அரங்கேற்றப்பட்டது என்னும் அரிய செய்தியை, பனம்பாயிரனார் தொல்காப்பியப் பொதுப் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர், இடைச் சங்கப் புலவராக அறியப்படுகிறார். எனவே, பொ.ஆ.மு. 711-ம் ஆண்டளவில், தமிழ் நாட்டில் நிலைபெற்றதொரு பாண்டிய அரசு இருந்திருக்கிறது என்பது தெளிவு. முடியுடை அரசுகளில் மூத்த குடி பாண்டியர் குடி என்பது ஆய்வாளர் கருத்து. ஆய்வின் அடிப்படையில் இடைச் சங்ககால இறுதி பொ.ஆ.மு. 8 - 7-ம் நூற்றாண்டளவில் என்று கொள்வதில் தப்பில்லை.

முடத்திருமாறனின் பின் வந்த அரசர்கள் வரலாறு ஆராயப்பட்டு, கடைச்சங்கக் காலப்பகுதியில், மொத்தம் - 68 அரசர்களும் புலவர்களும் ஏறக்குறையச் சமகாலத்தவர்களாக அறியப்படுகிறார்கள் என்று நிறுவப்பட்டது.

## அடை மொழிகளின் உண்மைத் தன்மை:

பண்டைய மன்னர்களுக்குக் கொடுக்கப்பட்ட அடைகளான 'ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்' (சிலப்பதிகாரம்), 'பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்' (புறநானூறு), 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' (பதிற்றுப்பத்து 11), 'வடபுல இமயத்து வாங்குவில் பொறித்த' (சிறுபாணாற்றுப்படை) முதலியவற்றின் உண்மைத் தன்மை விரிவாக ஆராயப்பட்டது.

பொ.ஆ.மு. 5-ம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.மு. 2-ம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியில் வடநாடு மிக வலுவான பேரரசுகளின் ஆட்சியின் கீழ் இருந்திருப்பது தெளிவாகிறது. இக் காலப் பகுதியில் தென் நாட்டிலிருந்து வடநாடு நோக்கிய படையெடுப்பு நடந்திருக்க வாய்ப்பில்லை என்பது நிறுவப்பட்டது.

தொல்காப்பியர் காலத்திலேயே (பொ.ஆ.மு 711) மூவேந்தர்கள் 'போந்தை வேம்பே ஆர் என வரூஉம்' (தொல்.பொருள்.புறத். 5) என்று அவரவர் அடையாளப் பூவாலும். 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்' (தொல்.பொருள்.செய்யுள். 75) என்று நிலத்தாலும் அறியப்பட்டவர்கள்.

## சேர மன்னர்களும் அரச விரிவாக்கமும்:

- சேரர் பரம்பரையில், பதிற்றுப்பத்து மன்னர்களுள், 1-ம் பத்தின் பாட்டுடைத் தலைவனான உதியஞ்சேரலாதன், 8-ம் பத்தின் பாட்டுடைத் தலைவனான தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை ஆகிய இரு மன்னர்கள் பற்றி மட்டுமே வரலாற்று

அடிப்படையில் காலத்தைக் கணிப்பதற்குரிய சான்றுகள் உள.

- 1-ம் பத்தின் பாட்டுடைத் தலைவனான உதியஞ் சேரலாதன், முதல் அரசுக் கட்டில் ஏறியவனாக அறியப்படுகிறான். இவன் கரிகால் பெருவளத்தானுடன் நடந்த வெண்ணிப் பறந்தலைப் போரில் 'மார்பில் பாய்ந்த அம்பு முதுகு வழியாக வெளி வந்த புறப்புண் நாணி' வடக்கிருந்தான் என்ற செய்தி, இவன் கரிகால் பெருவளத்தானின் சமகாலத்தவன் என்னும் தகவலைத் தருகிறது.
- பொருநர் ஆற்றுப்படையும் பட்டினப்பாலையும் இருவேறு பாட்டுடைத் தலைவர்களைக் கொண்டதாகப் பாடப்பட்டாலும், தற்போது கிடைக்கும் சான்றுகளின் அடிப்படையில், இவ்விரு பாடல்களிலும் பேசப்படும் தலைவன் கரிகால் பெருவளத்தானே என்று நிறுவப்பட்டது.
- கரிகாலன் பெயரில், முடத்தாமக் கண்ணியார், பரணர், கழாத்-தலையார், வெண்ணிக் குயத்தியார், கருங்குழல் ஆதனார் ஆகியோரும் திருமாவளவன் பெயரால் கடியலூர் உருத்திரங் கண்ணனாரும் பாடியிருக்கிறார்கள். கழாத் தலையாரும் வெண்ணிக் குயத்தியாரும் வெண்ணிப் பறந்தலைப் போரை நேரில் கண்டு பாடியிருக்கிறார்கள் (புறநானூறு 65, 66).
- இதே கழாத்தலையார், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் (இவன் பதிற்றுப் பத்தில் பாடப்பட்ட மன்னன் அல்லன்) சோழன் வேற் பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளியும் மண்ணாசையால் பொருது ஒரு களத்தில் இறந்த காட்சியைப் பார்த்துப் பாடியிருக்கிறார்.
- சோழன் வேற் பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளி, கரிகால் வளவ-னின் இரு மகன்களுள் ஒருவன் என்பது சில வரலாற்று ஆசிரியர்கள் கருத்து. சோழன் வேற் பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளி, கரிகாலனின் பின் புகாரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டின் ஒரு பகுதியை ஆண்டதாக அறியப்படுகிறது.
- கரிகாலனைப் பாடிய கழாத்தலையார், அவன் மகன் (பின்னோனான) சோழன் வேற் பல்தடக்கைப் பெருவிறற் கிள்ளியையும் பாடியிருக்கிறார். இங்கு, வரலாற்றுத் தொடர்பும் அவர்களைப் பாடிய புலவர்களும் அறியப்படுகிறார்கள்.
- தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை - 8ம் பத்தின் பாட்டுடைத் தலைவன், தகடூர் போர் அதியமானுடன் நடந்தமையால் இவன் அதியமான் காலத்தவன், அதியமான் நெடுமான் அஞ்சியின் காலம் அசோகரின் கின்னர் கல்வெட்டினால் உறுதி செய்யப்பட்ட பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டு.
- பதிற்றுப்பத்தின் 1-ம் பத்தின் பாட்டுடைத் தலைவனான உதியஞ்சேரலாதனுடன் ஒத்த காலத்தவனான கரிகால் பெருவளத்தானைப் பாடிய கழாத்தலையாருக்கும் பதிற்றுப் பத்தின் 7-ம் பத்துப் பாடிய கபிலருக்கும் ஏறக்குறைய 150 ஆண்டுகள் இடை-வெளி இருக்கவேண்டும் என்று ஆராயப்பட்டது. அந்த அடிப்படையில், உதயஞ்சேரலாதனுக்கும் செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கும் இடைப்பட்ட காலம் குத்து மதிப்பாக 150 ஆண்டுகளாக இருக்கலாம்.

எனவே பத்துப்பாட்டு 1-ம் பாட்டுடைத் தலைவன், சேரமான் உதியஞ்சேரலாதன் காலம் பொ.ஆ.மு. 5ம் நூற்றாண்டளவு என்று கொள்ளலாம் என்பது சான்றுகளுடன் விளக்கப்பட்டது.

## சோழ மன்னரும் அரச விரிவாக்கமும்:

சோழர், முடியுடை மூவேந்தர்களுள் ஒரு குலத்தவர். 'சோழ நாடு சோறுடைத்து' என்பது பழமொழி. 'சோறுடைய நாடு' என்பதே காலக்கிரமத்தில் 'சோழநாடு' என மருவியது என்பாரும் உளர். சோழர் தென் இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட பகுதியை வரலாற்றுக் காலம் முதலாக ஆண்டு வருகிறார்கள். சோழர் அரசு, காவிரி ஆற்றுப் படுக்கைப் பகுதியிலேயே தோன்றியிருக்கவேண்டும். இன்று தஞ்சை, திருச்சி என்று அறியப்படும் மாவட்டங்களைக் கொண்டது சோழநாடு. இவர்கள் தோற்றம் பற்றிய ஊகங்களே தவிரத் தெளிவான சான்றுகள் எதுவும் இல்லை.

சோழர்களின் இருப்புப் பற்றித் தொல்காப்பியம் 'போந்தை வேம்பே ஆரென வரூஉம்' (தொல். பொருள். 63) என்றும், 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்' (தொல். பொருள். 384) என்றும் தெளிவாகக் கூறுகிறது. எனவே, சோழர் அரசு தொல்காப்பியர் காலத்திலே அறியப்பட்டிருக்கிறது. சுதந்திரமான சோழர் இருப்பு, தமிழ் நாட்டு எல்லை கடந்து, வடநாட்டு அசோக மன்னனாலும் அறியப்பட்டமை அவனது கிர்னார் இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு மூலம் அறியப்படுகிறது.

குஜராத் மாநிலம் கத்தியவாரில் கிடைக்கப்பெற்ற அசோகரது கிர்-னார் (Girnar) இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு, அசோக மன்னனால், பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டில், அசோகன் பிராமியில் எழுதப்பட்டது. இக்கல்வெட்டு, பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டில் தமிழ் நாட்டைச் சுதந்திரமாக ஆண்ட சோழர், பாண்டியர், கேரளர், வேளிர் குல மன்னனான அதியமான் முதலியோர் தொடர்பான அரிய செய்திகளைத் தாங்கி நிற்கிறது.

சங்க இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், பிறநாட்டார் குறிப்புக்கள், தொல் ஆய்வுத் தகவல்கள் ஆகியவை தென்னிந்தியாவின் அரச உருவாக்க கால வரலாற்றை அறியும் சான்றுகளாக உள்ளன.

சேர, சோழ, பாண்டிய அரசுகள் பொ.ஆ.மு. 711-ம் ஆண்டுக் காலப்பகுதியில் உருவாகி, விரிவாக்கம் காணத் தொடங்கி விட்டமையைத் தொல்காப்பியம் வாயிலாக அறியலாம்.

## கரிகாலனும் திருமாவளவனும்:

பட்டினப்பாலையின் பாட்டுடைத் தலைவன் திருமாவளவனும் பொருநர் ஆற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் கரிகாலனும் ஒருவரா அல்லது வெவ்வேறானவர்களா என்னும் ஐயம் பலரிடமும் பல காரணங்களினாலும் இருந்து வருகிறது. இது இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**முற்காலச் சோழ மன்னர்களுள் சிறப்பாக அறியப்படுபவன் கரி-கால சோழன். இவன் தந்தை இளஞ்செட்சென்னி. இவன், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாக வரலாற்றில் போற்றப்படுகி-றான். கரிகாலன், சோழகுலத்தை ஒரு குறுநில அரசிலிருந்து காஞ்சி முதல் காவிரி வரை பரவச் செய்தவன்,** சோழர் ஆட்சிப் **பரப்பை விரிவுபடுத்தியவனாக அறியப்படுகிறான்.**

கரிகாலன், பற்றிய குறிப்புக்கள், பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, பழமொழி நானூறு, கலிங்கத்துப் பரணி முதலிய இலக்கியங்களில் காணப்படுகின்றன. இவற்றில், சங்க இலக்கியங்களான பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, புறநானூறு முதலிய இலக்கியங்களே இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

திருமாவளவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, உருத்திரங்கண்ணனார் என்னும் புலவரால் அகத்திணை மரபில் பாடப்பட்ட பட்டினப்பாலை என்னும் இலக்கியம் இலக்கியச் சிறப்புடன் வரலாற்றுச் சிறப்பும் மிக்கது.

## பட்டினப்பாலை பாடப்பட்ட காலப் பின்னணி:

அரசுகள் - சேர, சோழ, பாண்டிய அரசுகள் உருவாகிவிட்டன. அரச விரிவாக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

வணிகம் - கடல் வாணிபம் சிறப்புற்றிருந்த காலம். காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகப் பொருட்களுக்கு சோழரின் அரச முத்திரை பொறிக்கப்பட்ட காலம்.

திருமாவளவன் பற்றிப் பட்டினப்பாலை தரும் செய்திகள்...

**திருமாவளவன் பிறப்பு**

*'.......கூர் உகிர்*
*கொடுவரிக் குருளைக் கூட்டுள் வளர்ந்தாங்குப்*
*பிறர் பிணியகத்து இருந்து பீடு காழ் முற்றி,*
*அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று*

*பெருங்கை யானை பிடிப் புக்காங்கு,*
*நுண்ணிதின் உணர நாடி நண்ணார்*
*செறிவுடைத் திண் காப்பு ஏறி, வாள் கழித்து,*
*உருகெழு தாயம் ஊழின் எய்தி*

- பட்டினப்பாலை (220-227)

திருமாவளவன், புலிக்குட்டி பிறர் கட்டுப்பாட்டில், கூட்டினுள் வளர்ந்தது போல வளர்ந்தான். குழியில் விழுந்த யானை, அந்தக் குழியைத் தூர்த்து தன் பெண் யானையிடம் சென்றது போல, பகைவரின் காவல் மிக்க அரணைக் கடந்து, தனக்கு உரிமையு டைய (தாயம்) அரசை முறைப்படி அடைந்தான் என்று இப்பாடல் பகுதி கூறுகிறது.

பட்டினப்பாலை தரும் திருமாவளவனின் பிறப்புப் பற்றிய தகவல் பொருநர் ஆற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனான கரிகால னது பிறப்புப் பற்றிய தகவலுடன் ஒத்துப் போகிறது. திருமாவள வனின் பிறப்பு, அவன் ஒரு சோழ மன்னன், அவன் காலக் காவி ரிப்பூம்பட்டினம் பற்றிய தகவல்கள் மட்டுமே கரிகாலனுடன் ஒத் துப் போகின்றன.

கரிகாலனும் திருமாவளவனும் ஒருவரா?

## பட்டினப்பாலை பாடிய நோக்கம்:

தனது அரசை நிலைநாட்டிய மன்னன் ஒருவன், அடுத்து அரச விரிவாக்கத்தில் ஈடுபட்டிருப்பதைப் பட்டினப்பாலை தெளிவாகக் காட்டுகிறது.

### காவிரியின் பெருமையும் சோழ நாட்டின் வளப்பமும்

*வசையில்புகழ் வயங்குவெண்மீன்*
*திசைதிரிந்து தெற்கேகினும்*
*தற்பாடிய தளியுணவிற்*
*புட்டேம்பப் புயன்மாறி*
*வான்பொய்ப்பினும் தான்பொய்யா*
*மலைத்தலைய கடற்காவிரி*
*புனல்பரந்து பொன்கொழிக்கும்*
*விளைவறா வியன்கழனிக்*
*கார்க்கரும்பின் கமழாலைத்*
*தீத்தெறுவிற் கவின்வாடி*

- பட்டினப்பாலை 1-10

வெள்ளி, வடக்கே இருக்கும் போது மழை பெய்வதும் வெள்ளி, தெற்கே போகும் பொழுது மழை பெய்யாமையும் இயற்கை. அந்த நியதியிலிருந்து வெள்ளி, திசைமாறி, தெற்கே புகுந்தாலும், மழைத் துளிகளை அன்றி, நிலத்தில் விழுந்த நீரை உண்ணாத வானம்பாடிப் பறவை, மழையின் வருகைக்காகப் பாடினாலும். வான் தவறினாலும் தான் தவறாத காவிரி ஆறு தோன்றும் இடம், அதாவது தலைக்காவிரி, குடகுமலையாகும். மலையில் உற்பத் தியாகும் காவிரி ஆறு என்றும் வற்றாது, நீர் பாய்ந்து, பொன் கொழிக்கும் வயல்களை உடையது என்கிறது இப்பாடல் பகுதி. காவிரி ஆற்றைக் கடந்து ஆசிரியர் மருத நிலத்தின் செழிப்புக் காண அழைக்கிறார்.

காவிரி பாயும் நன்னாடாகையால் கரும்பு மிகுதியாக விளையும், கரும்பு ஆலைகளில் கருப்பம் சாறு காய்ச்சப்படும். ஆலைகளில் கரும்பின் மணம் மிக்க பாகு காய்ச்சப்படுவதால் வயலில் உயர்ந்து வளர்ந்திருந்த நெய்தல் பூக்கள் வாடும். வயல்களில் விளைந்த கதிர்களை உண்ட எருமைக் கன்றுகள் உழவர்களின் நெற்கூடுகளின் நிழலில் உறங்கும்.

தென்னை, வாழை, கமுகம் தோட்டங்களில் உற்பத்தியாகும் காய் களையும், மணம் வீசும் மஞ்சளையும், பல்லின மாமரங்களையும், குலைகளையுடைய பனையையும், கிழங்கையுடைய சேம்பையும், முளையையுடைய இஞ்சியையும் பாடிய புலவர் அடுத்ததாக, காவிரிப்பூம்பட்டினத்தின் செல்வச் செழிப்பைப் பாடுகிறார்.

காவிரிப்பூம்பட்டினத்தின் செல்வச் செழிப்பு மிக்க பெருநகரத்தின் பெரிய வீட்டு முற்றத்தில் பெண்கள், காய வைத்த பொருட்களை உண்ண வரும் கோழி மீது எறிந்த கனமான காதணிகள் முற்றத் தில் விழுந்து கிடந்தன. அவை, பொற்சிலம்பு அணிந்த சிறுவர் கள் உருட்டி விளையாடும், குதிரை பூட்டாமல் ஓட்டும் மூன்று உருளைகளையுடைய சிறு தேரின் வழியைத் தடுக்கும். இவ்வாறு தடுத்து நிறுத்தும் பகைவர் அல்லது வேறு பகை அறியாத பெரிய பல குடிகளையுடைய செழிப்பான கடற்கரை ஊர்களை யும் காட்டிச் செல்கிறார் புலவர்.

சிற்றூர் பலவற்றையுடைய பெரிய சோழ நாட்டில், உப்பங்கழிக-ளின் கரையில் உப்பைக் கூவி விலை பேசி பண்டமாற்றாகப் பெற்ற நெல்லுடன் வந்த வலிய படகுகள் கட்டப்பட்டிருக்கும். உப்பங்கழிகளைச் சூழத் தோட்டங்கள், செழிப்பான தோப்புக்கள் அவற்றிற்கு அப்பால் பூஞ்சோலைகள், அழகிய பொய்கைகள், இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தரும் இணை ஏரிகள் என்று இத்தனை அழகுகளையும் உடையது, சோழ நாடு என்கிறார் புலவர்.

### காவிரிப்பூம்பட்டினத்தின் அட்டில் சாலைகள்:

காவிரி ஆற்றையும் காவிரி ஆற்றின் கரையாகக் கண்டு வந்த காவிரி ஆற்று நாகரீகத்தையும் அனுபவித்த வாசகர்களைச் சோழ வளநாட்டின் வணிக நகரமான காவிரிப்பூம்பட்டினத்தின் உள்ளே அழைத்துச் செல்கிறார் புலவர்.

அறச்சாலைகள், அரசனுக்குச் சொந்தமானவை என்பதைப் பறை சாற்றுவனவாகப் புலிச் சின்னம் பொறிக்கப்பட கதவுகளை உடை யவை. செல்வம் தங்கும் பாதுகாப்பான மதிலை உடையவை, அறம் நிலவிய பெரிய அட்டில் சாலைகள். பெரிய மாட்டுக் கொட்டில்கள் பல காணப்பட்டன.

### காவிரிப்பூம்பட்டினத்தின் தவப்பள்ளிகளும் வேள்விச்சாலை களும்

திருமாவளவன் காலத்திலேயே சமண, பௌத்த மதங்கள் பரவத் தொடங்கிவிட்டன. தவசிகள் வாழும் இடங்கள், சடாமுடிகளுடன் விளங்கும் முனிவர்கள் வேள்வி வேட்டல் முதலியன பேசப்படுகின் றன. பல்வேறு மதங்களும் ஒன்று போல் பாதுகாக்கப்பட்டமை உணரக்கூடியதாக உள்ளது.

*‘தவப் பள்ளித் தாழ் காவின்*
*அவிர் சடை முனிவர் அங்கி வேட்கும்*
*ஆவுதி நறும் புகை முனைஇ, குயில் தம்’*

- பட்டினப்பாலை 53-55

### இனக் குழுக்கள் (செம்படவர்) வாழும் குப்பம்

பண்டைக் கால இனக் குழுக்களின் வாழ்க்கை முறை பேசப்படுகி றது. செம்படவரது உணவு முறைகள் பேசப்படுகின்றன. பரதவர், பெரிய பொது மன்றத்தில் பலருடன் கூடி, கையாலும் ஆயுதங் களாலும் போர்ப் பயிற்சி செய்வர் என்பது அறியப்படுகிறது.

இன்று, தொல்லியல் ஆய்வில் சிறப்பாகப் பேசப்படும் உறைகி ணறு பற்றிப் பட்டினப்பாலையில் ‘உறைகிணற்றுப் புறச்சேரி’ என்று பேசப்பட்டிருக்கிறது. உறைகிணறு என்பது மண்ணால் சுவர் போல சூழ வளைத்து ஓரடிக்கு மேல் உயரமாக்கிச் சூளையில் வைத்துச் சுட்டு எடுக்கும் குழாய் போன்ற, நீரைத் தேக்கி வைக் கும் ஒரு சாதனம். சுட்ட ‘உறைகளை’ நிலத்தை அகழ்ந்து ஒன் றன் மேல் ஒன்றாக அடுக்கிச் செய்வது உறைகிணறாகும்.

இன்று, அகழாய்வு மூலம் அறியப்படும் உறைகிணறு திருமாவள-வன் காலத்திலேயே நெய்தல் நில மக்களால் பயன்படுத்தப்பட் டிருக்கிறது.

உறைகிணற்றையுடைய குடியிருப்பில், பன்றிக் குட்டிகளுடனும் பல வகைப்பட்ட கோழிகளும் ஆட்டுக் கிடாய்களும் கவுதாரிக ளும் விளையாடுகின்றன.

நிறை நிலா நாட்களில் பரதவர்கள் ஆணும் பெண்ணுமாக உண் டும் ஆடியும் பாடியும் மகிழ்ந்திருப்பர். வயிரம் பாய்ந்த மரக் கொம்புகளை நட்டு அதில் மீன் வலைகளைக் காயவிட்டிருப்பர். குறுகிய கூரையையுடைய வீடுகளைக் கொண்ட குடியிருப்புக்க

ளில், வீடுகளின் நடுவில் மீன்பிடி வலை காயும், மணல் நிறைந்த முற்றங்களும் காணப்படும்.

தாழைமரத்தின் அடியில் காதலர்கள் கூடுவார்கள். பெண்கள், தாழையின் அடியில் உள்ள வெண்கூதாளத்தின் குளிர்ச்சியான மலர்களை அணிந்திருப்பர். நிறைமதி நாளும் மறைமதி நாளும்



**கீழடி உறைகிணறு - உறைகிணறு 25 சுடுமண் வளைகளும் 80 செ.மீ விட்டம், 380 செ.மீ உயரம் கொண்டது.**

‘உவா’ எனப்படும். உவா நாட்களில் கடல் கொந்தளிக்கும், அவ்விரு நாட்களிலும் பரதவர் மீன் பிடிக்கச் செல்வதில்லை. அவர்கள் கடற்கரையில் தம் மனைவியருடன் கூடி ‘அணங்கு விழா’ கொண்டாடுவார்கள். சுறா மீனின் கொம்பை நட்டு, சினையையுடைய சுறா மீனை அதில் குத்தி வைத்திருப்பார்கள். காதலர் உண்டு களித்து உடலுறவு கொள்வதைக் காட்டும் அடையாளச் சின்னம் சுறாமீன் கொம்பு. இது வீட்டில் நடப்பட்டிருந்தால் அவ்வீட்டிற்கு வேறு யாரும் செல்லமாட்டார்கள். பரதவ மக்களிடையே நிலவிய அழகிய பண்பாடு இங்கு கூறப்பட்டிருக்கிறது.

- உவா தவிர்ந்த ஏனைய நாட்களில் கூதாளம் பூவைச் சூடும் மீனவப் பெண்கள் அணங்கு விழா நாட்களில் தாழம்பூ அணிவார்கள்.
- கடலுக்குச் செல்லும் நாட்களில் கள் அருந்தாத ஆடவர்கள் அணங்கு நாட்களில் பனங்கள் அருந்துவர். பிற நாட்களில் நூலாடை உடுத்தும் பரதவப் பெண்கள் உவா நாட்களில் தழை ஆடை அணிவர்.
- வெட்சித் திணையின் துறைகளில் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறும் உண்டாட்டு புறத்திணைக்கு உரியது. ஆனால் இங்கு கூறப்படும் உண்டாட்டு ‘காதலர் இருவர் களிப்புடன் தனிமையை அனுபவிப்பது’ ஆகும்.
- கரிய பரதவர்கள், கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாது, பசிய தளிர் அணிந்த கரிய பெண்களோடு உண்டும் விளையாடியும் மகிழ்வர். இங்கு வாழ் மக்களின் நிறம் ‘கரியது’ என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

காவிரி ஆறு கடலோடு கலக்கும் இடம் புகார் நகரம். பெரிய மலையை அணைத்துக் கொள்ளும் மேகம் போல, தாயின் மார்பை அணைத்துக் கொள்ளும் குழந்தையைப் போல, காவிரி ஆறு நிறைந்த ஓசையுடன் கடலில் சங்கமமாகியது.

பண்டைய பழக்க வழக்கங்கள் சில இங்கே கூறப்படுகின்றன.

- பாரில் வீரச்சாவு அடைந்த வீரர்கள் நினைவாக நடுகல் நாட்டி அவ்வீரர்களைத் தெய்வமாக வழிபடும் வழக்கம் இருந்திருக்கிறது. இவற்றை ‘வீரக் கற்கள்’ என்பர். இவ்வழக்கம் உலகளாவிய பண்டை நாகரீகங்கள் அனைத்திலும் காணப்படுகிறது.
- நெய்தல் நில மக்கள் பரதவர். இவர்கள் தெய்வம் வருணன் சுறா மீனின் கொம்பை நட்டு, அதில் கடல் தெய்வமாகிய வருணன் இருப்பதாகக் கொண்டு வழிபட்டனர்.
- கடல் பொங்கி எழும் முழுநிலவு நாட்களில் பரதவர் கடலில் தொழிலுக்காகச் செல்லமாட்டார்கள்.

## காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி:

புகார்த் துறைமுகத்தில் கடலில் கொண்டு செல்லும் பொருட்களுக்கும் கப்பலில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கும் உல்கு எனப்படும் சுங்கவரி இறுக்கப்பட்டது. உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரத்தில் பெறும் வரி, அரச வருமானத்தில் முக்கிய பங்கு வகித்தது. உல்கு செலுத்திய பின் வரி செலுத்தியதற்கான முத்திரைப் பொருட்களில் குத்தப்பட்டது. கரையிலிருந்த பொருள்கள் கடலில் நிற்கும் நாவாயில் ஏற்றப்பட்டன.

ஏற்றுமதிக்காகவும், இறக்குமதியாகவும் வந்த மதிப்பு மிக்க பொருள்களின்மீது புலிச் சின்னம் பொறிக்கப்பட்டது. பின்னர் அவை மூட்டைகளாகக் கட்டிக் காப்பகத்தில் அடுக்கப்பட்டன. கண்ட மாத்திரத்திலேயே அச்சம் தரும் காவலாளிகள் அவற்றைக் காவல் காத்தனர்.

முத்திரை குத்தி முடியாத அளவுக்கு வாணிபப் பொருட்கள் குவிந்து கிடந்தன. வீதிகளில் குவிந்து கிடந்த பொருட்களில் அரசனுக்குச் சொந்தமானவற்றை ‘இறைவன் தொழில் மக்கள்’ காவல் காத்தனர்.

வேலேற்றிய வண்டி அப்பொருள்களைக் காக்கும் இடங்களில் நிறுத்தப்பட்டிருந்தது. தினமும் பகல் முழுவதும் உல்கு செய்யப்பட்டது. உல்கு செய்யச் செய்ய உல்கு செய்யப்படாத பொருள்களின் இருப்பு குறையவே இல்லை.

பட்டினப்பாலையில் வணிகத்தின் பொருட்டு வந்து இறங்கிய பொருட்களை ஆசிரியர் பட்டியல் இடுகிறார்.

*‘நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்*
*காலின் வந்த கருங்கறி மூடையும்*
*வடமலை பிறந்த மணியும் பொன்னும்*
*குடமலை பிறந்த ஆரமும் அகிலும்*
*தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்,*
*கங்கை வாரியும், காவிரிப் பயனும்,*
*ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,*
*அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி,*
*வளம் தலை மயங்கிய நனந்தலை மறுகின்*

- பட்டினப்பாலை (185-193)

ஈழத்திலிருந்து உணவுப் பண்டம் வரும் வழக்கம் இல்லாதிருந்த காரணத்தால், ஈழத்து உணவு என்பதை ஈழத்து உளவு என்று கொள்ளலாம் என்பர் ஆய்வாளர்கள். இது மேலும் ஆய்வுக்கு உரியது.

தொடரும்.



selvanayaki.s@thaiveedu.com

# தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 32

- நா. சுப்பிரமணியன்

## ‘திருக்குறள் ஆய்வுகள்’ என்ற பார்வையின் தொடர்ச்சி...

திருக்குறள் தொடர்பாக நிகழ்ந்துள்ள ஆய்வுகள் பற்றிய கடந்த நான்கு கட்டுரைகளிலே அவ்வாக்கத்தின் ‘மூலபாடநிலை’, ‘அவ்வாக்கமானது தமிழ் மரபிலே பெற்றுவந்த கவனிப்பும் கணிப்புகளும்’, ‘அவ்வாக்கத்தைப் பேணும் நிலைகளில் முன்வைக்கப்பட்ட பல்வகைப் பார்வைகள்’ மற்றும் ‘திருக்குறள் அறிவின் ஊற்று’ என்ற பேராசிரியர் டாக்டர் அரங்க. இராமலிங்கம் அவர்களின் கட்டுரையாக்கம் ஆகியன பற்றிய அவதானிப்புகள் முன்வைக்கப்பட்டன. அடுத்து இங்கு இரண்டு விடயங்கள் கவனத்துக்கு இட்டுவரப்படவுள்ளன. அவற்றுளொன்று, திருக்குறளை ஒரு ‘இலக்கிய ஆக்கமாகக் காண்பது’ பற்றியது. இன்னொன்று, ‘அந்நூலைச் சமயங்களுடன் தொடர்புபடுத்தும் வகையிலான சிந்தனைகளின் பொருத்தப்பாடு’ பற்றியதாகும். அவ்வகையில் முதலிலே திருக்குறளை ஒரு இலக்கியமாகக் காணும் முறைமை பற்றி நோக்கலாம்.

### திருக்குறள் - ஒரு இலக்கியமாக:

திருக்குறளை ஒரு அறநூலாகக்காணும் முறைமையே பொதுவழக்காக நிலவிவருவதாகும். அதனை ஒரு அறநூல் என்பதற்கான பார்வைக்கு அப்பால் இலக்கியமாகவும்கூட தரிசிக்கும் பார்வைகள் ஆய்வாளர்கள் ஒரு சாராரிடையில் மட்டுமே நிலவிவருவதாகும். அதனை ஒரு இலக்கிய ஆக்கமாகவும் தரிசிப்பதற்கான அடிப்படைகள் இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படவுள்ளன. இப்பொருண்மை சார்ந்து இத்தாய்வீடு இதனாலேயே முன்னர் நான் எழுதிவந்த, ‘இலக்கியத் திறனாய்வியலின் இயங்கு நிலை’ என்ற தொடரிலே 39வது கட்டுரையில்(பெப்பிரவரி 2017) சில கருத்துகளைப் பதிவுசெய்திருந்தேன். அவற்றை மேலும் தெளிவுறுத்தும் வகையிலேயே எனது இவ்வெடுத்துரைப்பு அமையவுள்ளது.

அறநூல் என்பது அறம் மற்றும் ஒழுக்கம் ஆகியனசார்ந்த அறிவூட்டலை நோக்காகக் கொண்டமைவது. அவ்வகையில் சிந்தனை மற்றும் போதனை முறைமைகள் சார்ந்த செயற்பாடாகத் திகழ்வதே அறநூலின் பொதுப்பண்பாகும். அவ்வகையில், ‘செய்யத்தக்கன மற்றும் பேணத்தக்கன இவையிவை’ எனவும், ‘விலக்கத்தக்கவை மற்றும் தவிர்க்கப்படவேண்டியன இவையிவை’ எனவும் உணர்த்தும் முறைமையிலேயே உலகின் பலமொழிகளிலும் பெரும்பாலான அறநூல்கள் எழுந்துள்ளன. தமிழிலே இம்முறைமைக்கான முக்கிய சான்றுகளாக நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், பழமொழி நானூறு, ஆசாரக்கோவை, அறநெறிச்சாரம், நல்வழி, நன்னெறி, உலகநீதி முதலான பலவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான தமிழ் அறநூல்மரபிலே திருக்குறளானது சற்று வேறுபட்ட ஒரு ஆக்கமாகத் திகழ்கிறது என்பதே இங்கு நமது கவனத்துக்குரிய செய்தியாகிறது. அது செய்யத்தக்கவை மற்றும் விலக்கத்தக்கவை இவையிவை என நேரடியாகவே கூறுவதோடு மட்டும் அமையாமல் அவற்றை வாழ்வியல் அநுபவங்களுக்கு மிக நெருக்கமாக இட்டுவரவும் முயன்றுள்ளது. அவ்வகையில் அதன் குறட்பாக்களுட்சில இலக்கியம் என்ற கணிப்புக்கும் உரியவாகின்றன. அதுமட்டுமன்றி, அதன் கட்டமைப்பிலே ஒருபகுதியான ‘காமத்துப்பால்’ என்ற பெரும்பகுதியிலுள்ளனவாகிய 250 குறள்களும் அற - ஒழுக்கப் போதனை என்ற வரையறைக்குள் வாராதவை என்பதும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. இந்த மூன்றாவது பால்தவிர அறத்துப்பால் மற்றும் பொருட்பால் என்ற தலைப்பிலான பெரும்பகுதிகளிலமைந்த 1080 குறள்களே திருக்குறளை ஒரு அறநூலாகக்காட்டி நிற்பன என்பது நினைவிலிருத்த வேண்டிய செய்தியாகும்.

இவ்வாறு குறிப்பிடும்பொழுது அறநூல் என்பதற்கும் இலக்கியம் என்பதற்கும் இடையிலான முக்கிய வேறுபாட்டம்சங்களைச் சுருக்கமாகவேனும் இங்கு சுட்டுவது அவசியமாகிறது. அறநூலானது அறிவூட்டுதலை மட்டுமே நோக்காகக் கொண்டது. அவ்வகையில் அது வாசகருடைய சிந்தனையைச் செம்மைப்படுத்தும் வகையிலமைவது. சுருங்கக் கூறுவதானால் அது போதிப்பவரின் அறிவு மற்றும் அநுபவத் திரட்சிகளிலிருந்து - அதாவது அறிவார்ந்த மூளையிலிருந்து - வாசகரின் மூளையை நோக்கிய எடுத்துரைப்பாக அமைவதாகும். ஆனால் இலக்கியம் என்பது மூளைகளை மையப்படுத்திய தொடர்பாடலன்று. மாறாக அது, இதயங்களின் உரையாடலாகும். ஒரு இதயத்தினின்று இன்னொரு இதயத்தை நோக்கிய உணர்வுப்பரிமாற்ற நிலையிலேயே இலக்கியம் உருவாகிறது. அதாவது ஒரு இதயமானது தனது அநுபவங்களின் திரட்சியைச் சிந்தாமற் சிதறாமல் ஏனைய இதயங்கள் உணரும்வகையில் - வழங்கும் வகையிலான வெளிப்பாட்டு நிலையிலேயே ஒரு ஆக்கம் இலக்கியமாக வடிவெய்துகிறது.

அறநூலுக்கும் இலக்கியத்துக்குமுள்ள வேறுபாட்டம்சங்கள் தொடர்பான விளக்கத்திற்கு இச்சுருக்கக் குறிப்பே போதுமெனக் கருதுகிறேன். அடுத்து, திருக்குறளில் அறங்கூறவந்த குறட்பாக்களிற் சில இலக்கியப் பண்புகளுடனும் திகழ்கின்றமை பற்றி இங்கு நோக்கலாம். இவ்வகையில் பின்வரும் மூன்று குறள்கள் இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படவுள்ளன.

*அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்*

- குறள்: 64

*இன்றும் வருவது கொல்லோ நெருநலும்*
*கொன்றது போலும் நிரப்பு*

- குறள்: 1048

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்

- குறள்: 1062

இக் குறள்கள் முறையே புதல்வரைப் பெறுதல், நல்குரவு, இரவச்

சம் ஆகிய அதிகாரங்களில் இடம்பெறுவன. இவற்றுள் முதற்குறளானது பிள்ளைச் செல்வங்களால் திளைக்கும் பெற்றோரின் அனுபவப் பதிவாகத் திகழ்கின்றமை வெளிப்படை. 'தமது குழந்தைகள் சிறு கைகளால் அளாவியுண்ட உணவுகளில் அவர்கள் அருந்தியவை போக மீதமிருந்தவற்றைச் சுவைத்து மகிழும் தாய் தந்தையரை இக்குறளில் நாம் தரிசிக்கிறோம்.

தமிழ்மரபிலே பிள்ளைச் செல்வங்கள் சார்ந்த இத்தகைய அநுபவ நிலையைத் திருக்குறளுக்கு முற்பட்ட புறநானூறு தொகுப்பிலும் கூட எம்மால் தரிசிக்கமுடிகிறது.

***'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி***
***இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்***
***நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்***
***மயக்குறும் மக்களை இல்லோர்க்குப்***
***பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே'***

- புறநானூறு: 188

என அமைந்த மேற்படி கவிக்குரல் பாண்டியன் அறிவுடைநம்பி என்ற கவிஞனுடையதாகும். மேற்படி கவிஞனின் உணர்வுநிலைகள் அடுத்த தலைமுறைகளிலும் தொடர்ந்துள்ள வரலாற்றையே மேற்சுட்டிய முதற் குறள் நமக்கு அடையாளங்காட்டிநிற்கின்றமை உய்த்துணரக்கூடியதேயாகும்.

ஏனைய இரு குறள்களும் வறுமையின் கொடுமை பற்றிய அநுபவப்பதிவுகளாகும். மேற்படி இரண்டாம் குறள் பசித்துயரால் துவண்ட ஒரு ஏழையின் அவலநிலையின் தரிசனமாகும்.

***'பசித்துயரால் நான் நேற்று***
***துவண்டு செத்துக்கொண்டிருந்தேன்.***
***இன்றுங்கூட நான் அத்தகைய துயரை***
***அநுபவிக்க வேண்டிவருமோ?'***

என அவ்வேழை துவண்டு துடிப்பதை இது நமது கண்முன் இட்டு வருகிறது.

மூன்றாவது குறள் 'பசித்துயர'த்தின் துடிப்பன்று. அதற்கும் அப்பாலான ஒரு நிலையில் வீறு கொண்டெழும் 'மனக் குமுற' லின் - வெளிப்பாடாகும்.

'பசி காரணமாக ஒருவர் பிச்சையேற்றுத்தான் வாழவேண்டும் என்ற நிலை இந்த உலகில் இருக்குமானால் இவ்வுலகைப் படைத்த இறைவனேகூட கெட்டலைந்து திரியட்டும்'

என ஒரு ஏழை இறைவனுக்கே சாபமிடும் காட்சி இங்கு நமது கண்முன் வருகிறது. இதிலே வள்ளுவன் ஒரு அறவியலாளன் என்ற ஒளிவட்டத்துக்கு அப்பால் சராசரி மானிடனாக எம் அருகில் வந்து நிற்பதை - எமது இதயத்தைத் தொடுவதைத் தெளிவாகவே உணர்கிறோம். இக்குறளை வாசிக்கும்போது 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் இச்செகத்தினை அழித்திடுவோம்' என்ற மகாகவி பாரதியின் ஆவேச வரிகள் நினைவில் வருவதைத் தவிர்க்க முடியாது. (இக்குறளிலே 'உலகியற்றியான்' என்ற சொல்லானது சட்டங்களை இயற்றி நாடாளுபவனாகிய வேந்தனையே சுட்டிநிற்பது என்ற கருத்தும் உள்ளது.)

மேற்படி முதலாவது குறளானது குடும்பவாழ்வின் முக்கிய பேறாக அமைவது குழந்தைப்பேறு என்பதை உணர்த்தும் வகையில் அமைந்தது. அவ்வகையில் இல்லறம் தரக்கூடிய மனநிறைவைச் சுட்டி உணர்த்துவதாகும். ஏனைய இரு குறள்களும் வறுமையின் கொடுமையை - குறிப்பாகப் பசித் துயரால் ஏற்படும் சமூக அவலங்களைப் போக்கவேண்டுமென்பதான அறம்சார் சீற்றத்தின் வெளிப்பாடுகளாகும். இவ்விரு குறள்களிலும் அறவுணர்வானது போதனை நிலையைக்கடந்து, செயலூக்கத்துக்கான உணர்வெழுச்சியைத் தூண்டும் வகையிலும் அமைந்துள்ளமை வெளிப்படை.

அடுத்து, 'காமத்துப்பால்' என்ற பகுதி ஒரு இலக்கியமாகத் திகழ்கின்றமை பற்றிநோக்குவோம். இங்கே பரிமேலழகர் உரையுடனான விளக்கம்சார்ந்தே எனது இப்பார்வை முன்வைக்கப்படுகிறது.

'காமத்துப்பால்' என்ற தலைப்பிலமைந்துள்ள 25 அதிகாரங்களும் (250 குறள்கள்) தமிழரின் தொன்மையான இலக்கிய மரபு சார்ந்ததாகும். அம் மரபின் ஒரு பகுதியான அகத்திணை சார்ந்த இலக்கிய ஆக்கம் இது. சங்ககால அகத்திணைப் பாடல்கள் என நமக்குக் கிடைப்பவை திருமணத்துக்கு முற்பட்ட காதலுறவுசார் உணர்வெழுச்சிகளையும் மணவாழ்க்கையிலிருந்து தொடரும் கணவன் - மனைவி உறவுசார் உணர்வம்சங்களையும் உள்ளடக்கங்களாகக் கொண்டவை என்பதும் பொதுவாக நாமறிந்த செய்திகளேயாம்.

குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை முதலான முக்கிய சங்கத் தொகை நூல்களில் தனித்தனிப் பாடல்களின் ஊடாக வெளிப்பட்டுநின்ற மேற்படி உணர்வம்சங்கள் பின்னாளில் நாடகக் காட்சிபோல ஒன்றன்பின் ஒன்றாகப் பொருட்பொருத்தமுற இணைக்கப்பட்டுவந்த, ஒரு வரலாற்றின் ஒரு கட்டத்தையே திருக்குறளின் காமத்துப்பால் நமது தரிசனத்துக்கு முன்வைத்துள்ளது. அவ்வகையிலே 250 குறள்கள் கொண்ட இப்பகுதியானது பின்னாளில் உருவான 'கோவை' என்ற சிற்றிலக்கிய வகையின் முன்னோடி முயற்சி என்பதான கணிப்பிற்குரியதாகிறது. மேற்படி அவதானிப்பைத் தெளிவுறுத்தும் நோக்கில் மேலும்சில விளக்கங்கள் இங்கு அவசியமாகின்றன.

சங்க அகப் பாடற்பரப்பை அவற்றின் உள்ளடக்கநிலைகள் சார்ந்து, 'களவு', 'கற்பு' என இரு வகைப்படுத்தி நோக்குவதே பண்டைய மரபாகும். 'களவு' என்பது திருமணத்துக்கு முற்பட்ட காதலுறவுசார் உணர்வெழுச்சிகளையும் 'கற்பு' என்பது மணவாழ்க்கையிலிருந்து தொடரும் கணவன் - மனைவி உறவுசார் உணர்வம்சங்களைக் குறிப்பனவாகும். இவ்வாறான வகைப்பாட்டு முறைமையையே தொல்காப்பியம் முதலிய பண்டைய இலக்கணநூல்கள் நமக்கு அறியத்தருகின்றன.

இங்கே நாம் நோக்கும் திருக்குறளின் 'காமத்துப்பால்' பகுதியும் மேற்சுட்டிய 'களவு' மற்றும் 'கற்பு' என்ற வகைமையிலேயே அதாவது 'களவியல்' மற்றும் 'கற்பியல்' என்ற வகைப்பாட்டிலேயே பரிமேலழகரால் நமது பார்வைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அதிலே முதல் எட்டு அதிகாரங்களும் 'களவிய'லாகவும் பின்னைய 17 அதிகாரங்களும் 'கற்பிய'லாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதனை நோக்கும்போது சங்க இலக்கியங்கள் தோற்றுவித்த படைப்புமுறைமையானது ஒரு 'புலமை மரபாக' உறுதிபெற்று வந்த வரலாற்றின் ஒரு கட்டத்தையே 'காமத்துப்பால்' நமது தரிசனத்துக்கு முன்வைக்கிறது என்பதை உய்த்துணர முடிகின்றது. இவ்வகையிலேயே 'காமத்துப்பால்' என்ற பகுதியானது சங்க இலக்கிய மரபின் ஒரு பகுதியான அகத்திணைப்பாடல் மரபு சார்ந்து உருவான ஆக்கம் என்பதான கணிப்புக்குரியதாகிறது.

'காமத்துப்பா'லை இவ்வாறு அகப்பொருள்மரபு சார்ந்த ஆக்கமாக நாம் தரிசிக்கும் நிலையில் சங்கப்பாடல்களில் அகப்பொருள் வெளிப்படுத்தப்பட்ட முறைமைகளுக்கும் திருக்குறளானது அதனை எடுத்துரைத்துள்ள முறைமைக்கும் இடையிலான ஒரு முக்கிய வேறுபாட்டம்சத்தையும் கவனத்துட்கொள்வது அவசியமாகிறது.

சங்கப்பாடல்களிலே அகத்திணைச் சித்தரிப்பானது பெரும்பாலும் தனித்தனி உணர்வுப் படிமங்களாக குறித்த சூழல்சார்ந்த உணர்வெழுச்சிகளின் வார்ப்புகளாக - வெளிப்பட்டனவாகும். குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை என்பனவாக

மேலே நாம் நோக்கிய முக்கிய சங்கத்தொகை நூல்களில் நாம் காணும் நிலை இதுவே. இவற்றில் பாடல்கள் 'தனித்தனி உணர் வுச் சித்திரங்க'ளாகவே பல்வேறு புலவர்களால் தனித்தனிச் சூழ்நி லைகளை மையப்படுத்திப் பாடப்பட்டவையாகும்.

ஆனால், திருக்குறளின் 'காமத்துப்பால்' புலப்படுத்திநிற்கும் மேற் சுட்டியவாறான தனித்தனி உணர்வுப் படிமங்கள் ஒன்றன்பினொன் றாகப் பொருட்பொருத்தமுறத் தொகுக்கப்பட்டவையாகும். அதா வது, பல்வேறுபட்ட உணர்வம்சங்களையும் அருகருகே பொருத் திக்காட்டும் முயற்சியினூடாக ஒரு நாடகப் பண்புடைய கட்ட மைப்பு நிலையில் அந்த அகப்பொருட்காட்சிகள் தொடர்கின்றன. இங்கே அக்காட்சிகளை ஒரே புலவரே - அதாவது திருவள்ளுவரே - மேற்கொள்கிறார். இவ்வாறான செயற்பாங்கைத் தெளிவுறுத்தும் வகையில் மேலதிக விளக்கமொன்றை முன்வைப்பது இங்கு அவ சியமாகிறது.

காமத்துப்பாலின் முதலாவது அதிகாரம் தகையணங்குறுத்தல் என்ற தலைப்புடையது என்பதறிவோம். இதிலமைந்த பத்துக் குறள்களும் பருவப் பெண்ணொருத்தியைக் கண்டமாத்திரத்தில் இளைஞனொருவனின் உளத்திலெழும் காமஞ்சார் மனக்கிளர்ச்சிக ளைக் காட்சிப்படுத்துவன. அடுத்தகட்டமானது அவள் தன்னை விரும்புகிறாள் என்பதை அவன் உணரும் நிலையாகும். இதுவே குறிப்பறிதல் என்ற இரண்டாம் அதிகாரத்தின் சாராம்சம் இதுவே. மூன்றாவது கட்டமானது இருவரும் இணைந்து இன்புறும் நிலையா கும். இதுவே புணர்ச்சி மகிழ்தல் என்ற மூன்றாமதிகாரமாக அமைந்துள்ளது. இவ்வாறாக உணர்வுகள் அவற்றின் தொடர்பி லான நிகழ்வுகளும் ஒன்றோடொன்று தொடரும்வகையில் காட்சிப் படிமங்களாக விரிவுபெற்றுச் செல்லும் படைப்பாக்கமுறையே இங்கு நாடகப்பாங்கு எனச் சுட்டப்பட்டுள்ளது. இவ்வாறான எடுத் துரைப்பால் காமத்துப்பாலின் 25 அதிகாரங்களும் குறித்த ஆண்- பெண் ஆகிய இருவரின் அநுபவங்களின் பதிவுகளாக கதைபோ லவே தொடர்வதைக் காணலாம்.

இவ்வாறு தனித்தனி உணர்வம்சங்கள் தொடரும் படைப்பாக்க முறைமையானது சங்ககாலத்திலேயே உருவாகிவிட்ட ஒன்றாகும். குறிப்பாகப் பத்துப்பாட்டு தொகுப்பில் இடம்பெற்றுள்ள முல் லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை ஆகியவற்றில் குறித்த ஒரு சூழல்சார் உணர்வம்சங்கள் நாடகக்காட்சி போலத் தொடர்வதை நோக்கியுணரமுடியும். அதாவது குறுந்தொகை, நற் றிணை முதலியவற்றில் இடம்பெற்றுள்ள பாடல்களில் தனித்தனி யாக வெளிப்படத்தொடங்கிய குறிப்பிட்ட திணை சார் உணர்வு கள் பலவும் ஒன்றோடொன்று பொருட்பொருத்தமுற இணைந்து கதைபோலத் தொடர்வதை மேற்சுட்டிய முல்லைப்பாட்டு, குறிஞ் சிப்பாட்டு, நெடுநல்வாடை ஆகியவற்றில் நோக்கலாம். இது சங்க காலத்திலே படைப்பாக்க நிலையிலேயே நிகழத்தொடங்கிவிட்ட ஒரு வளர்ச்சிப்போக்காகும். இவ்வாறான வளர்ச்சிப்போக்கின் இன் னொரு வளர்ச்சிக்கட்டத்தையே திருக்குறளின் மேற்படி 'காமத்துப் பால்' கட்டமைப்பானது நமக்குக் காட்சிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு காமத்துப்பால் புலப்படுத்திநிற்கும் படைப்பாக்க முறை மையின் இன்னொருகட்ட வளர்ச்சியாகவே பின்னாளிலே, 'கோவை' என்ற இலக்கியவகை உருவாகியுள்ளது என்பதே தமிழிலக்கிய வரலாறு தரும் செய்தியாகும். கி.பி. 6ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட இலக்கியவரலாற்றில் இவ்வாறான ஆக்கமுறைமையை நாம் தரி சிக்கிறோம். முறையே 7ம் - 9ம் நூற்றாண்டுகளில் எழுந்தனவாக அறியப்படும் பாண்டிக்கோவை மற்றும் திருக்கோவையார் (திருச் சிற்றம்பலக் கோவை) ஆகியனவே இவ்விலக்கிய வகையின் தொன்மையான சான்றுகளாக எமக்குக் கிடைக்கின்றன. திருக்கு றள் காமத்துப்பாலானது அகப்பொருள்சார் உணர்வம்சங்களை 250 குறள்களுக்குள் அடக்கியது. கோவை என்ற இலக்கியவகை யிலே மேற்படி உணர்வம்சங்கள் 'கட்டளைக்கலித்துறை' என்ற யாப்புவகைசார் 400 பாடல்களாக விரிவுபெற்றுச் சென்றுள்ள மையை காணமுடிகிறது. அவ்வகையிலேயே திருக்குறளின் 'காமத் துப்பா'லானது 'கோவை' என்ற சிற்றிலக்கியவகையின் முன்னோடி முயற்சி என்பதான கணிப்பிற்குரியதாகிறது.

திருக்குறளானது அறநூலாக மட்டுமன்றி இலக்கியமாகவும் கணிக் கப்படுகின்றமை தொடர்பான விளக்கங்கள் மேலே இதுவரை முன் வைக்கப்பட்டன. இவ்வாறாக, திருக்குறளை இலக்கியமாகக் காண்பது தொடர்பில் அண்மைக்காலத்தில் ஆழமாகச் சிந்தித்த வர்களில் ஒருவர் எழுத்தாளர் திரு. ஜெயமோகன் அவர்கள். இத் தொடர்பிலே அவர் 'குறள்நீதி என்னும் அழகிய கவிதை' என்ற தலைப்பிலே தந்துள்ள விளக்கங்கள் (jeyamohan.in February 5,2009) நமது கவனத்துக்குரிய முக்கியத்துவமுடையனவாகும். அவருடைய ஒரு கூற்றை இங்கு மேற்கோளாகத் தர விழைகி- றேன்.

'திருக்குறளிலே ஆரம்பம் முதலே ஆசிரியனின் இருப்பு வெளிப் பட்டபடியே இருக்கிறது. ஆசிரியரின் கற்பனைத்திறன் நுண்ணு ணர்வு, அவனுக்கேயுரிய தரிசனம் ஆகியவற்றை நாம் குறளிலே காணமுடிகிறது. ஆகவேதான் குறள் ஒரு மாபெரும் நீதிநூல் என் பதுடன் மாபெரும் கவிதை நூலாகவும் நம் மனங்களில் பதிந்தி ருக்கிறது. தன் மகத்தான கவித்துவத்தின் மூலமே குறள் சுருதி யாக ஆகிறது. மானுடத்தின் மகத்தான மூலநூல்களில் ஒன்றாக ஆகிறது.'

திருக்குறளை ஒரு இலக்கியமாகவும் காணும் முறைமை தொடர் பான விளக்கம் இத்துடன் நிறைவுக்கு வருகிறது. அடுத்து, 'அந் நூலைச் சமயங்களுடன் தொடர்படுத்தும் சிந்தனைகளின் பொருத் தப்பாடு' பற்றி நோக்கலாம்.

திருக்குறளைச் சமயங்களுடன் தொடர்புறுத்தும் சிந்தனைகளின் பொருத்தப்பாடு தொடர்பாக...

சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல்கூறிப் பொருள் இது என்ற வள்ளுவர்...' என கல்லாடம் என்ற அகத்திணையாக்கம் குறிப்பிட்டுள்ளது (14:20-21) என்பதை முன்னைய கட்டுரையிலே நோக்கியுள்ளோம். அதாவது திருக்குறளைச் சமயநோக்கில் அணு கவேண்டியதில்லை என்பதும் அது உலகியலுக்கான ஒரு ஆக்கம் என்பதுமான சிந்தனைகள் தமிழ்க் கல்வியுலகிலே முன்பிருந்தே நிலவிவந்துள்ளன. இன்றுவரை நிலவிவருகின்றன என்பதும் வெளிப்படை. அதே வேளை அவ்வாக்கத்தைக் குறித்த சில சம யங்களுடன் சார்த்தி விளக்கம்தரும் முயற்சிகளும் திருக்குறள் ஆய்வுச்சூழலில் நிலவிவருகின்றது என்பதும் நாம் பொதுவாக அறிந்த செய்தியேயாகும்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வோரில் ஒரு சாரார் - பெரும்பகுதியினர் - திருக்குறளின் உருவாக்கப் பின்புலத்தை அறியும் ஆய்வியல் ஆர்வத்தால் மட்டும் வழிநடத்தப்படுவோரா வர். இவர்களே பெரும்பான்மையினராவர். சிறுபான்மையினரான இன்னொரு சாரார் திருக்குறளைத் தமது சமயத் தத்துவ சிந்தனை களுக்கு மிக நெருக்கமாக இட்டுவரும் ஆர்வத்துடன் மட்டும் செயற்படுபவர்களாவர். இவ்வாறான இவர்களின் செயற்பாடுகளுள் சில, திருக்குறளுக்குத் தத்தமது சமயங்களில் உரிமை கோருவ தான 'சமய அரசியல் நடவடிக்கைகளாக'வும் பரிணமித்துள்ளன என்பதைத் திருக்குறட் பார்வைகள் பற்றிய சமகால வரலாறு நமக் குத் தெளிவாகவே உணர்த்தி நிற்கின்றது. மேற்குறித்தவாறான பார்வைகள் மற்றும் இயங்கு நிலைகள் ஆகியவற்றின் பொருத்தப் பாடுகள் பற்றிய மதிப்பீட்டுநிலையிலான குறிப்பொன்றே இங்கு முன்வைக்கப்படவுள்ளது.

(1993ல் நானும் எனது துணைவியார் கௌசல்யாவும் இணைந்தெ ழுதிய இந்தியச் சிந்தனை மரபு என்ற நூலிலே 'கீதையும் குற ளும்' என்ற இரண்டாம் இயலிலே திருக்குறளின் சமயச் சார்பு நிலை தொடர்பாக விரிவாகவே எடுத்துரைத்துள்ளோம். சில ஆண் டுகளிற்கு முன் இத்தாய்வீடு இதழில் எழுதிவந்த 'இலக்கியத் திற

னாய்வியலின் இயங்குநிலை' என்ற தலைப்பிலான கட்டுரைத் தொடரிலே 35 முதல் 38 வரையான கட்டுரைகளில் மேற்படி விடயப்பரப்பு பற்றி ஆய்வுநிலையில் விரிவாகவே எடுத்துரைத்துள்ளேன். (பார்க்க: தாய்வீடு இதழ் 2016 ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மற்றும் 2017 ஜனவரி வெளியீடுகள்) எனவே, இங்கு அவற்றை இக்கட்டுரைப் பொருண்மைக்கேற்ற அளவுக்கு எடுத்தாள்வதோடு புதியவரவுகளான சில தகவல்களையும் இணைத்துப்பேச முற்படுகிறேன்.)

மேற்சுட்டியவாறு திருக்குறளைச் சமயங்களுடன் தொடர்புறுத்தும் வகையிலான முயற்சிகளுள் இங்கு முதற்கவனத்துக்கு வருவன 'சமணம்' மற்றும் 'பௌத்தம்' ஆகிய சமயங்களுடன் அதனைத் தொடர்புபடுத்தி நோக்கும் முயற்சிகளாகும். அதனையடுத்து 'சைவம்' மற்றும் 'வைணவம்' ஆகியனசார் சிந்தனைகளுடன் அதனைத் தொடர்புபடுத்தும் பார்வைகள் இங்கு கவனத்துக்கு வரவுள்ளன.

திருக்குறளின் அறத்துப்பாலில் பயின்றுள்ள பல அறச்சிந்தனைகளும் அவை தொடர்பாகக் குறள்களிற் பயின்றுள்ள சொற்கள், தொடர்கள் ஆகியனவும், சமணம் மற்றும் பௌத்தம் ஆகிய சிந்தனைகள் சார்ந்தவை என்பதே ஆய்வாளர் பலருடைய கருத்தாகும். அவ்வதிகாரத்திலிடம்பெறும் கொல்லாமை, இன்னாசெய்யாமை ஆகிய அதிகாரங்களும் ஒழுக்கநிலைகள் தொடர்பான பல்வேறு கருத்துகளும் மேற்படி இரு சிந்தனை மரபுகளுடன் திருக்குறளை நெருக்கமாக இணைப்பனவாகும். குறிப்பாக, புலாலுண்ணாமை என்ற அதிகாரம் திருக்குறளைச் சமணத்துக்கு மிக நெருக்கமாக இட்டுவருவது. ('கொலை'யைக் கண்டிக்கும் பௌத்தமானது 'புலாலுணவை'க் கண்டிக்கவில்லை என்பது இத்தொடர்பில் நமது கவனத்துக்குரியதாகும்.)

திருக்குறளின் கடவுள் வாழ்த்து என்ற தலைப்பிலான முதலாவது அதிகாரத்தின் முதற்குறளில் இடம்பெறும் 'ஆதிபகவன்' என்ற சொல்லானது 'சமணத்தின் முதல் தீர்த்தங்கரர் எனப்படும் ஆதிநாதர் என்பாரையே குறிப்பது' என்ற கருத்து உளது. மேலும் அடுத்துவரும் குறள்களில் இடம்பெறுகின்றவையான 'வாலறிவன்', 'மலர்மிசை ஏகினான்', 'வேண்டுதல் வேண்டாமை இலான்', 'பொறிவாயில் ஐந்தவித்தான்', அறவாழி அந்தணன் முதலான சொற்களும் தொடர்களும் சமணத் தீர்த்தங்கரர்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியவை என்பது ஆய்வாளர் பலருடைய கருத்தாகும். (தீர்த்தங்கரர் என்ற சொல்லானது, சமண மதத்தில் அருகர் எனப்படும் உயர்நிலைக் கணிப்பை எய்தியவர்களைக் குறிப்பதாகும்.)

திருக்குறளைச் சமண சமயத்துடன் மிகநெருக்கமானதாக இனங்காட்டும் முக்கிய சான்றுகள் இவை என்பது வெளிப்படை. இவ்வாறான ஒப்புமையம்சங்களின் அடிப்படையில் திருக்குறளைச் சமண நூலாகவே தரிசிக்கும் மரபொன்று தமிழ்ச்சூழலில் வலுவாகவே உருவாகி நிலைத்து விட்டது. இத்தொடர்பில் குறிப்பிடத்தக்க மேலும் ஒரு செய்தி, 'திருக்குறளை இயற்றியவர் ஒரு சமண ஆச்சாரியாரே' என்பதாக நிலவிவரும் கருத்தாகும். 'தமிழகத்தின் திருப்பாதிரிப் புலியூர் என்ற ஊரில் வாழ்ந்த குந்த குந்தாச்சாரியார் என்ற சமணத் துறவியால் இயற்றப்பட்டதே திருக்குறள்' என்பதே அக்கருத்தாகும். எழுத்தாளர் திரு. ஜெயமோகன் அவர்கள் 'இந்தியச் சிந்தனைமரபில் குறள்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் மேற்படி செய்தியைக் குறிப்பிட்டுள்ளதோடு இக்கருத்து விவாதிக்கப்படவேண்டியது என்பதான தனது எண்ணத்தையும் பதிவுசெய்துள்ளார்.

மேற்கண்டவாறு திருக்குறளைச் சமணரின் ஆக்கமாகக்கருதும் சிந்தனை தொடர்பாக அண்மையில் எனது கவனத்துக்கு வந்துள்ள நூலாக்கமொன்று பற்றிய சில செய்திகளையும் இங்கு கவனத்துக்கு இட்டுவர விழைகிறேன். 'திருக்குறள் சமயம்' என்ற தலைப்பிலான அந்நூலாக்கம் தமிழகத்திலுள்ள சமண அறிஞர்களிலொருவரான பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன் என்பாரால் எழுதப்பட்டதாகும். அந்நூல் 'திருக்குறளானது சமணசமய ஆக்கமே' என்பதை அச்சமயமரபுசார் கோட்பாடுகளின் துணையுடன் விளக்கியுரைத்துள்ளது. அவ்வகையில் குறிப்பாக, நாம் மேலே குறிப்பிட்ட குந்த குந்தாச்சாரியார் என்ற சமணத்துறவியின் கருத்துகள் சார்ந்தே திருக்குறளுக்கு அந்நூல் விளக்கம் தந்துள்ளது. அந்நூலின் சில பகுதிகள் நாம் முன்னைய இரு கட்டுரைகளில் நோக்கியதான திருக்குறள் களஞ்சியம் என்ற தொகுப்பின் 6வது தொகுதியில் பதிவாகியுள்ளன. அப்பதிவிலிருந்து ஒரு பகுதி இங்கு எடுத்தாளப்படுகிறது. இது திருக்குறளின் 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரம்பற்றிய விளக்கமாகும்.

'ஸ்ரீ குந்த குந்த ஆசாரியார் வகுத்த பிராகிருதமொழி வழிபாட்டின்படி எல்லாம் அறிந்த சர்வக்ஞன் காட்டிய தரும நெறியை (அறம்) விளக்குகிறது இந்த அறன்வலியுறுத்தல் என்ற அதிகாரம்.'

'கேவலி பண்ணத்தோ தம்மம் மங்களம், கேவலி பரமோத்தம் தம்மம் லோகோத்துமா, கேவலி பண்ணத்தோ தம்மம் சரணம் பவ்வஜ்ஜாசாமி' என்பது நான்காவதான தருமசரணம் ஆகும்.

'எல்லாம் அறிந்த இறைவன் வெளியிட்ட தருமம் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் கருவியாகும். அவ்விறைவன் காட்டிய தருமம் உலகிற்குப் பெரும் நன்மை பயக்கும். ஆதலால் அத்தருமத்தை நான் சரணடைகிறேன்' என்பது இதன்பொருள்.

இவ்வாறு தொடர்கிறது சமணசமயச் சார்பான இப்பார்வை. ('திருக்குறள் சமயம்' - பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன். பார்க்க: திருக்குறள் களஞ்சியம் தொகுதி 6. ப.19)

அடுத்து, திருக்குறளைப் பௌத்தத்துடன் இணைத்துச் சிந்திப்பதற்கு ஆதாரமாகவுள்ள முக்கிய அம்சங்களை நோக்குவோம். திருக்குறளைப் பௌத்தத்துடன் இணைத்துச் சிந்திப்பதற்கான முக்கிய காரணி அதன் சிந்தனைகள் சிலவற்றுக்கும் 'பாளி' மொழியிலமைந்ததான 'தம்ம பதம்' என்ற பௌத்த அறநூலின் சிந்தனைகள் சிலவற்றுக்குமுள்ள ஒப்புமைகளேயாகும். தம்மபதம் என்பது பௌத்த முதனூல்களான 'திரிபிடகங்க'ளில் ஒன்றான 'சுத்த பிடக'த்தின் ஒருபகுதியாகும். திரிபிடகங்கள் எனப்படுபவை கௌதம புத்தரின் போதனைகளைச் சார்ந்து அவரது மாணவ மரபினரால் தொகுக்கப்பட்ட நூலாக்கங்கள் என்பது பொதுவாக நாமறிந்த செய்தியேயாம். அவற்றுளொன்றே மேற்சுட்டிய சுத்த பிடகம். (ஏனைய இரண்டு: விநய பிடகம் மற்றும் அபிதம்ம பிடகம்).

சுத்த பிடகமானது புத்தர் 'பரிநிர்வாணம்' எனப்படும் 'நிறைநிலை' எய்தியபின் ஏழுஆண்டுகள் கழிந்த பின்னர் (கி.மு. 477ல்) 'ராஜகிருகம்' என்னும் வடஇந்திய நகரில் ஒன்றுகூடிய அவருடைய மாணவர்களால் தொகுக்கப்பட்டது என்பது வரலாறு. அதன் ஒருபகுதியான தம்மபதம் என்பது 'அறவழி' எனப் பொருள்தருவது. வாழ்வியலில் மாந்தர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கநெறிகள் மற்றும் பேணிக்கொள்ள வேண்டிய அறவியல் ஆகியவற்றை எடுத்துரைக்கும் போதனைப்பகுதியாக இது அமைந்துள்ளது, இது. பாளி மொழியிலமைந்ததான இத் 'தம்மபத்' நூலிலே பதிவாகியுள்ள சிந்தனைகள் பலவற்றுடன் திருக்குறளின் சிந்தனைகள் பல ஒத்தனவாக உள்ளன. குறிப்பாக, குறட்பாக்களுட்சில மேற்படி தம்மபதப் போதனைகளின் நேரடி மொழிபெயர்ப்புகளாக அல்லது தழுவல்களாகக் கருதத்தக்கவகையிலும் உள்ளன. அவ்வகையிலான சான்றுகள் சில ஆய்வாளர்களால் ஏற்கெனவே எடுத்துக் காட்டப்பட்டு வந்துள்ளன.

*'பகை பாவம் அச்சம் பழி என நான்கும்*
*இகவாவாம் இல்லிறப்பான் கண்'*

- குறள்:146

'பிறன் மனையாளை நோக்குபவனுக்குப் பின்வரும் நான்கு தீவினைகள் விளைகின்றன. அவை: பாவம், உறங்காமை, பழிச்சொல், துன்பம்.' (தம்மபதம்:436)

*‘தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு’*

\- குறள்:436

முதலில் ஒருவர் தம்மை நல்வழியில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். பிறகுதான் மற்றையவருக்கு எடுத்துரைக்கவேண்டும். இத்தகையவர் பழித்துக் கூறப்படமாட்டார்.’ (தம்மபதம்:158)

*‘செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்’*

\- குறள்:446

செய்யத்தக்கதைக் கைவிட்டும் செய்யத்தகாததைச் செய்தும் கட்டுக்கடங்காதுள்ள மதங்கொண்டவர்க்குக் குற்றங்கள் வளர்கின்றன. (தம்ம பதம்:292)

தம்மபதத்துக்கும் திருக்குறளுக்கும் சிந்தனை நிலையிலே புலப்படும் இவ்வாறான ஒப்புமைகளைக் கருத்துட்கொண்ட ஆய்வாளர்கள் சிலர், ‘திருக்குறளும் தம்மபதமும்’ என்ற தலைப்பிலே கட்டுரைகள் எழுதிவந்துள்ளனர். இவ்வகையிலே இரு கட்டுரைகள் சார்ந்த தகவல்கள் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கன. இவற்றுள் ஒன்று காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் சுப. மாணிக்கம் அவர்களால் 1984ல் எழுதப்பட்டது. (இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 16வது கருத்தரங்க ஆய்வுக்கோவை-1984). இன்னொன்று, ஆய்வாளர் ராஜேஸ்வரி கோதண்டம் என்ற ஆய்வாளரால் 2015ல் எழுதப்பட்டதாகும். (உங்கள் நூலகம் – செப்.2015)

ராஜேஸ்வரியவர்கள் சில குறள்களின் பொருண்மைகளுடன் தம்மபதத்தின் பாளி மொழி சுலோகங்கள் சிலவற்றின் பொருண்மைகள் சில அம்சங்களில் ஒத்தமைந்துள்ளமையை அடையாளங் காட்டியதுடன் அவை தொடர்பிலான சில சிந்தனைகளையும் முன்வைத்துள்ளார். அவ்வகையில் முக்கியமான சில ஒப்புமைகளை இங்கு நோக்கலாம்.

திருக்குறளின் அடக்கமுடைமை என்ற அதிகாரத்தில் இடம்பெறுவதான,

*‘ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.’*

\- குறள்:126

என்ற குறளானது புலனடக்கம் பற்றிப் பேசுவது. ‘ஒருவர், குறித்த ஒரு பிறவியிலே தனது கண், காது, மூக்கு, நா மற்றும் உடல் என்பன சார்ந்த சுவையநுபவங்களைக் கட்டுப்படுத்தும் வல்லமையைப் பெற்றுவிட்டாராயின் அவ்வாற்றலானது அவருக்கு ஏழு பிறவியிலும் பாதுகாப்புத் தருவதாக அமையும்’ என்பது இக்குறளின் தெளிபொருள். இப்பொருண்மையானது தம்மபதத்தின் ‘பிக்கு வர்க்கம்’ என்ற பகுதியின் முதலாம் பாடலுடன் ஒப்புநோக்கத்தக்கதாகவுள்ளது. அப்பாடல்:

*‘சக்கு நா சங்ரோ ஸாது ஸங்கு ஸோதேன ஸங்வரோ
காணேன ஷங்வரோ ஸாது ஸாது ஜிவ்காய ஸஸ்வரோ’*

இதன் பொருள்: ‘கண்ணை அடக்குவது நல்லது. காதை அடக்குவது நல்லது. மூக்கை அடக்குவது நல்லது என்றும் உடம்பை அடக்குவது நல்லது. வாக்கை அடக்குவது நல்லது. எல்லாவற்றிலும் அடக்கமாக இருக்கிற பிக்குவானவர் எல்லாத் துன்பங்களிலிருந்தும் நீங்குகிறார்.’

மேற்படி இரு சான்றுகளும் புலனடக்கம் என்ற பண்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பன என்பது வெளிப்படை. மேற்படி குறளிலே அவ்வம்சமானது துறவுநிலை சார்ந்த ஒரு அறவியலாளனுக்கு அமைந்திருக்க வேண்டியதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தம்மபதத்தின் இச்சுலோகமானது பௌத்த பிக்கு ஒருவருக்கு இருக்கவேண்டிய முக்கிய பண்பாக அதனை எடுத்துரைத்துள்ளது. இதுவே வேறுபாடு.

திருக்குறளின் ‘நீத்தார் பெருமை’ என்ற அதிகாரத்தின் இறுதிக் குறள் அந்தணர் எனப்படுவோரின் பண்பை எடுத்துரைப்பது.

*‘அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்’*

\- குறள்:30

என்பது அக்குறள்.

அறவுணர்வும் உயிர்களிடத்து இரக்கமும் உடையவர்களே அந்தணர் என்ற கணிப்புக்குரியவர் என்பது இதன் தெளிபொருள். திருக்குறளின் ‘கூடாவொழுக்கம்’ என்ற அதிகாரத்தின் இறுதிக்குறளானது, ‘அகத்தூய்மையைப் பேணாது புறத்தோற்ற நிலையில் மட்டும் வேஷங்கள் பூண்போர் மீதான விமர்சனம்’ ஆகும். அக்குறள் வருமாறு:

*‘மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த(து) ஒழித்து விடின்’*

\- குறள்:280

ஒருவர், ‘உலகத்தால் பழிக்கப்படும் செயற்பாடுகளைத் தவிர்த்து வாழ முடிந்தாலே போதும். மாறாக, அவர் தமது நிலைப்பாட்டை உணர்த்துவதற்காகத் தலையை மொட்டையடிப்பதற்கோ அல்லது அதில் சிகையை நீளமாக வளர்ப்பதற்கோ அவசியமில்லை’ என்பதே இக்குறளின் பொருளாகும். அதாவது ‘புறவேடங்கள் முக்கியமல்ல’ என்பதும் மாறாக, ‘அகநிலையான உணர்வுத் தூய்மையே முக்கியம்’ என்பதையுமே இக்குறள் உணர்த்திநிற்கிறது.

மேற்படி இரு குறள்களின் தொனிப் பொருள்களையும் இணைத்துப் பேசுவதுபோல அமைந்த ஒரு சுலோகம் தம்மபதத்திலுள்ளது என்பதை ராஜேஸ்வரியவர்கள் மேற்படி கட்டுரையில் எடுத்துக் காட்டியுள்ளார். தம்மபதத்தின் ‘பிராமண வர்க்கம்’ என்ற உட்பிரிவின் 11ம் பாடலே, அது. அப்பாடல் வருமாறு:

*‘ந ஜடாஹி ந கொத்தேன ந ஜச்சா ஹோதி ப்ராஹ்மணோ
யம்ஹி ஹச்சஞ்ச தம்மோச லோஸ^ சீ ஸோ ச ப்ராஸ்மணோ’*

மேற்படி சுலோகத்தின் பொருள்:
‘மயிரைச் சடையாக வளர்த்திருப்பதினாலோ, பிறப்பினாலோ கோத்திரத்தினாலோ ஒருவர் பிராமணர் ஆகமாட்டார். யாரிடத்தில் உண்மையும் தர்மமும் இருக்கிறதோ அவரே தூய்மையானவர். அவரே பிராமணர்.’

இதிலே சிகையை வளர்த்தல் என்பதான புறத்தோற்ற நிலை விமர்சனத்துக்குள்ளாகிறது. அகநிலையான உண்மைச்சார்பும் அறவுணர்வின் முக்கியத்துவமும் இங்கு வலியுறுத்தப்படுகிறது. இச்சுலோகப் பொருண்மையைத் தழுவியனவாகவே மேலே நாம் நோக்கிய இரு குறள்களின் தொனிப் பொருண்மைகள் உள்ளமை தெளிவு.

பேராசிரியர் டாக்டர் சுப. மாணிக்கனார் அவர்கள் ‘திருக்குறளும் தம்மபதமும் என்ற தலைப்பிலான தமது ஆய்வுக்கட்டுரையில் அறக்கருத்துகளை எடுத்துரைப்பதில் இருநூல்களுக்குமிடையில் புலப்படும் பொதுப் பண்பொன்றை எடுத்துக்காட்டியுள்ளார். குறித்த ஒரு அறவியல் அம்சத்தை வலியுறுத்துவதற்கு ‘உடன்பாடு’ மற்றும் ‘எதிர்மறை’ ஆகிய இருவகை உத்திகளைக் கையா

ளும் முறைமையே இங்கு அப்பொதுப்பண்பாகச் சுட்டப்பட்டுள்ளது. திருக்குறளில் இவ்வுத்திமுறைகள் சிறப்பாகவே பயின்றுள்ளமையை அதன் அதிகார வைப்புமுறை மற்றும் குறள் வைப்பு முறை ஆகியவற்றில் கண்டுணரலாம்.

மேலே நோக்கியுள்ள விடயங்கள், 'திருக்குறளின் உருவாக்கத்தில் தம்மபத சிந்தனைகள் - அதாவது, 'பௌத்த மரபுசார் அற-ஒழுக்க நெறிமுறைகள்' - ஆழமான செல்வாக்குச் செலுத்தியிருக்க வேண்டுமென்பதான ஊகத்துக்கு இடமளிப்பன என்பது வெளிப்படை. மேற்படி ஒப்புமைகளை நோக்கிய சிந்தனையாளர்களுள் ஒருசாரார் திருக்குறளைப் பௌத்த நூலாகவே கருதவும் முற்பட்டுள்ளனர்.

இவ்வகையில் குறிப்பாக, கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் வாழ்ந்த சிந்தனையாளர்களுள் ஒருவரான பண்டிதர் அயோத்திதாசர் (1845-1914) என்பாரின் சிந்தனைகள் இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கியத்துவமுடையன. இவர் திருக்குறளைப் பௌத்தமத முதனூலான 'திரிபிடகம்' என்பதன் வழிநூலாகவே காண்கிறார். அதற்கேற்றவகையில் 'திருக்குறள்' என்ற இந்நூற் பெயரை அவர், 'திரிக்குறள்' என்பதாக மாற்றி வழங்கியதோடு 'அப்பெயரே அதன் உண்மைப்பெயர்' எனவும் குறிப்பிடுகிறார். இவ்வாறான அவருடைய பார்வைக்குச் சான்றாக அமைவதான அவருடைய கூற்றொன்று வருமாறு:

'உலகுபுகழ் அரிய திரிபேத வாக்கியங்களென்றும், திரிபீட வாக்கியங்களென்றும் வழங்கிய மூவரு மொழியாம் முதனூலுக்கு வழிநூலாகத் தோன்றியவை திரிக்குறளும் ... முதலியவைகளேயாம்... முதநூலுக்குத் திரிக்குறளே வழிநூலாதலின் திருவென்னும் அடைமொழி நீக்கித் திரியென்னும் மூவரு மொழிகளை விளக்கியுள்ளதே முதற்சிறப்பாகும்.'

(பண்டிதர் அயோத்திதாசர் - 'திருவள்ளுவ நாயனார் இயற்றிய திரிக்குறள்'. பார்க்க: திருக்குறள் களஞ்சியம்(2022) - தொகுதி:1. ப. 393)

இதுவரை, 'திருக்குறளைச் 'சமணம்' மற்றும் 'பௌத்தம்' ஆகிய சமயங்களுடன் தொடர்படுத்தி நோக்குவதற்கான ஒப்புமைப் பண்புகள் என்றவகையிலான சான்றுகள் சிலவற்றை நோக்கிவந்தோம். அத்துடன் ஆய்வாளர் சிலர் திருக்குறளை அவ்வச் சமயங்கள் சார்ந்ததென வாதிப்பதையும்கூட நோக்கியுள்ளோம்.

திருக்குறள் எழுந்த காலகட்டமான சங்கமருவிய காலச் சூழலிலே தமிழகத்தில் சமணம் மற்றும் பௌத்தம் ஆகிய சமயங்கள் செல்வாக்குடன் திகழ்ந்தன என்பது ஆய்வுநிலையில் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தேயாகும். அவ்வகையில் அவ்விரு சமயங்கள் சார்ந்த சிந்தனைகள் திருக்குறளில் செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம் என்பதும் உய்த்துணரக்கூடியதேயாம். ஆயினும் 'திருக்குறள் அவ்வச்சமயங்களில் ஒன்றைச்சார்ந்து எழுந்ததாகக் கொள்ளமுடியுமா?' என்பதே எம்முன்னிற்கும் முக்கிய வினாவாகும்.

(தொடரும்)



subramanian.n@thaiveedu.com



# பொம்மை..



அகரன்

அன்று அவனுக்கு ஆறாவது பிறந்தநாள். யாரும் அவனுக்கு ஆறுவயதென்றால் நம்பமாட்டார்கள். எட்டு, அல்லது பத்து வயதென்னும்படியான தோற்றம். முதல் நாள் நீண்ட நடையில் வந்ததால் பிறந்தநாள் என்பதை மறந்து, அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். அந்த இருள்காலையில் யாரெவரோ வானொலி இயக்கவும் இருந்தார்கள்.

‘சித்திரை இருபத்தியொன்று செவ்வாய்க்கிழமை இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு அதிகாலைச் செய்திகள்...’

என்ற கீச்சிட்ட ஒலி அவனை அருட்டிற்று. எழுந்து சப்பாணி

கொட்டி அமர்ந்தான். எங்கும் சனங்கள் பட்டிமாடுகள்போல படுத்துக் கிடந்தனர். அருகே அம்மாவைக் காணவில்லை. தங்கை பெருவிரலை வாய்க்குள் வைத்தபடி தூக்கத்தில் இருந்தாள். அவள் நெற்றியில் மூன்றாம் பிறையளவு கறுப்புப் பொட்டு கரைந்திருந்தது. தன்னிடமிருந்த சாறியால் அவளைப் போர்த்துவிட்டு அம்மாவைத் தேடினான்.

அவள் அந்த கிரவல் சாலையில் இருந்த மூன்று கற்களை எடுத்து அடுப்பாக்கி பூவரசுச் சுள்ளிகளை அதற்குள் போட்டு அடுப்பை மூட்டி, சட்டி ஒன்றுக்குள் தண்ணீர் கொதிக்க வைத்துவிட்டு குத்துக்கால் போட்டு அடுப்பை பார்த்தவாறு இருந்தாள்.

அவளின் முதுகில் அப்படியே தாவி, ‘அம்மா இண்டைக்கு என்ர பிறந்த நாளெல்லோ...?’

தன் இடப்பக்க கழுத்துக்குள்ளால் நீட்டியிருந்த அவன் முகத்தில் முத்தம் கொடுத்தாள். ராணி சோப்பின் வாசமும் மாந்தளிரின் வாசமும் அவளிடம் இருந்து வந்து அவனை நிறைத்தது.

‘தம்பி நீ வளந்திட்டாய். அம்மாவுக்கு முதுகு நோகுது எழும்பு.’

‘அம்மா, எனக்கு புதுச்சட்டை தருவியா?’

‘ராசா, இந்தமுறை வேண்டாம். பார் எவ்வளவு சனம் றோட்டோரத்தில் படுத்திருக்கினம். அடுத்த வருசம் எல்லாத்துக்கும் சேர்த்துக் கொண்டாடுவம். நான் பிள்ளைக்கு சக்கரைப் பாயாசம் செய்யிறன். சனமெல்லாம் எழும்பமுதல் அங்கபார் அந்த புளிய மரத்தடியில் குழாய்க்கிணறு இருக்கு. இந்தக்கரியால பல்லுத்தீட்டீற்று, அங்கால பனை வெளிக்குள்ள கக்கா இருந்திற்று, முகம் கழுவீற்று வாடா குட்டி. நாங்கள் வெயில் வரமுதல் வேற இடம் போகோணும்.’

அப்போது தங்கை சிணுங்கி அழும் சத்தம் கேட்டது.

‘ஓடுடா... ஓடு... அவள் பயந்திடப் போறாள். தூக்கீற்று வா.’

தனது மூன்று வயது தங்கையை தோளில் தூக்கியவாறு வந்தான். அவள் ஒரு கையில் பொம்மையும், மறுகைப் பெருவிரல் வாய்க்குள்ளும் இருந்தது. திரு.. திரு.. வென முழித்தபடி பனிமூடிய சனத் தூக்கத்தை பார்த்தவள், தாயைக் கண்டதும் சிணுங்க ஆரம்பித்தாள்.

‘சீ... சீ... மூன்று வயதுக் குமரி கை சூப்புறா... எடுடா... கையை’ என்றவாறு மகளை இருகையால் வாரி எடுத்தாள்.

‘சீ... சீ... சீ... மூன்று வயதுக்குமரி’ என்று தங்காவை அவன் சீண்டினான். அவள் ‘ம்..மா’ என்று அழ ஆரம்பித்தாள்.

தாயின் நெஞ்சுச் சூடும், அடுப்பு வெக்கையும் அவளுடலில் ஒட்டியிருந்தது. அது அவளுக்கு இதமாகப் போக மார்போடு புதைந்தாள்.

‘அம்மா நான் முகம் கழுவீற்று ஓடி வாரன்.’

‘நில்லு தம்பி. தங்காக்கு பால் கொடுத்திற்றுத் தாறன். அவளையும் கூட்டிட்டுப் போய் முகம் கழுவீற்றுக் கூட்டியாடா. அச்சாப் பிள்ளையல்லோ?’

‘சரி.’

அவள் அடுப்பருகே அப்படியே சம்மணக்கால் போட்டு அமர்ந்து மார்பகத்தை எடுத்துக் கொடுத்தாள். தங்கா குதப்.. பிதப்.. என்ற சத்தத்துடன் பால் குடித்தாள்.

அவன் கரித்துண்டால் பல்லைத் தேய்த்துக் கொண்டு திரும்பினான். தாயின் மார்பின் மேற்பகுதி அடுப்பு வெளிச்சத்தில் தங்கம் போல் மின்னியது. சூரியனின் ஒரு துண்டு ஒளி எல்லாத் தடைகளையும் தாண்டி வந்து அதைப் பார்த்தது. கண்ணை மூடிக் கொண்டு பால் குடிக்கும் தங்காவைப் பார்த்தால் அவனுக்கு சிரிப்பு வந்தது. அவள் வாயின் ஓரமெங்கும் பால் வடங்கள் தெரிந்தது.

அருகே நெருங்கி, ‘மூன்று வயதுக் குமரி பால் குடிக்குதம்மா’ என்றான்.

‘சும்மா இரடா... பிள்ளைக்கு சரியான பசி...’ என்றாள்.

அவள் சிணுங்கிக் கொண்டு முலையில் இருந்து வாயை எடுத்துத் தாயின் வயிற்றுக்குள் புதைந்து கொண்டாள். அந்தச் சூடு அவளுக்கு இதமாக இருந்தது. அண்ணனின் சீண்டலில் இருந்து அது மீட்டது.

‘தங்கா... அண்ணாவோட போய் முகம் கழுவீற்று வாடா குட்டி...’ என்றவாறு தன் மார்பைத் தாங்கி உள்ளே கொண்டுபோய் விட்டாள்.

‘தங்கா எழும்பு... ந்தா... கையப்பிடி’ என்று கரி படாத இடக் கையை நீட்டினான். பொம்மையோடு அவள் மீண்டும் பெருவிரலைச் சூப்பிக் கொண்டு எழுந்தாள். அந்தப் பொம்மை கிளிநொச்சியில் ‘சும்மா’ உணவகத்துக்கு அருகே இருந்த மணிக் கடையில் வேண்டியது. பூனைக் கண்களும், ரோஸ் கலரும், கன்னத்தில் குழி விழச் சிரித்துக் கொண்டே இருக்கும். அதன் கண்ணிமைகள் கறுப்பு நிறத்தில் இருந்தது. அதை அசைக்கும் போது கண்ணை மூடித் திறக்கும். அப்போது அது உயிருள்ள குழந்தையாக மாறிவிடும். தங்காவிற்கு அது தங்கையாகவும், மகளாகவும் ஒரே நேரத்தில் இருக்கவல்லது.

‘தங்கா உதை வச்சிற்று வா...’

‘ம்... ம்... மாட்டன்’.

‘சரீடா... இன்று உன்ர பிறந்த நாளெல்லோ... அவள் கேட்பதெல்லாத்தையும் நீ செய்... அழ வைக்காத. வேளைக்கு வந்திடோணும் தம்பி. அங்கின நிக்காத. இந்த ஆயிரம் சனத்துக்கும் ஒரு குழாய்க்கிணறு தான். சனம் மொய்க்க வெளிக்கிட்டா உங்களைத் தேடுறது கஷ்டம்’

‘ஓமம்மா.’

தங்காவின் கையை இடது கையிலும், வலது கையில் அப்போது தான் விழுந்து முளைத்து வந்த பற்களைக் கரிக்கட்டையால் கறுப்பாக்கியவாறு புளிய மரத்தை நோக்கி நடந்தான். அதற்கப்பால் பனைகளுக்கிடையில் பற்றைகளுக்குள் இருந்து சூரியன் பல்லைக் காட்டிக் கொண்டு வெளியே வந்து கொண்டிருந்தான். எங்கோ தூரத்தில் குண்டுச் சத்தங்கள். பறவைகள் காலையைக் கண்டது போல கரைய ஆரம்பித்திருந்தது கேட்டது. அவனுக்கு

இந்தச் சூரியனைப் பிடித்து கயிற்றில் கட்டி குண்டு போடுபவர்கள் மீது எறிந்து விட்டால் என்ன என்று தோன்றியது. பிறகு எல்லாம் இருட்டாகி விடுமே என்ற பயமும் ஒருசேர வந்தது. அதனால் சூரியனை விட்டு விட்டு, கக்கூசு இருக்க இடம் தேடினான்.

தங்கா குழாய்க் கிணத்தடியிலேயே இரு. அண்ணா இதோ வந்துடுவன்'

'நானும்... நானும்...'

'இல்ல தங்கா அண்ணா கக்கா இருக்கப் போறன். தோ... உன்ர பொம்மைப்பிள்ள கண்ணசைக்குது... விளையாடிற்று இரு. பயப்படாத. அதோ அந்த எருக்கலைக்குப் பின்னால தான் நான் இருப்பன்.'

தங்கா பொம்மைப் பிள்ளையின் கண்களைத் தொட்டுப் பேச ஆரம்பித்தாள்.

பனை, அங்கால் வடலிகள், இடையிடையே எருக்கலைக்குப் பற்றைகள். பனையைச் சுற்றி கொவ்வைக்கொடி இருந்தது. அதில் கொவ்வைப்பழங்கள். போகும்போது பறிக்கலாம் என்று நினைத்துக்கொண்டான்.

எருக்கலை அருகில் புற்கள் இல்லை. ஒரு சுள்ளி எடுத்து குழி தோண்டினான். அதற்குள் கக்கா இருக்க கழிசானைக் கழட்டி கமக்கட்டில் வைத்தவாறு குந்தினான். குழி சரியாகவே பொருந்தியது. மூத்திரம் மட்டும் வந்தது. கக்கா வரவில்லை. சற்று முக்கிப் பார்த்தான். வாய்ப்பில்லை.

எருக்கு இடைவெளியால் தங்காவைப் பார்த்தான். அவள் பொம்மைப் பிள்ளைகளோடு பேசிக்கொண்டு இருந்தாள். அது கண்களை மூடித்திறந்து பேசியது. அதிகாலைப் பெரும் நெருப்பின் ஒளி அவர்களை சிறு நெருப்புச் சிலைகளாக்கிக் கொண்டிருந்தது. அப்போது அவன் பிருட்டத்திலும் இளம் சூட்டை ஏற்படுத்திற்று.

எதிரே எருக்கலைப் பூக்கள் நீல மாணிக்கம் போல் கொத்துக் கொத்தாக இருந்தது. அதில் இரண்டைப் பறித்து வைத்துக் கொண்டான். ஒன்று தங்கைக்கு. மற்றது அம்மாவுக்கு.

அப்போது வண்டுகளின் கூட்டம் காதருகே வந்து கத்துவது போல சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். ஒன்றுமில்லை. தலையை இருந்த இடத்திற்கு கொண்டு வரும் இடைவெளியில் பெருஞ்சத்தம். அவன் சாய்ந்து விழுந்திருந்தான். தங்கா வீரிட்டுக் கத்தியவாறு ஓடி வந்தாள். அவளை இழுத்து அணைத்தவாறு புளியமர அடிக்கு ஓடினான். தொடர்ந்து தாளகதியில் குண்டுகள் வீழ்ந்து கொண்டிருந்தன. தங்காவின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவன் பற்கள் தானாக ஒன்றை ஒன்று தையல் மிசின்போல் அடித்துக்கொண்டது. தங்காவை கங்காறு குட்டியை வைத்திருப்பது போல தன் உடலால் அவளை மூடிப் போர்த்தபடி இருந்தான். புளியமரம் அதிர்ந்து அவர்கள் மேல் சில புளியங்காய்கள் விழுந்தன. அவை சன்னங்கள் என்று பதறிப் போனான். செத்துப் போவோமோ? என்ற பயம் வந்து போனது. அம்மாவைத் தனியே விட்டுட்டு சாகக்கூடாது என்று நினைத்தான்.

குண்டுச் சத்தங்கள் முடிந்ததும் சனங்களின் ஒப்பாரியும் முனகல் சத்தங்களும் கேட்டன. கண்ணை இறுக மூடி இருந்த தங்காவைத் தொட்டுத் தடவினான். அவள் அப்படியே இருந்தாள்.

பின்பு தான் கழுசான் இல்லாமல் இருப்பது தெரிந்தது. அம்மா இருந்த இடத்தில் தீ எரிந்து கொண்டு இருந்ததை பார்க்க முடிந்தது. தங்காவை கையில் பிடித்துக்கொண்டு அம்மாவிடம் நோக்கி ஓடினான். சனங்கள் கிடந்த கிடந்த இடத்தில் எரிந்து கொண்டிருந்தனர். அந்த நெருப்பு வெள்ளை நிறத்தில் வெளிப்பட்டது. அம்மா எங்கேனும் ஒழிந்து இருப்பாள் என்ற நம்பிக்கை அவனிடம் இருந்தது.

அதற்கிடையில் தங்கா தன் பொம்மையைக் காணவில்லை என்று 'அண்ணா... அண்ணா... பொம்... ம...' என்று வீரிட்டாள்.

அவர்களின் முன் பிய்ந்து சிதறிக் கிடந்த நீண்ட கால் ஒன்று விறகு கட்டைபோல் எரிந்துகொண்டிருந்தது. அவனை ஓர் ஆதி அச்சம் அதிரச் செய்தது. தனக்குள் அம்மா... அம்மா... என்று கொண்டு தங்கையின் கண்கள் அதை பார்க்காதபடி பெத்திக் கொண்டான்.

மீண்டும் புளியமரத்தடி நோக்கி ஓடினான். குழாய் கிணற்றின் அருகில் பொம்மை விழுந்து கிடந்தது. அதை கண்டதும் தங்கா ஓடிச் சென்று வாரி அணைத்துக் கொண்டாள். மீண்டும் தாயை நோக்கி ஓடினான்.

காற்றின் மணம் மாறி விட்டிருந்தது. மனித உடல் எரியும் மணமும், பொஸ்பரஸ், கிளஸ்டர் குண்டின் மனமும் சேர்ந்து புதிய நொதியத்தை உருவாக்கி இருந்தது.

எந்த ஒன்றும் மீதியின்றி தீ தின்று கொண்டிருந்தது. அதன் வெப்பம் அவர்களை நெருங்க விடவில்லை. அம்மா எங்காவது இருந்து வருவாள் என்று சுற்றுமுற்றும் பார்த்து அம்மா... அம்மா... என்று கூவினான். அப்போது அவனது குரல் அழுகையை வேண்டி நின்றது. தங்கா அண்ணனின் அழுகையை கண்டு வீரிட ஆரம்பித்தாள். அவள் அழுகையை கட்டுப்படுத்தி 'அம்மா வந்திடுவா... அழாத... அழாத...' என்று தன் வயிற்றில் அவள் முகம் வைத்து அணைத்துக் கொண்டான்.

அருகே சட்டி பானைகள் கொட்டிக் கிடந்தன. எட்டிப் பார்த்தால் ஒரு பெண்ணின் முன் பக்கம் எரிந்து குட்டிப்பாம்புகள் போல் குடல் பொசுங்கிக் கிடந்தது. வெண் நெருப்பு பின் பகுதியை நோக்கி எரிந்தபடி இருந்தது. அந்த நீண்ட தலைமுடியில் அம்மா குத்தியிருந்த சிலைற் இருந்தது.

அ... ம்... மா... என்ற அவன் வான்நெடு குரல் நிலமெங்கும் வேறொரு குண்டுபோல அதிர்ந்தது. தங்காவை இறுக்கி அணைத்துக்கொண்டு...

'எங்களுக்கு அம்மா இனி இல்லத் தங்கா...' என்று கத்தினான்.

அவள் பயத்தில் அவனை இறுக்கிக் கொண்டாள். அவன் கேவிக் கேவி அழ, தங்கை அவன் கண்களை துடைத்து விட்டுக் கொண்டிருந்தாள். அது ஒரு அழுகை விளையாட்டுப் போல் இருந்தது. அவன் மயங்கும் நிலை வந்தபோது யாரோ அவர்களின் கைபிடித்து அழைத்துச் சென்றனர். ஒரு வேப்பமரத்தின் கீழ் அமர்த்தப்பட்டனர். சற்று நேரத்தில் நீல காற்சட்டையும் நீலச் சட்டையும் போட்ட அக்கா ஒருத்தி வந்து தண்ணீர் கொடுத்தாள். பின்பு அம்மாவின் பெயரைக்கேட்டு எழுதிக்கொண்டாள். அவள் கேட்ட மீதி கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் வாயிலிருந்து ஒரு ஒலியும் வராமல்... ஒலி முடிந்த வாயாக அவன் இருந்தான். அந்த அக்கா ஒரு சாக்கை விரித்து அதில் படுக்குமாறு கூறினாள். அம்மா எரியும் திசை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரத்தில் அவனுக்கு மயக்குவது போல் இருந்தது. தங்காவின் கையை பிடித்தபடியே தூங்கிப்போனான். தங்கையின்

கையில் பொம்மை சிரிப்பு மாறாமல் படுத்துக் கிடந்தது. பொம் மைகள் அழுவதில்லை.

கண் முழித்த போது வேப்பமரம் பூக்களை உடம்பெங்கும் கொட் டிவிட்டு இருந்தது. யாரோ போட்டிருந்த ரேடியோவில்

'இன்று அதிகாலை நடைபெற்ற பாஸ்பரஸ் - கிளஸ்டர் குண்டு வீச்சால் 473 மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 722 பேர் காய மடைந்தனர்.'

என்ற ஒலி அவன் அம்மாவை எண்ணிக்கைக்குள் வைத்துக் கொண்ட ஒலியாய் இருந்தது. இனி அம்மாவை காணவே முடி யாது எனும் போது நெஞ்சு மீண்டும் விம்ம ஆரம்பித்தது. அவன் கேவிக் கேவிக் கொண்டிருந்தான். கொஞ்சம் பொறுத்து நான்கு அண்ணன்மார் அங்கு வந்தார்கள். 'நாங்கள் வேறு இடம் போவம் வாங்கோ' என்று சொன்ன அண்ணா மீசை வைத்திருந்தான். அவன், தலையை தடவி கன்னங்களைத் துடைத்து அவன் கமக் கட்டுக்குள் கையை வைத்து தூக்கினான். மீசையற்ற நீண்ட மூக்கை வைத்திருந்தவன் ஒருவன் தங்காவைத் தூக்கினான். அவள் கையில் பொம்மை இருக்கிறதா என்று பார்த்தான். அவள் அதை தன்கையோடு இணைந்துவிட்ட கைபோல வைத்திருந்தாள்.

தட்டிவான் ஒன்றில் ஏற்றப்பட்டார்கள். அதற்குள் பல சிறுவர்கள் அழுது வடித்த கன்னங்களுடன் இருந்தனர். சிறுமிகள் சிலர் அப் போதும் அழுகுனிகளாகவே இருந்தனர். தட்டிவான் பூராவும் இலை குழைகளால் மறைக்கப்பட்டிருந்தது. அது நகர்ந்தபோது மரம் ஓடுவது போலவே இருந்தது. அது வேகமெடுத்தபோது புழுதி வீதியை மறைத்துக் கொண்டே வந்தது. ஒரு சிகப்பு புகை யாக எல்லாம் மறைந்து இருந்தது.

தட்டிவான் நின்ற இடம் மரங்களுக்குள் கட்டப்பட்ட வெள்ளைத் தறப்பாள் குடில்கள் நிறைந்த இடமாக இருந்தது. அங்கு முட்டி நின்ற சிறுமிகள் விடுப்பு பார்த்துக் கொண்டிருந்தனர்.

மீசை வைத்தவன், 'தம்பி, தங்கச்சியை இங்க விட்டுட்டு போவம். நாங்கள் சிறுவர்கள் வளரும் அறிவுச்சோலைக்கு போவம்' என் றான்.

அவனால் தாங்க முடியவில்லை. 'தங்கச்சியை விட்டு வரமாட்டன்' என்று அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டான்.

மீசை வைத்தவன், 'தம்பி, அடிக்கடி நீ தங்கச்சியை பார்க்கலாம். தோ... பக்கத்தில்தான் அறிவுச்சோலை' என்றான். 'நான் தங் காவை விடமாட்டன்' என்று கத்தி அழுதான். தங்காவும் அழ ஆரம்பித்தாள். மீசை வைத்திருந்தவன் கண்களை துடைத்துக் கொண்டு உள்ளே போனான். எல்லா சிறுமிகளும் அவர்களை சூழ்ந்திருந்தனர்.

இரண்டு மிஷின் பெட்டிகள் ஊர்வலம் போய் அதன் சத்தம் அடங் கிய நேரத்தில் மீசைவைத்தவன் ஒரு பெரிய அக்காவுடன் அங்கு வந்தான். அவள் இருவரையும் அணைத்து முத்தமிட்டாள். பிறகு கண்ணீரைத் துடைத்து விட்டு உள்ளே அழைத்துப் போனாள். 'தம்பி, தங்கச்சியை நான் பார்த்துக் கொள்வேன். இங்க பாரு... நீ அடிக்கடி வந்து பார்க்கலாம். இங்கு செஞ்சோலை பெண் பிள் ளைகள் மட்டும்தான் நிக்கலாம். அறிவுச்சோலையில் உன்னைப் போல பல தம்பிகள் இருப்பினம். அது அருகேதான் இருக்குது. நான் உன்ர தங்கச்சியை பக்குவமா பார்ப்பேன். என்ர தம்பி யல்லோ... சொல்லக்கேளடா' என்றாள்.

அவள் அவன் அம்மாவை போலவே வாயசைத்துப் பேசினாள். அவளை கட்டியணைக்க விருப்பப்பட்டான். அருகே சுற்றி நின்ற சிறுமிகளின் நெருக்கம் அவனை விடவில்லை.

தங்கையின் கையில் இருந்த பொம்மையை ஒரு சின்னப்பெண் பற்றி இழுத்தாள். அவள் விடவே இல்லை. அங்கு உள்ள சிறுமி கள் எல்லோரும் கூடி அந்த பொம்மையை பார்த்தபடி இருந்த னர். அந்த அக்கா தன் மேல் சட்டையால் அவன் முகத்தை துடைத்து 'நீ போய் வா தம்பி இவ்வளவு தங்கைகளோடு உன் தங்கச்சி இருப்பாள்' என்றாள். அந்த அக்காவின் பந்தமான பேச்சை கேட்டு தலை ஆட்டினான். மீசைக்கார அண்ணன் வந்து கைப்பற்றி அழைத்துச் சென்றான். சற்று தூரம் சென்றதும் கையை விடுவித்துக் கொண்டு ஓடி வந்தான். அந்த அக்காவின் இடுப்பில் பார்த்துக் கொண்டிருந்த தங்காவை அணைத்து முத்த மிட்டான்.

'அண்ணா வருவன்... அண்ணா வருவன்' என்று விட்டுப் போனான்.

அங்கிருந்த அக்கா மற்றப்பக்கம் பார்த்தவாறு இருந்தாள். அன்று தான் தன் அண்ணனை தங்கா கடைசியாகப் பார்த்தாள்.

•

13 ஆண்டுகள்...

வவுனிய கோவிற்குளம் சிவன்கோவில் வீதியில் சிறுமிகள் காப்ப கமான 'அருளகம்' இருக்கிறது. அதன் கதவை திறந்தபடி வெள்ளை வெளேரென்ற மடிப்புக்கள் சீரோடு இருக்கும் பள்ளி உடையில் பதினாறு வயது பால்நகை ஒருத்தி வெளியேறி, சாலையைக் கடந்து பஸ் தரிப்பிடம் நோக்கிச் சென்றுகொண்டிருந் தாள். அவள் முதுகில் தொங்கி இருந்த நீல நிறப்பை திறந்திருந் தது. அதை அவள் கவனிக்கவில்லை. அதற்குள் இருந்த சிறு பிள்ளைகளின் விளையாட்டுப் பொம்மையொன்று கீழே விழுந்தது. அந்தக்காட்சியைப் பார்த்ததும் எனக்குச் சிரிப்பாக இருந்தது. 'இந் தப்பெரிய பிள்ளை பொம்மைகளுடன் திரிகிறாள்' என்று நினைத்த படி.. 'ஏ... பிள்ள... தங்கச்சி... இதோ பொம்மை விழுந்திற்றுது' என்று கூவினேன். இருபக்கமும் எண்ணை தடவி பின்னி சிவப்பு றிபனால் மடித்துக்கட்டிய ஜடையும், சிவப்பில் வெள்ளைக் கோடு போட்டிருந்த ரையும் சேர்த்து திரும்பியது. இரட்டை ஜடைகளும் அட்டைகள் போல் மின்னின. என் சிரிப்பை கண்டுகொள்ளாமல் பொம்மையை அவுக்கென இழுத்தெடுத்தாள். முதுகுப்பையை திருப்பி முன் கொண்டுவந்து அதற்குள் பொம்மையை வைத்து விட்டு நடக்க ஆரம்பித்த பின்னர் ஏதோ மறந்தவளாக என்னை அப்போதுதான் பார்த்து 'நன்றி' என்றாள். உதடுகள் முடியும் இடத்தில் முடிச்சுப்போல சிரிப்பு இருந்தது.

நானும் பேரூந்தில் ஏற அவளுடன் காத்திருந்தேன். அதில் பய ணப்படும்போது தான் பேச்சுக் கொடுத்தேன். '... அண்ணாவை எங்கு தேடியும் இல்லை. ஆனால் அவன் ஒருநாள் வருவான்' என் றவாறு அவள் தன் இடம் வந்தபோது இறங்கிச் சென்றாள். பொம்மை உள்ளே பக்குவமாக நீலப்பையால் மூடப்பட்டிருந்தது.

அவள் அம்மா எரிந்தது போலவோ... அண்ணா மறைந்தது போலவோ... அவளோடிருக்கும் பொம்மையை யாரும் எதுவும் செய்திட முடியாது. பொம்மைகளை யாரும் வெறுப்பதில்லை. தங் காவின் ஆயுள்காலம் முடிந்தும் நாநூறு ஆண்டுகளுக்கு அந்தப் பொம்மை வாழும். அதுவரை மண்கூட
அதைத் தின்னமுடியாது.



akaran@thaiveedu.com

# மொழிபெயர்ப்பாளர்



**- நிரேஷ் ரட்ணம்**

உன்னை இழந்தது ஐந்து மாதத்திற்கு முன்பு. மரணம்... விவாக ரத்து... பிரிவு... எல்லாவற்றுக்கும் ஒரு தீர்வு உண்டு. ஆனால் மனதுக்கு நெருக்கமானவர்களை இழப்பது என்பது... எப்படி சொல்வது... வார்த்தைகள் இல்லாக் கதைசொல்லியா... உயிரில்லா வெற்றுக்கூடா... எப்படி சொல்வது...

சமீபத்தில் டெனிஸ் அரசாங்கம் அனைத்து அலுவலகங்களிலும் டெனிஸ் மொழி தெரியாதவர்கள் கட்டாயமாக மொழிபெயர்ப்பாளர் வைத்துக்கொள்ள வேண்டுமெனச் சட்டம் இயற்றியது. உறவினர்கள் மொழிபெயர்க்க முடியாது.

உன் இழப்பில் மூழ்கி இருந்ததால், அம்மாவிற்கு வந்த கடிதத்தில் என்ன இருந்தது என்று சரிவர படிக்கவில்லை. நிலையான சிந்தனையும் என்னுள் இல்லை. நான் பிறந்தது டென்மார்க்கில்.

ஆனால்... அம்மாவோ அவளது உயிரைப் பாதுகாக்க இந்த நாட்டிற்கு தஞ்சம் புகுந்தாள். அவள் கடந்து வந்த பாதை பெரிது. போர், இழப்பு, துரோகம், துன்பம்... என வரிசை பெரிதாக வளரும். அவள் சொந்த நாடு அவளுக்குக் கொடுத்ததைவிட புலம்பெயர்ந்த நாடு அதிகம் கொடுத்திருக்கு. என்னதான் இருந்தாலும் இது அவளுக்குப் புலம்பெயர்ந்த நாடு. அது அவளுக்கு தாய் நாடு. அவள் பல வருடங்கள் இங்கு வாழ்ந்தாலும், இது வெறும் புலம்பெயர் நாடு மட்டுமே. இந்த அந்நிய நாட்டில், அந்நியர்களுக்கு நடுவே, புரியாத மொழிக்குள், நிச்சயமாக அவளுக்கு என்னைவிட வேறு யாரும் இல்லை. அவளுக்கு நானும் எனக்கு அவளும் மட்டுமே.

ஒரு விடயத்தில் அவளைப் பார்த்து வியந்தும் பொறாமைப்பட்டும் இருக்கிறேன். அந்த ஒரு விடயம் அவளிடம் இருந்து பரம்பரையாக வராதா என ஏங்கி இருக்கிறேன். உன் பிரிவுக்கு அடித்தளமாய் இருந்த அந்த ஒரு விடயம்... மனத் தைரியம்.

அவள் மனத் தைரியத்தை எப்போழுதும், எந்த நேரத்திலும் இழந்ததே இல்லை. யாரும், எவரும் அவளது மனதைத் தாக்கி விடாமல் பாதுகாத்து வந்தாள்.

இப்பொழுது காத்திருக்கும் அறையில், அவள் பதட்டத்துடன் அருகில் அமர்ந்திருக்க, நானும் காத்திருந்தேன்.

வெள்ளாந்தியான சுவர், அதில் நீண்ட கருங்கூந்தலுடன் உணர்வற்ற முகமில்லா ஒரு செம்மண் நிற பெண் ஓவியம். அவளை ஒரு தங்க சட்டகத்திற்குள் படைத்திருந்தார் ஓவியர். புதுமைத்துவம் கலந்த ரெம்ப்ராண்ட் (Rembrandt) பாணி கியரஸ்கூகரௌ (chiaroscuro) ஒளியில் வரைந்த ஓவியம். அவளைக் குங்குமச் சிவப்பு நிற உடையுடன், மயில் பச்சை மேலாடையில், இருள் சூழ்ந்த அறையில் அமர்த்தியிருந்தார். அது ஒளியும் நிழலுமாய் வரைந்த படம்.

இந்த வெள்ளாந்தியான சுவருக்கு எதிரே உள்ள பெரிய கண்ணாடி ஜன்னல் மூலமாய் விழும் சூரிய ஒளி, அவளை மட்டும் காட்ட வில்லை, அந்த அறையையே ஒளிரச் செய்தது. அங்கிருந்த பச்சைச் செடிகள் அந்த அறைக்கு உயிர் கொடுத்தன. அறையில் முடியில்லா தொப்பி போட்ட ஒரு டெனிஸ் பெண்ணும், முக்காடு போட்டிருந்த ஒரு அரபுப் பெண்ணும் அவரது கணவரும் அமர்ந்திருந்தனர். அங்கு வெள்ளை உடை அணிந்த செவிலியர்களும் அங்குமிங்கும் நடந்தனர். வரவேற்பாளர் அங்கிருந்த கண்ணாடிக் கதவின் பின் கணினியின் முன் ஒளிந்து இருந்தார். அங்கு வந்த வெள்ளைத் தோல் செவிலியர்களுக்குள் ஒரு மாநிறத் தோல். நெற்றியில் சிவப்புப் பொட்டும், கையில் ரோல்ஸூம் ஏந்தி வந்தார்.

அம்மாவிற்கு நீ பரிசளித்த மயில் பச்சை சால்வை அவளது நடுங்கிய தோளிலிருந்து வழுகியது. அதை மீண்டும் அவள் தோளில் போடச், சால்வையின் நுனி நூல்கள் என்னை உரசியது. அதிலிருந்து வந்த உன் வாசம் என்னுள் புதைந்திருந்த உன் நினைவுகளை மீண்டும் எழுப்பியது. உன் நினைப்பில் மூழ்கியிருக்க, மாநிற செவிலியர் எடுத்து வந்த ரோல்ஸை கண்ணாடிக் கதவின் பின் ஒளிந்திருந்த வரவேற்பாளரிடம் கொடுத்தார்.

ரோல்ஸ் உனக்கு மிகவும் பிடித்த உணவு. அதற்காக நாம் போடாத சண்டையா. அம்மாவின் இரு கால்களும் தன் உடலைத் தாங்க மறுத்தாலும், உனக்காக அடுப்படியில் மணித்தியாலக் கணக்காய் கால் கடுக்க நின்று ரோல்ஸ் செய்வாள். அதையும் நீ ருசித்து உண்டு, ரகசியமாய் உன் காற்சட்டைப் பொத்தானைக் கழட்டி உன் குட்டித் தொப்பைக்கு விடுதலை கொடுப்பாய். அதேபோல் வயிறார உண்டபின் இந்த வரவேற்பாளரும் அவர் பெரும் வயிறுக்குக் கண்ணாடிக் கதவின் பின் ரகசியமாய் விடுதலை கொடுத்தார்.

**கா**த்திருக்கும் அறையில் உள்ள சிறிய திரையில் எங்கள் எண் தோன்றியது. எங்கள் எண்ணோ எங்களை ஒரு மார்பக ஊடுகதிர்ப் பட அறைக்கு அழைத்துச் சென்றது. அங்கு ஒரு செவிலியர், வெள்ளைத் தோலும் பொன்னிற முடியுமாய் இருந்தார். அவரது உச்சரிப்பு கொஞ்சம் கடினமாக இருந்தது. தடிப்பான வ யும் ன யும், மெல்லிய ச ரும் ஐ யும், அவர் மொழியைப் புரிந்து கொள்வது தந்தரமாக இருந்தது. ஆனால் உனது உச்சரிப்பை பழகிய எனக்கு இவரைப் புரிந்து கொள்வது கடினம் இல்லை. அவர் சொன்ன முக்கியமான வார்த்தைகளைக் கோர்வைப்படுத்தி, பொருள் உணர்ந்து, அவருக்குப் பதில் அளித்தேன்.

‘என் அம்மாவுக்குத் தமிழைத் தவிர வேறு மொழிகள் தெரியாது. நான் அவளுக்காக மொழிபெயர்க்கிறேன்.’

‘உறவினர்களோ, நண்பர்களோ மருத்துவக் காரியங்களில் மொழி-பெயர்க்கக் கூடாது என்று புதுச் சட்டம் சொல்கிறது. இங்கு ஒரு தமிழ்ச் செவிலியர் வேலை செய்கிறார், அவரிடம் கேட்டுப் பார்க்கிறேன்.’ என்று சொல்லிப் பொன்னிற முடி செவிலியர் செல்ல, ஒரு தொழில்நுட்ப செவிலியர் அம்மாவை மார்பக ஊடுகதிர்ப் பட அறைக்குள் அழைத்துச் சென்றார். நானும் வெளியே தனியாக அமர்ந்திருந்தேன். உன் இழப்புக்குப் பின் உன் அருமை புரிந்தது. இந்த வெறுமையான காத்திருப்பில் உன்னைப் பற்றிய ஏக்கமும் அதிகரித்தது. சிறிது நேரத்தில் அம்மா வெளியே வந்தாள், பொன்னிற முடி செவிலியரும் வந்தார். அவர் தனது உடைந்த உச்சரிப்பில் சொன்னார்,

‘அந்தத் தமிழ் செவிலியர் வேலையில் இருப்பதாலும், தமிழ் மொழிபெயர்ப்பாளர்களை இந்த நேரத்தில் அவசரத்துக்குப் பிடிக்க முடியாத காரணத்தினாலும், உன் அம்மாவுக்கு நீயே மொழிபெயர்க்கலாம். ஆனால், உன் அம்மாவை நாங்கள் மேல் துணி இல்லாமல் தான் பரீட்சிக்க வேண்டும். இங்கு இருப்பது உனக்கு சம்மதமா?’

நான் பதட்டத்தில் தலையாட்டினேன். அதற்கு அவர் பதில் அளித்தார்,

‘சில கலாச்சாரத்தில் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள், அதனால் தான் கேட்டேன். உன் அம்மாவிற்குச் சம்மதமா?’

நான் அம்மாவிடம் மொழிபெயர்த்து கூறினேன். அதற்கு அம்மா சொன்னாள்... ‘வேற எந்த வழியும் இல்லையே, என்னமோ சம்மதம்னு சொல்லாட்டிக்கு மட்டும் இப்பவே விட்டுடுவாங்களா.’

நான் பொன்னிற முடி செவிலியரிடம் அம்மாவிற்கும் சம்மதம் என்று கூற, அவர் பதிலளித்தார்,

‘அடுத்தது இரத்தப் பரிசோதனை எடுக்க வேண்டும். நான் அவர்களிடம் பேசிவிட்டேன். நீங்கள் இங்கிருந்து நான்காவது மாடிக்குச் செல்லுங்கள். அங்கு உங்களுக்காக நேரம் எடுத்திருக்கிறேன்.’

அங்கு போகும் வழியில் பதட்டமாக அம்மா கூறினாள், ‘கொஞ்சம் சீரியஸ் தான் போல இருக்கு. போன வாரம் தான் டெஸ்ட் எடுக்கணும்னு கூப்பிட்டு, ஊசி போட்டாங்க, இரத்தம் போத்தல் போத்தலா எடுத்தாங்க. இப்ப என்னத்த அப்படி சீரியஸா கண்டுபிடிக்கப் போறாங்களாம்.’

அம்மாவிற்கு ஊசி என்றால் பயம். அவள் செம்மண் நிறத் தோலோ மென்மையானது. சென்சிடிவ் தோல். அதில் சில சிறிய தழும்புகள் உள்ளன. அதற்குக் காகிதமே காரணம். அவள் குழப்

பத்தை மறைத்த சிரிப்பை உடுத்திக்கொண்டு இரத்தப் பரிசோதனை அறைக்கு வந்து ஐந்து சிறிய குப்பி இரத்தங்களைக் கொடுத்தாள்.

அங்கிருந்த செவிலியர் நிழற்படம் எடுப்பதற்காக எங்களை ஆறாவது மாடிக்குத் திருப்பியும் அனுப்பினார். அங்கும் நான் வெளியில் காத்திருக்க அம்மா உட்சென்று வெளிவந்தாள். அம்மாவுடன் வெளிவந்த ஆய்வுகூடத் தொழில்நுட்பவியளாளர் சொன்னார்,

'மார்பக ஊடுகதிர்ப் படத்துக்காக இரண்டாவது மாடிக்கு செல்லுங்கள். நான் அவர்களிடம் பேசி உங்களுக்காக நேரம் எடுத்திருக்கிறேன்.'

வரும் வழியில் அம்மா மீண்டும் சிறு புன்னகையுடன் சொன்னாள், 'முதல்ல ஒரு மூணு நாலு பேர் தான் இருக்கும். அவங்க என்னை வச்சு நல்லா செஞ்சதுக்கு அப்புறம் இன்னொருத்தனுக்குப் போன் பண்ணிச் சொன்னான், மச்சான் அல்லக்கை ஒருத்தி சிக்கி இருக்கா, நீ ஃப்ரீயாடா. அதுக்கு அவன் என்ன சொன்னான்னு தெரியல. ஆனால் இவனுங்க முடிச்சதுக்கு அப்புறம் என்னை லிப்ட்ல ஏத்தி நாலாவது மாடிக்கு அனுப்புனாங்க. அங்க ஒரு ஏழு பேர். கதறக் கதற ஐஞ்சு போத்தல் இரத்தம் எடுத்துட்டாங்க. எடுத்துட்டு திருப்பி லிப்ட்ல ஏத்துனாங்க. சரி நம்மள வீட்டுக்கு தான் அனுப்புறாங்களோன்னு நம்பி ஏறினேன். அது நேரா ஆறாவது மாடிக்குப் போய் நின்னுச்சு. அங்க ஒரு ஒன்பது பேரு, ஒரு மணி நேரம், மூச்சுத் திணறத் திணற வச்சு செஞ்சாங்க. இப்ப திருப்பியும் இரண்டாவது மாடிக்கு அனுப்புறாங்க. சரி என்னமோ செஞ்சு தொலைங்கடான்னு விடலாம்ன்னு பார்த்தா, இப்ப என்ன மூத்திரச் சந்து மூத்திரச் சந்தா அனுப்பி, வடிவேலு மாதிரி பொலம்ப வச்சுட்டாங்க.'

என்னுள் ஒரு சின்னச் சிரிப்புப் பிறக்க, நாங்களும் திசு சோதனை அறைக்கு வந்து சேர்ந்தோம். அதே பொன்னிற முடி செவிலியர். அவர் அங்கிருந்த நாற்காலியில், சுவர் அருகே என்னை அமருமாறு கேட்டுக் கொண்டார். அம்மாவும் பக்கத்து அறைக்குத் துணி மாற்றச் சென்றாள்.

நான் உணர்வு இல்லா உடலாய் அங்கு அமர்ந்திருந்தேன். அது ஜன்னல் இல்லா மூடிய அறை. ஒளி வரும் ஒரே வழி குழல் விளக்கு மட்டுமே. வெள்ளைக் காகிதத்தால் மூடிய ஒரு பச்சைப் படுக்கை. அது நிச்சயமாக ஒரு மென்மையான மெத்தை கிடையாது. யாரும் இங்கு நிரந்தரமாய்ப் படுத்திடக் கூடாது என்பதற்காகவே உருவாக்கப்பட்டது போல் இருந்தது. ஒரு சிவப்பு அவசர உதவி நூல் படுக்கைக்கும் வெள்ளை சுவருக்கும் பாலமாய் இருந்தது. வெள்ளித் தட்டுக் கொண்ட ஒரு மேசை. அதில் உபகரணங்கள் புதிதாய் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தன. அந்தப் படுக்கையைச் சுற்றி உருட்டல் நாற்காலிகள் இருந்தன. படுக்கைக்கு மேலே ஒரு கணினித் திரையும், சுவர் அருகே சில நாற்காலிகளும் இருந்தன. அதில் ஒன்றில் தான் நான் அமர்ந்திருந்தேன்.

சிறிது நேரத்திலேயே ஒரு மருத்துவர் வெள்ளை மேலாடையும், கருப்பு கோஷாவும் அணிந்து வந்தார். அவருடைய கண்கள் திடமாகவும் நம்பிக்கையுடனும் இருந்தன. அவரது புருவங்கள் உன் அளவு சீராக இல்லையென்றாலும், ஓரளவுக்குச் சீராக இருந்தன. அவர் எப்படி அதை வடிவமைத்திருப்பார் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் உன் புருவங்களை நூல் இழைத்தல் மூலம் அவ்வளவு நேர்த்தியாக வடிவமைத்திருப்பாய். ஒவ்வொரு முறையும் நீ முடித்ததற்கு பின், அது சமச்சீராக வளைந்து இருக்கும். என் கருத்தையும் தெரிந்து கொள்வதற்கு ஒவ்வொரு முறையும் என் முன்னே நிற்பாய். நீ இருந்தவரை உன்னை மெச்சியது இல்லை, கவனித்ததுகூட இல்லை. எல்லா நேரமும் நீ என்னுடன் இருப்பாய் என்று உன் அழகை என்னுள்ளேயே ரசித்திருப்பேன். நிச்சயமாக உன் புருவத்திற்கு முன்னே கோஷா அணிந்த மருத்துவரின் புருவங்கள் நிற்க முடியாது.

கையுறைகளை அணிந்து கொண்டு அவர் முன்னே சென்றார். கையுறைகள் அவரது கையில் இழுபட்ட ஓசையில், நான் அறியாமல் எனது உணர்வு இல்லாத உடல் விழித்தது. அம்மா ஒரு துண்டை அணிந்து அறைக்குள் நுழைந்தாள். அவள் முகத்திலோ புன்னகை கசிந்து குழப்பம் கலந்த பயமாய் நிரம்பி இருந்தது. கோஷா அணிந்த மருத்துவர் அம்மாவைப் பச்சைப் படுக்கையில் படுக்கச் சொல்லி உட்கூரை விளக்கை அணைத்தார்.

அந்த இருளில் அம்மாவின் மேல் குவி விளக்கின் வெளிச்சம் விழ கியரஸ்கூரௌ (chiaroscuro) ஒளியில் படுத்திருந்தாள். கியரஸ்கூரௌ ஒளியை ஓவியர் ரெம்ப்ராண்டின் ஒளி என்றும் அழைப்பர். ஓவியர் ரெம்ப்ராண்ட் படத்தின் ஆழத்தையும் தீவிரத்தையும் காட்ட கியரஸ்கூரௌ ஒளியை உபயோகப்படுத்தி இருப்பார்.

மருத்துவர் செயல் முறையை விளக்க, நானும் வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்த்தேன்,

'உங்க வலது மார்பகத்துல எக்ஸ்ரேல இயல்பற்ற கட்டி ஒன்னக் கண்டுபிடிச்சோம். நாங்க ரெண்டு மார்பையும் முழுமையாப் பரிசோதித்த போது, அதே இடத்தில ஒரு கட்டிய உணர்ந்தோம். அது ஒரு கட்டியா இல்லையா பயோப்ஸி பரிசோதனை செஞ்சு பார்க்கணும். நான் உங்களுடைய மார்பில கிரீம் பூசனும். அது குளிரும்.'

அவள் என் முன்னே படுத்திருந்தாலும், அவளைப் பார்க்கும் துணிவு எனக்கு இல்லை.

'ஸ்... குளிருது' என்று முனங்கினாள். அந்த சத்தம் அலரலோ சலசலப்போ இல்லை. என் அம்மாவின் குரலில் ஓர் அசௌகரியம் இருந்தது. உன் இழப்பின் செய்தியை அறிந்த நேரத்தில் ஒலித்த அதே குரல்.

கோஷா அணிந்த மருத்துவரும் பொன்னிற முடி செவிலியரும் அவளின் மார்பை சிறிது நேரம் ஸ்கேன் செய்தார்கள். அவர்கள் கண்களோ மேலிருந்த கணினித் திரையில் இருந்து விலகவில்லை. அவர்கள் முகத்தில் எந்த விதமான உணர்ச்சிகளும் தென்படவில்லை. இது எனக்குப் புதிது. அவர்களுக்கோ அன்றாடம். நானும் அவர்களுடன் ஒன்றும் புரியாமல் கணினித் திரையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கணினித் திரையில் கருப்பு வெள்ளைக் கோடுகள் அங்குமிங்கும் மெதுவாக அடர்த்தியாக அலைந்து கொண்டிருந்தன. கோஷா அணிந்த மருத்துவர் ஓர் இடத்தில் நின்று பொன்னிற முடி செவிலியர்க்குக் காண்பித்தார்,

'இதோ கட்டி தெரிகிறதா?'

எனக்கு ஒன்றும் புரியவில்லை. கணினித் திரையில் ஒரு புள்ளியைத் தவிர வேறு ஏதும் தென்படவில்லை. கோஷா அணிந்த மருத்துவர் அந்தக் கரும்புள்ளியைச் சுற்றி ஸ்கேன் செய்தார்.

'அது திடமான கட்டி போல் இருக்கிறது. கட்டி ஒன்றும் அவ்வளவு பெரிதல்ல' எனக் கூறினார். கோஷா அணிந்த மருத்துவர் அடுத்த செயல் முறையை விளக்க நானும் வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்த்தேன்.

'நாங்க தேடுனதுல கண்டுபிடிச்சோம், கட்டி இங்க தான் இருக்கு. இப்ப இந்தக் கட்டிய பயோப்ஸி செஞ்சா தான் தெரியும் அது தீங்கற்றதா அல்லது வீரியம் மிகுந்ததா என்பது. கட்டியில உணர்வுநீக்கி ஊசி செலுத்த வேண்டும். அப்புறம் அந்தக் கட்டியில

ஒரு சின்னப் பகுதியை எடுத்து நாங்க பரிசோதனைக் கூடத்திற்கு அனுப்புவோம். நான் அந்தப் பகுதியை எடுக்கும் போது ஒரு கிளிக் சத்தம் கேட்கும்.'

படுத்திருந்த அம்மாவின் பயம் அதிகரிப்பதை என்னால் உணர முடிந்தது. என் குரலில் உள்ள நடுக்கமும் அதிகரித்தது. உன்னைப் போலவே அம்மாவுக்கும் ஊசி என்றால் பயம். அம்மா வாலோ காகித வெட்டைக்கூட தாங்க முடியாது. உன் இழப்பில் அவள் பெற்ற மனத் துன்பத்தை விளக்க முடியாது. அது மன வலி, இது உடல் வலி. அவளது மார்புக் கொழுப்பை உணர்வு நீக்க ஊசி வலுக்கட்டாயமாகப் பிளந்து செல்லும் காட்சி கணினித் திரையில் தெளிவாக ஒளித்தது. ஸ்... என்ற ஒலியையும் அம்மா எழுப்பினாள். இரண்டு, மூன்று முறை முயற்சி செய்தும் கட்டியில் ஊசியை ஏற்றுவது தோல்வியில் முடிந்தது. கட்டியும் அவளின் மன தைரியத்தைப் போல் திடமாகவும் அசைந்து கொடுக்காமலும் திண்மமாய் இருந்தது. நான்காவது முறை அவள் வலியைத் தாங்க முடியாமல் நானே ஸ்... என்று முனங்கினேன். அந்தக் கட்டியுடன் நடந்த போராட்டத்தில் தோல்வியை ஏற்ற கோஷா அணிந்த மருத்துவர் கூறினார்.

'என்ன மன்னிச்சிடுங்க. அந்தக் கட்டி ரொம்பத் திடமா இருக்குது. என்னால அதுல உணர்வுநீக்க ஊசி போட முடியல. நான் இப்ப கட்டியச் சுற்றி உணர்வுநீக்க ஊசி போடுறேன். எறும்பு கடிச்ச மாதிரி வலிக்கும்.'

கோஷா அணிந்த மருத்துவரும் கட்டியைச் சுற்றி அவள் மார்பில் மீண்டும் உணர்வுநீக்க ஊசியை ஏத்த, அவளும் வலியில் உரத்த குரலில் கத்தினாள். அவள் வலியைக் கேட்க, என் பார்வையும் கணினித் திரையில் இருந்து அவள் மேல் விழுந்தது. கோஷா அணிந்த மருத்துவரும் பொன்னிற முடி செவிலியரும் எங்கள் இடையே நின்று அவளை மறைத்திருந்தனர். ஆனாலும் அவளின் வலி நிறைந்த முகத்தைக் கண்டேன். அவள் கைகளால் அவள் முகத்தை மூடிக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் வலியின் சூட்டோடு நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தது. அவளது அலறலும் வேகமாக அதிகரித்தது. கோஷா அணிந்த மருத்துவரும் விவரித்தார்,

'நான் இப்ப அந்த கட்டியில இருந்து கொஞ்சம் திசு மாதிரி (sample) எடுக்கனும். திருப்பியும் கொஞ்சம் கிளிக் சத்தம் வரும், தேனீ கொட்டறது போல குத்தும்.'

வார்த்தை வார்த்தையாய் மொழிபெயர்த்தது அவளுக்குப் புரிந்ததா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. கிளிக், அவள் ஒரு பலத்த அலறலை ஏற்படுத்தினாள். மேலும் மேலும் கிளிக் சத்தங்கள் விழுந்தன. ஒவ்வொரு கிளிக்கிலும் அவளின் அலறலும் அதிகரித்தது. கோஷா அணிந்த மருத்துவரும் திசு மாதிரி எடுத்த பின், கையுறையைக் கழட்டி என் பக்கம் திரும்பினார். பொன்னிற முடி செவிலியர் அம்மாவிற்குப் பின்னணியில் உடையணிய உதவி செய்தார்.

ஒன்றும் புரியாத நிலையில் அமர்ந்திருந்த நான், எதிரே வந்த கோஷா அணிந்த மருத்துவரிடம் கேட்டேன்,
'என்ன ஆச்சு? முடிவு எதாவது தெரியுமா?'

கோஷா அணிந்த மருத்துவர் சாந்தமான குரலில் எனக்கு பொறுமையாக விளக்கினார்,

'உனது அம்மாவின் வலது மார்பில் ஒரு கட்டியைக் கண்டுபிடித்தோம். அதிலிருந்து திசு மாதிரி எடுத்துப் பரிசோதனைக்கு அனுப்பினால் தான் தெரியும் அந்தக் கட்டியின் விவரம். என்னுடைய அனுபவத்தில் இது 95% புற்றுநோய்க் கட்டியே.'

புற்றுநோய். அந்த வார்த்தைக்கே ஓர் ஆழமான வலி உண்டு, சக்தியும் உண்டு. என்னுள் அதே கிளிக் ஒலி. இம்முறை என் இதயத்தை வார்த்தையால் கொட்டினார் இந்தக் கோஷா அணிந்த மருத்துவர். அன்று நீ சொன்ன அதே வார்த்தைகள் என்னுள் எதிரொலித்தது.

'எத்தனை தடவை உனக்கு நான் சொல்றது. எனக்கு மன அழுத்தம் இருக்குதுன்னு. மன அழுத்தம் புற்றுநோய் மாதிரி ஒரு கொடிய நோய். புற்றுநோயை மாதிரியே கண்ணுக்குத் தென்படாமல் உடம்புக்குள் ஊடுருவும். இறுதியில் புற்றுநோயைப் போலவே உயிரைக் கவ்வும். ஏன் உன்னாலயோ மத்தவங்களாலயோ இதப் புரிஞ்சிக்க முடியல? நீங்க எல்லாம் எப்ப இதப் புரிஞ்சிக்குவீங்க? இதுக்காகத் தான் ஒவ்வொரு வாரமும் மனநல மருத்துவர் கிட்ட போயிட்டு இருக்கேன். என்னமோ ஆசையில போறன்னு நினைச்சுக்காத, வேற வழி இல்லாமத்தான் போயிட்டு இருக்கேன்.'

நீ கெஞ்சின பொழுது உனக்கு நான் ஆதரவு கொடுக்கவில்லை. உன் இழப்பில் இருந்து நான் கற்றுக் கொண்டேன். இப்பொழுது எனக்கு அம்மா மட்டும் தான், அவளுக்கும் நான் மட்டும்தான். எனக்கு வேறு வழி இல்லை, நான் மட்டும்தான் என்னைத் திடமாக்க முடியும். இப்படி என்னுள் பல எண்ணங்கள் ஓடியது. அப்பொழுது கோஷா அணிந்த மருத்துவர் சொன்னார்.

'பரிசோதனையின் பதில் வந்தாத்தான் நிச்சயமாத் தெரியும். அது இன்னும் ஓரிரு நாட்களில் வந்துவிடும். அதுவரை நம்பிக்கையுடன் காத்திருப்போம்.'

மனதை மத்துறு தயிர் எனக் கடைய விடாமல், 5% நம்பிக்கையைப் பிடித்து அம்மாவுடன் அறையை விட்டு வெளியேறினேன். எங்களுடனே அமைதியும் தொடர்ந்தது. அமைதியைக் கலைக்குமாறு அம்மா கேட்டாள், 'இப்ப எந்த மூத்திரச் சந்துக்கு என்னத் திருப்பியும் அனுப்புறாங்களாம்.'

இந்த நெருக்கடி நிலையிலும் என்னுள் ஒரு புன்னகையை எழுப்பினாள். அவள் மீண்டும் கேட்டாள், 'கடைசியா அந்த டாக்டர்கிட்ட பேசினாயே என்ன சொன்னாங்க?'

யோசனைகள் என்னுள் அலைமோதியது. நானும் முன்னோக்கி நடந்தேன். தைரியம் வந்த வழியும் தெரியவில்லை, துணிவு நுழைந்த இடமும் புரியவில்லை. நான் அம்மாவின் கண்களைப் பார்க்க முடியாமல் கூனிக் குறுகி, மெய் மறைத்தேன்.

நாங்களும் மௌனத்தில் வீடு வந்து சேர்ந்தோம். தனிமையில் அன்று இரவு எனக்கு உறக்கம் இல்லை. கத்தினேன், கதறினேன், என்னுள் புதைந்த வலியை வெளிக்காட்டத் தெரியாமல் நரக வேதனை அனுபவித்தேன். தனிமையின் வலி, ஒரு கொடிய உண்மை. இன்பமோ துன்பமோ பகிர்வதற்கு நீ இல்லாமல், வலுவிழந்த நிலையில் விழுந்து அழ உன் தோள் கிடைக்காமல், தனிமை என்னும் இருளில் நம்பிக்கையைத் தேடினேன். அது இறப்புக்கும் பிறப்புக்கும் இடையில் உள்ள நிலையைவிட கொடுமையானது.

கோஷா அணிந்த மருத்துவர் தந்த நம்பிக்கையைப் பிடித்து பரிசோதனையின் பதில் வரும் வரை காத்திருந்தேன். கடைசி வரை அவள் கண்களை என்னால் பார்க்க முடியவில்லை.

புற்றுநோயைப் பற்றி விவரம் தேடினேன். ஏன், எதற்கு, எப்படி,

என்னுள் கேள்விகள் மட்டுமே மிஞ்சின. நான் விசாரித்ததில் புற்று நோய்க்கான பிரதான காரணங்களை மூன்றாகப் பிரிக்கலாம். அது கதிர்வீச்சின் காரணமாக உருவாகி இருக்கலாம், வேதிப்பொரு ளால் தூண்டப்பட்டிருக்கலாம், மரபணு வாயிலாக வந்திருக்க லாம். எனது அம்மா புறவூதாவோ அல்லது கதிர்வீச்சுக் கசியும் இடத்திலோ வேலை செய்தது இல்லை. எனது அம்மாவிற்கு புகை பிடிக்கும் பழக்கமோ மது போதைப் பழக்கமோ இல்லை. அவள் தீவிர சைவர். அவள் வாழ்க்கைமுறையில் ஒரு உயிருக்குக் கூடத் தீங்கு நினைத்ததில்லை. அவள் எந்த வேதிப்பொருட்களையும் தெரிந்தே உண்டதுமில்லை. அவளின் பரம்பரையில் எங்களுக்கு தெரிந்து யாருக்கும் புற்றுநோய் இருந்ததில்லை. என்னால் வேறென்ன செய்ய முடியும். அவளினுள் வளரும் மரணத்தைத் தள்ளிப்போட மட்டுமே முடியும், தாண்டிப்போக முடியாது. எப்படி அவளுக்கு வந்திருக்கலாம். வெறும் பதில் இல்லாக் கேள்விகள் மட்டும் மிஞ்சின.

மருத்துவமனையில் இருந்து செய்தி கிடைத்தது. நாங்கள் காத்திருக்கும் அறையில் பதட்டத்துடன் மீண்டும் அமர்ந்திருந்தோம். இம்முறை பிரகாசமான மாலைச் சூரியன், அமைதியாக இருந்த காத்திருக்கும் அறையை ஒளிரச் செய்தது. இங்கு நாலைந்து பேர் தான் இருந்தாலும், பதற்ற நிலையும் பயங்கலந்த எதிர்பார்ப்பும் அறையெங்கும் நிரம்பி இருந்தது. எனது எண்ணங்களை அலை மோத விடாமல், என்னுள் உதிர்ந்த கேள்விகளோடு அமர்ந்திருந்தேன். அவளுக்கு புற்றுநோய் வருவதற்கு வாய்ப்பு இல்லை, அவளும் அதற்கு இடம் கொடுத்ததில்லை. உச்சகட்டக் காய்ச்சலில் கூட மருந்து எடுக்க மறுத்தவள். உணவே மருந்து என்பதை ஆழமாக நம்பியவள். உன்னைப் போலவே, அவளது உடல் நிலை மீது எப்பொழுதும் அவள் கவனம் கொண்டவள். அவளுக்கு புற்று நோய் இருக்கலாம் என்ற செய்தி கேட்டதிலிருந்து எனது வாழ்க்கை ஒரு நிலையில்லாத் தன்மையாய் மீண்டும் மாறியது. உன்னை இழந்த போது நான் சென்ற அதே பாதையில் மீண்டும் நடந்தேன். அந்த 5% நம்பிக்கையை இறுக்கிப்பிடித்து இப்பொழுது இங்கே அமர்ந்திருக்கிறேன். அம்மாவிற்காக நீயும் இல்லை, அவளை பார்க்கும் பொறுப்பையும் நானே எடுத்துக் கொண்டேன்.

அதே வெள்ளாந்தியான சுவர். அதே நீண்ட கருங்கூந்தலுடன் உணர்வற்ற முகமில்லாச் செம்மண் நிறப் பெண். அவள் இன்னும் தங்கச் சட்டகத்திற்குள் தான் அடைந்திருக்கிறாள். வரவேற்பாளரும் அதே கண்ணாடிக் கதவின் பின் கணினியின் முன் ஒளிந்து இருந்தார். மாநிறத் தோற் செவிலியர் எவரும் அங்கு இல்லை.

நீ பரிசளித்த போசில் (Fossil) கைக்கடிகார முட்கள் மணிக்கட்டில் சத்தமாக நகர, நீ கொடுத்த கருப்பு மறுசுழற்சி செய்யப்பட்ட முதுகுப் பையை நான் அணிந்திருந்தேன். உன்னைத் தேடி, உன் ஆதரவுக்காகக் காத்திருந்தேன். அம்மாவும் நீ பரிசளித்த மயில் பச்சைச் சால்வையை அவள் நம்பிக்கைக்காகப் போர்த்திருந்தாள்.

மறுபடியும் காத்திருக்கும் அறையில் உள்ள சிறிய திரையில் எங்கள் எண் தோன்றியது. இம்முறை அது ஒரு சிறிய அறைக்கு எங்களை அழைத்துச் சென்றது. அதே பொன்னிற முடி செவிலியர். அதே கடினமான உச்சரிப்பில், தலைமை மருத்துவர் வரும்வரை எங்களை அமரச் சொன்னார். அறை சிறிதாக இருந்தாலும் சுவர் உயரமாக இருந்தது. வெள்ளை நிறப் பெரிய மரக் கண்ணாடி ஜன்னல். ஜன்னல் வழியே ஒளி நம்பிக்கையால் நிரப்பி, உயரமான சுவரில் விழுந்து அறை முழுவதும் எதிரொளித்து. அதில் H.C. Andersen எழுதிய அழகில்லாத வாத்துக் குஞ்சின் வரைபடம் ஒன்று தொங்கியது. மேசையைச் சுற்றி நான்கு நாற்காலிகள் இருந்தன. அதன் அருகே வெள்ளைக் காகிதத்தால் மூடிய ஒரு பச்சைப் படுக்கை. எதிரொலியை உட்கொள்ளும் துணித் திரையும் இல்லை.

நாங்கள் அங்கு அமர்ந்திருக்க, எங்கள் முன்னால் பொன்னிற முடி செவிலியரும் அமர்ந்தார். ஒரு சிறிய முன்னுரைக்குப் பின் பொன்னிற முடி செவிலியர் மொழிபெயர்ப்பாளரைத் தொலைப் பேசியில் அழைத்தார். அது ஒரு பழைய உடைக்க முடியாத நோக்கியா (Nokia) தொலைபேசி. அவர் தொலைபேசியை ஒலிப் பெருக்கியில் இணைத்தார். அது ஓர் ஆழமான மூத்த ஆண் குரல்,

'வணக்கம், நான் வந்து மொழிபெயர்ப்பாளரா வேலை செய்றன். நான்தான் இன்றைக்கு உங்களுக்கு டாக்டர் சொல்றத மொழி பெயர்க்க போறேன். நான் கனகாலமா மொழிபெயர்ப்பாளரா இருக்கிறேன். அந்த அனுபவத்தையும் வைத்துத்தான் உங்களுக்கு நான் சொல்ல போறேன்.'

ஓர் அமைதி. எனது அம்மா அருகில் நடுங்கிய உடலோடு இருக்க எனது இதயத்துடிப்பின் வேகம் அதிகரித்தது. மொழிபெயர்ப்பாளரின் சொற்களோ என் காதுகளில் மெல்லியதாய் ஒலித்தது. ஒரு முதிர்ந்த பெண் நீளச் சட்டையும் வெள்ளை மேலாடையும் அணிந்து வந்தார். பொன்னிற முடி செவிலியர் அவரைத் தலைமை மருத்துவர் என அறிமுகப்படுத்தினார். அவர் மெல்லிய மூக்கு கண்ணாடியும் குட்டை முடியுமாய் இருந்தார். அவரின் மென்குரலில் சாந்தமாய் எங்களுக்குத் தன்னைத்தானே அறிமுகப்படுத்தினார். மொழிபெயர்ப்பாளர் இவர் தான் உங்கள் தலைமை மருத்துவர் என்று ஒரு வரியில் அறிமுகப்படுத்தினார். வெகு நேரம் எடுத்துக் கொள்ளாமல் உடனடியாகவே தலைப்புக்குள் சென்றார்,

'நேற்று முன்தினம் திசு மாதிரி எடுத்து ஆய்வுக்கூடத்துக்குப் பரி-சோதனைக்காக அனுப்பி இருந்தோம். அதன் பதில் இப்பொழுது வந்திருக்கிறது'

அதை மொழிபெயர்ப்பாளர் இவ்வாறு மொழிபெயர்த்தார்,
'நாங்கள் சந்தேகப்படறோம் ஒரு கட்டி இருக்குது. அதை நாங்கள் பரிசோதிச்சுட்டோம். அதன் முடிவு நாங்கள் இப்போ உங்களுக்குச் சொல்லப் போறோம்.'

அருகில் இருந்த அம்மாவின் பயமும் நடுக்கமும் அதிகரிப்பதை என்னால் உணர முடிந்தது. தலைமை மருத்துவர் அவரின் சாந்தக் குரலில் பதிலைத் தெரிவித்தார்.

'பரிசோதனையின் முடிவில் இது புற்றுநோய் செல்கள் என்று உறுதிப்படுத்தி இருக்கிறார்கள்.'

மொழிபெயர்ப்பாளரின் குரல் எழும்புவதற்கு முன்பே, புற்று நோய் என்ற வார்த்தை அம்மாவின் காதுகளில் விழ, கண்களில் இருந்து வேகமாகக் கண்ணீர் நீர்வீழ்ச்சி போல் கொட்டியது. கோஷா அணிந்த மருத்துவர் எனக்கு ஏற்கனவே எச்சரித்திருந்தார். தலைமை மருத்துவர் சொன்ன பதில், இந்தத் துணி இல்லாப் பெரிய சுவரில், சிறிய அறையினுள், எதிரொலித்தது. காயத்தின் மீது குத்துவது போல் மொழிபெயர்ப்பாளர் சென்னார்,

'இப்ப இந்தச் செய்தியைக் கேட்க உங்களுக்குக் கஷ்டமா இருக்கும். ஒரு கஷ்டமான செய்தியை. நீங்க வந்து உங்க தன்னம்பிக்கையை இழக்கக்கூடாது, இதில வந்து தைரியமாச் செயல்படனும். நாங்கள் எடுத்த பரிசோதனை சொல்லுது அந்தக் கட்டி வந்து உங்களுக்கு புற்றுநோய்.'

அறையினுள் நிசப்தம் உலாவ, தலைமை மருத்துவரும் அம்மாவின் கைகளைப் பற்றி விவரித்தார்,

'பதிலைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இது குணப்படுத்தக் கூடிய நோய். மேம்பட்ட தொழில்நுட்பத்திலும், முன்னேறிய மருத்துவத்திலும், இந்நோயை உறுதியாகக் குணப்படுத்த முடியும். இங்கு வேலை செய்யும் மருத்துவர்களும் செவிலியர்களும் மிக

வும் திறமையானவர்கள். நாங்கள் பலரையும் மார்பகப் புற்றுநோ யிலிருந்து குணப்படுத்தி இருக்கிறோம். சிகிச்சை முடிந்த பின் அவர்களும் இயல்பான உடல்நலமான வாழ்க்கைக்குத் திரும்பி யுள்ளார்கள். உங்களைப் பாதுகாப்பாகக் கவனித்துக் கொள் வோம். எனக்குத் தெரியும் இது ஒரு கடினமான செய்தி என்று. தயவுசெய்து திடமாக இருங்கள். நாங்கள் இருக்கிறோம். உங்க ளுக்காக ஒரு சிகிச்சைத் திட்டத்தையும் உருவாக்கி இருக்கி றோம்.'

அம்மாவின் அழுகையால் பொங்கிய முகம் எல்லாவற்றையும் தெரிவித்தது. வெற்றுத்தாளைப் பார்ப்பது போல் நானும் தலைமை மருத்துவரைப் பார்த்தேன். மொழிபெயர்ப்பாளர் சென் னார்,

'டொக்டர் சொல்வதை வைத்துப் பார்த்தா இது உங்களுக்குக் கஷ்டமான செய்தி. இதப் பற்றி கனக்க யோசிக்கத் தேவையில்ல. இந்த வருத்தம் வந்த கூடுதலான ஆக்களுக்கு மாத்தியிருக்கி றோம். இப்ப இருக்கிற வசதி வாய்ப்புகளை வைத்து நாங்க உங்க வருத்தத்தை மாத்திடலாம் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கு. எனக்கு இந்த மாதிரி கனக்கப்பேரப் பார்த்த அனுபவம் நிறையவே இருக்கு. எனக்குத் தெரிஞ்ச அளவுக்கு எல்லாரும் நல் லாச் சுகமாயிருக்கினம். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நீங்களும் அவர்களை மாதிரி சுகமாயிடுவீங்க. இப்ப நீங்கள் நல்ல கவனமாய் இருக்கோனும். அதைவிடத் தைரியமா இருக் கோனும். இதோட நீங்கள் மீண்டு வரோனுமென்றால் நீங்கள் நல்லா போராடனும். நீங்கள் மட்டும் போராடினால் தான் இதற் குள் இருந்து மீண்டுவரலாம். மனசத் தைரியமா வைத்துக் கொள் ளுங்கள். மன தைரியத்தை விட்டுடாதீங்கோ. நம்பிக்கையை விட் டுடாதீங்கோ. எனக்குத் தெரியும் இது சரியான கஷ்டம் என்று, ஆனா நீங்கள் மட்டும் தான் இதோட போராடனும். நீங்கள் தான் கஷ்டப்பட்டு போராடி இதுக்குள்ள இருந்து மீண்டுவரனும்.'

எல்லாவற்றையும் அந்த நீண்ட கருங்கூந்தலுடன் உணர்வற்ற முக மில்லாச் செம்மண் நிறப் பெண் போல் உள்வாங்கிக் கொண்டி ருந்தேன். சிறிது நேரத்தில், பொன்னிற முடிச் செவிலியர் அம்மா வின் கையை அணைத்திருக்க, தலைமை மருத்துவர் சிகிச்சைத் திட்டத்தை விளக்கினார்,

'நாங்கள் பரிந்துரைப்பது என்னவென்றால்: முதலில் கீமோச் சிகிச்சை, பிறகு அறுவைச் சிகிச்சை, இறுதியாகக் கதிர்வீச்சுச் சிகிச்சை. முதலில் கீமோச் சிகிச்சை எடுப்பதன் மூலம், கட்டியை முழுவதாக அழித்து விடமுடியும் அல்லது கட்டியின் அளவைக் குறைத்து விடமுடியும். கீமோச் சிகிச்சைக்குப் பிறகு, கட்டியும் கட் டியைச் சுற்றி இருக்கும் பகுதியையும் அறுவைச் சிகிச்சை மூல மாக எடுக்க வேண்டும். அதன் பிறகு கதிர்வீச்சுச் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். இந்தச் சிகிச்சைத் திட்டத்தை நீங்கள் அனுமதித்தால் ஆரம்பித்து விடலாம்.'

சிகிச்சைச் திட்டத்தைக் கவனமாக உள்வாங்கிக் கொண்டிருக்கும் பொழுது மொழிபெயர்ப்பாளர் அம்மாவிற்குத் தமிழில் மொழி பெயர்த்தார்,

'டாக்டர் சொல்றார் கீமோ மூலம் வருத்தத்தை மாத்தலாம். கீமோ மூலம் இருக்கிற கட்டிய அப்படியே அழிச்சிடலாம். இதுதான் இனி இல்லையன்ட நல்ல வைத்தியம். அதால நீங்கள் இதற்கு உடனே ஓம் சொல்லுங்கோ.'

தலைமை மருத்துவர் சொன்னது இதுவா, அல்லது நான் தவறா கப் புரிந்து கொண்டேனோ? அம்மாவும் தனது கண்ணீரை நிறுத்தி, திடமாய் மொழிபெயர்ப்பாளரின் சிகிச்சைத் திட்டத்தைக் கேட்டாள். நானும் குழப்பத்தில் தலைமை மருத்துவரிடம் கேட் டேன், 'சிகிச்சை திட்டத்தில் அறுவை சிகிச்சையும் அடங்கும் தானே?'

பொன்னிற முடிச் செவிலியர் புதிராய்ப் பார்க்க, தலைமை மருத் துவரும் குழப்ப முகத்தோடு மறுபடியும் எனக்கு விளக்கினார், 'கீமோ கட்டியைக் குறைக்கும் அல்லது முழுதாகக் கரைக்கும். என்னவாகினும் அறுவை சிகிச்சை கட்டாயம் அவசியம்.'

மொழி பெயர்ப்பாளர் அமைதியானார், அம்மாவும் குழப்பக் கண் களோடு என்னை நோக்கினாள், 'என்ன சொல்றாங்க?'

மொழிபெயர்ப்பாளர் விரைவாக பதில் அளித்தார். உங்களுக்குப் பக்கத்துல இருந்து யாரோ டாக்டரோட கதைக்கினம். டாக்டர் வந்து அவருக்கு இதப் பத்தி சொல்றார்.'

அவர் குரலில் அறுவை சிகிச்சை என்ற வார்த்தை இன்னும் வர வில்லை. அங்கிருந்த அனைவரையும் விந்தையாக பார்த்தேன், 'அறுவைச் சிகிச்சை உள்ளதா இல்லையா?' என்று என் கேள் வியை முடிப்பதற்குள்ளேயே மொழிபெயர்ப்பாளர் குறுக்கிட்டார்,

'கொஞ்சம் பொறுங்கோ தம்பி, இப்ப இதெல்லாம் கேட்க வேண் டாம். அது அதுக்கெண்டு ஒரு நேர காலம் இருக்கு.'


எனக்குப் பொறுமை இல்லை என்பது நான் அறிந்ததே. ஏன் அம் மாவுக்கு அறுவைச் சிகிச்சை பற்றி மொழிபெயர்ப்பாளர் சொல்ல மறுக்கிறார்? அவளின் உரிமையை மறுப்பது தவறு. மொழிபெ யர்ப்பாளர் சொல்ல மறுத்ததை நான் அவளுக்குத் தெரியப்படுத் தினேன், 'கீமோக்கு அப்புறம் உங்களுக்கு ஆபரேஷன் செய்ய ணும். அப்புறம் கதிர்வீச்சுச் சிகிச்சை.'

குறைந்திருந்த கண்ணீர் மீண்டும் அருவிபோல் பாய்ந்தது. அவ ளின் அழுகுரல் அதிகரித்தது. காகித வெட்டைக் கூட தாங்க முடி யாத அவளின் உடல், எப்படி அறுவை சிகிச்சையின் கத்திக் கூரைத் தாங்கும். தலைமை மருத்துவரும் பொன்னிற முடிச் செவி லியரும் அம்மாவை ஆறுதல் படுத்தினார்கள். அவர்களின் ஆறு தல் வார்த்தைகள் அவளின் செவிக்கு புரியாத மொழியில் அடைந்தது. அவளின் அழுகுரலும் குறைந்தது. மொழிபெயர்ப்பா- ளரோ மௌனமானார். ஏனோ எங்களுக்குள்ளே நடக்கும் மனப்ப தற்றத்தை உணர முடிந்தது போல், தலைமை மருத்துவர் மீண் டும் விவரித்தார்,

'நாங்கள் எம்ஆர்ஐ (MRI) ஸ்கேன் செய்ய வேண்டும், அறுவைச் சிகிச்சை மற்றும் ஒட்டுமொத்த சிகிச்சைக்கு எங்கள் துறை பொறுப்பாகும்.'

மொழிப்பெயர்ப்பாளர் அமைதியில் உறைய, நானும் தலைமை மருத்துவர் சொன்னதை வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்த் தேன். என்னுள் அதே பழைய கேள்விகள் மீண்டும் பிறந்தன. மொழிப்பெயர்ப்பாளரோ தொலைபேசியை முடிப்பதிலேயே குறி யாக இருந்தார். தலைமை மருத்துவரும் அறையின் நெருக்கடிநி லையை உணர்ந்து மொழிபெயர்ப்பாளரின் தொலைபேசியை முடி வுக்குக் கொண்டு வந்தார். மொழிப்பெயர்ப்பாளரின் பொறுப்பை யும் நானே எடுக்க, என்னுள் பிறந்த கேள்விகளை அவர்களிடம் கொட்டினேன். அது ஒரு நிலையில்லா உளறலாக இருந்தது. அம் மாவின் அழுகுரல் குறைந்தாலும், நடுக்கமும் பதட்டமும் மறைய வில்லை. தலைமை மருத்துவரும் பொறுமையாக என்னுள் பிறந்த அத்தனை கேள்விகளுக்கும் பதில் அளித்தார்.

'எங்களுடைய சிகிச்சையின் வெற்றி வீதம் அதிகம். கீமோச் சிகிச் சையைப் பற்றி விவரமாக எதிர்வரும் சந்திப்பில் சொல்கிறோம். என்ன காரணத்திற்காகப் புற்றுநோய் வந்திருக்கும் என்பது தெரிய வில்லை. ஆனால் புற்றுநோய்க் கட்டி கடந்த ஐந்து மாதமாய் உங்க அம்மாவின் மார்பில் வளர்ந்து வருகிறது.'



niresh.ratnam@thaiveedu.com




1990 காலகட்டங்களில் எங்களது ஊரில் மின்சார வசதி, தண்ணீர் வசதி என்று எதுவும் இல்லாத போதுங்கூட, பிறந்து வளர்ந்த நிலத்தை விட்டு வெளியேற முடியாது என அடம்பிடித்து, பிள்ளைகளோடு அங்கேயே இருந்த ஒருசிலரில் தங்கராசாவும் ஒருவர். தங்கராசா தவிர்த்து ஒரு பத்துக் குடும்பங்கள் அப்படி வைராக்கியமாக இருந்திருக்கலாம். மற்றையவர்கள் ஊரின் மறு பகுதிக்குள் சென்றுவிட்டனர்.

எங்கள் ஊரைப் பற்றி சிறிது அறிந்து கொள்வோம். சுற்றிவர வயல்களும் பிரப்பங்காடுகளும் சூழ, நடுவிலே மிகப்பெரிய ஒரு மண் திட்டுத்தான் நாங்கள் குடியிருந்த இடம். மார்கழி மாதங்களில் எல்லாம் சுற்றிவர மழை வெள்ளத்தால் சூழப்பட்ட போதிலும் எங்களது மண் திட்டில் மட்டும் எந்த வெள்ளமும் இருந்ததில்லை. சுற்றிவர நீரால் சூழப்பட்டுக் காணப்பட்டதால் எங்கள் ஊருக்குப் பெயரே தீவுதான். இன்றுவரை நானும் யோசிக்கிறேன் கச்சதீவு, அந்தமான் தீவு என்று ஏதாவது பெயருடன் சொல்லாமல் தனியே தீவு என்றே பெயர் வைத்ததன் விந்தையை. ஆரம்ப காலங்களில் வெறும் காடாக இருந்த இடத்தை பயிர் செய்வதற்காக காடுகளை வெட்டி குடியேறி கிட்டத்தட்ட ஐம்பது குடும்பங்கள் வரை இருந்தனர். பிற்காலத்தில் யுத்தம் ஏற்பட்டு தொடர் செல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு மூலம் சிறிது சிறிதாக இடம்பெயர்ந்து இன்று பத்துக் குடும்பங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. மற்றையவர்கள் எங்கள் ஊரின் மறுபகுதியான இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் குடியேறிவிட்டனர். இருந்த போதிலும் தங்களது வாழ்வாதாரம் முழுவதும் இந்தப் பகுதிக்குள் என்பதால் காலையில் வந்து மாலை 5 மணியளவில் வெளியேறிவிடுவார்கள்.

‘இஞ்சாருங்க அங்க என்ன செய்யுறியல், கெதியா வந்து சாப்பிடுங்க. மணி ஆறரை ஆகுதுல, எந்த நேரத்துல தொடங்குவானுகள் எண்டு சொல்ல ஏலா’.

‘சீ இன்டைக்கு சுட மாட்டானுகள் அதான் நேத்தும் முந்தாநேத்தும் சுட்டவனுகள் தானே, இன்டைக்குப் பெருசா சத்தமிராது.’

'ஆ, இந்த நாளுலதான் சுடுவான் என்டு உங்கள்ட சொல்லிற்றுத் தானே சுடுறானுகள். கதய விட்டுத்து கெதியா வாங்க சாப்பிட் டுத்து விளக்க நூக்கனும்'.

'இரு கீரை கொஞ்சம் பிடுங்கிக் கட்டிற்று வாரன் ரெண்டு மூண்டு நாளா பிள்ளைகளுக்கு சுரக்காயையும் மரவள்ளிக் கிழங்கையும் அவிச்சுக் கொடுத்துற்று இருக்கம் நாளைக்கெண்டாலும் இந்தக் கீரைய வித்துட்டு கொஞ்சம் குறுநெல் வாங்கிட்டு வந்து கஞ்சி காய்ச்சிக் கொடுப்பம்'.

'அதுக்கு நேரத்தோட எல்லாத்தையும் செய்யுறதானே'.

'நேரத்தோட கீரை பிடுங்கினா வாடிப் போயிடும், அதான் இப்ப பிடுங்கிக் கட்டி வைக்கிறன். இரவைக்குப் பனி வந்து வாடாம இருக்கும். நீ போய் புள்ளைகள பாரு, அதுகளுக்கு சாப்பிடக் கொடுத்து நீயும் சாப்பிடு நான் வாரன்'.

'புள்ளைகளுக்குக் குடுத்திட்டன் நீங்க கெதியா வாங்க'.

'இந்தா சுடத் தொடங்கிட்டானுகள்... சொன்னா இந்த மனுசன் கேட்டாத்தானே. இருங்க உங்கட அப்பா என்ன செய்யுறாரு என்டு பாத்துட்டு வாரன்'.

'நீ போகாதம்மா, அப்பா எங்கயாவது மறைவில இருப்பாரு'.

'இல்லடா, அந்த வெட்டையில நிண்டு கீரை பிடுங்கிட்டு நின்ட வரு இப்ப பாத்துட்டுத்தானே வந்தனான்'.

'சரி நீ போகாதம்மா, நான் இங்க நிண்டு கூப்பிட்டுப் பாக்குறன்'.

'இந்த வெடிச்சத்தத்துல நீ கத்தி வெளங்காதுடா'.

'இரும்மா கொஞ்சம்'.

'அப்பா எங்க இருக்கிங்க கெதியா வாங்க, வெடிச்சத்தம் கேட்க லயா உங்களுக்கு'.

'டேய் நீ உள்ள போடா நான் இஞ்ச மறைவா படுத்திருக்கன்... நீ உள்ள போ, நான் மெதுவா தவண்டு உள்ள வாரன். நீங்க ஒருத்தரும் வரவேணாம்'.

'இந்த மனுசனுக்கு ஒன்டுக்கும் பயமில்ல. நீ உள்ள வாடா, அவரு வந்து சேரட்டும்'

'டேய் தம்பி செல்லடிக்கத் தொடங்கிட்டானுகள் பங்கருக்குள்ள போகனும் நீ பங்கர வெளியாக்கு நான் அங்க வாரன்' என்று கத் தியபடியே தங்கராசு தவழ்ந்து கொண்டிருந்தார். அவர் பங்கரை அடைவதற்குள் இன்றைய தலைமுறையினருக்கு அன்றைய வாழ்க்கை முறையையும் குறிப்பாக பங்கரையும் விளக்க வேண்டி யுள்ளது.

எங்கள் ஊர் ஐம்பது பேர் வாழும் மண் திட்டான போதிலும் அத னைச் சுற்றி முழுவதும் வயல் பிரதேசங்களே. ஊரின் ஒரு பகுதி முழுவதும் இராணுவக் கட்டுப்பாடு என்ற பொழுதும் தங்கராசு வாழும் பகுதியானது யாருடைய கட்டுப்பாடுமின்றியே இருந்தது. பகல் முழுவதும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலும் இரவில் இராணுவத்தினர் முகாமை அடைந்ததும் போராளியின் நடமாட்ட மாகவும் இருக்கும். இதனாலேயே இரவுகளில் சிறு நடமாட்டங்கள் இருந்தாலும் முகாமிலிருந்து துப்பாக்கிகளும் செல்களும் தாக்கிய வண்ணமே இருக்கும். இந்தப் பகுதிக்குள் பெரியளவு போராளி கள் இல்லாத போதிலும் ஆங்காங்கே சிதறிய சிறு சிறு குழுக்கள் இருக்கத்தான் செய்தன. அத்தோடு போராளிகளுக்குத் தேவை யான பொருட்களைக் கடத்திக் கொண்டு சேர்ப்பதற்கு இந்தக் கிராமமே இலகுவழி. இதைத் தடுக்கவே கிழக்கு மாகாணத்திலே மிகப்பெரிய இராணுவ முகாம் எங்களது ஊரில்தான் அமைக்கப் பட்டது. இருந்தும் பொருட்கள் கடத்தப்படுவது குறைந்தபா டில்லை. இவ்வாறு இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்த்து நிற்ப தால் தினமும் வெடிச்சத்தம் கேட்டுக் கொண்டேதான் இருக்கும். இதில் இருந்து காலந்தள்ள முடியாது என்று பயந்த பல குடும் பங்கள் எல்லாவற்றையும் விட்டு இராணுவப் பகுதிக்குள் செல்ல, தங்கராசா போன்ற ஒருசிலர் தஞ்சம் பிழைக்க இடமின்றி இங் கேயே தங்கிவிட்டனர். ஆகையால் எப்போது வேண்டுமானாலும் வெடிச்சத்தம் கேட்கும் எனும் நம்பிக்கையில் இவர்கள் சில முன் னாயத்தங்களைச் செய்திருந்தனர். அவற்றுள் முதலில் இரவுச் சாப்பாடு ஆறு மணிக்கு முடிய விளக்கணைப்பது. காரணம் சுற்றி வர மரங்கள் எதுவும் இல்லாத வயல் வெட்டையாதலால் வெளிச் சம் நன்றாகவே முகாமிலிருக்கும் இராணுவத்தினருக்குத் தெரிந்து அவர்கள் அதைக் குறி வைத்துத் தாக்குவார்கள். அடுத்த நடவ டிக்கையாக தங்களது வீடுகளைச் சுற்றிவர தகரங்களால் உரு வாக்கியிருந்தாலும் அதற்குள் செங்கல், களிமண் கொண்டு சுவர் எழுப்பியிருப்பார்கள். இது துப்பாக்கிக் குண்டுகளிடமிருந்து அவர் களைப் பாதுகாக்கும். இதற்கும் மேல் தொடர் செல் தாக்குதலில் இருந்து தப்பிக்கவே வீட்டிற்குப் பின்புறம் பங்கர் என்று சொல்லப் படும் பதுங்கு குழிகள் வெட்டியிருப்பார்கள். இந்த பதுங்கு குழி யின் அமைப்பானது ஒருவர் அமரக்கூடிய அகலத்திலும் வீட்டி லுள்ளவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து நீளத்திலும் இருக் கும். முகாமிலிருந்து முதலாவது செல் தாக்குதல் தொடங்கியதும் பதுங்கு குழிக்கு ஓடி விடுவார்கள் அதுவும் பரப்புக் குறைவு என் பதால் தாக்குதலில் இருந்து இவர்களைக் காத்தது. ஒருவாறு தாக் குதல் முடிந்து வெளியே வந்து பெண்கள், குழந்தைகள் வீட்டி னுள் தஞ்சமடைவார்கள். ஆண்களோ பதுங்கு குழிக்கு மேல் பலகை போட்டு மூடி அதற்கு மேல் மண், விறகுகள் எல்லாம் போட்டு மறைத்து விடுவார்கள். காலையில் இராணுவம் ரோந்து வரும் போது தப்பித் தவறியேனும் பதுங்கு குழிகள் அமைக்கப் பட்டிருப்பதன் தடயங்கள் கூட தெரியாது. தவறித் தெரியவரின் போராளிகளுக்குத் தஞ்சமடைய இடம் கொடுத்ததாக அந்தக் குடும்பமே இல்லாமலாக்கப்படுவர். இவ்வாறு இரவில் பதுங்கு குழிகளுக்கு மேல் உள்ளவை அகற்றப்பட்டு தயாராயிருத்தலும் அதிகாலையில் அவை மூடப்பட்டு மறைக்கப்படுதலுமாய் வாழ்க் கையின் ஒவ்வொரு கணத்தையும் போராளிகளுடன் சேர்த்து மக்க ளுமே போராடினர்.

'யாரோ கத்துற சத்தம் கேட்குதுடி'.

'ஓ எனக்கும் கேட்குதுதான், கடவுளே யாருக்கு வெடிப்பட்டதோ தெரியலயே'.

'இந்தப் பக்கமாத்தான் கேட்குது கத்துற சத்தமும் தங்கப்பிள்ள மாமிட சத்தம் மாதிரித்தான் கிடக்குது நான் போய் ஒருக்கா பாத் துட்டு வாரன், நீங்க வெளிய வரவேணாம்'

'பைத்தியமா உங்களுக்கு இந்த வெடியிலயும் அடிக்குற செல் லுக்குள்ளயும் எங்க போகப் போறியல் பேசாம பங்கருக்குள்ளயே இருங்க வெடி நிண்டதும் போய்ப் பார்ப்பம்'.

அன்றைய காலங்களில் எல்லோரும் மரக்கறிப் பயிர்ச்செய்கை யையே நம்பி வாழ்ந்ததனால் எல்லோருக்கும் ஒரு ஏக்கர் மட்டில் காணிகள் இருந்தன. இதனால் வீடுகள் அருகருகே இல்லாமல் ஒவ்வொரு ஏக்கருக்கு ஒரு வீடாகவே இருந்தது.

பொதுவாகவே முகாமிலிருந்து சுட ஆரம்பித்ததும் எதிர்த்தாக்கு தல் எதுவுமில்லை எனின் பத்து நிமிடங்கள் தொடர்ச்சியான துப் பாக்கிச் சூடும் பின்னர் சிறிது நேரத்துக்கு விட்டு விட்டுமாக அரைமணி நேரம் துப்பாக்கிச் சூடு நிகழும். எப்போதாவது போரா ளிகள் ஏதாவது பொருட்களைக் கடத்திச் செல்வார்களாயின் அவர் கள் தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதல் தொடுக்க ஓரிரவு முழுவதும் பங்கருக்குள் பதுங்க வேண்டிய நிலையும் ஏற்படும். அது எப்போ தாவது மாதத்தில் நாலைந்து முறை.

துப்பாக்கிச் சூடு நின்ற சில நிமிடங்களிலேயே செல்லத்துரை மாமாக்கு வெடிப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடக்கிறார் என்ற செய்தி கிடு கிடுவென பக்கத்து வீடுகளுக்குப் பரவிவிட்டது. அன் றைய காலகட்டங்களில் எங்கள் ஊரில் இருந்தவர்களில் வயதி லும் அனுபவத்திலும் மூத்தவர் செல்லத்துரைதான். எங்களுக்குள் ஏற்படும் சிறு பிணக்குகளெல்லாம் பேசித் தீர்த்து வைப்பது, யாருக்கும் கஷ்டம் என்றால் தானியங்கள் கொடுத்து உதவுவது, விவசாயத்தில் ஏற்படும் சந்தேகங்களுக்கு விடையளிப்பது என்று

அவர் எங்கள் ஊரில் ஒரு முக்கியமான நபராக விளங்கினார். இதனால் ரோந்து வரும் இராணுவத்தினர் சிலருங்கூட அவருடன் மட்டும் மரியாதையுடன் நடந்து கொள்வார்கள். செல்லத்துரைக்கு ரெண்டு பெடியன்களும் மூன்று மகளும். ரெண்டு மகனும் போரா டப் போய் செத்துட்டானுகள். மகள்களில் இருவர் மணமாகி இப் போது இராணுவக் கட்டுப்பாட்டினுள் உள்ளனர். அவரின் கடைசி மகளும் மனைவியும் மாத்திரமே இப்போது இங்கு உள்ளனர். செல்லத்துரையின் கடைசி மகளுக்கும் தங்கராசாவின் மூத்த மக னுக்குமிடையே ஒரு சொல்லாக் காதல் இருந்தது. எத்தனை கோடிக் கண்ணீர் மண் மீது விழுந்திருக்கும் அத்தனை கண்ட பின்னும் பூமி இங்கே பூப்பூக்கும் என்ற கவிஞர் நா. முத்துக்குமா-ரின் வரி போல், வாழ்க்கையின் அடுத்த நொடியில் மரணம் காத் திருக்கும் போதுங்கூட வாழ்க்கையை நாங்கள் அனுபவித்தே வாழ்ந்தோம் என்பதற்குச் சான்றாக பல காதல் கல்யாணங்கள் எங்கள் ஊரில் உண்டு. அவற்றில் கடைசிக் காதலாக இதுவும் உண்டு.

காதல் என்றால் கைபிடிப்பதோ கட்டியணைப்பதோ இல்லை. ஒரு வரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொள்வோம், அவ்வளவுதான். அன்றைய எம் காதலில் யாருமே தங்களது காதலை வார்த்தை யில் சொன்னதில்லை. ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணைப் பிடித்தி ருந்தால் அவள் எதிரில் வரும் போது பார்த்து சிரிக்கையில் அவ ளும் பதிலுக்கு முகம் முழுக்க நாணத்துடன் ஒரு விழி வழி பார்க்க மறு விழி அவன் கண் பார்த்து உடல் நடுங்க சத்தமின்றி இதழோரம் புன்னகைப்பாள். உண்டான புன்னகை அவன் கண் வழியாக மூளைக்குப் போய்ச் சேர்ந்து உடல் முழுவதும் உண்டா கும் பரவசத்தை இன்றைய 'ஐ லவ் யூ' எனும் வார்த்தை தருவ தில்லை. அந்த ஒற்றைச் சிரிப்பிற்காகத் தான் உயிரைப் பிடித்துக் கொண்டு துடிப்பதும் காதல் கைகூடவில்லை என்றால் உயிரை மாய்ப்பதும் என்றால்... எண்ணிப் பாருங்கள் அந்தக் காதலின் புனிதத்தை. ஆம். பிறந்த குழந்தையிலும் தூய்மையானது எங்கள் காதல்.

'அப்பா வண்டியக் கட்டுங்க மாமாவ ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனா காப்பாத்திடலாம்'.

'தம்பி கொஞ்சம் பொறுமையா இரு. இப்ப ஒண்டும் செய்ய ஏலா, காலையிலதான் ஆஸ்பத்திரிக்குப் போகலாம்.'

'ராசா மாமா நீங்க கதைக்குறது சரியா? யோசிச்சுப் பாருங்க இரவு முழுக்க இப்படியே வச்சிருந்தா உசிரோட இருக்கலாமா? கெதியா வாங்க ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவம்.'

'டேய் நீ சின்னப் பொடியன் விளங்காம கதைக்காத. இப்ப ரோட் டால போனா மொத்தப் பேரையும் சுட்டுத் தள்ளிடுவானுகள். பொறு, விடிஞ்சதும் தான் ஏதாவது செய்யலாம்.'

'அப்பா நீங்க என்ன சொல்லுறியள், நான் மாமாவ கூட்டிப் போகப் போறன், என்னோட வாறியளா இல்லையா?'

'உனக்கு இவ்வளவு பேர் சொல்லுறது வெளங்கலயா, இப்ப போனா ஒருத்தரும் திரும்பி வர ஏலா. நறுவளிய பட்டைய இடிச்சி சாறு வச்சிக் கட்டியிருக்கு பார்ப்பம், பேசாம கொஞ்ச நேரம் நில்லு.' என்று அவனை அமைதியாக்கினார் தங்கராசு.

அவன் எவ்வாறு அமைதியாவான் அங்கே கண் முன்னால் சாகக் கிடப் பது ஏதோ ஒரு உயிர் அல்லவே, தான் உயிராய் நேசிப்பவ ளின் தந்தையாயிற்றே. அத்தனை களோபரங்களுக்குமிடையிலும் அவளின் அழுகுரலும் விழிப்பேச்சும் அவனுக்குக் கேட்டுக் கொண்டே இருந்தது. அவளது ஓரப் பார்வை கெஞ்சியதாலேயே ஊரிலுள்ள அத்தனை பெரிய ஆம்பளைங்களும் தயங்கும் போதும் செல்லத்துரையைக் காப்பாற்ற அவன் துணிந்தான். ஆனால் அது நடைமுறையில் சாத்தியமன்று. ஊரிலிருந்து கிட்டத் தட்ட ஐந்து கிலோமீற்றரிற்கு அப்பாலுள்ள வைத்தியசாலைக்கு இரவில் கொண்டு சேர்ப்பதென்பது நடவாத காரியமாகும். இருந் தும் முயற்சித்துத் தோற்றால் பரவாயில்லை. எல்லோரும் போல் தானும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் நாளை அவளின் முகத்தில் எவ்வாறு முழிப்பேன் என்ற யோசனையே அவனுக்கு மேலோங்கியது. சிறிது நேரம் யோசித்த பின் பாக்கியராசாவின் சைக்கிளை எடுத்து வந்து நிறுத்தி நான் மாமாவ இதுல ஆஸ் பத்திரிக்குக் கொண்டு போகப் போறன் என்னோட யாராவது ஒரு வர் வந்து மாமாவ பிடிச்சிக் கொள்ளுங்க என்று சொல்லி முடிப்ப தற்குள் அழுகுரல் பெரிதாக சைக்கிளை விட்டுத்து ஓடிப்போய் பார்க்கும் போது அந்த ஊரினதும் அவனது காதலினதும் இறுதி நம்பிக்கையாய் இருந்த செல்லத்துரையின் உயிர் போயிருந்தது.

அப்படியும் இப்படியுமாக செல்லத்துரை இறந்து பதினைந்து நாட் கள் கடந்துவிட்டன. இந்தப் பதினைந்து நாளில் ஓரிரு முறை இரு வரும் சந்தித்துக் கொள்ளும் சந்தர்ப்பம் வந்த போதிலும் அவள் அவனது முகத்தைக்கூடப் பார்க்க விரும்பவில்லை என்பதை தன் னுடைய பாவனை மூலம் வெளிப்படுத்தினாள். நடுநிலையாகப் பார்ப்பதாயின் இதில் அவனது தவறு என்று ஒன்றும் இல்லை. செல்லத்துரை இறந்தது ஒரு விபத்து, அதற்கு அவனைத் தண் டிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை.

இத்தனைக்கும் அவன் உண்மையாகவே அவரைக் காப்பாற்ற முயற்சித்தான் என்பதும், இந்த முயற்சியில் தன் உயிர் போனா லும் பரவாயில்லை என நினைத்ததும் உண்மை. ஆனாலும் தன் தந்தை இறந்துவிட்டார் என்ற ஏமாற்றம் அவர்களது காதலின் மீது ஏமாற்றமாக மாறி அவன் மேல் வெறுப்பாக மாறியது. அன்றைய காலங்களில் பெண்கள் காதலுறும் ஆண்களை செயற்கரிய செயல்களைச் செய்யும் காவிய புருஷர்களாகவே பார்த்தார்கள். தங்களின் ஒற்றைக் கண்ணீர்த் துளிக்கு என் காதலன் இந்த உல கத்தையே எதிர்ப்பான் என்று அவர்கள் முழு மனதுடன் நம்பியி ருந்தார்கள். அவர்களின் நம்பிக்கையைக் காப்பாற்ற எமது ஆண் களும் பல செயற்கரிய சாகசங்களும் செய்வார்கள். இதனால் பெண்களின் எதிர்பார்ப்பு பெரிதாகவே இருந்தது. இதில் சிறு சந் தேகம் ஏற்படினும் அவர்கள் அவனை மன்னிப்பதில்லை. அவள் மன்னிக்காவிட்டாலும் தன்னிலையை எடுத்துக் கூறி மன்னிப்புக் கேட்டுவிடத் துடித்தவனுக்கு அப்படியொரு வாய்ப்புக் கிடைக்க வேயில்லை.

இப்படியே செல்லத்துரை செத்த முதல் பதினைந்து நாட்களும் சென்றுவிட்ட பின்னர்... அவனும் அவளைப் பெரிதாகத் தொந்த ரவு செய்வதில்லை என முடிவெடுத்து, சிறிது காலம் அவளை விட்டு விலக எண்ணி, ஐம்பத்தைந்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ள செங்கற் சூளைக்கு வேலைக்குப் போகத் தயாரானான். அன்றைய பொழுதுகளில் ஆண்களுக்கு வேலைவாய்ப்பென்பது இரண்டே முறையில்தான். ஒன்று விவசாயம் மற்றையது செங்கற்சூளை. இதில் எங்கள் ஊரில் எந்நேரமும் யுத்தம் ஏற்படும் என்ற அச்ச முள்ளதால் யாருமே விவசாயம் செய்வதில்லை. ஆதலால், அந்த வேலைக்கும் வாய்ப்பில்லை. இருக்கும் ஒரே வழி செங்கல் சூளை தான். மனைவி, பிள்ளைகளை யுத்தத்திற்கு நடுவே விட்டுச் செல்ல முடியாத ஆண்களே தங்களது நிலத்தில் மரக்கறிச் செய் கையை செய்து தங்களது குடும்பங்களின் பசியை அரைகுறை யாக என்றாலும் தீர்த்து வைத்தனர். இவனுக்கு இந்நிலை எதுவு மில்லை ஆதலால் தகப்பன் இருக்கும் தைரியத்தில் செங்கற் சூளை செல்லத் தயாரானான்.

செங்கற்சூளை வேலையென்பது எளிதான வேலையொன்றும் கிடையாது. சரியான களியினைத் தேர்ந்தெடுத்துக் கொத்தி அவற் றுடன் சிறிது பசைமணல், உமி சேர்த்து பதம் வரும் வரை நீர் விட்டு நன்றாக மிதித்து வைக்க வேண்டும். அதன் பின்பு காலை யில் நான்கு மணிக்கெல்லாம் எழும்பி அச்சில் செங்கல் வடிச்சுக் கொண்டு வெயிலில் காயவைக்க வேண்டும். அத்தோடு நேற்று வடித்து உலர்ந்த செங்கற்களை அட்டி போட்டு அடுக்கி வைக்க வேண்டும். இவ்வளவும் செய்தால்தான் ஒரு செங்கல்லுக்கு பத்துச் சதம் என கணக்கில் விழும். வெறும் விவசாய வேலைகளை மாத் திரமே செய்து பழகியவனுக்கு ஆரம்பத்தில் இவ் வேலைகள் கடி-னமாக இருந்தாலும் பின்னர் தன்னை சுதாகரித்துக் கொண்டு எல்லா வேலைகளையும் கற்றுக் கொண்டு எல்லோரிடமும் நல்ல பெயர் எடுத்துக் கொள்ளும் அளவிற்கு தேர்ந்தவனாகிவிட்டான். இவ்வாறு செங்கற்சூளையில் இருபத்தைந்து நாட்களைக் கடத்தி விட்ட போதிலும் தன் ஒவ்வொரு கணங்களும் ஊரிலும் அவளின் நினைவுகளிலுமே கழிந்தன. செங்கற் சூளையில் இருந்த ஒரே யொரு ஆறுதல் கர கரவென இரைந்து கொண்டாலும் அவ்வப்

போது பாடல்களையும் ஒலிபரப்பும் ரேடியோ ஒன்றுதான். தனது கிராமங்களைப் பற்றிய நினைவு வரும் போது ஊமை விழிகள் திரைப்படத்தில் இருந்து 'தோல்வி நிலையென நினைத்தால்...' பாடலும் அவளின் நினைவு அலைமோதும் போது 'வானுயர்ந்த சோலையிலே நீ நடந்த பாதையெல்லாம்...' எனும் பாடலையும் கேட்டு ஆறுதல் பட்டுக் கொள்வதுண்டு. அக்காலத்தில் பலரின் மனங்கவர்ந்த பாடல்களாதலால் இவ்விரு பாடலும் ஒரு நாளில் பலமுறை ஒலிபரப்பப்பட்டன.

இவ்வாறு பல நினைவுகளுடன் நாட்கள் நகர்ந்து செங்கற் போரனை அடுக்கி நெருப்பு வைக்கும் நாளும் வந்தது. எல்லாமுமாக நாற்பத்திரண்டு நாட்கள் வேலை செய்ததில் உணவிற்கான படிக்காசு, அங்கே சிறு சிறு செலவுகளுக்காக வாங்கிய பணம் போக மீதிப் பணத்தை கணக்குப் பார்த்து வாங்கி அங்கிருந்தவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு பேருந்தை எடுத்தவனுக்கே பேருந்தின் வேகம் எரிச்சலைத் தந்தது. தனது மனவோட்டங்களுக்கு பேருந்தின் வேகம் ஈடுகொடுக்கவில்லை என்பதால் மிகவும் மனவுளைச்சலுக்கு உள்ளானவன் சிறிது நேரத்தில் தன் குடும்பத்தையும் காதலியையும் சந்திக்கும் தருணத்தை நினைத்து தனக்குள் சிலாகித்துக் கொண்டான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஊருக்கப் போவதால் இடைப்பட்ட நாளில் அவன் மீதுள்ள கோபம் எல்லாம் மறைந்து அவளும் அவனை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள் என்பதில் அவனுக்கு சிறிதும் சந்தேகமில்லை. அவனது மிக நீண்ட பேருந்துப் பிரயாணம் ஒருமாதிரி முடிவுக்கு வந்தது.

அவனது ஊரிற்கு அருகில் கிராமத்தின் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி, தனது அம்மா, அப்பா, தங்கைகள் என எல்லோருக்கும் புது ஆடைகளை வாங்கியவன்... அவளுக்காக ஒரு துணியை எடுத்துப் பார்த்து சுயநினைவு வந்தவனாய் 'இதை எவ்வாறு மறைத்து கொண்டு போய் அவளுக்கு கொடுப்பது நான் கொடுத்தாலும் அவள் அதை எவ்வாறு வீட்டில் மறைத்து வைப்பாள்' என யோசித்துத் தயங்கினான். இருந்தும் அவளுக்கு எதாவது வாங்கியே தீர்வதென்று முடிவெடுத்து கடைகளிலே பார்வையைச் செலுத்தியவனைப் பார்த்து வள்ளி, தெய்வானை சகிதமாய் முருகன் 1990 தீபாவளி வாழ்த்துடன் சிரித்துக் கொண்டிருந்தார். தீபாவளி வாழ்த்தினை வாங்கிக் கொண்டு இனி ஒரு நிமிடமும் தாமதிக்க முடியாதென தனது ஊரை நோக்கி நடக்கலானான்.

'டேய் யாருடா இந்த நேரத்துல சாமான் சக்கட்டோட இந்தப் பக்கம் போற'.

'ராசா மாமாவா? என்னத் தெரியலயா நான்தான் மாமா இப்பதான் வேலைவிட்டு வாரன்'.

'பிள்ளையாரப்பா என்ட புள்ளைய உசிரோட கொண்டுவந்து சேர்த்துட்டாப்பா'.

'விடுங்க மாமா எதுக்கிப்ப கையப் பிடிச்சுக் கொண்டு கத்துறியல் யாருக்கு என்ன நடந்த'.

'நீ ஊருக்குப் போய் ஒன்டரை மாசமாகுதில்லையா, உனக்கு நடந்த ஒன்டுமே தெரியாது போல. உன்ட அம்மா விதானையிட சொல்லி கடிதம் எழுதிப் போட்டவளே ஒனக்கொண்டும் கிடைக்கலயா?'.

'என்ன கடிதம் எனக்கு வரலயே என்ன நடந்த கத்துறத நிப்பாட்டிற்று சொல்லுங்க'.

அவனைக் கட்டிப்பிடித்தபடி தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்த ராசா தன்னை சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டு நடந்தவற்றை விபரிக்கலானார்.

'செல்லத்துரையின் மரணத்துக்குப் பிறகு இருந்த பத்துக் குடும்பங்களுக்குக் கூட இங்க இருக்க விருப்பமில்லாமல் ஒவ்வொருவராக இடம்பெயர ஆரம்பித்தனர். இவ்வாறாக நாலு குடும்பங்கள் இடம்பெயர்ந்து மிஞ்சியது ஆறு குடும்பங்களே. அவைகளும் இடம்பெயரும் மனநிலையிலே இருந்தாலும் தங்கராசாதான் அனைவரையும் சமாதானப்படுத்தி பிறந்து வளர்ந்த மண்ணை விட்டுச் செல்ல வேண்டாம் என ஒருவாறு தடுத்து வைத்திருந்தான். அவர்களும் ஒருசில நாட்களில் வழமைக்குத் திரும்பி தங்களது அலுவல்களைப் பார்க்க ஆரம்பித்துவிட்டனர். அந்நேரத்துல இவனுகளும் சும்மா இல்லாம பஸ் ஒன்ட கடத்திட்டு வந்து கொண்டு சேர்க்க ஏலாம இடையிலயே விட்டுத்து பொயிட்டானுகள். இராணுவமும் அதை சாக்கா வச்சி இங்க இருந்த எல்லாரையும் துரத்திற்று கேம்ப் (camp) அடிக்குறத்துக்கு வேலை செய்யும் போது தான் அது நடந்தது.'

'என்ன நடந்தது... சொல்லுங்க, எனக்குப் பைத்தியம் பிடிச்சிடும் போல இருக்கு.'

'இங்க ஆமி கேம்ப் அடிக்க விடுறதில்ல என்டு ஆம்பலைங்க எல்லாரும் முடிவெடுத்து கேம்படிக்க எதிர்ப்புத் தெரிவிக்க எங்கள் எல்லோரையும் கேம்புக்குள்ள கூட்டிற்றுப் போய் சித்திரவதை செய்ததுல நாங்க வீடு வாசல விட்டுத்துப் போறத்துக்கு சரி சொல்லிற்றம் உன்ட அப்பன் மட்டும் பிடிவாதமா மறுக்க அவன மட்டும் வச்சிட்டு எங்கள எல்லாம் அனுப்பிட்டானுகள். நாங்க கேம்பில இருக்கும் போதே இங்க எல்லாரையும் அடிச்சுத் துரத்திட்டு கேம்ப் அடிச்சிட்டானுகள். அடுத்த ரெண்டு மூன்டு நாளும் நாங்களும் எல்லா இடமும் அறிவிச்சிப் பாத்துட்டம் ஒன்டுக்கும் பதில் இல்ல. ஒரு கிழமைக்குப் பிறகு மாடு மேய்க்கப்போன பிள்ளைகள்தான் யாரோ செத்துக் கிடக்குறாங்க என்டு சொல்ல போய்ப் பார்த்ததுல கை, கால் எல்லாம் கட்டி தங்கராசா செத்துக் கிடந்தான்.' என நடந்த விபரங்களை ராசா சொல்லி முடிக்கவும் ஏதோ வெறி வந்தவனாய் அப்பா என அலரிக் கொண்டே ஊரைப் பார்த்து ஓடியவனைப் பிடித்துக் கட்டியணைத்தபடி தேற்றிக் கொண்டிருந்தார் ராசா.

நீண்ட நேர அழுகையின் பின்னர் சிறிது நேரம் மௌனமாயிருந்தவன் மெல்லப் பேச்சைத் தொடர்ந்தான். 'இப்ப எல்லாரும் எங்க இருக்குறாங்க மாமா?'

'உன்ட அம்மா தங்கச்சி எல்லாம் என்ட மாமாவோட இருக்குதுகள். நான் தம்பியோட இருக்கன். தங்கப்பிள்ள மாமி அவைட இளைய மகள்ட வீட்டிலதான் இருக்குறாங்க கடைசி மகளையும் அங்கதான் கட்டிக் கொடுத்திருக்கு போல'.

'என்ன மாமா சொல்லுறியல் கல்யாணமா? செல்லத்துரை மாமா செத்து ரெண்டு மாசம் ஆகல அதுக்குள்ளயா'.

'இப்ப யாருடா அதெல்லாம் பாக்குற... இருக்க இடமில்ல, திண்ணச் சோறு இல்லாதப்ப சடங்கு சம்பிரதாயங்கள் யாரு பாக்குற'.

பதின்ம வயதுகளில் ஒருவருடைய மிகப் பெரும் நம்பிக்கையாக இருப்பது குடும்பம், சொந்த ஊர், தனது காதல். இவற்றுள் ஒன்றை இழந்தாலே தாங்க முடியாத பொழுது ஒரே நாளில் இவை அத்தனையையும் இழந்து தவித்துக் கொண்டிருப்பவனை எவ்வாறு சமாதானப்படுத்த முடியும்.

இடிமேல் பேரிடியாக அடுத்தடுத்து செய்திகள் வர எதுக்கு அழுவதென்று தெரியாமல் எல்லாவற்றுக்குமாக சேர்த்து ஒரு பெருமூச்சை விட்டு எழுந்து நின்றவனை, ராசா சைக்கிளில் ஏற்றிக் கொண்டார்.

இரைதேடிச் சென்று திரும்புகையில் இருப்பிடமே இல்லாதொழிக்கப்படும் அவலம் பறவைகளுக்குப் பிறகு ஈழத் தமிழர்களுக்கே அதிகமாக நடக்கும் என்று சொல்லிக் கொண்டே... சைக்கிளை ராசா விரைவுபடுத்துகையில் 'உரிமை இழந்தோம் உடைமையும் இழந்தோம் உணர்வை இழக்கலாமா...' என ஊருக்குள் ரேடியோ பாடிக்கொண்டிருந்தது.



velbarathi@thaiveedu.com

# சாம்பரில் திரண்ட சொற்கள்




- தேவகாந்தன்

பாட்டியின் கடந்துபோன காலத்தோடு பொருத்திப் பார்க்கையில் அவளை அதிகமும் அணுக மறுத்திருந்த முதுமை, அவள் சந்தை வியாபாரம் தொடங்கிய பின்னால் அவளில் ஆண்டுக்கு இரண்டிரண்டு வயதாக ஏறிக்கொண்டதுபோல் தென்பட்டது. அதனால் செம்பவளமாக இருந்தவள் விரைவிலேயே எவருக்கும் பவளமக்கா ஆகிப்போனாள். குழந்தை பிறக்காத உடம்பில் இளமை வலிமையாய்த் திரண்டதே தவிர மதர்ப்பாய் வீறுகொள்ளவில்லை. அது விரும்பத் தகுந்த ஓர் அற்புதத்தை அந்த உடம்பில் நிகழ்த்தியிருந்தது.

நடனசுந்தரம் அப்போது பிறந்தேயிருக்கவில்லை. அக்கதையெல்லாம் உறவினர் பேச்சுக்களில் அவனுக்கு அவதானமாகியிருந்தன. கொடிகாமம் சந்தையில் வியாபாரம் அவளைக் கைவிடாவிட்டாலும், வடமராட்சிக் காய்கறிகள் சாவகச்சேரிச் சந்தையில்தான் கியாதியாக விலைபோகின.

பருத்தித்துறை - சாவகச்சேரி முதல் பஸ்ஸில் சந்தைக்கு வந்து ஐந்தரை மணி கடைசி பஸ்ஸில் வீடு செல்வதை மூன்று சந்தைகளில் செய்தால்போதும், அவளுக்கென்று நாலு காசு கையிலேயிருக்க பலனுண்டாகிவிடும். பவளமக்காவாக வியாபாரத்தைத் தொடர்ந்தவள், பவளமாச்சியாகிய காலத்தில் அதையும் நிறுத்திக் கொண்டாள். யாருக்காக அவள் அதற்குமேல் பிரயாசைப்பட? அவளுக்கிருந்தது ஒரு வாய். அவளுக்கிருந்தது வாரப்பாடான ஒரு பேரன் நடனம். அவனும் ஆசிரிய பயிற்சி முடித்து ஒரு காலத்தில் அமெரிக்க மிஷன் பள்ளியாகயிருந்த நல்லவொரு கல்லூரியிலே பணியிலும் சேர்ந்துகொண்டான். தன் தோட்டத்திலே வெய்யில் எழும்வரையில் காலை இரண்டு மணிநேரமும், வெய்யில் சாய்கையில் இரண்டு மணி நேரமும் உழைத்ததில் தன் வயித்துப்பாட்டைப் பார்க்க அவளுக்குப் போதுமென்று ஆகிப் போனது.

அவளது உழைப்பில்தான் நடனசுந்தரமும் தன் ஆசிரிய பயிற்சியையும், கலா விழைச்சலையும், ஓவியக் கண்காட்சிகளுக்கான கொழும்புப் பயணங்களையும், அவ்வப்போதான நண்பர் குழாத்திடை நடந்த கோப்பாய் தென்னந் தோட்டக் குடில் புறாசலையும் சிரமமின்றிச் செய்யமுடிந்தான்.

ஒருபோது அவனது மது பாவனை கை நடுக்கமெழுவளவு நரம்புத் தளர்ச்சியாகியபோதும், அவனைத் திட்டினாலும் அவனது சமாதானத்தில் பிறகு அடங்கிக்கொண்டு செலவுக்குப் பணம்கொடுத்தவள் பவளமாச்சிதான்.

எல்லாம் ஞாபகமிருந்தும், தன் வாழ்வின் தற்போதைய அலைக்கழிப்புக்கு பாட்டியின் அசிரத்தையும் ஒரு காரணமென எண்ணி அவன் அவள்மீது மனக்கசப்பு அடைந்துகொண்டமை பொருத்தமாகப் படவில்லை. அவளை அல்லது எவரையும் அவன் எண்ணுவதன் முன்பாக தன்னைக் கருத்திலெடுத்திருக்க வேண்டும். வெளிப்படையாய்க் கண்ணில்பட்ட எத்தனை தடைகளை அவன் கொஞ்சமும் பொருட்படுத்தாது ஏறிமிதித்துக்கொண்டு அந்த நிலையை வந்தடைந்தான்?

கூடத்து சோபாவில் படுத்து, வழக்கம்போல் சிறிது உறங்கி விழித்த நிலையில் கிடந்தபடி கடந்துசென்ற காலத்தின் சுவடுகளை எண்ணியபடியிருந்த சுந்தரத்திற்கு கண்களில் கண்ணீர் திரண்டது. அவரது ஆச்சி அவரது உடம்புள், நரம்புகளுள் அவரது நலன் கருதியபடி இன்னுமே இருக்கிறாள்.

இளவேனில் கோடையாகி, வெளி வெப்ப வலயமாய் ஆகத் துவங்கியிருந்ததில் இருள் வியாபிக்கும் அந்நேரத்திலும் வியர்வையின் கசிவு அவரது முகத்தில் கண்டிருந்தது.

செந்நதி தன் ஆழ் தடத்துள் ஓடிய சிறுகாட்டுப் பெருமரங்களிலிருந்து குருவிகள் அடைதற்பொழுதில் கிளர்த்திய சத்தம் காதில் விழுந்தது.

கூட, ஒரு நதியிசைத்த மெல்லிய வீணையின் நாதமும் மனம் சிலிர்க்க எழுந்தது.

மிச்சம் மீதிப் பனியெல்லாம் உருகிய நீர் ஓடிச்சென்று செந்நதியுடன் கலந்து விசையெடுத்துப் பாய்கையில், காற்றும் அடங்கிய பொழுதுகளில், ஒரு நாதவெள்ளமெழும்பும். அந்த நாத இசைவை கடந்த நள்ளிரவு தாண்டி விழித்த ஒரு பொழுதிலும் தான் கேட்டிருந்ததை அவர் அப்போது ஞாபகமானார்.

அவரது ஊரில் ஆறில்லை. தொண்டமானாறு என்று சற்றுத் தள்ளி ஓர் ஆறு உண்டு. அது ஐதீகத்தில் பரவிப் பாயும் ஆறு. அவர் அதை என்றும் கண்டதில்லை. அதனால் அவரது ஊர் அழகு பாழ்பட்ட ஊராகயிருந்தது. ‘ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்’ என்பது அவரறிந்த பழம்பாடல்.

அன்று, வருஷங்கள் பல முந்தி, தொண்டமானாறிலிருந்து நடன சுந்தரத்தைக் காண வந்திருந்த தவபாலன்தான் அந்தச் செய்தியைக் கொண்டுவந்திருந்தான். பெரிய பாதிப்பெதனையும் செய்தி ராவிட்டாலும் மனத்திலிருந்து அகல நீண்டநேரம் அது பிடித்தது.

மாலையளவில் ஊர் முழுக்க அச்செய்தி அறிந்தாயிற்றென்று மக்கள் ஆங்காங்கே படலைகளிலும், தெருக்கள் ஒழுங்கைகளிலும், கடை முன்புகளிலும் நின்று பேசியதில் தெரியக்கூடியதாக இருந்தது. ‘வித்துவான்ர மோளின்ர கலியாணம் நிண்டுபோச்சுப்போல.’ அன்று அவரவர் செவிகளுள் ஒலித்த சொற்களாயிருந்தன அவை.

அவளெண்ணமே வேண்டாமென்றுதான் இருந்தான். அதுவாகவே அவனைத் தேடித் தேடி வருவதுபோல ஆகியிருக்கிறது நிலைமை. போன வாரம் பெரியகடை பஸ் நிலையத்தில் சந்தித்த போது அடுத்த சனி வீடு வாறனென்று தானேயாகச் சொல்லி தவபாலன் அவசரமாய் விலகிச்சென்றான். தான் தேடாமலே அன்று தன்னையடைந்ததாய் தவபாலனது செய்தியை எண்ணினான் அவன்.

முதலில் அவர்களது உறவுக்குள் மயில்வாகனத்தைத்தான் பேசினார்கள். பேச்சிலிருக்கும்போதே அவனுக்கு அது தெரியும். மயில்வாகனத்தின் அக்காவும் தாயாரும் மணப் பொருத்தமில்லையென்று இரண்டாம் யோசனையொன்றுக்கு இடமற்றவிதத்தில் வெட்டொன்று துண்டிரண்டான பதிலைச் சொல்லிவிட்டார்கள். அன்



றிலிருந்து அந்நியோன்ய போக்குவரத்துக்கிருந்த வேலிக் கடவையும் அடைபட்டுப் போயிற்று.

மயிலைக் கண்ட ஒருவேளை நடனசுந்தரம் காரணத்தை உசாவத்தான் செய்தான். 'ஜாதகம் பொருத்தமில்லையாம் எண்டிறா, அக்கா' என ஒரு முகத் தசைநார் அசைவின்றிக் கூறிவிட்டு அவன் நகர்ந்துவிட்டான்.

மலருக்கு நிச்சயதார்த்தம் நடந்து கல்யாணம் சமீபித்திருந்த ஒரு வேளையில் கல்யாணம் தள்ளிப்போடப்பட்டதான ஒரு தகவல் கசிந்தது. மாப்பிள்ளை குடும்பத்தில் ஏற்பட்ட நெருங்கிய உறவின் மரணத்தால் ஓராண்டு தள்ளி கல்யாணத்தை நடத்த எண்ணியிருந்ததான காரணம் சொல்லப்பட்டது.

ஏற்கனவே யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த வீணை அரங்கேற்றத்தால் கணிசமான பெயர் இலங்கைச் சங்கீத உலகில் ஏற்பட்டதற்குப் பின்னால், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் மற்றும் வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபம்போன்ற இடங்களின் இசைக் கச்சேரிகளுக்கான வாய்ப்புகள் கருதி கொழும்பிலுள்ள ஓர் உறவினர் வீட்டில் அதிகமும் தங்கியிருக்கலானாள் மலர். சுய தொழில் திறமையுடன் தஞ்சாவூர்ப் பிரபல இசைக் கலைஞரின் சிஷ்யையென்ற பீடும் சேர்ந்துகொண்ட அவ் அகங்காரிக்கு காலம் வெகு நேர்த்தியாய்க் கழிந்துகொண்டிருப்பதை நடனசுந்தரமும் அறிந்துகொண்டுதான் இருந்தான்.

ஓவிய விற்பன்னம் அடையும் ஆவேசத்தில் ஓவியர் மாற்கு, சினிமா ஓவியர் மணியம் மற்றும் பணி சார்ந்த ஓவியர்களுடனான தொடர்பில் 'முது கண்ணன் வேய்ங்குழல்' போன்ற ஓவிய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கையில்தான் நடனசுந்தரத்திற்கு நரம்புத் தளர்ச்சி நோயின் அறிகுறிகள் வெளித் தெரியவாரம்பித்தன.

'குடிச்சுக் குடிச்சு இப்பிடி ஆயிட்டியே, நடனம்' என்று பவளமாச்சி தலையிலடித்து ஒப்பாரி வைத்தாள். வாரத்தில் ஒருநாள் இரண்டு நாள் குடித்ததில் அப்படியொன்றும் ஆகியிருக்காதென்று அவளைத் தணிவித்துவிட்டு குடியையும் நிறுத்திய பின் செய்த ஊர் வைத்தியத்தில், கைகளின் வெளிப்படு நடுக்கம் நீங்கிற்றெனினும், அவனது ஓவிய வேட்கையை முற்றும் முடிவுமாய்க் கொன்றுபோட்டுவிட்டது அந்நோய். தூரிகை நுட்பமாய் ஓவியத் திரையில் மிதக்கவேண்டிய தருணங்களில் அவனது கை விரல்களில் பலஹீனம் ஏற்பட்டது. அவை தூரிகையை உதறிவிட்டு நடுங்கின. 'போகப் போகச் சரியாகிவிடு'மென்ற நண்பர்களின் நம்பிக்கை அவனுக்கிருக்கவில்லை. அதனால் ஓர் ஓவிய ஆசிரியனாய்மட்டும் தொடரும் முதற் தன் வாழ்வின் முதற் சறுக்கலை அவன் எதிர்கொண்டான். அது அவனை ஓரளவு ஸ்தம்பித நிலையில் நிறுத்தியது. மனமும் உடம்புமே அவன் சோர்ந்தான்...

காலையில் கலிகைச் சந்திவரை நடந்து சாவகச்சேரி பஸ்ஸெடுத்து கல்லூரி சென்று, மாலையில் பருத்தித்துறை பஸ்ஸெடுத்து வந்து கலிகைச் சந்தியில் இறங்கி வீடு வர நடனசுந்தரத்துக்கு பொழுதுபடுகிற நேரமாகிவிடும்.

ஒரு வெள்ளிக் கிழமை மாலை பள்ளியிலிருந்து திரும்பிக்கொண்டிருக்கையில், தேவாலய வாசலில் அவனுடன் பேச விரும்பியவர் போல நின்றுகொண்டிருந்தார் போதகர் எலியாஸ்.

நல விசாரிப்பின் பின்னான உரையாடலில் பேச்சுவாக்கில் போலத்தான் அண்மையில் நடைபெறவிருந்த மலரின் திருமணம் முறிந்துபோனதுபற்றி போதகர் பிரஸ்தாபித்தார்.

அது யாருக்கு நேர்ந்திருந்தாலும் நல்ல சமாச்சாரமில்லை. ஒரு தகவலாய் அறிந்து அனுதாபப்பட முடியுமே தவிர வேறு என்ன தான் செய்துவிடல் கூடும்? அதை அவன் சொன்னான்.

அதற்கு போதகர், 'எண்டாலும் அயல் குடியளான நாங்கள் அதை இன்னும் அணுக்கமான துக்கமாயெல்லோ உணரவேணும்?' என்றார், அவனது கண்களை தீட்சண்யமாய் உற்று நோக்கியபடி.

போதகர் துக்கத்தைச் சொல்லமட்டும் அங்கே நின்றிருக்கவில்லை யென நடனசுந்தரம் தெரிந்தான். அவனது நெற்றி நெரிந்தது.

'இந்த விஷயத்தைப் பேசுறதுக்காண்டித்தான் நீர் வரக் கண்டு நான் இதில நிண்டது. சுத்தி வளைக்காமல் நேரடியாய் விஷயத்துக்கு வாறனே. இப்ப... வித்துவான்ர பக்கத்தில உம்மைக் கேட்டாலென்ன எண்டு ஒரு பேச்சிருக்கு...' என்று இழுத்தார் எலியாஸ். 'நானும் ஒரு கடமையாய் நினைச்சுத்தான் இதை உம்மோட கதைக்கிறன்.'

நடனசுந்தரம் திகைத்துப்போனான். பின் தெளிந்துகொண்டு, தான் மட்டும் முடிவெடுக்கிற விஷயமல்ல அதுவென்றான். தாய், மூத்த மாமன் சுந்தரலிங்கம், சின்ன மாமா அழகரத்தினம் மற்றும் நெருங்கிய உறவினர்களுடனும் பேசவேண்டும் என்றான். அந்தஸ்தின் அடி - முடி வித்தியாசம் குறித்து தானுமே அதில் நிறைய யோசிக்கவேண்டும் என்பதையும் மறைக்காமல் வெளிப்படுத்தினான். அதற்கு ஓரிரண்டு வார அவகாசம் வேண்டுமென்றும் கூறி அந்த விஷயத்தை முடித்துக்கொண்டு அவன் வீடு வந்துசேர்ந்தான்.

ஒருநாள் சுந்தரலிங்கம் மாமா உடன்வர வித்துவான் வீரகத்தியின் பிரசன்னம் வாசலில் தயக்கமாக எழுவதை ஒரு மெல்லிய திடுக் காட்டத்துடன் கண்டான் நடனசுந்தரம்.

இரண்டு வாரங்கள் காத்திருந்து போதகரின் போதகத்தில் விளைவேதும் அற்றுப்போக, களத்தில் தானிறங்காமல் எதுவும் ஆகாதென எண்ணி, துணைக்கு சுந்தரலிங்கத்தையும் அவர் இறைப்பு முடிந்து தோட்டத்திலிருந்து வரும்வரை வீட்டில் காத்திருந்து அழைத்துக்கொண்டு வித்துவான் புறப்பட்டிருந்தார்.

அந்தப் படலை தாண்டி உள்ளே வித்துவான் வீரகத்தி காலடி வைத்ததாய் எந்த ஞாபகமும் நடனசுந்தரத்திற்கு இல்லை. அதனால் மட்டுமே தடிப்புப் பிடித்த மனிதரென்றெல்லாம் அவர்மீது அபாண்டம் சொல்லிவிடமாட்டான். அவனது ஐயாவோடு வழிதெருவில் கண்டவிடத்தில் நின்று பேசாமல் அவர் கடந்துபோனவரில்லை. ஆனாலும் அவரது அந்தத் திடீர் வரவை, இனியொரு தவணைக்கு இடங்கொடாது முடிவை அதுவும் தனக்குச் சாதகமாய் எடுத்துவிடுகிற, முனைப்பாய்க் காண அவன் சிறிது தடுமாறினான்.

கொஞ்சம் வன்முறையின் கூறும் அதிலிருப்பதாய் அவனுக்குப்பட்டது. தான் எச்சரிக்கையாய் நடந்துகொள்ளவேண்டுமென அவனை அது தீர்மானிக்க வைத்தது.

'வாருங்கோ, ஐயா!' அவன் மேசைக் கதிரையை எடுத்துவர ஓடினான். 'வேண்டாம், தம்பி. எல்லாரும் திண்ணையிலிருந்தே பேசுவம்' என்று மெழுகிய சாணியின் புதுமணத்துடனிருந்த நிலத்தில் அமரப்போனவரை, 'ஐயா, பொறுங்கோ' எனத் தடுத்தபடி பன்பாயுடன் ஓடிவந்த நடனசுந்தரத்தின் தாய் அதைக் கீழே விரித்துவிட்டாள்.

அண்மைக் காலமாய் நடனசுந்தரத்தைக் காண்கையில், தன்னுள் ஓடும் உள்ளார்ந்த நினைவுகளில் அலைப்புண்டிருந்த வித்துவானுக்கு யோசனையொன்று பிடித்தது. அதையே எண்ணியபடி சில நாட்களைக் கழித்த பின் அவரெடுத்த முடிவு அது. தனது மகளுக்கு ஒரு நல்ல வாழ்வு அமைவதானால் அதை அவளைக் குழந்தை மேனிகொண்டு கண்டிருந்த அவனால் மட்டுமே முடியுமென்றொரு நம்பிக்கை ஏனோ அவர் மனத்தில் முளைகொண்டு விட்டது. அவன் இரக்கப்படக்கூடியவன் காரிய காரணங்களை அலசிப்பார்க்கக் கூடியவன்! அவர் அவனை நம்பினார்.

அவனது தாயாரை நோக்கியபடி சகலதும் விளக்கினார் வித்துவான். அவ்வப்போது வீட்டுக் குந்தோடு சாய்ந்து கிடந்திருந்த பவளமாச்சியையும் அவர் பார்க்கத் தவறவில்லை, அவளது சம்மதமும் அந்த விஷயத்திற்கு அவசியம் என்பதுபோல.

நடனசுந்தரத்தின் தாய் பேசவேண்டிய நேரமது. அவள் தன் மனத்தை அப்போது பேசியேயாகவேண்டும். மரியாதை செலுத்தும் வாத்தியார், மதிப்பளிக்கும் மூத்த சகோதரம் ஆகிய இவர்களுக்கிடையில் தன் கருத்தைச் சாதிக்கும் கடினமான சூழ்நிலையில் அவள் இருந்திருந்தாள். வேண்டாத சிரமங்களாய் அச் சூழலை எண்ணிய கோபத்தில் மகனை நோக்காமலே தன் மனதைச் சொல்லத் துவங்கினாள். 'எளிய மனிசரையா நாங்கள். எங்களுக்கெல்லாம் உங்களைப்போல பெரிய குடும்பங்களோட சம்பந்தம் வைக்கிற எண்ணம் கனவிலயும் வராது.'

நடனசுந்தரத்தினது தாயாரின் பணிவானதானாலும் தீர்க்கமாயிருந்த குரலில் வித்துவான் அதிர்ந்துபோகாதது, அம்மாதிரியொரு பதிலை அவர் ஓரளவு எதிர்பார்த்திருந்தார் என்பதைக் காட்டியது. அதற்கான எதிர் வலுகொண்ட பதில் அவரிடம் தயாராகயிருந்தது. 'எண்டாலும், நாங்கள் எண்டைக்கும் கதைவழியோ மனஸ்தாபமோ பட்டுக்கொண்ட மனிசரும் இல்லைத்தான, பாருங்கோ? நல்ல அயலாக்களாய்த்தான இருந்திருக்கிறம்? அந்தஸ்தெண்டு பாத்தாலும், இப்ப தம்பியயுமென்ன வாத்தியாராய்த்தான இருக்கிறார்.'

நடனசுந்தரம் நிமிர்ந்து தாயாரைப் பார்த்தான். இளக அவசியமற்ற தாய் இன்னும் அவளது கண்கள் இறுகிக்கொண்டிருப்பதை அவன் கண்டான். அவனால் எதுவும் செய்துவிட முடியாது. வித்துவான் அல்லது அவனது மாமனில் யாரோ ஒருவர்தான் அந்தத் தடையுடைத்து சாத்தியப்பாடான ஓர் உரையாடல் வெளியை உருவாக்கவேண்டும்.

அப்போது வித்துவான் செருமினார் பின் இரண்டு கைகளாலும் முகத்தை அழுத்தித் துடைத்தார். அவ்வேளை தன் கண்களை யாருமறியாமல் தேய்த்துக்கொண்டார். அவர் கண்களில் கண்ணீர் துளிர்த்ததா? அவன் திகைத்தான். பாவம், வாத்தியார்!

அவனுக்குள் விழுந்திருந்த விருப்பத்தின் விதை ஈரம் கண்டதாய் வேர்விடத் தொடங்கிற்று. அதை மேலும் உயிர்ப்புள்ளதாக்கியது அவரது தொடர்ந்த பேச்சு. 'இனசனமில்லாத ஆக்களில்லை நாங்கள். எண்டாலும் பாதிப்பெண்டு ஒண்டு வந்திட்டா, ஒருத்தரும் ஓடி வந்து கைகுடுக்கப்போறேல்லை. எங்கட படிப்பும் அனுபவமும் அப்பிடித்தான் சொல்லித் தந்திருக்குப் பாருங்கோ. நடந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியும். இந்தா, வாற மாசம் கலியாணமெண்டிருந்த நிலையில அது நிண்டுபோயிருக்கு. அந்தப் பிள்ளையைச் சின்ன வயசிலயிருந்து கண்ட ஆள் நீங்கள். அதுகின்ர போக்கும் வரத்தும் நல்லதும் கெட்டதும் உங்களுக்குத் தெரியாமப் போயிராது. அது சிரிக்கத் தெரியாத பிள்ளை. அது இப்பிடியே அதுகின்ர அழுகையாய் காலம்பூரா ஆகியிடக்குடாது. நல்ல மனிசராய் இருந்தாப் போதுமெண்டு நினைச்சு இப்ப இஞ்ச ஓடிவந்திருக்கிறன். உங்கட சம்மதம் கிடைச்சா வைச்ச நாளில, வைச்ச இடத்தில கலியாணத்தை நடத்தியிட்டு நானும் மனிசனாய் நாலுபேருக்கு முன்னால நடந்து திரிஞ்சிடுவன். இல்லாட்டி... அந்தப் பிள்ளையின்ர வாழ்க்கை எப்படியோ போய்ச் சீரழியட்டும் நானும் எப்பிடியோ போய் என்ர வாழ்க்கையை முடிச்சிடுறன்.'

வித்துவானுக்கு முன்னால வெற்றிலைச் செல்லத்தை நகர்த்தி வைத்தார் சுந்தரலிங்கம். வித்துவானின் பேச்சு அவரைமட்டுமல்ல, மற்ற இருவரையும்கூட அசைத்துவிட்டிருந்தது தெரிந்தது. எவ்வளவு ஒரு போந்த பொலிந்த கௌரவமான மனிதர் அவர்! அவரது பேச்சில் ஒரு சொல் தொண்டைக் குழிக்குள் சிக்குப்பட்டதுபோல் உடைந்து நின்றதே! அதுவொரு முழுச் சரணாகதியன்றி வேறென்ன?

'வாத்தியார், எப்பிடியிருந்தாலும் நீங்கள் கேட்டோடன ஒரு

பதிலை எங்களுக்குச் சொல்லுறது கஷ்ரமெல்லோ? யோசிச்சுப் பாருங்கோ. என்ர தம்பியின்ர மோள் போன மாசம்தான் பெரிய பிள்ளையானது. அடுத்த வரியமளவில அவளை நடனத்துக்குச் செய்யலாமெண்ட ஒரு பேச்சும் எங்களுக்க இருக்கு. நாங்கள் யோசிக்க கனக்க இருக்கு, வாத்தியார். அதால திடீரெண்டு ஒரு பதிலைச் சொல்லுறது எங்களுக்கு கஷ்ரமாய்க் கிடக்கும்தான? அதுக்குள்ள நீங்களாயேன் ஒரு முடிவுக்கு வந்து என்னென்னமோ பேசுறியள்?' என்று சுந்தரலிங்கம் அவர் மனம் தெளியும்படியான நாலு வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, 'இப்ப, நாங்களென்ன வேண்டாமெண்டு சொல்லியிட்டமோ? எங்களுச் சம்மதம்தான் தங் கச்சியின்ர முடிவைப் பாத்துக்கொண்டிருக்கிறம்' என்றார். பின், 'இல்லையே, நடனம்?' என்று அந்த முடிவில் அவனையும் உள்ளி ழுத்துவிடும் மாதிரியில் கேட்டார்.

பின் தங்கையின் பார்வையில் வெடித்த வெறுப்பினைக் காணாத வர்போல் நடித்தவராய், 'நீ சொல்லு, செல்லம், உன்ர எண்ணம் என்ன? உன்ர முடிவுதான் எங்களுக்கு முக்கியம்' என்றார்.

இப்போது திகைத்தது அவரது தங்கையாகயிருந்தது. ஏதொன் றையும் யோசிக்காமல் தன் அண்ணன் அவ்வாறு பேசியதை உள் வாங்கப்பட்ட சிரமத்தில் அது சினமாய் வெடித்தது. தனது உள் ளோடிய எண்ணம், விருப்பமெல்லாம் தெரிந்தும் எவ்வளவு சாதுர் யமாய் அந்தப் பேச்சு அவரில் வெளிப்பட்டிருக்கிறது! அந்நிய மனிதர் ஒருவர் முன்னால் அது பிளக்கமுடியாத வியூகம். அந்த உணர்கையில் அவளுக்கு மேலும் கோபம்தான் சீறியது. அதை அடக்கிக்கொண்டு சொன்னாள்.. 'நீங்கள் தீர்மானிச்சிட்டியள் பிற கென்ன என்னிட்டக் கேக்கிறது? நீங்களே ஒரு பதிலை வாத்தியா ருக்குச் சொல்லி அனுப்புங்கோ. இனி நீங்களாச்சு, நடனமாச்சு.'

நடனத்தின் அம்மா செல்லம்மாவை அவ்வாறு விலகிச்செல்லவிட வீரகத்தி தயாராகயில்லை. அவரது வியூகம் மேலும் விரிந்தது. 'என்னயிருந்தாலும்.. உங்கட விருப்பம்தான எங்களுக்கு முக்கியம். இப்பிடி பட்டும் படாமலும் சொன்னா...'

'நடனத்துக்குச் சம்மதமெண்டா எனக்கும் சம்மதம்தான். படிச்ச பிள்ளை, எல்லாம் யோசியாமல் எழுந்தமானத்தில அது முடிவு சொல்லப்போகுதே?'

அப்போது அவள் பெரிய தாயாரை நோக்குவதை நடனசுந்தரம் கண்டான். அவளது இயலாமையை உணர்ந்ததிலோ, அவளது பதிலை அவள் கண்களினூடாய்ப் பெற்றுக்கொண்டதிலோ அவள் தன் ஆவேசம் மேலுமடங்கித் திரும்பினாள்.

அவள் வெற்றிலைச் செல்லத்தை எட்டி இழுத்து இரண்டாவது முறையும் வெற்றிலை போட்டாள்.

அவளது அக்கறை நடனசுந்தரத்திற்குப் புரியும். அவளை அப்ப டியே விட்டுவிட முடியாது. போதகருடன் பேசிய அன்று மாலையே அந்த விஷயத்தை அவள் காதில் போட்டபோது, தன் விருப்பின் மையை தெளிவாய் வெளிப்படுத்தியவள் அவள். அங்கே அவள் அப்போது கொட்டிய உணர்வு மெய் வார்த்தைகள்தான் போலியா னவை.

அவளது மறுப்பினை வாத்தியார் குடும்பத்துக்கு மேலான அபவா தத்தினதோ, மலரின் நடத்தையின் மீதான சந்தேகங்களினதோ காரணமாய் எடுக்கவேண்டியதில்லை.

வித்துவான் வீரகத்தி குடும்பத்தின் அடிமடியுள் கிடந்துள்ள எல்லா அவமானங்களையும் சகித்தாலும், அச்சுவேலி சங்கானை கொடி காமம் மந்துவில் மட்டுவிலென சாதிப் பிரச்னை கலவரங்களாயும் கொலைகளாயும் வீச்சுப்பெற்றிருக்கிற அந்தச் சமயத்தில், அந்தக் குடும்பத்துப் பெண்ணுடனான சம்பந்தத்தை மட்டும்தான் வெறுத் தாள். சாதிப் பிரச்னை தலையெடுத்தாடும் இடங்களெல்லாம் தாண்டிப் பயணிக்கும் தன் மகனுக்கு அந்தச் சம்பந்தம் உசித மாக மாட்டாதென்பதே அவளது நோக்கெல்லையில் இருந்தது.

அவள் முன்பே சொல்லியிருந்த அக்காரணங்களை தான் அப் போது நினைத்துப் பார்க்காததை குத்திக்காட்டுமாப்போலவே 'படிச்ச பிள்ளை, எல்லாத்தையும் யோசிச்சுப் பாக்காமல் முடிவெ டுக்கப் போகுதோ?' என்ற வார்த்தைகளில் அவள் ஏற்றியிருக்கி றாள்.

அவனுள்ளும் மலர்பற்றிய விடையறியாக் கேள்விகள் இருந்து கொண்டிருக்கவும் செய்தன. ஆயினும் இறுதியில் வென்றது அவ னது ஆசையாகவும், அவளது அப்பாவின் மேலான இரக்கமாக வும் இருந்தது.

அதனால் அவன் கேட்கயிருந்தது ஒரே கேள்வியாகயிருந்தது. அதை அவன் கேட்டான்... 'இதில மலரின்ர விருப்பம் என்னமா திரி?'

'நாங்களெல்லாம் கதைக்கேக்க சந்தோஷமாய்த்தான் அவவும் கூட யிருந்தவ. வேறயென்ன அவ சொல்லேலும்?'

'ஐயா, அதை சம்மதத்தின்ர அடையாளமாய்...'

'அந்தமாதிரித் தவிர வேறமாதிரி தன்ர விருப்பத்தைத் தெரிவிக்கிற பிள்ளையில்லை அது. அம்மாவெண்டு வாய் திறந்து கூப்பிடவே அதுக்கு மூண்டு வயசாச்சு. பிறந்து ஆறு மாசம்மட்டும் பசிச்சா, எறும்பு கடிச்சாக்கூட அழாமக் கிடந்தது. எங்களுக்குத் தெரியும் அதுகின்ர விருப்பம், விருப்பமில்லாத சங்கதியள்...'

'அப்ப... எல்லாரும் ஒரு முடிவுக்கு வந்திட்டம்போல கிடக்கு...' என்று தன் பிரசன்ன முக்கியத்துவத்தை உணர்ந்தவராய் தலையிட் டார் சுந்தரலிங்கம். 'அப்பிடியெண்டா... மற்ற விசயங்களைப் பேசி யிடுவம்...'

அது நினையாப்பிரகாரமான வேகத்துடன் அவனது தாயிடத்தில் வேலைசெய்தது. அவள் தன் மகனின் பெறுமதியைக் காணவிரும் புவதொன்றும் நடைமுறை உலகத்தில் விசித்திரமானதல்ல.

'நீங்கள் அதையெல்லாம் அம்மாவோட பேசுங்கோ, மாமா' என்று விட்டு நடனசுந்தரம் எழுந்தான்.

அப்போது அவன் கண்டான், பவளமாச்சியின் பார்வையில் தெரிந்த பரபரப்பும், வதங்கிக் கிடந்த கைகளிலும், கோணிக் கிடந்த வாயிலும் தெறித்த துடிப்பும். அவள் ஏதோ சொல்ல முனைகிறாளா? அவன் நின்றான். அவள் என்ன சொல்லிவிடு வாள்? எந்தளவோ எதிர்ப்புக்காட்டி நின்ற அம்மாவே இறங்கி வர வில்லையா? எந்த நம்பிக்கையிலோ அவற்றை அனுகூலமான மனநிலையின் பிரதிபலிப்பாய் எடுத்துக்கொண்டு அவளைநோக்கி மெல்லச் சிரித்தான். பின் அப்பால் நகர்ந்தான்.

இசைக் கல்விக்கான அவளது தஞ்சாவூர்த் திடீர்ப் பயணம் குறித் தும், மயில்வாகனம் வீட்டாரின் மறுப்புக்கான, இருபாலைக் கன வானுடன் பேசிய கல்யாணம் நின்றுபோனதுக்கான புதிர்களும் கேள்விகளும் அப்போதும் அவரிடம் இருந்திருந்தன. ஆயினும் அவளது தந்தை வித்துவான் வீரகத்தி வீடுதேடி வந்து செய்த மன் றாட்டத்தில் அந்த வயதுக்கும், தமிழ்க் கல்வித் தகைமைக்கும் தான் வளைந்துகொடுத்ததை எவ்வாறு மலர் கீழ் மேலாய்ப் புரட் டிப் போட்டிருந்தாள் அன்று! அவருக்கு அது தினசரிச் சிந்தை யாய் இருந்தது. அப்போதும்கூட.

அவரது விருப்பம்மட்டுமா அந்தக் கல்யாணத்தின் முழுக் காரண முமாக இருந்ததாய் அவள் எண்ணுகிறாள்? ஒரு தமிழ்க் கல்வியா- ளரும், நடந்தால் புல்லுச் சாகாதளவு மெதுமைப்பட்டவரும், மிக நல்லவருமான அவள் தந்தையும்தானென்பதை அவளால் எப்படி மறக்க முடிந்தது? வாய் பேசாமலிருந்து எல்லாம் நடக்க அனும தித்த அவள்மேல் எந்தப் குற்றமுமில்லையா?

அப்போது மலரின் அறைக்குள்ளிருந்து எழுந்த பேச்சுச் சத்தம் எல்லா நினைவுகளையும் மறக்கவைத்து அவரை அவற்றின் அர்த்தக் கிரகிப்பில் இறக்கியது.

(தொடரும்)



devakanthan@thaiveedu.com



# விசித்திரமான நாள்

## - லூயிசா வலென்சுவெலா
### தமிழில்: என்.கே. மகாலிங்கம்

மூலையில் இருந்தது அந்தச் சிற்றுண்டிச்சாலை. சிறந்த சிற்றுண்டிச்சாலைகள் மூலைகளில் தான் இருக்கின்றன போலும். ஒவ்வொரு சந்திப்பு இடமும் இரண்டு பாதைகள் (இரண்டு பேர்) சந்திக்கும் இடம். மறியோவும் பெட்றோவும், அதிகம் சீனி போட்ட பாலில்லாத கோப்பிக்குச் சொல்லிவிட்டு அங்கே இருந்தார்கள். சீனி அதிகம் போடச் சொன்னது ஒன்று அது இலவசமாகக் கிடைக்கிறது என்பதாலும், மற்றது அதில் அதிக ஊட்டச்சத்து இருக்கிறது என்பதாலுமே. மறியோவும் பீட்றோவும் சில காலமாக கையில் ஒரு சதம் காசு கூட இல்லாமல் இருந்தார்கள். ஆனால் அதைப்பற்றி அவர்கள் முறைப்பட்டார்கள் என்றில்லை. ஆனால் ஒரு மாற்றத்திற்காக ஏதாவது அதிர்ஷ்டம் கிடைத்தால் நல்லதென்று நினைத்தார்கள். அப்போது அங்கே கைவிடப்பட்ட சிறியதொரு கைப்பெட்டி இருப்பதைக் கண்டார்கள். அந்தக் கணம் வந்துவிட்டது என்பது போல அவர்கள் இருவரும் ஒருவரைப் பார்த்துச் சொல்லிக் கொண்டார்கள். அந்த இடத்தில் அந்தச் சிற்றுண்டிச்சாலையின் மூலையில் மேசைக்கு எதிரில் அது இருந்தது. அந்தக் கைப்பெட்டி தன்னந்தனியாக ஒரு கதிரையின்மேல் மேசையில் சாய்ந்து கொண்டிருந்தது. அதைத் தேடி ஒருவரும் வரவில்லை. சிற்றுண்டிச்சாலைக்குப் பக்கத்திலுள்ள சிறுவர்கள் அங்கே வந்தும் போயும் கொண்டிருந்தார்கள். அவர்கள் என்னென்னவோ பேசிக் கொண்டார்கள். அதை மறியோவோ பீட்றோவோ கவனத்தில் எடுக்கவில்லை. ஒவ்வொரு நாளும் அப்படிப்பட்ட பலர் வந்து போவார்கள். விநோதமான உச்சரிப்புடன் பேசிக் கொள்வார்கள். அவர்கள் நகரத்தின் உட்பகுதியிலிருந்து வருபவர்கள். ஏன் இங்கே வருகிறார்கள், இங்கே என்ன செய்கிறார்கள் என்று நான் வியந்தேன். பின்பக்கமுள்ள மேசையில் யாராவது வந்து அமரப் போகிறார்களா, கதிரையைத் தள்ளி வைக்கப் போகிறார்களா, பெட்டியை காண்பார்களா என்று மறியோவும் பீட்றோவும் வியந்து கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் இருவரும் அந்தப் பெட்டியை விரும்பவும் துவங்கினார்கள், அதைத் தடவிப் பார்க்க விரும்பினார்கள், அதை மணக்கவும் நக்கவும் கொஞ்சவும் கூட விரும்பினார்கள். கடைசியாக ஒருத்தன் தனியாக அங்கே வந்து அந்த மேசையில் அமர்ந்தான். (அந்தப் பெட்டி நிறைய பணம் இருக்கலாம் என்றும் வந்திருப்பவன் எலுமிச்சைப் பழச் சாற்றுடன் கூடிய வேர்மவுத் வைனுக்குரிய கொஞ்சக் காசைக் கொடுத்து விட்டு அதை எடுத்துக் கொண்டு போய் விடுவான் என்று நினைத்தார்கள். வந்திருந்தவனும் சற்று நேரம் சிந்தித்த பிறகு அவற்றுக்குத்தான் ஆணை கொடுத்தான்.) பரிசாரகனும் வேர்மவுத் வைனையும் சில பசியைத் தூண்டும் சிற்றுண்டிகளையும் கொண்டு வந்து வைத்தான். ஒலிவ் பழத்தையும், வெண்ணெய்க் கட்டியையும் எடுத்து வாய்க்குக் கொண்டு போன-போது அவனுக்குப் பக்கத்திலிருந்த அந்தப் பெட்டியை அவன் காண்பானா? என்று பீட்றோவும் மறியோவும் சிந்திக்க விரும்ப

வில்லை. ஆனால் அதைப்பற்றி மட்டுந்தான் அவர்களால் சிந்திக்கவும் முடிந்தது. எதைச் சொன்னாலும் எப்படிச் சொன்னாலும் அந்தப் பெட்டியில் அவனுக்கு இருந்த உரிமையிலும் பார்க்க அவர்களுக்குத்தான் அதிக உரிமை இருந்தது. என்னதான் சொன்னாலும் அதுவொரு தற்செயலான விசயம்தான். மேசையில் வந்திருந்ததும் நடந்ததும் எல்லாம். வந்திருந்தவன் தன் பானத்தை கவனமில்லாமல் அருந்தினான். உணவையும் ஒன்றன் பின் ஒன்றாக விழுங்கினான். மறியோவோ பீட்றோவோ இன்னொரு கோப்பிக்குக் கூட ஆணை கொடுக்க முடியாத நிலையில் பணமில்லாமல் இருந்தார்கள். எனக்கோ உங்களுக்கோ நடக்கிறது போல. உங்களுக்கு நடக்கிறதிலும் பார்க்க எனக்குத்தான் அது அதிகமாக நடக்கும். அந்தக் கதை இங்கே தேவையில்லை. இங்கே பீட்றோவையும் மறியோவையும் ஒருத்தன் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்தான். இப்பொழுது அவன் பற்களுக்கு இடையில் புகுந்த சலாமி இறைச்சித் துண்டொன்றை நகத்தால் இழுத்துக் கொண்டிருந்தான். அவன் தன் பானத்தைக் குடித்துக் கொண்டிருக்கையில் எவரைப் பற்றியும் கவலைப்படவோ, எதையும் பார்க்கவோ சிறுவர்கள் பேசுவதையோ கவனிக்கவில்லை. அந்தச் சிறுவர்களை, அவர்களும் வீதியின் மூலைகளில் கண்டிருக்கிறார்கள். எல்பா கூட அதைப்பற்றி ஒருநாள் சொல்லி இருக்கிறாள். கற்பனை பண்ணிப் பாருங்கள், அவளோ கிட்டப்பார்வை உள்ளவள். விஞ்ஞானப் புனைவுகளில் போல அவர்கள் இன்னொரு கிரகத்திலிருந்து வந்தவர்கள் போல இருந்தார்கள். இருந்தும் அவர்கள் உள் கிராமத்திலிருந்து வந்தவர்கள் போலத்தான் இருந்தார்கள். ஆனால் நன்றாக வாரப்பட்ட தலைமுடியுடன் பார்ப்பதற்கு நேர்த்தியாகத் தான் இருந்தார்கள். ஒருத்தனிடம் இப்போது நேரம் என்ன என்று கேட்டேன். அவன் சொல்லவில்லை. காரணம், அவர்களிடம் கடிகாரம் இருக்கவில்லை. அவர்களுக்கு ஏன் கடிகாரம் என்று நீங்கள் கேட்கலாம். அவர்கள் எங்களிலும் பார்க்க வித்தியாசமான காலத்தில் இருந்ததால் எதற்குக் கடிகாரம்? நானும் அவர்களைக் கண்டிருக்கிறேன். அவர்கள் வீதிகளின் நடைபாதைக்குக் கீழிருந்து வந்திருந்தார்கள். அங்கே தான் இப்பொழுதும் இருக்கிறார்கள். யாருக்குத் தெரியும் அவர்கள் எதைப் பார்க்கிறார்கள் என்று. ஆனால் எங்களுக்குத் தெரியும் அவர்கள் வீதிகளில் துளைகளை விட்டுச் செல்கிறார்கள் என்று. அந்த வீதிகளில் இருந்து அவர்கள் வெளியே வரும்போது ஏற்படும் மிகப் பெரும் பள்ளங்களை ஒரு போதுமே நிரப்ப முடியாது. வேர்மவுத் வைனை கையில் வைத்திருந்தவன் அவர்கள் சொல்லுவதைக் கவனிக்கவில்லை. அவனைப் போலவே மறியோவும் பீட்றோவும் கூட நன்றாகக் கவனித்துக் கேட்கவில்லை. அவர்கள் இருவரும் மறந்து போய் கைவிடப்பட்ட அந்தப் பெட்டியையும் அதற்குள் பெறுமதியான ஏதோவொன்று இருக்க வேண்டும் என்பதையுமே சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். அதைத் தாங்கள் இரண்டு பேர் மட்டுமே எடுக்க வேண்டும், வேர்மவுத் குடித்துக் கொண்டிருக்கிற அவன் அல்ல என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். வந்தவன் வைனைக் குடித்து முடித்தான். பற்களைத் தோண்டினான். சில சிற்றுண்டிகளை சாப்பிடாமலே விட்டான். எழும்பிப் பணத்தை மேசையில் வைத்தான். பரிசாரகன் மேசையிலிருந்து முழுப் பணத்தையும் எடுத்தான். அன்பளிப்பைத் தன் பைக்குள் போட்டான். மேசையை ஈரத் துணியால் துடைத்தான். போய்விட்டான். நேரம் வந்துவிட்டது. ஏனெனில் அப்போது சிற்றுண்டிச்சாலையின் மறுபக்கத்தில் பல விசயங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இங்கே ஒருவரும் இல்லை. மறியோவுக்கும் பீட்றோவுக்கும் இப்போது அதைச் செய்ய வேண்டும் அல்லது ஒருபோதுமே செய்ய முடியாது என்று தெரிந்தது. மறியோ அந்தக் கைப்பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு முதலில் வெளியேறினான். அதனால்தான் நடைபாதைக்குப் பக்கத்தில் நிறுத்தியிருந்த ஒரு காரின் மேல் ஓர் ஆணின் ஜக்கெற் ஒன்று கிடப்பதைக் கண்டான். அதாவது, நடைபாதைக்குப் பக்கத்தில் ஒரு கார் நின்றது. அதன் கூரையின் மேல் ஒரு ஜக்கெற் கிடந்தது. அற்புதமான ஜக்கெற். மிகவும் தரம் வாய்ந்தது. பீட்றோவும் அதைக் கண்டான். ஆனால் அவன் எடுப்பதற்குக் கால்கள் நடுங்கின. ஏனென்றால் அது பெரும் தற்செயல் நிகழ்வு. அவன் அந்த ஜக்கெற்றை உபயோகிக்கலாம். விசேஷமாக, அதன் பைகள் முழுக்கப் பணம் நிரம்பி இருந்தால். மறியோவால் அதைத் துணிந்து எடுக்க முடியவில்லை. பீட்றோவால் முடிந்தது. கொஞ்சக் குற்றவுணர்வுடன். இரண்டு பொலிஸ்காரர்கள் அவர்களை நோக்கி வந்தார்கள். அப்போது நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. 'இந்த ஜக்கெற்றைக் காரின் கூரை மேல் கண்டோம்... இதை என்ன செய்வதென்று எங்களுக்குத் தெரியவில்லை.' 'சரி, அந்த ஜக்கெற்றை நீ கண்டெடுத்த இடத்திலேயே கொண்டு போய்ப் போட்டு விடு. இப்படியானவற்றுக்காக எங்களுக்குக் கரைச்சல் கொடுக்காதே. எங்களுக்கு இதிலும் பார்க்க முக்கியமான வேறு பல வேலைகள் இருக்கின்றன.' மிக முக்கியமான வேலை! மனிதனைத் துன்புறுத்தும் வேலை. அந்த மங்கல வழக்கை பாவிப்பதற்கு என்னை அனுமதியுங்கள். அப்படியாக, பிரபலமான அந்த ஜக்கெற் இப்போது பீட்றோவின் நடுங்கும் கைகளில் இருந்தது. அந்தக் கைகள் அதை மிகவும் விருப்பத்துடன் தூக்கி வைத்திருந்தன. இதைப் போன்ற நாளாந்தம் போடக் கூடிய, உள்ளே துணி வைத்த, பட்டில்லாமல் அதற்குப் பதிலாக பணம் உள்ளே இருக்கிற மாதிரி ஒரு ஜக்கெற். பட்டைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்? ஒரு ஜக்கெற் அவனுக்குக் கட்டாயம் தேவைப்பட்டதுதான். அந்தத் திருட்டுச் சொத்துடன் அவர்கள் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். பஸ்ஸிற்கோ டக்சிக்கோ காசில்லை. காசு கொடுப்பதற்காக மறியோ அந்தப் பெட்டியைச் சாடையாகத் திறந்தான். அப்போது மொரமொரப்பான பணத்தாள் ஒன்றைக் கண்டான். அதை எடுப்பதற்கு அவனுக்குத் துணிவிருக்கவில்லை. உணவகத்தில் கேட்ட கதைகளை வைத்து இங்கே விசித்திரமான விசயங்கள் நிகழ்கின்றனவா என்று கண்களை அகலத் திறந்து பார்த்துக் கொண்டே சென்றார்கள். தாம் எடுத்த பொருட்களைப் பற்றி யாராவது கதைக்கிறார்களா என்று காதைக் கூர்மையாக வைத்துக் கொண்டே சென்றார்கள். நகரத்தின் இந்தப் பகுதியில் விசித்திரமான ஆட்கள் தோன்றவில்லை. அல்லது அவர்களின் இடத்தை வேறெவரோ எடுக்கவும் இல்லை. ஒவ்வொரு மூலைக்கும் இரண்டு பொலிஸ்காரரைப் போடுவது முடியாது. ஏனென்றால் பல மூலைகள் இருந்தன. இன்று எந்தப் பிற்பகலைப் போலும் இல்லாத ஒரு சாம்பல் நிறப் பிற்பகல். நினைத்துப் பார்த்தால் இதுவொரு அதிர்ஷ்டமான பிற்பகல் கூட இல்லை. வார நாளில் தெரியும் உணர்ச்சிகளற்ற முகங்கள் தெரிந்தன. ஞாயிற்றுக்கிழமைகளில் தெரியும் உணர்ச்சிகளற்ற முகங்களிலும் பார்க்க அவை வித்தியாசமானவை. பீட்றோவினதும் மறியோவினதும் முகத்தில் இப்பொழுது உணர்ச்சி வந்துள்ளது. தாங்களும் வாழ்கிறார்கள் என்ற எண்ணமும் வந்துள்ளது. காரணம் அவர்களின் வழியில் கிடைத்த அந்தக் கைப்பெட்டியும் (கெட்ட வார்த்தை) ஜக்கெற்றும். (ஜக்கெற் பார்க்கிறதுக்குத் தெரிவது போல புதியதல்ல. பழசாகிப் போன ஒன்று. ஆனால் பரவாயில்லாதது. அதுதான்: பரவாயில்லாதது. பொதுவான பிற்பகல்களைப் போல அல்லாது இன்று வேறு மாதிரி இருந்தது. சைரன்க



லூயிசா வலென்சுவெலா -1938- போனஸ் அயர்ஸ், ஆர்ஜென்ரீனாவில் பிறந்து வளர்ந்தவர். ஸ்பானிய மொழியில் புனைவுகளையும் அபுனைவுகளையும் எழுதியவர். தந்தை மருத்துவர். தாய் எழுத்தாளர். தாயின் வீட்டில் அன்றைய புகழ் பெற்ற எழுத்தாளர்கள் கூடுவார்கள். அவர்களைக் கண்டு வளர்ந்தவர். பதினேழு வயதில் அவர் எழுத்துக்கள் பிரசுரம் கண்டன. இருபது வயதில் ஒரு பிரெஞ்சுக்காரரைத் திருமணம் முடித்து பிரான்சிற்குக் குடிபெயர்ந்து, அங்கே பிரெஞ் வானொலி தொலைக்காட்சியில் வேலை பார்த்தார். அங்கே நாவலில் புதிய வடிவத்தைப் பரிசோதனை செய்தவர்களுடன் தொடர்பில் இருந்தார். 1961 ஆர்ஜென்ரீனா திரும்பி ஊடகங்களில் பணி புரிந்தார். பல தென்னமெரிக்க நாடுகளுக்கும் பயணம் செய்தார். 1969 ஐயோவா பல்கலைக்கழகத்தில் புலமைப் பரிசில் பெற்றுக் கல்வி கற்கச் சென்றார். அங்கே பல புதினங்களை எழுதினார். 1989-இல் திரும்பவும் ஆர்ஜென்ரீனா திரும்பினார். சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் எழுதினார். அத்துடன் பெயர் பெற்ற ஊடகவியலாளராக விளங்கினார். Thirteen Short Stories, Strange Things Happen Here, Other Weapons, Black Novel, Beside Manners, ஆகியவை அவருடைய புனைவுகள். எழுத்தில் பரிசோதனைகளை செய்தார். மாய யதார்த்த எழுத்துக்குப் பெயர் போனவர். தென் அமெரிக்க பெண் எழுத்தாளர்களில் அதிகம் மொழிபெயர்க்கப்பட்டவரும் இவரே. இவருடைய சிறுகதைகள் விதந்து பேசப்படுபவை. ஆர்ஜென்ரீனாவில் 1970-களில் நடைபெற்ற பாசிச சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக எழுதினார்.

ளின் அலறல் ஒலி காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. தங்களை யாரோ காட்டிக் கொடுத்து விட்டார்கள் போல உணர்ந்தார்கள். பொலிஸ்காரர்கள் எல்லா இடமும் நிற்பதைக் கண்டார்கள். இருட்டு நடைபாதைகளிலும் நகரத்திலுள்ள எல்லா மூலைகளிலும் இருவர் இருவராக நின்றார்கள். மோட்டர் சைக்கிள்களில் அங்கேயும் இங்கேயும் துள்ளித் திரிந்தார்கள். நாட்டைத் தாங்கள் தான் முறையாக நடத்துகிறார்கள் என்பது போல. நாடு தங்களின் கைகளில் தான் தங்கி இருப்பது போல. அது சரியாகவும் இருக்கலாம். உண்மை. அதனால் தான் எல்லாம் அப்படி ஒழுங்காக நடக்கின்றன. மறியோ அதை உரத்துச் சொல்லத் துணிய மாட்டான். ஏனென்றால் அந்தப் பெட்டி அவனுடைய நாவைக் கட்டிப் போட்டிருந்தது. பெட்டிக்குள் இரகசிய ஒலிவாங்கி ஒன்று ஒளித்து வைத்திருக்கப்பட்டிருக்கிறது என்பதால் அல்ல. எப்படிப்பட்ட சித்தப்பிரமை அது. ஏனெனில் அந்தப் பெட்டியை யாரும் அவர்களை வில்லங்கமாக எடுத்துக் கொண்டு போகச் சொல்லவில்லையே! ஒரு இருட்டு மூலைக்குள் அதை எறிந்து விட்டிருக்கலாம். தானாகவே அவர்கள் மடியில் விழுந்த ஒரு அதிர்ஷ்டத்தை எப்படி எறிந்து விட முடியும்? அதற்குள் டைனமைற் குண்டு இருந்தால் கூட. இப்பொழுது அவன் அந்தப் பெட்டியை இன்னும் இறுக்கிப் பிடித்தான். பாசத்துடன் பிடித்தான். அது வெடித்து விடும் என்பதால் அல்ல. அந்தக் கணத்தில் பீட்றோ ஜக்கெற்றை அணியத் தீர்மானித்தான். அவனுக்கு அது சற்றுப் பெரிதாக இருந்தது. கேலிக்கிடமாக அல்ல. தொளதொளவாகவா, ஓம். ஆனால் கேலிக்கிடமாக அல்ல. தளர்வாக, வெதுவெதுப்பாக, பாசத்துடன் அது இருந்தது. கரைகளில் சில இடங்களில் சிறிதாக நூல்கள் விட்டுப் போயும் கிழிந்து போயும் இருந்தன. ஜக்கெற் பைகளுக்குள் கையை விட்டுப் பார்த்தான். பழைய சில பஸ் பயணச் சீட்டுக்களையும் அழுக்கான கைக்குட்டை ஒன்றையும், பணத் தாள்கள் பலதையும் சில நாணயங்களையும் கண்டான். மறியோவுக்கு அதைச் சொல்ல இயலாமல் இருந்தது. அவர்களை யாராவது பின் தொடர்கிறார்களா என்று திடீரென்று திரும்பிப் பார்த்தான். அவர்களை யாரோ பொறிக்குள் மாட்டி விட்டார்களோ என்று நினைத்தான். மறியோவும் அப்படித்தான் நினைத்தான் போலும். ஏனென்றால் அவனும் இதுவரை ஒரு வார்த்தையும் பேசவில்லை. வாழ்க்கை முழுவதும் விசித்திரமானதொரு கறுப்புப் பெட்டியை கொண்டு திரிபவனின் முகபாவத்துடன் விசில் அடித்தான். ஆரம்பத்தில் இருந்தது போல நிலைமை அத்தனை பிரகாசமாகத் தெரியவில்லை. எவரும் அவர்களைப் பின்தொடரவில்லை போலத் தெரிந்தது. ஆனால் யாருக்குத் தெரியும். அவர்களுக்குப் பின்னால் சனங்கள் வந்து கொண்டிருந்தார்கள். அந்தப் பெட்டியையும் ஜக்கெற்றையும் ஏதோ மர்மமான ஒரு காரணத்திற்காக யாரோ கைவிட்டுச் சென்றிருக்கலாம். இறுதியில் அவன் ஒரு தீர்மானத்திற்கு வந்து பீட்றோவுக்கு மெதுவாகச் சொன்னான்: நாங்கள் வீட்டுக்குப் போக வேண்டாம். ஒன்றும் நடக்காதது போல நேரே போவோம். எங்களை எவராவது பின்தொடர்கிறார்களா என்று பார்ப்போம். அது பீட்றோவுக்கும் சரியாகவே பட்டது. மறியோ ஏக்கத்துடன் நினைத்துக் கொண்டான்: கொஞ்ச நேரத்திற்கு முன் (ஒரு மணி நேரத்திற்கு முன்) எங்களால் உரத்துக் கதைக்கவும் சிரிக்கவும் முடிந்தது. இப்போது பெட்டி பாரமாகத் தோன்றத் துவங்கி இருக்கிறது. அதனால் அதைத் திரும்பவும் எங்காவது எறிந்து விட ஆசைப்பட்டான். ஆனால் அதற்குள்ளே என்ன இருக்கிறது என்பதைப் பார்க்காமல் எறிந்து விடுவதா? அது சுத்த கோழைத்தனம்.


அவர்கள் எந்த நோக்கமும் இன்றி தங்கள் பிரச்சினைகளிருந்து விடுபடும் நோக்கத்திற்காக திரும்பவும் நடந்தார்கள். பீட்றோவும் மறியோவும் மட்டும் நடக்கவில்லை. ஜக்கெற்றும் பெட்டியும் சனங்களாக மாறி அவர்களுடன் நடந்தன. அவை நடந்து கொண்டே இருந்தன. இறுதியில் ஜக்கெற் சொன்னது: 'மதுவகத்தில் மது குடிப்போமா? தாகத்தால் நான் செத்துக் கொண்டிருக்கிறேன்.'

'இதனுடனா? இது எங்கிருந்து வந்தது என்று கூடத் தெரியாத நிலையில்?'

'ஓம். நிச்சயமாக. அதன் ஒரு பைக்குள் கொஞ்சப் பணம் இருக்கிறது.' அதற்குள் கையை விட்டான். பைக்குள்ளிருந்து இரண்டு தாளுடன் தன் நடுங்கும் கையை எடுத்தான். நல்ல திடமான ஆயிரம் பேசோக்கள். பைக்குள் மேலும் குடைந்து தேட விரும்பவில்லை. ஆனால் இன்னும் பேசோக்கள் இருக்கும் என்று நினைத்தான். அல்லது மணந்து பிடித்தான். இதற்கு இரண்டு சான்ட்விச் வாங்கலாம். இந்த உணவகத்திலேயே அதை வாங்கலாம். அது நல்ல அமைதியான இடமாகத் தெரிந்தது. முதலில் அதை ஒருத்தன் சொன்னான். பிறகு சற்றடே என்ற பெயருடைய ஒரு சிறுமியும் இங்கே பாண் இல்லை என்று சொன்னாள். எப்படிப்பட்ட மூளைச் சலவை அது. கொந்தளிப்பான காலங்களில் உன்னுடைய செவியைத் தீட்டி வைத்திருப்பதைப் போல தேவையானது வேறொன்றும் இல்லை. உணவகங்களைப் பொறுத்தளவில் அதன் குறை என்னவென்றால் அங்கே உள்ள இரைச்சல் சத்தம் தான். அது ஒருவர் பேசுவதை மற்றவர் கேட்காமல் மூழ்கடித்து விடுகிறது. கேள், நீ எதையும் புரிந்து கொள்ளக் கூடிய புத்திசாலி. அவர்களே தங்கள் கவனத்தைக் கொஞ்சம் திருப்பக் கூடிய அளவு எங்களை அனுமதிப்பார்கள். எப்படிப்பட்ட மூளைச் சலவை அது என்று வியப்படைவார்கள். புத்திசாலி என்று ஒருத்தனை விளித்தால் அவன் தான் புத்திசாலிதான் என்று நம்பத் துவங்கி விடுவான். அதுவொரு நம்பிக்கையா அல்லவா என்பதே கேள்வி. பாண் இல்லை என்று சொன்ன சற்றடேயைக் கொஞ்சம் நம்புவதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். ஞாயிறு பூசைக்கு ரொட்டி செய்ய சனிக்கிழமை பாண் தேவை என்பதும், வேலை செய்யும் கிழமை நாட்களின் கவலையைப் போக்க கொஞ்சம் வைன்மது தேவை என்பதும் உங்களுக்குத் தெரியாதா? ஒருத்தன் தன் உணர்கொம்புடன் உலகத்தை அதாவது உணவகங்களைச் சுற்றி வந்தால் அவனால் எல்லாவகையான ஒப்புதல் வாக்குமூலங்களையும் கேட்க முடியும். அத்துடன் புரிந்து கொள்ள முடியாத (அபத்தமான) பகுத்தறிவையும் கண்டு கொள்ளலாம். அது மிகவும் தேவையானது. ஏனென்றால் எச்சரிக்கையாக இருப்பதற்கும் இந்த இரண்டு பொருட்களை வைத்திருப்பதற்கும் அது தேவை. இந்தப் பொருட்கள் அவர்களுக்கு அந்நியமானவை. இருந்தும் அவற்றை வைத்திருக்கிறார்கள். மூடி வைத்திருக்கிறார்கள். இப்போது அந்தச் சிறுவர்கள் உணவகத்திற்குள் மூச்சிழுத்துக்கொண்டு வந்து தங்கள் முகத்தில் ஒன்றுமே நடக்காதது போன்ற முகபாவத்துடன் எழுதும் கொப்பி ஒன்றையும் புத்தகங்களையும் திறந்து வைத்துக் கொண்டு ஒரு மேசையில் இருந்தார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து பொலிஸ்காரர்கள் வந்தார்கள். கூரிய புத்திசாலிகளான சட்டங்களின் பாதுகாவலர்களை யாரும் ஏமாற்ற முடியாது. உங்களின் செயல் அவர்களின் கோபத்தை மேலும் தூண்டும். சட்டங்களையும் ஒழுங்கையும் அமுலாக்க மாணவர்களைப் பின் தொடர்ந்து அவர்கள் வந்துள்ளார்கள். அவர்களைத் தள்ளியும் முட்டியும் அதைச் செய்தார்கள். பொலிஸ் வானிலிருந்து இறங்கியவுடனே வாயை அகலத் திறந்து உங்கள் அடையாள அட்டைகளைக் காட்டுங்கள், காட்டுங்கள் என்றார்கள். பீட்றோவுக்கும் மறியோவுக்கும் அவ்விடத்திலிருந்து எப்படித் தப்பிப் போவது என்று தெரியவில்லை. எப்படி அந்த மானிடக் கூட்டத்திலிருந்து ஒரு பாதையை உண்டாக்கி உணவத்திலிருந்து அமைதியான ஓர் இடத்திற்குச் செல்வதென்று தெரியவில்லை. அப்போது ஒரு சிறுவன் வெளியேறினான். அவனிடமிருந்து சிறிய பொட்டலம் ஒன்று மறியோவின் காலடியில் விழுந்தது. மறியோ அனிச்சையாக அதை இழுத்து கதிரைக்குப் பின்னாலிருந்த அந்தப் பெட்டிக்குப் பின்னால் விட்டான். திடீரென்று அவனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. தனக்கு அண்மையில் உள்ள எதையும் தனக்கென எடுத்துக் கொள்ளும் பைத்தியக்காரத்தனம் அவனுக்கு வந்திருக்கிறது. மேலும் அச்சப்பட்டான். அந்தச் சிறுவனைக் காப்பாற்றவே அவன் அதைச் செய்தான் என்பது அவனுக்குத் தெரியும். பொலிஸ்காரர் அவனைச் சோதிக்க வேண்டும் என்று நினைத்தால் என்ன செய்வது? அந்த பெட்டியைச் சோதித்துப் பார்த்தால்... அதற்குள் என்ன இருக்கிறது என்று யாருக்குத் தெரியும்? விவரிக்க முடியாத அந்தப் பொட்டலத்திற்குள் (அது சடுதியாக விநோதமாகத் தெரிந்தது. அந்தப் பொட்டலம் ஒரு வெடிகுண்டாக இருந்து வெடித்து தன்னுடைய கால்கள் காற்றில் பறந்தால்... பெட்டியும் வெடித்து அதற்குள்ளிருந்து கள்ளத்தாள்கள் பறந்தால்... அந்தக் கற்பனையில் அவன் மருட்சி அடைந்தான்.) ஒரு அரை நொடிக்குள் அந்தச் சிறிய பொட்டலத்தை எடுத்து ஒளித்தபடியால் வந்த வினை அது. அதன் பின் ஒன்றும் நடக்கவில்லை. உன் மனதை வெறு

மையாக வைத்துக் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுள்ள பொலிஸ்காரர்களை அதைக் கண்டு பிடிப்பார்களா பார்ப்போம்.. அமைதி ஆட்சி செய்த ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்தால் அவன் என்ன செய்திருப்பான் என்று தெரியவில்லை. மூளைச்சலவை. சுயசேவை செய்யும் மூளைச்சலவை இது. என்னிடம் இருக்கும் இந்தப் பைத்தியக்காரத் தலைக்குள்ளிருந்து வருவது எதையும் வெளியே சொல்லி விடக்கூடாது. நீலச்சட்டைக் காரரின் இரண்டொரு உதையுடன் சிறுவர்கள் போய் விட்டார்கள். அந்தப் பொட்டலமும் அந்த மரியாதைக்குரிய தோற்றமுடைய இரண்டு கனவான்களின் காலடியில் இன்னும் இருந்தன. ஜக்கெற்றும் பெட்டியும் அந்தக் கனவான்களின் காலடியில் இருந்தன. மரியாதைக்குரிய கனவான்கள் இரண்டு பேரும் அமைதியான உணவகத்தில் தனியாக இருந்தார்கள். அவர்கள் இருவரின் மனதையும் ஒரு சான்ட்விச் கூட தணிக்கவில்லை. அவர்கள் எழுந்தார்கள். அந்தச் சிறிய பொட்டலத்தை அங்கே விட்டுச் சென்றால் பரிசாரகர் அவர்களைத் திரும்ப அழைப்பார். அப்போது குட்டு வெளிப்பட்டு விடும் என்று மறியோவுக்குத் தெரியும். அதனால் அவன் அதைக் கையில் எடுத்துக் கொண்டான். அப்படி அன்று கிடைத்த பொருட்களுடன் அதுவும் சேர்ந்து கொண்டது. அதுவும் ஒரு கொஞ்ச நேரந்தான். நடுங்கும் கரத்துடன் கைவிடப்பட்ட வீதி ஒன்றில் இருந்த குப்பைத் தொட்டிக்குள் அதை எறிந்தான். பக்கத்தில் நடந்து வந்து கொண்டிருந்த பீட்றோவுக்கு அங்கே என்ன நடக்கிறது என்பது புரியவில்லை. ஆனால் என்ன நடக்கிறது என்று கேட்க அவனுக்குத் தைரியமும் வரவில்லை. சிலநேரங்களில் எல்லாம் தெளிவடைந்த பின் எல்லாவிதமான கேள்விகளையும் கேட்கலாம். ஆனால் இந்தக் கணத்தில் உயிருடன் வாழ்ந்து கொண்டிருப்பதே பெரிது. அது எல்லாவற்றையும் தெளிவாகச் சொல்லி விடுகிறது. அதுவே கேட்கக் கூடியதையும் சொல்லக்கூடியதையும் காட்டி விடும். பேசிக்கொண்டே போவது தான் அவர்களால் இப்போது செய்யக்கூடியது. இடைக்கிடை நின்று நின்று சென்றார்கள். அங்கே இருக்கும் அந்த கண்ணியமான மனிதன் ஏன் அழுகிறான் என்று பார்ப்பதற்காக நின்றார்கள். நிற்பதும் பார்ப்பதும் என்ன பிரச்சினை என்று கேட்பதும் அவமரியாதையாகும். அது கடைகள் அடைக்கும் நேரம். வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிற பெண் விற்பனையாளர்கள் என்ன நடக்கிறதென்று அழுகிறவனைக் கேட்க முயன்றார்கள். அவர்களுடைய தாய்மைக் குணம் எப்பொழுதுமே தயாராகவும் காத்திருக்கவும் செய்தது. அந்த மனிதனை ஆறுதல் படுத்த முடியாதளவு அழுது கொண்டிருந்தான். இறுதியாக தட்டுத்தடுமாறிச் சொன்னான்: இனிமேலும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. அவனைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் கூடி விட்டது. அவர்களின் கண்களில் புரிந்து கொள்ளும் தன்மை தெரிந்தது. ஆனால் அவர்களால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அவன் பத்திரிகை ஒன்றை ஆட்டி ஆட்டி என்னால் இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியாது என்று சொன்னபோது அவன் அந்தச் செய்திகளை வாசித்திருக்கிறான் என்றும் உலகின் பாரத்தை அவனால் தாங்க முடியாமல் இருக்கிறது என்றும் நினைத்தார்கள். அவனுக்கு முதுகெலும்பு இல்லை என்று நினைத்து சிலர் அந்த இடத்தை விட்டு போய் விட நினைத்தார்கள். இறுதியாக, மாதக்கணக்காகத் தான் வேலை தேடிக் கொண்டிருக்கிறேன் என்றும் வீட்டுக்குப் போவதற்குப் பஸ்ஸிற்கு ஒரு பேசோ காசு கூட தன்னிடம் இல்லை என்றும், தன்னிடம் ஒரு அவுன்ஸ் வலுவும் இல்லை என்றும் விக்கல்களுக்கிடையில் சொன்னான். 'வேலை... இந்தக் காட்சி எங்களுக்கானதில்லை, வா போவோம்,' என்று பீட்றோ மறியாவுக்குச் சொன்னான். 'அவனுக்குக் கொடுப்பதற்கு எங்களிடம் ஒன்றும் இல்லை. எங்களிடம் இருந்திருந்தால் நல்லதாக இருந்திருக்கும்.' வேலை, வேலை, என்று மற்றவர்கள் கூட்டாகப் பாடினார்கள். அவர்கள் இதயங்களை அது தொட்டு விட்டது. ஏனென்றால் அந்தச் சொல் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்று. ஆனால் கண்ணீரைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த மனிதனின் கண்ணீர் வீதியைத் துளைத்துக் கொண்டிருந்தது. அவனைத் தவிர வேறு யாருக்கு அது தெரியும். அவன் தனக்குத்தானே சொல்லிக் கொள்ளுபவனாக இருக்கலாம். என்னுடைய கண்ணீர் நிலத்தைத் துளைக்கிறது. அது எண்ணெயைக் கண்டு பிடிக்கலாம். நான் இங்கே இப்போது இறந்தால் என் கண்ணீரால் துளைத்த இந்தத் துளை மூலம் அது நழுவிச் சென்றுவிடலாம். ஆயிரம் ஆண்டுகளில் நானும் எண்ணெயாக மாறி விடலாம். அப்படி என்றால் என்னைப் போன்ற ஒருவன், இது போன்ற சூழ்நிலையில்.. நல்ல எண்ணம். ஆனால் கூட்டாகப் பாடுபவர்கள் அவனை அவன் எண்ணங்களில் அமிழ்ந்து விட இடமளிக்கிறார்கள் இல்லை. அந்த எண்ணங்கள் மரணத்தைப் பற்றியவை. (கூட்டாகப் பாடுபவர்கள் பயந்து போனார்கள். கூட்டாகப் பாடுதல் ஒரு சராசரி குடிமகனின் மன அமைதியின்மேல் விழும் தாக்குதல்தான். அந்தச் சராசரி குடிமகனுக்கு மரணம் பத்திரிகையில் வாசிக்கும் ஒரு செய்தியே.) வேலை இல்லாமை, ஓம், வேலையில்லாமல் இருத்தலைப் பற்றி அனைவருக்கும் புரியும். அவர்கள் அவனுக்கு உதவத் தயாராகுவார்கள். அது மரணத்திலும் மேலானது. வன்பொருள் கடைகளில் வேலை செய்யும் நல்லிதயம் உள்ள பெண் விற்பனையாளர்கள் தங்கள் பணப்பைகளைத் திறந்து கசங்கிப் போன சில பணத்தாள்களை எடுத்துக் கொடுத்தார்கள். அதன் பின் ஒரு பணச்சேகரிப்பும் நடைபெற்றது. வற்புறுத்தி பணம் சேகரிப்பவர்களில் சிலர் மற்றவர்களிடமிருந்து கட்டாயப்படுத்திப் பணத்தைச் சேகரித்தார்கள். மறியோ அந்தப் பெட்டியைத் திறக்க முயன்றான். கொடுப்பதற்கு அதற்குள் என்ன புதையல் இருக்கும்? குப்பைத் தொட்டிக்குள் மறியோ எறிந்த பொட்டலத்தை கிளறி எடுத்திருக்க வேண்டும் என்று பீட்றோ நினைத்தான். அதற்குள் வேலைக்கான கருவிகள் இருந்திருக்கலாம். ஒரு வண்ணம் தெளித்தல் கருவி அல்லது வெடிகுண்டு தயாரிப்பதற்குச் சிறந்த கருவி இருந்திருக்கலாம். அது இருந்திருந்தால் அதை இவனுக்குக் கொடுத்திருந்தால் வேலை இல்லாத நிலைமை இவனை அழித்திருக்காது. பெண் விற்பனையாளர்கள் சேகரித்த அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர்கள் அவனை வற்புறுத்தினார்கள். அனுதாப நன்கொடை தனக்கு வேண்டாம் என்று அவன் அலறிக் கொண்டிருந்தான். அவன் நன்றாகத் தேறி பசியற்ற முழு வயிற்றுடன் வேலை தேடும்வரை அவனுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு தன்னியல்பாகக் கிடைத்த அன்பளிப்பே அது என்று அந்தப் பெண்களில் ஒருத்தி அவனுக்குச் விளங்கப்படுத்திக் கொண்டிருந்தாள். முதலை இப்பொழுது மனக்கிளர்ச்சியால் அழத் துவங்கியது. பெண் விற்பனையாளர்கள் மனவாறுதல் அடைந்தார்கள். அது அதிர்ஷ்டத்திற்குரிய அடையாளம் என்று பீட்றோவும் மறியோவும் நினைத்தார்கள். அவனுடன் அவர்கள் சேர்ந்திருந்தால் அந்தச் கைப்பெட்டியை மறியோ திறந்து பார்க்க மனதை திடப்படுத்திக் கொண்டிருக்கலாம், பீட்றோ தன்னிடமுள்ள ஜக்கெற் பைகளில் உள்ள இரகசியமான பொருட்களை தேடிப் பார்க்கலாம். ஆகவே அவன் திரும்பவும் தனியாக இருக்கும்போது அவனைக் கையில் பிடித்து தங்களுடன் சாப்பிடுவதற்கு அழைத்துச் செல்லலாம் என்று தீர்மானித்தார்கள். அவன் அதை முதலில் விரும்பவில்லை. அவர்கள் இரண்டு பேரையும் கண்டு அவன் பயந்து போனான். அவனுக்குக் கிடைத்த பணத்தை அவனிடமிருந்து பறிப்பதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள் என்று நினைத்தான். அவனுக்கு வேலை கிடைக்கவில்லை என்பது உண்மையா பொய்யா என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அல்லது அது அவனுடைய ஏமாற்றா? அப்படி நடித்து அயலவர்களின் அனுதாபத்தைப் பெறுவதற்காக நடிக்கும் நடிப்பா? ஒரு யோசனை அவன் மனதில் தோன்றியது: அது உண்மை என்றால் நான் கடுமையாக உதவி தேவைப்படும் ஒரு மனிதன், எனக்கு அனைவரும் நல்லதே செய்ய வருகிறார்கள் என்பது உண்மையானால் ஏன் இந்த இருவரும் எனக்கு உதவுகிறார்கள் இல்லை. எனக்கு உதவி தேவை என்று நான் நடிக்கிறேன் என்றால் நான் நல்ல நடிகன் அல்ல என்பதே பொருள். அத்துடன் இவர்களிடமிருந்து ஏதாவது ஒன்றை எடுக்கப் போகிறேன் என்பதும் பொருளாகும். அவர்களின் பார்வை ஒரு மாதிரி இருக்கிறது என்று அவன் நினைத்தான். ஆனால் அவர்கள் நேர்மையானவர்கள் போலவும் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் மூவரும் ஒன்றாக மலிவானதொரு உணவகத்திற்கு சில நல்ல சோசெஜ்களும் அதிக வைனும் சாப்பிடுவதற்குச் சென்றார்கள். மூன்று அதிர்ஷ்ட எண் என்று அவர்களில் ஒருவன் நினைத்தான்.

அதிலிருந்து ஏதாவது நல்லது நடக்கிறதா
என்று நாங்களும் பார்ப்போமே.



mahalingam.k@thaiveedu.com

# பட்டொளி வீசிப் பறக்கிறது புலிக்கொடி




நிமால் நாகராஜு

மூண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு’ என ஆதித் தமிழ் நூலான தொல்காப்பியத்திலும், ‘அண்டை மன்னர்கள் சோழனும், பாண்டியனும்’ என மௌரிய பேரரசன் அசோகனின் கல்வெட்டுகளிலும் ஆச்சரியத்துடன் குறிக்கப்பட்ட தமிழ் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் அப்போது ஒற்றுமையாக இருந்திருந்தால், தென்னாசியப் பிரதேசத்தின் மிகப்பெரிய வலிமை மிக்க சாம்ராஜ்ஜியமாக தமிழ் பேரரசு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே உதயமாகி வரலாற்றையே மாற்றியிருக்கலாம். ஆனாலும் அந்தக் குறையை தீர்க்க ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அருண்மொழிவர்மன் என்ற சோழ இளவரசன், ராஜராஜன் என்ற பெயரோடு அரியணை ஏறினான்.

ராஜராஜனின் பெருமையை பெரும்பாலோர் தஞ்சாவூர் பெரிய கோயிலுக்குள் மட்டும் அடக்கி விடுகிறார்கள். ஆனால் அவனது திறமை அந்தக் கோயிலின் உயரத்தை போலவே மிக, மிக பெரியது. அகண்ட சோழ சாம்ராஜ்ஜியத்தை கனவு கண்ட அவன், அதற்காக போட்ட அத்திவாரம் மிகப்பலமானது. அதிலிருந்து தமிழரின் பொற்காலம் தடையின்றி எழுந்தது. தென்னாசியா முழுவதும் தமிழரின் புலிக்கொடி கம்பீரமாக நிலத்திலும், நீரிலும் இரு நூறு ஆண்டுகளாக பறந்தது.

பொ.ஊ.பி 98-ல் பெரும் கனவுடன் அரியணை ஏறிய ராஜராஜனுக்காக தென்னிந்தியா மட்டுமல்ல, தென்னாசியா முழுவதும் பெரும்போர்கள் காத்திருந்தன. அஞ்சாத பெரும் வீரனான அவன், தான் களமாடிய சகல போர்களிலும் வெற்றிக்கனியை சுவைத்தவன், வெகு நேர்த்தியாக தன் சாம்ராஜ்ஜியத்தை விஸ்தரித்தவன்.

ராஜராஜனின் முதல் படையெடுப்பு சேர நாட்டின் மீது நடந்தது. ‘காந்தளூர்ச்சாலை போர்’ என வரலாற்றில் இன்றுவரை பிரஸ்தாபிக்கப்படும் அந்தப் போருக்கான காரணத்தை பல வரலாற்றாசிரியர் கள் பல விதமாக சொல்கிறார்கள்.

சேர நாட்டின் கடற்படை தளம் ஒன்றைத் தான் ராஜராஜன் தாக்கியழித்தான் என ஒரு சாராரும், அந்தணர்களுக்கு கல்வியும், போர்ப்பயிற்சியும் அளிக்கப்பட்ட பாடசாலையின் பெயரே காந்தளூர்ச்சாலை, அதையே ராஜராஜன் அழித்தான் என இன்னொரு சாராரும் சொல்கிறார்கள்.

பிராமணர்களின் கல்விச்சாலையை ஏன் ஒரு பேரரசன் தாக்கியழிக்க வேண்டும்? அதுவும் தான் ஆட்சியேறி நான்கு வருடத்திற்குள்ளாகவே அவசரமாக, பெருந் தொலைவில் இருந்த காந்தளூர்ச்சாலை மீது ஏன் கண் வைக்க வேண்டும்? அதற்கும் சில ஆய்வாளர்கள் ஒரு காரணத்தை சொல்கிறார்கள்.

ராஜராஜனின் சகோதரன் ஆதித்த கரிகாலனை கொன்ற பாண்டிய தேசத்து அந்தணர்கள் இந்த காந்தளூர்ச்சாலையில் தான் போர்ப் பயிற்சி பெற்றார்கள் எனவும், இங்கே தான் ஆதித்தனின் கொலைச் சதித்திட்டம் தீட்டப்பட்டது எனவும் ராஜராஜனுக்கு தெரியவரவே அவன் காந்தளூர்ச்சாலையை தாக்கியழித்து தன் தமையனின் கொலைக்கு பழிதீர்த்துக் கொண்டான் என்பது அந்த ஆய்வாளர்களின் வாதம்.

காரணம் எதுவாயிருந்தாலும், ராஜராஜனுக்கு இந்த வெற்றி ஒரு மிகப்பெரிய திருப்தியையும், பெருமையையும் கொடுத்திருக்க வேண்டும். கல்வெட்டுக்களில் தன் போர்வெற்றிகளால் தன்னை அறிமுகம் செய்யும் மெய்க்கீர்த்தி எனப்படும் ஒரு புதியதோர் முறையை ராஜராஜன் கொண்டுவந்தான்.

அவனது மெய்க்கீர்த்தியின் முதல் போர் வெற்றியாக காந்தளூர்ச்சாலை சொல்லப்படுகிறது. ‘காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய ஸ்ரீ ராஜராஜ தேவன்’ என ராஜராஜனின் மெய்க்கீர்த்தி ஆரம்பமாகி, கல்வெட்டுக்களில் அவனது தொடர்ச்சியான போர்வெற்றிகள் பொறிக்கப்பட்டன.

ராஜராஜனின் காலத்தில் பாண்டிய நாடு மிகவும் சுருங்கியிருந்தது. அப்போது அதை ஆண்டு வந்தவன் அமரபுஜங்கன் என்ற பாண்டிய அரசன். சேர நாட்டை அரசாண்டவன் பாஸ்கரவர்மன் என்பவன். இவர்கள் இருவரையும் ராஜராஜன் தோற்கடிக்கவே, மூவேந்தர்களின் நாடுகளும் சோழ சாம்ராஜ்ஜியமாக விரிந்தது. இதனால் ராஜராஜனுக்கு ‘மும்முடிச்சோழன்’ என்ற விருதும் கிடைத்தது.

அந்த நேரங்களில் அரசர்கள், பெரும் போர்க்காலங்களில் தான் படைவீரர்களை திரட்டுவார்கள். போர் முடிந்தவுடன் அவரவர்கள் தங்கள் தொழில் பார்க்கப் போய் விடுவார்கள். போர்த்தொழில் அப்போதைய காலங்களில் தற்காலிகத் தொழில் தான். மரணத்துடன் விளையாடும் அந்தப் போர்களில் தப்பி உயிர் பிழைத்தால் காட்டிய வீரத்திற்கு ஏற்ப ஊதியம் கிடைக்கும், இல்லாவிட்டால் மரணமே பரிசாக கிடைக்கும். அதுவும் போரில் தோற்றால் சொல்லத் தேவையில்லை, வெற்றி கொண்ட மன்னர்களின் போர்க்கைதிகளாக மாறி வாழ்க்கையே தடம் மாறிப் போய்விடும்.

தன் பெருங்கனவை நிறைவேற்ற இந்த தற்காலிக படைமுறை அறவே சரிப்பட்டு வராது என்று நினைத்தான் ராஜராஜன்.

அவனது ஆட்சியில் நிரந்தரமான போர்வீரர்கள் உள்வாங்கப்பட்டார்கள். போர்ப்பயிற்சிகள் முறையாக அளிக்கப்பட்டு திறமை மிக்க படைப்பிரிவுகள் உருவாக்கப்பட்டன. மாபெரும் சேனைகளாக சோழர் காலாட்படை கம்பீரம் பெறத் தொடங்கியது.

கூடவே பெரும் யானைப்படையும் உருவாகியது. சோழர்களிடம் அறுபதாயிரம் யானைகள் கொண்ட படை இருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் உண்டு.

இதைத்தவிர வலுவான குதிரைப்படையும் ராஜராஜன் வசம் இருந்தது.

இத்தனை பாரிய படைகளை பராமரிக்க பெருந்தொகை பணம் தேவைப்படுமே! எங்கு போவது? இன்றைய அரசாங்கங்களுக்கு இருப்பது போலவே, அப்போதும் அதே வழி தான். வரிகள் தான் தீர்வு.

இன்றும் கூட ராஜராஜனின் ஆட்சியின் சர்ச்சைப்புள்ளியாக விவாதிக்கப்படும் மக்கள் மீதான கடின வரிகளின் ஆரம்ப காரணம் படைகளின் செலவு தான். பிற்காலங்களில் தான் பெரும், பெரும் கோயில்கள் கட்டுவதற்காகவும் வரிகள் வசூலிக்கப்பட்டன.

வரிவசூலை ஒழுங்குபடுத்துவதற்காக அந்தக் காலத்திலேயே தன் சாம்ராஜ்ஜியமெங்கும் முறையாக நில அளவை செய்தவன் ராஜராஜன். தன் பேரரசை, வளநாடு என அழைக்கப்பட்ட நிர்வாக அலகுகளாக பிரித்து தகுதி வாய்ந்தவர்களை கொண்டு கச்சிதமாக ஆட்சி நடத்தியவன் அவன். இந்த ஒழுங்கு முறையான ஆட்சிக்கு ராஜராஜனுக்கு பெரிதும் உதவியாக இருந்தவள் அவனது தமக்கையான குந்தவை.

இத்தனை பலம் பொருந்திய போர்ப்படையை உருவாக்கிய பின்னரும்கூட ராஜராஜனுக்கு நித்திரை வர மறுத்தது.

இந்தியப் பெருங்கடலை வசப்படுத்தும் திறமை கொண்ட கடற்படையின் அவசியத்தை அவன் அறிவான்.

ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பியர்கள் ஆழ்கடல்களில் கால் வைக்கவே பயப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் சோழர்களின் பாரிய கடற்படையை ராஜராஜன் உருவாக்கத் தொடங்கினான்.

அதுவரை இருந்த சம்பிரதாயங்களை உடைத்த அவன், அந்நிய தேசங்களிலிருந்து கப்பல் கட்டும் விற்பன்னர்களை அழைத்து வந்தான். சீனாவினதும், அரபு நாட்டினதும் கப்பல் நுட்பங்கள் உள்வாங்கப்பட்டு பெரும் போர்க்கப்பல்கள் உருவாகத் தொடங்கின.

தெற்காசிய கடல்களில் அசைக்கப்பட முடியாத வலிமையுடன் வலம் வரும் கனவுடன் அமைக்கப்பட்ட சோழனின் கடற்படை வெறுமனே சில நூறு கப்பல்களைக் கொண்டதல்ல. தற்போதைய வல்லரசு நாடுகளின் கடற்படைகளைப் போலவே வடிவமைக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான போர்ப்படகுகள், விரைவாக சீறித்தாக்கும் தாரணி வகை போர்க்கப்பல்கள், ஏகப்பட்ட ஆயுதங்களை தாங்கியபடி, நாலா பக்கமும் எதிரிகளை தாக்கி துவம்சம் செய்யும் பிரமாண்டமான திரிசடை வகை போர்க்கப்பல்கள் என சோழனின் கடற்படை உருவாகத் தொடங்கியது.

தெற்காசிய கடல்களில் தமிழர்களின் பலத்தை, பெருமையை நிலைநாட்டிய பொற்காலத்திற்கான ஆரம்ப விடிவெள்ளியாக சோழனின் கடற்படை வீறுகொண்டு எழும்பியது.

அப்போது நாகப்பட்டினம் தான் சோழர்களின் மிகப்பெரும் துறைமுகம். அங்கிருந்து தான் சீனா, அரபு தேசங்கள், ரோம இராஜ்ஜியம் என்பவற்றோடு சோழர்கள் பெரும் வாணிபம் செய்தார்கள். வாணிப கப்பல்களுக்கு இணையாக நாகப்பட்டின துறைமுகத்தில் சோழர்களின் கடற்படையும் கடலில் புலிக்கொடியை பறக்கவிட்டபடி தக்க தருணங்களுக்காக காத்து நின்றது.



சோழர் கடற்படையின் பலத்தைக் காட்டும் அற்புதமான தருணம் மிக விரைவில் வந்தது.

பொ.ஊ.பி 993இல், ஐந்தாம் மகிந்தா என்ற மன்னனால் ஆளப்பட்டதும் ஈழ மண்டலம் என சோழர்களால் அழைக்கப்பட்டதுமான இலங்கையில் உள்நாட்டுக் கலவரம் தொடங்கியது. மன்னன் மகிந்தா மலைநாட்டுக்கு தப்பியோடினான்.

திமிறிக் கொண்டிருந்த சோழர் கடற்படைக்கு முத்தாய்ப்பான சந்தர்ப்பம் வந்து சேர்ந்தது.

இந்திய மன்னர்களிலேயே முதலாவதாக கடற்படையை கொண்டு அந்நிய தேசத்தின் மீது படையெடுக்கும் பெருமையுடன் ராஜராஜனின் சோழர் கடற்படை இலங்கையை நோக்கி வேகமாக பாய்களை விரித்தது.

வங்காள விரிகுடாவின் அலைகடல்களை தாண்டியபடி பாய்ந்து சென்ற போர்க்கப்பல் ஒன்றின் அணியத்தில் சோழ இளவரசன் ராஜேந்திர சோழன் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தான்.

அடுத்த எண்பது வருடங்களுக்கு சோழரின் அசையாத ஆட்சியை இலங்கையில் நிலைநிறுத்தியதும், பொலன்னறுவை நகரம் 'ஜனநாதமங்கலம்' என பெயரிடப்பட்டு சோழர் தலைநகராகிய வரலாற்றைத் தந்ததுமான அந்த படையெடுப்புத் தான் அடுத்து வரப்போகும் சோழர்களின் எண்ணற்ற கடல் வெற்றிகளுக்கு ஆரம்ப புள்ளி. சோழர் சாம்ராஜ்ஜியம் கம்போடியா வரை விரிந்து பரவ அதுவே வழியும் செய்தது.



nimal.nagaraj@thaiveedu.com


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474


BUYING OR SELLING
Residential, Commercial, Land & Investment Properties
For Sellers:
Free Market Evaluation Available
Competitive Commission Packages Available
Will pay for Staging & Condition
Will pay the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold
Will market your home with social medias
For Buyers:
Will find the home in any area within your budget
Get you the lowest mortgage. rate
SATHY & NITHY
REAL ESTATE TEAM
NITHY
SATHYAKUMAR
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com
SATHY
SIVASUBRAMANIAM
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com
16th Avenue / 9th Line $1,550
FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1
Morningside / Finch $1,200
FOR LEASE BEDROOMS:1+1 WASHROOMS:1
Pharmacy Ave/Lawrence Ave $1,600
FOR LEASE BEDROOMS:3 WASHROOMS:1
Victoria Park / Ellesmere $2,000
FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1
Rossland/Wilson $599,900
FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2
Crowder Blvd / Leslie St $549,900
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:2
Simcoe/Britannia $509,000
FOR SALE BEDROOMS:4 WASHROOMS:3
Yonge/Front $659,000
FOR SALE BEDROOMS:1+1 WASHROOMS:1
King/Blue Jays $699,000
FOR SALE BEDROOMS:1 WASHROOMS:1
Lawrence Ave E/Orton Park $699,000
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3
Finch / Victoria Park $759,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:2
Hoover Park/Tenth Line $769,900
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3
Brock/Hwy 2 $799,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4
Dufferin/Summerridge $889,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4
Markham/Sheppard $799,000
FOR SALE BEDROOMS:4+2 WASHROOMS:3
Pharmacy/N.Eglinton $838,000
FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2
RE/MAX
Remax Realtron Realty Inc., Brokerage
Bus: 905 470 9800
Web: realtorsathy.com



# வீடு வாங்க விற்க...

18 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

## வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

**வாங்கப் போகிறீர்களா?**

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

**விற்கப் போகிறீர்களா?**

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்




**Best Choice**
**4 BR+ 3 WR**
**Fully upgraded**

www.vela4homes.com

$ Cash incentive for referrals






**Bungalow**
3 +2 BR
2.5 WR
Separate Ent.
Legal apartment
Best Location




Best investment

3+2 Bedrooms, 1+1 Kitchen
4 WR + Walkout Bsmt
Fully Renovated
Separate Entrance
Dual Units (city approved)




**Estate Home**

Deer Creek
Over 9,000 Sft,
Fully Renovated
1.45 Acre




Bungalow
3 +1 BR
2 WR
Separate Ent.
Legal apartment
Best Location

**Vela Subramaniam**

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8




1ST
MORTGAGE
SPECIALS
5 Year Variable 2.35%
5 Year Fixed 3.24%
*Some Conditions Applied, Please Call For More Details
2ND
MORTGAGE
SPECIALS
Up To 80% in GTA. 75% on other major cities.
No Income Verification.
No Minimum Credit Score.
Quick Closing
Rates from 7.99% to 12.99%
-digi Media Creations-
BonaFide
Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
TD Canada Trust
Scotiabank
STREET CAPITAL
FIRST NATIONAL
FINANCIAL LP
MCAP
ICICI Bank
MERIX
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8



FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
#1
RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre


309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com





BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS 4 REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

# மோட்கேஜ்



புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

# MORTGAGE NESAN
**416-908-5656**

## Residential / Commercial / Industrial / Investment Properties

1st, 2nd and 3rd Mortgages · Refinance · Secured Line of Credit
New House Commitment, Pre-approval · Home Equity Loan

### 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

### 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

### Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

### 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

### 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

### Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER


பிராணஜீவ
சர்வ ரோக நிவாரணி
Pranajeewa is a traditional herbal medicine that has passed down from generation to generation. It is over 200 years old and is a proven cure for many kinds of diseases including Heart disease, Diabetes, hypertension, Cholesterol and Cancer. Sethsuwa Pranajeewa's miraculous properties has made it the ideal cure for a multitude of other ailments and conditions, Known among them are paralysis, Asthma, Catarrh, Skin diseases.
எலும்பு, மூட்டு ஆரோக்கியத்திற்கு!!
NanoCal is a supplement that has been approved by the US FDA as a CURE for osteoporosis and osteoarthritis.
NanoCal can actually reverse and cure these conditions!
NANOCAL
Ervamatin
Hair Lotion
The ERVAMATIN™
முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
Amazon Organic Shampoo is for all hair types is rich yet mild, cleans well and leaves hair full bodied lustrous and manageable. முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட தலைமுடி மை.
Dreamron Semi-Permanent Eco Hair Color is the newest innovation that is specially formulated for the people who are allergic to normal oxidative hair colorants which contain PPD & Ammonia. This is a gentle blend of unique herbal powders with HC colorants.
ECO Hair Color
Turmeric & Sandalwood Day Cream
Kasturi
SABONA
2466, Eglinton Ave East Unit 12A (@ Midland) Scarborough, ON. www.sabona.ca 416•264•8787


அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
Gas Furnace CO
AATEK HEATING & COOLING
$2100 Rebate Available Now call us 416-414-2280
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280


Buy, Sell Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani & Judy
Real Estate
Judy
Gnanendra
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasinghan
Realtor
416.937.809


OUR FREE SERVICES
WHY? REALTOR KATHIR
For Home Owners
Home Staging
Newspaper & Flyer Advertisement
High Resolution Picture & Virtual Tour
Four Page Colour Feature Sheets
Weekends Open House
Guaranteed Weekly Feedback
Social Media Marketing
Full MLS Listing Service
Sale Sign & Direction Signs
Market Evaluation
Radio & Web Tool Advertisement
Professional & Friendly Service
LOW Commission
Over 10 yrs Experience Realtor
Multi Award Winner Since 2006
Excellent Negotiation Skill
Quick Sale with Low Commission
Professional & Friendly Services
Home Sellers' Programme
Home Buyers' Programme
Mortgage Brokers, Lawyers, Inspector Team
Getting Low Rate Mortgage
SELL WITH KATHIR & GET MAX. PRICE
Buy with Kathir & Get Dream Home
HomeLife/Future Realty Inc., Brokerage
Kathir Kathirgamanathan B.A.
Real Estate Broker
Dir: 416-230-6462



Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 671-9861
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
RE/MAX
RE/MAX REAL ESTATE CENTRE
Mahesan Subramaniam
BROKER
Free Home Evaluation with No Obligation
416-816-0141
141-1140 Burnhamthorpe Road West, Mississauga, ON L5C 4E9
Office : 905-270-2000 Fax : 905-270-0047


Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


Allstate
You're in good hands.
உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்
தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்
Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(289) 275-8795
rlinghan@allstate.ca
பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி
செல்லப் பிராணிக் காப்புறுதி
ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்


வீடு வியாபாரம் காணி வாங்க விற்க அழையுங்கள்!
BUY & SELL HOMES, BUSINESSES, LAND & MORE!
REAL ESTATE HALL OF FAMER
PAT PUSHPAKANTHAN
FULL-TIME BROKER | 20 YEARS OF EXPERIENCE
416-894-1187
WWW.PATPUSH.COM
FREE BUY & SELL DEALS*
FREE STAGING*
FREE HOME MARKET ANALYSIS
NEW CONDO VVIP PRIORITY ACCESS
FREE HOME INSPECTION*
FREE HOME SELLING SERVICES*
FREE INVESTMENT STRATEGIES CONSULTING*
RESIDENTIAL & COMMERCIAL RENTAL SERVICES & PROPERTY MANAGEMENT SERVICES AVAILABLE *
COMMITMENT | RELIABILITY | PROFESSIONALISM
CENTURY 21 Century21 Affiliate Realty Inc.
The dependable realtor you've been looking for.


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT
Life100
INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
La Capitale
iA Financial Group
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111



Call Me First and Say "YES"
to Get Your Dream Home at a
Dream Rate!
For all your Mortgage needs
Peter Sober
Dir: 416-275-3571
Your Smile Is My Best Return!
Purchase, Pre-Approvals, Refinances, Renewals and Switch, Builder Purchase, Home Line Of Credit, Self Employed, New Immigrants, Multi-Rental Properties.
TD
Five Branch Locations to serve you better
Scarborough, Markham, Ajax, Brampton & Mississauga


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
Call me now to get your HOME SOLD 416-725-7284
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
647-290-3416
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajan BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION - REAL ESTATE - FAMILY - CORPORATE - EMPLOYMENT - WILLS & ESTATE -
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMID GROUP

LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO
WE CAN HELP BUILD YOUR FUTURE
Insurance • Investments • Tax and Estate Planning
905-294-PLAN (7526)
www.lifeplaninvestments.ca
416-894-2009
Download Free MyLIFEPLAN App
App Store
Google Play

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
President & C.E.O.
416-666-1120

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492

Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling / Leasing / Investing
Dir: 647.839.0079
Homelife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8

GAJAN
MAHAKANAPATHY
416.999.2777
RE/MAX COMMUNITY
Realtorgajan.com

Sri Vallipuranathar
Credit Solution Centre
416.439.0224
416.450.5011

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
HomeLife Today Realty Ltd., Brokerage*

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM CHS
President & CEO
iNFORCE LIFE Financial Services Inc.
QUALITY ADVICE YOU CAN TRUST

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
Cell: 416 505 8532

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
YA Smiles Dental Clinic
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524

RE/MAX NORTH REALTY
077 566 0000
LATHAN VARATHARAJAH
Broker Owner